JL
m 211, N55 Q
N69.14.8-12
194484

தாமரை

K.K. No. 337/2/69
R.R. No. 337/2/69

வைகாசி ✱ மே-'69

5264/B

தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட வந்திருந்த தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்களை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநரும், மாண்புமிகு முதலமைச்சரும், வரவேற்றல். (17—4—1969)

தீயணைப்புப் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துக்கொண்ட சீரணித் தொண்டர்களுக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சான்றிதழ்கள் வழங்குதல். (17—4—69)

கிராம நலம்

தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத் திங்கள் இதழ்

கதிர் 14] மே 1969 [நெல் 8

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்
1.	உழைப்பின் வெற்றி - -	1
2.	உழைப்புத் தெய்வங்களின் திருவிழா -	3
3.	அஞ்சுகத்திலே கலைஞர், கவிஞர், முதலமைச்சர் - -	7
4.	பசுமைப் புரட்சி - -	14
5.	காதலன் நடை - -	17
6.	கடமையும் உரிமையும் - -	19
7.	அவனைத்தான் வணங்கவேண்டும் -	23
8.	பெருமிதம் பிறந்தது - -	24
9.	தேசியப் பேரணியில் சீரணி கொள் ஊரணி	26
10.	கடல் கடந்த நாடுகளில் தொழிலாளர்கள் -	35
11.	மே நாள் - -	38
12.	வீட்டு நலமே நாட்டு நலம் - -	47
13.	உற்பத்தித் திறன் பெருகிட - -	50
14.	ஊரை உருவாக்குவோம் - -	53
15.	அநாதை - -	57
16.	கோதுமைச் சிற்றுண்டிகள் - -	63
17.	காட்சியும் கருத்தும் - -	67
18.	தொழிற் பெருக்கமும் தொழிலாளர் நல்லுறவும் - -	71

இணைக்குநர் : திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்

வெளியிடுபவர் : திரு. ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.
கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்.

பொதுத்தொடர்ப்திகாரி: திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ.

ஆசிரியர் : திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

வளம் பெருக்கும் தொழிலாளர் நலம் பெற்றோங்க வேண்டுமென்ற விருப்பினை வெளிப்படுத்தும் முறையில் 'கிராம நலத்'தின் மே இதழ் 'தொழிலாளர் இதழா'கச் சிறக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி டாக்டர் மு. வரதராசனார், சிலப்புச் செல்வர் ம. பொ. சிவஞானம், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், அருண்மொழிச் செல்வர் கி.வா ஜகந்நாதன், கிராம வளர்ச்சி & உள்ளாட்சித்துறைச் செயலர் திரு. இ. சி பி பிரபாகர் ஆகியோரின் கட்டுரைகளும்,

ஈரோடு கவிஞர் தமிழன்பன், கவிஞர் பொன்னடியான், கலைமணி சலகை ப. கண்ணன் ஆகியோரின் கவிதைகளும், தொழிலாளர் தலைவர்கள் திரு. காட்டூர் கோபால், சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஜி. பராங்குசம் ஆகியோரின் கருத்துரைகளும், கவிஞர் ஆனந்தம் அவர்கள் முதலமைச்சரைப்பற்றி எழுதியுள்ள சிறப்புக் கட்டுரையும் இதழைப் பொலிவுப்படுத்துகின்றன.

கிராமியச் சூழ்நிலை அமைந்த கதை ஒன்றினைத் திரு சோம. மகாதேவன் எழுதியுள்ளார்.

திரு. இரா. சனார்த்தனம் அவர்கள் அயல் நாடுகளில் தாம் கண்ட தொழிலாளர் நிலை குறித்து எழுதியுள்ளார்.

வி. ஸ. காண்டேகரின் மராட்டிய மொழிக் கதை ஒன்றினைத் திரு. கா. ஸ்ரீ. ஸ்ரீ. அவர்களும், கிராம முன்னேற்றம்பற்றி வங்கக் கவிஞர் தாகூர் எழுதிய கட்டுரை ஒன்றைத் திரு. தா. ந. சேனாபதி அவர்களும் தமிழில் தந்துள்ளார்கள்.

கட்டுரை, கதை, கவிதை எழுதி உதவியவர்கட்கு உளமார்ந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கிறோம்.

கிராம நலத்தின் ஜூன் இதழ் கல்வி இதழாகக் கவினுற வெளிவரும்.

மே திங்களில் இரு சோக நிகழ்ச்சிகள் நாட்டு மக்களின் கண்களைக் குளமாக்கி விட்டன. இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களும், தமிழ்நாடு உணவு - விவசாய அமைச்சர் மாண்புமிகு ஏ. கோவிந்தசாமி அவர்களும் மீளாப் பிரிவெய்தினர். அவர்கள் வகுத்துத்தந்த வழியில் நடந்து செல்வதே அவர்கட்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

''பஞ்சாயத்து ராஜ்'' ''இன்டென்சிவ் அக்ரிகல்ச்சர்'' போன்ற இதழ்களிலிருந்து இடம் பெறுபவை.

பக்கங்கள் : 21, 22, 31, 32, 33, 34, 44, 45, 49. 57

Articles reproduced from 'Panchayat Raj'. 'Intensive Agriculture' etc., Pages : 21, 22, 31, 32, 33, 34, 44, 45, 49, 57

194484

வியர்வையின் வெற்றி

'மே' நாள்.

உதவாதினி ஒரு தாமதம் என்று விழித்தெழுந்து, நெற்றியில் வடியும் வியர்வை நீரினை வழித்தெறிந்து, குள்ளநரிச் செயல்புரியும் முதலாளித்துவ மதயானைக்கு அங்குசம் தயாரித்ததைக் குறிக்கும் உலகப் பெருவிழா, தொழிலாளர் திருவிழா!

இருபத்தி நான்கு மணி நேரத்தில், பதினெட்டு மணி நேரமும் இருபது மணி நேரமும் மெழுகாய் உருகி, புழுவாய்த் துடித்துக் கால்வயிறு கழுவி வந்த கதியற்றவன், மனிதருள் நானும் ஒருவன்; மண்ணன்று—என்னும் மகோன்னதத் தத்துவத்திற்காகப் போராடி, சிலரைத் தூக்கு மேடைக்கும் துப்பாக்கி ரவைகளுக்கும் பலிகொடுத்து, நலிவு தீரப்பெற்றதனால் முகத்திலே பொலிவு திகழும் பொன்னாள்!

இப் பொன்னாளின் புனிதத்தை மதித்துத் தமிழ்நாட்டில் மேநாளுக்கு விடுமுறை அளித்தார் பேரறிஞர் அண்ணா.

உழைப்பின் பெருமையினை-தொழிலாளர் சக்தியின் ஆற்றலினை நன்குணர்ந்தது, இன்றைய ஆட்சி!

ஒரு மோதிரத்துக்குள் நுழைந்து செல்லும் விதத்திலே, சிலந்தி வலையைவிட, பாம்புச் சட்டையைவிட—மெல்லிய—மிக மெல்லிய ஆடைகளை அகிலத்தின் சந்தைகளுக்கெல்லாம் அனுப்பியவர்கள் ; அகில் — தேக்கு — மிளகின் சொந்தக்காரர்கள் — என்ற வரலாறு நமக்குண்டு. உழைப்பிலே உலகத்தின் கவனத்தைக் கவர்ந்தவர்கள் நாம்.

இன்றும் உழைப்புக்கு நம்மிடையே குறைவில்லை. உழைப்புக்குரிய மதிப்பு அளிப்பதில் 'தயக்கம்', 'தாமதம்', 'தடுமாற்றம்' இதுவரை இருந்தது.

செங்கதிருக்கு முன்னெழுகின்ற சேவலுக்கு முன்னெழுந்து, கழனி சென்று, வியர்வை சிந்தி, உழைப்பை வடித்தெடுத்து உணவுப் பொருள் தருகின்ற ஏழை மகன் உரிய பயனை அடையத் 'தாமதம்' ஏற்பட்டால் மனங்குமுறுகிறான்.

தயக்கம், தாமதம், அவசரப்படாமை, நிதானம், ஆர்வத்தை அதிகப்படுத்தும் செய்கை ஆகியவற்றை அவ்வவ்வற்றிற்கேற்ற வேளையில் கடைப்பிடித்தால் நன்மை உண்டு, நனிமிகு சுவையுமுண்டு.

கட்டிலில் அமர்ந்திருக்கும் காதலன் வட்டிலில் பாலுணவு ஏந்தி வரும் பாவையைத் தொட்டிழுக்கும்போது அவள் காட்டும் தயக்கம், ஊடலின் பாற்பட்டது! உவகையை அதிகமாக்குவது! உளத்திற்கோர் நல்விருந்து! காதல் களத்திற்கோர் ஒத்திகை! இங்கே தயக்கம் சுவைக்கும்! வரவேற்கப்படும்.

அதே காதலன், ஒரு நாள் உணவருந்தும் நேரம் தொண்டையிலே பண்டம் அடைத்து, விக்கல் மேவி, உயிருக்கு மன்றாடும் வேளையில், அடுக்களையில் உள்ள ஆருயிர் நாயகியை அழைத்து, ''அவசரமாகத் தண்ணீர் கொண்டுவா'' என்றால் அவள் அங்கிருந்தவாறே தயக்கம் காட்டினால், அவனை நிரந்தர மயக்கமல்லவா சூழ்ந்துகொள்ளும்.

இந்த இரண்டாம் வகைத் தயக்

கத்தைத் தொழிலாளர்கள் மீது — உழைப்பாளர்கள் மீது காட்டும் கொள்கை சமுதாயத்திலிருந்து மாற வேண்டும்.

'எட்டாத கனி—கிட்டாத பழம்; ஏறிச் செல்ல ஏணியுமில்லை—கடந்து செல்லத் தோணியுமில்லை —அதோ பார் அந்தக் கனி உனக்குத் தான்' என நடுத்திட்டிலே காய்த்துத் தொங்கும் பலாப் பழத்தைக் காட்டி இடையேயுள்ள நீரைக் கடக்க, நீந்தத் தெரியாதவனை இறக்கிவிட்ட கதை போல—''ஏழைத் தொழிலாளியே எதிர்காலம் உன்னுடையது. ஏற்றுக்கொள்!'' என்று வாயளவில் சொல்லி வந்தவர்களால் வந்துள்ள கொடுமைகள் ஏராளம்!

உழைப்பவன் உரிய இடத்தைப் பெற வேண்டும். உழைப்பை மதிக்கும் குணம் பெருக வேண்டும் என்ற கொள்கையுடன் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்குத் துணை நிற்கும் அரசு இன்று அமைந்துள்ளது. எனவே, பாட்டாளிகள் அகமகிழ்கிறார்கள்.

ஐந்தாண்டுத் திட்டம் இடையே நிறுத்தப்பட்டது. திட்ட வேலைகள் செயல்படவில்லை. மத்திய அரசின் அதிகாரக் குவிப்பு, டில்லியின் கொள்கைகளால் ஆலைத் தொழிலில் நெருக்கடி—வேலையில்லாத் திண்டாட்டம்-—மக்கள் தொகைப் பெருக்கம்—இப்படிப் பல்வேறு சூழல்கள் தொழிலாளர்களுடைய நல்வாழ்வுக்கு இடையூறாக அமைந்துள்ளன. எனினும், காண விழையும் புதிய சமுதாயத்தை, சரிவற்ற சமுதாய அமைப்பை உருவாக்கியேதீருவோம்.

முயற்சி திருவினையாக்கும்!
உழைப்பு உயர்வைத் தரும்!
வியர்வை வீண் போனதில்லை!
கண்ணீர் சக்தி இழந்ததில்லை!
அறம் வென்றேயிருக்கிறது!
ஏழை தோற்றதில்லை!

என்பதின் அடையாளமே இன்றைய தமிழ்நாடு அரசும், ஆட்சி செலுத்துவோரும்!

வியர்வையின் வெற்றி உலகுக்குச் சொல்லும் பாடம்தான், வருங்கால வரலாற்றுப் படமாகும்!

நீங்கள் விதைக்கிறீர்கள்; மற்றொருவன் அறுக்கிறான். நீங்கள் செல்வத்தைத் தேடுகிறீர்கள்; இன்னொருவன் துய்க்கிறான். நீங்கள் நெய்யும் ஆடைகளை மற்றவர்கள் அணிகிறார்கள். நீங்கள் செய்யும் படைக்கலங்களை வேறொருவன் தாங்குகின்றான்.

விதையை விதையுங்கள் - ஆனால் எந்தக் கொடுங்கோலனையும் அறுக்க விடாதீர்கள். செல்வத்தைத் தேடுங்கள் - ஆனால் எந்த ஏமாற்றுக்காரனையும் அதை அனுபவிக்க விடாதீர்கள்; ஆடைகளை நெய்யுங்கள்-ஆனால் சோம்பேறிகள் அவற்றை அணிய விடாதீர்கள்! படைக்கலங்களைச் செய்யுங்கள் - ஆனால் அவற்றை உங்கள் தற்காப்புக்காகவே தாங்கி நில்லுங்கள்.

ஷெல்லி

உழைப்புத் தெய்வங்களின் திருவிழா

மாண்புமிகு
மா. முத்துசாமி, பி.ஏ., பி.டி.,
உள்ளாட்சித் துறை அமைச்சர்

'இந்த நாட்டிலே இருக்கக்கூடிய தொழிற்சாலைகள் தான் நான் விரும்புகின்ற ஆலயங்கள்' என்றும், 'அந்தத் தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள்தான் நான் வணங்குகின்ற தெய்வங்கள்' என்றும் எடுத்துச் சொல்லி வந்தார் மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள். அண்ணா போற்றிய அந்தத் தெய்வங்களின் திருநாளே மே நாள்.

1886 ஆம் ஆண்டு, உலக வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திய ஆண்டாகும். அந்த ஆண்டின் நாட்களிலேதான் அமெரிக்காவில் தொழிலாளர்களுடைய நலஉரிமைப் புரட்சி வேகமாகக் கிளர்ந்தெழுந்தது. அக்கிளர்ச்சியில் அந் நாட்டுத் தொழிலாளர்கள் கடுமையாக நசுக்கப்பட்டார்கள்; ஒடுக்கப்பட்டார்கள். அதைப் பார்த்த மற்றைய உலக நாட்டுத் தொழிலாளர்கள் அனைவரும் கிளர்ந்தெழுந்து அந்த நாளிலிருந்தே தங்களுடைய உரிமைகளுக்காகக் கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் நடத்தியதோடு அவைகளிலே மாறிமாறி, வெற்றியும் தோல்வியும் காண்கின்ற நிலையிலிருந்தனர்.

1886 ஆம் ஆண்டில் அமெரிக்க நாட்டிலே நடைபெற்ற புரட்சியினுடைய விளைவுதான் 1917ஆம் ஆண்டில் ருஷிய நாட்டிலே ஏற்பட்ட அக்டோபர் புரட்சி ஆகும்.

ருஷிய நாட்டிலே 1917ஆம் ஆண்டில் லெனினது தலைமையில் நடந்த மகத்தான மக்கள் போராட்டத்திற்கு - தொழிலாளர் புரட்சிக்குத் தொட்டிலாக அமைந்தது - காரணமாக விளங்கியது அமெரிக்காவில் 1886இல் நடைபெற்ற மேதினப் புரட்சியே ஆகும். 1917இல் ருஷியாவிலே நடைபெற்ற புரட்சியானது நம் நாட்டிலே ஏற்படுவதற்கு 1967 ஆம் ஆண்டுதான் இயன்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

1947ஆம் ஆண்டிலேயே நம் நாட்டிற்கு அரசியல் விடுதலை கிடைத்தது. எனினும் அந்த விடுதலையைத் தொழிலாளர்களுக்குக் கிடைத்த விடுதலை என்று சொல்லி விடமுடியாது. வெறும் விடுதலை என்கிற சொல்லும், சனநாயக நாட்டிலே வாழ்கிறோம் என்ற சொற்றொடரும் மட்டுமே நமக்குப் போதுமானவை அல்ல. உண்மையான விடுதலை நமக்குத் தேவை என்று கருதினோம்; அதற்குப் பல்வேறு முறை

களிலே நாம் போராட்டங்களை நடத்தியும் வந்தோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் கடந்த 30 ஆண்டு காலமாக இரவும் பகலும் ஒன்றெனக் கருதி அமைதியான போராட்டத்தை நடத்தி, ஓட்டு முறையின் மூலமாகத் தொழிலாளர்களுடைய நலத்துக்கான வெற்றியைப் பெறுகின்ற முயற்சியிலே தன்னை ஈடுபடுத்தினார்கள். அதனால் ஏற்பட்ட புரட்சிதான் 1967இல் நடந்த புரட்சியாகும். அந்தப் புரட்சியின் வெற்றியாகத் திராவிட முன்னேற்றக்கழக அரசு, பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்தது. இந்திய உப கண்டத்திலேயே, உள்ளபடியே தொழிலாளர்கள் நலம் காணத்தக்க வகையில் தொழிலாளர் புரட்சி வெற்றி பெற்றிருக்கிறதென்றால் அது 1967ஆம் ஆண்டிலேதான்.

அந்தப் புரட்சிக்குத் தலைமை தாங்கிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட தலைவர் பேரறிஞர் அண்ணா ஆவார்கள்! 1917ஆம் ஆண்டு ருஷிய நாட்டில் ஏற்பட்ட புரட்சிக்குத் தலைமை தாங்கியவர் லெனின் ஆவார்கள். 1967-ஆம் ஆண்டில் இந்த நாட்டினுடைய லெனினாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்து தொழிலாளர்களுடைய வெற்றிக்காக உழைத்து ஒரு புரட்சியை ஏற்படுத்தினார்கள்.

தொழிலாளி என்ற சொல்லுக்கு இன்னும் இந்த நாட்டிலே முழுமையான விளக்கம் கிடைத்ததாகத் தெரியவில்லை. தொழில் சங்கத்தினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களானாலும் சரி, தொழிலாளர்களானாலும் சரி, ஏதோ ஒரு சில குறிப்பிட்ட ஆலைகளிலே வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும்தான் இந்த நாட்டிலே தொழிலாளர்கள் என்று தங்களைக் கருதிக்கொண்டு இருக்கின்ற சூழ்நிலையும், அந்தத் தொழிலாளர்கள் மட்டுமேதான் தொழிலாளி வர்க்கம் என்ற ஒரு நிலையும், நாட்டிலே தெரிந்தோ, தெரியாமலோ இருந்து வருகிற நிலைமையைப் பார்க்கிறோம். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அத்தனை பேரும்-நூற்றுக்கு 98 சதவிகிதத்தினர் - தொழிலாளர்களேயாகும்.

தொழிலாளி என்ற சொல் ஏதோ ஆலையிலே வேலைசெய்கிற அந்தத் தொழிலாளியை மட்டும் குறிப்பதல்ல. காலையிலே இருந்து இரவு வரை கழனியிலே பாடுபடுகின்றானே உழவன், அவனும் தொழிலாளிதான். காலையிலே பள்ளிக்குச் சென்று மாலையிலே பள்ளி முடிகின்ற வரையில் அறிவுக் கண்களைத் திறக்கின்ற ஆசிரியர் ஆற்றுகின்ற பணியும் தொழிலாளி பணிதான். இந் நாட்டில் பல்வேறு துறைகளிலே பல்வேறு நிலைகளிலே நின்று பல்வகைப்பட்ட தொழில்லாளர்கள் தங்கள் தங்களுடைய கடமைகளைச் செய்து வருகிறார்கள். அமைச்சராகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் நாங்களும் அமைச்சுத் தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் தாம். ஆக அந்த அளவுக்கு இந்த நாட்டிலே இருக்கக் கூடிய அத்தனை பேரும் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். அவரவர்கள் ஈடுபட்டிருக்கக்கூடிய துறையிலே வேண்டுமானால் மாறுபாடுகள் இருக்கக்கூடும்.

இவ்வாறாகப் பல்வேறு வகையான தொழிலாளர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். இந்தத் தொழிலாளர்களுடைய நிலை எப்படி இருக்க வேண்டுமென்று சொன்னால், ஆசிரியராகிய தொழிலாளிக்குத் தான் தொழில் செய்வதானது இந்த நாட்டு மக்களுடைய அறிவுக்கண்களைத் திறப்பதற்குப் பயன்படுகின்ற கடமை உணர்வோடு செய்யப்படுகின்ற காரியம் என்கிற உணர்வு இருக்க வேண்டும்; ஆலையிலே வேலை செய்கின்ற தொழிலாளிக்கு இந்த நாட்டுக்குத் தன்னாலான உற்பத்தியைச் செய்து கொடுத்து, இந்த நாட்டினுடைய வறுமைத் தீயைப் போக்க வேண்டும் என்ற உணர்வு கொண்டதாக அமையவேண்டும். அமைச்சர் என்கிற தொழிலாளிக்குத் தன்னுடைய நாட்டு மக்களுக்குத் தன்னாலான காரியங்களைச்செய்து, தன் நாட்டிலே இருக்கக்கூடிய நான்கு கோடி மக்களுடைய வாழ்க்கையில் ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்ற முயற்சிக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறோம் என்ற உணர்வு பிறக்க

வேண்டும். இப்படிப்பட்ட உணர்வு இல்லாத நேரத்திலேதான், தன்னுடைய சுய வாழ்வுக்குத் தான் பெற்றிருக்கக் கூடிய பதவியைப் பயன்படுத்துகிற நேரத்திலேதான் போராட்டங்கள் நேரிடுகின்றன.

தொழிற்சாலையில் மூலதனம் போட்டு இருக்கக்கூடிய முதலாளிகள் மூலதனமானது தம்முடைய வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல், தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கும், இந்த நாட்டினுடைய வாழ்க்கைக்கும் பயன்படத் தக்கது என்ற பொது எண்ணம் கொண்டவராக இருந்திருப்பாரேயானால் தொழிலாளர்களுடைய வாழ்வில் சிக்கல் ஏற்பட்டிருக்கத் தேவையே இல்லை; தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் வறுமைத் தீ அண்டவேண்டிய அவசியமும் நேரிட்டிராது. ஆனால் கிடைப்பது தம்முடைய இலாபத்திற்குத்தான் என்ற உணர்வு அவர்களுக்கு வளர வளர, உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய் தொழிலாளி, தனக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான பங்கு கிடைக்கவில்லை என்கிற அந்தச் சூழ்நிலையிலே வெறுப்புக் கொள்ளும்போது போராட்டங்கள் நடைபெறுகின்ற நிலை ஏற்பட்டு விடுகின்றது.

தொழிலாளர் போராட்டங்கள் அடையவேண்டிய முழு வெற்றியை இன்னும் அடைந்ததாக நாம் கூறிவிடமுடியாது. இதற்குக் காரணம் நாட்டினுடைய பொருளாதாரச் சூழ்நிலை, நாட்டினுடைய சமுதாயச் சூழ்நிலை, அரசியல் சூழ்நிலை ஆகியவைகள் மட்டுமல்ல. தொழிலாளர்கள் மத்தியிலேகூட இன்னும் ஒன்றுபட்ட உணர்வு முழுமையாக ஏற்படவில்லை. அப்படிப்பட்ட உணர்வு ஏற்படுமானால், இந்த நாட்டினுடைய எதிர்காலம் ஒளிமயமானதாக இருக்கும். வெறும் போராட்டங்கள் மூலமாக மட்டுமே நாம் அடையவேண்டிய காரியங்களை அடைந்து விடமுடியாது. அத்தனை பேரும் ஒன்றுபட்டு நாட்டிலே திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயல்படுத்துகிற உணர்வு நமக்கு ஏற்படவேண்டும். அத்தகைய உணர்வு வருகின்ற நேரத்திலேதான் காரியங்கள் ஒழுங்காக நடைபெறமுடியும்.

1917ஆம் ஆண்டில், ருஷிய நாட்டிலே, லெனினுடைய தலைமையில் மகத்தான ஒரு புரட்சியை நடத்தி அந்த நாடு விடுதலை பெற்றது. 50 ஆண்டுக் காலத்தில் விஞ்ஞானத் துறையிலே, பொருளாதாரத் துறையிலே, கல்வித்துறையிலே, தொழில் துறையிலே, வேளாண்மைத் துறையிலே மற்றுமுள்ள எல்லாத் துறைகளிலுமே உலக நாடுகள் அத்தனையையும் மிஞ்சுகின்ற அளவுக்கு அந்நாடு வெற்றியைக் கண்டிருக்கிறது. அதற்குக் காரணம் அந்த நாட்டிலே அமைக்கப்பட்ட அரசு ஆரம்ப காலத்திலேயே தொழிலாளர்களுடைய அரசாக அமைந்ததேயாம். தொழிலாளர்களுடைய வாழ்வுக்கான திட்டங்களைத் தீட்டி, அத்தொழிலாளர்களுடைய நல முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதன் விளைவாகத்தான் அங்கே பெரும் மாற்றத்தைக் காண முடிந்திருக்கிறது. அங்கே இருக்கிற தொழிலாளர்களும், குடிமக்களும் இது நம்முடைய அரசு என்ற உணர்வைக் கொண்டார்கள்; நான் என்ற உணர்வு அறுபட்டு நாம் என்ற உணர்வு அந்த நாட்டுத் தொழிலாளர்களுக்கும் குடிமக்களுக்கும் ஏற்பட்டது. அதன் விளைவாகக் கடுமையாக உழைத்தார்கள். பயங்கரமான விபத்துக்களுக்கெல்லாம் ஆளாக்கப்பட்ட தொழிற்சாலைகள் ஓராண்டுக் காலத்தில் மறுபடியும் தலை நிமிர்ந்து நிற்கின்ற அந்த நிலையை உண்டாக்கினார்கள்.

அங்கு ஒரு டிராக்டர் தொழிற்சாலைக்குச் சென்று இருந்தேன்; ஐந்து நிமிடங்களுக்கு ஒரு டிராக்டர் உற்பத்தி செய்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 68 ஆயிரம் டிராக்டர்கள் தொழிற்சாலைகளிலிருந்து இப்பொழுது வெளிவருகின்றன. நூறாவது ஆண்டு விழாவும், புரட்சியின் 50ஆவது ஆண்டு விழாவும் நடைபெறுகிற இந்த ஆண்டில் அவர்கள் அதை மேலும் அதிகமாக்கி 82 ஆயிரமாக உயர்த்த வேண்டும் என்று அங்கிருக்கிற தொழிலாளி பாடுபடுகிறார். அங்குள்ள தொழிலாளிக்கு எத்தகைய போராட்ட உணர்வும் இல்லை; மாறாக உற்பத்தியை அதிகமாக்கவேண்டும் என்ற உணர்வுதான் உள்ளது. காரணம் அவனுடைய வாழ்க்கையில் வறுமை இல்லை. அவ

னுக்குத் தேவையான எல்லாவற்றையும் அரசே கவனித்துக்கொள்கிறது. அப்படிக் கவனித்துக் கொள்வதற்குக் காரணம், ஆரம்ப காலத்தில் அங்கே ஏற்பட்டிருந்த அரசு, தொழிலாளர் அரசாக இருந்ததேயாகும்.

ஆனால் இந்த நாட்டினுடைய துர்ப்பாக்கியம், விடுதலை பெற்று 20 ஆண்டு காலமாக, தொழிலாளர் அரசு அமைய முடியாது போயிற்று. மேட்டுக்குடி மக்களுடைய அரசு அமைந்து இருந்த காரணத்தினால், நாம் எதிர்பார்த்த பயனைப் பெறமுடியாது போயிற்று. ஆயினும் தொழிலாளர் அரசு 1967ஆம் ஆண்டில், இந்திய உபகண்டத்தின் தென்கோடியில், உலகத்திற்கே வழிகாட்டிய நாகரிகம் மிகுந்த தமிழ்நாட்டில், காஞ்சி தந்த கருவூலம், 20ஆவது நூற்றாண்டின் இணையற்ற வள்ளுவர், இந்த நாட்டினுடைய லெனின் என்று பாராட்டப்படுகிற பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே ஏற்பட்டது. இரண்டு ஆண்டுக் காலத்தில் உலகமே பாராட்டத்தக்க, வியக்கத்தக்க மாறுதல்களைத் தொழிலாளருடைய நலத்திலும் சரி, விவசாயிகளுடைய நலத்திலும் சரி, இந்த அரசு செய்து முடித்திருக்கிறது. அதற்குக் காரணம், இது தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட, ஏழை எளிய பாட்டாளி மக்களாலே அமைக்கப்பட்ட ஓர் அரசு என்பதே.

கார்ல் மார்க்சினுடைய தத்துவங்கள் ருஷிய நாட்டிலே பல்வேறு மாறுபாடுகளுக்கு ஆளாகியிருக்கிறது. தொழிலாளர்கள் அதை உணரவேண்டும். நாட்டுக்கு நாடு, இந்தத் தத்துவம், அமுல்படுத்தப்படுகின்ற முறை வேறுபட்டுத் தீர வேண்டும். நம்முடைய நாட்டினுடைய இயற்கைச் சூழ்நிலைகள், நம் நாட்டினுடைய கலை, கலாச்சாரப் பண்புகள், நமக்கு இருக்கக்கூடிய மக்கள் தொகையினுடைய பெருக்கம் ஆகிய இவைகளின் அடிப்படைகளை கணக்கிலே கொண்டுதான் இங்கே நாம் அவைகளை அமுல் படுத்தித் தீரவேண்டும். மக்கள் தொகை பெருகக்கூடிய நம் நாட்டிலே நடைபெறக்கூடிய நிலையையும், மக்கள் பெருக்கம் குறைவாக உள்ள நாடுகளில் இருக்கிற நிலையையும் ஒப்பிட முடியாது. சில இடங்களில் மக்கள் கிடைக்காத காரணத்தால், வேலைக்குத் தேவையான ஆள் இல்லாத காரணத்தால், இயந்திரப் பெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு, இயந்திரங்களின் மூலமாக மனிதச் சக்தியைக் குறைத்து உற்பத்தியை அதிகப்படுத்துகிற நிலை இன்றைக்கு இருக்கிறது.

ஆனால் இந்த நாட்டிலே அப்படிப்பட்ட நிலையா? ஆண்டுக்கு ஆண்டு ஒரு புதிய ஆஸ்திரேலியா இந்நாட்டில் தோன்றிக் கொண்டிருக்கிற ஒரு காட்சியைப் பார்க்கிறோம். ஒரு வினாடிக்கு $1\frac{1}{2}$ குழந்தைகள் பிறப்பதாகக் கணக்குச் சொல்கிறார்கள். ஒருமணி நேரத்திற்கு 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் இந்திய உபகண்டத்திலே பிறந்து கொண்டிருக்கிற நிலையைப் பார்க்கிறோம். ஆக இப்படிப்பட்ட மக்கள் பெருக்கம் மிகுந்து இருக்கக்கூடிய நாட்டில் இயந்திரப் பெருக்கத்தின் மூலமாகவே ஒரு புரட்சி ஏற்படுத்த வேண்டும் என்று நாம் திடீரென்று முடிவுக்கு வந்து விடுவது என்பது இயலாத காரியமாகும்.

இன்றைய அரசியலில், அத்தனை பேருக்கும் வாழ்வு அளித்தாக வேண்டும்; வேலை கொடுத்தாக வேண்டும்; அதற்கு ஏற்ற வகையில், நம்முடைய திட்டங்களைத் தீட்டியாகவேண்டும். நாம் குடியரசுத் தத்துவத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அக் குடியரசு அமைப்பு முறைகள் வழியே நின்று செயலாற்ற வேண்டிய கடமையும் இருக்கிறது. அக் கடமை வழி இயங்கி உழைப்பைத் தெய்வமாக்கி உயர்வடைவோமாக!

[1-5-59 அன்று சென்னைக் கடற்கரையில் அண்ணா சதுக்கத்தில் நடைபெற்ற மேதின விழாப் பேச்சின் ஒரு பகுதி இது.]

அஞ்சுகத்திலே..

கலைஞர் கலைஞர் முதலமைச்சர்

['கிராம நலத்தில்' ஒவ்வோர் இதழிலும் தமிழ்நாடு அமைச்சர் ஒருவரைப்பற்றி அவரை நன்கறிந்த ஒருவர் எழுதுவதை வெளியிடுவது என்ற எண்ணப்படி முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களைப்பற்றிய கட்டுரையோடு தொடங்கப்பெறும் இவ்வரிசை இதழ்தோறும் வளரும். ---ஆசிரியர்]

கவிஞர் ஆனந்தம்

சென்னை எழும்பூர் இரயில் நிலையம்; காலை 7 மணியளவில் தென்புறத்து மாவட்டம் ஒன்றைச் சேர்ந்த சிற்றூரிலிருந்து ஒரு நண்பர் வந்து இறங்கி வெளியில் வருகின்றார். வரிசையில் முதலில் நிற்கும் 'டாக்சி' ஒன்றில் ஏறி அமர்ந்து, கதவை மூடியதும் வண்டி புறப்படுகிறது. டிரைவர் 'எங்கே செல்ல வேண்டும்?' என்ற கேள்விக் குறியோடு பயணியைத் திரும்பிப் பார்க்கிறார். 'கோபாலபுரம்' என்கிறார். உடனே 'கலைஞர் வீட்டுக்குத்தானே?' என்று கேட்டுக்கொண்டே வண்டியை விரைவாக ஓட்டுகின்றார் டிரைவர்.

பத்து நிமிடங்களில் தெற்குக் கோபாலபுரம் நான்காவது தெருவின் மேலக்கோடியில் வண்டி வந்து நிற்கிறது. டாக்சிக் கட்டணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டு நண்பர் சுற்றுமுற்றும் பார்க்கிறார். வீட்டின் முன்புறச் சுவர்களின் விளிம்பில் ஒரு

புறம் 'மு. கருணநிதி' என்றும், மறு புறம் 'அஞ்சுகம்' என்றும் கற்களில் எழுத்துகள் காணப்படுகின்றன. 'அதே வீடுதான்' ஆனல் முன்புறம் ஒரு கீற்றுக் கொட்டகை 'புதிதாகத் தெரிகிறது' என்று மனத்திற்குள் கூறிக்கொண்டே நண்பர் உள்ளே நுழைகிருர். சில காவல்துறையினர் நின்று கொண்டிருக்கிருர்கள். துப்பாக்கி ஏந்திய 'சென்ட்ரி' ஒருவர் விறைப்பாக நிற்கிருர். நண்பர் தயங்கியவாறு யாரைக்கேட்பது என எண்ணுவதற்குள் கணீரென்று ஒரு குரல் 'வாங்க, யாரைப் பார்க்கணும்?' என்று கேட்கிறது. குரலுக்குரியவர் சிறிய உருவமாய் ஒல்லியாய் எதிரில் நிற்கிருர். அவர் பெயர் செயல்மணி. வந்த நண்பர் 'முதலமைச்சரைப் பார்க்கவேண்டும்' என்று பதிலுரைக்கிருர். 'இப்படி வந்து உட்காருங்க, ஐயா குளித்துக் கொண்டிருக்கிருர்கள்' என்று ஒரு நாற்காலியைக் காட்டிக்கொண்டே அவர் நகர்கிருர்.

வீட்டின் முன்புறக் கூடம், சுவர் முழுவதும் வண்ணவண்ணப் படங்கள், வாழ்த்து மடல்கள் கண்ணைக் கவருகின்றன. அண்ணு, வள்ளுவர், கலைஞரும் தாயாரும்—மற்றும் சில புகைப்படங்கள். இவருக்கு முன்பே அங்குச் சிலர் அமர்ந்திருக்கிருர்கள்.

மணி எட்டாகிறது. அங்கே பரபரப்பும் கூட்டமும் அதிகமாகிறது. கார்கள் வந்து வந்து தெருவை நிறைக்கின்றன. யார் யாரோ வந்து கொண்டேயிருக்கிருர்கள். அந்தக் கூடத்தின் மேற்குப் புறத்தில் சிறிய அறை ஒன்று பலகையால் தடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குள்ளே இரண்டு மூன்றுபேர் சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருக்கிருர்கள். தொலைபேசியில் பேசிக் கொண்டேயிருக்கிருர் ஒருவர்.

''அதோ சிவப்பாய், சுருண்டமுடியும் புன்சிரிப்புமாய் இருக்கிருரே, அவர் யார்?'' என்று அருகிலிருப்பவரிடம் விசாரிக்கிருர் நமது நண்பர். ''அவர் தான் வைத்தியலிங்கம். முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர். அடுத்து இன்னெருவர் சற்றுக் குள்ளமாய்த் தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கிருரே அவர் நீலகண்டன். இதோ வந்திருப்பவருக்கு என்ன செய்யவேண்டும் என விசாரிக்கிருரே அவர் வெங்கட்ராமன். டைப் இயந்திரத்தில் ஏதோ அடித்துக்கொண்டிருக்கிருரே அவர் சண்முகநாதன். இங்கே டெலிபிரிண்டர் இயந்திரத்திலுள்ள காகிதச் சுருளை வெட்டி எடுக்கிருரே இவர் பெருமாள். அந்தரங்கச் செயலாளரிடம் அடக்கத்துடன் எதையோ கேட்கிருரே அவர் இராமசாமி, இவர்கள் யாவரும் முதலமைச்சரின் தனி உதவியாளர்கள்.

படிக்கட்டின் ஓரமாய் மேலே கதவு திறக்கப்படுமா என்று பார்த்துக் கொண்டு நிற்கிருரே அவர் முதலமைச்சரின் மெய்க்காவலர்; கோவிந்தசாமி என்று பெயர். அருகிலிருப்பவர் மெய்க்காவல் அதிகாரி, லயனல் சிங். இன்னெருவர் மீனுட்சி சுந்தரம்.'' இப்படியாக அறிமுகம் சொல்லி முடிந்ததும், வந்த நண்பர் ''அடடே இவர்களெல்லாரும் பார்வையிலும் தோற்றத்திலும் சுறுசுறுப்பிலுங்கூடக் கலைஞரைப் போலவேயிருக்கிருர்களே'' என்று கூறி வியக்கின்ருர்.

'கிர்ர்ர்' என்று பஸ்ஸர் ஒலி ஒன்று கேட்கிறது. உடனே அங்கே அமைதியும், பரபரப்பும் அதிகமாகிறது. செயல்மணி கையில் ஒரு கத்தைத் துண்டுக் காகிதங்களுடன் மேலே ஓடுகின்ருர். விரைவில் திரும்பி வந்து, ஒவ்வொருவராக மேலே செல்லுமாறு அனுப்பிவைக்கிருர்; நமது நண்பரின் முறை வருகிறது.

படிக்கட்டில் ஏறுகிருர். ''காலம் பொன்போன்றது; கடமை கண் போன்றது'' என்று ஈரடி வாசகங்கள்பொறிக்கப்பட்ட பலகை, எதிரில் மின்னுகிறது. இதன் உட்பொருளை எண்ணியவாறே சீக்கிரம் திரும்பிவிடுகிறேன் என்று மனத்திற்குள் சொல்லிக்கொள்கிருர். அந்தச் சிறிய கூடத்தில், எதிரில் வருவோரைப் பார்த்த வண்ணம் அமர்ந்திருக்கிருர் தமிழ்நாடு அரசு முதலமைச்சர் கலைஞர் மு. கருணநிதி.

வந்த நண்பரை அவர் அடையாளம் தெரிந்து கொள்கிருர். மெல்லிய புன்சிரிப்பு ஒன்றை வரவழைக்கிருர். வணக்கம் செலுத்திய நண்பர், தான்வந்தவேலையைஎழுத்து மூலமாகத் தெரிவிக்கிருர். விரைவுடன் அதைப் படித்த முதலமைச்சர் அருகில் நிற்கும் வைத்தியலிங்கத்தி

மேதகு டாக்டர் ஜாகீர் உசேன்



மறைந்த குடியரசுத் தலைவருக்கு 'கிராமநலத்தின்' அஞ்சலி

2. மறைந்த தலைவர் ஜாகீர் உசேனுக்குச் சென்னைக் கோட்டையில் இராணுவ அணிவகுப்புத் திடலில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.



1. தமிழ் நாடு அரசின் சார்பில், மாண்புமிகு நிதி அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள், மறைந்த குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் உடல்மீது மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.



டம் கொடுக்கிறார். வந்த நண்பர் ''என்னைத் தெரிகிறதல்லவா. மும்முனைப் போராட்டத்தில் திருச்சி சிறையில்...'' என்று இழுக்கிறார். ''நன்றாக நினைவிருக்கிறது. சென்று வாருங்கள்'' என்று கூறி முதலமைச்சர் வணக்கம் தெரிவித்து அவரை வழியனுப்பிவைக்கிறார். வந்த நண்பர் மனநிறைவோடு ஊர் திரும்புகிறார்.

ஏறத்தாழ இரண்டாண்டுகள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பெரும்புகழுடன் பணியாற்றிய பேரறிஞர் அண்ணா, நல்லிதயம் படைத்த நானிலத்தார் எல்லையிலாத் துயரில் ஏங்கியழத் தொல்லையிலாப் பெருவாழ்வை எய்தினார்கள். தேம்பித் திகைத்துச் செய்வகையறியாது திணறியது தமிழகம். ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்துக்கோ அளவிலாத் துயரும், ஈடு செய்யமுடியாத இழப்பும் ஏற்படினும் ஆற்றித் தீரவேண்டிய பெருங்கடமையும் முன்னின்றது. வழியுங் கண்ணீரைத் துடைத்தவாறே தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் 'அடுத்த தலைவராகக் கலைஞர் தான் இருக்கவேண்டும்' என்றார்கள். கடைசி வரை ஏற்க மறுத்தார் அன்றையப் பொதுப்பணி அமைச்சர். அன்புக் கட்டளை வலிவுமிக்கதாயிருந்தது. வேறு வழியின்றிச் சம்மதித்தார்; ஒரே மனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றத் தொடங்கினார் கலைஞர் மு. கருணாநிதி.

பிப்ரவரி 16ஆம் நாள் அண்ணா நினைவு நாளன்று தோளில் சார்த்திய கறுப்புக்கொடியுடன் அமைதி ஊர்வலத்துக்குத் தலைமை தாங்கிச் சென்றாரே, அப்போதே ''நான் முதலமைச்சராயினும், முப்பதாண்டுகட்கு முன்னர்த் திருவாரூர்த்தேரோடும் வீதிகளில், இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில், கழகக்கொடி ஏந்தி நடைபோட்ட தொண்டன்தான் என்பதை மறக்கவில்லை'' என நினைவுபடுத்தினார். புதுடெல்லியில் இருமுறை சென்று இந்தியத் தலைமையமைச்சருடனும் ஏனைய மத்திய அமைச்சர்களுடனும் நன்முறையில் உரையாடி, உறவாடித் தமிழ் நாடு அரசுக்கு நற்பெயரும் புகழும் ஏற்படுத்தினார். பொறுப்பேற்ற குறுகிய காலத்துக்குள் எதிர்பாராது நாட்டைத் தாக்கிய வறட்சி நிலையைக் கண்டு மருட்சியடையாது, மனங்கலங்காது, துயர் துடைப்புப் பணிகளைத் தீவிரமாக மேற்கொண்டு, ''வறட்சி நிலை அறவே நீங்கும் வரை அமைச்சர்கள் விருந்துகளில் கலந்து கொள்ளமாட்டார்கள்'' எனச் சூளுரைத்தார். அண்ணாவின் மறைவால் ஏற்பட்ட துயரம் அவர் முகத்தில் எப்போதும் தவழும் சிரிப்பினைப் பறித்துவிட்டது; பொறுப்பினை நிறைத்துவிட்டது.

1967ஆம்ஆண்டுதிராவிடமுன்னேற்றக் கழகம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் கழகத்தின் பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏழை எளிய மக்களின் பிரதிநிதியாக என்றென்றும் விளங்கிய அவர் நாட்டின் வறிய நிலையை மனத்துட்கொண்டு சில புரட்சிகரமான திட்டங்களை, கொள்கைகளை அறிவித்தார். படி அரிசித்திட்டம் அமுலுக்கு வரும் வரை அமைச்சர்கள் சம்பளம் பெறமாட்டார்கள் என்பது ஒன்று. அதற்குப் பிறகும் அரைச் சம்பளமான மாதம் ஐந்நூறு ரூபாய்தான் பெறுவார்கள்; சிறிய கார்களிலேயே பயணம் செய்வார்கள்; சொந்த வீடு உள்ளவர்கள் அரசாங்க வீடுகளில் குடியிருக்கமாட்டார்கள்; கழக சம்பந்தமான காரியங்களில் கலந்து கொள்ளும்போது அரசாங்கப்படி பெறமாட்டார்கள் என்பன போன்ற சில கொள்கைகளைக் கையாண்டார்கள்; இன்றும் கையாளுகிறார்கள்!

அதற்கேற்ப, 14 ஆண்டுகட்கு முன்பே விலைக்கு வாங்கிக் குடியேறிய தமது கோபாலபுரம் இல்லத்திலேயே கழகத்தின் தொண்டராயிருந்த போதும், சட்டமன்ற உறுப்பினரானபோதும், பிறகு எதிர்க்கட்சித் துணைத் தலைவராயிருந்த போதும், அதன்பின்னர்ப்பொதுப்பணித்துறை அமைச்சரானபோதும், இப்போது முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பும் வசித்து வருகிறார்.

மாடியிலுள்ள படுக்கையறையில் துயில்கொள்ளும் முதலமைச்சர் காலை 7 மணிக்கு எழுந்துவிடுவார். படுக்கையிலேயே அன்றைய நாளேடுகள் தயாராக வைக்கப்பட்டிருக்கும். அனைத்துக்கும் மேலே ''முரசொலி''

இருக்கும். எழுந்தவுடன் முதல்வேலை, பத்திரிகை படிப்பதுதான். 'முரசொலி' படித்து முடிந்ததும் எல்லா நாளேடுகளையும் படிப்பார். எதிர்க்கட்சி ஏடுகளை மிக்கக் கவனமுடன் படித்து நினைவில் வைத்துக்கொள்வார். அவர்கள் விடுகின்ற குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் அப்போதே அவற்றுக்கான பதில்கள், மறுப்புகள் இவர் மனத்தில் பதிந்து, அன்று மாலை நடைபெறும் கழகக் கூட்டத்தில் வெடித்துச் சிதறும். பிறகு சொந்தமாகவே முகச்சவரம் செய்துகொள்வார். அப்போதும் பத்திரிகைகள் அருகிலேயேயிருக்கும். மாடியிலுள்ள குளியல் அறையில் விரைவாக வெந்நீரில் குளித்து முடிப்பார். அதைவிட விரைவாகக் காலைச் சிற்றுண்டி நடைபெறும். இரண்டு இட்லி, தயிர், காப்பி அவ்வளவே! கைத்தறியில், லுங்கி நெசவில் நெய்யப்பெற்ற தூய வெள்ளை நிறத்திலான வேட்டி, முழுக்கைச் சட்டை (இரண்டாண்டுகட்கு முன்புவரை 'ஜிப்பா', இப்போது 'காலர்' வைத்த 'ஓப்பன்' சட்டை!) நீண்ட மேல்துண்டு, வேட்டியிலும் மேல் துண்டிலும் பளீரென்று கறுப்பு, சிவப்புக் கரை, பேனா, மூக்குக்கண்ணாடி; எப்போதும் பையில் மணி பர்ஸ் வைத்துக்கொள்ளும் வழக்கமில்லை. பணத்தைச் சட்டைப் பையில் தான் வைத்துக்கொள்வார். இடது கையில் கடிகாரம். இடதுகை விரலில் அண்ணாவின் கையெழுத்துடன் கூடிய மோதிரம் எப்போதும் விரலை விட்டு அகலாது!

எட்டு மணிக்குள் எல்லாமே முடிந்து, மாடியின் முன்புறத்திலுள்ள சிறிய கட்டடத்தில் வந்து அமர்வார். சிறிய கூடமாயினும் கலை அழகு மிளிரும் புகைப்படங்கள், ஊர்தோறும் அளிக்கப்பட்ட அன்புப் பரிசுகள், புத்தகங்கள், வரவேற்பு மடல்கள் நிறைந்திருக்கும். காலை 10-30 மணிவரையில் வருவோருக்குப் பேட்டி. இவரைப் பார்க்க வருவோர் பற்பல துறையினராவர். கழகத் தோழர்கள், சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், விண்ணப்பம் தரும் வாக்காளப்பெருமக்கள், அரசு அலுவலர்கள், வணிக-தொழில் துறைப் பிரமுகர்கள், நடிகர்கள், இசை, நாட்டியக் கலைஞர்கள், திரைப்படத் துறையினர் என்று பல்வேறு சாரார் அன்றாடம் வந்து முதலமைச்சரிடம் பேசிச் செல்கிறார்கள். அமைச்சராவதற்குமுன்பே நண்பர்களும், கலைத்துறையினரும் இவரிடம் நிரம்ப உறவாடுவது வழக்கமாகையால், இப்போது இவரைச் சந்திக்க வருவோரின் எண்ணிக்கை மேலும் பெருகிவிட்டது. கூறுகின்ற காரியங்களை உடனே செய்து முடித்துத் தரும் திறமையாலும், மனந்திறந்த கலகலவென்று இனிமையாக உரையாடும் பண்பாலும், வந்தவர் மனநிறைவுடன் செல்ல வேண்டும் என்ற தாராள சிந்தையாலும், அனைத்துக்கும் மேலாக எத்தனை ஆண்டுகள் ஆயினும் யாரையும் மறக்காமல் இருக்கின்ற ஆற்றலாலும் மக்களை வெகுவாகக் கவர்ந்துள்ளார் இவர். அதனால்தான் இவர் இல்லத்தில் கூட்டம் அதிகமாகக் காணப்படுவது வழக்கம்.

பேட்டிகள் முடிந்ததும் கோட்டைக்குப் புறப்படுகிறார். வெளிப்புறத்திலுள்ள படிகளின் வழியே இறங்கி வருகிறார். அப்போதும் கீழே பலபேர் நிற்கிறார்கள். உடனே உதவியாளர்களிடம் திரும்பி "ஏன் இவர்களை நிற்க வைத்திருக்கிறீர்கள்?" என வினவுகிறார். "இல்லை ஐயா; அவர்கள் சொன்ன காரியங்களை நாங்களே கவனித்துவிட்டோம்; என்றாலும் உங்களைப் பார்த்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று காத்திருக்கிறார்கள்" என்று பணிவுடன் பதிலுரைக்கிறார்கள். புன் முறுவலுடன் அவர்களுக்கு வணக்கம் கூறுகிறார். வெளியில் புறப்படப்போகும் போது தான் கீழே குடும்பத்தினர் இருப்பது நினைவுக்கு வருகிறது! உள்ளே செல்கிறார்; தமக்கையாரும், துணைவியாரும், மக்களும் ஆவலுடன் நிற்கிறார்கள். வேறொன்றும் பேச நேரம் இருப்பதில்லை. துணைவியார் "சாப்பாடு?" என்று கேட்கிறார். "அனுப்பிவிடு" என்கிறார் முதல்வர். அவ்வளவுதான்! வெளியில்வந்துகாவலரின் மரியாதையை ஏற்றுக்கொண்டு, தயாராக நிற்கும் காரில் ஏறப் போகும் போது, எதிர்வீட்டிலிருந்து "தாத்தா" என்று மழலைக் குரல் கேட்கின்றது.

தென் சென்னை நாடாளு மன்ற உறுப்பினர் முரசொலி மாறன், எதிர் வீட்டில் வாடகைக்குக் குடியிருக்கிறார். இவரது பிள்ளைகள் கலாநிதியும், அன்புநிதியும்தான் அழைப்பவர்கள். காரில் அமர்ந்தவாறே அவர்களுக்கு 'டாட்டா' சொல்கிறார். பீர்கண்ணு (சில நாட்களில் கதிரவன்) காரை நகர்த்துகிறார். பரபரப்புடன் மாறன் ஓடிவந்து மாமாவைப் பார்க்கிறார். அவர் தம்பி செல்வம் வெளியே வருவதற்குள் கார் புறப்பட்டுவிடுகிறது. மாறனின் துணைவியாரும், செல்வத்தின் துணைவியான செல்வியும் (கலைஞரின் அன்பு மகள்) அறையின் சன்னல்வழியே பார்த்துத் திருப்தியடைகிறார்கள். சொந்த வீட்டிலேயிருக்கும் இன்னொரு மருமகப் பிள்ளை அமிர்தம் (திரைப்பட ஒளிப்பதிவாளர்), அவரது துணைவியார், அவர் மகன் குணநிதி ஆகியோரும், மூத்த மகன் முத்து, அவர் துணைவி (இசைச்சித்தர் சிதம்பரம் செயராமனின் அன்பு மகள்), அவர் மகன் அறிவுநிதி ஆகியோரும், மூத்த சகோதரியர் இருவரும், இளைய மக்களான அழகிரி, ஸ்டாலின், தமிழரசு ஆகியோரும் குடும்பத் தலைவரைக் காண்பதும் அவரோடு பேசுவதும் அரிதாகும்.

கோட்டைக்குச் செல்கிறார். முதலமைச்சர் அலுவலகத்தில் அண்ணா அமர்ந்த நாற்காலியில் தாம் அமர விரும்பாததால் மாற்றி அமைக்கப்பட்ட நாற்காலியில் அமர்கிறார். வெளிநாட்டுத் தூதுவர்கள், மத்திய அமைச்சர்கள், வேறு மாநிலத் தலைவர்கள், தமிழ்நாட்டு அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், பத்திரிகை நிருபர்கள் ஆகியோரைச் சந்திப்பதும், கோப்புகளைப் படித்துக் கையெழுத்திடுவதுமாக நேரம் நகர்கிறது. 11 மணிக்குக் காய்கறிசூப் ஒரு குவளையில்(வீட்டிலிருந்து வருவது) அருந்துகிறார். எப்போதாவதுகாப்பிஅருந்துவதும்உண்டு. பிறகு மதிய உணவு வீட்டிலிருந்து வந்ததும் 2 மணியளவில் உணவை முடித்துச் சிறுபொழுது ஓய்வு எடுக்கிறார். மாலையில் அலுவல்களை முடித்துக்கொண்டு 6 மணியளவில் வீடு திரும்புகிறார்.

அவசரமாகக் குளித்து, உடை மாற்றி, மாலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இறுதியாகக் கழகச் சார்புடைய பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றிவிட்டு இரவு உணவு கொள்ளும்போது நள்ளிரவு நெருங்கிவிடும். அதன் பின்னர் டெலிபிரிண்டரில் முக்கியமான செய்திகள் இருந்தால் படிப்பார். மாலையில் வெளிவந்த தினசரி ஏடுகளை மீண்டும் முழுமையாகப் படிப்பார். எப்படியும் இரவு படுக்கைக்குச் செல்ல ஒரு மணி, இரண்டு மணி ஆகிவிடும். கவியரங்கம் போன்ற நிகழ்ச்சிகள் இருந்தால் மறுநாள் பொழுது விடிவதற்குள் எழுதவேண்டும்; அப்போது அந்தத் தூக்கமும் போய்விடும்!

இப்படி ஓய்வைக் குறைத்துக் கொள்வார். இத்தகைய அவசியம் ஏற்பட்டுவிடும் என்று எண்ணித்தான் இவரது இல்லத்தார் அனைவருமே இவரை முதலமைச்சர் பொறுப்பை ஏற்கவேண்டாம் என்று வற்புறுத்தினார்கள். உடல் வளத்தைவிட உள்ள உரம் மிகுதியானவர். 1951ஆம் ஆண்டு புளூரசி நோய் ஏற்பட்டு, இன்றளவும் விலாப்புறங்களிலும் முதுகின் அடிப்பகுதியிலும் வலி ஏற்படுவது உண்டு. 1955ஆம் ஆண்டில் ஒருமுறை சிறு கார் விபத்தொன்றில் அடிபட்டு இடது கண்ணில் பழுது நேர்ந்தது. 11 முறை ஆபரேஷன் செய்யப்பட்டது. அதே கண்ணில் 1967ஆம் ஆண்டு நேர்ந்த பெரும் கார் விபத்திலும் பழுது ஏற்பட்டு, மீண்டும் தொல்லை கொடுத்தது. எப்போதும் கைவசம் மருந்துப்பெட்டி வைத்துக் கொண்டு, தாமே நினைவுடன் மருந்து அருந்துவார்!

காவிரிப்படுகையின் வளங்கொழிக்கும் தஞ்சை மாவட்டம் நன்செய் நிலங்களாலும், நாட்டோரின் பசிப்பிணி போக்கும் செந்நெல்லணிகளாலும் மட்டும் புகழ்பெற்றதல்ல; நாடெங்கும் தஞ்சை மாவட்டத்தில் தோன்றிய சான்றோர்கள், பேரறிவாளர்கள், அரசியல் விற்பன்னர்கள், இசை மேதைகள், நிர்வாக நிபுணர்கள் நிறைந்துள்ளனர்.

கலைஞர் கருணாநிதியின் பேச்சிலும், செயலிலும், விருந்தோம்பும் பண்பிலும் தஞ்சை மாவட்டத்து மண்ணுக்கே உரிய தனிச்சிறப்பு மிளிரக் காணலாம். இந்த மாவட்டத்தில் பிறந்து புகழ்பெற்ற பல பெரியோர்கள், எங்கெங்கோ குடியேறிப் பிறகு சொந்த மாவட்டம் என்று வாயளவில்தான் சொல்லிக்கொள்வார்கள். ஆனால் இவரது உணர்விலும் உறவி

லும் தஞ்சை மாவட்டத்தை மறப்பதே கிடையாது.

அரசாங்க நிர்வாகத்துக்குப் புதியவர் எனினும், ஏற்கனவே கழகத்தில் பெற்றிருந்த முறையான பயிற்சியும், அனுபவமும், தமக்கே சொந்தமான செயலாளுந்திறனும், கூரிய மதியும் அரசாங்க அலுவல்களை மிக மிகத் திறமையுடனும், நுட்பத்துடனும் ஆற்ற உதவின இவருக்கு !

சென்னையிலுள்ள இவரது முக்கியமான நண்பர்கள், அமைச்சர்கள் ஆகியோரின் தொலைபேசி எண்கள் இவருக்கு மனப்பாடம். யாரிடத்திலாவது ஏதாவது ஒரு காரியத்தைச் சொல்லி, அத்தோடு விடாமல், எவ்வளவு நாளானாலும் அதை நினைவில் வைத்திருந்து அதைச் செய்து முடித்தாரா என்று கேட்டுத் தெரிந்து கொள்வார். இவரிடத்தில் பொய் பேசினால் எப்படியும் கண்டுபிடித்து விடுவார். இவர் கேட்கும் கேள்விகள் தலைசிறந்த 'கிரிமினல் வக்கீல்' களுடையவைபோல இருக்கும். படிப்பதும் எழுதுவதும் இவருக்கு மிக விருப்பமானவை; விரைவாகவும் நடக்கும். ஓய்வு இருந்தால் நண்பர்களுடன் உரையாடுவது இவரது பொழுதுபோக்கு. ஆனால் இப்போதெல்லாம் அதற்கு வாய்ப்பேயில்லை! வார்த்தைகளில் நகைச்சுவையோடு உடனுக்குடன் திருப்பித்தாக்கும் முறை அவருக்கே உரியதாகும். சுறுசுறுப்பாக உள்ளவர்களைத்தான் இவர் விரும்புவார். நண்பர்களுக்கு நோயோ, துயரமோ ஏற்பட்டால் மிகவும் கவலைப்படுவார். உடன் அவர்பால் சென்று ஆறுதல் சொல்வார். தவறு செய்தவர்களைக் கடுமையாகக் கண்டிப்பார். ஆனால் அதை மனத்தில் வைத்துப் பழிவாங்க நினைக்காமல் விரைவாக மறந்துவிடுவார். இவரது கொள்கைகளில் பிடிப்பும், தமிழின்பால் பற்றும் இவருக்கு உயிர்போன்றவை. அண்ணா தான் இவருக்குக் கடவுள். அவர் இருந்தவரையில் அன்றாடம் கோவிலுக்குச் செல்லும் பக்தன் போல, வேலையிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர் வீட்டுக்குச் சென்று வருவார்.

உண்மையில் 45 வயதாகவும், முன்புறத்தோற்றத்தில் இன்னும் குறைவாகவும் காட்சியளிக்கும் முதல்வர் மு. கருணாநிதி திடீரென்று முதலமைச்சரானவரல்லர். ஏறத்தாழ 30 ஆண்டுகள் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு, எதிர்ப்புகளையும் இன்னல்களையும் ஏற்று, உழைப்பாலும் தியாகத்தாலும் உயர்ந்து, திறமையாலும் கொள்கையாலும் வளர்ந்து, நேர்மையாலும் தூய்மையாலும் நிலைபெற்று, கலைஞர், கவிஞர் எனத் தமிழ் மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து, படிப்படியாக உறுதியுடன் அடியெடுத்து வைத்து முன்னேறியவர். உயர்நிலைப் பள்ளியோடு இவரது பள்ளிப் படிப்பு முடிந்ததானாலும், நுணுக்கமான தமிழறிவும், தெளிவுமிக்க புதுமைச் சிந்தனைகளும் இவரைத் தமிழகத்திலே ஒரு புரட்சிப் பேச்சாளராகவும், எழுச்சி எழுத்தாளராகவும், ஆவேச நடிகராகவும் ஆக்கின.

வெறும் மேடைப் பேச்சால் மட்டுமே கொள்கையை வளர்த்துவிட முடியாது என இவர் கருத்துக் கொண்டதால், நாடக மேடைகளையும் திரையுலகத்தையும் கைப்பற்றி, அவற்றின் வாயிலாக வெற்றியுடன் தாம் ஏற்றுக்கொண்ட கொள்கைகளைப் பரப்பினார். தீவிபத்துக்கள், வெள்ளம், புயல் ஆகிய இயற்கைக் கோளாறினால் ஏற்படும் இழப்புகள், உழவர், கைத்தறி நெசவாளர், தொழிலாளர் ஆகியோர் உரிமைக்காகவும் வாழ்வுக்காகவும் நடத்திய போராட்டங்கள் - இவற்றையெல்லாம் கண்டு மனம் உருகி ஓடோடிச் சென்று வலிய உதவுவது இவருக்கு வாடிக்கை. அஞ்சாமல் சிறைக்குச் செல்வதும், தியாகம் செய்வதும் இவருக்குத் தொழிலாயிருக்கிறது ! மக்கள் பிரச்சினைகளில் தலையிட்டு, மக்கள் சார்பில் வாதாடி, நீதி கோருவதும் இவருக்கு வழக்கம். முறைப்படி யாப்பிலக்கணம் பயிலாவிடினும், கைதேர்ந்த கவிஞர்போல் கவிதையுள்ளம் படைத்தவராதலால், பற்பல கவியரங்கங்களுக்குத் தலைமை ஏற்றுத் தமிழாராய்ச்சி மிக்க கருத்துக்களையும், கவிஞர் பெருமக்களின் அறிமுகங்களையும் தமக்கேயுரிய தனிப் பாணியில் தந்து, கவியரங்கம் என்னும் இலக்கிய நிகழ்ச்சியைப் படித்தோர் மட்டுமின்றிப் பாமரரும் விரும்பிச் சுவைக்கும் நிலையும் செல்வாக்கும் ஏற்படுத்தியவர் இவரே. தேர்தல் எங்கெங்கு நடை

பெறினும் இவரது கைவண்ணம் அங்கேவெற்றி தேடித்தரும். மாநாடுகள், கலை நிகழ்ச்சிகள் இவரது கலைமெருகால் ஏற்றம் பெறும். கழகத்துக்கான நிதியைத் தனித் திறமையுடன் தேர்ச்சியாகவும், நேர்த்தியாகவும் திரட்டி வைப்பது இவருக்கேயுரிய பேராற்றல். எங்கோ அறையில் நடந்து முடிந்திருக்க வேண்டிய இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை அம்பலத்திற்குக் கொணர்ந்து, உலகிலுள்ள தமிழ் பேசும் மக்களெல்லாம் கண்டு, கலந்து, சுவைத்துப் பயன் பெறத் தக்கதாய், கலை நுணுக்கமும் கவர்ச்சியும் விரவியதாய் மாற்றிக்காட்டிய பெருமை இவரையே சாரும் !

பிரச்சினைகளுக்குச் சுமுகமான, விரைவான முடிவுகள் காண்பதிலும் இவருக்கு நிகர் இவரே ! அவசர முடிவு (Hasty decision) எடுப்பது இவர் வழக்கமல்ல. ஆனால் விரைவான முடிவு (Quick decision) எடுப்பதுதான் இவர் கொள்கை. அண்ணாவின் அடிச்சுவட்டினின்றும் அணுவும் பிறழாமல் அதே நெறியில் நடக்க வேண்டும் என்பதே இவரது நீங்கா விருப்பமாகும். சான்றோர்களைப் பாராட்டுவதும், தொண்டர்களை அரவணைத்துச் செல்வதும், செந்தமிழுக்கு எல்லாவகையிலும் ஏற்றந் தேடித் தருவதும் இவரது உயிர்மூச்சு.

தமிழ் மக்கள் உள்ளங்களையும், கழகத் தோழர்கள் இதயங்களையும் கொள்ளை கொண்டவர் அண்ணாவுக்கு அடுத்தபடியாக இவர் ஒருவரே. எனவே, எல்லாவகையாலும் நாட்டுக்கும், கழகத்துக்கும் நம்பிக்கைப் பேரொளியாகவும், தவிப்போர்க்குக் கலங்கரை விளக்கமாகவும், அநியாயக்காரர்கட்குச் சிம்மசொப்பனமாகவும் விளங்கும் கலைஞர் மு. கருணாநிதி தமிழ்நாட்டின் சிறந்த முதலமைச்சராக விளங்குகிறார். மத்திய, மாநில உறவுகள் இவரது காலத்தில் சிறப்புப் பெறும் என்ற நம்பிக்கை வளரக் காண்கிறோமல்லவா ?

தனிமையாக இயங்குவதையோ, வாழ்வதையோ இவர் எப்போதும் வெறுப்பவர். இன்றைய நிலையில் அரசுத் தரப்பில் எத்தனையோ உதவியாளர்கள் இருப்பினும், நீண்டகாலமாக நெருங்கிப் பழகிய தோழர்கள் தம்முடன் இருப்பதையும், சுற்றுப் பயணங்களின் போது உடன் வருவதையும் விரும்புகின்றார். தனியாக எதைப்பற்றியும் முடிவெடுப்பதைவிட உடனுறையும் கூட்டாளிகளின் கருத்துக்களைக் கலந்து பரிமாறி முடிவெடுக்கும் சனநாயகப் பண்பினைப் பெரிதும் போற்றுபவர்.

திரைப்படத் தயாரிப்பாளர், வசனகர்த்தா, பத்திரிகை உரிமையாளர், ஆசிரியர் என்று பல நிலைமைகள் ஏற்பட்டபோதும் தன் கொள்கையை நழுவ விடாத குணக்குன்று இவர். தான் பிறந்த சமுதாயம், மக்களின் மனப்பான்மையால் மிகவும் பிற்போக்காயிருப்பதையும், மாற்றார் அதனைக்கூடக் கேவலமான முறையில் சுட்டிக் காட்டுவதையும் - பொருட்படுத்தாவிடினும் - எண்ணி மனம் புழுங்குவார். பிற்பட்ட வகுப்பினருக்கென, அவர் நலம் பெருக இப்போது ஒரு தனி இலாகா ஏற்படுத்தியது இவரது ஆழ்ந்த சிந்தனையைக் காட்டுகின்றது !

சுறுசுறுப்பான தமது இயல்புக்கு மாறாகத் தம்மை ஓய்வெடுக்கத் தூண்டுவோரையும், காரிய சித்திக்காக முகத்துக்கு நேரே தம்மைப் புகழ்வோரையும் அவர்கள் தமது குடும்பத்தாரேனும், நண்பர்கள், உறவினர்களேனும் தாட்சண்யம் பாராது கண்டிக்கத் தவறமாட்டார். குறிப்பிட்டநேரங்களில் நிகழ்ச்சிகளை முடிப்பதில் கண்ணுங் கருத்துமாயிருப்பார்.

இத்தகைய குணநலன்கள் வாய்க்கப் பெற்று, கல்லூரிப் பட்டம் பெறாவிடினும், ஆழ்ந்த கல்வியறிவும், தீர்க்கமான சிந்தனையும், தெளிவான முடிவெடுக்குந் திறனும், அனைத்துக்கும் மேலாக மாற்றாரையும் மதிக்கும் பண்பும், மக்கள் நலன்பேணும் குறிக்கோளும், இளமையிலேயே முதிர்ந்த தேர்ச்சியும் பெற்ற கலைஞர் மு. கருணாநிதி அவர்களைத் தமிழ்நாடு அரசு தனது முதலமைச்சராகப் பெற்றிருப்பது பெரும்பேறு என்று துணிந்து கூறலாம் அன்றோ ?

பசுமைப் புரட்சி

திரு. இ.சி.பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்
தமிழ் நாடு அரசு

வேளாண்மைத் துறையில் கடந்த இரண்டாண்டுகளாக வியக்கத்தக்க மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. சிறப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் ஒருபோக விளைச்சலை இருபோக விளைச்சலாக மாற்றியதன் விளைவாக, உணவு உற்பத்தியின் அளவு பன்மடங்கு பெருகியுள்ளது. இந்த மாபெரும் பசுமைப் புரட்சிக்கு முழுமுதற் காரணமாக, பின்னணியாகத் திகழ்ந்தவர், தமிழ்நாடு வேளாண்மைத் துறை அமைச்சராகப் பணியாற்றிய அமரர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் என்ருல் அது மிகையாகாது.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் விவசாயக் கருத்தரங்குகளை முறையாக நடத்தி, வேளாண்மைத் துறை, கிராம வளர்ச்சி, நீர்ப்பாசனம், கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவுத் துறைகள் முதலியவற்றின் அலுவலர்களையும், தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், முன்னேற்ற விவசாயிகள் முதலியோரையும் ஒன்று திரட்டி, அவர்கள் தந்த அநுபவக் கருத்துக்களையும், காலத்திற்கேற்ற அறிவுரைகளையும் அடிப்படையாகக் கொண்டு மாவட்ட மாநில நிர்வாக நடைமுறைகளில் பயனுள்ள பல சீர்த்திருத்தங்களையும் பெரும் மாறுதல்களையும் செய்ய முடிந்தது. இந்தப் புதிய முயற்சியின் விளைவாக வேளாண்மைப் பெருங்குடி மக்களிடையே புதிய நம்பிக்கையும், உற்சாகமும் பெருகி வளரத் தொடங்கியுள்ளன.

இப் பசுமைப் புரட்சியின் முதற்படியாக, ஊர் நல ஊழியர்களின் (கிராம சேவக்குகளின்) பணிகளை மேலும் சிறந்த முறையில் உழவர் பெருமக்கள் எளிதில் பெறத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய வேளாண்மை முறைகளைப் பரப்புவதற்கு—சிறப்பாக மிகு விளைச்சல் தரும் வீரிய, ஒட்டு இன விதைகளைப் பயிரிடுவதற்கு ஊர் நல ஊழியர்கள் விவசாயத்துறை அதிகாரிகளுடன் பெரிதும் நெருங்கி இணைந்து பணியாற்றி வருகின்றனர். புதுவகை வீரிய வித்துக்களின் சாகுபடி, அவற்றிற்கு உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு, நீர்ப்பாசன அளவு முதலியவற்றைக் குறித்து விவசாயிகளுக்குத் தக்கமுறையில் எடுத்துரைக்க ஊர் நல ஊழியர்கள் பெரிதும் துணை நின்று கடமையாற்றுகின்றனர்.

இந்த வகையில் கடந்த சில காலமாக, வேளாண்மைத்துறை இயக்குனராக நான் பணியாற்றியபோது, பல்வேறு மாவட்டங்களுக்கும் நேரில் சென்று விவசாயப் பணிகளையும், உழவர்களுக்கு ஊர் நல ஊழியர்கள் ஆற்றும் அரிய உதவிகளையும் ஆராயும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அதனால் எனக்கு ஏற்பட்ட சில

அநுபவங்களை ஒட்டி, மூன்று முக்கியக் கருத்துக்களைக் கிராமப் பெருமக்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவற்றுள், முதலாவது, எடுத்துக்காட்டுப் பண்ணைகளைப் (Demonstration plots) பற்றியதாகும்; இரண்டாவது, மண் பரிசோதனையைக் (Soil testing and Analysis) குறித்தது; மூன்ருவது பயிர் அறுவடை சம்பந்தமான புள்ளி விவரங்களைச் சேகரிப்பது (Crop cutting experiments) தொடர்பானது.

இக் கருத்துக்கள் அனைத்தும், என் சொந்த முறையில் குறிக்கப்படுவனவாகும். இவற்றுள் இரண்டாவதும், மூன்ருவதும் பற்றியதான கருத்துக்களைச் செயல்படுத்த, அரசாங்க ஆணை எதுவும் புதிதாகத் தேவையில்லை. இப்போதுள்ள விதிமுறைகளை ஒட்டி நேரடி முயற்சி எடுத்தாலே போதும்; மிகச் சிறந்த பயனைக் காண்பது உறுதி.

எடுத்துக்காட்டுப் பண்ணைகள் :

முதலாவதாக நான் கூறவிரும்பும் கருத்து, எடுத்துக்காட்டுப் பண்ணைகளை மேலும் சிறந்த வகையில் பயன்படுத்திக் கொள்வதற்கான வேண்டுகோளாகும். நம் நாட்டிலுள்ள உழவர் பெருமக்கள் பெரும்பாலும் பழமையில் பற்றுக் கொண்டவர்கள் என்ருலும், புதிய விஞ்ஞான முறைகளால் கண்கூடாக நல்ல பயன் கிடைக்கும்போது, அவற்றைப் பயன்படுத்தத் தயங்கமாட்டார்கள். இதை அநுபவத்தில் நாம் கண்டு வருகிருேம்.

முன்னேற்ற விவசாயிகள் புதிய முறைகளைக் கையாண்டு அதிகவிளைச்சலைப் பெறுவதை நேரில் காணும் மற்றவர்களுக்கும் அவற்றைப் பின்பற்றுவதற்கான ஊக்கமும் உற்சாகமும் ஏற்படுகின்றன. இதற்காக, ஏற்கனவே ஒவ்வோர் ஊர் நல ஊழியரும் முன்னேற்ற விவசாயிகளின் ஒத்துழைப்புடன், சுமார் பத்து இடங்களில் சிறந்த எடுத்துக்காட்டுப் பண்ணைகள் அமைக்கவேண்டுமென்று நடைமுறைக்கோட்பாடு வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு வட்டாரத்திலும் சுமார் 100 எடுத்துக்காட்டுப் பண்ணைகள் இருந்துவரவேண்டும்.

நான் நேரில் பார்த்த அநுபவத்தைக் கொண்டு, இதில் ஒரு சிறு மாறுதல் செய்வது நலம் என்று கருதுகிறேன். ஒரு வட்டாரத்தில் குறைந்தது 5 இடங்களில் முக்கியமான எடுத்துக்காட்டுப் பண்ணைகள் அமைத்தாலே போதும். இவை, தாய்ப் பண்ணைகளாக மிகச் சிறந்த முறையில் அமைய வேண்டும். இவற்றைக் காணும் அனைவரும் இதே போலத் தத்தம் ஊர்களில் சிறந்த முறையில் விவசாயம் செய்யவேண்டும் என்பதற்கு இவை தூண்டுகோலாக அமையவேண்டும்.

இந்தக் கருத்தை நடைமுறையில் கொண்டுவர, வட்டார வளர்ச்சித் துறை அலுவலர்கள் அனைவரும் வேளாண்மைத் துறை அலுவலர்களுடன் தக்க முறையில் ஒத்துழைக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன். தேவையாளுல், இதைப்பற்றிய விதிமுறைகளை ஆராய்ந்து, தக்க மாறுதல் செய்ய முயற்சி மேற்கொள்ளப்படலாம்.

இவ்வாறு கூறுவதன் முக்கிய நோக்கம், எடுத்துக்காட்டுப் பண்ணைகள் பெயரளவில் இருந்தால் போதாது; பலரும் கண்டு அதிசயிக்கும் வகையிலும் பின்பற்றும் முறையிலும் அமையவேண்டும் என்பதேயாம். ஒவ்வொரு வட்டாரத்திலும் தாய்ப் பண்ணைகளை — தலைமைப் பண்ணைகளை உருவாக்குவது, ஊர் நல ஊழியர்கள், விவசாய அலுவலர்கள் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பாக அமையவேண்டும். அவற்றைக் கண்டு பலரும் பல இடங்களில் முன்னேற்றப் பண்ணைகளை அமைத்துக் கொள்ள அவை பயன்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மேற்கொள்ளலாம்.

மண் பரிசோதனை :

இரண்டாவதாக, விளைச்சலுக்கு அடிப்படையாக அமைவது விளையும் நிலத்தின் தரத்தை ஆராய்ந்து அறிதலாகும். அவற்றிலுள்ள பல்வேறு கூறுகளை உள்ளது உள்ளவாறே அறிவிப்பதற்கு மண் பரிசோதனை நிலையங்கள் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும்,

விவசாய அலுவலகங்களிலும் மண் பரிசோதனை செய்துகொள்ளும்முறை களைப்பற்றி விரிவாக விளக்கப்படு கின்றன.

இந்த மண் பரிசோதனையை அடிப் படையாகக் கொண்டு, புதிய சாகு படி முறைகளுக்கான உரச்சேர்க்கை நிர்ணயிக்கப்படும். எனவே, வட் டாரங்களில் பணியாற்றும் ஊர் நல ஊழியர்கள் அனைவரும் விவசாயி களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, மண் பரிசோதனைக்கான வழிமுறைகளை எடுத்துரைத்துத் தக்க வகையில் பணி செய்வது மிகவும் அவசியமும் அவசரமுமானதாகும்.

பயிர் அறுவடைப்புள்ளி விவரங்கள்:

உணவு உற்பத்தியைப் பெருக்கும் மாபெரும் முயற்சியில், தக்க புள்ளி விவரங்கள் சேகரிப்பது மிகவும் முக்கியமான பணியாகும். இதற் காகப் புள்ளிவிவர இயக்குநரின் துணையுடன் பயிர் அறுவடை சமயத் தில் சில குறிப்பிட்ட இடங்களில் பரிசோதனைகள் (Crop cutting experiments) மேற்கொள்ளப்படுகின் றன. நாட்டின் பல்வேறு இடங் களில் உண்டாகும் விளைச்சலைப் பற்றிய உண்மையான நிலையை அறி வதற்கு, இந்த அறுவடைப் புள்ளி விவரங்கள் மிகவும் பயன்படுவன வாகும்.

கிராம நிலையிலிருந்து இந்தப் புள்ளி விவரங்களை முறையாகவும், சரியாக வும் அறிந்து கொள்வதற்கு ஊர் நல ஊழியர்களும், வேளாண்மைத் துறை அலுவலர்களும் உதவி புரியக் கடமைப்பட்டுள்ளனர். இதற்கான அரசாங்க ஆணைகள் விரிவான முறை யில் விளக்கமாக அமைந்துள்ளன. ஆயினும், இவற்றை நிறைவேற்று வதில் மிகுந்த கவனம் செலுத்துவது அவசியம் என்பதை வற்புறுத்த விரும்புகிறேன்.

உண்மைக்கு மாறான புள்ளி விவரங் கள்-குறிப்பாகப் பயிர் அறுவடையின் போது சேகரிக்கப்படும் கணக்கு வகைகள் - கிராம நிலையிலிருந்து மேலே அனுப்பப் படுமேயானால், நமது நாட்டின் உணவு உற்பத்தி பற்றிய புள்ளி விவரம் முழுவதும் நகைப்புக்கு இடமாகிப் பயனற்றுப் போய்விடும். எனவே, இந்த அடிப் படையான எச்சரிக்கையை மனத்தில் கொண்டு தொடர்புடைய அனைவரும் பணியாற்ற வேண்டும்.

என்னுடைய சொந்த அநுபவத் தில் கண்ட ஒரு சில கருத்துக்களே நான் மேலே குறிப்பிட்டவை. அவற்றை ஆய்ந்து, தக்க முறையில் செயல்படுமாறு அலுவலர்கள் அனை வரையும் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக ஊர் நல ஊழியர்கள் விவசாயப் பெருமக்களுடன் மேலும் நெருங்கிய தொடர்பு கொண்டு, நாடெங்கும் தழைத்தோங்கிவரும் பசுமைப் புரட்சியில்-வேளாண்மை மறுமலர்ச்சியில் - சிறப்பான பங்கு பெறுமாறு அவர்களை உள்ளன்புடன் அழைக்கின்றேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை யில் ''சீரணி'' என்ற பெயரால், ஒவ்வொரு மாவட்டத்திலும், சமு தாயத் தொண்டாற்றும் சீரிய தொண்டர்கள் பலர் மனமுவந்து பணி செய்யும் அமைப்பு உருவாகி யிருப்பதை அனைவரும் அறிவோம். சீரணித் தொண்டர்களின் ஆர்வமும், தொண்டும் கிராம வளர்ச்சித் திட் டங்களுடன் இணைந்து செயல்பட வும், ஊர் நல ஊழியர்களின் பணி களுக்குப் பெரிதும் வலிவூட்டவும் வழிமுறைகள் உருவாக்கப்பட்டு வரு கின்றன. பல்வேறு மாவட்டங்களி லும், வட்டாரங்களிலும் ஏற்கனவே நல்ல முறையில் நடைபெற்றுவரும் பொது நலப் பணிகள், விவசாயத் துறைக்கு மேலும் சிறப்பிடம் தந்து, அனைவரும் கண்டு அதிசயிக்கும் வகை யில் சிறந்த பணி செய்யுமென்று எதிர்பார்க்கிறேன்.

> உழைப்பு மூன்று பெருந்தீமைகளை நம்மிடமிருந்து நீக்கு கின்றது! அவையாவன : தொந்தரவு, தீயொழுக்கம், வறுமை.
>
> — வால்டேர்



மனிதன் நெஞ்சில் எழுச்சியும் மலர்ச்சியும் உண்டானால் அவனை அறியாமலே பாட்டு எழும். அவ னுக்கு இசைப் பயிற்சி இருக்க வேண் டும் என்பது இல்லை. இடைவிடாமல் இழுமென்ற ஓசையோடு அவன் பாடத் தொடங்கிவிடுவான். அற்றற் றுக் கேட்கும் குரலை அரிக்குரல் என் றும், தொடர்ந்து இனிமையாகக் கேட்கும் ஓசையை இழுமென் ஓசை என்றும் சொல்வது புலவர் மரபு. அழுகையில் இந்த இழுமென்ற ஓசை யைக் கேட்கலாம். மனத்தில் உணர்ச்சி விஞ்சியபோது எழுவது அழுகை. அதன் ஓசை அற்றற்று வராமல் தொடர்ந்து இழுமென்று வரும். அந்த அழுகையின் ஓசைக்கு 'முகாரி ராகம்' என்று பெயர் கொடுப் பார்கள். சிற்றூர்களில் ஆயர் முதலியோர் பாடுவதைக் கேட்டால் அழுகைக் குரல் போலவே தோன் றும். மனம் உருகிப் பாடும் பாட்டு மனத்தை உருக்கும் வகையில் வெளி யாகும். அழுகை மனிதனிடம் இயல்பாக எழும் இசை வடிவம்.

தமிழ் நாட்டுப் பெண்களுக்கு ஒப் பாரியும் தாலாட்டும் உடனே வரும் என்பார்கள். பிறந்த குழந்தைக் காகத் தாலாட்டுப் பாடுவதும் இறந் தவர்களுக்காக ஒப்பாரி பாடுவதும் நெகிழ்ந்த மென்மையான உள்ளமும் மென்குரலும் உடைய பெண்மணி களிடம் தாமே தோன்றுவதில் வியப்பு ஏதும் இல்லை. பெண்களின் பேச்சே இசைபோல இருக்கிற தல்லவா?

இயற்கையாக எழும் ஓசையோடு கூடிய இசைக்கு மனத்தே எழும் உணர்ச்சி காரணமானால், அதே உணர்ச்சி, கருத்தைப் புலப்படுத்தும் சொற்களைக் கோவையாக்கிப் பாடும் கவிதைக்கும் காரணமாகிறது. நாடோடிப் பாடல்களில் இசையும் பாடலும் உணர்ச்சியின் விளைவாக எழுகின்றன.

மனிதனுக்கு உணர்ச்சி கற்றுக் கொண்டு வருவதில்லை. அதை வெளி யிடவும் அவனுக்குத் தெரியும். இசையும் சொல்லுமாக அவனிடம் உணர்ச்சி வெளியாகும்போது அது பாடல் வடிவம் பெறுகிறது.

கவிதைக்கு இன்றியமையாதது உணர்ச்சி. உணர்ச்சியில்லாக் கவிதை, முடைந்த கீற்றுப்போல இருக்கும். நாடோடிப் பாடல்களில் உணர்ச்சி நிரம்பியிருக்கும். புலவர் களின் கவிதைகளில் இருப்பதுபோல அலங்காரங்களும் சொல்வளமும் நாடோடிக் கவிதையில் இருப்ப தில்லை. ஆனாலும் ஓசை நயமும் குறிப்பும் இருக்கும்.

ஒருவகையில் நாடோடிப் பாடல் களைக் குழந்தைகளின் மழலைப் பேச் சுக்கு ஒப்பிடலாம். குழந்தைகளின் வார்த்தைகள் திருப்பித் திருப்பி வரும். நாடோடிப் பாடலில் இந்தக் கூறியது கூறலை அதிகமாகக் காணலாம். அதுவே அதன் இலக் கணம் என்றுகூடச் சொல்லலாம். மனித உள்ளத்தின் உணர்ச்சியைக் கோலம் செய்வது என்ற பொதுப்

பண்பைப் புலவர் கவிதையிலும் காணலாம்; நாடோடிப் பாடல்களிலும் காணலாம்.

கம்பன் சீதையின் காதலை நூறு, நூறு வகையில் வருணிக்கிறான். இராமனைக் கண்ட பிறகு அவனைத் திருமணம் செய்து கொள்ளும்வரையில் அவள் படும் பாடுகளை இனிமையாகப் பாடுகிறான். இராமனுடைய எழில் நலன்களை எண்ணி எண்ணி அவள் ஏங்குகிறாள். அவனுடைய திரண்ட தோளும் புன்முறுவலும் அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவன் களிறுபோல் நடந்த நடை கண்டு அவள் சொக்கிப் போனாள். அதைச் சொல்கிறாள்.

'படர்ந்தொளி பரந்துயிர் பருகும்
ஆகமும்
நடந்தரு தாமரைத் தாளு மேஅல;
கடந்தரு மதங்கலுழ் களிநல்
யானைபோல்
நடந்தது கிடந்ததுஎன் உள்ளம்
நண்ணியே'

என்கிறாள். அவனுடைய மார்பும் தாளும் அவளை அவ்வளவு மயக்கவில்லை. ஆனால் யானையைப்போல நடந்தானே அந்த நடை அவள் உள்ளத்தில் பதிந்து கிடந்ததாம்; அவன் இன்னும் அவள் உள்ளமென்னும் சாலையில் நடந்துகொண்டேயிருக்கிறானாம். அவள் உள்ளம் நீளுகிறது சாலைபோல; உள்ளம் என்பது எண்ணத்தின் வடிவந்தானே?

நாடோடிக் கவிதையிலும் இப்படி ஒரு காட்சி வருகிறது. அவள் பெயரை நாம் அறியோம். வீராயி என்று வைத்துக் கொள்வோம். அவளும்தான் காதலனுடைய ஆண்மையிலும் எழிலிலும் உள்ளத்தைப் பறிகொடுத்தவள். அவன் நடந்த நடை அவளுக்கு வியப்பை ஊட்டுகிறது. அவள் அந்த நடைக்கு உவமை தேடிச் செல்லவில்லை. ஆனாலும் அதன் அருமைப் பாட்டை—அவனுக்கே உரிய நடையாக அது அமைந்திருப்பதை—அவள் சொல்கிறாள். உவமையைச் சொல்லி அவன் நடைப் பெருமையைப் புலப்படுத்தாவிட்டாலும் ஒப்பு நோக்கி வெளிப்படுத்துகிறாள்.

நானும் நடந்திருப்பேன்
நடப்பாரையும் பார்த்திருப்பேன்—
இந்தச்
சாமி நடையைப் போலே
சாலைவழி கண்டதில்லை!

பாட்டுக்கு விளக்கம் வேண்டியதில்லை. எவ்வளவோ பேர் சாலையில் நடந்தார்கள். ஆனால் அவர்களின் நடை அவள் உள்ளத்தில் பதியவில்லை; கண் பார்வையோடு போய்விட்டது. இந்தச் சாமியின் நடை அத்தகையதன்று; அதன் சுவடு அவள் உள்ளத்தில் பதிகிறது. அதனால் அதை நினைந்து மகிழ்கிறாள்.

இரண்டு காதலியரும் தம் காதலர்களின் நடையைத்தான் வியக்கிறார்கள். அந்த இருவர் கூறும் சொற்களிலும் இரு வேறு அழகைக் காண்கிறோம். முதல் பாட்டு, அரண்மனையில் வாழும் நாகரிக இளமங்கையின் உள்ளத்தைக் கவிச் சக்கரவர்த்தி காட்டுகிற காட்சி; கண்ணாடி போட்ட வண்ண ஓவியம் அது. இரண்டாவது பாட்டு, குடிசையில் வாழும் மங்கையின் உள்ளத்தை உள்ளபடி நாடோடிப் பாவலன் காட்டும் காட்சி; குழந்தை மணலிலே போட்ட கோலம் அது. முன்னதில் பயிற்சியும் செயற்கையும் இணைந்து விளங்குகின்றன. பின்னதில் இயற்கையும் எளிமையும் இணைந்து நிற்கின்றன.

வரி நிலுவையே இல்லாத ஊராட்சி

கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள (ஆந்திர மாநிலம்) சின்னபுரம் ஊராட்சி 1968-69ஆம் ஆண்டிற்குரிய வரிகளனைத்தையும் வசூல் செய்துவிட்டது. இம்மாவட்டத்திலுள்ள ஊராட்சிகள் பலவற்றுள்ளும் வரிகளை நிலுவையில்லாது வசூலித்து முடித்த முதற் பெருமை சின்னபுரம் ஊராட்சியையே சாரும்.

கடமையும் உரிமையும்

சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம்

தமிழ்நாடு அரசு, 'கிராம நலம்' என்னும் பெயரில் தனியாக மாத இதழ் நடத்திவருவது கண்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். அதன் பெயர் 'சீரணி' என்று விரைவில் மாற இருப்பதாகக் கேட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு துறையிலும் சீர் பேணும் நாள் இது. எனவே இவ்விதழும் அணி குலையாமல், சீரணியாக மலர வாழ்த்துகிறேன். இத்திங்கள் 'கிராம நலம்' தொழிலாளர் நல இதழாக வெளிவருவது வரவேற்கத்தக்கதாகும்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்து வந்ததே தமிழர் வழக்கம், வரலாறு.

வீணில் உண்டு கழித்து இருப்போரை நிந்தனை செய்வது நம்முடைய கொள்கை. இந்த உணர்வு தொலைந்து ஓராயிரம் ஆண்டுகளாகி விட்டன. சொத்துடையோரைக் ''கருவிலே திருவுற்றவர்'' என்று புகழ்ந்த புலவன் தமிழர் பண்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை. அது எப்படியானாலும் சரி; உழவுக்கும் தொழிலுக்கும் மதிப்பளிக்கும் பழைய பண்பாடு திரும்பவும் சீர்பெற வேண்டும்.

'தொழிலாளி'யாக வாழ்வது பாவமன்று. அதுவே பண்பாடு. உடலுழைப்பாளன் மட்டுமின்றி, மூளை உழைப்பாளரையும் 'தொழிலாளர்' என்றே குறிப்பிடுகின்றார், இளங்கோ.

அன்றைய முடியாட்சியில் அமைச்சுத் தொழில் புரிந்தோரைக் 'கோத் தொழிலாளர்' என்கின்றார் சிலப்பதிகாரத்திலே.

உழுது பயிரிடும் உழவுத் தொழிலாளர்களைக் 'காவிரிப் புதல்வர்கள்' என்று கூறிப் பெருமைப்படுத்துகிறார் இளங்கோ. காவிரியாற்று நீர் கழனிகளை வளப்படுத்துவதால், காவிரியை 'அன்னை'யாகக் கற்பனை செய்து, உழவர்களை அவளுடைய புதல்வர்களாக வருணிக்கின்றார். தொழிலைப் பயன்படுத்திக்கொண்டு தொழிலாளர்களை இழிவாக நடத்துவது துரோக புத்தியாகும். சவரத் தொழில், சலவைத் தொழில், மலம் எடுக்கும் தொழில் ஆகிய தொழில்களிலே ஈடுபட்டுள்ளோரை நாம் போற்ற வேண்டும்.

தொழில்களிலே, ஒன்றை இழிவானதென்றும், மற்றொன்றை உயர்வானதென்றும் கருதுவதற்கில்லை. அனைத்துத் தொழிலும் சமுதாயத்தின் தேவையைக் கருதியே படைக்கப்பெற்றவை. மூளையுழைப்பாளர் மூலதனம் படைத்தோராக இருப்பது உற்பத்தியைப் பங்கிடுவதில் நேர்ந்த கொடுமையின் விளைவாகும். 'உற்பத்தியைப் பெருக்கினால் தான் வறுமை தொலையும்' என்பதாக அடிக்கடி சொல்லப்படுகிறது.

இதிலே, உண்மையைப் பாதி வடிவத்தில்தான் பார்க்க முடிகிறது. மறுபாதி அதிலேயே மறைந்துகிடக்கிறது. ''பெருக்கிய உற்பத்தியை

மூளை உழைப்பாளியும் உடலுழைப்பாளியும் நியாயமாகப் பகிர்ந்து கொண்டால் மட்டுமே, வறுமை மறையும்; வாழ்க்கையிலே வளம் பெருகும்'' என்பது உண்மையான மறுபாதியாகும். உற்பத்தியைப் பெருக்குவதிலே மூளை உழைப்பாளியும் உடலுழைப்பாளியும் சம பங்காளிகள் ஆவர். இதனை மறந்தால், சமுதாயத்திலே சமத்துவம் நிலவாது.

இது குடியரசுக் காலம்; குடியரசிலே எண்ணிக்கைக்கே மதிப்பு அதிகம். மக்கள் சமுதாயத்தின் எண்ணிக்கையிலே உழவர்களும் தொழிலாளர்களுமே மிகுதியானவர்கள். இந்த உண்மையை நினைவில் கொண்டு ஒவ்வொரு துறையினரும் கடமையாற்ற வேண்டும். உழவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் தீமை புரிவோர் சமுதாயம் முழுவதற்குமே தீமை செய்வோர் ஆவர்.

எதிலும் எவருக்கும் கடமையும் உண்டு; உரிமையும் உண்டு. கடமையின் முடிவில் எழுகின்றது உரிமை. கடமையைச் செய்ய மறுப்பவர்க்கு அல்லது தவறுபவர்க்கு உரிமை என்பதாக ஒன்றிருக்க முடியாது.

சமுதாயத்திலே ஒவ்வொருவரும் கடமையை மறந்து உரிமையை வற்புறுத்தத் தொடங்கினுல், குழப்பம் தான் தோன்றும். தொழிலாளர்களுக்கு வேறு எவரையும் விடத் தன்னம்பிக்கை வேண்டும். விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவர்களாக உள்ள உடமையாளர்கள் மீது கொண்ட மனக்குறையால், உழவரும் தொழிலாளரும் கடமை செய்யத் தவறுவார்களானுல், அதனுல் மிகுதியான தீமை அவர்களுக்குத்தான். ஏனெனில், சமுதாயத்தில் அவர்கள் தானே அதிகமானவர். அதனுல் கடமைகளைச் செய்துவிட்டு அல்லது கடமைகளைச் செய்து கொண்டே உரிமைகளுக்காக முயலவேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டும் கடமையைக் கைவிடக்கூடாது என்பேன்.

நாம் வேறு; சமுதாயம் வேறு அல்ல. நாம்தான் சமுதாயம்; சமுதாயம்தான் நாம். நமது நன்மைக்காகச் சமுதாயத்தில் அமைதி காக்க நாம் விரும்ப வேண்டும்.

விஞ்ஞான வளர்ச்சி உழவருக்கும் தொழிலாளர்களுக்கும் உதவி புரியும் வகையிலேயே முன்னேற்றங் கண்டு வருகிறது. உழவரும் தொழிலாளரும் முன்னேற்றம் பெறுவதைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உலகிலே எந்த ஒரு சக்திக்கும் இல்லை. தேவைப்படுவது சிறிது கால அவகாசம்தான். தொழிலாளர்களாகிய நாம், நமது பாட்டன் தலைமுறையை விடக் கூடுதலான உரிமைகளையும் சலுகைகளையும் அநுபவிக்கின்றோம். இதனுலேயே, நம் தலைமுறையினரை விடவும் நம்முடைய பேரப்பிள்ளைத் தலைமுறையினர் இன்னும் கூடுதலான உரிமைகளையும் சலுகைகளையும் அடைவார்கள் என்ற உத்திரவாதம் நமக்குக் கிடைக்கின்றது.

ஒரே தலைமுறையில் அனைத்தையும் அடைந்து விடுவது சாத்தியமில்லை. பரிணும வளர்ச்சியும் அதற்கு ஆதரவாக இல்லை. ஆகவே, தொழிலாளர்கள் எனப்படுவோர் கடமையைச் செய்யத் தவறக்கூடாது.'' 'உழைப்புதான் மூலதனம்' என்கிறது இன்றையப் பொருளாதாரச் சாத்திரம்.

ஆம், உழைப்புதான் கர்த்தா; உடமை கருவிதான். இதனை மறத்தல் கூடாது.

'கிராம நலத்'தின் 'தொழிலாளர் இதழ்' தொழிலாளர்களிடையே புதிய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருவதாகுக! திரும்பவும் சொல்கிறேன்—நானும் ஒரு தொழிலாளி என்ற உணர்வோடு தொழிலாளத் தோழர்களுக்குச் சொல்கின்றேன்; நாம்தான் சமுதாயம்; சமுதாயம் தான் நாம். உலகம் நமக்காக! நாம் உலகத்துக்காக!

இதுவே, தொழிலாளர் வர்க்கத்தின் பண்பாடு!

வாழ்க தொழிலாளி!

[சிறுசேமிப்பு நகரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டதுண்டா? பந்தாரா நகரிலுள்ள 5426 குடும்பங்களனைத்தும் சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ளன. இவர்கள் தொடங்கிய அஞ்சலகச் சிறுசேமிப்புக் கணக்கின் மொத்த எண்ணிக்கை 7,171. பந்தாரா நகரம் எவ்வாறு 'சிறுசேமிப்பு நகர'மாகப் பெயர்பெற்றது என்பதைத் தெளிவாகக் கூறுகிருர் ஓ.டி.எஸ். கோர்கடே என்ற மாவட்ட அலுவலர் — ஆசிரியர்.]

பந்தாரா நகரையே (வட இந்தியாவிலுள்ள ஒரு நகரம்) ஒரு சிறு சேமிப்பு நகரமாக மாற்றிவிட வேண்டுமென்ற ஆவல் என்னுள் பெருகத் தொடங்கிற்று. மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற அலுவலர்கள் கூட்டமொன்றில் என்னுடைய விருப்பத்தை எடுத்துரைத்தேன்.

இந்தப் பயனுள்ள உயரிய பணியை அலுவலர்கள் அனைவரும் மேற்கொண்டு, அந்நகரிலுள்ள குடும்பங்கள் அனைத்தையும் சிறு சேமிப்புத் திட்டத்தில் கொணரவேண்டுமென்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மற்றும் பந்தாரா வட்ட அலுவலகம் ஆகியவற்றிலுள்ள பணியாளர்களிடம் இப்பணி ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 9 எழுத்தர்கள் இப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்குக் 'களப்பணியாளர்கள்' என்று பெயரிடப்பட்டது. ஒவ்வொரு களப்பணியாளரும் 60 முதல் 70 வீடுகளுக்குப் பொறுப்பேற்றுச் சிறுசேமிப்புத் திட்டங்களைப்பற்றி விளக்கிக் கூறி, அவர்களைத் திட்டத்தில் பயன்பெறச் செய்யவேண்டியது அவர்களின் தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

நவம்பர் திங்களில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பிலிருந்து, அந்நகர மக்களில் 22 சதவீதத்தினர் ஏற்கனவே சேமித்து வருகின்றனர் என்பது தெரியவந்தது. எனவே எஞ்சிய நகரவாசிகளை அணுகி, அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு அல்லது வளரும் சேமிப்புத் திட்டக் கணக்கைத் தொடங்கச் செய்ய வேண்டிய பணிகள் எல்லாம் டிசம்பர் திங்கள் முதல் வாரத்தில் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வியக்கத்தை மேற்பார்வையிடுவதற்கென, மாவட்டத்தில் இதர துறைகளில் பணியாற்றும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும் ஈடுபடுத்தப்பட்டனர். இரண்டு அல்லது மூன்று அதிகாரிகள் ஒரு 'வார்டு'க்கு ஒதுக்கப்பட்டனர். அவர்களுக்குச் சமூகநல ஊழியர்கள் துணை நின்றனர்.

அலுவலகர்களும் பணியாளர்களும் இல்லங்கள்தோறும் சென்று, சிறு சேமிப்பின் சிறந்த குறிக்கோள்களை எளிய, இனிய முறைகளில் விளக்கிக் கூறினர். அஞ்சலகத்தில் சேமிப்புக் கணக்கு, அல்லது வளரும் சேமிப்புக்

சிறு சேமிப்புக்கொரு நகர்

கணக்கு அல்லது இதர சிறுசேமிப்புக் கணக்குகளை நகர மக்கள் தொடங்கி, சிறிது சிறிதாகச் சேமிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

களப்பணியாளர்கள், அதிகாரிகளின் முயற்சி எவ்வளவு பயனைத் தந்ததென்பது ஒவ்வொரு வாரமும் திங்களன்று ஆராயப்பட்டது. சனவரித் திங்கள் 20 ஆம் நாள் முடிய 63 சதவீத மக்கள் சிறுசேமிப்பில் சேர்ந்திருந்தனர் என்பது தெரிய வந்தது.

1969 ஆம் ஆண்டுக் குடியரசு நாள் நெருங்கிவிட்டது. இன்னும் 3 நாட்கள்தாம் எஞ்சி நின்றன. இதற்குள் சிறு சேமிப்பில் சேராத 2,100 குடும்பங்களையும் திட்டத்தில்சேர்த்து விட்டால், அம்மாநிலத்திலேயே பந்தாரா நகருக்கு, முதல் சிறு சேமிப்பு நகரமென்ற உயரிய நிலை கிடைத்துவிடுமல்லவா?

எனவே மாவட்டத் துணை ஆட்சித் தலைவரும், தாசில்தாரும் கலந்துரையாடி ஒரு முடிவிற்கு வந்தனர். மேற்கூறிய 2100 குடும்பத்தினரும் பிடிவாதமாகச் சிறுசேமிப்பில் சேர மறுத்துவிட்டனர். அவர்களையும் திட்டத்தின்கீழ்க் கொணர்ந்துவிட்டால், அந்நகரமே சிறுசேமிப்பு நகராகிவிடும். எனவே இரவு பகலாக அதிகாரிகள், களப்பணியாளர்கள் அனைவரும் ஒவ்வொரு வார்டிலுமிருந்த எஞ்சிய குடும்பங்களை அணுகினர். அவர்களின் இடையரூத முயற்சி பயனளிக்கத் தவறவில்லை.

குடியரசு நாள் மலர்ந்தது. நகர மக்கள் அனைவரும் சிறு சேமிப்பில் சேர்ந்து விட்டனர் என்ற மகிழ்ச்சிச் செய்தி எங்கும் பரவியது. நகரத்திலுள்ள 22 வார்டுகளிலும் வாழ்ந்த 5426 குடும்பங்கள் அனைத்தும் சிறு சேமிப்பில் கொண்டுவரப்பட்டன. 7171 சிறுசேமிப்புக் கணக்குகள் தொடங்கப்பெற்றன. அந்தக் கோட்டத்திற்கும், மாநிலத்திற்கும் பந்தாரா நகர் முதல் சிறுசேமிப்பு நகர் ஆயிற்று.

அன்றாட அலுவலக வேலைகளை முடித்துவிட்டுச் சிறுசேமிப்புப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு நகரக் குடும்பங்கள் அனைத்தையும் அத் திட்டத்தில் கொணர்ந்த பணியாளர்களின் உற்சாகம், முயற்சி மிகவும் போற்றத்தக்கது. அதிகாரிகளும் இதில் பங்கு பெற்று உழைத்தது மேலும் சிறந்ததாகும்.

நாளொன்றுக்கு ஒரு ரூபாய்கூடச் செலவிடுவதில்லை!

இந்திய மக்களிலே மூன்றில் ஒருவர் மிக மிக ஏழை. அவர் கிராமத்திலே வாழ்ந்தால், அவர் ஒரு திங்களுக்குச் செலவிடுவது ரூ. 15 மட்டுமே; நகரத்தில் வாழ்ந்தால் மேலும் ரூ. 9 அதிகமாக செலவிட்டுத் தன் வாழ்க்கையைத் தள்ளுகிறார். இந்த இருபதாண்டுக் காலத்தில் பொருளாதார நிலை வெகுவாக வளர்ச்சி அடைந்திருப்பினும், மூன்றில் ஓர் இந்தியரின் நிலை இதுவே.

நாளொன்றிற்கு ஒரு ரூபாய்க்கும் குறைவாகச் செலவிடுபவர்கள் 80 சதவீத மக்களாவார்கள்.

இத்தன்மையில் கேரள மாநிலம் முதன்மை வகிக்கிறது: இங்குள்ள 44·4 சதவீத மக்கள் நாளொன்றுக்கு ஒரு ரூபாய்கூடச் செலவிடுவதற்கு வழியில்லை, மைசூர் மக்களில் 44 சதவீதத்தினரும், ஆந்திராவிலுள்ளவர்களில் 41·8 சதவீத மக்களும் நாளொன்றுக்கு ஒரு ரூபாய்க்குக்கூட வழியில்லாதவர்களாயுள்ளனர். ஒரு ரூபாய்க்கும் குறைவாகச் செலவிடும் மக்கள் வாழும் இதர மாநிலங்கள். உத்திரப் பிரதேசம் 39%, மத்தியப்பிரதேசம் 37%, மகாராஷ்டிரம் 35 9%, பீகார் 35·30%, இராஜஸ்தான் 34·2%

அவனைத்தான் வணங்க வேண்டும்

கவிஞர் பொன்னடியான்

புகழ்பொருளுக் கேங்காமல்; காய்ந்து தீய்ந்து
பொழுதெல்லாம் உழைப்பதற்கும் சலித்தி டாமல்
இகழ்ச்சியினால் ஏசலினால் ஏய்ப்பி னாலிங்(கு)
எதிர்ப்போரின் எதிர்ப்புக்குக் கலங்கி டாமல்
மகிழ்ச்சியெனில் என்னவென்றே அறியா வண்ணம்
மறத்துப்போய் நமக்காக வாழ்கின் றானே
அகத்துணர்வால் அவனைத்தான் வணங்குகின்றேன்-
அவனைத்தான் இனிஉலகம் வணங்க வேண்டும்!

குளிரென்றும் கொளுத்துகின்ற கோடை என்றும்
கொட்டுகின்ற மழைஎன்றும் பார்த்தி டாமல்
உளியைப்போல் இம்மனிதப் பாறை கட்கே
உருக்கொடுத்தே உயிர்கொடுத்தே மலர வைத்துக்
களிநடன அரங்காகச் சோலை யாகக்
காட்சிதரும் வகையுலகைச் செய்கின் றானே
அளியுணர்வால் அவனைத்தான் வணங்குகின்றேன்-
அவனைத்தான் இனிஉலகம் வணங்க வேண்டும்!

ஆசைக்குள் அடங்காமல்; பற்றுப் பாச
அரவணைப்பில் முடங்காமல்; மகிழ்ச்சி என்னும்
ஓசைக்குள் ஒடுங்காமல்; களைப்புத் தீர்க்கும்
ஓய்விற்குள் உறங்காமல்; முறுக்கி விட்ட
மீசையைப்போல் முறுக்கேறும் தோள்க ளாலே
மென்மேலும் தனைத்தந்தே உழைக்கின் றானே
ஆசையறுத் தவனைத்தான் வணங்குகின்றேன்
அவனைத்தான் இனிஉலகம் வணங்க வேண்டும்!

பெருமிதம் மறந்தது

டாக்டர் மு. வரதராசனார்

நண்பர் ஒருவர் உடம்புக்கு நல்லது என்று தவறாகக் கருதிக்கொண்டு இளமையில் நாள்தோறும் வேப்பிலை தின்று வந்தார். அவ்வாறே, இன்னொருவர் எட்டிக்காயைச் சிறுகச் சிறுகத் தின்று வந்தார். உடம்பின் நன்மைக்காக என்ற நம்பிக்கையோடு எவ்வாறோ கசப்பை விழுங்கி வந்தார்கள். ஆனால் உடம்பில் நன்மைக்காக இயற்கை ஒரு காப்பைப் படைத்துள்ளது. குடலுக்குள் வேண்டாதவை செல்லாதபடி ஒரு வாயில் காவலனாக நாக்கு அமைக்கப்பட்டுள்ளது. அந்த வாயில் காவலனுக்கு அளவு கடந்த சுவையாகிய கையூட்டுக் (லஞ்சம்) கொடுத்தும் பலர் கெடுத்துவிடுகிறார்கள். அந்த நண்பர்களோ அந்தக் காவலனாகிய நாக்கை எதிர்த்துக் கொடுமைப்படுத்தி அடக்கித் தவறு செய்கிறார்கள். நாக்கு எவ்வளவோ மறுத்தும் பொருட்படுத்தாமல் கசப்பு மிகுந்த வேப்பிலையையும், எட்டிக்காயையும் குடலுக்குள் தள்ளி வந்தார்கள். அதனால் அவர்கள் பெற்ற நன்மை என்ன? தேள் முதலிய நச்சுப் பூச்சிகள் கொட்டினாலும் கடித்தாலும் நஞ்சு வேலை செய்யாத நிலையைப் பெற்றார்கள். அது ஒரு சிறு நன்மையே. இவர்களின் கொடிய செயலால் - அடக்கு முறையால்-அவர்கள் அடைந்த தீமை பெரியது. நாற்பது வயதை எட்டும் போதே அவர்கள் நரம்புத் தளர்ச்சி அடைந்தார்கள்; அறிவுக் கூர்மை இழந்தார்கள்; பைத்தியத்தின் எல்லையில் நின்றார்கள்; வருந்தத்தக்க வகையில் அவர்களின் வாழ்க்கை முடிந்தது.

சில அறுவைச் சிகிச்சைகள் செய்வதனாலும் இவ்வாறு உடம்பைக் கெடுத்துக் கொள்வோர் உண்டு. தவறான போக்கில் திரும்புவதால் ஏற்படும் இத்தகைய விளைவுகள் பிறகு பொல்லாதவைகளாக உள்ளன.

தனி ஒருவரின் உடல் வளர்ச்சியில் காணும் இந்த உண்மையைச் சமுதாய வளர்ச்சியின் அமைப்பிலும் காணலாம். சமுதாயத்தின் மேல் நிலையில் - பொறுப்பான நிலையில் - உள்ள சிலர் எப்போதோ செய்யும் தவறுகள் வழி வழியாக நெடுங்கால இடையூறுகளாக நின்று விடுகின்றன. அவற்றை மாற்றியமைக்கப் பெரும் புரட்சி தேவையாகிறது. தொழிலாளர்களின் வாழ்வுபற்றிய வரலாற்றில் இதைத் தெளிவாக உணரலாம்.

பழங்கால மனிதன் கையுங் காலுங்கொண்டு உழைத்து உணவு தேடி உண்டான்; உடை முதலியவை செய்து கொண்டான்; வீடு கட்டி வாழ்ந்தான். தொழில் செய்வது வாழ்வுக்கு இன்றியமையாதது என்ற நிலைமை அக்காலத்தில் இருந்தது. தொழில் செய்கின்றவனுக்கு மட்டுமே வாழ உரிமை இருந்த காலம் அது.

பல வீடுகள் அமைந்த ஊர்களும், பல ஊர்கள் கொண்ட நாடும் ஏற்



தமிழகத்திலே 'பசுமைப் புரட்சி' காணத் தன் உழைப்பு முழுதும் நல்கி, தமிழர்தம் நெஞ்சங்களிலெல்லாம் என்றும் பசுமையாகவே நின்று நிலவிவிட்ட நல்லவர்-மறைந்துவிட்ட மாண்புமிகு உணவு-விவசாய அமைச்சர்-பண்பாளர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கட்குக் 'கிராம நலம்' தன்னுடைய அஞ்சலியைச் செலுத்திக் கொள்கிறது.



1. மறைந்த உணவு - விவசாய அமைச்சரின் உடல்மீது தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் மலர் வளையம் வைத்தார்.

2. அலங்கார இராணுவ வண்டியில் உணவமைச்சரின் இறுதி யாத்திரை.



3. இடுகாட்டில் உணவமைச்சரின் உடலுக்கு எரியூட்டியபோது, அனைத்துக் கட்சித் தலைவர்களும், அமைச்சர் பெருமக்களும் தம் அஞ்சலியைச் செலுத்தினர்.

பட்ட காலத்தில், ஊர்களின் பாதுகாப்புக்கும் நாட்டின் பாதுகாப்புக்குமாகத் தனியே படை தேவையாயிற்று. அந்தப் படையின் வீரர்களும், போர்செய்யுங் காலத்தில்மட்டுமே வேறொரு தொழில் செய்யாமல் வாழ முடிந்தது. போர் இல்லாத காலத்தில் அவர்களும் உழவு முதலான தொழில்களில் ஈடுபட்டார்கள். அந்தக் காரணத்தால்தான் மழைக் காலத்திற்கு (கார் காலத்திற்கு) முன்னமே போரை முடித்துக் கொள்வதும், முடியாவிட்டால் நிறுத்திவிடுவதும் மரபுகளாக இருந்தன. படை வீரர்களும் தொழிலாளிகளாக விளங்கிய காலம் அது.

ஊர்களுக்குக் காவலாகப் படை வலிமை தேவை இருந்ததுபோல், அறிவு வலிமையும் தேவையாக இருந்தது. அறிவுத் துறையில் சிலர் நல்ல வளர்ச்சி பெற்று விளங்குவதைக் கண்டு பலர் அவர்களுடைய அறிவைப் பயன்படுத்திக்கொண்டால் போதுமென்று அமைதியாக இருந்தனர். அத்தகைய அறிவாளிகளும் தொடக்கத்தில் மற்றவர்களைப்போல் வேறு தொழில் செய்து உழைத்து வந்தார்கள். வரவர வேறு தொழில்களுக்கு நேரம் கிடைக்காமையால், அறிவால் உழைப்பதும் ஒரு தொழிலாகக் கொள்ளப்பட்டது. அறிவின் உழைப்புக்கும் ஊதியம் தரப்பட்டது.

காலப்போக்கில் தொழிலாளிகள், அறிவாளிகள் என்ற வேறுபாடு ஏற்பட்டது. சமுதாயத்தில் அறிவாளிகள் மதிப்பும் நன்மையும் மிகுதியாகப் பெற்றார்கள். உழைக்காமலே வாழ்வது பெருமை என்று எண்ணிவிட்டார்கள். அவர்கள் அதோடு நிற்கவில்லை. தொழிலாளிகளைத் தம்மைப் போன்ற மனிதர் என்று எண்ணாமல் ஆடுமாடுகள் போல் மந்தையாக எண்ணிவிட்டார்கள். நாட்டை ஆளும் தலைவர்களின் பக்கமாக இருந்துகொண்டு தொழிலாளிகளுக்குச் சிறுமைகள் ஏற்படுத்தினார்கள். நண்பர்களின் உடல் வேம்பையும் எட்டியையும் ஏற்று நொந்ததைப்போல் தொழிலாளிகளின் கூட்டமும் ஆள்வோரின் கொடுமையையும் அறிவாளிகளின் சிறுமையையும் ஏற்று நொந்தது; வாடியது; நைந்தது.

இவ்வாறு நோயுற்ற சமுதாயம் சீர்ப்படுவதற்கு ஒருவழி பிறந்தது. அறிவியல் முன்னேற்றத்தால் யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கடினமான உழைப்பையெல்லாம் யந்திரங்கள் ஏற்றுக்கொண்டன. தொழிலாளிகள் மாடுகள் போல் உழைக்கவேண்டிய தேவை இல்லாமல் போயிற்று. சிந்தனைக்கு-அறிவின் வேலைக்கு நேரம் கிடைத்தது; ஆற்றலும் வாய்த்தது. தொழிலாளர்களிடையே புதுப்புது எண்ணங்கள் எழுந்தன. அவைகளே புரட்சிக்கு வித்தான எண்ணங்கள். அந்த எண்ணங்களைத் திரட்டவும் பயன்படுத்தவும் அவர்களுக்குள்ளிருந்தே அறிஞர்கள் தோன்றினார்கள். அவ்வாறு தோன்றியதே உலக வரலாற்றில் காணும் தொழிலாளர் புரட்சியாகும். மேதினப் புரட்சியின் அடிப்படை இது. அதுவரையில் அறிவு, தொழிலாளர்கட்கு எதிர்ப்பாகத் தன்னலத்திற்குப் பயன்பட்டது. தொழிலாளர் விழித்தெழுந்தபின் அந்த அறிவு, தொழிலுக்கு அரணாகத் தற்காப்புக்குப் பயன்படத் தொடங்கிவிட்டது. கவிஞர்களும் இந்த உண்மையை உணர்ந்து தொழிலாளர்களைப் போற்றிப் பாடத் தொடங்கி விட்டார்கள்.

‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்
தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை நிந்தனை
செய்வோம்.’

என்றார் பாவேந்தர் பாரதியார்.

‘நீர்நிறைந்த கடலையொக்கும்
நேருழைப் பவர்தொகை
நீர்நிறைந்த தோணியொக்கும்
நேர்முதல்கொள் வோர்தொகை’

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

ஆகவே, தொழிலாளர் பெருமிதத்தோடு வாழ்வதற்குரிய காலம் இது. மற்றவர்கள் தோணிகள்; தோணிகளைக் கவிழ்க்கவும் வல்ல கடல் நாம்தான் என்று உணரும் உரிமையுள்ள காலம் இது. உழைப்பு இல்லாமல் வாழ்கின்றவர்கள் நிந்தனைக்கு உரியவர்கள்; நாம்மட்டுமே வந்தனைக்கு உரியவர்கள் என்று தொழிலாளர் புத்துணர்ச்சி பெறும் காலம் இது.

வளர்க தொழிலாளர்கள் நன்மைகள்!

தேசீயப் பேரணியில் சாதனைகொள் ஊரகம்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

பாரணியான நம்பைந்தமிழ்நாட்டில்
தொல்பண்புகளே
நேரணியாக நிமிர்ந்து புதுமை
விஞ்ஞானங்களின்
சீரணியாகச் செழுமைச் சிங்காரப்
பைம் பூம்பொழிலார்
பேரணியாகப் பிறங்குக நாட்டின்
சிற்றூர் அணியே!

கீழ்திசை நாகரிகங்கள் பொதுவாகவும், நம் இந்திய, தமிழக நாகரிகங்கள் சிறப்பாகவும் சிற்றூர் நாகரிகங்களாகவே தொன்று தொட்டு விளங்கிவந்துள்ளன என்று பெருந் தலைவர்கள், பேரறிஞர்கள் கூறுவதுண்டு. இது முழு உண்மையன்று. பேரளவான உண்மை கூட அன்று. அண்மைக் கால, இடைக்கால நிலைகளை மனத்தில் கொண்டு கூறப்பட்ட ஊகஇழைகள் மட்டுமேயாகும்.

பண்டைத்தமிழகத்திலும்சரி, பண்டைக்கால இந்தியாவிலும் சரி, முடியாட்சி தோன்றுவதற்கு முற்படக் குடியாட்சிகள் எங்கும் நிலவியிருந்தன. சேரநாட்டாட்சி கிட்டத்தட்ட பிரிட்டிஷ் ஆட்சிக் காலம் வரை சிறு குடியரசுகளின் மீது கட்டமைக்கப் பட்ட ஒரு பெரும் கூட்டுக் குடியாட்சியாகவே இருந்தது. சேர்ந்த அரசுகள் பலவற்றின் தலைவன் என்ற முறையிலேயே சேர மன்னன் சேரன் எனப்பட்டான் என்பது அறிஞர் தேவநேயப்பாவாணர் கருத்து. ஏழு அரசுகள் சேர்ந்தே சேரரும், ஐந்து அரசுகள் சேர்ந்தே பாண்டியரும், சோழரும் அமைந்தனர் என்றும், கோதை, பொறையன், அந்துவன் முதலிய சேரர் பெயர்களும், செழியன், பழையன், பாண்டியன், வழுதி போன்ற பாண்டியர் பெயர்களும், செம்பியன், சென்னி, வளவன் போன்ற சோழர் பெயர்களும் அவர்கள் மூலவரான குடியரசுத் தலைவர் பெயர்களே என்றும் அவர் கூறுவர்.

வடக்கிலும், ஆந்திரப் பேரரசரும் கலிங்கப் பேரரசரும், கௌதமபுத்தர் பிறந்த சாக்கிய மரபும் குடியரசுக் கூட்டுக்களேயாகும். ஆந்திர நாட்டில் குறும்பர் என்ற குடியரசுகள் கூட்டாட்சி செய்து அயல் நாடுகளுடன் வளமான கடல் வாணிகம் செய்ததன் காரணமாக, தங்கள் நாணயங்களில் கப்பல் உருவையே சின்னமாகக் கொண்டன.

சங்க காலத்தில் மதுரையும் காவிரிப்பூம்பட்டினமும் நகராட்சிகளாகவே நிலவின. வடக்கில் குப்தர் காலத்தின் முன்னும் பின்னும் வைசாலி போன்ற நகரச் குடியரசுகளும், லிச்சாவியர் போன்ற கூட்டுக் குடியரசுகளும் நிலவின.

தமிழில் நாடு என்ற சொல்லும், சமஸ்கிருதத்தில் ஜனபதம் என்ற சொல்லும், தொடக்கத்தில் கிரேக்க நாகரீகத்தில் காணப்பட்ட நகரரசு அல்லது நகர்-நாடு (City-State) நிலைமையைக் குறித்தன. குடியரசுத் தலைவர் தமிழில் வேள் என்றும், தெலுங்கு, கன்னடத்தில் சளுக்கர் என்றும், சமஸ்கிருதத்தில் குலபதி, ஜனவர், ஜனபதி என்றும் அழைக்கப்பட்டார்.

பண்டைத் தமிழரும், பண்டை இந்தியரும் இவ்வாறு பல சிறு குடியரசுகளின் கூட்டாகவும், பல குடியரசுத் தொகுதிகளின் கூட்டாகவுமே நிலவின. குடியரசுத் தொகுதிகளே பிற்காலத்தில் முடியரசுகளாயின. ஒவ்வொரு குடியரசிலும் மையம் ஒரு நகரம், நகரக் குடியரசு. சூழ ஒவ்வொரு சிற்றூரும் ஒரு சிற்றூர்க் குடியரசாக அதனுடன் இணைந்திருந்தது.

சிற்றூர்கள் நேரிலும், நாடு கிளை மூலமாகவும் தலைவரைத் தேர்ந்தெடுத்தன.

கடலோரமாக இருந்த குடியரசுகளில் தலைநகர மன்றக் கடற்கரை நகரம் ஒன்றும் இருந்தது. பிற்கால முடியரசுகளிலும் சங்க காலத்திலும் இம் மரபைக் காண்கிறோம்.

சங்க காலம்வரை, வடதிசை மௌரியர் காலம், கனகன் (கனிஷ்கன்) காலம்வரை, தமிழக, இந்திய நாகரிகம் சிற்றூர் நாகரிகமாக இல்லை. நகர நாகரிகமாகவே இருந்தது. கடற்கரை நகரங்களாகிய பட்டினங்கள் இதனை உலக நாகரிகம் ஆக்கிற்று. நாகரிகம் என்ற தமிழ்ச் சொல்லும் அதற்கான ஆங்கிலச் சொல்லும் (Civilisation) கூட இவ்வரலாற்றுண்மைக்குச் சான்று ஆகும்.

இந்தியாவில் சாகர், ஹூணர், மங்கோலியர் ஆகியோர் படையெடுப்பின் பின்னும், தென்னகத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் தொடக்க காலத்திலும் தான் நகரங்கள் அழிந்து சிற்றூர் நாகரிகம் ஏற்பட்டது.

பண்டை நாகரிகத்தில் பட்டினங்கள் தலைமை ஏற்றன. நகரங்களும், சிற்றூர்களும் அதில் பங்கு கொண்டன. ஆனால், பண்டை நகரங்கள், பட்டினங்கள் இன்றைய நகரங்கள், பட்டினங்களைப்போலச் சிற்றூர்களைச் சுரண்டியும் வெளிநாட்டு நாகரிகங்களுக்கு அடிமைப்பட்டும் வேறுவேறாகத் திகழவில்லை. சிற்றூர்களின் வளமும் நகரங்களை வளர்த்தன. நகரங்களின் நாகரிகம் சிற்றூர்களை வளர்த்தது.

நாகரிகம் குன்றிய அயல் இனங்களின் அழிபாடுகளுக்கு ஆளாகியும் அயலாட்சிக்குட்பட்டுமே, இந்திய நாகரிகம் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் பின்னும், தெற்கே தென்னக தமிழ் நாகரிகங்கள் கி.பி. 16-ம் நூற்றாண்டின் பின்னுமே சிற்றூர்களின் சிறு நாகரிகங்களாகவும் இக்கால நகரங்களின் போலி நாகரிகங்களாகவும் சிதறுண்டன.

பழைய நகர - சிற்றூர் வாழ்வுகள் இரண்டும் தேசிய நாகரிக வாழ்வுகள். இன்று இரண்டும் இரு வேறு போலி நாகரிகங்கள். அவை முன் போல் ஒன்றை ஒன்று வளர்க்காமல், இன்னும் ஒன்றை ஒன்றே அழித்தே வருகின்றன.

தமிழ்த் தேசியம், பாரத தேசியம் இரண்டும் இனித்தான் உண்மைத் தேசியமாக மலரவேண்டும். கிராமங்கள் செல்வத்தின் பிறப்பிடமாகவும், நகரங்கள் கலையியல்களின், நாகரிகத்தின் பிறப்பிடமாகவும், பட்டினங்கள் உலக நாகரிகப் பரிமாற்றங்களாகவும் அமையும் நாளே, பாரதம் உண்மை விடுதலை பெறும் நாள். தமிழகம், பண்டைச் சங்கத் தமிழகம் ஒத்த செம்மாந்த தமிழகம் ஆகமுடியும்.

தமிழகத்தையும், இந்தியாவையும், உலகையும் இந்த பழம் பெருமைச் சீரணியில் நடைபோட வைக்கப் பாடுபட்ட நம் எழுச்சிக் கதிரவச் செம்மல் அறிஞர் அண்ணா - அவர் புகழ்-இன்றும் நம் அருட்குவை முதல்வர் கருணாநிதி உருவில் நம்மை நடத்திச் செல்ல இருக்கிறது.

தமிழக, பாரதச் சிற்றூரும், நகரும், பட்டினமும் தனித்தனிச் சீரணிகளாய், மூன்றும் ஒன்றையொன்று வள நிறைவுபடுத்தி ஒரே தேசியப் பேரணியாய்த் திகழும் நாளே, நம் தமிழகத்தின், இந்தியாவின், உலகின் பொன்னாள்!

அந்நாள் விரைவில் ஏகுக!

> வீரம், எதையும் தாங்கும் திறன்,
> அஞ்சாமை, எல்லாவற்றுக்கும்
> மேலாகத் தியாகம் ஆகியவைகள்
> தான் நம் தலைவர்களின் இயல்புகள்
>
> — காந்தியடிகள்

அமெரிக்கா:

ஏறத்தாழ 185 இலட்சம் அமெரிக்கர் உற்பத்தித் தொழிச்சாலைகளில் வேலையில் உள்ளனர். பத்து இலட்சம் ஊழியர்களுக்கு மேல் வேலை செய்யும் பெருந்தொழில்களுள் போக்குவரத்து இயந்திரச் சாதனங்கள், பொதுவான இயந்திரங்கள், மற்றும் மின்விசை இயந்திரங்கள், உணவுகள், உணவுப் பொருள்கள், ஆடையணிகள், அடிப்படை உலோகங்கள் மற்றும் தேவைக்கு ஏற்றபடி உருவாக்கப்பட்ட உலோகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் அடங்கும்.

வரலாற்றிலேயே மிகச் சிறந்த ஊதியம் அளிக்கப்படும் ஊழியர் இன்றைய அமெரிக்கத் தொழிலாளிதான். இத்துடன்கூட மூதுநிலை உரிமைகள், ஊதியத்துடன் கூடிய விடுமுறைகள், ஊதியத்துடன் கூடிய ஓய்வு விடுமுறைகள், நிர்ணயவேலை நேரங்கள், நிர்ணய வேலைக்குமேல் வேலை செய்தால் அதற்காகத் தனியான ஊதிய விகிதங்கள், வேலை நேர மாற்றங்களுக்கான அனுகூலங்கள் ஆகியவையும் அவருக்குக் கிடைக்கின்றன. கூட்டாகச் சேர்ந்து இயங்கியதில் கிடைத்த ஆதாயங்கள் இவை.



தொகுத்தவர் : திரு பி. வி. கிரி

அமெரிக்கத் தொழில்துறை முழுவதிலும், தொழில் நிர்வாகப் பயிற்சிக்குப் பெருமளவு முக்கியம் அளிக்கப்படுகிறது. வியாபார நிர்வாகத்துக்கான ஹார்வர்ட் பள்ளி போன்ற பட்டமளிக்கும் பள்ளிகள், இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து அவர்களைத் தொழில் திறனுள்ளவர்களாக ஆக்குகின்றன.

1933ஆம் ஆண்டு முதல், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே கூட்டுறவு வலுத்து வருகிறது. இது தொழிலாளர்களுக்கு இணை சொல்லமுடியாத அளவு முன்னேற்றத்தை அமைத்திருக்கிறது. 1933ஆம் ஆண்டில் தொழிற் சங்கங்களின் அங்கத்தினர்கள் எண்ணிக்கை 30 இலட்சம்தான்; ஆனால், இன்றோ, சுமார் 175 இலட்சம் தொழிற்சங்க அங்கத்தினர்கள் உள்ளனர். தேசிய அளவில் அமைந்த 181 தொழிற் சங்கங்களிலும், அந்தந்த வட்டார அளவில் அமைந்த 77, 610 தொழிற் சங்கங்களிலுமாக இவர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

சோவியத் யூனியன்:

சோவியத் யூனியனில் 200,000க்கு மேற்பட்ட ஆலைகளும், தொழிற்சாலைகளும், மின்விசை நிலையங்களும் சுரங்கங்களும் உள்ளன.

உல்லன், லினன் துணிமணிகள் உற்பத்தியிலும், துரித வேகத்தில் வளர்ந்துவரும் பருத்தித் துணிமணிகள் உற்பத்தியிலும் சோவியத் யூனியன் உலகில் முதலிடம் வகிக்கிறது. 1965இல் 710 கோடி மீட்டர் நீளங்கொண்ட (550 கோடி சதுர மீட்டர் அளவுகொண்ட) துணிமணிகள் உற்பத்தி செய்யப்பட்டன.

ஆண்டுதோறும் சுமார் 700,000 மோட்டார் சைக்கிள்களும், ஸ்கூட்டர்களும் உற்பத்தியாகின்றன. நடப்பு ஐந்தாண்டுத் திட்டத்தின் போது இவை 1·5 மடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சைக்கிள் வண்டிகள், மோட்டார் சைக்கிள் வண்டிகளின் ஆண்டு உற்பத்தி 40 இலட்சத்தை எட்டிவிட்டது.

வெண்ணெய், பால் உற்பத்தியில் சோவியத் யூனியன் எல்லா நாடுகளையும் விஞ்சி விடுகிறது. இங்கு மொத்தப் பால் உற்பத்தி 7·5 கோடி டன்களை எட்டியுள்ளது. இது ஆள் ஒன்றுக்கு ஆண்டுதோறும் சுமார் 300 முதல் 350 லிட்டர் வரையிலும் கிட்டும் அளவுக்குச் சமானமாகும். குவளை (டப்பா) உணவுப் பண்டங்களின் உற்பத்தி 1913ஆம் ஆண்டின் அளவைக் காட்டிலும் 60 மடங்காக உயர்ந்துள்ளது. இன்று ஆண்டுதோறும் 700 கோடிக்கு மேற்பட்ட உணவுப் பண்டக் குவளைகள் உற்பத்தியாகின்றன.

பிரிட்டன்:

பிரிட்டன் உலகத்தின் தொழிற்கூடமாக இருக்கிறது. கச்சாப்பொருள்களையும் உணவுப் பண்டங்களையும் இறக்குமதி செய்துகொண்டு பல வகைச் செய்பொருள்களை உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்புகிறது.

தொழிற்றுறையில் பிரிட்டன் முன்னணியில் நிற்கிறது. பிரிட்டிஷ் தொழிற்சாலைகள் நவீன வசதியுடையவை. பிரிட்டன் தயாரிக்கும் மோட்டார் கார்கள், டிராக்டர்கள், சைக்கிள்கள், மின்னணுப் பொறிகள், பொறிகள் முதலியவற்றை உலக நாடுகள் விரும்பி வாங்குகின்றன. உலகப் புகழ்பெற்ற விமானங்கள், ரெயில் எஞ்சின்கள், மின்சாரச் சாதனங்கள், இயந்திரக் கருவிகள் எல்லாம் பிரிட்டிஷ் தயாரிப்புகளே. பிரிட்டன் தயாரிக்கும் பருத்தி, கம்பளி ஆடைகள் உலகப் பிரசித்தி பெற்றவை.

கனடா:

1878 முதல் கனடாவில் சுரங்கத் தொழில்களும் 1904 முதல் பிற தொழில்களும் தொடங்கப்பட்டு வந்திருக்கின்றன. ஆயினும் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் கோடிக்கணக்கான டாலர் மதிப்புள்ள பொருள்களை அமெரிக்காவும், இங்கிலாந்தும் கனடாவில் வாங்கின. அதனால் நூற்றுக்கணக்கான புதிய தொழில்கள் கனடாவில் ஏற்பட்டன.

வெளிநாட்டு வாணிகத்தில் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா இம்மூன்றுக்கும் அடுத்துப் பெரிய அளவில் பொருள்களைக் கனடா ஏற்றுமதி செய்து வருகிறது. காகித ஏற்றுமதியிலும் உற்பத்தியிலும் கனடாவுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை. மின்சார உற்பத்தியில் உலகில் உயர் நிலையில் இருப்பது அமெரிக்கா. அடுத்தது கனடா.

சுவீடன்:

சுவீடனுக்கே சிறப்பாக உரியவை காகித ஆலைகளும், பீங்கான் தொழிற்சாலைகளும் ஆகும். 1940-க்குப் பிறகு எஃகுத் தொழிலும் பெருகியிருக்கிறது. சுவீடனில் 200 காகித ஆலைகள் இருக்கின்றன. தச்சு வேலையிலும் சுவீடிஷ்காரர்கள் சிறந்து விளங்குகின்றனர். மரச் செய்பொருள்கள் செய்யும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 800-க்கு மேற்பட்டதாகும்.

கரன்சி நோட்டு என்ற காகித நாணயத்தை உலகில் பரப்பியவர்களும் சுவீடிஷ்காரர்களே ஆவர். கரன்சி நோட்டு வெளியிட்ட முதல் நாடு சீனா. ஆனால் திட்டவட்டமான ஓர் உருவத்தைக் கரன்சி நோட்டுக்குக் கொடுத்து, வங்கிகள் வாயிலாக அச்சிட்டது சுவீடனில்தான். சுவீடனில் தொழில் வளர்ச்சிக்குக் காரணம் அங்கு மரம் மிகுதி; எஃகு ஏராளம்; மின்சாரம் மலிவு.

67 வயதுடைய ஒருவர் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் போது, அங்கு அவருடைய மகன், பேரன் ஆகியோரும் வேலை பார்க்கின்றனர். மூன்று தலை முறையினர் ஓரிடத்திலேயே வேலையில் இருப்பது இங்குச் சாதாரண நிகழ்ச்சி.

பிரான்சு :

மக்கள் தொகையில் பிரான்சு, உலகில் 12ஆவது நாடு. ஆனால் அலுமினிய உற்பத்தியில் நான்காவதாகவும், எஃகு உற்பத்தியில் ஐந்தாவதாகவும் இருக்கிறது. அமெரிக்காவை விடக் கார்களை அதிகமான அளவு ஏற்றுமதி செய்கிறது. பல தலைமுறைகளாகக் கப்பல் வாணிகத்தால் சிறந்துள்ள இங்கிலாந்துக்குக் கப்பல்கள் கட்டிக் கொடுக்கிறது. மின்சாரக் கருவிகள், துணி, இரசாயனப் பொருள்கள் உற்பத்தி மிகவும்பெருகியிருக்கிறது. ஒரு கோடிக் கதிர்களும்,

மூன்று இலட்சம் தறிகளும் உள்ள 9,000 தொழிற்சாலைகள் உள்ளன.

உழவரில் மூன்றில் இரு பங்கினர்க்குச் சொந்த நிலம் இருக்கிறது. குடும்பத்தினர் அனைவரும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். உயர்ந்த மது தயாரிக்க உதவும் திராட்சை வகைகளும், பிற பழங்களும், 'சென்ட்' தொழிலுக்கு மணம் நல்கும் நறுமலர்களும் இந்நாட்டின் பிற உற்பத்திகள்.

ஜப்பான்:

ஜப்பானியர் சிறு தொழில்களில் சிறந்து விளங்குகின்றனர். 100க்கு 99 பேர் இத்தகைய சிறு தொழில் நிலையங்களில்தான் வேலை பார்க்கிறார்கள். பட்டுத்துணி, உலோகத்தகடு, அச்சுவேலை, பைஞ்குலர், கடிகாரம், டெலஸ்கோப்பு, தோல், குடை, ஆணி, விளையாட்டுப் பொருள்கள் ஆகியவற்றைச் செய்வதற்காக எண்ணற்ற சிறு தொழிற்சாலைகள் ஜப்பானில் உள்ளன. இத்தகைய சிறு தொழில்களை அடிப்படையாகக் கொண்டு பெரிய தொழில்கள் அமைந்துள்ளன. அங்குத் தொழிலாளர் ஓய்வு எடுக்காமல் வேலை நாட்கள் எல்லாவற்றிலும் வேலைக்கு வந்தால் அதற்காகக் கூடுதலான சம்பளம் கொடுக்கிறார்கள். தொழிலாளியின் குடும்பத்தின் அளவு பெரிதாக இருந்தால் அதற்கென ஒரு சிறு அளவு அதிகமான சம்பளமும் வழங்குகின்றனர். இலாபம் ஆகியவற்றுக்கேற்ப 15% இலாபப் பங்கும் தொழிலாளர்க்கு உண்டு.

'வேலை நிறுத்தம்' என்பது ஜப்பானின் சிறு தொழிற்சாலைகள் கேள்விப்படாதது. மூன்று தொழிற்சாலைகள் மோட்டார் கார்களைச் செய்கின்றன. அந்தந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டும் சிறு சிறு உறுப்புப் பொருள்களைச் செய்துகொடுக்க 237 சிறு தொழிற்சாலைகள் உள்ளன.

(ஆதாரம்: அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யச் செய்தி நூல்கள்; மற்றும் சோமலெ எழுதியுள்ள 'உலக நாடுகள்')

தொழிலாளர்களின் கடமை - கண்ணியம்-கட்டுப்பாடு

"திராவிட முன்னேற்றக் கழகம் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளை வைத்திருப்பது போலவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்று சொல்கிறார்கள். உண்மையாகவே தொழிலாளர்களுக்கும் அது தேவை என்பதை நான் பெரிதும் உணர்ந்து வரவேற்கிறேன்.

கடமை - பாட்டாளிகளுடைய கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம், தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய கட்டுப்பாடு, தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக்கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

— அறிஞர் அண்ணா

மீன் வளர்ப்போம்

இந்தியாவில் வேளாண்மை செய்யும் பரப்பை அதிகரிக்கச் செய்வதற்கான முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதே போல் மீன் வளர்க்கும் நீர்ப்பரப்பும் நாளுக்கு நாள் அதிகரிக்கப்படவேண்டும். மீன் வளர்ப்புத் தொழில் ஓர் இயக்கம் போல வளருகின்ற நாள் எந்நாளோ, அந்நாளில் நம் உணவுப் பிரச்சினையில் பெரும் பகுதிக்குத் தீர்வு கிடைத்துவிடும்.

மீன் வளர்ப்பில் முதல் முக்கியத் தேவை நல்ல இன மீன் குஞ்சுகளாகும். மிக விரைவில் வளரக்கூடியதும் உண்பதற்கேற்றதுமான நல்ல இன மீன் வகைகள் இங்கு மிகவும் பற்றாக்குறையாக உள்ளன. நல்ல வகைகளை இலாபம் தரும் முறையில் வளர்ப்பதற்குப் புதுப்புதுத்தொழில் நுணுக்கங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் விரும்புகின்ற இன மீன்களில், குஞ்சுகளை உண்டாக்கும் பல நவீன முறைகள் ஆராயப்பட்டுக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. இந்த நவீன முறைகளில் குளங்களிலும், சிறுசிறு குட்டைகளிலும் மீன்களை வளர்க்கலாம். ஓர் இலட்சம் குஞ்சுகளை சுமார் 60 ரூபாய் செலவுக்கு மேற்படாமல் இம்முறையில் உற்பத்தி செய்யலாம்.

மீன் குஞ்சுகளை வெவ்வேறு இடங்களில் கொண்டு போய் வளர்ப்பதற்குக் குறைந்த செலவில் எப்படிக் கொண்டு போவது என்பதும் ஒரு பிரச்சினை. இடம் விட்டு இடம் அவற்றைக் கொண்டு போகும்போது அதிகமான மீன் குஞ்சுகள் இறந்து விடாதபடி எச்சரிக்கையுடனும், விரைவாகவும் எடுத்துச் செல்ல வேண்டும். நவீன முறைகளில் இப்போது மீன் குஞ்சுகளை எந்த இடத்திற்கும் சில மணி நேரங்களுக்குள் விமானம் மூலம் கொண்டு போய்ச் சேர்த்துவிட முடியும்.

முன்பெல்லாம் மீன் குஞ்சுகளை இடம் விட்டு இடம் கொண்டு செல்லும் போதும், பின்பு புதிய குட்டை, குளங்களில் அவற்றை வளர்க்கத் தொடங்கும்போதும் ஏராளமான மீன் குஞ்சுகள் மடிந்து வந்தன. இப்போது இடம் விட்டு இடம் செல்லும் போதுமீன் குஞ்சுகள் சாகாவண்ணம் பற்பல பாதுகாப்பு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால் நீர் நிலைகளில் ஆரம்பத்தில் சாகும் குஞ்சுகளின் எண்ணிக்கையை மட்டும் இன்னும் முற்றிலும் வெற்றிகரமாகத் தடுக்க முடியவில்லை. இதிலும் முழு வெற்றி காண மேலும் மேலும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தியாவில் ஒரு ஹெக்டார் பரப்புள்ள நீர் நிலையில் ஆண்டொன்றில் 500 கிலோ கிராம் மீன்தான் கிடைக்கிறது. சீனா, மலேசியா முதலான நாடுகளில் இதே அளவு நீர் நிலையில் ஓர் ஆண்டில் 5,000 கிலோ கிராம் உற்பத்தி செய்துவிடுகிறார்கள். இவ்விதம் நம் நாட்டில் மிகக் குறைவாக உள்ள நிலையை மாற்றி உற்பத்தியைப் பெருக்க எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தரக்கூடிய வேறு சில நீரில் வளரும் உயிரினங்களும் இருக்கின்றன. பிரான், தவளை முதலியவை அவ்வகையைச் சேர்ந்தவை. இவற்றைப் பண்ணை முறையில் வளர்க்கும் ஆராய்ச்சிஇதுவரையில் இந்தியாவில் செய்யப்பெறவில்லை. இருந்தாலும் ஏற்கெனவே நாம் ஏனைய நாடுகளுடன் போட்டி போட்டு இவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி, டாலர் சம்பாதித்து வருகிறோம். இயற்கையாக நமக்கு இப்போது கிடைத்து வரும் இந்த உயிரினங்கள் காலப்போக்கில் குறைந்து அழிந்து போய்விடாமல் இருப்பதற்காக அவற்றைப் பண்ணைகளில் பெருக்கம் செய்யும் முறைகளில் கவனம் செலுத்தவேண்டும். அறிவியல் முறையில் அவைகளை நீர்

நிலைகளில் பெருக்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்களுக்கு இப்போது அடிகோலப்பட்டு வருகிறது.

இந்தியாவில் உப்பங்கழிகளும் உப்பு நீர் நிறைந்த இடங்களும் மிகுதியாய் இருக்கின்றன. இங்கெல்லாம் ஏற்ற வகையில் மீன் பண்ணை நடத்துவதற்கான வழிகள் முறையாகக் கடைப்பிடிக்கப்படவில்லை. இதனால் உற்பத்தி மிகக் குறைவாகவும் சேதம் மிக அதிகமாகவும் இருந்து வருகிறது.

இத்துறையில் ஆராய்ச்சிகள் நடத்துவதற்காக மத்திய மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தினர் மேற்கு வங்காளத்தில் இரண்டு உப்பு நீர் மீன்பண்ணைகளை உண்டாக்கிப் பற்பல முறைகளையும் ஆராய்ந்து வருகின்றார்கள். அரசும், பொதுமக்களும், விவசாயிகளும் மீன் வளர்ப்புத் துறையில் கவனம் செலுத்தினால் இந்திய சமுதாயத்திற்குச் சத்துள்ள துணை உணவு தரும் பணியில் பெரிய முன்னேற்றம் காணமுடியும்.

—:o:—

நிலமங்கை சிரிப்பாள்

நம் உடல்மீது மெல்லிய ஈர்க்கினால் தடவும்போது உடல் சிலிர்த்து மயிர் எழுந்து நிற்பதை அறிவோம். நிலத்தாய்மீது கொழுமுனையாகிய தூவி படும்போது அவள் உடல் சிலிர்க்கிறது. அதனால் எழுந்து நிற்கும் உரோமத் தொகுதியே பயிர்கள் என்கிறார் மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள்:

''தூவியால் தம்முடல் நீவிடில் சிரிக்கும்
சிறுமிய ரென்னஅச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனம் கூசி
உடல்குழைந் தெங்கும் உவப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நகுவள்''

கொழுமுனையாகிய தூவியால் நிலத்தாயின் உடலை நீவிக்கொண்டே இருப்போம். அதனால் அவளும் சிரித்துக்கொண்டே இருப்பாள். நாமும் பல்வகை வளங்கொழிக்கும் பயிர்களைப் பெற்றுக்கொண்டே இருப்போம். நிலத்தாய்க்கு இடையறாது சிலிர்ப்பினை ஏற்படுத்திக்கொண்டே இருப்போமாக!

நான் பயிரிடுவது ஐ.ஆர்-8 நெல்

புதுவை உழவரின் அனுபவக் கூற்று:

''என்னுடைய நான்கு ஏக்கர் நிலங்களிலும் இனி ஐ. ஆர்—8 நெல்லைத்தான் பயிரிடப்போகிறேன்; சிறிது அதிகமாகவே எனக்குச் செலவேற்படினும், அதனால் எனக்குப் பெரும் ஆதாயம் கிடைக்கிறது!'' என மகிழ்ச்சி ததும்பக் கூறுகிறார் பாண்டிச்சேரியிலுள்ள மேட்டுப்பாளைய உழவர் திரு. இராமலிங்கம் அவர்கள்.

ஏனைய உழவர்களெல்லாம் சாதாரண விதைகளைக்கொண்டு பயிர் செய்து ஏக்கருக்கு 25 மூட்டைகளே அறுவடை செய்கின்றனர். ஆடுதுறை—27 நெல்லைப் பயிரிட்டவர்களுக்குக் கூட 35 மூட்டைகள்தாம் விளைச்சல் கிடைத்திருக்கக்கூடிய நிலையில், திரு. இராமலிங்கம் அவர்களோ, ஐ. ஆர்—8ஐப் பயிரிட்டு 56 மூட்டைகளை அறுவடை செய்துள்ளார்.

வேளாண்மை அலுவலர்கள் கூறிய யோசனைகள் அனைத்தையும் தவறாது பின்பற்றி முறையாகப் பயிர் செய்ததால் அவருக்கு ஏக்கர் ஒன்றில் 4190 கிலோ மிகு விளைச்சல் கிடைத்துள்ளது.

''ஐ. ஆர்—8க்கு அதிக உரம் தேவை. அதை நோய்கள் தாக்காமலிருக்கப் போதிய முன்னேற்பாடுகள் செய்யவேண்டும் என்று வேளாண்மை வளர்ச்சி அலுவலரும், ஊர்ப்பணியாளரும் எனக்கு யோசனைகள் கூறினார்கள். அவ்வாறே செய்ததால் எனக்குப் பெரும் பயன் கிடைத்தது'' என்கிறார் அவர்.

ஓர் ஏக்கருக்கு அவர் 24 வண்டி பண்ணையுரமும், கலவையுரமும் இட்டார். தவிர 100 கிலோ ராக் பாஸ்பேட், 105 கிலோ அம்மோனியம் சல்பேட், 999 கலவையுர இனத்தில் 75கிலோ ஆகிய உரங்கள் ஓர் ஏக்கரில் போடப்பட்டன. ஆறு முறைகள் பயிர்ப் பாதுகாப்பிற்கென மருந்து அடித்தார். ஐ. ஆர்-8ஐப் பயிர் செய்வதற்கு அவர் செலவிட்டது ரூ. 550. இது ஏனைய பயிர்களுக்கு அவர் செலவிட்டதைவிட ரூ. 250 மட்டுமே அதிகம். ஆனால் அவருக்குக் கிடைத்த மொத்த ஆதாயம் ரூ. 1700. இதில் செலவு போக எஞ்சிய ஆதாயமோ ரூ. 1150. நீங்களும் இந்த அரிய நெல் ஐ. ஆர்—8ஐப் பயிரிட்டு மிகு விளைச்சல் அடையலாமே!

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் — இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்;
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் — பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்.

— பாரதியார்



இந்த மொயிதீன் இருக்கிறாரே அவர் என்ன வேலை செய்திருக்கிறாரென்று உங்களுக்குத் தெரியுமா?

ஓர் அழகான பெரிய வீட்டை முதலில் கட்டிக் கொண்டுவிட்டார். பிறகு வீட்டிற்கு முன்னாலுள்ள பரந்த இடத்தில் அழகான செடி, கொடிகளை நட்டு வளர்த்து, வெளி வாயிற்படியிலிருந்து வீட்டு வாசல் வரை புல்தரையை அமைத்துக் கொண்டு, அதில் படகுபோன்ற காரைச் செலுத்திக் கொண்டுவந்து வீட்டில் ஒயிலாக இறங்க வேண்டுமென்று எண்ணினார். பகற்கனவல்ல; உண்மையாகவே நினைத்தார்.

பிறகு யோசனையிலாழ்ந்தார். அழகிய சோலைகளாலும், பசுமையான புல்தரையாலும் என்ன பயன்? 'அழகு அழகைத்தான் தரும். பயனைத் தராது' என்று தனக்குள் பேசிக் கொண்டார். மீண்டும் யோசனை!

இப்படிச் செய்தாலென்ன? ஐ. ஆர்-8 நெல்லைப்பயிரிட்டால் என்ன? அழகிற்கு அழகு; வீட்டிலுள்ளவர்களுக்கும் உணவு! செயலில் முனைந்தார்.



அதோ புறப்பட்டு வீதியிலே போகிறார், மொயிதீன்! எங்கே போகிறார்? அருகிலுள்ள ஓர் உறவினரிடம் ஐ. ஆர்-8 விதைகளை வாங்கத்தான் போகிறார்.

விதைகளைப் பெற்றுவந்து வீட்டிற்கு முன்புள்ள 6 செண்ட் நிலத்தில் பயிரிட்டுவிட்டார். நடுவில் ஓர் ஊற்றை அமைத்தார். அவரது வீட்டில் மேலுள்ள நீர்த் தொட்டியிலிருந்து அந்த ஊற்றுக்குள் நீர் சென்று 6 செண்ட் பயிரிலும் அது அழகாக நீரைத் தெளித்த வண்ணமிருக்கிறது. இதனால் அழகிற்கும் அழகு; பயிருக்கும் நீர்! வீட்டிலிருந்து கொண்டே ஊற்றின் அழகையும் ஐ. ஆர்-8 பயிரின் ஒய்யாரத்தையும் மாறிமாறிப் பார்த்து மகிழ்ந்தார். அளவிற்கு மிஞ்சிய நீரெல்லாம் சிமெண்டினால் சுற்றிலும் கட்டப் பெற்ற வடிகால்மூலம் வெளியேற்றப்பட்டது. நாட்கள் பயனுள்ள முறையில் கழிந்தன. அறுவடை நாள் மலர்ந்தது.



6 செண்ட் நிலத்தில் 150 கிலோ நெல் கிடைத்துவிட்டதே! அழகுச் செடிகளால், புற்களால் இந்த 150 கிலோ உணவைத் தரமுடியுமா?

மொயீதீன் எல்லையற்ற மகிழ்ச்சியில் திளைத்தார். வீட்டிற்கு முன்னாலுள்ள 6 செண்ட்டில் தான் இப்போது பயிரிட்டாரல்லவா? இனி வீட்டைச் சுற்றிலும் நெல்லையே பயிரிடவிருக்கிறார். வட்டார அலுவலர்கள் அவரது செயலைப் போற்றிப் புகழ்ந்தனர். நாள் தவறினும் பார்வையாளர்கள்மட்டும் அவர் வீட்டிற்கு வராமலிருந்ததில்லை. அவரது 'வீட்டு வயலை'ச் சிறிது நேரம் உற்று நோக்கிய பின்னர் அவர்கள் உவகையுடன் திரும்புவர்; மொயீதினையும் பாராட்டுவர். காரணம் வீட்டில் நெல்தோட்டம் போட்டவரல்லவா அவர்!

மொயீதின் எர்ணாகுளம் மாவட்டத்திலுள்ள (கேரளம்) எடப்பள்ளி வட்டாரத்தைச் சார்ந்த திரிக்காராவில் வாழ்பவர்.

[தீவிர விவசாயம் (Intensive Agriculture) இதழிலிருந்து.]

கடல் கடந்த நாடுகளில் தொழிலாளர்கள்

இரா. சனார்த்தனம். எம்.ஏ.,

மலரொடும் சோலை எனப் புகழத்தக்க மலேசியாவும், சிங்கம் நிகர் செயலவீரர் லீகோனி பிரதமராக இருக்கும் சிங்கப்பூரும், பட்டாலேயுப், வெளிநாட்டினரை வரவேற்கும் பாங்காக்கும், சிறந்து விளங்கும் 'தாய்' லாந்தும் தாய்லாந்தும் கண்டு வந்தேன். தொழிலாளர் திருக் கரங்களின் வலிமையால், அந் நாடுகளில் வாழ்வு உயர்ந்திருப்பதை நான் காண முடிந்தது.

மலேசிய நாடு இயற்கை எழில் மிக்க திருநாடு. தமிழகத்திலிருந்து சில நூற்றாண்டுக் காலத்திற்கு முன் சென்று குடியேறிய இரத் தமிழ் இளைஞரால்வளம் பெற்ற பெரு நாடு. நிறைந்திருக்கும் இரப்பர் தோட்டங்களின் பால் எடுத்துப் பிழைக்கும் தமிழர்களும், நகர்ப்புறங்களில் வணிகர்களாய்ச் சிறப்போடு வாழும் சீனர்களும், இராமப்புறங்களில் அமைதியாக வாழ்ந்து, அரசு 1972 வரை அளித்துள்ள முதல் உரிமைக் குடிகள் என்ற உரிமையை அனுபவித்து மகிழும் மலாய்க்காரர்களும், பிற சிறுபான்மைக் கோவாஸியர்களும், பிறரும் இந் நாட்டில் பெரும் அளவு இணைந்திருக்கிறார்கள்.

தொழிற்சங்க அமைப்பு, சீரோடு இந்நாட்டில் இயங்குகிறது. தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற முறையே பெரும்பாலும் பரவியுள்ளது. தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆன பெருஞ் சங்கம், தமிழ்த் தலைவர்களால் துவக்கப்பட்டுச் சிறப்போடு இயங்கி வருகிறது. தொழிலாளர் அனைவரும் இதில் இணைந்திருப்பதோடு, முதலீடு செய்து, தற்போது தொழிற்சங்கத்தின் சார்பில் 'எஸ்டேட்டுகள்' வாங்கும் அளவுக்கு வளர்ந்துள்ளார்கள். தோட்டத் தொழிலாளர் குழந்தைகள் பயிலப் பள்ளியும், தொழிற் கல்லூரியும், தங்கும் விடுதிகளும், உபகாரச் சம்பளமும் ஆக உதவிகள் இன்று பெருகியுள்ளன. திரு. நாயர் அவர்களும், தற்போது பினாங் நகரிலிருந்து நாடாளு மன்றத்திற்குப் பெரும்வாக்கு வித்தியாசத்தோடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. டேவிட் அவர்களும் தொழிலாளர் அணியில் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

தாய்லாந்தில் கடற்கரை ஓய்வு இடம்

தொழிலாளர் பிரச்சினைகளில் தொழிற்சங்க அமைப்புகள் நுணுகி ஆராய்ந்து செயல்படுகின்றன. முறையான அறிவிப்புகள், சுற்றறிக்கைகள், சங்கிலித் தொடர் போன்ற பிணைகள் தொடர்பு இவைகளே அவ்வமைப்புகளின் வெற்றிக்குக் காரணங்களாகும்.



சிங்கப்பூரில் கடலைத் தூர்த்து நிலமாக்குதல்

விவசாயத்தில்மலாய்க்காரர்களும், வணிகத்தில் சீனர்களும், வேலை வாய்ப்பு நோக்கித்தமிழர்களும் இருந்தாலும், தொழிலாளர் அணியில், கட்சி, இன வேறுபாடின்றி ஒற்றுமையுடன் செயல் படுகிறார்கள். வெவ்வேறு கிளைச் சங்கப் பொறுப்பாளர்களை ஆண்டுக்கொரு முறையேனும் ஒன்று திரட்டிப் பயிற்சி வகுப்புகள் நடத்தித் தொழிற்சங்க நடைமுறை விதிமுறைகளைப் பயிற்றுவிக்கின்றனர். இது பயனுள்ள செயலாக அமைந்துள்ளது.

மலேசியா அரசு, தற்போது காடுகளைத் திருத்திக் கழனிகளாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. புலி வாழ்ந்த காடுகள் தற்போது நெல் விளையும் வயல்களாக மாறிவருகின்றன. இதற்குத் திட்டமிட்டவர், துணைப்பிரதமர் திரு. துன் அப்துல் ரசாக்; அனுமதி வழங்கியவர் பிரதமர் துங்கு. சாகுபடிக்குப் புதிய நிலங்களை உருவாக்கி, விவசாயிகளைக் குடியேற்றி, தேவையான வசதிகளை வழங்கி, ஆரம்பகாலச் செலவிற்குப் பணஉதவியும் புரிந்து ஒரு விவசாயப் புரட்சியே அந்நாட்டில் நடந்து வருகிறது. அந்நாட்டில் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் குறைந்த பட்ச ஊதியம் 85 வெள்ளி கிடைக்கிறது. (1 வெள்ளி சுமார் $2\frac{1}{2}$ரூபாய்)



ஈபோவில் அண்ணாவிற்கு வரவேற்பு- சீனிவாசகம் சகோதரர்கள் - அமர்ந்திருப்பவர் மறைந்த டி. ஆர். சீனிவாசகம்

தொழிலாளர்களிடமும் உழைக்கும் வர்க்கத்திடமும் மக்கள் முன்னேற்றக் கட்சி (ம. மு. க) செல்வாக்குப் பெற்றுள்ளது. இது ஈப்போ பகுதி அளவே பரவியுள்ளது. இதன் தலைவராகவும், ஈப்போ நகர மன்றத் தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் விளங்குபவர் டத்தோ சீனிவாசகம் எனும் புகழ்பெற்ற வழக்கறிஞர் ஆவார்; இவரது தம்பி டி. ஆர். சீனிவாசகம் வழக்கறிஞர் தொழிலிலும், அரசியலிலும் புகழ்பெற்றவராகத் திகழ்ந்தார். சீனர்களது பெரும் ஆதரவு பெற்றவராக வாழ்ந்தார். அண்மையில் காலமானார். இவர்தான் ஈப்போ நகரில் அமரர் அண்ணா நினைவாகப் பாலம் அமைக்க முடிவெடுத்துச் செயலாக்கிய நல்லவர்.

தொழிலாளர்கள் இந்நாட்டில் ஒற்றுமையோடு செயலாற்ற முக்கியமான காரணம், சமுதாயத்தில் மொழியாலோ, இனத்தாலோ புறக்கணிக்கப்படாததும் ஒன்றாகும். மலாய் மொழிக்குத் தற்போது முக்கிய இடம் வழங்கி, உரோமன் எழுத்துக்களில் மலாய் மொழி நகரெங்கும் காணப்பட்டாலும், தமிழும், சீனமும், ஆங்கிலமும் உடன் இடம் பெற்றிருப்பதால், சம உரிமை உணர்வோடு, அவர்கள் வாழக் காரணமாயுள்ளது.

சிங்கப்பூர்த்தொழிலாளிகள் துறைமுகத்திலும், புதிதாக அமைக்கும் பெரிய ஏரியிலும், கடலைத்தூர்க்கும் காரியத்திலும், புதிதாக உருவாகிவரும் பெரும் தொழிற்சாலைகளிலும் அயராது பாடுபடுகிறார்கள். வேலை வாய்ப்பை உருவாக்குவதில் அரசு துணைபுரிகிறது. கார்களை வீதியில் நிறுத்தினால் கட்டணம் வசூலிக்கும் வேலையைத் தற்காலிகமாகச் சிலர் மேற்கொண்டுள்ளனர். அதில் பெண்களும் உண்டு. 'டோடோ' லாட்டரிச் சீட்டை வீதியில் விற்கும் வேலையும் சிலர் பெற்றுள்ளனர். 'ஓவர்டைம்' முறை ஒழிக்கப்பட்டு அதற்குப்பதில் அதிகமான ஆட்களை வேலைக்கமர்த்தும் வழக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது.

தொழிலாளர் நலனில் உள்ள அக்கறையோடு, தொழிலாளர்களுக்குச் சில கட்டுப்பாடுகளையும் அரசு வகுத்துள்ளது. அனுமதியில்லாமல் வேலைக்கு வராமல் போனாலோ, விடுமுறை தீர்ந்து குறித்த தேதியில் வேலைக்கு வந்துசேராது இருந்தாலோ வேலை நீக்கம் செய்யப்படுவது உறுதி. குடிசைகள் அழிக்கப்பட்டுத் தொழிலாளர்களுக்கு மாடிகளைக் கொண்ட பல குடியிருப்புக் கட்டடங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

மக்கள் பொது இடங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்ளும் அவசியம் உணர்த்தப்படுவதோடு, துண்டு சிகரெட்டை வீதியில் எறிந்தால்கூட ரூ. 200வரை கடுமையான தண்டனை வழங்கும் சட்டமும் இயற்றப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளால், தொழிலாளர்கள் உழைப்போடு, ஒழுங்காக வாழும் முறையையும் பேணி இருப்பதைக் காணமுடிகிறது.

தொழிலாளர்கள் ஒற்றுமையோடு முறையான தொழிற்சங்க அமைப்பில் தொடர்புகொண்டு, தேவையற்றுப் போராடாது, தங்கள் எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டு அமைத்துக் கொள்வார்களானால், நான் கண்டு வந்த நாடுகளில் அவர்கள் வாழ்ந்தும், அவர்களது நாட்டை வாழவைத்தும் வாழ்வது போன்றே, நமது நாட்டிலும் புதுநிலை ஏற்படும்.

விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஓர் நற்செய்தி!

A. G. சீனிவாசன்

இரும்பு, வர்ணம் & டால்மியா சிமெண்ட் வியாபாரம்

டிஸ்டிரிபியூட்டர்: 'பாக்ட்' யானை மார்க் கலப்பு உரங்கள்

புவனகிரி

நாங்கள் "தி பெர்டிலைசர் அண்டு கெமிகல்ஸ் திருவாங்கூர் லிமிடெட்" அவர்களால் புவனகிரியில் மொத்த விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

உங்கள் உரத் தேவைக்கு எங்களை அணுகுங்கள்.

தேவையான கலப்பு உரங்கள்,

- ❋ அம்மோனியம்
- ❋ சூப்பர் பாஸ்பேட்
- ❋ யூரியா
- ❋ பாக்டம் பாஸ், அல்ட்ராபாஸ்

எதுவானாலும் தேவையான உரங்கள் ரெடி ஸ்டாக்கில் கண்ட்ரோல் விலைக்கு வேண்டுமளவு கிடைக்கும்

A. G. சீனிவாசன்

இரும்பு வர்ண வியாபாரம்

மொத்த விநியோகஸ்தர்: FACT Ltd.

ஸ்டாக்கிஸ்ட்: ரவி பெய்ண்ட்ஸ் & டால்மியா சிமெண்ட்

புவனகிரி

மே நாள்

ஈரோடு தமிழன்பன்

பாடுபட்டுப் பாடுபட்டுப்
பாருய்ய வழிவகுக்கும்
பீடுற்ற தொழிலாளர்
நாளே வா - அவர்
பெருமையினை உணர்த்திட மே
நாளே வா!

காடழிந்து வயலாக்கிக்
கணக்கற்ற பயிர்விளைத்துத்
தேடி நலம் கொழிப்பவர் மே
நாளே வா - அவர்
தேய்பிறை நாள் நீங்கிட மே
நாளே வா!

முட்டாத பன்னலமும்
முடுகியெழச் செய்கரமே
கட்புலனும் இறைகரம்; மே
நாளே வா! அவர்
கண்ணீரை மாற்றிட மே
நாளே வா!

கட்டடங்கள் வாய்க்கால்கள்
கவின்நகரம் ஆக்கிநலம்
பட்டொளிரச் செய்பவர் மே
நாளே வா! அவர்
பண்புமனம் இன்புற மே
நாளே வா!

பார்க்குமிடம் எங்கெங்கும்
பாட்டாளி கைவண்ணம்
நேர்ந்திடுதல் நிகழ்த்திட மே
நாளே வா! அந்த
நேரியரின் தாள் தொழ மே
நாளே வா!

ஆர்க்கின்ற இயந்திரங்கள்
அளவற்ற தொழிற்பெருக்கம்
சேர்த்துநலம் சேரிப்பவர் மே
நாளே வா - அவர்
சிந்தையிலே மழைபொழி மே
நாளே வா!

வியர்வையிலே உலகநலம்
வித்துகின்ற தலைமக்கள்
உயர்வடைய முரசறை, மே
நாளே வா! உடன்
உலகமவர் கைவர மே
நாளே வா!

புயலெழுமே புரட்சியுடன்
பொன்னுனை அவர் நலனைக்
கயமையினால் புதைப்பினெனும்
நாளே வா! அவர்
காலடியே பூப்பொழி மே
நாளே வா!



பெய்யாதது - பெய்த மழை

சோம மகாதேவன்

இரவு வெகு நேரமாகிவிட்டது.

நாகமலைக் காடுகளையடுத்துப் பெரும் பாறைகள் உருண்டு கிடப்பதைப் போன்று அமைந்திருக்கும் அந்தக் கிராமத்தில் இன்னும் ஊரடங்கவில்லை.

அந்த நாள் அங்கே, திடீரென்று வந்து கூடிவிட்ட, சாதிமத பேதமற்றதொரு திருநாளாகத் திகழ்ந்தது. எல்லாருக்கும் எல்லாமே கிடைத்துவிட்டது போன்ற மகிழ்வு தெருவெங்கும் நிறைந்திருந்தது.

கடந்த ஓராண்டுக் காலமாகவே வானம் கண் திறக்காது, நீர் நிலைகளெல்லாம் வறண்டு, புல்பூண்டுகளும் கருகிப் போய், மக்களும், மாக்களும் வான் நோக்கிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த துயரம் தோய்ந்த சூழ்நிலையில் — இரண்டு தினங்களாக விடாது கொட்டிய மழை, 'போதுமா' என்று கேட்டுவிட்டு அன்றைக்குத்தான் ஓய்ந்தது.

தேவையானது கிடைத்து விட்டது; வேறென்ன வேண்டும்?

கிராமத்தில் ஒன்றிரண்டு விவசாயத் தோட்டங்களைத் தவிரப் பெரும்பாலானவை செம்பூரான் புன்செய் நிலங்கள். பருவத்தில் மழை பெய்து விட்டால், உடனடியாக மண் உலருவதற்குள் உழுது, வேர்க்கடலை விதைத்தாக வேண்டும்.

வீட்டுக்கு வீடு நீர்த்துளிகளைக் கண்டதும் பரபரப்புத்தான். பத்திரப்படுத்தியிருந்த விதைக் கடலைகளையெல்லாம் உடைத்து, முனை முறியாமல் பருப்புகளை எடுத்துச் சேர்ப்பதில் முனைந்தார்கள்.

கிராமத்தின் முகப்பிலேயே உள்ள கெட்டிக் கட்டடம் சாமிக்கண்ணு கிழவனுடையது. சற்றுப் பசையான புள்ளி. அன்றைக்கும் சரி...இன்றைக்கும் சரி, சோம்பல் இல்லாமல் பாடுபடுபவன். மண்ணைக் கிளறிக் கொண்டே இருப்பதில் அப்படியொரு பித்து அவனுக்கு; இல்லையென்றால் உடுத்திய துணியோடு நின்றவன் இந்த அளவுக்கு முன்னுக்கு வந்திருக்க முடியுமா?

கிழவனுக்கு ஒரே மகன் இரத்தினம். மகனைப் படிக்க வைத்துவிட வேண்டுமென்று அரும்பாடுபட்டான். இரத்தினம் முழுமையாகப்படிக்கவும் செய்யாமல், விவசாயத்திலும் மேனி வளையாமல், உதியமரமாக நின்று விட்டான். 'பிடிப்பு' ஏற்படாதா என்பதை எதிர்பார்த்து மகனுக்குக் கல்யாணத்தையும் செய்து வைத்து விட்டான் கிழவன். ஆனாலும் மாற்றம் தெரியவில்லை. இப்போது மகனைப்பற்றிய கவலைதான் கிழவனை உருக்கியே வருகிறது.

பகல் பூராவும் நனைந்த கையோடு உழுது விட்டு வந்த கிழவன், அவசரத்தோடு விதைக் கடலை மூட்டையைக் கூடத்திலே கொட்டி, முன்னால் உட்கார்ந்து விட்டான்.

விடிந்ததும் விதைத்துவிட வேண்டுமென்று ஊரே பரபரப்பாகஇருக்கும் போதாவது-பிறந்த மகன் தகப்பனுக்கு உதவியாக ஆகவேண்டிய காரியத்தைப் பார்க்கமாட்டானா? இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் இந்தக் கிழவனுக்குப் பாடுபடுவதற்கு வலு இருந்துவிடப் போகிறது?

வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, மருமகள் சிவந்தியோடு, கடலை உடைக்கவந்து உட்கார்ந்தாள் இராக்காயி.

வேலையிலே கவனமாக இருந்த கிழவன் ஏறிட்டுப் பார்த்தான். முகத்திலே கோபக்குறியே கூடி இருந்தது.

''அவன் எங்கேம்மா?''

''வெளித் திண்ணையிலே படுத்திருக்காரு!'' என்றாள் மருமகள்.

''படுத்திட்டாரா...'' என்று கேட்டுப் பெருமூச்சு விட்டான் கிழவன்.

''சோறுகூடத் திங்கலே...தலையை வலிக்குதுன்னு படுத்திருக்கான்'' என்று சொல்லி மகனுக்காகப் பரிந்து வந்தாள் இராக்காயி.

''காலநேரம் பார்த்துத்தானே அவனுக்கு எல்லாமே வரும். நாளைக்கி ஒரு பொழுதுக்குள்ளே மேலக்காடு பூராவும் விதைச்சாகணும். அதிலே அக்கறை இருக்கா அவனுக்கு''.

''எல்லாம் இல்லாமலா இருக்கு.''

''இருக்கும். என் கண்ணுக்குப் பின்னாலே அவன் என்ன ஆகப்



போறானோ, அதையும் நீ இருந்து பாக்கத்தான் போறே!'' என்றான் கிழவன்.

இராக்காயிக்குக் கோபம் வந்துவிட்டது.

''என் தலையை உருட்டலேன்னுந் தான் உங்களுக்கு அடையாதே'' என்றவள் மருமகளின் பக்கமாகத் திரும்பி, ''போம்மா சிவந்தி! அவனை எழுப்பிக்கிட்டு வா. கண்ணைத் திறக்க முடியாட்டியும் முன்னாலே குந்தி இருக்கட்டும்'' என்றாள் இராக்காயி.

சிவந்தி சொன்னதைச் செய்வாள். அதற்குமேல் அவளுக்கு ஒன்றும் தெரியாது.

எழுந்து முகத்தைத் துடைத்துக் கொண்டே தலைவாசலுக்குச் சென்றாள்.

கிழவன் கடுகடுப்போடு இராக்காயியை ஏறிட்டுப் பார்த்தான்.

''நாம இருக்கிறவரைக்கும் சரி தான். அதுக்கப்புறம் இந்தக் காடு கரையை மகன் கட்டிக்காக்கப் போறான்னு நினைக்கிறியா? வேர்வையைச் சிந்திச் சம்பாரிச்ச சொத்து... என்ன ஆகப் போகுதோ?''

''அவனவனுக்குப் புத்தி இருக்கத் தான் இருக்கும்'' என்று சொல்லி இராக்காயி மேலும் ஆரம்பித்த போது, சிவந்தி திரும்பிவிட்டாள்.

''திண்ணையிலே படுக்கைதான் கிடக்கு அவங்களைக் காணலியே'' என்று சொல்லி நின்றாள்.

வந்து வாய்ந்த மருமகளும் இப்படி அப்பாவிப் பெண்ணாகவா இருக்க வேண்டும்!

''வாழ வந்த பொண்ணு, புருசனைத் திண்ணையிலே பாய்விரிச்சுப் படுக்கவிடலாமா? இதைக்கூடவா நாங்க சொல்லி நீ தெரிஞ்சுக்கணும்'' என்று கேட்டான் கிழவன்.

சிவந்தி மட்டியைக் கடித்தவாறு தலைகுனிந்து நின்றாள்.

''படுத்துக் கிடந்தவன் — எங்கே போயிட்டான்'' என்று வியப்போடு ஆரம்பித்தாள் இராக்காயி.

''தலைவலிக்கி மருந்து தேடிப் போயிருப்பான்; போற இடத்தைச் சொல்லிக்கிட்டுப் போக முடியுமா?''

''உங்களுக்கு எல்லாமே குத்தமாத்தான்படும்'' என்ற இராக்காயியைச் சுட்டெரித்து விடுவதுபோலப் பார்த்தான் கிழவன்.

''சொல்றது புரியலையின்னு பேசாமலாவது இருந்து தொலையேன். நான் உழைச்சு ஓடாகிப் போயிட்டேன். சீக்கிரம் போயிடுவேன். பின்னாலே நீயும் சேர்ந்துதான் தலையிலே கையை வச்சுக்கப்போறே'' என்று சொல்லிக்கொண்டிருந்த போதே, வாசலிலிருந்து யாரோ அழைக்கும் குரல் கேட்டது.

கிழவன் எழுந்து, மேல்துண்டைத் தலையில் கட்டிக்கொண்டு வாசலை நோக்கி நடந்தான்.

தலையாரி கூத்தப்பன் திண்ணையோரமாக நின்றுகொண்டிருந்தான்.

''இந்த நேரத்திலே, ஐயனார் கோவில் தோப்பிலே நம்ம தம்பி இரத்தினம் சூதாடிக்கிட்டு இருந்திருக்கு. போலீசுக்குத் தெரிந்து, வளைச்சுப் பிடிச்சுக்கிட்டாங்க'' என்று தகவல் சொன்னான் தலையாரி.

கிழவன் சிலையாக நின்றுவிட்டான்.

மருமகளோடு வந்து நின்ற இராக்காயி...''பாவி...மகனே...இது என்ன கர்மமடா?'' என்று அலறினாள்.

''புறங்கையைக் கட்டி — லாரியிலே ஏத்திக்கிட்டுப் போயிட்டாங்க; நாட்டாமைக்காரரு உங்ககிட்ட சொல்லச் சொன்னாரு'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான் தலையாரி.

''நீங்க சொல்லி வாய் மூடலையே மாமா...வினை வந்து மூண்டிடுச்சே'' என்று சொல்லி அழுதாள் சிவந்தி.

''சுடுசொல் கேட்காதவனாச்சே... நான் பெத்த மகன் எங்கே நின்னு எப்படித் தவிக்கிறானோ. நின்னுட்டிங்களே, நாலு பேரைக் கூட்டிக்கிட்டுப் போங்க'' என்று பதறினாள் இராக்காயி.

கிழவன் ஒன்றும் பேசாமலே வீட்டிற்குள் நுழைந்து, மறுபடியும் கடலைக் குவியலுக்கு முன்னால் உட்கார்ந்துவிட்டான்.

''என்னங்க பேசாம இருந்தா எப்படி'' என்று கேட்டுக்கொண்டே மருமகளோடு பின்னால் ஓடி வந்தாள் இராக்காயி.

கிழவன் பதட்டமில்லாமல் சொன்னான்.

''மண்ணைக் கிளறிப் பாடுபடுறவங்களுக்காகத்தான் மழையே பெய்யுது. சம்சாரி வீட்டிலே பிறந்தும், எல்லாத்தையும் மறந்து, இந்த நேரத்திலே

சூதாடப் போனவன், அதுக்கான தண்டனையை அனுபவிச்சுத்தான் ஆகணும். இந்த முத்திரைதான் அவனைத் திருத்தப் போகுது'' என்றவன் மீண்டும் வேலையில் முனைந்தான்.

மகனைப் பெற்றவளும், கொண்டவளும் இரவெல்லாம் அழுது கொண்டே இருந்தார்கள்.

எதையும் காதில் வாங்கிக்கொள்ளாமல், கிழவன் சாமிக்கண்ணு அயராது கடலை உடைத்துக்கொண்டிருந்தான். பொழுது விடிந்தால் விதைப்பு நடந்தாக வேண்டுமே அவனுக்கு!



புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இதுஎனதெ'ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
'ஒருபொருள்தனி'எனும் மனிதரைச் சிரிப்போம்!

இயல் பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்.

— பாவேந்தர் பாரதிதாசன்

நீர்ப் பாசனம் பெறுமல் மழையை நம்பிச் செய்யும் விவசாயம் புன்செய் வேளாண்மை எனப்படும். நீர்ப் பாசனம் பெறுத இந்நிலங்களில் விவசாயம் செய்யச் சில இடங்களில் குழாய்க் கிணறு முதலியன தோண்டி அடிமட்ட நீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மற்றும் சில இடங்களில் இவ்வித வசதிகள் சிறிதும் இல்லாமல் முற்றிலும் மழையை நம்பியே விவசாயம் செய்ய வேண்டியிருக்கும். சிந்து, கங்கைச் சமவெளியில் உள்ள நீர்ப்பாசனம் பெறுத நிலங்களை முதலில் சொல்லியதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

ஆண்டு தவறுமல் பருவக் காற்று மழையைப் பெறக்கூடிய பல பகுதிகள் நம் நாட்டில் இருக்கின்றன. அப்பகுதிகளில் மழைக் காலத்தில் ஏராளமான தண்ணீர் இருக்கும். ஏனைய காலங்களில் அங்கு வறட்சி மிகுந்து காணப்படும். இதற்கு எடுத்துக் காட்டாகக் கேரளக் கடற்கரைப் பகுதிகளைக் கூறலாம். அங்கு டிசம்பர் முதல் மே வரையில் தண்ணீர்ப் பற்றுக்குறை அதிகமாக இருக்கும்.

புதுமை காண்போம்

அடுத்த படியாக, மழைகுறைவான பல பகுதிகள் நம் நாட்டில் இருக்கின்றன. அங்கு எப்போதுமே தண்ணீர்ப் பற்றுக்குறை இருந்து கொண்டே இருக்கும். இப்படிப் பட்ட இடங்களில் மழைக் காலத்தில் பெய்த மழைத் தண்ணீரை மட்டும் நம்பித்தான் பயிர்கள் விளைவிக்க வேண்டியிருக்கும். இங்கு மழை நீரின் ஈரத்தை இயன்றவரை பாதுகாத்து அறுவடைக்கு முன்பு பயிர் காய்ந்து சேதமாகிவிடாதபடி வழி வகைகளை உண்டாக்குவது அவசியமும், அவசரமும் ஆனதாகும். இதற்கு எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் எல்லா இடத்திற்கும் ஒரே மாதிரியானதாக இருக்கமுடியாது. ஆனாலும் நிலத்தில் ஈரப்பதத்தைத் தங்கச் செய்தல், நிலவெளியில் உள்ள வறட்சியைத் தவிர்த்தல், காற்றாலும் வெப்பத்தாலும் தண்ணீர் ஆவியாவதைக் குறைத்தல் ஆகியன பற்றிய நடவடிக்கைகள் எல்லா இடத்திற்கும் பொருந்துவனவே ஆகும். பயிர்களின் வேர்ப் பகுதியில் எப்போதும் ஈரப்பதம் இருந்தால் விளைவு நன்ருய் இருக்கும். வறண்ட வட்டாரங்கள் அனைத்திலும் இந்த ஒன்றை நினைவில் வைத்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முனையவேண்டும்.

புன்செய் வேளாண்மையில் புதிய முன்னேற்றம் உண்டாக்கப் பல வழிகள் உள்ளன. (1) கிணறு முதலியன தோண்டிப் பாசன வசதியை அதிகரிக்கச் செய்தல் (2) நிலத்தில் கிடைக்கும் தண்ணீரையும் ஈரப்பதத்தையும் பேணிக் காத்து விரைவில் வறட்சி ஏற்பட்டு விடாதபடி செய்தல் (3) இயன்ற இடங்களில் செயற்கை மழையைத் தூண்டி விடுதல்.

இப்படிப்பட்ட செயல்களுக்கெல்லாம் நிறையப் பொருள் செலவிட வேண்டும். இப்போது இருக்கும் குறைந்த அளவு வசதிகளைக் கொண்டு என்ன செய்யலாம் என்பதில் நாம் முதலில் விரைந்து கருத்துச் செலுத்த வேண்டும். இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி தொழில் நுணுக்க அறிவும் பெருகிய பின் ஏனையவற்றைப் பற்றிச் சிந்திக்கலாம்.

இன்றுள்ள நிலையில் மழைத்தண்ணீரைப் புன்செய் நிலத்தில் வேகமாக வற்றிவிடாதபடி காக்க முதலில் சில ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். மழைத் தண்ணீர் நிலத்தில் விழுந்ததும் வேகமாக வழிந்தோடி விடாதபடியும், விரைவில் ஆவியாக மாறிவிடாதபடியும் நாம் அதைப் பேண வேண்டும். இதற்கு நிலத்தின் மட்டத்தைச் சரிப்படுத்தி வைத்துக் கொள்வது ஒரு வழியாகும். எருதுகளைக் கொண்டு இழுக்கக் கூடிய மண்வாரி இயந்திரங்கள் இன்று இருக்கின்றன. சுமார் 4 ஹெக்டார் நிலம் வைத்திருக்கக்கூடிய எந்த விவசாயியும் இவ்வகை இயந்திரங்களைவாங்கிப் பயன்படுத்தமுடியும். கொத்தனர் உபயோகப்படுத்தும் நில மட்டக் கருவியை வைத்துப் பார்த்து நிலத்தை இந்த மண்வாரி இயந்திரத்

தின் உதவியால் சரிப்படுத்தி மழைத் தண்ணீர் விரைவில் வெளியேறி விடாதபடி முதலில் செய்து கொள்ள வேண்டும். நிலத்தில் தேங்குகின்ற மழைத் தண்ணீர் மண்ணுக்குள் அதிக ஆழம் இறங்கினுல்தான் சூரிய வெப்பத்தால் அது வேகமாக ஆவியாகாதபடி இருக்கும். வயலில் அடி மண் பொடிந்தும், இளக்கமாக இருப்பதும் இதற்கு அவசியம். அப்படி இருந்தால்தான், வேர்களும், தண்ணீரும் சுலபமாக ஆழத்தில் இறங்கும். இதனைச் சாதிப்பதற்கு ஆழமாக உழக்கூடிய நவீனக் கலப்பைகள் பல இருக்கின்றன. அக் கலப்பைகளைக் கொண்டு உழுதால் அடிமட்ட மண் நன்ருக இளகிக் கொடுத்துத் தண்ணீரை உள்ளுக்குள் புகவிட்டுத் தேக்கி வைத்துக் கொள்ளும்.

பல காலமாக நாம் உபயோகித்து வந்த கலப்பைகள் மேல்பகுதி மண்ணை மட்டிலும் கிளறிவிடும் தன்மையில் இருந்தன. இதனுல் பல இடங்களில் பூமிக்குப் பத்துப் பதினைந்து செண்டி மீட்டருக்குக் கீழ் உள்ள பகுதி, கெட்டியான அடை போல் ஆகிவிட்டது. இப்படிக் கெட்டிக்கப்பட்ட இடங்களில் ஆழமாக வேர்விடக் கூடிய பருத்தி முதலான பயிர்களுங்கூடத் தம்முடைய வேரை உள்ளுக்குள் செலுத்த ஆற்றலற்றுப் போய் விடுகின்றன. பூமியில் அடி மட்டத்திலுள்ள தண்ணீரும் இந்தக் கெட்டியான அடை காரணமாக மேல் மட்டப் பயிருக்கு உதவாமல் தடுக்கப்பட்டு விடுகிறது. மழை பெய்யும் காலங்களில் மழைத் தண்ணீர் கீழே இறங்காதபடி இந்த அடைகள் தடுத்து நிறுத்திவிடுகின்றன. சில சமயங்களில் இந்த அடைகளில் உள்ள வெடிப்புக்களின் மூலம் மழைத் தண்ணீர் உள்ளே சென்றலும் அடையில் கீழ்ப் பகுதியில் வேர் மண்டலம் செல்லாத காரணத்தால் அத்தண்ணீர் பயிர்களுக்குப் பயன் படுவதில்லை. இந்த விதத்தில் உள்ளுக்குள் இறங்கிய தண்ணீர்தான், சிந்து கங்கைச் சமவெளிகளில் அடிமட்ட நீராக இன்று காணப்படுகின்றன. பல காலமாகச் சேர்ந்து போன அந்தத் தண்ணீரைத்தான் நாம் இப்போது இப் பகுதிகளிலிருந்து குழாய்க் கிணறுகள் இறக்கி வெளிக் கொண்டு வந்து பயிரிட முயற்சி செய்து வருகிறோம்.

அடி நிலம் அடைபோன்று கெட்டி ஆகிவிட்ட பகுதிகளில் இயந்திரக் கலப்பைகளைக் கொண்டு ஆழமாக உழுது உடைத்துவிட்டால் பயிர்களின் வேர்கள் கீழே இறங்குவதோடு அடிமட்ட நீரும், பயிருக்குக் கிடைக்கும். மேல் பரப்பில் விழுகின்ற மழைத் தண்ணீரும் பூமிக்குள் ஆழமாக இறங்கி அதிக நாள் தேங்கி நின்று பயிருக்கு உதவும். அண்மையில் இராஜஸ்தானத்தில் சில பகுதிகளில் ஜூலையில் பெருவெள்ளமும், ஆகஸ்டில் வறட்சியும் ஏற்பட்டது போன்று மோசமான வறட்சி நிலை ஏற்படாது.

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமையா !
ஏழை என்றெருவன்—உலகில்
இருக்க லாகாதையா !
— கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

மே நாள் வரலாறு

1884 அக்டோபர் 7ஆம் நாள் அமெரிக்கா, கனடா நாட்டிலுள்ள தொழிற் சங்கங்களின் சம்மேளனம் 1886 மே 1ஆம் தேதியிலிருந்து எட்டு மணி நேர வேலையைச் சட்ட பூர்வமாக ஒரு நாள் வேலை என வற்புறுத்த வேண்டுமென முடிவு செய்தது; இதற்கெனத் தீர்மானமும் நிறைவேற்றியது. இத் தீர்மானம், அமெரிக்கா, கனடா நாடுகளில் உள்ள தொழிற் சங்கங்கள் மே 1ஆம் தேதி 8 மணி நேர வேலைக்காக நீண்ட வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டியிருக்கும் என எச்சரித்தது.

வேலை நிறுத்தப் போராட்டங்களின் மையமாகச் "சிகாகோ" நகரம் விளங்கியது. பால்டிமோர், வாஷிங்டன், மில்வாக்கி, சின்சினுட்டி, செயின்ட் லூயி பிட்ஸ்பார்க், டெட்ராய்ட் மற்றும் பல நகரங்களும் வேலைநிறுத்தத்திலிறங்கின.

சிகாகோ நகரம்தான் தீவிர உணர்ச்சி கொண்ட தொழிலாளிகளின் இயக்கத்தைக் கண்டது. மே 1ஆம் தேதிசிகாகோவில் நடந்த வேலை நிறுத்தம் அது வரை தொழிற்சங்க இயக்கம் கண்டிராத போராட்டமாக நடந்தது.

ஹேமார்க்கட் சம்பவம் எனக்கூறப்படும் மிகப் பெரிய நிகழ்ச்சி, மே 3, 4 தேதிகளில் நடந்தது. இது மே தின வேலை நிறுத்தத்தின் தொடர்ச்சியே ஆகும். மே 5ஆம் தேதி ஹேமார்க்கட் சதுக்கத்தில் நடந்த ஆர்ப்பாட்டம் அடக்குமுறைக் கண்டன ஆர்ப்பாட்டமாகும். மே 3ஆம் தேதி மெக்கார்மிக் ரீப்பர் தொழிற்சாலையில் நடந்த வேலைநிறுத்தத்தை அடக்கப் போலீஸ் 6 பேரைச் சுட்டுக் கொன்றது. பலரைக் காயப்படுத்தியது. இந்த அடக்குமுறையை எதிர்த்தே மே 4ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஹேமார்க்கட் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் நடந்து முடிவுறுந்தருவாயில் போலீஸ் தலையிட்டுத் தாக்கியது. அச்சமயம் கூட்டத்திற்குள் ஒருகுண்டு வீசப்பட்டது. இதனுல் ஒரு சார்ஜன்ட் இறந்து போனுர். இதைத் தொடர்ந்து கைகலப்பு, தொழிலாளிகளுக்கும் போலீசுக்கும் ஏற்பட்டது. இதன் விளைவாக 7 போலீஸ்காரர்களும் 4 தொழிலாளர்களும் இறந்தார்கள்.

ஹேமார்க்கட்டில் நடந்த இந்த இரத்தக் களறிக்குப்பின், முதலாளிகள் வன்முறையிலிறங்கினர். தொழிலாளர்கள் தலைவர்கள் பலர் தூக்கிலிடப்பட்டார்கள்; பலர் சிறை வைக்கப்பட்டார்கள்.

மீண்டும் 1888ஆம் ஆண்டில் அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் செயின்ட் லூயி நகரில் மாநாடு நடத்தியது. அதில் 8 மணிநேர வேலை நாளை வற்புறுத்தி இயக்கம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. இந்த இயக்கத்தை, அரசியல் முறையில் மே 1ஆம் தேதி நடத்தும் வழக்கம் தொடர்ந்தது. 1891-ம் ஆண்டுமே முதல் நாடுதழுவிய வேலை நிறுத்தம், வேலை நேரத்தைக் குறைக்க வேண்டுமென நடத்தப்பட்டது.

அமெரிக்கத் தொழிலாளர்களின் போராட்டத்தின் வளர்ச்சி கண்டு தொழிலாளர்களின் அகிலம் ஊக்கம் பெற்றது.

"உலகம் முழுதும் எல்லா நாடுகளிலும் நகரங்களிலும் குறிப்பிட்ட ஒரே நாளில் உழைப்பாளி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தவேண்டும். இந்தத் தினத்தில் 8 மணி நேர வேலை நாளைச் சட்டமாக்கவும், அரசாங்கத்திடம் கோரவேண்டும்" என அகிலம் முடிவெடுத்தது.

அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம் 1889 மே 1ஆம் தேதியை விரிவாக நடத்தத் திட்டமிட்டிருப்பதால், இதையே அனைத்து நாடுகள் தினமாகக் கொண்டாடுவது என்று அகிலம் முடிவு செய்தது. அவ்வாறே ஆண்டுதோறும் மே முதல் நாள், மே நாளாகக் கொண்டாடப்படுகிறது!

வீட்டு நலமே நாட்டு நலம்

1. நாட்டின்பால் பற்றுமிக்க நண்பரே! நங்கையரே!
நானென்று சொல்லுகிறேன்—இதைப்
கேட்டுமது மனத்தில் போட்டுவைப் பீராயின்
கேடுகளை வென்றிடுவீர்—பள்ளம்
மேடுகளைத் தாண்டிடுவீர்.

2. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்தவை
வகுத்தலும் வல்லதரசாம்—இதைப்
பயிற்றலும் பாங்குடன் நடத்தலும நாட்டினர்
பயனுறும் பணியல்லவோ ?—நாடு
நயனுறும் வழியல்லவோ ?

3. உணவுப்பொருள் பெருக்கி உயர்மட்ட மடைந்தோம்
உடைகளை நெய்துகுவித்தோம்—அவை
அனைவர்க்கும் எளிதாகக் கிடைக்காத வகையினில்
அடித்ததே சனப்பெருக்கம்—எங்கும்
வெடித்ததே மிகவருத்தம்.

4. கல்விக்குப் பள்ளிகள் மிகப்பல படைத்தோம்
கற்பவர் பெருகுகின்றுர்—இருந்தும்
கல்விக்கண் திறக்காத பல்லாயிரம் பாமரர்
கதியற்றே உழலுகின்றுர்—அறிவு
நிதியற்றே சுழலுகின்றுர்.

சலகை ப. கண்ணையா

5. பலப்பல பணிகளும் புதுப்புதுத் துறைகளும்
படைக்குறார் அரசினரே—எனினும்
மிகப்பல லட்சம்பேர் தொழிலெதும் கிடைக்காமல்
திகைக்குறார் தியங்குகிறார்—பசி
வதைப்பதால் மயங்குகிறார்.

6. நிலையிதை மாற்றவும் நெருக்கடி தீர்க்கவும்
நெறியொன்று கண்டனரே—நாடு
நலம்பெறக் குழந்தை பெறுவதை யளவோடு
நிறுத்திடல் வேண்டுமென்றார்—துயர்
துடைத்திடல் வேண்டுமன்றோ?

7. வீட்டுநலமே வாழும் நாட்டுநலம் என்பதை
விளக்குக உறவினர்க்கும்—திட்டம்
தீட்டும் நிலைபுரிந்து செயலினில் நடத்தினால்
கூட்டுமே இன்பமெல்லாம்—வளம்
காட்டுமே உலகமெல்லாம்.

8. நல்லுணவும் உடையும் நாகரிகம் மாடுமனை
நலந்தரும் கல்வியறிவும்—தொழில்
செல்வமும் வசதியும் எல்லாரும் பெறவகை
செய்தலே குடிவளமாம்—அதனை
எய்தலே சமநெறியாம்.

9. மனதுக்கு மகிழ்வோடு உடலுக்கும் எழிலோடு
இனிமைக்குச் சில பெறுவீர்—வறுமைக்
கனலுக்குப் பலியாகி குடிமைக்குச் சுமையாகும்
கருவினைத் தடுத்திடுவீர்—குடும்ப
உருவினைச் சுருக்கிடுவீர்.

10. பகுத்தறியும் பண்பினை மனிதர்கள் தமக்கென
பரிந்தளித் தானேஇறைவன்—அது
வகுத்திடும் வழியினில் குடும்பத்தை யமைத்து
வலுப்படுத் தலேமுறைமை—வீட்டை
வளப்படுத் தலேதிறமை.

உருளைக்கிழங்கு கெடாதிருக்க என்ன வழி?

உருளைக்கிழங்குகளைப் பயிர் செய்வோருக்கு இதோ சில அரிய யோசனைகள். இவற்றைக் கையாண்டால் உருளைக்கிழங்கை நெடுநாட்களுக்குக்கெடாமல்பாதுகாத்து உயர் விலைக்கு விற்றுப்பெரும் ஆதாயத்தை ஈட்டலாம். நீங்கள் அடுத்தமுறை உருளைக்கிழங்கை அறுவடை செய்கையில் கீழ்க்காணும் முறைகளைக் கையாளுங்கள்:

நன்கு முற்றிய கிழங்குகளையே அறுவடை செய்யுங்கள்.

தண்டுகளையும், ஏனைய சொரசொரப்பான பகுதிகளையும் நன்கு நீக்கி விடுங்கள்.

சுத்தமான, ஈரம் அதிகமில்லாத கிழங்குகளே பாதுகாத்து வைத்திருக்கச் சிறந்தவை.

சிறிதளவு மணல் தூவப்பட்டு, நல்ல காற்றோட்டமுள்ள குளிர்ந்த இடங்களில் உருளைக்கிழங்கைச் சேமிக்கவேண்டும்.

அழுகிய கிழங்குகளை அவ்வப்போது அகற்றி விடுவதோடன்றி மணலையும் அடிக்கடி உலரவிடவேண்டும். குறைந்தது பதினைந்து நாட்களுக்கொரு முறையேனும் கிழங்குகளைச் சோதித்துப் பார்த்தல் மிக நன்று. விதைக்காகப் பயன்படுத்தப்படவிருக்கின்ற கிழங்குகளின்மீது டி. டி. டி. அடிக்கலாம். அதனால் எவ்விதக் கெடுதலும் இல்லை. ஆனால் விற்பனைக் கெனவும் உணவிற்கெனவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள கிழங்குகளின்மீது டி.டி.டி. அடிக்கலாகாது.

ஒரு குவிண்டால் எடையுள்ள உருளைக்கிழங்கிற்கு 'கை ஜி. 33-ஏ' (Geigy 33-A) போதுமானதாகும். இதை உலர்ந்த சிவப்பு மண்ணுடன் கலந்துவிடவேண்டும். சிறிது மணல் தூவப்பெற்ற இடத்தின் மீது கிழங்குகளைப் பரப்பி, அதன்மீது மேற்கண்ட இரசாயன மருந்து கலந்த மண்ணை இலேசாகத் தூவுங்கள்.

மேற்கூறப்பட்டுள்ள முறையில் பாதுகாக்கப்பட்ட கிழங்குகளை, மூங்கில் கூடைகளிலும் நிரப்பிவைக்கலாம். வெளியிலுள்ள வெப்பநிலை மிகுதியாக இருந்தால், உருளைக் கிழங்குகளின்மீது மணலைக்கொட்டி மூடவேண்டும். கிழங்குகள் சேமிக்கப்பட்டுள்ள அறைகளிலுள்ள கதவுகளையும் சன்னல்களையும் பகல் வேளைகளில் மூடிவிடவேண்டும். இரவில் சில மணிநேரங்கள் அவற்றைத் திறந்து வைக்கத் தவறக்கூடாது.

அறுவடை செய்யப்பட்ட உருளைக் கிழங்குகளைத் திறந்த வெளியில் அதிகநேரம் வைத்திருக்கக்கூடாது. அவ்வாறு செய்வதால் கிழங்குகளை நோய்கள் தாக்கி அதனால் அவை அழுகிவிட நேரும்.

கிழங்குகளை அதிகநேரம் காற்றிலோ, சூரிய ஒளியிலோ வைத்திருந்தால், அவற்றின் தரம் வெகுவாகக் குறைந்து விடுவதோடன்றி, விதைகளாகப் பயன்படுத்துவதற்குரிய தகுதியையும் அவை திண்ணமாக இழந்து விடுகின்றன. கிழங்குகளை அதிக உயரமாகக் கொட்டிவைக்கலாகாது.

விதைக்காகப் பக்குவப்படுத்தப்பட்டுள்ள கிழங்குகளைக் கோணிகளில் நிரப்பி வெளியிடங்களுக்கு அனுப்பவே கூடாது. சில நேரங்களில் அவை கவனக்குறைவாகக் கையாளப்படுமானால், விதைகளுக்குப் பெரும் தீங்கு ஏற்பட வழியுண்டு.

நல்ல ஒளியுள்ள, திறந்த, குளிர்ந்த இடங்களில் உருளைக்கிழங்கு விதைகளைப் பரவலாகக் கொட்டிப் பாதுகாக்கவேண்டும்.

மேற்கண்டமுறைகளைக்கையாண்டு உருளைக்கிழங்குகளை நன்கு பாதுகாத்துப் பெரும் பயனடையத் தவறாதீர்கள்!



உற்பத்தித் திறன் பெருகிட...

• காட்டூர் கோபால் •

'மே நாள்' உலக நாடுகளின் உழைப்பாளர் திருநாள். தமிழகத்தைப் பொறுத்தவரை 1967-க்குப் பின், தனிச் சிறப்புப் பெற்ற நாளாக மெருகேறியுள்ளது. 'மே நாளி'னைத் தற்போதைய தமிழக அரசு விடுமுறை என்று அறிவித்ததால்மட்டுமா என்றால், அதனால் மட்டுமல்ல. தமிழகத்தின் மிகப்பெரும் தொழில் நகரமான கோவைத் திருநகரில், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் 1-5-1967 அன்று மே விழாவில் உரையாற்றும்போது ''நான் தொழிலாளர் கூட்டத்தில், அதுவும் உழைப்பாளர் பெருநாளில் மேநாளில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற பொறுப்புடனேயே பங்கு பெறுவதில் ஏற்படுகிற மகிழ்ச்சி ஒன்றே போதும், என் வாழ்நாள் முழுவதும் நினைத்து மகிழ. நாளையே இந்த முதலமைச்சர் பதவி இல்லாமற்போய்விடினும் கூடக் கவலை இல்லை'' என்று தெரிவித்தார்கள்.

அது மட்டுமல்ல; ஏறிய விலைவாசியை இறக்கமுடியாமல் மக்கள் திணறடிக்கப்பட்டுப் பல ஆண்டுகளாக இருந்த கடுந்தொல்லை குறைகிற வகையில் 'படி அரிசி'த் திட்டம் நடைமுறைக்கு வருவதை அண்ணா அவர்கள் அறிவித்த திருநாள் அன்றுதான்.

தொழிலாளர் நலம் பெருகுவதன் மூலம்தான், உற்சாகம் மிக்க உழைப்பு பிரதிபலிக்க முடியும்; உற்சாக மிக்க உழைப்பின்மூலம்தான் உற்பத்தித் திறன் பெருகும்; உற்பத்தி உயரும்; ஊதியம் உயரும்; எங்கும் சக்தி வளரும்; சமுதாயம் முழுமைக்கும் வளமான வாழ்வுக்கு வழி கிடைக்கும். எந்த நாட்டின் முன்னேற்றமும், அந்த நாட்டின் தொழில் வளர்ச்சியை ஒட்டித்தான் அமையும். தொழில் வளர்ந்திடத் தொழிலாளர் நல்வாழ்வு வாழ்ந்தாக வேண்டும். தொழிலாளர் சமுதாயம் நல்வாழ்வு வாழ்ந்திடத் தொழில்கள் வளர்ந்தாக வேண்டும். இவை இரண்டும் ஒன்றுக்கு மற்றொன்று ஆதாரமாகும். ஒன்று இல்லையேல் மற்றொன்று இல்லை. ஒன்று வீழ்ந்து மற்றொன்று வாழ்ந்திட முடியாது. ஒன்றை எதிர்த்து மற்றொன்று வாழ்ந்திட முடியாது. தொழிலாளர்களை ஏமாற்றி நசுக்கித் தொழில்கள் வளராது. தொழில்கள் நசித்துத் தொழிலாளர்கள் வாழ்ந்திட முடியாது. எனவேதான், தற்போதைய தமிழக அரசு 'வாழ்க தொழிலாளர்; வளர்க தொழில்கள்' என்கிற அடிப்படையில் இயங்கி வருகிறது.

இன்றையத் தமிழகஅரசு, தன்னாலியன்றவரை, உழைக்கும் சமுதாய நலனைப் பெரிதெனப் பேணிக் காரியமாற்றிவருகிறது. இதனால், தொழிலாளர்கள் உள்ளத்தில் நல்ல நம்பிக்கை ஒளி ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், கடந்த சில ஆண்டுகளாகத் தொழில்களில் 'தேக்க நிலை' இருப்பதாகப் பேசப்படுகிறது. இது உண்மையல்ல. இரண்டொரு தொழில்கள் தவிர, ஏனைய தொழில்களில் எந்த மாறுதலும் பரவி இருப்பதாகக் கூறமுடியாது. குறிப்பிட்ட அந்த இரண்டொரு தொழில்களில் கூடத் 'தேக்க நிலை' என்பது பொருந்தாது. ஒரு விதமான மந்த நிலை ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நிச்சியமாகத் தேக்கநிலை இல்லை. என்ஜினீயிரிங் தொழிலில் மிகப் பெரிய தொய்வும் நெருக்கடியும் ஏற்பட்டு அந்தத் தொழிலே நசித்துக் கொண்டிருப்பது போலப் பேசப்படுகிறது. உண்மை நிலையைத் தக்க புள்ளி விவரங்களுடன் ஆராய்ந்து பார்த்தால், 1965ஆம் ஆண்டு உற்பத்தியை விட 1966லும், 1966ஆம் ஆண்டு உற்பத்தியைவிட 1967லும் தொடர்ந்து உற்பத்தி உயர்ந்திருப்பதனைக் காண்கிறோம். இத் தொழிலில் வெளிநாட்டு ஏற்றுமதிகூடப் பெருகி இருப்பது குறிப்பிடத் தக்கது.

இதுபோன்றே பஞ்சாலைத் தொழிலும் பெருத்த நெருக்கடி ஏற்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. பெரிது படுத்தப்பட்டுள்ள பயங்கரமான நிலை உண்மையல்ல. என்றாலும் 27 பஞ்சாலைகள் மூடப்பட்டும், பதினாறாயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்தும் பெரிய என்ஜினீயரிங் தொழிற்சாலையான 'டெக்ஸ்டூல்' தொழிற்சாலை வேலை பாதிக்கப்பட்டு மூவாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு உள்ளதும் உண்மையே! ஆலைகள் மூடப்பட்டதற்கு யார் காரணம்? என்ன கர்ரணம்? பருத்தித் துணி ஆலைகளுக்கு இந்தியா முழுவதிலுமேயே நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே, அதில் ஒரு பாகமாக, ஒரு பகுதியாக இருக்கும் தமிழகத்திலும் இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு மனிதனுக்குச் சராசரித் துணித் தேவை 32 கெஜம். ஆனால் இந்தியாவில் தற்போதைய சராசரி உற்பத்தியோ 18 கெஜம். ஆனால் செலாவணி 16 கெஜம்தான். தேவையை விடப் பாதிதான் உற்பத்தியாகிறதென்றாலும், அதுகூட முழுமையாகச் செலாவணியாவதில்லை. எதனால்? அந்த அளவிற்குக்கூட இந்திய மக்களின் வாங்கும் சக்தி வளராததால்; தேவை அளவின் பாதி உற்பத்தியாவதில்கூடத் தேங்கி வருகிற நிலை நீடிக்கிறது. டெர்லின் டெர்ரி காட்டன் உபயோகம், பொருளாதாரச் சூழல்-நாணயக்குறைப்பு- பஞ்சு பற்றாக்குறை- கச்சாப்பொருள் விலை ஏற்றம் - உள்ள பஞ்சினைப் பகிர்ந்து எடுத்துக்கொள்கிற சீரான முறை இல்லாத நிலைமை- நூல்வியாபாரத்திலும் முறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கொள்கை இல்லாமை - பற்றாக்குறை முதலீடு- சரியான இயந்திரப் பராமரிப்பற்ற நிலை- இயந்திரப் புணரமைப்புக்கு உரிய தருணத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை - தவறுதலான நிர்வாகம்- ஆலைத் தொழிலுக்கு (லைசென்ஸ்) அனுமதி வழங்கியதில் கொண்டிருந்த தவறான கொள்கை - நூலின் மீது போட்ட அதிகமான சுங்கவரி- நூற்பு ஆலைகளாக மட்டுமே இருந்து வருகிற நிலைமை - இந்தக் காரணங்களினால் ஆலைகள் மூடப்பட்டனவே தவிர, தற்போதைய அரசு காரணமென்று கூறுவது சரியானதன்று.

மூடப்பட்ட பஞ்சாலைகளினால், வேலை இழந்து தவிக்கும் பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள் படுகிற அவதி நீக்கிடத் தன்னாலான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாக உடனடிப் பரிகாரம் — நிரந்தரப் பரிகாரம் ஆகிய இரண்டுவகைக் காரியங்களுக்கும் முயற்சிகளை மேற்கொண்டது. பொருளாதார நிபுணர் டாக்டர் லோகநாதன் அவர்கள் தலைமையில் ஒரு நிபுணர் குழுவினை அமைத்து ஆராய்ந்து $1\frac{3}{4}$ கோடி ரூபாய் வரை உத்திரவாதக் கடன் அளிக்கிற ஏற்பாடுகளை மேற்கொண்டது. நிரந்தர ஏற்பாடுகளுக்கெனப் பஞ்சாலை நிறுவனம்(Textile Corporation) அமைத்து, அதன்மூலம் ஆலைகளை ஏற்று நடத்தியாவது அல்லனும் தொழிலாளர்கள் அவதி நீங்கிடத்தக்க பணிகளுக்கு முயற்சி நடைபெற்றுவருகிறது. இதற்கிடையில் மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தொழிலாளர்களின் உதவித்தொகையாக இரண்டு லட்சம் ரூபாய் அளித்தார்கள். கோவையில் அனைத்துத் தொழிற் சங்கங்களும் கூடி, வேலையிலிருக்கும் ஆலைத் தொழிலாளர்களின் 2 நாள் ஊதியத்தொகையை மூடிய ஆலைத் தொழிலாளர்களுக்கான உதவித் தொகையாகத் தருவதாகவும், அதற்கு ஈடான தொகையைத் தமிழக அரசு தர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதனை, இன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்கள் ஏற்றுக்கொண்டு உடனடியாக அதற்கு ஒப்புதல் அளித்தது, தொழிலாளர் துயரில் அரசும் சமபங்கு ஏற்றுக்கொள்வதை தெள்ளத்தெளிய எடுத்துக் காட்டுகிறது.

மூடப்பட்ட ஆலைகளினால் கடுஞ் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இத்தகைய ஏற்பாடுகள் முழுமையான பலனைத்தராவிட்டாலும், முழுமையான பரிகாரம் கிடைத்திடத்தக்க முயற்சிகள் வெற்றியடைய வாழ்த்துவோம்.

நாட்டில் ஏற்பட்டுவரும் மக்கள் தொகைப் பெருக்கமும், நிலவி வரும்

தனி நபர் வருமானம், தேசீய வருமானம் இவைகளில் பற்ருக்குறையும் பொருளாதாரச் சீர்கேடும், நாம் எண்ணுகிறபடி முன்னேறுவதற்கான வழிவகைகளைக் காலம் கடத்துவதாக அமைந்துள்ளன.

நாட்டுவளம் பெருகிடத் தொழில் துறையிலும் விவசாயத்துறையிலும் விரைவான முன்னேற்றத்திற்கு வழிவகைகளைக் கடைப்பிடித்தாக வேண்டியுள்ளது. சகல துறைகளிலும் உற்பத்தித் திறன் பெருகிட, நம்மாலியன்ற சேவையைச் செய்ய வேண்டுவது இன்றைய அவசர அவசியத் தேவையாகும். போதிய அளவில் இதுவரை கவனம் செலுத்தப்படாத விவசாயத் துறையில் உற்பத்தித் திறன் பெருகிட வழி காண வேண்டும். விவசாயத்துறையில் உற்பத்தித் திறன் பெருகுவதால் உணவுப்பற்ருக் குறையைப் போக்கிடவும், நல்ல விளைச்சல் காணவும் வழிகோலப்படும். உற்பத்தித் திறன் வளர வளர உற்பத்தி பெருகும். உற்பத்திச் செலவினம் குறையும். உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகளில் நமது உற்பத்திப் பொருளுக்கு நல்ல கிராக்கி இருக்கும். இதனுல் நம தொழில் பெருகும். தொழில் வளம் வளருவதால், வேலை வாய்ப்பு அதிகரிக்கும். மொத்தத்தில் பொருளாதார வளம் பெருகும்! வறுமை நீங்கும்! வாழ்வு மலரும! தொழிலாளர் நலம் பெருகும்! வளர்க தொழில்கள்! வாழ்க தொழிலாளர்கள்! வெல்க தொழிலாளர் அரசு!

‘சீரணி’ வருகிறது !

கோவையிலும், தஞ்சையிலும் பாதைபோடுவதில் ஆயிரக் கணக்கான சீரணித் தொண்டர்கள் பங்கெடுத்துக் கொண்டனர்; இது பல பேருக்குத் தெரியாது. காரணம் நாம் செய்கின்ற பணிக்குச் சரியான விளம்பரம் இல்லை. எப்படிப்பட்ட நல்ல படம் என்ருலும், சிறந்த நடிகர்கள் நடித்திருந்தாலும் விளம்பரம் கவர்ச்சிகரமாகக் கொடுக்கப்படவில்லையென்ருல் படம் நன்ருக ஓடுவதில்லை. சினிமாப் படங்களுக்கே இந்த நிலை என்ருல் தொண்டுள்ளம் கொண்டவர்களை ஊக்குவிக்கவும் தொண்டு செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தவும் நிறைந்த அளவில் விளம்பரம் தேவை. அரசு சார்பில் வெளியிடப்படும் “கிராம நலம்” பத்திரிகை ‘சிரணி’ என்ற பெயருடன் வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொள்கிறேன். இது மற்றப் பத்திரிகைகளைப்போல் வெளியிடங்களில் உள்ள எல்லாக் கடைகளிலும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சீரணிப் பணிகள் பற்றிய செய்திகள் நிறைந்த அளவில் இனி இந்தப் பத்திரிகையில் இடம் பெறும்.

— மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
மா. முத்துசாமி

[தீயணைப்புப் பயிற்சி பெற்ற சீரணித் தொண்டர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கிய விழாவில்]



ஊரை உருவாக்குவோம்

தேனீக்கள் கூடுகட்டும் போது எதைக் கருதிக் கட்டுகின்றன? அவற்றிற்கு உண்டு களிக்கத் தேன் தேவை. மலர்கள்தோறும் துளித்துளி தேன் இருக்கிறது. சில பருவங்களில் தேனீக்களுக்கு நிரம்பத்தேன் கிடைக்கும். சில பருவங்களில் கிடைக்காது. ஆகவே, அவை முன் எச்சரிக்கையாக ஒன்றுசேர்ந்து, தேனைத் திரட்டிக் கூட்டில் கொண்டு வந்து சேர்க்கின்றன. அந்தத் தேனை நம்பி அவை அங்கே வாழ்ந்து வருகின்றன. அது ஒரு சிற்றூரைப் போல் விளங்குகிறது. சிற்றூர் என்ருல் பல மக்கள் கூடிவிட்டால் போதுமா? ஒருவரோடு ஒருவர் பழகிப் பொது நன்மையைக் கருதி ஒத்துப்போனுல்தான் அது ஊராகும்.

முதலில் ஒரு பொருளைத் தாமே நுகரவேண்டும் என்று தொடங்கிய முயற்சி, போகப் போகத் தாமும் தியாகம் செய்யவேண்டும் என்ற பரந்த நோக்கத்துக்கு இடம் அளித்தது. தன்னலனுக்காக ஒன்றைச் செய்வதைவிடப் பொது நலனைக் கருதி அதைச் செய்யவேண்டும்; இதுதான் உயர்ந்த நோக்கம். நம்மைச் சுற்றியிருப்பவர்களெல்லோரும் வாழ்ந்தாலன்றி நாம் பிறவி எடுத்து ஒரு பயனும் இல்லை என்ற எண்ணம் மனித உள்ளத்தில் தோன்றியது. இதிலிருந்து இம்மை என்பது முக்கியமன்று, மறுமையே உண்மை என்ற உணர்வும் ஏற்பட்டது. ஆகவே, வாழ்நாளெல்லாம் தானே உண்டு களிப்பதைவிட்டு மனிதன் மனமாரப் பொருளை வழங்கலானுன். எனவே, ஊர் என்ருல், மக்கள் ஒருவரோடொருவர் பழகி இம்மையையும் மறுமையையும் ஒன்றெனக் கருதித் தன்னலமற்று ஓர் இடத்தில் வாழ்வதைத்தான் குறிக்கும். மக்களின் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது; பண்டைக் காலத்தில் மனிதன் காட்டு விலங்குகளை வேட்டையாடிப்

மூலம்:— தாகூர்

தமிழாக்கம் த.நா.சேனுபதி

பிழைத்துவந்தான். அதனால் ஊர் என்பது உருவாகவில்லை. உணவு கிடைக்கும் என்ற உறுதி இல்லாததால் அப்போது ஒவ்வொருவரும் தனித்தனியே உணவை நாடி அலைய வேண்டியிருந்தது. அன்றைய நிலையில் மக்கள் கொடுமைமிக்கவர்களாகவும் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்டவர்களாகவும் இருந்து வந்தார்கள். சமூக ஒழுங்குக்குக் கட்டுப்படாத வாழ்க்கை அது. இந்த நிலையில் ஊர் எப்படி உருவாகும்?

பெரிய பெரிய ஆற்றங்கரையோரந்தான் மனிதனுக்கு வேண்டிய உணவுப் பொருள் நிலையாகவும், தங்குதடையின்றியும், மிகுதியாகவும் கிடைத்தது. இப்படித்தான் நைல், யாங்ஸிகியாங், ஆக்ஸஸ், யூஃப்ரடீஸ், கங்கை, காவிரி, தாமிரவருணி, யமுனை முதலிய ஆற்றங்கரையோரங்களில் சிறந்த நாகரிகங்கள் தோன்றின; மக்கள் ஒன்றுகூடி வாழத் தலைப்பட்டார்கள்; ஊர்கள் இவ்விதமே உருவாயின. ஒரே இடத்தில் ஆற்று வண்டல் படிந்த மண்ணிலே, ஆண்டுதோறும் மனிதன் உழுது பயிரிடத் தொடங்கியதும் ஏராளமான விளைவு கிடைத்தது. உடனே பல மக்கள் அதே இடத்தில் நிலையாகத் தங்கிவிட்டார்கள். இப்படி ஊர் என்று ஏற்பட்டதும் மக்கள் ஒருவரை ஒருவர் வழிப்பறி செய்து பிழைப்பதைவிட ஒத்துவாழ்ந்தால் அனைவரும் பயன் காணமுடியும் என்பதைக் கண்டு கொண்டார்கள். உணவுத் தானியம் மிகுதியாகப் பயிரிட்டுக் குவிக்கும் வாய்ப்பு ஏற்பட்டதும் ஒன்றுகூடிப் பழகுவதுதான் மனிதனுக்கு இயல்பானது என்ற உண்மை புலனாயிற்று. நிலமடந்தையின் அழைப்பை ஏற்று, ஒரே இடத்தில் பலரும் கூடி, இலை போட்டு உண்டு களிக்கலானார்கள். அப்போது ஒருவரையொருவர் உடன் பிறந்தவராகக் கருதும் மனப்பாங்கு ஏற்பட்டது. பல உயிர்கள், ஒரே உணவின் வாயிலாக இறைவன் ஒருவனே என்ற தத்துவத்தை எல்லாம் ஓர் உயிர் என்ற உண்மையை உணர்ந்தன என்றால், அது சிறப்பில்லையா? அப்போது ஒருவரோடொருவர் பழகுவது நல்லது மட்டுமன்று, அதில் மகிழ்ச்சியும் உண்டு என்று கண்டு கொண்டார்கள். இதனால் ஒருவருக்காக மற்றவர் பொருளைச் செலவிடவும் ஏன், உயிரையேகூடக் கொடுக்கவும் முடிந்தது.

நிலமடந்தை நமக்கு அளிக்கும் உணவு அல்லது தானியம் வயிற்றை நிரப்புவதற்காகமட்டும் ஏற்பட்டதன்று; அதை நாம் கண்குளிரப் பார்த்து நிறைவுபெற முடிகிறது; நம் உள்ளத்தைக்கொள்ளை கொள்கிறது. பயிர் செழித்துத் தொங்கும் அந்தக் காட்சி இந்த அடிவானத்தினின்று அந்த அடிவானம் வரையில் கதிரவனின் கிரணங்கள் பொன்னொளி பரப்புவது போல் கண்ணுக்கு எட்டுகிறமட்டும் அறுவடைக்குத் தயாராகப் பொன்வண்ணத் தானியக் கதிர்கள் கண்ணைக் கவர்கின்றன. இந்த இரண்டும்சேர்ந்து பொன்னான இன்னிசை எழுப்பி நம் உள்ளத்தைக் கவர்ந்து நமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன. இந்தக் காட்சியைக் காணும் போது மனிதன் சும்மா சாப்பாட்டைப்பற்றியா எண்ணிக் கொண்டிருக்கிறான்? விழாக் கொண்டாட ஏற்பாடு செய்கிறான்; அங்கே திருமகளைத் தானியலட்சுமியின் வடிவில் காண்கிறான். அவள் ஒரே சமயத்தில் கண்ணுக்கு இனியவளாகவும் இருக்கிறாள்; எல்லோருக்கும் நன்மையும் அளிக்கிறாள். நிலமடந்தை அளித்த இந்த உணவுக் களஞ்சியம் பட்டினியைப் போக்க மட்டுமா பயன்படுகிறது? அதனிடம் உள்ள அழகென்னும் அமுதத்தையும் கண்ணால் உண்டு களிக்கிறோம். மரத்தில் பழம் பழுத்துத் தொங்கும் காட்சி, நம்மை அது அழைப்பது போல் இருக்கிறது; உள்ளே அடங்கியிருக்கும் ஊட்டம் தரும் சுவையான பகுதியை உண்ணமட்டுமா அது நம்மை அழைக்கிறது? தன் உருவம், சுவை, நிறம், மணம் எல்லாவற்றையும் நுகரத்தான் அப்படி அழைக்கிறது! அடித்துக் கொன்று வழிப்பறிப்பதிலுள்ள கொடுமை அதில் இல்லை; 'எல்லோரும் என்னைப் பறித்து உண்ணுங்கள்' என்பது போலத்தான் அது நம்மை அழைக்கிறது. நிலமடந்தை நமக்கு அளிக்கும் உணவுத் தானியக் கதிர் கண்ணுக்கு அழகாக இருப்பது போல், மக்கள் ஒன்றுகூடி வாழ்வதும் அழகிய காட்சிதான். ஒருவன் தன்னந்தனியாக உண்ணுகிறான் என்றால்,

அவன் தன் வயிற்றை நிரப்பிக்கொள்கிறான் என்று பொருள்; நாலைந்துபேர் சேர்ந்து உண்ணும்போதோ கூட்டுறவு ஏற்படுகிறது. இப்படி ஒருவரோடொருவர் கலந்துபழகும் போது சோறு சமைக்கும் பாண்டமும் அழகாகத் தோற்றம் அளிக்கிறது; இலை போட்டுப் பரிமாறும் விதமும் மனத்துக்குப் பிடித்திருக்கிறது. எல்லாம் ஒழுங்காகவும் தூய்மையாகவும் அமைந்திருக்கின்றன என்ற நிறைவும் ஏற்படுகிறது.

வறுமை இருக்கும் இடத்தில்அள்ளி வழங்க யாருக்கு மனம் வரும்? ஆனால் வழங்குவதுதான் மனித சமூகத்துக்குச் சிறப்பு. ஆகவே, நிலமடந்தையின் உணவுக் களஞ்சியத்துக்கு அருகிலேயே மக்கள் கூடி வீடு வாயில் அமைத்துக்கொண்டு வசிக்கலானார்கள். இப்படி அனைவரும் கலந்துபழகியதால், அவர்களிடையே என்றென்றும் நிலைபெறக்கூடிய அறவொழுக்கம், இலக்கியம், இசை, சிற்பக்கலை இவற்றைக் குறித்து நீடித்த முயற்சி எல்லாம் தொடங்கின. கூட்டுறவினால் மனித சிந்தனை வளர்ந்தது; ஆழ்ந்த சிந்தனையின்மூலம் அவன் தன்னை உணர்ந்தான். தன் முழு உருவமும்—மனிதப் பண்புதான்—இன்னதென அவனுக்குத் தெரிந்தது.

கிராமங்கள் தோன்றிய பின் நகரங்கள் தோன்றலாயின. இந்த நகரங்களில் அரசாங்க அதிகாரம் தலைதூக்கியது. அங்கே படையரண்கள், வாணிகர்களின் பண்டகசாலைகள், கல்விப் பயிற்சிக்குரிய இடங்கள், அதைக் கற்கவும் கற்பிக்கவும் பல இடங்களிலிருந்து வந்து ஒரே இடத்தில் ஆசானும் மாணாக்கனும் தங்கியிருக்க வசதி, தொலைவிலுள்ள நாடுகளைப் பற்றி அறிந்து கொள்ளும் வாய்ப்பு, வெளிநாட்டு மக்களுடன் வாணிகம்—இப்படி யாவும் ஏற்பட்டன. புல்கூட முளைக்காத கட்டாந்தரையில்—கற்பாறைகள் பரந்து கிடக்கும் இடத்தில்—மக்கள் காலந்தள்ளுவது எளிதன்று. அங்கே வலியவனும் வலியவனும் போரிட்டால் அவர்களுள் எவன் மிக்க வலிமையுள்ளவனோ அவன் கைதான் ஓங்கும். அவனுக்கு அடங்கித்தான் மற்றவர்கள் வாழ வேண்டியிருக்கும். மனித தனிசுதந்திரத்தை அதிகமாக அடக்கிவிட்டால், தனி மனிதனுடைய ஆற்றலுக்கும் வழி இல்லாமல்போய்விடும். ஊக்கம் இருந்தாலன்றோ ஆற்றல் ஏற்படும்? தனி மனிதனுடைய சுதந்திர ஆர்வம் பொங்கி எழும் போது பெருத்தமாறுதல்நேருகிறது. பொதுமக்களை அது தட்டி எழுப்பி ஊக்கிவிடுகிறது. ஒருவரைப் பார்த்து ஒருவர் போட்டி போட்டுக்கொண்டு முன்னுக்குவர முயல்கிறார்கள். அறிவுத் துறை, செயல்துறை, இரண்டிலும் புதிய புதிய சிந்தனைக்கு வழிஏற்படுகிறது. இப்படிப் பல நாட்டு மக்களின் சிந்தனையும் இணைவதால் கல்வி வசதி பெருகுகிறது.

ஆயினும், நகர வாழ்க்கையை நரக வாழ்வாக்கும் முயற்சிகள் தோன்றுகின்றன. புகைக் கொடியைப்பறக்க விடும் ஆலையின் சங்கொலி கேட்கிறது; பணத்தாசை காட்டி மக்களை அமைதியான கிராமச் சூழ்நிலையிலிருந்து மயக்கி அழைக்கிறது, இயந்திர பூதம். இதனால் இன்று மனிதன் மீண்டும் பண்டை நிலைக்கு இழிந்துவிட்டான். பண்டையில் காட்டுமிராண்டியாக வாழ்ந்தபோது தன்னலத்தையே முக்கியமாகக் கருதி வந்தான். அந்தத் தன்னலமே இன்று பேராசை என்னும் பெரும் பூதமாகக் காட்சியளிக்கிறது. தனக்குச் சொந்தமாக இன்ப மாளிகை கட்டிக் கொண்டு, மனிதன் பிறர் உடலை உறிஞ்சித்தான் கொழுக்கிறான். பழங்காலத்து வழிப்பறிக் கொள்ளைத் தொழில் புதிய உரு எடுக்கிறது. கிராமங்களில் மட்டும் என்ன? முன்னே தாம் சேர்த்த பொருளைத் துய்த்து இன்பமாகப் பொழுது போக்குவதற்காகக் கிராமங்களில் மக்கள் கூடுவார்கள்.

நாமே உண்டுகளித்து வாழ வேண்டும் என்ற எண்ணம் மேலிடும்போது நாம் பிறருக்கு அடிமைப்படாவிட்டாலும் நம் அகந்தைக்கு அடிமைகள் ஆகிறோம். முன்பு பணக்காரன், தான் ஈட்டிய பொருள் பிறருக்கும் பயன்படவேண்டும் என்று எண்ணி வந்தான். ''செல்வம் என்பது எல்லாருக்கும் பொதுவானது; நாம் அந்தப் பொதுச் சொத்துக்குத் தருமகர்த்தன்'' என்ற முறையில் நடந்து கொண்டான். ஒரு மான அவமானம் நேர்ந்தபோது தன்னை அண்டினவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுவான். இன்றுபோல்

கதவை அடைப்பதில்லை! அன்று அனைவருக்கும் பொதுவாக இருந்த உணவுப் பொருளை இன்று பேராசை காரணமாகப் பணக்காரன் தன்னிடமே குவித்து வைத்துக்கொண்டு கொள்ளை இலாபம் அடிக்கப் பார்க்கிறான். முன்பு மக்கள் சமுதாயத்தை ஒன்று சேர்த்த அதே உணவுப் பொருள் இன்று அதை இரு கூறாகப் பிளக்கப் பயன்படுகிறது!

இன்று நாம் செய்ய வேண்டியது, மக்களை இணைத்து அவர்களிடையே கூட்டுறவை வளர்ப்பதுதான். உள்ளார்ந்த அன்புடன் தனிப்பட்ட முயற்சியினாலும், பொது முயற்சியினாலும் நகரத்தையும் கிராமத்தையும் இணைத்து நிறைவுக்கு வழிகோல வேண்டும். விஞ்ஞான அறிவை, இயந்திர நுட்ப முறையை ஆக்க வழியில் பயன்படுத்தி இத்தகைய பொது நலனைக் கண்ணாரக் கண்டு மகிழ வேண்டும் என்பதே என் அவா.

அதிக மகசூல் தரும் இரகங்கள்

முன்பெல்லாம் புன்செய் நிலங்களில் வறட்சி நிலையையும் தாங்கிக் கொண்டு பலன் தரக்கூடிய பயிர்கள் எவையோ அவைகளை மட்டுமே விவசாயிகள் பயிரிட்டார்கள். உளுந்து, கடலை, கேசரிப் பருப்பு முதலியவைகளே புன்செய்க்கேற்ற பயிர்களாகக் கருதப்பட்டன. இப் பயிர்கள் அவற்றிற்கு வேண்டிய நைட்ரஜனையும் சொந்தமாகவேஉண்டாக்கிக் கொள்ளும் தன்மையுடையனவாதலால், இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இன்று ஆழமாக உழக்கூடிய இயந்திரக் கலப்பைகளும் மற்றும் பல கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் நிலத்தின் தன்மையையே மாற்றிஅமைத்து இன்னும் அதிக இலாபமும், அதிக மகசூலும் தரக்கூடிய பயிர்களை நாம் விளைவிக்க முடியும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது தவிர, அதிகமான வேர்களைப் பரப்பியும் தண்ணீரைப் பிடித்து வைத்துக் கொள்ளும்படி அகலமான இலைகளைக் கொண்டும் அதிக மகசூல் தரக் கூடியனவாகவும் விளங்குகிற வீரிய வித்துக்கள் இன்று பற்பல பயிர்களிலும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. உதாரணமாக, தைச்சுங் நேட்டிவ்—1 இரக நெற்பயிர் குறைந்த ஈரப்பதமுள்ள இடங்களிலும் கூட வறட்சியைச் சமாளித்து வளரக் கூடியதாய் இருக்கிறது. அதே போலச் சோளத்திலும், கம்பிலும் சி. எஸ். எச்.—1 எச். பி.—1 என்ற இரகங்கள் வறட்சி நிலையிலும் அதிக மகசூல் தந்து வறட்சி நிலைமையைச் சமாளித்து வருகின்றன. சி. எஸ். எச்.—1 சோளம் குறைந்த காலத்தில் அதிகப் பலன் தரக்கூடியது. எனவே, ஆந்திரப் பிரதேசத்திலும், மைசூரிலும், மஹாராஷ்டிராவிலும், காலக் கிரமமாக வறட்சி நிலவுகிற பல பகுதிகளில் இந்தச் சோளப் பயிர் ஒரு வரப்பிரசாதம் போல் இருக்கிறது. உளுந்து, துவரை மற்றும் பல அவரையினப் பயிர்களிலும் இது போல அதிக மகசூல் தந்து வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய பல வீரிய வித்துக்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

இரு போகங்கள்

வறட்சியான பகுதிகளில் மழைத் தண்ணீரை இயன்றவரை பாதுகாக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால் இரண்டு போகம் பயிரிடுவதும் சாத்தியமாகும். இதற்குப் பயிர்களைத் தேர்ந்தெடுப்பதில் கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும். வறட்சி ஏற்படுவதற்கு முன்பே கதிர் பிடித்து விடக்கூடிய வித்து இரகங்களைத் தேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும். பலவகைத் தானியங்களிலும் இப்போது வறட்சி நிலையிலும் பயிரிடக்கூடிய குறுகிய கால வித்துக்கள் உண்டாக்கப்பட்டிருக்கின்றன.

1. சேலம் மண்டலச் சீரணியைத் தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு மு.கருணாநிதி அவர்கள் துவக்கி வைக்கிறார்கள். (6-4-69)



2. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு முதல்வரிடம் சீரணித் துவக்க விழா மலரை அளிக்கிறார்.



3. சீரணியினரின் ஊர்வலத்தை மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள் காணுகின்றனர்



1. சேலம் மாவட்டச் சீரணித் துவக்க விழாவில் நடைபெற்ற ஊர்வலத்தில், அறிஞர் அண்ணாவின்திருவுருவப்படம் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டது.



2. ஊர்வலத்தில் பெண்களும்......

3. ...ஆண்களும் பெருமளவில் கலந்துகொண்டு, சீரணி சிறக்க ஓயாது உழைக்க உறுதி பூண்டனர்.

அநாதை

வி.ஸ.காண்டேகர்

அவன் அநாதைப் பையன்; ஊருக்குள் பிச்சைகேட்க வந்தான். எதிரெதிரே இரண்டு பெரிய மாளிகைகளைக் கண்டதும், அவன் கால்கள் தாமாக அந்தப் பக்கம் திரும்பின. அவற்றுள் ஏதாவது ஒரு மாளிகையில் தனக்கு வயிறு நிறைய உணவு கிடைக்கும் என்று எண்ணியதும், அவனுக்குப் பசி அதிகமாயிற்று.

முதல் மாளிகை பெரிய கோவிலைப் போல இருந்தது. அதன் வாசலில் கொழுக்குமழுக்கென்று காவலாளி ஒருவன் நின்றிருந்தான். பையன் அவனிடம், ''காவலரே, நான் எசமானரைப் பார்க்க வேண்டும்'' என்றான்.

''எசமானர்பூசையில் அமர்ந்திருக்கிறார்'' என்று காவலாளி உறுமினான்.

''பூசை எப்போது முடியும்?''

''நாலு நாழிகை நேரம் கழித்து.''

பையனுடைய வயிற்றுக்கு, நான்கு நாழிகை நான்கு யுகமாகத் தோன்றின. ஆயினும் அவன் பொறுமையுடன் மாளிகை வாசலில் காத்திருந்தான். பிறகு எசமானரின் தரிசனம் அவனுக்குக் கிடைத்தது.

எசமானரின் காதில் வைரக் கடுக்கன் மின்னியது. பையன் பைத்தியம் போல் அதைப் பார்த்துக்கொண்டே நின்றான்.

எசமானர் சிரித்துக்கொண்டே, ''அப்பனே! இதெல்லாம் ஆண்டவனுடைய அருள். சரி, நீ இங்கு என்ன வேலையாக வந்தாய்?'' என்று கேட்டார்.

''நான் இரண்டு நாளாகப் பட்டினி, ஐயா. எனக்கு ஏதாவது உண்ணுவதற்கு!''

''உனக்கு ஆண்டவன்மீது நம்பிக்கை உண்டா?''

''உண்டு!''

''அப்படியானால் ஏன் பிச்சை கேட்டுத் திரிகிறாய்? அட பைத்தியமே! அனந்த கோடிப் பிரம்மாண்ட நாயகனை அவனுடைய திருவிளையாடலை யார் வருணிக்க முடியும்? பறவைக் குஞ்சுக்கு அவன் அலகுமட்டும் கொடுப்பதோடு நிற்பதில்லை; அதற்குத் தேவையான இரையையும் படைத்திருக்கிறான். உன் வயிற்றுப் பசிக்கு உணவுக்கு வேண்டிய ஏற்பாடு அவன் எங்காவது செய்துதான் இருப்பான்! ஆண்டவனிடம் நம்பிக்கை வைத்து உணவை எதிர்பார்த்துக் கொண்டே இரு'' என்று சொல்லி, எசமானர் ஜபம் செய்ய உள்ளே போய்விட்டார்.

பையன் தலை குனிந்துகொண்டு மாளிகையிலிருந்து வெளியேறினான். ஏதோ ஒரு பிணம் எழுந்து நடப்பது போல் இருந்தது அவனுடைய தோற்றம்.

எதிரே மற்றொரு மாளிகை, மதம் பிடித்த யானை போல நின்றது. யானை தண்ணீரைக் குடித்துத் துதிக்கையை உயர்த்துவதுபோல், அந்த மாளிகையின் உப்பரிகை கம்பீரமாக நின்றது. அங்கே உரத்த குரலில் நிறையப் பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். அதைக் கேட்டதும், கொந்தளிக்கும் கடல் அந்தப் பையனின் நினைவுக்கு வந்தது.

அஞ்சி அஞ்சி நடுங்கியவண்ணம் அநாதைச் சிறுவன் அந்த மாளிகைப் படிகளில் ஏறினான். வாசலில், பருமனான காவலாளி நின்றிருந்தான். அவன் பையன்மேல்

சீறி விழுந்து, ''எங்கே போகிருய், பயலே? ஏதாவது திருடிப்போகலாம் என்று பார்க்கிருயா?'' என்ருன்.

பையன் கையைப் பிசைந்து கொண்டே, ''எசமானரைப் பார்க்க வந்தேன்'' என்ருன்.

''எசமானர் பண்டிதர்களுடன் சாத்திரம் பேசிக் கொண்டிருக்கிருர்.''

''எப்பொழுது அவரைப் பார்க்க முடியும்?''

''நாலு நாழிகை கழித்து.''

ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகமாகத் தோன்றியது. ஆயினும், வயிற்றைப் போன்ற ஈனமான பொருள் உலகில் வேறு எதுவுமில்லை. அந்தப் பையன், மோனமே உருவாக, மாளிகை வாசலில் காத்திருந்தான்.

நான்கு நாழிகை நேரத்தில் சாத்திரப் பேச்சு ஒருவாறு முடிந்தது. பண்டிதர்கள் பலர். பருமன் பருமனுகச் சுவடிகளுடன் மெதுவாக மாளிகைக்கு வெளியே வந்தார்கள்.

சிறுவனுக்கு எசமானரின் தரிசனம் கிடைத்தது.

''இங்கு என்ன வேலையாக வந்தாயடா?'' என்று அவர் கேட்டார்.

''இரண்டு நாளாக நான் பட்டினி, ஐயா! ஏதாவது உண்ணுவதற்கு...''

''ஆண்டவனிடம் உனக்கு நம்பிக்கை உண்டா?''

சற்று நேரம் முன்பு பையன் 'உண்டு' என்ருன்; ஆனுல், அது எவ்வகையிலும் பயன்படவில்லை. ஆகவே இப்போது 'இல்லை' என்று சொல்லிப் பார்க்கலாம் என்று தீர்மானித்தான். சடக்கென்று அவன், ''இல்லை'' என்ருன்.

தமது சரிகைச் சால்வையை இழுத்துப் போர்த்திக்கொண்டு, எசமானர் அருகில் வந்தார்; அவனைத் தட்டிக் கொடுத்து, ''பேஷ்! பேஷ்! இவ்வளவு சின்ன வயதில் இவ்வளவு ஆழ்ந்த அறிவை நான் எங்கும் கண்டதில்லை'' என்ருர்.

''எனக்கு ஏதாவது உண்பதற்கு...'' பையன் மிக்க ஆசையுடன் பேசினுன்.

''உண்பதற்கா? அட பைத்தியமே! இந்த உலகில் தெய்வம் இல்லை என்பது உனக்குத் தெரியும் அல்லவா? அப்படியானுல் உனக்கு உண்ண உணவு யார் கொடுப்பார்கள்? அவனவன் தனக்குத் தேவையானதைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். இரண்டு செய்திகளை நினைவில் வைத்துக்கொள்—பூமி பரந்தது; முயற்சிதான் மனிதனின் கடவுள்! உன் வயிறு எங்கும் நிரம்பும்.''

தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, பையன் அந்த மாளிகையிலிருந்து வெளியேறினுன். ஊரில் மற்ற வீடுகளைப் பார்க்க அவனுக்குத் துணிச்சலே இல்லை. ஏதோ ஓர் ஆவி நடப்பது போல அவன் மௌனமாக நடந்தான்.

தமிழாக்கம்: கா.ஸ்ரீ.ஸ்ரீ

பாதி செத்த முயலைக் கழுகு கொத்துவது போல, பசி அவன் குடலைப் பிய்த்தது.

அந்தப் பையன் தள்ளாடியவாறே ஊருக்கு வெளியே வந்தான். பசி நெருப்பாக எரிந்தது. அதை எப்படித் தணிப்பது என்று அவனுக்குத் தெரியவில்லை!

ஒரு மரத்தடியில், இலையில் தயிர்ச் சோற்றை ஒரு கிழவி மெதுவாக உண்டுகொண்டிருந்ததை அவன் கண்டான். அவன் கண்கள் ஆவலுடன் அந்த இலையைப் பார்த்தன. ஆனுல், அங்கே செல்ல அவன் கால் எழவில்லை.

கிழவி சோற்றைச் சுவைத்துக் கொண்டே தற்செயலாக இங்குமங்கும் பார்த்தாள். பையன் அவள் கண்ணுக்குப் புலப்பட்டான். அவனது கண்ணில் கூவி அழும் பசியை அவளது உள்ளம் உணர்ந்தது. அவள் கையை அசைத்து அவனைக் கூப்பிட்டாள். நெஞ்சம் படபடக்க, அவன் வந்தான். கிழவி அவன் கையைப் பிடித்துத் தன் அருகில் உட்கார

வைத்தாள். இலையிலிருந்து ஒரு கவளம் எடுத்து அவனுக்கு ஊட்டினுள். அவள் ஏதோ பேச விரும்பினுள்; ஆனுல், வாயிலிருந்து சொல் எழவில்லை. கண்ணில்தான் நீர் ததும்பியது. கண்ணீரின் ஒரு துளி, அந்தப் பையனின் கன்னத்தில் விழுந்தது.

அவனது வயிற்றுப் பசி தணிந்தது; வேதனை அனைத்தும் அடங்கியது. உலகத் தாயைத் தரிசித்ததாக அவனுக்குத் தோன்றியது. அவன் முகத்தில் புன்னகை மலர்ந்தது.

நாலு கவளம் வயிற்றில் சென்றதும், ''பாட்டி, உலகில் ஆண்டவன் இருக்கின்ருனு?'' என்று சிறுவன் கேட்டான்.

அவள் கோணங்கித்தனமாகக் கையை ஆட்டிக்கொண்டே, ''யாருக்குத் தெரியும்! நான் ஒரு பைத்தியக்காரக் கிழவி, அப்பனே!'' என்ருள்.

புழுதியில் இறங்கி வா!

உருத்திராக்க மணிகளை உருட்டுவதை விட்டுவிடு! மந்திரமும் தந்திரமும், ஆடலும் பாடலும் அவனைக் காட்டமாட்டா! தாளிட்ட அடைபட்ட கோயிலின் இருளடைந்த மூலையில் யாரைப் பூசிக்கின்ருய்? கண்ணைத் திறந்து, உன் கடவுள் உன் முன்னிலையில் இல்லையென அறிந்துகொள்!

கடினமான தரையில் ஏர் கட்டி உழுவாரிடமும், சாலை அமைக்கச் சரளைக் கல் உடைப்பாரிடமும் அவன் இருக்கிருன். அவர்களுடன் அவன் மழையில் நனைகிருன்; வெயிலில் உலர்கிருன். அவன் ஆடையில் தூசி படிந்திருக்கிறது. உன் துவராடையைத் தூக்கியெறி! அவனைப் போலவே நீயும் புழுதியில் இறங்கி வா!

பூவையும் நறும்புகையையும் உன் பூசையையும் விட்டு வெளியே வா! உன் ஆடை கிழிந்து அழுக்கடைந்தால் என்ன? நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைத்து நின் இறைவனைக் கண்டுகொள்.

— தாகூரின் கீதாஞ்சலியிலிருந்து



தேடி வந்த சுழற் கேடயம்

[ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ள ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்குப் பரிசாகச் சுழற்கேடயம் அளிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு அரசு உருவாக்கியது. அதன்படி நெல்லை மாவட்டத்தில் சிறந்த ஊராட்சி ஒன்றியமாகப் பாவூர் சத்திரத்திலுள்ள கீழப்பாவூர் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவ்வொன்றியத்தின் சிறப்புகளை இங்கே வெளியிட்டுள்ளோம்.

ஏனைய ஒன்றியங்களைப்பற்றிய கட்டுரைகள் இனித் திங்கள் தோறும் தொடர்ந்து வெளியிடப்பெறும்.

—ஆசிரியர்]

21 ஊராட்சிகளை உள்ளடக்கிய கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், 91,000 மக்கள் தொகையைப் பெற்றுச் சிறப்புடன் திகழ்கிறது.

புகழ்பெற்ற குற்ருலத்தருவி, சிற்ருறு என்ற பெயருடன் இவ்வொன்றியத்தில் பாய்ந்தோடி நீர்வளத்தைக் குறைவில்லாது அளித்து வருகிறது. ஒன்றியத்தில் வதியும் மக்களில் பெரும்பாலோர் வேளாண்மையைத் தழுவி வாழ்பவராவர். அயராது உழைக்கும் இப் பெருங்குடி மக்களைக் கழனிகளில்தான் பெரிதும் காண இயலுமேயன்றி, அவரவர் தம் இல்லங்களில் காணுவதென்பது மிக்க அரிதாகும்.

பூச்சி மருந்து விற்பனையில்
தமிழகத்திலேயே முதலிடம்:

இவ்வொன்றியத்திலுள்ள 7650 ஏக்கர்களில் நெற்பயிரும், 961 ஏக்கர்களில் சி. எஸ். எச். 1 சோளமும் பயிரிடப்படுகின்றன. இராசயன உரத்தைப் பயன்படுத்தாத, மேம்பட்ட உழுபடைக் கருவிகளைக் கையாளாத உழவர்களே இங்கு இல்லையெனத் திண்ணமாகக் கூறமுடியும். தமிழகத்திலேயே பூச்சி மருந்துகள் விற்பனையில் முதன்மை பெற்று விளங்குவது கீழ்ப்பாவூர் ஒன்றியம்தான்.

கால்நடைச் செல்வங்களைப் பேணிக்காப்பதில் வட்டார மக்கள் பெரிதும் ஆர்வங்காட்டுகின்றனர். 1967-68ஆம் ஆண்டில் மட்டும் 448 கால் நடைகளுக்குக் காயடிக்கப்பட்டுள்ளது. 8 கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. 11,500 மீன் குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன.

சொந்தக் கட்டிடங்களில்
பெரும்பாலான பள்ளிகள்:

பள்ளிக் குழந்தைகளில் 36 சதவீதத்தினருக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சொந்தமான கட்டடங்களிலேயே இயங்குகின்றன.

30 சமூகக்கல்வி நிலையங்கள், 26 இளைஞர் வேளாண்மைச் சங்கங்கள் நன்முறையில் செயல்படுகின்றன.

இவ்வட்டாரத்திலுள்ள 30 மகளிர் மன்றங்களுக்கும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுத் தையற் பயிற்சி பெறத்தக்க நடவடிக்கைகள்

மேற்கொள்ளப் பட்டுள்ளன. இம் மகளிர் மன்றங்களுள், செட்டியூரிலுள்ள மகளிர் மன்றமே சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இம்மன்றத்திற்கு ரூ.500/- மதிப்புள்ள வானொலிப்பெட்டி அளிக்கப் பட்டுள்ளது.

மன்றங்களின் துணை கொண்டு, 376 பேர்களுக்குக் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்படிருப்பதுடன், 580 பேர்களுக்குக் கருவிகளும் அளிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டம்:

ஒவ்வோர் உழவருக்கும் தேவையான பண்ணைத் திட்டம் தயாரிக்கப் பட்டு, தேவையான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக அளிக்கப்படுகின்றன. இவ்வட்டாரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களனைத்தும், 1967-68ஆம் ஆண்டில் ரூ. 2,11,427 கடன் வழங்கியுள்ளது பாராட்டுக்குரியதாகும்.

இங்குள்ள கொல், தச்சுத் தொழில் கூடங்கள், உழுபடைக் கருவிகளை உடனுக்குடன் செப்பனிட்டு உழவர் பெருமக்களுக்கு உதவி வருவதுடன், தேவையான புதிய கருவிகளையும் உற்பத்தி செய்தவண்ணமிருக்கின்றன. சென்ற ஆண்டில் மட்டும் 250 பேர்களுக்கு இங்குப் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது.

எங்கும் சாலைகள், குடிநீர்:

இவ்வட்டாரத்திலுள்ள கிராமங்களனைத்திற்கும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறே குடிநீரும் எல்லாக் கிராமங்களுக்கும் தாராளமாகக் கிடைக்க வழிவகை செய்யப் பட்டுள்ளது.

ஊராட்சிகள் திறம்படப் பணியாற்றியிருக்காவிடில், கீழப்பாவூர், ஒன்றியம் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்க இயலுமா?

வரி வசூலில் முதலிடம்:

1967-1968-ஆம் ஆண்டில், வீட்டு வரியை 87 சதவீதம் வசூல் செய்து நெல்லைமாவட்டத்திலேயே முதலிடம் பெற்றது இவ்வொன்றியமே. சில ஊராட்சிகளில் வரி நிலுவையே இல்லையென்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். தமிழகத்திலுள்ள ஏனைய ஊராட்சிகளும் இதைப் பின்பற்றவேண்டும். ஒவ்வோர் ஊராட்சியும், வேளாண்மைக் கருவிகளை வாங்கிவைத்துக் குறைந்த விலையில் விவசாயிகளுக்குத் தருகிறது. ஊராட்சிகளில் பயன்தரும் மரங்கள் பெருமளவு நடப்பட்டுள்ளதால், அவற்றின் வாயிலாக மிகுந்த வருவாய் கிடைக்கிறது.

ஒளி வீசும் ஊராட்சிகள்:

மின் வசதியில்லாத ஊராட்சியே கீழப்பாவூர் ஒன்றியத்திலில்லை.

50 உறுப்பினர்களைக் கொண்ட சீரணியினர், கொண்டலூர் என்ற இடத்தில் ரூ. 5,000 மதிப்பளவில் ஒரு பள்ளியைக் கண்ணைக்கவரும் வகையில் உருவாக்கியுள்ளனர்.

பல்வேறு துறைகளிலும் பெருவளர்ச்சியைப்பெற்று, சில துறைகளில் முதலிடமும் பெற்றுத் திகழும் கீழப்பாவூர் ஒன்றியம், நெல்லை மாவட்டத்திலேயே சிறந்த ஒன்றியமெனத்தேர்ந்தெடுக்கப்பட்டது சிறப்புக்குரியதன்றோ?

தொண்டர்க்கு வேண்டுவன

தொண்டுபூண் பார்க்குத் தூயநல் லுளனும்,
கண்டவர் பழிப்பாற் கலங்கா உரனும்,
துயரெது வரினும் துளங்கா நிலையும்,
அயரா உழைப்பும், ஆயும் அறிவும்,
தந்நல மறுப்பும், தகவும் வேண்டும்.
இந்நல மெல்லாம் ஏற்றெளிர் நீயே!

— கவிஞர் முடியரசன்

கோதுமைச் சிற்றுண்டிகள்

''மலிவு விலையில் கோதுமை''

''கோதுமையை அரிசிச் சோறு போலச் சமைத்துச் சாப்பிடலாம்''

''கோதுமை உடைத்து விற்கப்படுகிறது.''

"எவ்வளவு வேண்டுமானாலும் கோதுமை கிடைக்கும்'' என்ற செய்திகள் வந்துகொண் டிருக்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், கோதுமையை அரிசிச் சோறுபோல உட்கொள்ள முடியும் என்பதை அனுபவ வாயிலாக அறிந்து எடுத்துரைத்துள்ளார்கள்.

கோதுமையைச் சப்பாத்தியாகவோ, பூரியாகவோதான் செய்து சாப்பிட முடியும் என்று மக்களில் பெரும்பாலோர் எண்ணி வந்துள்ளனர். கோதுமையைச் சுவையான சிற்றுண்டிகளாகவும், அரிசிச் சோறு போன்று சமைத்தும் உண்ணமுடியும் என்பதைப் பட்டி தொட்டிகளிலுள்ள எல்லா மக்களும் உணர இப்பகுதி பயன்படும் என்று நம்புகின்றோம்.

இந்த இதழில் கோதுமையில் சுவையான சிற்றுண்டிகள் சிலவற்றைச் செய்யும் முறைகளைத் திருமதி காந்தாமணி சண்முகம் அவர்கள் விளக்கியுள்ளார்கள். கிராம நலத்தில் இதுபோன்ற பகுதி இனித் தொடர்ந்து இடம்பெறும்.

— ஆசிரியர்

1. கோதுமைப் புட்டு

கோதுமை மாவு	— 2 ஆழாக்கு
சர்க்கரை	— ½ ,,
தேங்காய்த் துருவல்	— ½ தேங்காய் (ஒரு மூடி)
ஏலக்காய்	— 4
நெய்	— 1 தேக் கரண்டி (டீஸ்பூன்)

செய்முறை: 2 ஆழாக்குக் கோதுமை மாவில் 4 பெரிய தேக் கரண்டி தண்ணீரும் தேவையான அளவு உப்புத்தூளும் கலந்து உலர்த்தியாகப் பிசைந்து கொள்ள வேண்டும். இட்டிலிப் பாத்திரத்தில் இரண்டாவது தட்டைப்போட்டோ அல்லது வாயகன்றபாத்திரத்திலோ, பிசைந்த கோதுமையைத் துணியால் கட்டி ½மணி நேரம் வேக வைக்க வேண்டும். வேகவைத்த இந்த மாவில்

சர்க்கரை, தேங்காய்த் துருவல், ஏலக்காய், நெய் இவைகளைக் கொட்டிக் கலந்து சாப்பிடலாம்.

2. கோதுமைப் பகோடா

கோதுமை மாவு	— 2 ஆழாக்கு
உப்பு	— தேவையான அளவு
நெய்	— 1 தேக்கரண்டி
பெரிய வெங்காயம்	— 4
பச்சை மிளகாய்	— 2
இஞ்சி	— சிறிய துண்டு
தட்டிய பூண்டு	— 4 அல்லது 5
கடலைஎண்ணெய் அல்லது டால்டா	— தேவையான அளவு

கருவேப்பிலை, கொத்தமல்லி.

செய்முறை: கோதுமை மாவில் உப்பு, நெய் இவைகளைத் தண்ணீர்



விடாமல் போட்டுக் கலக்கவேண்டும். வெங்காயம், மிளகாய், இஞ்சி ஆகியவைகளைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கோதுமை மாவில் போட்டு நன்றாகப் பிசையவேண்டும். அடுப்பில் வாணலியை வைத்துக் கடலை எண்ணெய் அல்லது டால்டாவை ஊற்ற வேண்டும். அது கொதித்த பின், மாவைக் கையால் பிசைந்தவாறே வாணலியில் போடவேண்டும். பொன் வறுவலாகச் சிவந்த பின் எடுத்துவிட வேண்டும். சூடாகவோ அல்லது ஆறவைத்தோ டப்பியில் போட்டுவைத்துக் கொள்ளலாம். இது சாப்பிட மிகவும் நன்றாக இருக்கும்.

3. கோதுமை அப்பம்

கோதுமை மாவு	— 3 ஆழாக்கு
வெல்லம்	— 1 கோப்பை
தேங்காய்த் துருவல்	— 1 மூடி
ஏலக்காய்	— 4
தண்ணீர்	— 2 கப்
சோடாமாவு	— தேவையான அளவு

செய்முறை: கோதுமை மாவில் மேலே கூறியவைகளைக் கலந்து இட்டிலி மாவு போலப் பதமாகக் கரைத்துக்கொள்ளவேண்டும்.

வாணலியில் கடலை எண்ணெய் அல்லது டால்டாவைச் சிறிது எண்ணெயுடன் கலந்து ஊற்றவேண்டும். சுட்டபின், 1 கரண்டி மாவை விட்டுச் சிவந்தபின் சிறிது திருப்பி எடுத்து விடல் வேண்டும். சூடாகச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

4. கோதுமைப் பாயசம்

உடைத்த கோதுமை	— 1 ஆழாக்கு
ரவை	— ½ கப்
வெல்லம்	— போதிய அளவு
ஏலக்காய்	— போதிய அளவு
தேங்காய்ப் பால்	— 1 டம்ளர் (அல்லது) போதிய அளவு பால்
நெய்	— ½ டீஸ்பூன்.

செய்முறை: கோதுமை ரவையை நெய்யில் வறுத்துக் கொள்ளவேண்டும். ஒரு பாத்திரத்தில் 3 ஆழாக்குத் தண்ணீர்விட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். அதில் வறுத்த ரவையைப் போடவேண்டும். 10 நிமிடம்கழித்து, வெல்லம், ஏலக்காய், பால் முதலி

யவைகளைக் கலக்கவேண்டும். இறக்கு முன் கேசரிப் பவுடரைப்போட்டு இறக்கவேண்டும். ஆறினபின் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

5. கோதுமைத் தோசை

கோதுமை மாவு	— 2 ஆழாக்கு
மோர்	— 1 டம்ளர்
உப்பு, சோடாமாவு	
வெங்காயம்	— 2
பச்சைமிளகாய்	— 3

கொத்தமல்லித்தழை, கருவேப்பிலை.

செய்முறை: கோதுமை மாவில் சோடா, மோர், உப்பு கலந்து சிறிது தண்ணீர் விட்டுக் கரைத்துக்கொள்ள வேண்டும். வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு வெங்காயம், மிளகாய் இவைகளைப் போட்டுக் கலக்கவேண்டும். தோசைக் கல்லில் தோசையாக வார்த்துச் சாப்பிடலாம்.

—காந்தாமணி சண்முகம்

நலமெய்தி உய்வோம்!

பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்.
பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்;
கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்;
குற்றவேல் தொழிலென்ற மனம்மாற வேண்டும்;
வீட்டோடு தாம்மட்டும் சுகமாக உண்டும்,
வேறுள்ளோர் துன்பங்கள் கண்ணாரக் கண்டும்,
நாட்டோடு சேராத தனிபோக உரிமை
நடவாதிங் கினியென்று நாமறிதல் பெருமை.

பசைமிக்க தொழில்செய்து பலன்முற்றும் யாரோ
பரிவற்ற முதலாளி பறிகொண்டு போக
பசிமிக்கு மிகநொந்த தொழிலாளர் எல்லாம்
பகையென்று நமையெண்ணிப் பழிகொள்ளு முன்னால்
வசைமிக்க நிலைமாற வழியொன்று சூழ்வோம்;
வறுமைக்கே இடமற்ற சமுதாய வாழ்வை
இசைமிக்க முறைகண்டு ஏற்பாடு செய்வோம்;
எல்லாரும் குறைவற்ற நலமெய்தி உய்வோம்!

— நாமக்கல் கவிஞர்
வெ. இராமலிங்கம் பிள்ளை

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.
* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,

உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய்
* தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்
பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்
திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு,
சென்னை-4

காட்சியும் கருத்தும்

சு. லெ.

உலகில் பல்வேறு காட்சிகளை நாம் நாள்தோறும் காண்கிறோம். காணும் காட்சி ஒன்றேயாயினும் காண்போரின் மனநிலைக்கு ஏற்பக் கருத்துக்கள் தோன்றுவதுண்டு. பூத்துக் குலுங்கும் மலர்க் கொத்து ஒன்றினைப் பக்தன் ஒருவன் காண்பானேயாகில், அதைக் 'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்' அணிந்துள்ள பரமனடியில் சேர்க்க வேண்டுமென எண்ணுவான். காளை ஒருவன் காண்பானேயாகில் அதைத் தன் மனம் கவர்ந்தாளின் கூந்தலிலே சூடிட விழைவான்- விரைவான். காட்சிப் பொருளான மலர்க் கொத்து ஒன்றேயாயினும் அது பக்தன் உள்ளத்தே தோற்றுவித்த கருத்தும், இளைஞன் உள்ளத்தே எழுப்புவித்த கருத்தும் வெவ்வேறாக இருந்திடக் காணுகிறோம்.

புலவர்கள், இயற்கையில் தோன்றும் காட்சிகளைத் தங்கள் தங்கள் மனநிலைக்கேற்ப வெவ்வேறு கோணங்களில் காட்டுவதை இலக்கியங்களைக் கற்போர் நன்கு உணர்வர். மாலை

வேளையில் தோன்றும் மதியின் ஒளி கூடினோர்க்கு மகிழ்ச்சி நிதியம்; பிரிந்திருப்போர்க்கோ வேதனைப் பெருக்கம். அவ்வொளி கூடினோரை நிழலெனக் குளிர்விக்கும்; பிரிந்தோரை ஆலமென வருத்தும்.

காட்டில் சீதையை இராமன் பிரிந்திருந்த நிலையில் விண்ணிலே தண்மதி தோன்றலாயிற்று. அமுத ஊற்றும் நிலவின் குளிரொளி அவனுக்குச் சுட்டெரிக்கும் பெரு நெருப்பாகத் தோற்றுகிறது. அண்ணாந்து பார்க்கிறான்- அழகொழுகும் மதியமும் அதைச் சூழ்ந்து விண்மீன்களும் தென்படுகின்றன. காதலியைப் பிரிந்தமையால் கனலுற்ற உளங்கொண்ட இராமனுக்குக் குளிர் நிலவு கொடுமைத் தீயாகிறது. தண்ணொளி தன்னைச் சுட்டதுபோல் விண்ணையும் சுட்டிருக்க வேண்டும் என எண்ணுகிறான். உடுக்களைப் பார்க்கிறான்; ஊழித் தீயான நிலவொளி சுட்டதால் விண்ணில் ஏற்பட்ட புண்களே அவை எனக் கூறுகிறான்.

''அப்புடை யலங்குமீ னமரு மார்கலி
உப்புடை யிந்துவென் றுதித்த வூழித்தீ
வெப்புடை விரிகதிர் விரிப்ப மெய்யலாங்
கொப்புளம் பொடித்ததோ கொதிக்கும் வானமே''

இந்த இராமாயணப் பாடல் மேற்கண்ட கருத்துக்களை உள்ளடக்கி நிற்கிறது. சீதையின் பிரிவால் உளம் கொதித்த இராமனுக்குச் சீதள நிலவு சுடு நெருப்பாகவும், அந்நெருப்பு விண்ணைச் சுட்டதால் ஏற்பட்ட கொப்புளங்களே விண்மீன்களாகத் தோன்றிற்றெனவும் கம்பர் பாடல் கூறுகிறது.

பாவேந்தர் பாரதிதாசன் மீன் பூத்த வானத்தைப் பார்க்கிறார். அவர் உள்ளத்தே வேறொரு வகையான கருத்துப் பூ மலர்கிறது. அந்தி மயங்கிய வேளை; அருமைத் தம்பியை அழைத்து ஆகாயத்தைப் பார் என்கிறார். அங்கே தோன்றும் வெள்ளைப் பொட்டுக்களைக் காட்டி ''இவை என்ன தெரியுமா?''என்று தம்பியைக் கேட்கிறார். தம்பி விரைந்து கூறுகிறான் ''விண்மீன்கள்''என்று. புலவர் கூறுகிறார், ''இல்லை! இவை கொப்புளங்கள்!''. ''கொப்புளங்களா?''- ஐயத்தோடு கேட்கிறான் தம்பி. 'ஆம்! விண் கொதித்ததால் ஏற்பட்ட கொப்புளங்கள்' - இது புலவரின் பதில். ''விண்ணுக்கு ஏன் கொதிப்பு ஏற்பட்டது?'' - தம்பியின் வினா. ''மண்ணில் நடக்கும் கொடுமைகளைக் கண்ணில் கண்டமையால் ஏற்பட்ட கொதிப்பு'' - புலவரின் பதில். ''விண் கொதிக்குமளவுக்கு மண்ணில் நடக்கும் கொடுமைதான் என்ன?''- விவரமறியத் தம்பி விடுத்த வினா. ''அதுவா! கூறுகிறேன் கேள்! இம்மண்மீதில் உழைப்பவர்கள் எல்லாம் வறியவர்கள். உழைத்த பின்னர்க் கூலி கேட்கச்சென்றால், கூலி கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை; அவ்வேளையில் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல் நொந்த உள்ளங்களைச் சுடுசொல் கொண்டு சுடுகிறார்களே அவர்கள் எல்லாம் செல்வர்கள்! இக் கொடுமையைப் பகலிலெல்லாம் கண்டு விண் பொங்கியது; கொதித்தது. அதனால் ஏற்பட்ட கொப்புளங்களே விண்மீன்கள்! அறிந்தாயா தம்பி!''-இவ்வாறுக் காரணம் அறிவிக்கிறார் கவிஞர்.

மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம்! உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம்இ தைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண் டந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்ப ளித்த
விரிவானம் பாராய் தம்பி!

தொழிலாளர் நிலை கண்டு உளம் வருந்திப் புலவர் பாடிய பாடல் இது. உள்ளம் கொதிக்கும் ஒருவர்க்குச் சுற்றுச் சூழல் எல்லாமே கொதிக்கும்; எனவே விண்ணும் கொதித்ததாக எண்ணுகிறார். அதனால் ஏற்பட்ட கொபபுளங்களாக விண்மீன்கள் அவருக்குத் தென்படுகின்றன. தம்பியை அழைத்துக் காட்டுகிறார். இக்கொடுமை நீங்க அவன் பாடுபடமாட்டானா என்ற ஆசையால்!

தொழிலாளர் நிலை கண்டு பதைபதைத்தவர் புலவர் பாரதிதாசன். ''சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு தேக்கிய நல் வாய்க்காலும் வகைப்படுத்தி, நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும் நிறையுழைப்புத்

தோள்களை''க் கொண்ட தொழிலாளர் முன்னேற்றத்துக்குத் தடையாக இருப்பது எந்தச் சக்தியாயினும் அஞ்சாது அதை அகற்ற வேண்டுமென்று பாடியவர் அவர். அதனால் தான்,

நடவு செய்த தோழர்கூலி
நாலணாவை ஏற்பதும்
உடலுழைப்பி லாத செல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்டமீதிலே
கடவுள்என்ற கட்டறுத்துத்
தொழிலுளாரை ஏவுவோம்

என்று வீரத்தோடு பாட முடிந்தது அவரால்.

தொழிலாளர் நலம் கருதிக் கவி முழக்கம் செய்த இம் மாக்கவிஞனது உரைகளை 'மே' நாளில் நாம் நினைவு கூர்வோமாக!



''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

விவசாயத்தில் அதிக விளைச்சலை ஏற்படுத்தி, சுய தேவையைப் பூர்த்தி செய்து, பிற நாட்டவரும் மெச்சத்தகு வண்ணம், இந்திய நாட்டிலும், விவசாயச் செல்வம் கொழிக்க விவசாயிகளாகிய நமது உழைப்பே தலையாயது.

நான் ஏற்றுச் செய்யும் விவசாயத்தில், அதிக விளைச்சல் தரும் — நெல் வகைகள் ஏடிடி. 27, ஐ ஆர்.—8 மற்றும் கரும்பு வகைகளைப் பயிர் செய்து, மகோன்னத விளைச்சலைத் தொடர்ந்து நிரூபித்து, என்பொறுப்பை நிறைவேற்றி வருவதில் மனமகிழ்வெய்துகின்றேன்.

ஆகவே, விவசாயிகளாகிய நாம், நம் கடமைகளைச் செவ்வனே தொடர்ந்தாற்றி நாட்டின் விழுமிய செழிப்புக்கு நாமே வித்தாவோம், விளைவோம்.

என் அன்புசால் வாழ்த்துக்கள்.

சுந்தரராஜன் சேர்வை
பெருந் தலைவர்
அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம்
மதுரை மாவட்டம்



கிடங்குகளில் தானியங்களைப் பாதுகாக்கும் போது:

கூரை ஒழுகாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்;

கிடங்கின் உட்புறத்தைத் துப்புரவாக வைத்துக் கொள்ளுங்கள்.

தரை மீது ப்ளாஸ்டிக் விரிப்புகள் மீதோ அல்லது மரத்தாலாகிய தாழ்வான மேடைமீதோ மூட்டைகளை சுவற்றிலிருந்து இரண்டடி தள்ளி குறுக்கு வாட்டத்தில் அடுக்குங்கள்.

ஜன்னல்களுக்கும் காற்றேடிகளுக்கும் வலையடித்தால் பறவைகள் நுழையாமலிருக்கும்.

கிடங்குகளை அடிக்கடி பார்வையிடுங்கள்.

புழுக்கள் தென்பட்டவுடன் கிடங்கின் உட்புறத்தில் பூச்சி மருந்து தெளியுங்கள். எலி பாஷாணம் வைத்து எலிகளைக் கொல்லுங்கள்.

புதிதாக அமைக்கப்பட்ட வார்ப்பட உலோகத் தொம்பை ஈரம், புழுக்கள், பூச்சிகள், எலிகள், பறவைகள் ஆகியவற்றிலிருந்து தானியங்களை நன்கு பாதுகாக்க உதவும்.

உலோகத் தொம்பையை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்லலாம்; எளிதாக நிர்மாணிக்கலாம்; இது சகாயமான விலையில் கிடைக்கிறது.

தானியங்களை சேமிப்பதால்
உணவும் சேமிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு:-
டைரக்டொரேட் ஆஃப் ஸ்டோரேஜ்
அண்ட் இன்ஸ்பெக்ஷன்,
உணவு இலாகா, க்ருஷிபவன், புதுதில்லி.

davp 68/619

மேதினி போற்றும் மே தின விழா உலகப் பாட்டாளி மக்களின் உள்ளத்தில் புத்துணர்ச்சியையும் எழுச்சியையும் தோற்றுவித்திருக்கிறது.

1886ஆம் ஆண்டு மே முதல் நாளன்று அமெரிக்கப் பாட்டாளி வர்க்கம் எட்டு மணி நேர வேலை உரிமைக்காக எழுப்பிய போர்க்குரல் அந் நாட்டின் முதலாளி வர்க்கத்தின் கண்மூடித்தனமான போக்கைத் தடுத்து நிறுத்த உதவியது.

நாளடைவில் அஃது உலகம் தழுவிய இயக்கமாகவும், ஒவ்வோராண்டும் மே திங்கள் முதல் நாளன்று பாட்டாளி வர்க்கத்தின் உரிமையை உலகுக்குரைக்கும் பெருநாளாகவும் உருவெடுத்தது.

இன்று அந் நாள் - ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சமாதானத்திற்காகவும், சனநாயகத்திற்காகவும், சோசலிசத்திற்காகவும் மக்கள் நடத்தும் போரட்டத் தினமாக - புரட்சித் திருநாளாக மலர்ந்திருக்கிறது.

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற எழுச்சி முரசம் இந்தியத் துணைக்கண்டத்தில் - அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் நீண்ட பலகாலமாக ஒலித்து வந்திருக்கிறது.

அந்த எழுச்சி முரசைத் தட்டித் தட்டி அறியாமைத் துயிலில் ஆழ்ந்து கிடந்த தமிழ்ப் பாட்டாளிகளை விழித்தெழச் செய்தனர் நமது மூதாதையினர். அதற்காக அவர்கள் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல!

சுயமரியாதைச் சுடரொளியாக விளங்கிய சிங்காரவேலரும், வாசுதேவும், தமிழ்ப் பெருங்கடல் திரு. வி. க. வும் தொழிற்சங்க

இயக்கம் தமிழ் மண்ணில் பற்றிப் படர்ந்திட உறுதுணையாக இருந்தார்கள்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தம்முடைய அரசியல் வாழ்வின் துவக்கக் காலத்திலேயே அந்தப் பேரியக்கத்திற்கு உரமிட்டு, நீர்பாய்ச்சி வளர்த்து வந்தார். அதனால்தான் அவரது கரத்தில் மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்தபோது, தொழிலாளர் வர்க்கத்தின்பால் பற்றும் பாசமும் பரிவும் மேலிடத் தொழில் பிரச்சனைகளை அணுகி அனுசரித்து நடந்து வந்தார்.

இந்த ஆண்டு மே தின விழா தமிழகத்தில் சீரும் சிறப்புமுற நடைபெற்றது. ஒவ்வோராண்டு மேவிழாவிலும் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் கலந்து கொள்வார்கள். இந்த ஆண்டில் அவர் இல்லை; ஆகவே அவரது கல்லறை முன்பு கண்ணீர்த் துளிகளுடன் இந்த மே தினத்தைக் கொண்டாடினேம். இன்று அவர் இல்லையென்றாலும், அவர் விட்டுச்சென்ற சோசலிச சிந்தனைகள் நம்மிடம் நீங்காது இடம் பெற்றுள்ளன. அந்த வழியில் நாம் நடந்து ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வற்ற உன்னத சமுதாயத்தைப் படைத்திடத் தமிழ் மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் உறுதி மேற்கொள்ளவேண்டும்.

அந்த உறுதியை ஏற்றுக்கொண்டு செயல் புரியுமுன் இன்றையத் தொழில் உலகு பற்றியும் நாம் ஒரு முறை சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதுபற்றிய எனது கருத்துக்களை இக் கட்டுரை வாயிலாக விளக்கிட விரும்புகிறேன்.

இன்றைய உலகம் முதலாளித்துவ முகாம், சோசலிச அணியென இரு பெரும் கூறுகளாகப் பிரிந்து நிற்பதைக் காண்கிறோம்.

'கடமைகளைச் செய்; உரிமைகளைக் கேட்காதே! ஒரு சிலர் உல்லாச வாழ்வு வாழ்வதற்கே நீ உழைக்க வேண்டும். அதற்காகவே நாங்களும் உன்னை வாழ அனுமதித்திருக்கிறோம்' என உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்த நிலையை மாற்றி, "உலகம் உழைப்பவனுக்கே உரியது; உரிமையைப் பறிப்பவர் எவராக இருந்தாலும் சரி,

"ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் எழுச்சிப் பாட்டிற்கு இலக்கணமாக அமைந்துவிட்ட சோசலிச அணி ஒரு பக்கம்.

முதலாளித்துவ முகாமாக இருந்தாலும் எங்கள் நாடு எந்தச் சோசலிச நாட்டிற்கும் எந்த வகையிலும் பின்தங்கி விடவில்லை; சந்திரமண்டலத்திற்கே செல்லுகின்ற அளவிற்கு விஞ்ஞானத் துறையிலும் தொழில் துறையிலும் ஏனைய துறைகளிலும் உலகத்திற்கே வழிகாட்டியாகத் திகழ்கின்றதென மார்தட்டிக் கொண்டிருக்கும் முதலாளித்துவ முகாம் ஒரு பக்கம்.

இவர்களுக்கிடையில் மக்களாட்சி முறையில் நடைபோட்டுக்கொண்டு வரும் நமது நாடு முழு அளவில் சுய தேவையைப் பூர்த்திசெய்து கொள்ள இயலாத நிலையில் தொழில் துறையில் உள்ளது. ஆகவே அந்த அளவுக்கு முன்னேற்றமடையவில்லை என்பதை நாம் உணர்ந்தாகவேண்டும்.

ஒரு நாட்டில் தொழில் வளம் பெருக வேண்டுமானால், தொழில் அமைதி, தொழிலாளர்-தொழிலதிபர் நல்லுறவு மிகமிகத் தேவை; அவர்களுக்குள் நல்லுறவின்றி நாடு முன்னேற முடியாது. இந்த இருசாராரும் இணைந்து நின்று செயல்பட்டால்தான் நாட்டில் தொழில் முன்னேற்றம் ஏற்படும். பொதுச் செல்வம் பெருகும். சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ள இயலும். இந்தச் சுமுகமான நிலை இன்று நாட்டில் இருக்கிறதா என்றால் இல்லை என்றே கூறலாம்.

தொழில் தகராறுகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டே இருக்கின்றன. தொழிலாளி முதலாளி நல்லுறவு வெறும் கானல் நீராகவே இருக்

1. நெல்லை மாவட்டத்தில் சிறந்த கிராம வானொலி மன்றமாகத் திகழும் செட்டியூர் கிராம வானொலி மன்ற உறுப்பினர்கள்





2. 'கடபோக காத்தி' கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அண்ணா பாலம்.



3. கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றிய உறுப்பினர்கள், சட்ட மன்ற உறுப்பினர் ஆலடி அருணா ஆகியோர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறந்த ஊராட்சி ஒன்றியம் எனக் கீழப்பாவூர் ஒன்றியம் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

1. அவ்வொன்றியத்தைச் சார்ந்த சிறந்த தேனீ வளர்ப்பாளர் திரு. செல்லையா (பெத்த நாடார் பட்டி)

2. கீழப்பாவூர் ஒன்றியத்தில் சிறந்த பணியாற்றிவரும் செட்டியூர் மகளிர் மன்றம்.



3. அதிசயத் துவரை-ஜி 3, குவாலியர் துவரை விளைச்சல் செய்த முற்போக்கு விவசாயி திரு. இலக்குவன்.



4. சீரணிப் படையினரால் கட்டப்பட்ட ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக் கட்டடம் (கொண்டலூர்).

கிறது. இந்த நிலை ஏன்? இதை மாற்றி அமைப்பது எப்படி? என்பதைப் பற்றி நாட்டு நலனில்-முன்னேற்றத்தில் அக்கறைகொண்ட அத்தனை பேரும் எண்ணிப் பார்க்கக் கடமைப் பட்டு இருக்கிறோம்.

தொழிலாளர்கள்தான் தொழில் அமைதியைக் கெடுக்கிறார்கள்; நல்லுறவைப் பாதிக்கும் செயல்களில் ஈடுபடுகிறார்கள், எனக் குற்றம் சாட்டும் முதலாளிகள் ஒரு புறம்; மாடு போல் உழைக்கிறோம், எங்கள் உழைப்பினால் பெறும் பயனைத் தங்களது உல்லாச வாழ்விற்குப் பயன்படுத்திக்கொள்ள முதலாளிகள் முனைகிறார்களே தவிர எங்கள் வாழ்வை வளமாக ஆக்க முன்வரவில்லையே என்று மனம் வெதும்பிக் குரல் எழுப்புகின்ற தொழிலாளர்களின் உள்ளக் குமுறல் மற்றொரு புறம்.

இந்த நிலை நீடித்தால் நாட்டில் எப்படித் தொழில் அமைதி நிலவும்? வளம் பெருகும்? எனவே இந்தப் பிரச்சனைக்குரிய பரிகாரம் காண வேண்டியது நமது முழு முதற் கடமையாகும்.

பொதுவாகவே முதலாளிகள்" தொழிலதிபர்கள் இலாபம் ஒன்றையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டு தொழில் முதலீடு செய்கிறார்கள் என்ற எண்ணம் பரவலாக உள்ளது. இந்த நிலை மாறித் தாங்கள் முதலீடு செய்வது தொழில் துறையில் ஈடுபட மட்டுமல்ல; நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க மட்டுமல்ல; நமது தாய்த்திருநாடு உலக அரங்கில் தொழில் வளமிக்க நாடாகத் திகழவேண்டுமென்ற நாட்டுப் பற்றோடு - உணர்வோடு என்ற நிலை ஏற்படவேண்டும்.

தன்னிடத்தில் வேலை செய்கின்ற தொழிலாளர்களைத் தனது அடிமை, தான் இட்ட பணியை இனிது முடிப்பதற்குரிய பணியாள் என்ற மனப்பான்மையை எந்த முதலாளியும் கொண்டுவிடக்கூடாது. தன்னிடத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளிகள் கரத்தில்தான் தனது தொழில் வளமும் செல்வப்பெருக்கும் அடங்கியிருக்கிறது. அவர்களுக்கு மனநிறைவு அளிக்கின்ற வகையில் அவர்களது நலனில் முழு அக்கறை செலுத்தவேண்டும். அவர்கள் குறைகளைக் கண்டறிந்து அவற்றை உடனுக்குடன் தாய்ப்பாசத்துடன் நீக்குவதற்கு முயற்சிக்க வேண்டும். கிடைக்கின்ற இலாபத்தில் ஒரு பகுதியை எடுத்துக் கொண்டு மீதியைத் தொழிலாளர்களின் நலனுக்காக, அவர்களுடைய குடும்ப நலனுக்காக, அவர்களது பிற்கால வாழ்விற்காகப் பகிர்ந்தளித்துவிடவேண்டுமென்ற மனப்பக்குவத்தைத் தொழிலதிபர்கள் பெற்றுவிடுவார்களேயானால் தொழில் தகராறுகள் அநேகமாக எழுவதற்கே இடமில்லை.

தொழிலாளர்களிடம் குறைகளைக் காணுகின்ற நேரத்தில் அன்பு உள்ளத்தோடு, குடும்பப் பாசத்தோடு, பரிவு உணர்ச்சியோடு அதனைக் களைவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்களேயானால் நிச்சயமாகத் தொழில் தகராறுகள் ஏற்படாது. தொழிலாளி — முதலாளி நல்லுறவும் உறுதிப்படும்.

அதைப்போலவே தொழிலாளர்களும் தாங்கள் பெறுகின்ற ஊதியத்திற்காகவே உழைக்கின்றோம் என்ற உணர்வைவிட்டு, தங்களது உழைப்பு, நாட்டு மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக, அவர்களை வாழவைப்பதற்காக என்ற உணர்வைப் பெறுவதுடனல்லாது - நமது நாட்டைத் தொழில் வளமிக்க நாடாக ஆக்குவதற்காக, நம் நாடு உலக நாடுகளின் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்கச் செய்வதற்காக என்ற பொது உணர்வோடு - நாட்டுப்பற்றோடு செயல்படவேண்டும்.

எடுத்துக்காட்டாக இரண்டாவது உலகப்போரில் அணுகுண்டால் தாக்கப்பட்டு உருத் தெரியாமல் அழித்து ஒழிக்கப்பட்ட சப்பான், இன்று உலக அரங்கில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்று சொல்லத் தக்க அளவிற்கு மிகப்பெரிய வல்லரசுகளுடன் — முதலாளித்துவ, சோசலிச நாடுகளுடன் போட்டியிடக்கூடிய அளவிற்குத் தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது. அதற்குரிய காரணமென்ன? அந்த நாட்டுத் தொழிலாளர்கள் தங்களது தாய்நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும்; உலக நாடுகளில் தங்கள் நாடு தொழில் வளத்தில் தலையாய நாடாகத் திகழ

நீர் உயர நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகும் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC

PUMPSET

பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம், எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்
35/2, உட்ஸ் ரோடு.
சென்னை-2.

வேண்டுமென்ற நாட்டுப்பற்றுக்கு, போட்டி மனப்பான்மைக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டதே அல்லவா?

குண்டூசி செய்வதற்குக்கூட இரும்பில்லாத அந்தச் சப்பான் நாட்டு மக்கள் இத்தகைய தொழில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள் என்றால், எல்லா வளமும் நிறைந்துள்ள இந் நாட்டுத் தொழிலாளி வர்க்கமும் தொழில் அதிபர்களும் அத்தகைய நாட்டுப்பற்றுடன், மனஉறுதியுடன் செயல்படத் துவங்கினால் நாம் சாதிக்க முடியாதது என ஒன்றிருக்க முடியுமா?

வாழ்க்கைப்பிரச்சனைக்காகவே நாம் உழைக்கிறோம் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. இந் நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்குவதற்காகவும், நமது தாய்த்திருநாட்டிற்கு உலக அரங்கில் உரிய இடத்தைப் பெற்றுத் தருவதற்காகவும், அந்நிய நாட்டிடம் அன்னை நாடு கையேந்தி நிற்கின்ற அவலநிலையை மாற்றுவதற்காகவும் நாம் உழைக்கிறோம் என்ற உணர்வோடு நமது தொழிலாளர்கள் தீவிரமாகச் செயல்படுவார்களேயானால் அவர்களால் ஆகாதது ஒன்றுமில்லை.

இப்படிக் கடமைகளைச் செய்துவிட்டு உரிமைகளைப் பெற முயற்சிக்க வேண்டும். இந்த முயற்சி அமைதிவழியில், அன்புவழியில் அமைவதே விரும்பத்தக்கது. சட்டம், அமைதி குலைகின்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதோ, பொது மக்களுக்குத் தொல்லை தரத்தக்க வழிகளைப் பின்பற்றுவதோ முறையாகாது. பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குச் சட்ட வழியான, நியாயமான, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

வேலை நிறுத்தமென்பது தொழிலாளர்களின் கடைசி ஆயுதமாக இருக்க வேண்டும். அதைப்போலவே கதவடைப்பும் தவிர்க்கப் படவேண்டும். குறிப்பாகத் தொழில் வளர்ச்சியடையாத நமது நாட்டில் இத்தகைய வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்குமென்பதில் ஐயமில்லை.

தொழிற்சங்கங்களும், அதன் தலைவர்களும் தொழிலளார்களை உரிமைக்காக மட்டும் போராடப் பயிற்றுவிக்கமால், கடமைகளைச் செய்வதற்கும் ஊக்குவிக்க வேண்டும். நம் தாய்நாடு, தொழில் வளத்தில் முன்னிலையில் நிற்கவேண்டும்; தொழிலாளி - முதலாளி நல்லுறவு நீடிக்க வேண்டுமென்று விரும்புகின்ற நாட்டுப்பற்று கொண்டவைாக அவை இருக்கவேண்டும்.

பொதுவாக நாட்டு நலனில் ஈடுபாடு கொண்டு தொழிலாளர்களும் தொழிலதிபர்களும் தங்களது சொந்த நலனை, இலாப நட்டத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருப்பதைக் கைவிட்டு, தரணிபுகழும் நிலையைத் தாய்த்திருநாடு பெறவேண்டும்; இல்லையெனும் தொழில் இங்கில்லை என்ற உயரிய இடத்தை நாம் அடைய வேண்டும்; இதுவே நாம் பிறந்த பொன்னாட்டிற்குச் செய்கின்ற புனிதக் கடமை, தொண்டு என்ற உணர்வோடு செயல்படவேண்டும். ஒரு குடும்பம் இன்புற்றிருக்க வேண்டுமானால் எவ்வாறு கணவனும் மனைவியும் கருத்தொருமித்து இருக்கவேண்டுமோ அதைப் போன்றே தொழிலாளர்களும் தொழில் அதிபர்களும் நாடு வளம்பெற, தொழில் சிறக்க, நலமெலாம் பெற்று வாழ ஒன்றுபட்ட உள்ளத்தினராகச் செயல்படவேண்டும்..

வாழ்க ஒற்றுமை.
வளர்க தொழில் துறை.

கையெழுத்துமட்டும் இருந்த கடிதம்!

புகழ்பெற்ற ஹென்றி வார்டு பீச்செர் என்ற பாதிரியார்க்கு ஒரு கடிதம் வந்தது. அதில் "முட்டாள்" என்ற ஒரு சொல் மட்டுமே எழுதப்பெற்றிருந்தது. அது குறித்து அடுத்த ஞாயிறன்று அவர் ஆற்றிய விளக்கப் பேருரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: பல வேளைகளில் கடிதம் எழுதுவோர் தம் கையெழுத்திட மறந்துவிடுவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்தக் கடிதம் எழுதியவரோ தம் கையெழுத்தை மட்டும் இட்டுவிட்டுச் செய்தியை எழுத மறந்து விட்டார்.

We Manufacture High Quality Pyrotechnic Aluminium Power and Atomised Aluminium Power with West German Collaboration.

The quality of our Aluminium power is far better than the imported powder and will be appreciated by the consumers. We are glad to inform that we save foreign exchange to the tune of Rs. 25 lakhs every year.

THE METAL POWDER COMPANY LIMITED

Maravankulam, Tirumangalam Post
MADURAI DISTRICT

Phone: **Madurai 8147** Grams: **"Powers" Madurai**

கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்
யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கபபட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சுபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்

FACT

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்
பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004

ஊராட்சி அரசிதழ்

GRAMANALAM PART-2

PANCHAYAT GAZETTE

தமிழ்நாடு அரசு ஊழியர்கள், தமது திருமணங்களையோ, அல்லது தமது குழந்தைகளின் திருமணங்களையோ கொண்டாட வேண்டிய தவிர்க்க முடியாத செலவினங்களுக்குக் கடன் வசதி அளிக்க வேண்டியதை மாநில அரசு கடந்தகாலமாகக் கவனத்தில் கொண்டிருந்தது. அதற்கேற்ப இவ்வாணையில் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள விதிகளுக்குட்பட்டு, இந்தக் கடனை அளிக்க அரசு அனுமதி வழங்குகிறது.

இத்திட்டம் 1-4-1969 முதல் செயலுக்கு வருவதுடன் முதற் கட்டமாக இது மூன்றாண்டுகள் செயலிலிருக்கும். இந்த மூன்று ஆண்டுகளுக்குப் பின் நிலைமை பரிசீலனை செய்யப்படும்.

திருமணக் கடன் திட்டம்

இணைப்பு

அரசு ஊழியர்களுக்குத் திருமணக் கடன் வழங்குவதற்குரிய விதிகள்:

(1) திட்டத்தின் நோக்கம் :

தமது திருமணங்களையோ அல்லது தமது மக்களின் திருமணங்களையோ கொண்டாடுவதற்கு அரசு ஊழியர்களுக்கும்—அரசிதழ் பதிவு பெற்ற, பதிவு பெறாதவர்கள்—மற்றும் கடைநிலை அரசு ஊழியர்கள் ஆகியவர்களுக்கு இக்கடன் வழங்கப்படும். அரசு ஊழியரின் சொந்தத் திருமணத்திற்காகவே கடன் தேவையானால் அந்த ஊழியரின் தந்தை அல்லது தாயார் அரசு ஊழியராக இருக்கக் கூடாது. அவர் அரசு ஊழியராக இருந்தால்அவர் கடன்பெறும்தகுதியுடைமையில்லாதவராகவோ அல்லது கடனைக்கோரி விண்ணப்பம் செய்யாதவராகவோ இருத்தல் வேண்டும்.

(2) கடன் தொகை

பதினைந்து திங்கள் ஊதியம்அல்லது ரூபாய் ஈராயிரம் ஆகியவற்றுள்எது குறைவாயுள்ளதோ அந்தத் தொகையே கடனாக அளிக்கப்படும்.

(3) தகுதி

(அ) தொடர்ந்த பணியிலிருக்கும் அரசு ஊழியர்கள் இந்தக் கடனைப் பெறத் தகுதியுடையவராவர். மேலும் இக்கடனைக் கோரி விண்ணப்பம் செய்யும் காலத்தில் அவர் ஐந்தாண்டுகளுக்குக் குறைவில்லாது அரசுப் பணியில் சேவையாற்றியவராக இருத்தல் அவசியம். படிகளுடன் கூடிய ஊதியமில்லாத விடுப்பிலிருக்கும் அரசு ஊழியர்களைத் தவிர ஏனைய அரசு ஊழியர்கள் அனைவரும் இக்கடனைப் பெறத் தகுதியுடையவராவர். அரசு ஊழியரின் மனைவி/கணவர் அல்லது அவருடைய தந்தை அல்லது தாயாரும் அரசு ஊழியராக இருப்பின் அவர்களில் ஒருவர் மட்டுமே அக்குடும்பத்தில் நடைபெறவிருக்கும் ஒரு திருமணத்திற்குக்கடன் பெறத் தகுதியுடையவராவார்.

(ஆ) ஓர் அரசு ஊழியருக்கு இந்தக் கடன் வழங்கப்பட்டு, இக் கட

னுக்குரிய தவணைத் தொகையை மாதச் சம்பளப்பட்டியலிலிருந்து கழித்தபின், அவர் 'வீட்டுக்கு எடுத்துச் செல்லும் ஊதியம்' மொத்த ஊதியத்தில் 25 சதவீதத்திற்குக் குறைவாக இருக்கும் நிலை அவருக்கு ஏற்படின், அவர் இக்கடனைப் பெறத் தகுதியுடையவராகமாட்டார்.

குறிப்பு: அரசு ஊழியர் பெறும் ஊதியம் மற்றும் படிகளிலிருந்து, வசூலிக்கப்பட வேண்டிய தொகைகள் அனைத்தையும் கழித்த பிறகு, எஞ்சி நிற்கும் தொகையே ''வீட்டிற்கு எடுத்துச் செல்லும் ஊதியம்'' எனப்படும்.

(இ) ஏற்கனவே திருமணத்திற்கென்று வழங்கப்பட்ட கடனுக்குரிய தவணைகள் எஞ்சி நின்று, அவை வசூலிக்கப்பட்டுக்கொண்டிருக்கும்போது இரண்டாவது அல்லது அதற்கும் மேலாக எந்தக் கடனும் வழங்கப்படமாட்டாது.

(ஈ) கைவசமிருக்கக்கூடிய நிதிகளைப் பொறுத்துத்தான் கடன் அனுமதிக்க இயலும். இந்தக் கடனைக்கொடுக்கத்தான் வேண்டுமென்றோ அல்லது அதைப் பெற உரிமையிருக்கிறதென்று எண்ணி அதைக் கேட்கவோ முடியாது.

(4) விண்ணப்பம் செய்தல்

(அ) இவ்விதிகளின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 1இல் கடனைக் கோரி விண்ணப்பம் செய்ய வேண்டும். இவ்விண்ணப்பம் இருபடிகளில் இருக்க வேண்டும். ஊழியர், தாம் பணியாற்றும் அலுவலகத்தின் வாயிலாக நிதித்துறைக்கு அவற்றை அனுப்ப வேண்டும். இவ்விதிகளின் பிற்சேர்க்கையிலுள்ள உடன்படிக்கைப்படிவம் 2 ஐயும் விண்ணப்பங்களுடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தின் படியொன்றை முன்னதாகவே, நிதித் துறையின் அரசுச் செயலாளருக்கு அனுப்பிவிட வேண்டும்.

(ஆ) திருமணத்திற்கு ஆறு திங்கள் முன்பாகக் கடன்கோரும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(இ) தற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளிவைக்கப்பட்டுள்ள அரசு ஊழியரிடமிருந்து விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் தற்காலிகமாக வேலையிலிருந்து தள்ளி வைக்கப்பட்டுள்ள நிலையிலிருக்கும் அரசு ஊழியருக்குக் கடன் அனுமதிக்கவோ அல்லது அந்தக் கடனைக் கொடுக்கவோ கூடாது. தவிர ஓர் அரசு ஊழியரின் மீதுபெரும் குற்றச்சாட்டுகளிலிருந்து அவற்றால் அந்த ஊழியர் வேலையிலிருந்து நீக்கப்படுவார் அல்லது தள்ளப் படுவார் அல்லது ஓய்வு பெறக் கட்டாயப்படுத்தப் படுவார் என்ற நிலையில் இருந்தாலும் அவருக்குக் கடன் கிடையாது.

(5) பிணைப்பு

கடன் பெறுபவர் தன்னுடைய சொந்த முறையில் எழுதிக்கொடுக்கப்பெற்ற உறுதி மொழிப் பத்திரத்தையும், இவ்வாணையின் பிற்சேர்க்கையிலுள்ள படிவம் 3இல் மற்றொரு நிலையான அரசு ஊழியர் பிணைப்பாக நின்று எழுதித் தந்த உறுதி மொழியினையும் கொடுத்த பிறகே கடன் வழங்கப்படும்.

(6) வட்டி

வருங்காலச் சேமிப்பு நிதியிலிருந்து அவ்வப்போது பெறப்படும் கடனுக்கு வசூலிக்கப்படும் அதே வட்டி விகிதம் தான் இதற்கும் வசூலிக்கப்படும்.

(7) கடனை அளித்தல்

(அ) எந்த ஒரு திருமணத்திற்காகக் கடன் வழங்கப்படுகிறதோ

அந்தத் திருமணம் கொண்டாடப்படும் நாளைக்கு இரு திங்களுக்கு முன்பாகக் கடன் கொடுக்கப்படும்.

(ஆ) விண்ணப்பித்தவரின் நிலையைக் கடந்தும் அவரது கட்டுப்பாட்டிற்குட்படாத காரணங்களினாலும், அவருக்குக் கடனைப் பெற்று அளிக்க இயலாவிடில், ஏற்கெனவே அவருக்கு அனுமதிக்கப்பட்ட கடனைத் திருமணம் முடிந்த பின்னரும் அவருக்குக் கொடுக்கலாம்.

(8) திரும்ப வசூலித்தல் :

(அ) 60 திங்களுக்கு மேற்படாது, சமமான தவணைகளில் கடனின் அசல் தொகை மட்டும் வசூலிக்கப்படும். அரசு ஊழியர் ஓய்வு பெறுவதற்கு முன்பே கடனும் அதற்குரிய வட்டியும் சேர்த்து வசூலிக்கப்பட்டுவிடும் வகையில், தவணைகள் ஒழுங்குபடுத்தப்படும். முழு ரூபாய்களுக்குக் கணக்கிடப்பட்டுக் கடன் திரும்பப் பெறப்படும். அரசு ஊழியர் வேலையிலிருந்தாலும், அல்லது விடுப்பிலிருந்தாலும் அவருடைய ஊதிய அல்லது விடுப்புச் சம்பளப் பட்டியல் தொகையிலிருந்து இக்கடன் தவணைகள் கட்டாயமாக வசூலிக்கப்பட்டுவிடும்.

* * *

(நிதித் துறையின் 1—1—69 ஆம் நாளிட்ட ஆணை எண் 311இல் திருமணக் கடன் வசதியளிக்கப்பட்டு, அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அந்த ஆணையில் 11 விதிகளும், பிற்சேர்க்கையில் பல படிவங்களும் உள்ளன. அவற்றில் சிலர் முக்கியமான பகுதிகளையே மொழிபெயர்த்து மேலே அளித்துள்ளோம். ஏனையவற்றை ஆணையிலேயே காண்க. — ஆசிரியர்



நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
நன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதறாஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

ஊராட்சி வளர்ச்சி மானியங்கள்

ஊராட்சி வளர்ச்சி - 1969-70ஆம் ஆண்டுக்குரிய மானியங்களை முறைப் படுத்தல், வழியுரைக்கும் விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

1969-70ஆம் ஆண்டில், ஊராட்சி ஒன்றியங்களின் பல்வேறு திட்டங் களில் ஏற்படும் செலவினங்களுக்குத் தேவையான வழியுரைக்கும் விளக்க ஆணைகள், கிராம வளர்ச்சி உள் ளாட்சித் துறையின் 1968ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 24ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1237இல் பிறப் பிக்கப் பட்டன. (இவ்வாணையின் தமி ழாக்கத்தை 1968ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் "கிராம நலம்" இதழில் காண்க) ஊராட்சி ஒன்றியங் களுக்கான செலவினங்களை 1969-70ஆம் ஆண்டு முழுதுக்கும் முறைப் படுத்துவதற்குத் தகுந்த விளக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டியது பற்றி அரசு பரிசீலனை செய்தது.

2. அதற்கேற்ப 1969-70ஆம் ஆண்டுச் செலவினங்களை முறைப் படுத்துவதற்கு, 1960ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி, உள் ளாட்சித் துறையின் 25-1-1961 நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுடன் இவ்வாணையின் இணைப் பிலுள்ள விளக்கக் குறிப்புகளும் சேர்த்துப் பின்பற்றப்பட வேண்டு மென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

3. பல்வேறு திட்டங்களுக்கென 1969-70ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட் டுள்ள நிதிகளை, முடிவு பெறாத வேலை களை முழுவதுமாக நிறைவேற்றவே பயன்படுத்த வேண்டும். 26-3-1969 நாளிட்ட குறிப்பாணை எண். 51936/

p1/68. 1,2இல் உள்ள விளக்க ஆணை கள் பின்பற்றப்படவேண்டும்.

இணைப்பு

விளக்கக் குறிப்புகள் :

பிரிவு I-உள்ளூர் வருவாய் - சாதா ரணமானவை.

1. உள்ளூர்ச் செஸ்வரி 2. உள்ளூர் மேல் வரி 3. பதிவுப்பத்திர மேல் வரி 4. கேளிக்கை வரி, மற்றும் காட்சி வரியின்மீது மேல் வரி 5. கிராம வீட்டு வரி 6. உள்ளூர்ச் சிறிய வருவாய்கள்.

1969-70ஆம் ஆண்டிற்கு மேற் கண்ட வருவாய் மற்றும் மானியங் களை முறைப்படுத்த 1960ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211, மற்றும் அவற்றின் பின் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அனைத் தும் பின்பற்றப்படவேண்டும்.

பிரிவு II: அரசு மானியங்கள் (சட்டத்தில் வருபவை)

7. நிலவரி ஒதுக்கீடு (சட்டத்தில் வருபவை)

8. உள்ளூர்க் கல்வி மானியம்.

9. உள்ளூர்ச் செஸ் மேல் வரி இணைப்பு மானியம்.

10. உள்ளூர்ச் சாலைகள் மானியம்.

11. கிராம வீட்டு வரி இணைப்பு மானியம்.

1969-70ஆம் ஆண்டுக்கு மேற் கண்ட மானியங்களை முறைப்படுத்த 1960ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின்

1961ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப் பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

பிரிவு III: அரசு மானியங்கள் (திட்டத்தில் வராதவை)

12. கல்வித் துணை மானியம்.

13. ஆசிரியர்களின் அகவிலைப்படிக்குரிய சிறப்பு மானியம்.

14. மதிய உணவு மானியம்.

1969-70 ஆண்டிற்கு மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த, தற்போதுள்ள விளக்க ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

15. சமூகக் கல்வி மானியம்:

1969ஆம் ஆண்டில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு இம்மானியத்தின்கீழ் ஏற்படும் செலவு ரூ. 4,400 (ரூபாய் நான்காயிரத்து நானூறு) இருக்க வேண்டும். கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1966ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10ஆம் நாளிட்ட அரசு ஆணை 2604இல் பிறப்பிக்கப் பட்டுள்ள ஆணைகளுக்கு ஏற்ப, 1969-70 ஆண்டிற்கும் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

16. மகளிர், சேய் நல மானியம்:

இந்த மானியத்திற்கான ஆணைகள் தனியாக அரசாங்கத்தின் சமூக நலத்துறையிலிருந்து பிறப்பிக்கப் படும்.

17. கிராம வேலைகள் மானியம்:

(அ) இணைப்புச்சாலைகள்

1969-70ஆம் ஆண்டில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இம் மானியத்தின் கீழ் இணைப்புச் சாலைகளுக்காகும் செலவுகள் ரூ. 21,500க்குள் (ரூபாய் இருபத்தோராயிரத்து ஐந்நூறு மட்டும்) இருக்க வேண்டும். அரிசனங்கள் மற்றும் இதர பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் இணைப்புச்சாலைகளுக்காகும் செலவில் 10 சதவீதத்தை, அரிசன நலத்துறை அளிக்கவேண்டும் என்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1964ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414இல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இந்த ஆண்டிற்கும் பொருந்தும்.

(ஆ) குடிநீர் விநியோகம்

சாதாரணக் கிணறு வேலைகள், குழாய்மூலம் குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு 1969-70ஆம் ஆண்டில் ஓர் ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவுகள் முறையே ரூ. 8,600 (ரூபாய் எண்ணாயிரத்து அறுநூறு), ரூ. 19,340 (ரூபாய் பத்தொன்பதாயிரத்து முன்னூற்று நாற்பது)க்குள் இருக்கவேண்டும். அரிசனங்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் குடிநீர் வேலைகளுக்கு ஏற்படும் செலவில் 15 சதவீதத்தை, அரிசன நலத்துறை வழங்க வேண்டுமென்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414இல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இதற்குப் பொருந்தும்.

(இ) பள்ளிக் கட்டடங்கள்

ஓர் ஒன்றியத்திற்கு 1969-70ஆம் ஆண்டிற்கு ஏற்படும் செலவு ரூ. 13,260 (ரூபாய் பதிமூன்றுயிரத்து இருநூற்று அறுபது மட்டும்) இருக்க வேண்டும். இவ்வாணையின் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலையை கடந்த வட்டாரங்களுக்கு (இணைப்பில் பிற்சேர்க்கை) ஏற்படும் செலவுகள் (28. Education—L. Development Schemes—Schemes in the Fourth Five year plan I. State Schemes III primary—(iii) Grants to Local Bodies—G. Educational Grants to post stage II Blocks) என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப் படவேண்டும்.

கிராம வேலைகள் மானியத்திலுள்ள நிதி ஒதுக்கீட்டில் 20 சதவீதம் அரிசனங்களின் நன்மைக்குரிய வேலைகளில்மட்டும் செலவிடப்படவேண்டும்.

18. உள்ளூர்ப் பாசன மானியம்:

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964ஆம்ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 13ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1681இல் பிறப்பிக்கப் பட்ட ஆணைகளின்படி, இந்த மானியத்திற்குரிய செலவுகள்முறைப் படுத்தப்படவேண்டும்.

19. வேளாண்மை மானியம்:

கீழ்க்காணும் திட்டங்களுக்குரிய செலவினங்கள், அவற்றின் கீழே குறிப்பிட்ட தொகைக்குள் இருக்க வேண்டும்.

1. வேளாண்மைத் திட்டங்கள்:

ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 20,160 (ரூபாய் இருபதாயிரத்து நூற்று அறுபது).

2. கால்நடைப் பராமரிப்புத் திட்டம்:

ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 6,100 (ரூபாய் ஆறு ஆயிரத்து நூறு மட்டும்).

3. மீன்வளம்:

மீன் வளத் திட்டங்களுக்கான செலவுகளை முறைப்படுத்துவதற்குரிய ஆணைகள் அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையால் தனியே பிறப்பிக்கப்படும்.

20. மகப்பேறு நிலையங்கள் நிர்வகிப்பு மானியம்:

21. மருந்தகங்கள் நிர்வகிப்பு மானியம்:

இம்மானியங்களை முறைப்படுத்தத் தற்போதுள்ள ஆணைகள் பின்பற்றப் படவேண்டும்.

பிரிவு IV—உள்ளூர் வருவாய் (சிறப்பானவை

22. உள்ளூர்ப் பாசனக்கட்டணம்.

23. கிராம வளர்ச்சி விகிதங்கள்.

24. தன்னிச்சையாக அளிக்கும் வளர்ச்சி நன்கொடைகள்.

மேற்கண்ட வருவாய் ஆதாரங்களை முறைப்படுத்த 1960ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16ஆம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664 மற்றும் உள்ளாட்சித் துறையில் 1961ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

பொதுவானவை

சில ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகள் சற்றுக் கூடுதலாகவே இருக்கலாம். அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை நிறைவு செய்ய, அக்கோட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அக்கோட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிடையே தாம் விரும்பியபடி, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மறு நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஆனால் இந்த மறு நிதி ஒதுக்கீடானது அக் கோட்டம் முழுவதற்கும் தொடர்புள்ள திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டிற்கு மேற்படக்கூடாது. அதே போன்று மாவட்ட அளவில், சம்பந்தப்பட்ட திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அந்த மாவட்டத்திற்கு அந்தத் திட்டம் முழுவதற்குமுள்ள நிதி ஒதுக்கீட்டிற்குள் மறு நிதி ஒதுக்கீடு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றங்கள் செய்கையில் சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்கள் ஒரு புறத்திலும், இரண்டாம் நிலை வட்டாரங்கள் மறுபுறத்திலும் தனித்தனியே உள்ளவாறு மறு நிதி ஒதுக்கீட்டைத் தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களின் பெயர்களைப் பிற்சேர்க்கையில் காண்க. பல்வேறு திட்டங்களுக்குரிய செலவினங்கள் பற்று வைக்கப்படவேண்டிய கணக்குத் தலைப்புகள், கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் குறிப்பாணை எண் 52161 கணக்கு 1/69 நாள் 8-4-1969ன்படி இருக்கவேண்டும்.

இணைப்பிற்குரிய பிற்சேர்க்கை:

1969-70இல் இரண்டாம் நிலையைக் கண்ட வட்டாரங்கள்பட்டியல்

1. செங்கற்பட்டு மாவட்டம்

1. திருக்கழுக்குன்றம்
2. பூண்டி
3. திருவள்ளூர்
4. கடம்பத்தூர்
5. பள்ளிப்பேட்டை
6. எல்லாபுரம்
7. ஸ்ரீபெரும்புதூர்
8. பூவிருந்தவல்லி
9. மதுராந்தகம்
10. பரங்கிமலை
11. மீஞ்சூர்
12. காட்டான் குளத்தூர்
13. உத்திரமேரூர்
14. குன்னத்தூர்

2. வட ஆர்க்காடு மாவட்டம்

15. கலசப்பாக்கம்
16. துரிஞ்சாபுரம்
17. கீழ்ப்பெண்ணாத்தூர்
18. போளூர்
19. கே. வி. குப்பம்
20. சேத்துப்பட்டு
21. ஆர்க்காடு
22. வேம்பாக்கம்
23. பேரணமல்லூர்
24. திருப்பத்தூர்
25. ஆரணி
26. வாலாஜா
27. சோளிங்கபுரம்
28. காவேரிப்பாக்கம்

3. தென் ஆர்க்காடு மாவட்டம்

29. கீரப்பாளையம்
30. மேல்புவனகிரி
31. பண்ருட்டி
32. குறிஞ்சிப்பாடி
33. சின்னசேலம்
34. மேலமலையனூர்
35. கள்ளக்குறிச்சி
36. செஞ்சி
37. மங்களூர்
38. உளுந்தூர்ப்பேட்டை
39. மரக்காணம்
40. திருநாவலூர்
41. கோலியனூர்
42. காணை

4. தஞ்சாவூர் மாவட்டம்

43. திருத்துறைப்பூண்டி
44. வேதாரணியம்
45. தலைஞாயிறு
46. அம்மாபேட்டை
47. வலங்கைமான்
48. கொள்ளிடம்
49. சீர்காழி
50. திருப்பனந்தாள்
51. மாயூரம்
52. செம்பனார்கோவில்
53. குத்தாலம்
54. கும்பகோணம்
55. திருவிடைமருதூர்
56. பாபநாசம்
57. முத்துப்பேட்டை
58. பட்டுக்கோட்டை
59. ஒரத்தநாடு
60. ஆவுடையார்கோவில்
61. நாகப்பட்டினம்
62. கீவளூர்
63. குடவாசல்

5. திருச்சிராப்பள்ளி மாவட்டம்

64. கே. பரமத்தி
65. வேப்பந்தட்டை
66. முசிறி
67. தாத்தையங்கார்ப்பேட்டை
68. திருவரங்குளம்
69. அரவக்குறிச்சி
70. தொட்டியம்
71. திருமானூர்
72. பெரம்பலூர்
73. துறையூர்
74. அரியலூர்
75. லால்குடி
76. குளித்தலை
77. தாந்தோனி
78. உப்பிலியாபுரம்

6. மதுரை மாவட்டம்

79. மதுரை (கிழக்கு)
80. மேலூர் (வடக்கு)
81. வாடிப்பட்டி
82. அலங்காநல்லூர்
83. ரெட்டியார் சத்திரம்
84. ஆத்தூர்
85. மேலூர் (தெற்கு)
86. மதுரை (மேற்கு)
87. உசிலம்பட்டி
88. செல்லம்பட்டி
89. திருமங்கலம்
90. கள்ளிக்குடி
91. டி. கல்லுப்பட்டி
92. சேடப்பட்டி
93. திண்டுக்கல்
94. போடிநாயக்கனூர்
95. பழனி
96. ஆண்டிப்பட்டி
97. வத்தலக்குண்டு
98. நத்தம்
99. திருப்பரங்குன்றம்

7. இராமநாதபுரம் மாவட்டம் :

100. ஸ்ரீவில்லிபுத்தூர்
101. சிவகாசி
102. வத்திராயிருப்பு
103. இராஜபாளையம்
104. சிங்கம்புணரி
105. கண்ணங்குடி
106. இராஜசிங்கமங்கலம்
107. திருவாடானை
108. காளையார்கோவில்
109. தேவகோட்டை
110. கமுதி
111. விருதுநகர்
112. காரியப்பட்டி
113. கல்லல்

114. மானாமதுரை
115. கடலாடி
116. முதுகுளத்தூர்
117. சாத்தூர்
118. பரமக்குடி
119. வெம்பக்கோட்டை

8. திருநெல்வேலி மாவட்டம் :

120. பரமக்குடி
121. சேரன்மாதேவி
122. சங்கரன்கோவில்
123. மேலநீலிதநல்லூர்
124. குருவிக்குளம்
125. கோவில்பட்டி
126. வள்ளியூர்
127. இராதாபுரம்
128. மானூர்
129. ஆலங்குளம்
130. கருங்குளம்
131. சாத்தான்குளம்
132. வாசுதேவநல்லூர்
133. தூத்துக்குடி
134. ஒட்டப்பிடாரம்

9. கன்னியாகுமரி மாவட்டம் :

135. அகஸ்தீஸ்வரம்
136. மூன்சிறை
137. மேல்புரம்
138. கிள்ளியூர்
139. குத்தனகோடு
140. இராஜக்காமங்கலம்

10. நீலகிரி மாவட்டம் :

141. உதகமண்டலம்
142. குன்னூர்
143. கோட்டகிரி
144. கூடலூர்

11. கோயம்பத்தூர் மாவட்டம் :

145. சத்தியமங்கலம்
146. கோபிசெட்டிபாளையம்
147. ஈரோடு
148. பெருந்துறை
149. கொடுமுடி
150. மொடக்குறிச்சி
151. துக்கநாயக்கன்பாளையம்
152. பல்லடம்
153. சுல்தான்பேட்டை
154. திருப்பூர்
155. பொங்களூர்
156. காங்கேயம்
157. வெள்ளக்கோவில்
158. குண்டடம்
159. தாராபுரம்
160. அவினாசி
161. சூலூர்
162. பவானி
163. கிணத்துக்கடவு
164. பவானிசாகர்
165. பெரியநாயக்கன்பாளையம்
166. தளவாடி
167. மூலனூர்

12. சேலம் மாவட்டம் :

168. கங்கவல்லி
169. தலைவாசல்
170. பெத்தநாயக்கன்பாளையம்
171. ஆத்தூர்
172. கொளத்தூர்
173. நாமகிரிப்பேட்டை
174. நங்கவல்லி
175. மேச்சேரி
176. இடைப்பாடி

13. தர்மபுரி மாவட்டம் :

177. கிருஷ்ணகிரி
178. வேப்பனப்பள்ளி
179. காவேரிப்பட்டினம்
180. பருகூர்
181. பெண்ணாகரம்
182. ஊத்தங்கரை
183. மொரப்பூர்
184. ஹோசூர்
185. தர்மபுரி

கீழ்க்குறிப்பிட்ட வட்டாரங்களைப் பொருத்த வரையில், கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகள் பின்பற்றப்படவேண்டும்.

30-9-1969 வரை	முதல் நிலை இரண்டாம் நிலை வட்டாரங்களுக்குரிய தலைப்புக்கள்.
30-9-1969க்குப் பிறகு (அதாவது 1-10-1969 தொடக்கம்)	இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்குரிய கணக்குத் தலைப்புக்கள்.

மாவட்டம்	ஊராட்சி
செங்கற்பட்டு	காஞ்சீபுரம்
வட ஆர்க்காடு	கனியம்பாடி
தென் ஆர்க்காடு	தியாக துர்க்கம்
தஞ்சாவூர்	கோட்டூர்
திருச்சிராப்பள்ளி	கரம்பக்குடி
மதுரை	நிலக்கோட்டை
இராமநாதபுரம்	மண்டபம்
திருநெல்வேலி	செங்கோட்டை
கோயம்புத்தூர்	உடுமலைப்பேட்டை
சேலம்	வாழப்பாடி

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 29-4-1969 நாளிட்ட அரசு ஆணை எண் 805ன் சுருக்கம்)

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க:

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர் களைக் காப்பாற்ற:

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்



CODE MD-1/VL

தயாரிப்பவர்கள்:

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.,

மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள்:

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:	கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071	தொலைபேசி எண் 81227
75, கலாசி பாளையம்	38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 539	தபால் பெட்டி எண் 677
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2	இராயப்பேட்டை, சென்னை-14

தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குனரால் பி.எல்.எஸ். அச்சகத்தில் (65/1 ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப் பட்டு, கிராம வளர்ச்சித்துறை இயக்குனரால் வெளியிடபடுகிறது.
ஆசிரியர்: திரு. சு. செல்லப்பன், எம்.ஏ.,பி.டி.

அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம் குடும்ப நல திட்டத்தின் சின்னம்

குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

REGD. No. M. 7277

© தமிழ் நாடு அரசு, 1969

Stanes

தைப் பட்டத்தில் அமோக விளைச்சலும், பெருகிய லாபமும் பெற

விதை உற்பத்தியாளர்கள் :

தந்தி : " கோல்டு ஸீட் " | போன் : 30442

CSC COIMBATORE SEEDS CORPORATION

Gold Seed

பேரூர் அஞ்சல், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விவரங்களுக்கும் :

(உர இலாகா), தபால் பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18

(அல்லது)

ஸ்டேன்ஸ் உரத் தொழிற்சாலைகள் :

வளவனூர், விழுப்புரம், போன்-25	துடியலூர், போன் : 25385 CBE	ஆவணியாபுரம் மதுரை, போன் : 5533	தச்சநல்லூர் திருநெல்வேலி, போன் : 1125

குறிப்பு : மக்காச்சோள விதைகள் இருப்பு தீர்ந்து, வருகிற பிப்ரவரி-மார்ச்சில் விநியோகத்துக்கு வரும். சோளம் (CSH-1) கம்பு (HB-1) இருப்பு விரைவில் குறைந்து வருவதால், தேவைக்கு உடனே எழுதவும்.

கல்வி

தமிழக அரசு

வாய்மையே வெல்லும்

14 AUG 1969

ஜூன் 1969



'கிராமநலம்' பிப்ரவரி இதழான அமரர் அண்ணா மலரைத் தமிழக முதல்வர் வெளியிடுகிறார்



செய்தியாளருக்கு முதல்வர் இதழைத் தருகிறார்



செய்தியாளரிடம் முதல்வர் உரையாடுகிறார்

சீரணி

(கிராம நலம்)

கதிர் 14] ஜூன் 1969 [நெல் 9

கல்வி இதழ்

தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி &
உள்ளாட்சித் துறைத் திங்கள் இதழ்

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்
1.	கற்றிலனுயினும் கேட்க	4
2.	நட்புறவை இணைக்கும் பாலம்	8
3.	சமுதாய அடிப்படை	11
4.	கொள்கையில் திளைத்தவர்	13
5.	வள்ளுவரின் வான் புகழ்	18
6.	எமிலி	20
7.	அறிவு அற்றம் காக்கும் கருவி	25
8.	கற்றதனுல் ஆன பயன்	29
9.	கிராமப் பகுதிகளில் அறிவியல் வளர்ச்சி	35
10.	தரணி புகழ் சீரணி	38
11.	எது சிறந்தது ?	41
12.	வெற்றி உறுதி	42
13.	கல்விச் சீர்திருத்தம்	43
14.	பம்பரம்	46
15.	பாசனத்திற்கு மட்குழாய்கள்	52
16.	பிறர் நலம் பேணுக	55
17.	கல்வி வெள்ளம்	59
18.	இஞ்சி பயிரிடலாமே	63
19.	ஆசிரியர் நல தேசிய நிறுவனம்	66
20.	புத்துலகம் கண்ட புரட்சிக் கவிஞர்	68
21.	கிராமம் சிறக்குமே	73
22.	அளவோடு பெற்று வளமோடு வாழ்க	75
23.	தேடாமல் வந்த சுழற் கேடயம்	81
24.	ஊராட்சி அரசிதழ்	83

சீரணி தோன்றுகிறது !

அறிஞர் அண்ணு அவர்கள் அமைத்த சீரணி செந்தமிழ் நாட்டு மக்களிடையே தொண்டுணர்ச்சியை அரும்பச் செய்து சமுதாயத்தில் புதியதொரு விழிப்புணர்ச்சியை உருவாக்கி வருகிறது.

அந்தத் திருப்பெயரில் உங்கள் கரத்தில் தவழ்கிறது 'கிராமநலம்'. இனிமேல் 'சீரணி' என்ற பெயரிலேயே 'கிராமநலம்' இதழ் வெளிவரும்.

அனைத்து இந்தியாவும் போற்றிப் புகழும் சீரணியால் உருவாகிவரும் சமுதாய மேம்பாடு, வேளாண்மை வளர்ச்சி, தொண்டுள்ளம், பொருளாதார உயர்வுக்குரிய முயற்சிகள் 'சீரணி' இதழால் மேலும் வளரும்....! வளம் பெறும்!....

ஊரெல்லாம் அணி பெற -
ஒவ்வொரு துறையும் சீர்பெற -

பட்டிதொட்டியெல்லாம் பரவி வரும் சீரணியின் தொண்டு இல்லந்தோறும் நல்லோர் உள்ளந்தோறும் நிலவிடவே உங்கள் கையில் சீரணி!

சீரணி தோன்றி விட்டது!

இனி அதன் பெருமையும் தொண்டும்- நாடெங்கும் வீடெங்கும் பரவிட உங்கள் உதவியும் ஒத்துழைப்பும் வேண்டும்!

194484

சென்னை அகில இந்திய வானொலியின்

1969-70ஆம் ஆண்டிற்கான கல்வி ஒலிப் பரப்பைத் துவக்கி வைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் நிகழ்த்திய வானொலி உரை. (7-7-'69)

என் அன்பு நிறை மாணவ மாணவிகளே !

நிலத்திலிருந்த மனிதன் நிலாவுக்குத் தாவும் காலத்தில் நாம் வாழ்கிறோம்.

சந்திரனில் காணும் கறுப்புத் திட்டுக்களைப் பார்த்து நாம் அதோபார் ஔவைப்பாட்டி நூல் நூற்றுக் கொண்டிருக்கிறாள் என்று குழந்தைகளுக்குக் காட்டிக் கொண்டிருந்தோம். சந்திரனுக்கும் களங்கமுண்டு என்று தொடங்கி- கவிஞர்கள் உவமைகளை அடுக்கிக் கொண்டிருந்தனர். ஆனால், அமெரிக்க நாட்டுக்காரரும், ரஷ்ய நாட்டுக்காரரும், போட்டி போட்டுக் கொண்டு அந்தக் கறுப்பு எதுவாக இருக்கும் என்று ஆராய்ச்சி செய்தனர்.

சந்திரன் பூமியைப் போன்ற ஒரு கோள், அதாவது கிரகம். சூரியனின் ஒளியைப் பெற்றே அது பிரதிபலிக்கிறது; பல லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருப்பதால் சிறிய வெள்ளித்தட்டு போலத் தெரிகிறது. சந்திரனில் இருந்து பார்த்தால் பூமியும் அப்படித்தான் தெரியும், என்றெல்லாம் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளை அடிப்படையாக வைத்து அந்தக் கறுப்பு, சந்திரனில் உள்ள மேடு பள்ளங்கள்,



மலைகள், பள்ளத் தாக்குகளாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதி, அதனை நேரிலே போய்க் காணவும், சந்திரனில் இறங்கவும் திட்டமிட்டிருக்கின்றனர். சந்திரனுக்கு வெகு அருகாமையில் வரை செல்வதில் வெற்றி கண்ட அமெரிக்க விஞ்ஞானி, விரைவில் சந்திர மண்டிலத்தில் மனிதனை உலவவிட்டு, உறங்க விட்டு,

மீண்டும் பூமிக்கு அவனை வரவழைக்கப் போகிறான்- செய்திகள் வருகின்றன. செந்தேன் என இனிக்கின்றது. (இதை நீங்கள் படிக்கும்போது இது முடிந்த செய்தியாகிவிட்டது.)

ஆனால் நமது நாட்டில்? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். மாணவ மணிகளே! இன்று மாபெரும் வல்லரசுகளாகத் திகழும் நாடுகள் பிறப்பதற்கு முன்பே, தமிழகம் உலகமெங்கணும் புகழ் பரப்பிக் கொண்டிருந்தது. அன்று, தமிழ்நாட்டின் மரக் கலங்கள் மேலை நாடுகளில் வாணிகம் செய்த வரலாறு பற்றிக் கிரேக்கப் பேராசிரியர்கள் விட்டுச் சென்ற குறிப்புக்கள் இன்றைக்கும் பேசிக் கொண்டிருக்கின்றன.

அந்த உயர்ந்த நிலைமாறி இடைக் காலத்தில் தாழ்ந்துவிட்ட தமிழ்நாடு, இன்று வீறுகொண்டு தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழ்நாடு என்ற பெயரை மறுபடியும் பெற்ற நமது நாடு, இனிப் பொற்காலத்தைக்காண வேண்டும். எதிர்காலத் திருநாட்டில் நல்ஒளியைப் பாய்ச்சக் கூடியவர்கள் இன்றைய இளைஞர்கள்- மலரா மொக்குகள்- மாணவ மணிகள். மாணவர்கள் ஒரு நாட்டின் இருள் போக்கும் சுடர் விளக்குகள்; சுவைக் கனிகள். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்; சுவைக் கனியினையும் தேனில் தோய்த்திடிலோ இன்பம் கொள்ளை, கொள்ளை. அந்த நல் இன்பம்பெற- நள்ளிருளில் ஒளிச்சுடர் பெற-அடிப்படையானது கல்வி என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? கல்வி எனும் அடித்தளத்தின் மீதுதான் நாகரீகம் என்னும் கோட்டை எழும்புகிறது. நாட்டு முன்னேற்றமெனும் கொடி பறக்கிறது. இதை உணர்ந்த வள்ளுவப் பெருந்தகை, 'அறிவு அற்றம் காக்கும் கருவி' என்று கூறினார். அந்த அறிவை, நம் மாணவ மணிகள் சீராகப்பெற- சிறப்பாகப் பெற- தமிழக அரசு தீட்டியுள்ள திட்டங்கள் பற்பல.

இலவச மதிய உணவு- இலவசச் சீருடை — இவைகளே அல்லாமல் இன்று கல்லூரியில் புகுமுக வகுப்பு முடிய இலவசக் கல்வி.

அள்ளிப் பருகும் கல்வி அமுதத்திற்கிடையே வறுமை எனும் நச்சரவு தலை காட்டாமல் இருக்கவே இந்த ஏற்பாடுகள்.

அரசின் இந்த அக்கரை மிகுந்த ஏற்பாடுகளை அலட்சியப்படுத்தி, இளமையிற் கல்லாது, முதுமையில் ஒரு நிலையில் நில்லாது முடித்திடலாமா வாழ்க்கையை என்று மாணவக் கண்மணிகளே எண்ணிப் பார்த்திடுக!

''கற்க'' என்றார் வள்ளுவர்-
அதுவும் ''கசடறக் கற்க'' என்றார்-
''கற்பவை கற்க'' என்றார்-
''அதனைக் கசடறக் கற்க'' என்றார்-
''கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்
தக'' என்றார்-

கற்பவை யாவை?

பள்ளியில் ஆசிரியருடன் உள்ள ஒரே ஒரு கற்பிக்கும் கருவி, 'பிரம்பு' தான் என்ற பழைய நிலைமாறி, இன்று உலகத்தையே பள்ளிக்கூட வகுப்புக்குள் கொண்டு வந்து நிறுத்தக்கூடிய அளவுக்குப் பலவிதமான கற்பிக்கும் கருவிகள் ஆசிரியரின் பணிக்குப் பயன்படுகின்றன.

மணலில் விரல் தேயத்தேய 'அரிநமோத்து சிந்தம்' என்று எழுதிய காலம் போய், புளியங்கொட்டை வைத்துக் கணக்குச் சொல்லிய காலமும் மெல்லமெல்லத் தேய்ந்து, இன்று, டெலிவிஷன் மூலம் கல்வி கற்பிக்கும் முன்னேற்றம் உதயமாகிக் கொண்டிருக்கிறது. அந்நிலையை நம்நாடு அடைகின்ற வரையில், வானொலி வாயிலாகக் கல்வி பரப்பும் பணியை நாம் இடையே மறந்திடலாகாது. தொடரவேண்டும் அந்தத் தூய தொண்டு.

'கல்வி' பற்றிப் பேசியபின் வள்ளுவர் 'கல்லாமை' பற்றிக் கூறிவிட்டுக் 'கேள்வி' பற்றிக் கூறுகிறார், 'கற்றிலன் ஆயினும் கேட்க' என்று. அன்று அவர் கூறிய மொழி, இன்று வானொலி இயக்கத்துக்கே அளித்த ஒரு பொன்மொழிபோல் தோன்றுகிறது.

வகுப்பறையில் ஆசிரியர் நடத்தும் பாடங்களுக்கு உறுதுணையாக அமையும் முறையில் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் அமைந்துள்ளன. பாடத் திட்டங்களைச் செம்மையாக மாணவருக்கு அளிக்கும் பணியில் நல்லாசிரியர்கள் பலவிதமான கருவிகளை உபயோகப்படுத்துகிறார்கள். அக் கருவிகளுக்கெல்லாம் தலையாயது வானொலிக் கல்வி நிகழ்ச்சியாகும்.

நம் பாடத் திட்டங்களைச் சார்ந்து அமைக்கப்பட்டிருக்கும் இந் நிகழ்ச்சிகள் மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆசிரியர்களுக்கும் பேருதவியாக இருக்குமென நான் நம்புகிறேன். இவ்வாண்டு திருவள்ளுவர் கருத்துக்களைப் பரப்பும் நோக்கில் ''வள்ளுவ ஆசான், குறள் கதைகள், குறள் காட்சிகள்'' இவற்றை அமைத்துள்ளது பாராட்டுதற்குரியது. வள்ளுவர் 2000-ம் ஆண்டு நடைபெறும் இவ்வேளை இந்தப் பகுதிக்கு நிச்சயம் சிறந்த வரவேற்பிருக்கும் என்பது பற்றி எனக்கு ஐயமில்லை.

பட்டினத்து மாணவரைவிடச் சிற்றூர்ப் பகுதி மாணவருக்கு இந்த வானொலி வகுப்புகள் சிறந்த முறையில் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் என நம்புகிறேன். இன்று அரசு கல்வியைச் சிறந்த முறையில் பரப்பியுள்ளது. 300 பேர் மக்கள் தொகை உள்ள எல்லா ஊர்களிலும் ஆரம்பப் பள்ளி - அதற்கடுத்தாற்போல் பெரிய ஊர்களில் எல்லாம் உயர்நிலைப்பள்ளி என்று ஏற்படுத்தி எல்லோரும் கல்வியைப் பெறும் முழு வாய்ப்பையும் அளித்திட முனைகிறோம்.

ஆனால் பரவலாகக் கல்வி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்ட போதிலும், அங்கெல்லாம் முழுமையான விஞ்ஞானக் கருவிகள், மற்றும் பல பாட போதனைக் கருவிகள் இதுபற்றி, இன்றைய அரசு முழுக் கவனம் செலுத்தி, தரமான கல்வி யாவரும் பெறும் வகையில் 'தரத்தை உயர்த்தும் பணிக்கு' முதலிடம் அளித்து வருகிறது.

இம்மாதிரியாகத் தரத்தை உயர்த்தும் முயற்சியில் வானொலிக் கல்வி நிகழ்ச்சிகள் பேருதவியாக இருக்குமென நம்புகிறேன்.

வானொலி நிகழ்ச்சிகளைத் தவறாது கேட்கும் மாணவ மாணவியர்க்குப் பரிசுத் திட்டம் ஒன்று அமைந்திருப்பது கேட்டு மகிழ்ச்சி கொள்கிறேன்.

இத் திட்டத்தில் தமிழகத்துப் பள்ளிகள் எல்லாம் பேரூக்கத்துடன் கலந்து கொள்ளுமென நம்புகிறேன். தமிழகத்து மாணவ மணிகள் ஊக்கத்துடன் இந்த வானொலிப் பாடங்களைக் கேட்டுப் பயன் பெறுவார் என எண்ணுகிறேன்.

ஆசிரியப் பெருமக்கள் இந்த ஆக்கப் பணிக்கு ஊக்கமளித்து உதவுவர் என்பது என் துணிபு.

தமிழ்நாட்டின் இழந்த பெருமைகளை மறுபடியும் பெற்றுப் புது வரலாற்றை அமைக்கும் மகத்தான பணியில் வானொலிக் கல்வி நிகழச்சிகளுக்கும் சீரிய பங்கு உண்டு.

படிப்பு, ஊதியம் பெறும் உத்தியோகங்களுக்காக மட்டுமே என்ற நிலை மாற்றப்பட்டு, அறிவு வளர்க்கும் அற்புதச் சாதனம் என்ற

உண்மை இளைஞர் உள்ளத்தில் எழு ஞாயிறு எனத் தோன்றிடவேண்டும்.

சோர்வு நீங்கிட
சோபிதம் நிறைந்திட
உழைப்போர் பெருகிட
உண்டுகளிப்போர் மறைந்திட
வேளாண்மை செழித்திட
விஞ்ஞானம் ஓங்கிட
தொழில் வளர்ந்திட
தொல்லைகள் தொலைந்திட
தீமைகள் அழிந்திட - நல்ல
திறன்கள் மிளிர்ந்திட

மாணவர் சமுதாயம் பாடுபடவேண்டும்.

அதற்குப் பல நல்லவற்றைக் கற்றிட வேண்டும். ஏற்ற துணைகளில் ஒன்றாக இந்த வானொலிப் பயிற்சி அமைகிறது.

அந்நாளில் ஆண்டவன், அசரீரியாக அறிவுரை வழங்குவான் என்பது நம்பிக்கை. இன்று வானொலி, அறிவுரையை மாணவர்களுக்கு வழங்குவது நடைமுறை.

எனவே இந்த நிகழ்ச்சியை இந்த ஆண்டுக்காகத் தொடங்கி வைப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் கொள்கிறேன். வாழ்க மாணவ சமுதாயம்! வணக்கம்.

அடுத்த இதழிலிருந்து

அவர்கள் எழுதியுள்ள

தொடர் **நாடகம்** தொடரும்



பி.பி.சி தமிழோசைக்குப் பாராட்டு

''வேறு ஒரு நாடாக இருந்தாலும், உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் இருக்கக் கூடிய கலை, கலாசாரங்களை எல்லாம் அறிந்து, தெரிந்து, அவைகளுக்குத் தேவையான மதிப்பளித்து, அவற்றைப் பிற நாட்டுக்காரர்களும் தெரிந்துகொள்ளச் செய்கின்ற முயற்சியை, வளர்ந்து வருகின்ற நாடுகள் மேற்கொள்ளும் போதுதான் உலகம் மிக நெருங்கிவர முடியும் என்கிற தத்துவத்தை உள்ளடக்கி இந்தப் பணியினை இன்றைக்கு இலண்டன் மாநகரில் இருக்கக்கூடிய பி.பி.சி.யின் தமிழோசைப் பிரிவு செய்து கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிற பொழுது நம்முடைய இதயமெல்லாம் பெருமகிழ்ச்சியடைகிறது. நாங்கள் அண்மைக் காலத்தில் இலண்டன் நகருக்குச் சென்றிருந்த நேரத்தில் எங்களையெல்லாம் அழைத்து அவர்கள் அங்கேயும் தமிழை ஒலிக்கச் செய்த அந்தச் சிறப்பை நான் எண்ணி எண்ணிப் பார்க்கின்றேன். உலகின் எல்லா நாட்டு மக்களும் அந்தத் தமிழ் மொழியின் சுவையை அறிந்து கொள்ளத் தக்க அளவுக்கு அந்த நிகழ்ச்சியை அங்கே செய்துகாட்டினார்கள்...''

''இன்றைக்கு உலகம் விஞ்ஞானத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் நேரமாகும். உலகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு நாட்டு மக்களும் உடன் பிறப்புக்களாகக் கருதப்படுகிற காலம். உலகத்து நாட்டு மக்களிடத்திலே இருக்கக்கூடிய பல்வேறு பிரிவு மனப்பான்மைகளும் நீங்கி ஒருவருடைய கலை, கலாசாரத்திற்கு மற்றவர்கள் மதிப்பளித்து, அவரவர்களுக்கு இருக்கக்கூடிய நல்ல தன்மைகளையும் அந்தக் கலைச் சிறப்புக்களையும் மற்றவர்கள் பகிர்ந்து கொள்ளவும், ஒரு நாட்டினுடைய நல்லவைகளை மற்ற நாடு ஏற்றுக்கொள்ளவும், ஒரு நாட்டினுடைய கருத்துக்கு மற்றநாடு மதிப்பு அளிக்கவுமான தன்மைகளை வளர்த்துக் கொள்கிற பொழுதுதான், நாம் எண்ணுகிற ஓர் இன்பபுரியை- இன்பம் தத்தித் தவழ்கிற உலக சமுதாயத்தை- அமைத்துக்கொள்ள முடியும்...''

''இன்றைக்கு ஏற்படுகிற வேகமான வளர்ச்சியில் ஒருவர்க்கொருவர் துணையாகி, ஆக்க வேலைகளுக்கு அதைப் பயன்படுத்துவது வளர்ந்து வருகிற நாடுகளின் கடமையாகும். அத்தகைய கடமைகளை உலகம் உணர்ந்து கொள்ளச் செய்வதற்கு ஒரு நாட்டின் மொழியை மற்ற நாடுகள் மதிப்பதான சூழ்நிலைகள் ஏற்படவேண்டும். அந்த வகையில், நம்முடைய நாட்டை ஆங்கிலேயர்கள் நீண்டகாலம் அடிமைப் படுத்தி இருந்தார்கள் என்றாலும், காலத்தின் சூழலை உணர்ந்து அவர்கள் நமக்கு விடுதலை வழங்கித் தங்களின் தாயகத்திற்குத் திரும்பினாலும், அவர்கள் இங்கே இருந்த காலத்தில் இந்த நாட்டினுடைய பல்வேறு மரபுகளையும் சிறப்புகளையும் உணர்ந்திருந்த காரணத்தினால், அதிலும் குறிப்பாக நம்முடைய தமிழ் மொழியினுடைய சிறப்பை உணர்ந்திருந்தனால் அந்தத் தமிழ் மொழிப் பிரிவொன்றைத் தங்களுடைய இலண்டன் மாநகரத்து வானொலியிலே ஏற்படுத்திக் கொண்டு அரும் சேவையைச் செய்து வருகின்றார்கள்...''

''...அந்த நிலையத்தில் இருந்து பணியாற்றுகிற நம்முடைய பெருமதிப்புக்குரிய நண்பர் சங்கரமூர்த்தி என்னுடைய அன்புக்கும், பாராட்டுக்கும் உரியவர் ஆவார். அவர் அங்கே இருந்துகொண்டு தமிழினத்திற்கும் இலண்டன் மாநகரத்திற்கும் இடையில் ஒரு நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்; ஆர்வமிக்க பணியை ஆற்றுகிறார். அந்த நாட்டு மக்களோடு இங்கிருந்து செல்கிறவர்களை இரண்டறக் கலக்கச் செய்து, ஒரு நல்ல நட்புறவை வளர்த்து வருகிறார்....

''...பேரறிஞர் அண்ணா அவர்களின்மறைவைநாம் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அந்த மறைவினையொட்டி ஏற்பட்ட மாபெரும் ஊர்வலத்தினையும் அப்போது மக்கள் சோகக் கடலில் ஆழ்ந்திருந்த அந்த நிலைமையையும், அப்போது தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் எடுத்துக் கூறிய நல்லுரைகளையும் நண்பர் அவர்கள் தொகுத்து எடுத்து, அதனை இலண்டன் மாநகருக்கு உடனடியாக அனுப்பி, நாமெல்லாம் இங்கே மற்றவர்களின் பேச்சை ஒலிபரப்புவதற்கு முன்னாலேயே இலண்டனிலிருக்கக்கூடிய தமிழோசை ஒலிபரப்புச் செய்து, உலகத்தில் இருக்கக் கூடிய தமிழர்கள் அத்தனை பேரும் அதைக் கேட்டுத் தங்களின் துயரத்தை ஓரளவு தணித்துக் கொள்ளக்கூடிய நிலையை ஏற்படுத்தினார்கள் என்றால் எந்த அளவுக்கு அந்தத் தமிழோசை பணியாற்றி வருகிறது என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது...''

''இந்தக் கலைத் தொடர்பு, இந்த நல்ல பணி, நாளும் சிறக்கவேண்டும். அதற்குத் தமிழ் நேயர்களின் ஒத்துழைப்பு என்றும் உண்டு...''

[பி.பி.சி. தமிழோசைபற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.]

எந்தச் செயலைச் செய்யும்போதும் எந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளும்போதும் ஆறு ஊழியர்களைத் துணைக்கு அழைத்துக் கொள். என்ன? ஏன்? எங்கே? எப்படி? எப்போது? எது? என்ற ஆறு கேள்விகளே அந்த ஊழியர்கள்.

— அரிடிஸ்டால்

சமுதாய அடிப்படை

எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் அடிப்படை கல்வித்துறையாகும்.



தமிழ் நாட்டின் கல்வித்துறை மற்ற நாடுகள் எல்லாம் போற்றத்தக்க அளவுக்கு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது.

அதே நேரத்தில் உலகத்தின் கல்வி வளர்ச்சி வேகத்துக்கு நாம் செல்லவேண்டும். உலக நாடுகளோடு ஒப்பிட்டு நோக்க வேண்டிய அளவுக்கு நாம் முன்னேற வேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இதில் எந்தவிதக் கருத்து வேறுபாட்டுக்கும் இடமில்லை.

தமிழர் சமுதாயம் எதிர்காலத்தில் சிறந்து விளங்கக் கல்வித்துறை வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் அரசு செயல்பட்டு வருகிறது.

தமிழ் நாடு அரசுக்குக் கிடைக்கும் மொத்த வருமானத்தில் நான்கில் ஒரு பகுதி கல்விக்குச் செலவிடப்படுகிறது. இதிலிருந்து கல்வித்துறைக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். மக்களும் உணர்ந்துள்ளனர். எனவே நாளுக்கு நாள் நகரங்களிலிருந்தும் நாட்டுப்புறங்களிலிருந்தும் படிக்கவரும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகுகிறது.

தமிழ்நாட்டில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் நல்ல முறையில் வேலை வாய்ப்புகளையும் உயரிய பதவி

களையும் பெற்றிருக்கிறார்கள்; மற்றவர்களால் பாராட்டப்படுகிறார்கள். அந்த அளவுக்குத் திறமை மிக்கவர்களை நமது கல்விக்கூடங்கள் உருவாக்குகின்றன.

இதைவிடத் திறமை பெறுவதற்கு, திறமையைப் பெருக்குவதற்கு நாம் முயற்சி செய்து வருகிறோம்.

உலகத் தொடர்புக்கும் இந்தியத் தொடர்புக்கும் ஆங்கிலம் என்றும் நமக்குத் தமிழ் என்றும் திட்டவட்டமாக நமது அரசு அறிவித்துவிட்டது.

தாய்மொழியில் பயிற்சி பெறுவதன் மூலம் தான் சிந்தனை வளர்ச்சியும் அறிவெழுச்சியும் பெறமுடியும் என்று பல்கலைக் கழகத் தலைவர்களெல்லாம், கல்வித்துறைச் சான்றோர்களெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள்.

கல்லூரிகளில் நமது தாய்மொழி வளம்பெற வாய்ப்புப் பெறவேண்டும் என்பதில் துளியளவும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டத்தை மதுரைப் பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்டிருக்கிறது; வெற்றி பெற்றும் வருகிறது.

தமிழ் மொழிக் கொள்கையை நிறைவேற்றத் தீவிரமாக அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும் திறமை வீண் போகாத அளவுக்குத் திட்டமிட்டுச் செயலாற்றும்.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தொழிற் கல்வி நல்ல முறையில் வளர்ச்சிபெற்று வருகிறது என்பது பெருமைக்குரியதாகும்.

முதியோர் கல்வியிலும் அரசு நன்கு கவனம் செலுத்தி வருகிறது. ஆண்டு தோறும் இத்திட்டம் வளர்வதன் மூலம் கிராமத்திலுள்ள முதியவர்கள் விவசாயத்துறையின் வளர்ச்சிகளை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

கல்வித்துறை வளர்ச்சியைப் பேணி உலக நாடுகளுடன் போட்டி போட்டுச் செல்ல விரும்பும் நாம், ஆசிரியர்களின் நிலையை மேம்படுத்தவும் பாதுகாக்கவும் பாடுபட வேண்டும் என்பதையும் நமது அரசு கவனத்தில் கொண்டுள்ளது.

ஏனெனில், எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் அடிப்படையின் அடிப்படை அல்லவா, ஆசிரியர் சமுதாயம்.

(1969—70 ஆண்டிற்கான ''கல்வி மானியக் கோரிக்கை'' விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் ஆற்றிய உரையிலிருந்து)

இதுதான் ராலீஸ் நிறைவு தரும் கற்பகத் தரு!

இதன் அடி மரம் ராலீஸ் நிறுவனத்தை அறிவுறுத்துகிறது...பாரத மண்ணிலே ஆழ. வேர் பாய்ச்சி நிற்கின்றது. பாரதநாட்டு விவசாயிகளுக்குப பலமருளும் பாதுகாப்பு கோட்டையாக விளங்கும் அடி மரம், துயர்-உற்றபோதெல்லாம் துணைதந்து வழிகாட்டி வளமை எய்த உதவுகிறது.
இதன் கிளைகள் பரவிப் பரந்துள்ள ராலீஸ் ஸ்டாக்கிஸ்டுகளையும், வியாபாரிகளையும் சுட்டுகின்றன. அன்னோர் மூலம் ராலீஸ் நம் நாட்டின் எந்தெந்த மூலையிலும் உள்ள எளிய உழவரையும் எட்டி அவர் தம பிரச்சினைகளைத் தீர்க்கவும் ஓங்கித் தழைக்கும் உயரிய விளைச்சல்களுக்கான உரங்கள் பூச்சிக்காளான் கொல்லிகளை அவர் கைக்கெட்டவும் உதவுகின்றன.
இதன் கனிகள் வளமையின் சின்னம். ராலீஸ் தயாரிப்புக்கள், பணிகள் ஆகியவற்றின் உதவியால் நம் விவசாயிகள் அடைந்திடும் செழிப்பான அறுவடையின் அறிகுறி. ஆகமொத்தம் அருட் பொழிவு . . . நிறைவேற்றம் கண்ட நற்பேறு . . . இதன் உருவகமே வரமருளும் இம் மரம்!

RALLIS TREE BRAND FERTILIZERS



Stronachs M-28 TM

[தமிழ்நாடு அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களைப்பற்றி அவர்களோடு நெருங்கிப் பழகி நன்கறிந்தார் எழுதும் கட்டுரை வரிசையில் இது இரண்டாவது. மாண்புமிகு நிதியமைச்சர் திரு. மதியழகன் அவர்களைப் பற்றிய ஓர் அரிய கட்டுரையைத் திரு. வாணன் அவர்கள் இங்கே தந்துள்ளார்கள்.]

கொள்கையில் திளைத்தவர்

— ப. வாணன் —

''குன்று போல்
நின்றனன்;
கொள்கையிற்
திளைத்தனன்;
மன்றெலாம்
கண்டனன்;
மதியழகன் எனும்
பெயரினன்''

என்று பேரறிஞர் அண்ணு அவர்கள் நமது நிதியமைச்சரைப்பற்றிப் பாடி இருக்கிருர்கள். அண்ணு அவர்களின் எழுத்திலே எப்பொழுதுமே ஆழ்ந்த பொருள் கிடக்கும்; நிகழ்காலம் எதிர்காலம் பிரதிபலிக்கும். அம் முறையில் நோக்கின், நமது நிதியமைச்சர் திரு. மதியழகனைப்பற்றி அவர் எவ்வளவு பொறுத்தமாகக் கூறியுள்ளார் என்பதை உணர முடியும்.

கால வெள்ளத்திலே ஏற்பட்ட குமுறல்கள் எவ்வளவோ உண்டு. பள்ளிப் பருவத்திலே தொடங்கிப் பல்கலைக் கழகம்வரை இடையருத இன்னல்கள். கொள்கைக்காக இரவு பகல் பாராது உழைக்கப் போய், எத்தனை பேர்களுடன் மோதல்! மற்றெந்தத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் ஏற்படாத விபரீதச் சம்பவங்கள் இவர் வாழ்க்கையில் ஏற்பட்டன. வேறு எந்த மாணுக்கனுக்கும் ஏற்படாத இக்கட்டான நிலைமை இவர் பல்கலைக் கழக வாழ்க்கையில் ஏற்பட்டது. இடைஞ்சல்களைப் பொருட்படுத்தாது, எடுத்தகாரியத்திற்காக, கொண்ட கொள்கைக்காக, எந்த நேரமும் சுற்றுப் பயணமும், சூருவளிப் பிரச்சாரமும் செய்ததன் விளைவாகப் பல நேரங்களில் அவர் உடல்கூட ஒத்துழைக்க மறுத்தது. இருந்தும் சென்ற இருபத்தைந்து ஆண்டுகளாக அவர் குன்றுபோல் நின்று, கொள்கையில் திளைத்து, மன்றம் கண்டு வருகிருர்! அவர் வாழ்க்கை பொது வாழ்க்கை

ஆகிவிட்டது; நாட்டு மக்களுக்காக நாட்டோடு இணைந்து ஒன்றாகிவிட்டது.

அறிஞர் அண்ணாவின் அரசியல் பள்ளிக்குப் பெரும்பாலான மாணாக்கர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தையே சேரும். 1942-44இல் தோழர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன் முதலியவர்களை அனுப்பியது. 1944-47இல் தோழர் மதியழகனையும், பின்னால் தோழர் இளம்வழுதியையும் அனுப்பியது. 1949க்குப் பின்னால் எண்ணிட்டுச் சொல்ல முடியாத அளவுக்குப்பெரும்பாலான மாணவர்கள், எல்லாக் கல்லூரிகளிலுமே அண்ணாவின் மாணாக்கர்களாக மாறிவிட்டனர்! எனவே முதல் மூன்று தலைமுறைகட்குக் குறிப்பிட்ட மாதிரி, பின்னர் வந்தவர்களைப் பெயரிட்டுக் கூறின் கட்டுரை எல்லையற்றதாகிவிடும்.

தோழர் மதியழகன், கோவை மாவட்டம் கணியூரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். உடுமலைப்பேட்டையில் பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு 1943 இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நுழைந்து 1947இல் பி.ஏ.முடித்தார். பள்ளியிலிருக்கும் போதே பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையினால் ஈர்க்கப்பட்ட இவர் பல்கலைக்கழகம் வந்ததும், அண்ணாவின் தொடர்பும் ஏற்பட்டுத் திராவிட மாணவர் கழகச் செயலாளராகப் பணி செய்ய ஆரம்பித்தார். தாய் தந்தையர் இட்ட 'சோமசுந்தரம்' என்ற வட மொழிப் பெயரை மாற்றி 'மதியழகன்' என்று வைத்துக் கொண்டார். தமிழார்வம், திராவிடர் இயக்கக் கொள்கைகள், சுயமரியாதை இயக்கம் இவைகள் கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்த நேரம், அவர் பல்கலைக் கழகம் வந்த நேரம். ஒருசாலை மாணாக்கர்களாக இருந்த நண்பர்கள் நெடுஞ்செழியன் அன்பழகன் இருவரும் படித்து வெற்றி பெற்றுப் பல்கலைக் கழத்தை விட்டு வெளியேறி விட்டனர். திராவிடர் மாணவர் கழத்தைக் காப்பாற்றி, கொழுந்து விட்டெறிய ஆரம்பித்த தன்மான இயக்க உணர்ச்சியைப் பாதுகாத்து, பக்குவமாக நாட்டுக்குப் பயன்படும் விதத்தில் நடத்திச் செல்லவேண்டிய மகத்தான பொறுப்பு திரு. மதியழகன் தலையிலே தானாக வந்து விழுந்தது. பெரிய பொறுப்பு; பயங்கரமான பொறுப்பும்கூட. ஏனென்றால், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே திராவிடர் இயக்கம் வலிவடைகிறது என்பதைக் கண்டறிந்த மாற்றுக் கட்சியினர், அதை ஒழித்துக் கட்ட, சாம, பேத, தான, தண்ட முறைகளை ஆரம்பித்த நேரம். திராவிடர் இயக்கக் கொள்கைகளைக் கொண்ட மாணவர்கள், படிப்பில் முதல்வராகத் திகழ்ந்தார்கள். மாநிலப் பேச்சுப் போட்டிக்காகக் கொடுக்கப்பட்ட வெள்ளிக் கோப்பைகள் முதல் ஆண்டு அன்பழகன், நெடுஞ்செழியன் இருவருக்கும் சென்றது. மறு ஆண்டு மதியழகனுக்கு வந்தது!

கல்லூரி மன்றங்களில் திராவிடர் இயக்க மாணவர்கள் எல்லாத் துறைகளிலும் முதல்வர்களாகத் திகழ்ந்தனர். ஆகவே, ஆத்திரத்திற்குட்பட்ட மாற்றுக் கட்சியினர் நேரடித் தாக்குதலில் ஈடுபட்டனர். அதன் விளைவு பயங்கரமாக மாறி மதியழகனைத் தாக்கியது. கிட்டத்தட்ட ஓராண்டுக் காலம் பல்கலைக் கழகத்தின் எல்லைக்குள்ளேயே வரமுடியாதவாறு தடைவிதிக்கு ஆளானார். பல இன்னல்களுக்கிடையே இளம் வயதிலேயே வழக்கு மன்றம் ஏறி நிரபராதி என்று நிரூபித்து மறுபடியும் படிப்பைத் தொடங்கினார். நண்பர் மதியழகன் நல்ல அறிவுத் திறமை படைத்தவர். எதையும் ஒருதடவை படித்தாலே மனதில் பதியவைத்துக் கொள்ளும் திறன் கொண்டவர். அவருக்கிருந்த ஞாபக சக்தியோ ஏராளம். ஆகவேதான், இடர் பல நேரிடினும், படிப்பில் வெற்றி கண்டதோடு அல்லாமல், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மாத்திரமின்றி, எல்லாக் கல்லூரிகளிலுமே மாணவர் இயக்கம் தழைத்திட வழி வகைகளைச் செய்து, தனக்குத் தரப்பட்ட பயங்கரப் பொறுப்பைச் செவ்வனே முடித்துவிட்டுச் சென்னை வந்தார், சட்டப் படிப்பிற்கு.

குள்ளமான உருவம்; ஆனால் குறுகுறுப்பான முகம். அதிலே ஒளிவீசும் கண்கள், தூய வெண்மை நிற ஜிப்பா, வேட்டி இவைகளோடு நல்ல வசீகரத் தோற்றத்தோடு எங்கள் இல்லம்

வந்தார் நண்பர் மதியழகன். இன்றைக்கு இருபது ஆண்டுகளுக்கும் முன்னால் நடந்த சம்பவங்களை நினைக்கும் பொழுது உணர்ச்சி மேலிடுகிறது. அவர் எங்களோடு வரும்போது அண்ணா அவர்கள் அரசியல் மௌனம் கொண்டிருந்த நேரம். ஆனால், அறையிலே, அரசியல் வாக்கு வாதம் இரவு பகலாக நடந்த வண்ணமே இருக்கும். அண்ணா அவர்கள் சுற்றுப் பயணம் போக மீதி நேரத்தில் எங்களோடுதான் இருப்பார். அந்த நேரங்களிலே மதியும் அண்ணாவும் உலகத்தில் உள்ள அவ்வளவு செய்திகளையும் அலசி ஆராய்ந்த வண்ணமிருப்பார்கள். இடையிடையே மதியும் சுற்றுப் பயணம் சென்று விடுவார். திரும்ப வந்தவுடன் வாக்குவாதம் தொடர்ந்துநடக்கும். அண்ணா ஆரம்பித்த அவ்வளவு போராட்டங்களையும், தனிப்பட்ட முறையில் நண்பர் மதியழகனையும் கலந்தாலோசிக்காமல் செய்ததில்லை. அதற்கு ஒரு காரணமும் உண்டு. அண்ணாவுடன் பழகுபவர்கள் பலர், அவருடைய கருத்துக்கு மாறாக எதையும் பேச யோசிப்பார்கள். நண்பர் மதியழகனோ அப்படி இல்லை. பட்டென்று, ''அண்ணா, நீங்கள் நினைப்பதை என்றால் ஒத்துக்கொள்ள முடியாது!'' என்று தைரியமாகச் சொல்வார். பிறகு காரண காரியங்களை அண்ணா விளக்குவார். பதிலுக்கு மதியழகன் அவர் வாதங்களைக் கூறுவார். இதைக் கேட்டவுடன் மற்றவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்துரைப்பார்கள்.

பிறகு அண்ணா தன் கட்சியை எடுத்துச் சொல்வார். முடிவு, எது சரியோ அப்படியே எடுக்கப்படும்.

1949ல் தி. மு. க. உதயமாகியது. அக் கட்சி ஆரம்பிப்பதற்கு முன்னால் சில வாரங்கள் அண்ணாவைச் சுற்றி ஏற்பட்ட சூழ்நிலைகள் அரசியல் வரலாறாக வடிக்கப்பட வேண்டியவை. இந்த நேரத்திலே தனியாகக் கட்சியை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை ஆரம்ப முதலே வற்புறுத்தி அண்ணாவை வேகமாக அந்த முடிவுக்கு வரச்செய்தவர்களில் நண்பர் மதியழகனும் ஒருவர். கட்சி ஆரம்பமாவதற்கு முதல் நாளிரவு, அதன் முக்கியக் கொள்கைகளையும், அதை வளர்க்கவேண்டிய வழிமுறைகளையும் எழுதச் சொன்னார் அண்ணா. அந் நள்ளிரவில் வேறு நோட் புத்தகம் கிடைக்காமையால் நண்பர் மதியின் சட்டக் கல்லூரி நோட் புத்தகத்தில்தான் எழுதப்பட்டது!

கட்சி ஆரம்பித்தபின், அவர் கட்சியின் சட்டதிட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தி. மு. கழகத்திற்கு உண்டான முதல் அமைப்பு முறையை ஏற்படுத்திய பெருமை இக் குழுவையே சாரும்.

புதிய சட்டதிட்டப்படி, கட்சி மாற்றி அமைக்கப்பட்டபோது அண்ணாவிற்குத் துணைச் செயலாளர்களாக இருவர் அமர்த்தப்பட்டனர். அதில் ஒருவர் திரு. நெடுஞ்செழியன், மற்றவர் திரு. மதியழகன். நண்பர் மதி, தி. மு. க. அலுவலகத்தின் பொறுப்பாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றி வந்தார். தி மு.க. தலைமைக் கழகப் பணி பலவிதத்திலும் பொறுப்பு மிக்கதும், தொல்லையானதுமான ஒரு வேலையாகும்.

பல பேர்களுடைய விரோதத்திற்கு ஆளாகும் நிலை பற்பல வேளைகளில் ஏற்படும். இப் பொறுப்பில் திறம்பட அவர் பணியாற்றியது, பின்னால் அவர் அமைச்சர் பதவி ஏற்றபொழுது, மிகவும் பயனுள்ளதாயிற்று.

நண்பர் மதியழகன் நல்ல பேச்சாளர் என்பது மாத்திரமல்ல. சிறந்த எழுத்தாளரும்கூட. அந்தக் காலத்தில் திடீரென்று அண்ணா எங்கள் அறைக்கு வருவார். விடிவதற்குள் ஆளுக்கொரு கட்டுரை எழுதவேண்டுமென்பார். நாங்களெல்லாம் எழுதி முடிக்கும்வரை மதி வராண்டாவில் காற்று வாங்கிக் கொண்டிருப்பார். பிறகு நாங்கள் படுத்தபிறகு எழுதி வைத்துவிட்டு அவர் படுக்க வரும்போது, பொழுது விடிந்து நாங்கள் எழுந்துவிடுவோம்.

நண்பர் மதியழகன் எல்லோருடனும் சுலபமாகப் பழகுவார். நண்பராக மாறி விடுவார். தமிழ்நாட்டில் எல்லா இடங்களிலும் அவருக்கு நண்பர்கள் உண்டு. கட்சிக்குள்ளேயேகூட, எல்லாத் தலைவர்களோடும் சரிசமமாக நெருங்கிப் பழகும் இயல்பு கொண்டவர் இவர். இருபது ஆண்டுகளுக்கு முன்பே கலைஞர்

அவர்கள் சென்னைக்கு வரும் போதெல்லாம், எங்கள் அறைக்கு வந்து மதியைச் சந்திக்காமல் போக மாட்டார். கலைஞர் ஆர்வமிக்கவர். எதற்கும் அஞ்சாமல், போராட்டம், போராட்டம் என்று வாதிட்டுக் கொண்டிருப்பார். அப்பொழுதெல்லாம் மணிக்கணக்காக விவாதம் நடக்கும். முடிவில் நல்ல தெளிவோடு ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டு அண்ணாவிடம் செல்வார்கள். முடிவு, இருவருமே சிறைக்குச் சென்று விடுவார்கள்!

நண்பர் மதியழகன் எட்டு தடவைகளுக்கு மேல் சிறைக்குச் சென்றிருக்கிறார். தமிழுக்காகவும், விலைவாசி உயர்வை எதிர்த்தும், புதிய கல்வி முறையை எதிர்த்தும், மற்றும் கட்சி நடத்திய எல்லாப் போராட்டங்களிலும் முன்னின்று முதல் தொண்டனாகச் சிறைக்குச் சென்றிருக்கிறார்.

அண்ணாவின் தலையாய நண்பர்களுள் ஒருவராக மட்டுமின்றி அவருடைய அடியொற்றிச் செல்லும் தொண்டராகவும் இவர் இருந்து வந்திருக்கிறார். அண்ணா சொல் இவருக்கு வேதவாக்கு. அவர் சொன்னார் என்பதற்காக, தனது சொந்த ஊரான கணியூரில் தி.மு.க. மாவட்ட மாநாட்டை ஆரம்பகாலத்தில் மிகத் தொல்லைகட்கு இடையே நடத்தினார். இதில் நண்பர் மதியழகனும் அவர் உடன் பிறந்தார்களும் பட்ட தொல்லைகள் கூடஇருந்தவர்களுக்குத்தான் தெரியும்.

அண்ணா சொன்னார் என்பதற்காக நாடகங்களில் வேடம் இட்டு நடித்துமிருக்கிறார்.

அண்ணாவிடம் மாறுபட்ட கருத்து இருந்தால் கூட அதை அண்ணாவிடமே பேசிப்பேசித் தீர்த்துக்கொள்வாரே தவிர, மாற்றாரிடம் அது குறித்து எதுவும் பேசமாட்டார்.

சட்டமன்றத்தில் நுழையும் நேரம் வந்த போது கூட, மாற்றுக் கட்சித் தோழர்களைச் சந்தித்துப் பேசுவது, புதிய வேட்பாளர்களைக் கட்சிக்குத் தேர்ந்தேடுப்பது, இவைகளில் நண்பர் மதியின் பங்கு மிகவும் உண்டு. தொடக்க காலத்திலிருந்தே உழைப்பாளிக் கட்சிக்கும் அண்ணாவிற்கும் இடையே தொடர்பாக நண்பர் மதியழகன் பணியாற்றியுள்ளார்.

சட்ட மன்றத்திலே தி.மு.க. எதிர்க் கட்சியாக இருந்த போது நமது இன்றைய நிதியமைச்சர் அவர்கள், தன்னுடைய ஆணித்தரமான வாதங்களால், ஆளுங்கட்சினயிரைத் திகைக்க வைத்து வந்தார்கள். விலைவாசி உயர்வைக் குறித்தும், பொற்கொல்லர்களுக்குப் பாதுகாப்புத்தரக் கோரித் தங்கக் கட்டுப்பாடு சட்டத் மீது பேசிய போதும், தமிழுக்காகப் பரிந்து என்னென்ன செய்ய வேண்டும் என்று எடுத்துரைத்த போதும் அவருடைய வாக்குத் திறமை உச்சக் கட்டத்தில் இருந்ததை யாரும் மறக்க முடியாது. அவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர் என்பது மாத்திரமல்ல, நல்ல சட்டமன்ற வல்லுநர் என்பதை எடுத்துக் காட்டச் சென்ற சட்டசபை ஓர் அரங்கமாயிற்று. ஆளுங்கட்சி தவறு செய்த போது கடுமையாகத் தாக்கிய நண்பர், நல்லதுசெய்த போதுஒத்துழைக்கத் தயங்கியதே இல்லை. தனிப்பட்ட முறையில் அப்பொழுது ஆட்சியிலிருந்தவர்களோடு நெருங்கிய நட்பு வைத்திருந்தார்.

தி.மு.க.பதவிக்கு வந்தபின் மந்திரி சபை அமைப்பதிலும், அதையடுத்து முக்கியப் பிரச்னைகளைச் சமாளிக்க அண்ணா எடுத்த முடிவுகளிலும் மதியின் பொறுப்பு அதிகம். படி அரிசித் திட்டம் எப்படிக் கொண்டு வர முடியும் என்று அண்ணா விவாதித்த போது, இப்படி இப்படிச் செய்தால் கொண்டு வரலாம் என்று புள்ளி விவரத்தோடு பேசி அண்ணா அவர்களிடம் தம் கருத்தை விளக்கினார் நண்பர் மதியழகன்.

அரசியல் நுண்ணறிவோடு அலுவலக அனுபவமும் சேர்ந்த காரணத்தால் தான், தமிழக அரசின் சார்பாக அவர் டெல்லிக்குப் போகும் போது, அவருடைய தலைமையில் இந்திய அரசிற்கே ஒரு புதிய நம்பிக்கை ஏற்பட்டது. வெளி மாநிலங்களில் இருந்து வரும் தலைவர்களில் வெகு சிலர்தான் டெல்லியில் தங்கள் திறமையை நிலை நாட்ட முடியும். இவ்வகையில் தலைமைப் பீடத்திற்குச் சென்ற ஓரிரு தடவைகளிலேயே தன் திறமையைக் காண்பித்த காரணத்தால்தான், சென்ற ஆண்டில் ரோமில் நடந்த ஐக்கிய நாட்டுச் சபையைச் சார்ந்த உணவு விவசாய மாநாட்டிற்கு இந்திய நாட்டின் சார்பாகச் சென்ற தூதுக் குழுவிற்கு மாற்றுத் தலைவராக இவர் அனுப்பப்பட்டார். ரோம் மாநகரிலே உலகப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் கூடியிருந்த அந்த மாநாட்டிலே, வெண்கலத் தொனியில், அனைவரும் விரும்பிக் கேட்டு வியக்கும் வகையில் சொற்பொழிவாற்றினார். போப் பாண்டவரின் புனித நகரமான வேடிகன் நகர் வானொலி நிலையத்திலிருந்து "ரோமாபுரியிலிருந்து தமிழன் பேசுகிறேன்!" என்று குரல் எழுப்பியதை யாரும் மறக்க முடியாது.

அண்ணா அவர்கள் மந்திரிசபையிலே அவருக்குத் தரப்பட்ட இலாக்காக்கள், உணவு, நிலவரி, வர்த்தக வரி முதலியவை. உணவிலாகாவில் இவர் ஏற்படுத்திய புத்துணர்ச்சி நாடறிந்ததே. இவர் தலைமையின் கீழ்த்தமிழகத்தின் உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டம்உச்சக்கட்டத்தை அடைந்தது. நமது மாநிலத்திலே விளையும் உணவுத் தானியங்களை, வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போய் விற்று விடுவதால் ஏற்படும் சீரழிவுகளைத் தடுக்கும் மூகத்தான் எல்லைகளைப் பாதுகாவல் செய்தார். இதைத் தொடர்ந்து, நாட்டில் உள்ள உணவு மண்டலங்களை எடுக்க ஒரு திட்டம் கொண்டு வரப்பட்ட போது அது தமிழகத்திற்குத் தீதானது என்று டெல்லிப் பேரரசின் போக்கிற்கு ஒத்துக் கொள்ள மறுத்து விட்டார். இப்படித் தன்னிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பை, விருப்பு, வெறுப்பு இன்றி நிறைவேற்றி வந்தார்—வருகிறார்.

கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் அவர் நிதி இலாகாப்பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இது அண்ணா அவர்கள் பார்த்துக் கொண்டிருந்த மிகப் பொறுப்பு வாய்ந்த இலாகாவாகும். பொறுப் பேற்ற சிலநாட்களிலேயே 1969—70ஆம் ஆண்டிற்கான தமிழக வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, அண்ணாவால் வளர்க்கப்பட்ட தம்பி, எதற்கும் சளைத்தவனல்ல என்று நிரூபித்து விட்டார்!

அண்ணா அவர்கள் நோய் வாய்ப்பட்டபோதும், அதற்கு பின் அவர் இறந்த போதும், தன்னிடம் தரப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றி வைத்த திறன் போற்றுதற்குரியது. கட்சிக்காகவும் கொள்கைக்காகவும் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து, முழு நேர மக்கள் தொண்டனாக, அன்று முதல் இன்று வரை பணியாற்றும் நண்பர் மதியழகன் அண்ணா கூறியது போல் குன்று போல் உறுதியோடு நிற்கிறார்; கொள்கையில் வளருகிறார்; மன்றங்களில் புகழ் பெறுகிறார். அவர் வாழ்க; மேலும் மேலும் புகழ் எய்துக என்று எல்லோருடனும் சேர்ந்து நாமும் வாழ்த்துகிறோம்!

அடுத்து இவ்வரிசையில்

மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார்

அவர்களைப்பற்றிய

கட்டுரை இடம் பெறும்

வள்ளுவரின் வான்புகழ்

உலகப் பெரியார், உயர் பேரறிஞர்
இன்தமிழ்த் தாயின் இனிய புதல்வர்
எங்குத் தோன்றினர்; எவ்வகை வாழ்ந்தனர்,
என்பன வெல்லாம் இனிய கதைகளே.
திருவள்ளுவர் எனச் செப்பிடும் பெயரொடு
நாயனார் தேவர் நன்முதற் பாவலர்
தெய்வப் புலவர் செந்நாப் போதார்
மாதானு பங்கி மன்பெரு நாவலர்
நான்முகனார் எனும் நற்பெயர் உடையவர்.
ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாய்
வையகம் வாழ வகுத்த வாழ்வியல்
அறம்பொருள் இன்பம் அடைமுப் பாலாய்
தமிழ்மறை பொதுமறை தரணியோர் போற்றும்
பொய்யா மொழிபுகல் வாயுறை வாழ்த்து
தென்னாட் டின்பொன் னேடு தெய்வநூல்
என்பன வற்றொடு எவரும் அறிந்த
திருக்குறள் என்ற திருப்பெயர் கொண்டு
அணுவைத் துளைத்து ஏழ்கடல் அடைத்த
பான்மைய தென்ன பல்பெரும் பொருளை
தன்னுட் கொண்டு தன்னைப் பயில்வோர்
உள்ளிருள் நீக்கும் உயர்பேர் ஒளியாய்
காலம் கடந்ததாய் ஞாலம் அனைத்தும்
ஏற்று நடக்கும் இனிய நெறியதாய்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே.
மக்கள் துயரை மாய்க்க முனைந்து
தம்மைச் சிலுவையில் சார்த்திக் கொண்ட
அருள்நெறி யாளன் அன்பின் உறைவிடம்
ஏசு பெருமான் இம்மை காணுமுன்
முப்பதோ டொன்று முடியும் ஆண்டில்
உலகம் உய்ய உயர்தமிழ் நாட்டில்
எடுத்தனர் பிறவி இரிந்தோ டினவே
இரண்டா யிரமாம் இனிய ஆண்டுகள்.
முடியுடை வேந்தர் படியாண்ட பாரில்
வாழ்ந்தனர் ஆயினும் வளரும் புதுமுறை
மக்களாட் சிக்கும் வாய்ப்ப நெறிமுறை
உரைத்துச் சென்றனர்; உலகம் முழுவதும்
ஒன்றாய்க் கண்டனர்; ஒருநான் குரிமைகள்
அட்லாண் டிக்குப் பட்டயம் அளிப்பதன்
முன்னரே எவரும் உன்னா நாளில்
தீட்டினர் இனிய திருக்குறள் தன்னில்.
மக்கள் இனமெல்லாம் வாழ உரைத்த
தாழ்வில் நெறியால் தத்தம் சமயம்
சார்ந்தவர் எனச் சாற்றினர் பலரும்!
குலமும் ஒன்றே குடியும் ஒன்றே
எல்லா மக்களும் இந்நாட் டரசரே!
சமத்துவம் போக்கும் சாதியும் மதமும்
வேண்டாம் நமக்கென விதித்தனர் அறநெறி!
அன்னைத் தமிழின் ஆட்சி மறைந்ததால்
வள்ளுவர் வாய்மொழி மறந்து கெட்டோம்.
மீண்டும் தமிழ்த்தாய் மேவினள் அரியணை;
வள்ளுவர் நெறியில் வையம் வாழ
அருந்தமிழ் ஆட்சி அமைந்து விட்டது.
இரண்டாயிர மாண்டின் இனிய நினைவாய்க்
கொள்வோம் உறுதி குறள்நெறி வாழ.
கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவெனும் நீள்நெறி
என்றும் மறவோம் இனிதே வாழ்வோம்!
வள்ளுவர் வான்புகழ் வளர்ப்போம் வலிமிகு
தெள்ளு தீந்தமிழ் திசையெலாம் நாட்டுவோம்!

டாக்டர் சி. இலக்குவனார்

எமிலி

குமார. கோமேதகவேலு, ஐ.ஏ.எஸ்.

பள்ளிக்குச் சென்று கல்விபயிலாத ஒருவன், குழந்தைகளுடன் சற்றும் பழகியறியாத ஒருவன், தன்னுடைய குழந்தைகளை அநாதை விடுதியிலே விட்டு வளர்த்த ஒருவன், கல்வியைப்பற்றி, கல்வி கற்பிக்கப்படும் முறையைச் சீர்திருத்தியமைக்கும் வகையிலே, வெகு அருமையானதொரு நூலினை உலகிற்கு வழங்கிச் சென்றிருக்கின்றான். அந்த நூலின் பெயர் தான் எமிலி. குழந்தைகட்கு எம்முறையில் கல்வியானது கற்பிக்கப்படவேண்டும் என்பது பற்றியும், அவர்கட்குகந்த வளர்ப்பு முறையைப்பற்றியும் வெகு அழகாக, விவரமாக அந்நூலில் எழுதப்பட்டுள்ளது. 1762-ஆம் ஆண்டு இந்த நூலானது வெளியானதும் அந் நூலாசிரியரான ரூசோவின் வாழ்வுப் போக்கு முற்றிலும் மாறுபட்டு விட்டது. இந்நூல் வெளியான பிறகுதான் பழமை விரும்பிகளால் அவன் வெறுக்கப்பட்டு, வேட்டையாடப்பட்டு, விரட்டியடிக்கப்பட்டான். பழமையின் வாடை மிகுந்து புழுத்துப் புரையோடிப் போயிருந்த கல்வி முறையினை முழுமையாக ஒழித்துக்கட்டவேண்டும் என்று விழைந்து தன்னுடைய சிந்தனைக் காட்டிலே மலர்ந்த எண்ணற்ற கருத்து மலர்களை உலகுக்கு அளித்துச் சென்றவன் அவன். இந் நூல் வெளியான போது அவனுக்கு வயது ஐம்பது.

''இருபது ஆண்டுக் காலம் சிந்தித்து, மூன்று ஆண்டுக் காலத்தில் எழுதி முடித்தேன்'' என்று இந் நூலைப் பற்றிக் கூறியிருக்கின்றான் ரூசோ. பிற்காலத்தில், உலக அரங்கின் பல்வேறு பகுதிகளிலும் முகிழ்த்த கல்வித் திட்டங்கள் அனைத்திற்கும் ரூசோவினுடைய இந் நூலின்கண் காணும் கருத்துக்கள் அடித்தளமாக அமைந்தன. பிற்காலத்தில் ரூசோ கூறிப் போன எண்ணங்களையும், கருத்துக்களையும் மேற்கோள்களாகக் கல்வியாளர்கள் கையாண்டனர். ஆனால் பழமைக் கோட்பாடுகளிலும் மூடப் பழக்க வழக்கங்களிலும் மூழ்கிக் கிடந்த அன்றையச் சமுதாயம் 'எமிலி'யை உருவாக்கியவனைத் துன்புறுத்தி இகழ்ச்சிப் பள்ளுப் பாடித் தன் வெறியைத் தணித்துக் கொள்ள முற்பட்டது. 1762ஆம் ஆண்டில் பாரீஸ் பட்டினப் பாராளுமன்றத்தின் ஆணையின்படி பாரீஸ் பட்டினத்து உயர்நீதி மன்றத்தின் முன் இந்நூல் தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டது. ரூசோ பாரீஸ் பட்டினத்தை விட்டு வெளியேறி தான் பிறந்த மண்ணிடம் அடைக்கலம் நாடிப்போனான். அங்கும் அவனுடைய நூலானது தீக்கிரையாயிற்று. ரூசோ உள்ளே நுழையவும் கூடாது என்று பல அரசுகள் ஆணைகள் பிறப்பித்தன. ஐரோப்பாக் கண்டம் முழுமையிலும் ஒலித்த சாபக்குரல்கள் அவனது காதுளில் நுழைந்து ஒலித்தன. சமயத்தின் மொத்த விரோதி, நாத்திகன், பைத்தியக்காரன், ஆவல் மிகுந்த ஓநாய் என்று பலராலும் நிந்திக்கப்பட்டுப் பல் வேறுபட்ட கண்டனங்களுக்கும் ஆளாகி அவன் விரட்டியடிக்கப்பட்டான். இத்தகைய புரட்சிக்கு மூல வித்தாக அமைந்து விளங்கிய நூலின்கண் இடம் பெற்றுள்ள கருத்துக்களில் சில இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன. கல்வி மக்களினத்திற்கு மிகவும் அவசியமானது என்பதால் ஆண் குழந்தைகள் எவ்வகையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பது நூலின் ஒரு பகுதியிலும், மற்றொரு பகுதியில் பெண் குழந்தைகள் எவ்வகையில் பராமரிக்கப்பட வேண்டும் என்பதும் விளக்கப்படுகின்றன.

''இறைவனால் படைக்கப்படும் பொழுது பொருள்கள் அனைத்துமே நல்லனவாகவே அமைந்திருக்கின்றன. ஆனால் அவை மனிதனின் கைபட்டு, கையாளப்படும் பொழுது சீரழிய முற்படுகின்றன. ஒரு மண்ணிலே பிறக்கக் கூடிய பொருளை மற்றொரு மண்ணிலே மனிதன் உற்பத்தி செய்ய முயலுகின்றான்; ஒரு மரத்தின் கிளைகளிலே பழுக்கக் கூடிய பழத்தை மற்றொரு மரத்தினுடைய கிளைகளில் எதிர்பார்க்கின்றான். எல்லாப் பொருள்களையும் விகாரப்படுத்தி உருமாற்றும் பணியில் ஈடுபடுகின்றான். உருக்குலைந்தவை, விகாரமானவை, அங்கஹீனமானவை முதலியவற்றில்தான் அவன் உருசி காண்கின்றான். எந்த ஒரு பொருளையும் அதனுடைய இயற்கைத் தோற்றத்தில் காண்பதை அவன் சற்றும் விரும்புவது இல்லை. இயற்கைத் தோற்றம் குலைக்கப்பட்ட செயற்கை உருவங்களில்தான் அவன் இன்பம் துய்க்கின்றான். இயற்கையின் நிலைகளைக் குலைத்துத் தன்னுடைய விருப்பங்களுக்கிணங்க மாற்றியமைத்துக் கொள்வதில்தான் அவன் பிரியம் மிகக் காட்டுகின்றான். இவ்வழியில் மனிதன் செல்லாதிருக்க வேண்மானால், சரியான, சீரான கல்வி முறையானது அவனுக்கு மிகவும் தேவையாகின்றது. இந்தக் கல்வியை அவன் பெறவில்லை என்றால் அவனுடைய போக்கு மிகவும் அவலமானதாயிருக்கும்.''

''மனிதன் தோன்றும் காலத்து எந்த நிலையில் இருந்தானோ அதே நிலையில் அவனை விட்டு விட்டால் அவன் ஓர் அரக்கனாகவே உருப்பெற்று விடுவான். அவன் வாழும் சூழ்நிலையானது அவனுடைய இயற்கைத் தன்மையினை நிச்சயமாக நிலைகுலையச் செய்து விடும் கல்வியறிவு பெறாத மனிதன் தன்னுடைய தேவைகள் எவை யென்பதை உய்த்துணராது உயிர் பிரிந்து போவான். அவனுடைய இயல்பான இயற்கையான திறமைகளை வளர்த்துக் கொள்ளவோ, அவற்றின் பயனைத் துய்க்கவோ முடியாது. கல்வி மனிதனுடைய பண்பினை வளரச் செய்து அவனைப் பண்புடையவனாகச் செய்கிறது. பலவகையான சம்பிரதாயப் பந்தங்களும், பாரம்பரியத் தளைகளும் அவனுடைய இயல்பினை நலியச் செய்து இயற்கைத் தன்மையினை நாசமாக்கி அவனைச் சீரழித்து வருகின்றன. ஆகையால் குழந்தையின் இளம் பருவத்திலேயே ஏற்ற கல்வியைத் தொடங்கி அதன் மூலம் அதனுடைய வாழ்க்கையில் மூடப் பழக்க வழக்கங்களோ, சம்பிரதாயப் பந்தங்களோ எந்த வகையிலும் நுழைவதைத் தவிர்க்க வேண்டும்.''

''தாயானவள் தானாகவே தன்னுடைய குழந்தைகளின் வளர்ப்பினைக் கவனித்து வருதல் வேண்டும். தாயினுடைய குணநலன்கள் பிள்ளைகளுக்கு அமைவது இயல்பு. எனவே தாய் தன்னுடைய குழந்தைகளின் வளர்ப்பில் அதிகமான கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு தன்னுடைய சுய வளர்ச்சியிலும் கவனம் செலுத்த வேண்டும்; மிகவும் கவனமுடன் வாழ்ந்து வருதல் வேண்டும். குழந்தைகளைச் சம்பளம் பெறும் வேலைக்காரர்களிடமோ, செவிலித் தாயர்களிடமோ ஒப்புவித்தல் தவறு. சில தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளை மிகுந்த கவனமுடன் காப்பாற்றுவதாகக் கருதி அவர்களைக் கெடுத்து விடுகின்றனர். இயற்கையின் பல்வேறுபட்ட சோதனைகளுக்கு உட்படுத்திப் பழக்காமல், இயற்கையிலிருந்து அவர்களைப் பாதுகாத்து இறுதியில் விபரீதமான ஆபத்துக்களுக்கு ஆளாக வழி வகுத்து விடுகின்றனர். இதனால் ஆபத்துக்களைச் சகித்துக் கொள்ளக்கூடிய மனப்பாங்கு குழந்தைக்கு இல்லாது போய் விடுகிறது. தாய் தன் குழந்தையை எல்லாவிதமான வாழ்வின் அனுபவங்களிலும் பழக்கப் படுத்த வேண்டும். உலக வாழ்க்கையில் பலவிதக் கூறுகளையும் குழந்தையை அனுபவிக்கச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் தான் குழந்தையின் வயது வளர வளர அது வாழ்வின் பலவித இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் பொறுத்து, வாழ்க்கையைச் சுவைத்துப் பயன் பெறக் கூடிய மனநிலை வளரும்.''

''தாய் தன்னுடைய குழந்தைக்குச் சுதந்திரம் தவழ்ந்தாடும் சூழ்நிலையில்

பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் தந்தை என்ன செய்ய வேண்டும்? இன்றைய ஆட்சியின்கீழ், தந்தைக்கு இருக்கும் வேலைகளோ அதிகம். பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க அவருக்கு வேண்டிய ஓய்வு இருக்காது. ஆதலால் தன் பிள்ளைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க நல்லதோர் ஆசானை நியமித்துக் கொடுப்பது போதுமானது. இப்படியாக நியமிக்கப்படும் ஆசிரியர் இளம் வாலிபனாகவும் குழந்தைக்கு எல்லாத் துறைகளிலும் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்க வேண்டும்; சிறந்த நண்பனாகவும் இருந்து வரவேண்டும். பிள்ளைக்கு முதற்பாடங்களைச் சொல்லிக் கொடுக்கக் கூடிய திறமைசாலியாகவும் இருக்க வேண்டும்.''

''இளம் பருவத்திலேயே ஆரம்பமாகும் கல்வி எந்த வயதில் முடிவடைய வேண்டும்? ஒவ்வொருவரும் தத்தம் வாய்ப்பு, சுற்றுச் சார்பு, சூழ்நிலை இவைகளுக்கேற்பவே கல்வி பயின்று வருவார்கள். 'மனிதன் தன் முழுக் கல்வியைக் கற்றுவிட்டான்; அதற்கு மேல் அவன் கற்க வேண்டியது ஒன்றுமே கிடையாது' என்று எந்த ஞானியும் கூறியது கிடையாது! எனவே கல்விக்கு ஒரு முடிவு இருப்பதாகக் கருதக் கூடாது.

சிந்தனை செய்ய ஆரம்பிப்பது மிகவும் சுலபமான காரியமல்ல; ஆனால் ஒரு முறை மனிதன் சிந்திக்க ஆரம்பித்து விட்டால் பிறகு அவன் சிந்திக்கும் பழக்கத்தைக் கைவிடவே மாட்டான். மாணாக்கன் உலகத்தையும், இயற்கையையும், பூமியின் மேலுள்ள பல்பொருள்களையும் ஊடுருவிப் பார்த்துக் கவனித்துப் (Observation) பிறகு தனக்குத்தானே சிந்திக்க ஆரம்பிக்க வேண்டும்.''

''செடி நன்றாக வளர வேண்டுமானால், மண்ணைக் கிளறி, காலாகாலத்தில் நீர் பாய்ச்சி, எருவிட்டு, புழு பூச்சி முதலியன அணுகாதபடி காப்பாற்ற வேண்டும். இதுபோலவே மனிதன் பண்பாடு பெற வேண்டுமானால் அவனுக்குக் கல்வி மிகவும் அவசியமானது.''

''ஒரு செடியை நேராக நிமிர்த்தி வளர்த்தோமானால் அது நிமிர்ந்து வளருகிறது. குறுக்கேபடுக்கவைத்து வளர்த்தோமானால் அது அப்படியே வளருகிறது. அது எப்படி வளர்ந்தாலும் அதன் தன்மைகள் மாறுபாடு அடைவதில்லை! அதுபோலவே மனிதன் வாழும் சூழ்நிலையையும், சுற்றுச் சார்பையும் ஒட்டியே அவனுடைய பழக்க வழக்கங்கள் அமையும். சூழ்நிலைகள் மாறினால், பழக்க வழக்கங்களும் மாறும். கல்வியை மக்கள் புகழ்வதும், இகழ்வதும், போற்றுவதும், தூற்றுவதும் அவரவரின் சூழ்நிலையைக் கொண்டே அமையும்.''

''கல்வியின் நோக்கம் யாது? மனிதனையும் அவன் வாழும் சூழ்நிலையையும் புரிந்து கொள்வதுதான். வாழ்வின் சுகதுக்கங்களை ஒரே மாதிரியாகப் பாவிப்பவர்கள் சிறந்த முறையில் கல்வி பயின்றவர்களாவார்கள். கற்றலில் சிறந்து நிற்க வேண்டும். நாம் எப்பொழுது வாழத் துவங்குகிறோமோ அப்பொழுதே கல்வி கற்கத் துவங்குகிறோம்.

வெறும் பயனற்ற வார்த்தைகளைக் குழந்தையின் உள்ளத்தில் நிரப்பக் கூடாது. மனப்பாடம் செய்யும் பழக்கத்தை அவன் கற்றுக்கொள்ளவேகூடாது; குழந்தையின் இளகிய இளம் உள்ளம் கண்ணாடி போன்றது; அது பார்க்கும் பொருள்களெல்லாம் அந்தக் கண்ணாடியில் பிம்பமாகத் தெரியும்; அப்பொருள்கள் அதன் கண் முன்னிருந்து விலக்கப்பட்டால் கண்ணாடியிலிருந்து பிம்பம் மறைந்து விடும். மனப்பாடம் செய்து குழந்தை ஒப்புவிக்கிற காரியமும் அது போன்றதுதான். அப்போது அவன் ஒப்புவிக்கும் செய்திகள் அதைக் கேட்பவர்களுக்குத்தான் விளங்குமே தவிர, அந்தக் குழந்தைக்கு விளங்கவே விளங்காது! இந்த மனப்பாடமுறை மிகவும் மோசமானது.''

''குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றி விட்டால் போதும் என்று நினைப்பது மிகவும் தவறானது; அவர்கள் பெரியவர்களான பிறகு தங்களின் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வது எப்படி என்பதைத் தெரிந்துகொள்ள அவர்கள் மாணவர்களாயிருக்கும் பொழுதே கற்றுக் கொடுக்கவேண்டும். இன்பத்தையும் துன்பத்தையும், வளத்தையும் வறுமையையும், சூட்டையும் குளிரையும் ஒரே மாதிரியான மனப்பாங்குடன் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் குழந்தைகளுக்கு உண்டாக வேண்டும். மரணத்திலிருந்து எப்படித் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது என்று குழந்தைக்குக் கற்பிப்பதைவிட, அதற்கு வாழ்வதெப்படி என்று கற்றுக்கொடுப்பது சாலச் சிறந்ததாகும். வாழ்க்கை என்றால் என்ன? மூச்சு விட்டுக்கொண்டிருப்பதா? இல்லை! நிச்சயமாக இல்லை! நம்முடைய மனதை, புலன்களை, சக்திகளை உபயோகத்திற்குக் கொண்டுவருவதுதான் வாழ்க்கை. இந்த உலகத்திலே நமக்கென்று ஒரு தனித்துவம் உண்டு என்று எப்பொழுதும் நம்மை உணரும்படி செய்து கொண்டிப்பதுதான் வாழ்க்கை! நீண்ட நாட்களுக்கு உயிருடன் வாழ்ந்திருப்பது வாழ்க்கை ஆகாது. வாழும் ஒவ்வொரு விநாடியும் வாழ்ந்துவருகிறோம்என்று உணர்ந்து வாழ்கிறோமே அதுதான் உண்மையான வாழ்க்கை''.

''உழைக்க வேண்டும்; சம்பாதித்து வயிற்றை நிரப்புவதற்கல்ல; சமூகத்தில் உரிய பெருமையுடன் வாழ்வதற்கு!''

''நகரங்களில் வாழ்வது எனக்குப் பிடிக்காது; ஒருவன் மற்றவர்களுக்கோர் இலட்சிய மனிதனாக (IDEAL MAN) இருக்க விரும்பினால் அவன் கிராமத்தில்தான் வாழவேண்டும். மனிதனுக்கு வயதான பிறகு கிராம வாழ்க்கைதான் மிகவும் சிறந்ததாகும்.''

''மாணவன் 'இயற்கையான நம்பிக்கை' (Natural Faith) என்பதைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த நம்பிக்கையின் தத்துவம் என்ன? கடவுளியலை நம்ப வேண்டும்; கடவுளை உலகமாகக் காணவேண்டும் ஆனால் வேதப் புத்தகம், கோவில், குருமார், வழிபாடு, சாங்கியங்கள் ஒன்றுமே வேண்டாம். பலவிதமான மதங்களும் அநியாயத்திற்கும், துன்பத்திற்கும், வெறுப்புக்குமே வழி வகுக்கின்றன.

மனித ஆத்மா அழியாததா? அமரத்துவம் வாய்ந்ததா? இது எனக்கே தெரியாது! என்னுடைய எல்லை அறியும் சக்தியால், எல்லையற்ற எதையும் காணமுடியாது! அழிவற்றது, முடிவற்றது— இவையெல்லாம் என்னைப் பொறுத்தவரை என் அறியும் சக்தியினின்று தப்பியோடி விடுகின்றன. என்னால் எதை நிர்ணயிக்க முடியும், எதை மறுத்துவிட முடியும்? இறுதியில் மனித உடல் மரணத் தீயால் தீய்க்கப்பட்டு, பாகம் பாகமாகப் பிரிக்கப்பட்டு அழிவுறுகிறது என்று என்னால் காண முடிகிறது. ஆனால் இதுபோலவே மனிதனின் சிந்திக்கும் அங்கம் எப்படி அழிவுறுகிறது என்று என்னால் காணவே முடிவதில்லை. அது எப்படி இறக்கின்றது என்று என் கற்பனையிலும் கற்பித்துப் பார்க்க முடியாத நான், அது இறப்பதில்லை என்று எண்ண வேண்டியுள்ளது.''

''உண்மை என்பதில்தான் கடவுளைக் காணவேண்டும்! உண்மை நிறைந்த அர்ப்பணத்தைக் கடவுளால் புறக்கணிக்க முடியவே முடியாது! மதத்தின் கடமைகள், மனிதனின் கோவில், கூட்டங்களுக்கு அப்பாற்பட்டவை; நீதி நிறைந்த உள்ளம் தான் உண்மையான கடவுளின் கோவில்; நம்பிக்கையின்றி நற்குணம் இல்லை!''

(மேற்கூறியுள்ள ரூசோவின் உரைகளைக் கேட்டு மத குருமார்கள் அவன் மீது சீறிப்பாய்ந்தனர். சமூகத்தை விட்டே ரூசோ துரத்தப்பட வேண்டும் என்று உறுமினர்.)

''வேதாந்தம் தத்துவ ஞானம் இவைகளைவிடச் சமயத்தினால் அதிக நன்மை உண்டு; தத்துவ ஞானம் நன்மை செய்ய நினைப்பதைவிடச் சமயம் அதிக நன்மை செய்துள்ளது''

'எமிலி'யின் கடைசி அத்தியாயத்தில், பெண்ணுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கவேண்டிய முறையைப் பற்றி எழுதுகிறான் ரூசோ. பெண்களைப் பெண்களாகவே வளர்க்க வேண்டும். அவர்களை ஆண்களாக வளர்ப்பது கூடாது; அப்படியாக வளர்ப்பது வளர்ப்பவர்களுக்கே கெடுதல் என்பது, அடிப்படைக் கருத்தாகக் காட்டப்படுகிறது.

இன்றையப் புதுநோக்குடன் 'எமிலி'யை நோக்கும்பொழுது என்ன குற்றங்கள் தென்பட்டாலும், 'எமிலி' ரூசோவின் சிறந்த எழுத்துப் படையலாகும். இது எழுதப்பட்ட காலத்தில் இதன் புதுமை மணம்

எல்லோரையும் கவர்ந்தது. ருசிய ஞானி டால்ஸ்டாய் தன் பிள்ளைகளை இந்த முறையில்தான் வளர்த்தாராம். தாய் தந்தையரின் மனதில் ஒளியைப் புகுத்தி அவர்கள் தம் பிள்ளை வளர்ப்பில் கொள்ள வேண்டிய செய்திகளை இந்நூல் உணரச் செய்தது. வளரும் உடலின், வளரும் உள்ளத்தின் தேவைகளைப் புரியவும் வைத்தது. புதுமை விரும்பிகளுக்கு எண்ணப்படையலாகவும் விளங்கியது. இதை மதவாதிகள் வெறுத்தனர். எந்த வைதீகக் குருவும் இந்தப் புத்தகத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் அஞ்சினான். "இந்தப் புத்தகத்தைக் கொளுத்துங்கள்! அதை எழுதியவனைக் கொளுத்த முடியாவிட்டாலும் புத்தகத்தை எரித்த சாம்பல் காற்றில் தூவப் படட்டும்" என்ற சீற்றக்குரல் வைதீக பீடமெங்கும் கேட்டது. இந் நூல் வெளி வந்த பிறகு ரூசோ வேட்டையாடப் பட்டான்; அவன் நூல்கள் அவன் கண் முன்னரேயே கொளுத்தப்பட்டன. ஆயினும் அவன் ஓர் உயிர் நதி; அதைச் சகதிக் குட்டை என்று தூற்றியவர்களெல்லாம் இப்போது மறைந்து விட்டனர்; அவ்வுயிர் நதியோ எப்பொழுதும்போல ஓடி, மனித இனத்தை வளப்படுத்திக் கொண்டே இருக்கிறது.

உங்கள்

தொழில் வளர

வணிகம் ஓங்க

'சீரணி'யில்

விளம்பரம் செய்வீர் !

சிற்றூர்முதல் பெருநகரம்வரை பல்லாயிரக்கணக்கில்

உலவும் 'சீரணி'யே விளம்பரம் செய்யச்

சிறந்த இதழாகும்.

முதல்வர் பிறந்த நாள் முக்கனி வாழ்த்துக்கள் !

முத்தமிழின் மூச்சாக முன்னேற்றக் கண்ணுகக்
கத்துங் கடலலைப் பண்ணுகச் - சித்தமெலாம்
தித்திக்கச் செந்தமிழர் சேவைக்கே வந்திட்ட
உத்தமரே வாழ்க உயர்ந்து!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின்
46ஆவது பிறந்த நாள் விழா
3—6—1969 அன்று கொண்டாடப்பெற்றது

2. மேதகு
ஆளுநர் அவர்கள்
மாலையணிவித்து
வாழ்த்துக் கூறுகிறார்

3. மாண்புமிகு
முதலமைச்சர்
பிறந்த நாள்
'கேக்' வெட்டுகிறார்

1 & 2. வேலூர் மத்தியச் சிறையிலுள்ள பேரறிஞர் அண்ணா நினைவு அறையை மாண்புமிகு முதலமைச்சர் திறந்து வைத்தார்கள். [31-5-1969]

3. சிறைக் கைதிகளுடன் மாண்புமிகு முதலமைச்சரும் மாண்புமிகு உணவமைச்சரும்.

4 & 5. பாளையங்கோட்டையில் மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் முன்பு தனிமைச் சிறையிருந்த அறையில் உள்ள நினைவுச் சின்னத்தைக் கூட்டுறவு அமைச்சர் மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் திறந்து வைக்கிறார்.

மேலே: தொழிலதிபர்-தொழிலாளர் கருத்தரங்கில் (28-5-1969) குடியரசுத் தலைவர் மேதகு வி. வி. கிரி அவர்களுடன் தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு ப.உ. சண்முகம்.
கீழே: சென்னை கந்தசாமி கோயிலிலுள்ள அணிகலன்களை அற நிலைய அமைச்சர் மாண்புமிகு கே. வி. சுப்பையா பார்வையிடுகிறார்.

அறிவு அற்றம் காக்கும் கருவி

1962ஆம் வருடம். தமிழக அரசும், இந்தியப் பேரரசுமாகச் சேர்ந்து என்னைத் தேர்ந்தெடுத்து அமெரிக்க நாடு அனுப்பினார்கள். கல்வி முறைகள் பற்றியும் நிர்வாக அமைப்புக்கள் பற்றியும் அறிந்து வர நான் அனுப்பப்பட்டேன்.

அமெரிக்க நாடு சென்று பல கல்வி நிபுணர்களுடன் கலந்து பேசும் பெரு வாய்ப்புப் பெற்றேன். கல்வியைப் பரப்புவதற்காக அந் நாடு செய்திருக்கும் சட்டங்கள் பலவற்றையும் ஆராய்ந்தேன். அவற்றுள் ஒரு சட்டம் விந்தையாக இருந்தது. Defence of America (Education) Act, என்ற இந்தச் சட்டத்தைப் பார்த்தவுடன் எனக்கு வியப்பு ஏற்பட்டது.

நாட்டைப் பாதுகாக்கப் பல சட்டங்களைப் போட்டவர்கள், அமெரிக்கப் பாதுகாப்பு (கல்வி) சட்டம் என்ற ஒன்றையும் போட்டிருக்கிறார்களே இது என்ன - என்று ஆராய முற்பட்டேன்.

கி. வேங்கட சுப்பிரமணியம்
இணை இயக்குநர் (கல்வி)
கிராம வளர்ச்சித் துறை

பீரங்கி, துப்பாக்கி, விமானம், அணுகுண்டு, சலவாயு குண்டு, விண்வெளிக் கப்பல்கள் - இவை எவ்வளவு தூரம் நாட்டைப் பாதுகாக்க முடியும் [illegible] வேண்டும். அதை விடுத்துக் கல்வியின் தளத்தையும், தரத்தையும் பலப்படுத்தி, இதுவே நாட்டின் சிறந்த பாதுகாப்பு என்றல்லவோ அமெரிக்கர்கள் சொல்லுகிறார்கள். இது எவ்வளவு புதுமையாக இருக்கிறது என எண்ணினேன்.

என்னுடன் இருந்து, பல கல்வி நிலையங்களையும் சுட்டிக் காட்டி அவை பற்றி விவாதித்து வந்த அமெரிக்க நண்பர் டாக்டர் ஷே (Dr. Shea) "அமெரிக்க நாட்டைப் பாதுகாக்கப் பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அவை எல்லாவற்றிலும் மிக முக்கியமானது கல்வியின் மூலம் நாட்டைப் பாதுகாக்க நாங்கள் இயற்றிய இச் சட்டமேயாகும்" என்று பெருமிதத்துடன் கூறினார்.

''பல நூற்றுண்டுகட்கு முன்பே Knowledge is Power, என்று ஆங்கில பேகன் கூறவில்லையா? ஒரு நாட்டின் முக்கியஅரண் அந் நாட்டினர் கற்கும் கல்வி அல்லவா? கல்வியை எவ்வளவு தூரம் பலப்படுத்துகிறோமோ, கல்வி யின் தரத்தை எவ்வளவு தூரம் உயர்த்துகிறோமோ அவ்வளவுக்கவ் வளவு நம் நாட்டின் பலம் பெருகு கிறது'' என்றார். எனக்கு வள்ளுவன் குறள் ஒன்று உடன் ஞாபகத்துக்கு வந்தது. ''அறிவு அற்றங்காக்கும் கருவி, செறுவார்க்கும் உள் அழிக்கல் ஆகா அரண்'' என்று நம் பொய்யா மொழிப் புலவன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லிவிட் டானே. அதைத்தான் இன்று அமெ ரிக்கர் செயல் மூலம் காட்டுகின்ற னர். நாட்டின் உண்மையான அத்தி வாரம் கோட்டை கொத்தளங்களில் இல்லை. ஆனால் அந்நாட்டின் கல்வித் திட்டத்தில் உள்ளது என்ற பேருண் மையை அமெரிக்கர் நன்கு அறிந் துள்ளனர் என்று பாராட்டினேன்.

''அறிவுடையார் எல்லாம் உடை யார்'' என்ற வள்ளுவன் வாக்கிற்கு ஏற்றபடித் தமிழகத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இன்றையத் தமிழக அரசு கல்வியில் பல மாபெ ரும் முன்னேற்றங்களுக்கு வழி கோலி யுள்ளது.

உலகெங்கிலும் கல்வியாளர்கள் ஓர் உண்மையை இன்று உணர்ந்துள் ளார்கள். ஆரம்பக் கல்விதான் அடிப் படைக் கல்வி. இந்த அடிப்படைக் கல்வி, முழுமை பெற்ற நல்ல கல்வி யாக இருந்தாலன்றி, நாட்டில் கல்வி முன்னேற்றம் கணிசமாக இருக்காது. எந்த நாட்டில், ஆரம்பக் கல்வி திற மான கல்வியாக, திறமை மிக்க ஆசிரியர்களால் அளிக்கப்படும் சீரிய கல்வியாக உள்ளதோ அந்த நாட் டில், உயர்நிலைப்பள்ளிக் கல்வி, கல் லூரிக் கல்வி தரமாக அமையும். ஆரம்பக் கல்வியைப் புறக்கணித்து விட்டு உயர்நிலைக்கல்விக்குப் பணத் தைச் செலவிடல் அறிவுடையோர் செயல் அன்று. அப்படிச் செய்தால், அடிப்படை பலமில்லாதபோது மாட மாளிகையை அதன்மீது ஏற்றி னால் என்ன கதி ஏற்படுமோ அதே நிலைதான் நாட்டிற்கும் ஏற்படும்.

300 மக்கள் குடியிருக்குமிடமெல் லாம் இன்று நாம் ஓர் ஆரம்பப் பள் ளியை அமைத்துள்ளோம். பள்ளியில் லாத குடியிருப்பே இல்லை இன்றை யத் தமிழகத்தில் எனத் தலைநிமிர்ந்து நம்மால் சொல்ல முடியும்.

தமிழக அரசு, கல்வி பற்றிய முன் னேற்றத்தில் மற்றைய நாடுகளுக் கெல்லாம் வழிகாட்டியாகவே இருந்து வருகிறது.

மொத்தம் கல்விக்குச் செலவிடும் பணத்தில் ஆரம்பக் கல்விக்கு எவ் வளவு பணம்செலவிடப்படுகிறது என் பதை நோக்குவோம். மூன்றுண்டுக் கணக்கைப் பார்க்கலாம்.

ஆண்டு	கல்விக்காகச் செலவிடப் படும் மொத்தப் பணம் (கோடியில்)	ஆரம்பக் கல்விக்காகச் செலவிடப்படும் பணம்		மொத்தம்	சத விகிதம்
		அரசு மான்யம்	ஊராட்சி ஒன்றியம் செலவிடும் பணம்		
1967-'68	53·98	16·31	3·47	19·78	37%
1968-'69	56·28	19·16	3·58	22·74	40%
1969-'70	69·39	21·47	3·73	25·20	39%

இக் கணக்கைப் பார்த்தால் நமக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்படுகிறது. மொத் தத்தில்கல்விக்காகச்செலவிடும்பணத் தில் சுமார் 40 சதவீதம் ஆரம்பக் கல்விக்காக மட்டுமே தமிழக அரசு செலவு செய்கிறது. இது மிகவும் பாராட்டப்படத்தக்க தொன்றாகும்.

இன்று தமிழகத்தில் 374 ஊராட்சி ஒன்றியங்கள் ஆரம்பக் கல்விப் பொறுப்பை ஏற்றுள்ளன. கிராமங் கள் முன்னேறினாலன்றி நாடு நல் வாழ்வு பெறமுடியாது என்ற உண் மையை உணர்ந்த அரசு, கிராமியக் கல்வி செழிக்கப் பல சீரிய திட்டங் களை அளித்துள்ளது.

ஒரு காலத்தில் சொல்லுவார்கள், ''பஞ்சாயத்துப் பள்ளிக்கூடமா''- அங்கு ஒன்றுமே இருக்காதே- ஆசிரி யர் இருக்கமாட்டார். நாற்காலிக ளெல்லாம் முக்காலிகளாக நின்று கொண்டிருக்கும். கரும்பலகைகள் வெறும் பலகைகளாக - வெண் பலகைகளாக இருக்கும். கட்டடம் பற்றிச் சொல்லவே வேண்டாம்! கதவு ஒன்றிருக்கும், அதுவும் கரையான் தின்றிருக்கும்! இந்தச் சூழ்நிலையிலே படிப்பு எப்படி இருக் கும் என்பதுபற்றிச் சொல்ல வேண் டுமா?

இந்த நிலை இன்று இல்லை. இனி என்றுமே வராது. ஊராட்சி ஒன்றி யங்களிடம் கல்விப் பணியை, அரு மையான ஆரம்பக் கல்வித் தொண்டை ஒப்படைத்து, இது உங்கள் முதல் பணி என்று கொடுத்த வுடன் கிராம மக்கள் பள்ளிச் சீர மைப்பில் பேரூக்கம் காட்டினார்கள். இன்று ஊரிலுள்ள சிறந்த கட்டடம் பள்ளிக் கட்டடமே. ஊராட்சி ஒன்றி யங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டி போட்டுக்கொண்டு தங்கள் ஆரம்பப் பள்ளிகளை ஒழுங்குற அழகுமிளிர அமைப்பதில் ஆர்வம் காட்டுகின் றன. உதாரணமாக வடஆர்க்காடு வட்டம், 'நெமிலி' ஊராட்சி ஒன்றி யத்தில் எல்லா ஆரம்பப் பள்ளிகளுக் கும் ஓராண்டிலேயே புதிய கட்ட டங்கள் பாங்குடன் அமைக்கவேண்டு மெனத் திட்டமிட்டு வேலை செய்து பெரும் வெற்றியும் பெற்றனர்.

முன்பெல்லாம் 'விஞ்ஞான உப கரணங்கள்' என்பவை பெயரளவில் ஏட்டளவில் தான் பல காலமாகக் கல்வித்துறையில் உலவி வந்தன. பள்ளிச் சீரமைப்பு மந்திரத்தின் பலனாக, பல பள்ளிகள் விஞ்ஞானக் கருவிகளைப் பெற்றன. ஆனால் இவை போதாது என்று கண்ட அரசு தங்க ளது மானியத்தின் மூலமாகவும் ஆரம்பப் பள்ளிகளுக்கு விஞ்ஞானக் கருவிகளை அனுப்பியது.

கிராமப் பள்ளிகளில் விஞ்ஞானக் கூடங்களை அமைக்கும் இப் புரட்சி கரமான திட்டம் மிகச் சிறந்த பயன் களை அளித்து வருகிறது. பல ஆரம்ப ஆசிரியர்களும், தலைமை ஆசிரியர் களும் இதை விரும்பி வரவேற்றுப் போற்றுகின்றனர். பல ஆண்டுகளாக எவ்விதமான உபகரணங்களுமின்றி வெறுங் கல்வியளித்து வந்த இந்தக் கிராமக் கல்வி நிலையங்கள் இன்று பொலிவுடன் முழுக் கல்வி அளிக்கும் நிலையங்களாகத் திகழ்கின்றன. திட்டமிட்டு வருடத்துக்கு வருடம் முன்னேற வழி வகை செய்து கொண்டு கூடிய விரைவில் எல்லாப் பள்ளிகளுக்கும் இச் சலுகையை அரசு அளிக்கும் என நம்பலாம். இதுவரை மூன்றுண்டுகளில் சுமார் 20 லட்சம் ரூபாய் இந்த விஞ்ஞானக் கருவிகளுக் காகச் செலவிடப்பட்டுள்ளது.

1967-68, 1968-69 இந்த இரண் டாண்டுகளில் மட்டும் சுமார் பத்து லட்சம் ரூபாய் ஆசிரியர் குடியிருப்பு களுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

1969-70ஆம் ஆண்டிற்கு ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 8836 ஆரம்பப் பள்ளிகளிலும், 1730 உயர் ஆரம்பப் பள்ளிகளிலும் புத்தகசாலை அமைக்க மொத்தம் ரூ. 3, 68, 880 அரசினர் மான்யம் வழங்கப்பட்டுள்ளது.

இம்மாதிரியாகப் பல்வேறு திட்டங் களினால் தமிழகத்தின் கல்விச் சாலை களின் தரத்தை உயர்த்தும் பணியில் ஈடுபட்டுள்ள அரசுக்குத் துணையாக இருந்து நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பற்பல உள்ளன. ''அறிவு அற்றம் காக்கும் கருவி'' யெனும் வள்ளுவன் வாய்மொழி நம் பள்ளி களுக்கெல்லாம் அளிக்கப்பட்ட குறிக் கோளாகும்.

''நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.

(புறநானூறு)

என்பது ஔவை மூதாட்டியின் அருந்தமிழ். ஒரு நாட்டின் பெரு மைக்கு இயற்கை வளங்களினும், மற்றயைச் செல்வங்களினும் பெருங் காரணமாக அமைவது மக்கட் சிறப்பே யாகும்.

'என்னருந்தமிழ் நாட்டின் கண் எல் லோரும் கல்வி கற்றுப் பன்னருங்கலை

ஞானத்தால் பராக்கிரமத்தால் அன்பால் உன்னத இமமலே போல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற்று'வாழும் நல்ல நிலே மலரக் கல்வி வளர்ச்சியை மேலும் வளப்படுத்துவோமாக.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் ஒரு சீரிய கருத்தை வலியுறுத்திஞர்கள். 'பள்ளிச் சீரமைப்பு' என்பதைவிடக் கல்விச் சீரமைப்பு என்று கூறுதல் பொருத்தமானதாகும் என்று கூறிய அவர்கள் நாடெங்கிலும் கல்விச் சீரமைப்பு இயக்கம் வளரவேண்டுமென விரும்பிஞர்கள். அவர் காட்டிய வழியில் நின்று அற்றம் காக்கும் கருவியாய அறிவைப் பரப்பும் தொண்டில் ஈடுபடுவோமாக!



கற்றதனல் ஆன பயன்

மா. கி. தசரதன், எம். ஏ.

கல்வியின் பெருமையையும், தேவையையும் பல காலமாகப் பலர் பல முறையில் எடுத்துச் சொல்லியுள்ளனர். அழியாத செல்வம், நின்று நிலேக்கும் தன்மையுடையது, என்றும் பயன்படக் கூடியது என்றெல்லாம் அதன் பெருமையைக் கேட்கிருேம். கல்வியே மனிதனுக்குக் கண் என்று வள்ளுவர் கூறிவிட்டார். வற்ருத பெரும் பொருளாக இருந்து காலமெல்லாம் தன்னேப்பற்றி எண்ணிப் பேசிக் கொண்டிருக்க இடம் தருகின்றது அது.

ஆனல் அந்தக் கல்வி என்பது தான் என்ன? நான்கும் நான்கும் சேர்ந்து எட்டாகின்றது என்று சொல்லிடும் திறமையோ, காரிகை அறிந்து கவிபாடும் வல்லமையோ, பாடிய கவியின் பொருள் விளக்கும் புலமையோ-இவைமட்டுமே கல்வி ஆகிவிடுமா?

இவை மட்டுமே கல்வி ஆகாது என்ருல் வேறு எதுவோ சேர்ந்து தான் கல்வி முழுமை பெறுகின்றது. அப்படி அரும்பாடுபட்டுப் பெறுகின்ற கல்விச் செல்வத்திஞல் மனிதன் எவ்வளவோ பயன் பெறுகின்ருன். சாதாரண மனிதனேப் போலவே, உண்டு, உடுத்தி, உடலமைப்பைப் பெற்றிருப்பினும் கற்றவனுக்குத் தனி மதிப்பு, புகழ் இருக்கிறது. அவன் வாழ்க்கையைப் பிறர் கூர்ந்து காணுகின்றனர். பலருடைய போற்றுதலுக்குக் காரணமாக இருக்கும் அந்தக் கல்வியைப் பயன்படுத்தி மனிதன் செய்ய வேண்டிய பணிகள் எத்துணேயோ உள்ளன. அப்படி உள்ள பணிகள் என்றும் எங்கும் ஒரே தன்மையோடு இருப்பதில்லே. உலகத்தில் நேற்று இருந்தவை எத்துணேயோ இன்று இல்லே. இன்று இருப்பவை நாளேயும் இருக்கும் என்ற நிலே இல்லே. உலகம் மாறிக் கொண்டே இருப்பதனல், புதுமை கணந்தோறும் தோன்றுவதனல், எண்ணங்களும் புதிது புதிதாக விரிந்து கொண்டே போகின்றன. கல்வியிஞல் பெறவேண்டிய பயன், செய்ய வேண்டியபணி-இவைகளும் மாறுகின்றன. திருவள்ளுவர் காலத்தில் கற்றதனல் ஆய பயன் வாலறிவன் நற்ருள் தொழுவது என்று மட்டுமே மக்கள் எண்ணியிருக்கக் கூடும். திருவள்ளுவர் காலம் இன்று இல்லே. உலகம் எவ்வளவோ முறையில் மாற்றம் கண்டு விட்டது. நாமும் அந்த மாற்றங்களுக்கு எல்லாம் நம்மை உட்படுத்திக் கொண்டு வாழுகின்ருேம். எனவே வாலறிவன்

நற்றாள் தொழுவது மட்டுமே கற்றதனால் ஆயபயன் என்று கருதிக் கொண்டிருக்கக் கூடாது,

''உலகம் எவ்வழியில் நடக்கின்றதோ அந்த வழியில் உலகத்தோடு ஒட்டி நடத்தலே அறிவாகும்.'' இதனை நமக்குக் காலத்தோடு ஒட்டி வாழ்க என்று அன்றே வள்ளுவர் கூறிச்சென்றுள்ளார். ஆகவே நாம் கல்வியைக் கொண்டு வாழ்க்கையில் எப்படியெல்லாம் பயன் பெறலாம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மேற்கு நாட்டு மக்களும் நம்மைப் போலவே எல்லாத் துறைகளிலும் தொடக்க நாட்களில் பழமையின் பிடியில் சிக்குண்டு கிடந்தனர். எந்தத் துறையிலும் அறியாமையும் மூடநம்பிக்கையும் அவர்களை அடிமை கொண்டிருந்த பழங்காலம் இன்று அங்கே இல்லை. புதுமை மலர்ந்துள்ளது; பொலிவு பிறந்துள்ளது. சமயத்தைப் பற்றியதாகவும் சமயத்தைச் சிறப்பிப்பதகாவுமே முதன் முதலில் மேற்கு நாடுகளில் கல்வியின் பணி கருதப் பட்டுவந்தது. மெல்ல மெல்ல அங்கே கருத்துக்களில் புரட்சி தோன்றிச் செயல்படத் தொடங்கியவுடன் மேற்கு நாட்டு மனிதர் பழமையின் ஒவ்வொரு பிடியிலிருந்தும் தங்களை விடுவிடுவித்துக் கொண்டு புதிய புதிய துறைகளில் வாழ்க்கையினைத் தொடங்கினர்; வெற்றி கண்டனர். கல்வித் துறையில்அவர்கள் அடைந்த முன்னேற்றம் முக்கியமானதாகும். சமயத்தைப் புகட்டத்தான் கல்வி பயன்பட வேண்டும் என்ற கருத்து சமுதாயத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்குப் பயன்படுதல் வேண்டும் என்றாயிற்று. பின்னர் நாட்டிற்காகத் தன்னையும், தியாகத்தை ஊட்டிடும் நாட்டுப் பற்றையும் கொள்ளும் குடிமகனாக ஒவ்வொருவனும் ஆதல் வேண்டும் என்பதும் அங்கே கல்வியின் நோக்கமாகக் கருதப்பட்டது. இன்று மேற்கு நாட்டில் விஞ்ஞானத் துறையில் வெற்றி காண வேண்டும் என்பதே குறிக்கோள் எனலாம். பேக்கன் என்ற அறிஞர் அங்கே நெடுங்காலத்திற்கு முன்னமேயே, ''அறிவு என்பது இயற்கையை வெல்லும் ஆற்றலே'' என்று மக்கள் மனதில் அறிவின் வேட்கையைப் பிறப்பித்துள்ளார். ஆகவே அந்த மக்கள் அறிவியல் துறையில் தங்கள் ஆவலைக் காட்டுகின்றனர்.

நம் முன்னோர் முறையாயிற்றே, இதனை நாம் தள்ளுதல் தவறாகாதோ என்று அவர்கள் தயங்கியது இல்லை. ஆயிரக்கணக்காக இருந்த கடவுளர்களை எல்லாம் பிள்ளைப் பருவத்துப் பேதை விளையாட்டு என்று ஒதுக்கித் தள்ளினர். காலமெல்லாம் கிடந்த எத்துணையோ பழக்கங்களையும் முறைகளையும் கூடாது, இயலாது என்பதால் எடுத்தெறிந்து விட்டு இயன்ற நெறியும் ஏற்புடைய வழியும் எது எனக் கண்டு வாழும் வகை தேடினர். ஆனால் நமது நாட்டிலேதான் முன்னோர் முறை, நமது காலத்திலா அதனை நீக்குவது, தள்ளுவது என்ற தயக்கம், அச்சம், நடுக்கம் இவை பிறக்கின்றன. சமுதாயத்தில் சூழ்நிலை, மாறுகின்ற உலகத்தின் வேகத்தில் வேறுபட்டுக் கொண்டே இருக்கிறது. அதற்கு ஏற்ப நாமும் நம்மையும் நம் இயல்புகளையும் மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். அது தான் வளர்ச்சி எனப்படும். ஒரே நிலையில் இருப்பதனை வளர்ச்சி என்று எவ்வாறு கூறல் ஒல்லும்?

ஆனால் கற்றதனால் ஆயபயன் வாலறிவன் நற்றாள் தொழ வேண்டாமா? என்று கேட்டால், தொழலாம், நன்றாகத் தொழலாம்.

வாலறிவனைத் தொழுவதா வேண்டாமா என்பது அல்ல இப்போது சிந்திக்க வேண்டுவது. கல்வியினால் உண்மையாக ஒருவன் அடைய வேண்டிய பயன் என்ன என்ற முக்கியப் பிரச்சனை தான் நாம் கவனிக்க வேண்டுவது. பத்தாவது படித்தான், பி.ஏ முடித்தான் என்று சொல்லி விட்டால் மட்டும் போதுமா? கற்ற கல்வியினால் இந்த அலுவலகத்தில் வேலை கிடைத்தது, வழக்கு மன்றத்தில் வாழ்க்கை நடக்கிறது, பை நிறைகின்றது என்று கூறி விட்டால் போதுமா? உண்மையான கல்வியின் பயன் இதில் இல்லை.

இதிலே மட்டும் இல்லை என்பதனால் இதுவும் கல்வியின் பயன்தான் என்பதை அறிகின்றோம். ஆம் கற்றதனால் தன் வாழ்க்கையில் வளம் காணுதல் வேண்டும். வயிற்றுக் கவலையை மறக்

கின்ற அளவுக்காவது கல்வி ஒருவருக்குக் கை கொடுக்க வேண்டும். கல்வியே செல்வம், அதுவும் அழியாத அருஞ்செல்வம் என்று இருந்தால் வயிற்றுக் கவலை தீராது. நல்ல கல்வியிருந்தும், கவிதையில் வல்லவர்களாக மிளிர்ந்தும், பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தங்களுக்கும் தங்களை நம்பியவர்களுக்கும் ஏதுமற்ற ஏழையாய் ஏங்கி வள்ளல்களின் வண்மையை நம்பி வாழ்ந்த வாழ்க்கையை நாம் இலக்கியங்களில் காணுகின்றோம். அந்த நிலை வருந்தக் கூடியது. கற்றவன் தன் கல்வியினால் கவலையற்ற வாழ்க்கை நடாத்தும் நிலையும் வாய்ப்பும் பெறுதல் வேண்டும். அத்தகைய வளமிக்க வாழ்க்கை கிடைத்து குடும்பத்தில் உள்ளபோது கற்றவன் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும். தான் கற்றவன், மற்றவரின் மேம்பட்டவன் என்ற எண்ணம் இருத்தல் கூடாது. அதுவும் அன்பு குழைந்து அகம் கலந்து மகிழ்ச்சி பொங்கி இருக்கவேண்டிய இல்லத்தில் நிச்சயம் அந்தத் 'தனித் தன்மை' இருத்தல் கூடாது. எல்லோரிடமும் அன்பைக் கொட்டி வாழும் நல்ல வாழ்க்கை இல்லத்தில் இருக்க வேண்டும்.

கல்வியினுடைய பெரும் பயன் எண்ணத்தில் ஏற்படும் மாறுதலில் தான் அடங்கியுள்ளது. கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் புறத்தில் மாறுபாடு ஒன்றும் இல்லை. ஆனால் அகத்தில் மாறுதல் உண்டு. அந்தமாறுபாடு 'நாம் உயர்ந்தோம்' என்ற தருக்கைத் தருகின்ற அகம்பாவ மாறுபாடாக நிச்சயம் இருத்தல் கூடாது. அகந்தையைத் தராமல் அழகு ஏற்படுத்தக்கூடிய மாறுபாடு, எண்ணத்தில் எழுச்சி பெறுவதுதான்.

கற்றவனுக்கு அழகே எண்ணத் தெரிவதுதான். ''நான் இதை அறிவேன்; இந்த நூல் எனக்கு மனப்பாடம்; அந்த நூலுக்குப் பதவுரை தேவையா, பொழிப்புரை போதுமா?'' என்று கேட்டு விட்டு எண்ணத்தில் புதுமை கொள்ளாமலிருந்தால் அந்தக் கல்வியினால் பயன் ஒன்றும் இல்லை. அருஞ் செய்யுட்களை ஏந்தியுள்ள நூல்கள் எப்படித் தமக்குப் பயனின்றி இருக்கின்றனவோ அதைப் போலவே எண்ணுதற்கு இயலாதவன் கற்றவையும் ஒரு பயனுமின்றிப் போகும்.

எண்ணம் எதனையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது. எண்ணியார் திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்தும் என்று வள்ளுவர் எண்ணத்தின் வலிவைக் குறிப்பிட்டுள்ளார். சமுதாயத்தை மாற்றவும் திருத்தவும் வல்ல எண்ணத்தைப் பெறுவது அவ்வளவு பெரிய பணியாகும். அடிப்படையில் நலன் தருகின்றதாகிய எண்ணும் ஆற்றலை ஒருவன் பெற்றுவிட்டால், அவன் தான் எண்ணுவதோடு மட்டும் மன அமைதி அடையமாட்டான். இதுவரை உலகில் தோன்றிய உத்தமர்களின் எண்ணங்களில் எல்லாம் தன் மனதை ஈடுபடுத்தி அவற்றின் நன்மை தீமைகளை ஆராய்ந்து பயன் பெறுவான். பிறரையும் பயன் பெறச் செய்வான்.

இந்தப் பொலிவும் விளக்கமும் வாழ்க்கையில் இருத்தற்கு மனிதன் என்றும் மனச்சோர்வு கொள்ளுதல் கூடாது. கிளர்ந்தெழும் புத்துணர்ச்சி பெற்ற மனத்தினனாக இருந்தால் தான் துன்பம் நேர்கையில் துவண்டு மாண்டிடாமல், இன்பம் காணுதற்கு என்ன வழி என்று ஆராய்தல் இயலும். வாழவழி கிடைக்கும் என்று நம்பிக்கை கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். நம்பிக்கை இல்லையேல் இன்று இந்த அளவுக்கு உலகம் முன்னேறி இருக்க இயலாது.

நாடு வரும் வரும் என்ற நம்பிக்கைதான் அமெரிக்காவைக் காட்டிற்று. ஆராய்ச்சி வெற்றி பெறும் பெறும் என்ற நம்பிக்கைதான் பல அரிய விஞ்ஞானப் புதுமைகளை உலகறியச் செய்தது. ஏழை ஒரு கவளம் சோறு கிடைக்கும் என்று நம்புவதனால்தான் உலகத்தில் இன்னும் அமைதி நிலவுகின்றது. வாழ்வு மலரும் என்ற நல்ல நம்பிக்கைதான் தொழிலாளரை இன்னும் உழைக்கச் செய்கிறது. மழைபொழியும் - மண்விளையும் என்று நம்பித்தான், உழவன் ஏரைத் தொட்டு எருதை நாடுகின்றான். வாழ்க்கையின் வற்றாத ஊற்றாக இருக்கும் இந்த அரிய பொருளாம் நம்பிக்கை ஏற்பட வேண்டுமானால் அதற்கு மனம் என்றும் சோர்வு கொள்ளாதிருத்தல்

வேண்டும். புதிய ஊக்கம் பிறத்தல் வேண்டும். எதிலும் ஈடுபாடு இருத்தல் வேண்டும். அந்த நல்ல உற்சாகத்தைத் தரக் கூடிய கல்வி பயின்ருல்தான் கற்றவஞல் நாட்டுக்கு நன்மை. தான் நாட்டின் குடிமகன் என்ற உரிமையை உணர்வது மட்டும் இன்றி, ஒரு குடிமகன் நாட்டுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் யாவை என்பதனையும் கல்வி ஒருவருக்கு உணர்த்தவேண்டும். நாம் கற்ருேம், நமது சுற்றம் சிறந்தால் சாலும் என்ற எண்ணம் இருத்தல் கூடாது. நம் போன்ற பிறர், சமுதாயம், நாடு இவை நலம்பெற, பலன் துய்க்க நாம் என்ன செய்யலாம்? நமது ஆற்றல், திறம், வாய்ப்பு இவற்றை எவ்வாறு பயன் படுத்துதல் வேண்டும்? சமுதாயம் முன்னேற வேண்டுமாயின் அதற்கு எது செய்தல் வேண்டும்? என்ற பரந்த முறையில் எண்ணங்களை வளர்க்க வேண்டும். தொண்டு மனப்பான்மையையும் தொண்டராகும் வாய்ப்பையும் கல்வி தருமேல் அது நல்ல பயன் தந்த கல்வி எனலாம்.

அந்தப் பலனை அது தருதல் வேண்டுமாயின் கற்பவனின் மனதிலே பெரிய மாற்றத்தை விளைவிக்க வேண்டும். தான் என்ற சிறியதோர் புள்ளியைமட்டுமே சுற்றிச் சுழலும் இயல்புடைய மனம், உலகம் என்ற பேரெல்லையைப் பற்றிப் பரந்துதிரியும் பக்குவம் பெறுதல் வேண்டும். மனதில் இந்த அளவுக்கு மாற்றம் விளைவிக்க வில்லையேல் அந்தக் கல்வி, அற்றதுதான். அதுவெறும் காலக் கழிவுக்காகச் செய்யப்பெற்ற ஏற்பாடாக இருக்குமேயன்றிக் கருத்தைத் திருத்தவோ, நலன் தரவோ ஏற்படுத்தப்பட்ட நல்லதோர் அமைப்பு முறையாகாது.

இந்த எண்ணப் புரட்சியைத் தர வல்ல கல்வி வாய்த்ததும் இன்னும் ஒன்று வாய்க்கவேண்டும் என்று சிலர் கூறுவர். எண்ணத்தின் எழுச்சியை, சிந்தனையின் ஆற்றலை ஏற்றுச் செயலாற்ற வல்ல உடல் நலம் இருத்தல் வேண்டும். நல்ல உடல் நலம் இருந்தால்தான் எதுவும் நடக்குமென்று கூறுவர். இதுவும் உண்மையே. கல்வியினுல் ஆகும் பயன்களில் உடல் ஓம்பும் முயற்சியும் ஒன்றுதான். அறிவியல் துறையில் மனிதன் எவ்வளவோ முன்னேற்றம் கண்டுள்ள-எதைச் செய்யவும் ஏற்ற கருவிகள் உள்ள - இந்த நாட்களிலுமா உடல்நலம் இன்றியமையாதது என்று யாவரும் எண்ணுர். ஏனெனில் மனமும் உடலும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டியங்கிடுவன என்பதனை இன்று எல்லோரும் அறிவர். நல்ல மனமே உடலை வளர்க்கும் என்பதும், நல்ல உடலிலேயே நல்ல மனம் வாழும் என்பதும் நம் நாட்டு மக்கள் நெடுநாட்களாகச் சொல்லிடும் உண்மைகளாகும். ஆகவே உடல் தானே, ஏற்புச்சட்டகம், மாயை, என்று எவரும் எண்ணுர். இதனைப் பேணி வளர்த்தல் பெருங்கடமை என்பது உணர்வார், கல்வியின் பயஞக அதுவும் இருத்தல் வேண்டும் எனக் கூறுவர்.

இப்படிச் சங்கிலித் தொடர் போன்று ஒன்றுக்கொன்று ஆதரவாகவும் அடிப்படையாகவும் அமைந்திருக்கும் இத்தப் பலன்கள் மனிதனுக்கு வேண்டப்படும் இன்றியமையாத தன்மைகளாகும். இந்தத் தன்மைகளைத் தர இயலாவிடில் அது கல்வியும் ஆகாது. பயனில்லாத ஒன்றினைச் செய்வதும் ஒன்றுதான் செய்யாமையும் ஒன்றுதான்.

சங்ககாலத்தில் அமைந்த கல்வி முறை தனக்கென வாழாது பிறர்க்குரியாளன் ஆவதையே வலியுறுத்தி வந்தது. அன்றைய மக்கள் வாழ்க்கையும் தமக்காக இருந்ததை விடப் பிறர்க்காகவே பெரிதும் பயன்பட்டும் வந்தது. ஆனுல் இடைக் காலத்தில் இந்த மண்ணில் விதி என்றதோர் பொல்லாங்கு சூழ்ந்தபின்னர் மனம் மாசுற்றது. 'அவனவன் விதி அது' என்ற தொடர், மனதில் இருந்து ஈரத்தைத் துடைத்து விட்டது. துன்பத்தைக்கண்டு உருகும் நிலைமாறி அதனைக் கண்டபின் உருகாத கன் மனம் வந்தது.

விதிக்கொள்கையோடு இறக்கமதியான சாத்திரங்களும் புராணங்களும் அவனவன் தன் கருமமே கண்ணுக இருப்பதையே வற்புறுத்தின. பிறனுக்கு உதவி செய்ய எண்ணுவது பயனற்ற செயல் எனக்கூறப்பட்டது. கற்றவர்கள் இந்தப் புராணங்களும் சாத்திரங்களும் கூறுவதுபோல் நடப்பவர்களாகத் தங்களைக் காட்டிக்

கொள்வது தேவைப்பட்டது. ஆகவே கற்றவர்கள் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படுவதை மறந்தனர்; தங்களைப்பற்றியே எண்ணினர். ஆனுல் கல்லாதவர்களோ இந்தப் போலித் தத்துவத்தை உணராததனுல்-உணர்ந்தும் மதிக்காததனுல் பழையபடி பிறர்க்காகவே வாழ்ந்து வரலாயினர்.

இதனைக் கண்டவர்கள், கற்றவர்களினும் கல்லாதவர்களே, உலகிற்குப் பயன்படுவதனை உணர்ந்தனர். அந்த உணர்ச்சிதான் இடைக்காலத்தில் கற்றவர்களின்மீது வெறுப்பாக மாறியது.

'கல்லாத பேர்களே நல்லவர்கள்' என்றும், 'கற்ருரை யான் வேண்டேன், கற்பனவும் இனியமையும்," என்றெல்லாம் இடைக்காலத்தில் கற்றவர்களையே கூறவைத்தது பயனற்ற கல்விதான்.

எனவே உண்மையிலேயே கல்வி பயன் தரவேண்டுமாளுல் அந்தக் கல்வியிஞல் கற்றவர் மட்டும் பயன் பெறுவதோடு அமையாமல் பிறர்க்கு அதனுல் நன்மை ஏற்படுதல் வேண்டும்.

இதனைத்தான் வள்ளுவர் பலவகைகளில் வற்புறுத்திக் கூறியுள்ளார். மனிதன் மனிதத்தன்மை பெற்று வாழ்வதற்குக் கல்வி பயன்படவேண்டும். அதுதான் கற்றதனுல் ஆய பயன் ஆகும்!

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க:

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற:

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)



CODE MB-1/VL

மிகச் சிறந்த சாதனங்கள்.

தயாரிப்பவர்கள்:

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.,
மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள்:

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071
75, கலாசி பாளையம்
தபால் பெட்டி எண் 539
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2

கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 81227
38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 677
இராயப்பேட்டை, சென்னை-14

சுபிட்சத்துக்கும் தாராளமான தண்ணீர் வசதிக்கும்
பம்புடன் கூடிய
Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்
நம்பத்தகுந்தது



நல்ல
மகசூல்



விவசாயிக்கு
சுபிட்சத்தை
அளிக்கிறது

தாராளமான
தண்ணீர்



நல்ல மகசூலை
அளிக்கிறது

பம்புடன் கூடிய நம்பத்தகுந்த ஒரு
Kirloskar கிர்லோஸ்கர்
மோட்டார்
தாராளமான தண்ணீர்
வசதியை அளிக்கிறது.



பம்புடன்
இணைக்கப்பட்ட ஒரு
கிர்லோஸ்கர் மோட்டார்

கிர்லோஸ்கர் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட்,
த. பெ. எண் 1017; பெங்களூர்-3, இந்தியா
பூரண விநியோகஸ்தர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்
த. பெ. எண் 12, மதராஸ்-1. • த. பெ எண் 208 கல்கத்தா-1.
த. பெ. எண் 506, பம்பாய்-1 BR. • த. பெ. எண் 172, புதுடில்லி-1.

கிராமப் பகுதிகளில் அறிவியல் வளர்ச்சி

இரா. சண்முகம்
துணைப் பள்ளிக் கல்வி இயக்குநர்

மனிதன் சந்திரனில் அடியெடுத்து வைத்து அம்புலியின் மண்ணையும் கனி வளங்களையும் எடுத்துக் கொண்டு நம்பூமிக்குத் திரும்புகிறான்! ''நிலா நிலா ஓடிவா, நில்லாமல் ஓடிவா'' என்னும் குழந்தைப் பாட்டு இனி ஒரு கற்பனையல்ல. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பாகச் சந்திரனில் மனிதனை இறக்கும் முயற்சிக்கான பூர்வாங்க ஆராய்ச்சிகளைத் துவக்கிய போது இது கற்பனைக் கதையாக முடியும்என்று எண்ணினர், பல கோடி மக்கள். ஆனால் சந்திரனுக்கு மனிதன் சென்று வருவது இன்று கற்பனையல்ல; சந்திரனில் குடியேற்றத்தை எந்த முறையில் அமைப்பது என்று திட்டமிட ஆரம்பித்து விட்டனர். இன்னும் இருபது, முப்பது ஆண்டுகளில் இன்று மலைப்பகுதிகளிலுள்ள உறைவிடங்களுக்குச் சென்று வருவதுபோல், ஓய்வுக்காகச் சந்திரனுக்குச் சென்று வருதல் கூடும்.

''பழைய விளக்குகளுக்குப் பதில் புது விளக்குகள்'' என்பது அல்லாவுதீனும் அற்புத விளக்கும் என்னும் அராபியக் கதையில் வரும் மாயாஜால மந்திரவாதியின் கூற்று. ஆனால் பழுதடைந்த இதயத்திற்குப் பதிலாகப் புது இதயம் அளித்தல் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் சாதனை. அதிசயங்கள் என்று கருதிய எத்தனையோ இன்று சாதாரண நிகழ்ச்சிகளாய் விட்டன. இன்றைய உலகம் அறிவியல் உலகம். மனித வாழ்க்கையின் முன்னேற்றம் அவனுடைய அறிவியல் ஆராய்ச்சித் திறனின் அன்பளிப்பு. இவ்வாறு உலகின் பல பகுதிகளில் அறிவியல் விரைந்து வளருகிறது. ஆராய்ச்சித் திறன் உயர்கிறது. ஆராய்ச்சியாளர் பலர் உலகப்புகழ் பெறுகின்றனர். அவர்களின் வியக்கத்தக்க படைப்புகள் மக்கள் நலனையும், வாழ்க்கை வசதிகளையும் வளர்த்துக் கொண்டே வருகின்றன.

இத்தகைய உலக வளர்ச்சியில் நம்பங்கு என்ன? உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானிகள் நம்மிடையேயுமுண்டு. நோபல் பரிசு பெற்றுள்ளவருமுண்டு. ஆனால் 50 கோடி மக்களடங்கிய நம் இந்திய சமுதாயம், ஏனைய நாடுகளைப்போல், ஏன் பெருமளவு, தலை சிறந்த, உலகப் புகழ் பெறும் தகுதியுடைய விஞ்ஞானிகளை உண்டாக்கவில்லை? அத்தி பூத்தாற்போல் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே நம்மிடை தலை சிறந்த விஞ்ஞானிகளுள்ளனர். ஏன், சில சமயங்களில் நம் மண்ணில் பிறந்த அறிவியலாளர்கள், தம் வளர்ச்சிக்கும், ஆராய்ச்சிக்கும், புகழ்தரும் சாதனைகளுக்கும் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது?

அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட நாளிலிருந்து இன்றுவரை நாம் பல துறைகளில் முன்னேறியுள்ளோம். நம் தமிழ் நாட்டரசோ, இன்றைக்கு 65 கோடி ரூபாய்க்கும் மேலாகக் கல்விக்குச் செலவு செய்வதற்குத் திட்டமிட்டுள்ளது. நம் மாநிலத்தில் இன்று 2,500க்கும் மேற்பட்ட உயர் நிலைப்பள்ளிகளும், 31,000க்கும் மேற்

பட்ட ஆரம்பப்பள்ளிகளும் உள்ளன. இவற்றில் படிப்போர் எண்ணிக்கை 60 இலட்சத்திற்கும் மேல் உள்ளனர். அரசின் இத்துணை ஆதரவையும், மக்களின் நல்லார்வத்தையும் நன்கு பயன் படுத்திக் கொண்டு நாம் முன்னேற வேண்டும். ஏனைய நாடுகளைப் போலப் பெரும் விஞ்ஞானிகளையும் கணித மேதைகளையும் நாமும் உருவாக்க வேண்டும். இத்துறையில் நாம் செய்யக்கூடியது என்ன என்பதனை இங்கு ஆராய்வோம்.

நம் பள்ளிகளின் பாடத்திட்டத்தை நோக்குங்கால், அறிவியல் படிப்பு ஆரம்ப வகுப்பு முதல் பள்ளியிறுதி வகுப்பு வரை எல்லா மாணவர்களும் கற்க வேண்டிய பாடம் என்பது நன்கு விளங்கும். இதற்கும் மேலாகப் பள்ளியின் 10, 11 ஆம் வகுப்புகளில் மாணவர்கள் அறிவியல் பகுதிகளை விருப்பப் பாடமாகவும் படிக்கலாம். அறிவியல் நுகர்ச்சி மாணவர்களுக்குப் பரவலாக ஏற்பட அதனை ஒரு கட்டாயப் பாடமாகப் பள்ளிகளில் அரசியலார் வைத்துள்ளனர். மேலும் ஆய்வுக்கூடங்கள் பள்ளிகளில் பெருகவும் அரசியலார் நிதி ஒதுக்கீடு ஆண்டு தோறும் செய்து வருகின்றனர். அரசியலாரின் இந்த முயற்சிகளும், பள்ளிகளில் அளிக்கப்படும் பயிற்சியும் மாணவர்களுக்கு அறிவியல் துறையில் ஓர் அளவு அடிப்படை அறிவை உண்டாக்கி வருகின்றது.

பள்ளிகளில் அறிவியல் வைத்திருப்பதன் நோக்கம் மாணவர்களுக்கு ஒரு சில உண்மைகளையும், தத்துவங்களையும் மட்டும் கற்பிப்பதற்கு அன்று. மாணவர்களிடையே அறிவியல் நோக்கு வளரவேண்டும்; ஆராயும் உணர்வு வளர வேண்டும்; காரண காரிய விளைவுகளறிந்து எதனையும் அளவிட வேண்டும்; உற்றுணரும் திறன் மேம்படவேண்டும் என்பனவே அறிவியல் பாடத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்கள். பள்ளிகளில் மாணவர்கள் பெறும் புத்தக அறிவும், சிறு சிறு ஆராய்ச்சிகள், சோதனைகளால் ஏற்படும் பட்டறிவும் மாத்திரமே மேற்படி நோக்கங்கள் நிறைவேறுவதற்கு உதவும் என்று எதிர்ப்பார்க்க முடியாது. நகர்ப்புறங்களில் வாழும் மாணவர்கள், பள்ளியில் மட்டுமல்லாமல் வெளியுலகிலும் பல நேரடிக் கல்வி அனுபவங்களைப் பெறுகின்றனர். ஓரளவிற்கு உலக அரங்கில் அறிவியல் வளர்ச்சியினையும், சாதனைகளையும் அவர்களால் அறிந்து கொள்ள இயலுகின்றது. ஆனால் இச்சிறு அனுபவமும் கிராமப்புற மாணவர்களுக்கு எளிதில் கிட்டுவதில்லை.

ஆகவே, அறிவியல் துறையில் நம் மக்கள் பலர் உலகப் புகழ் எய்த விரும்பினால், பள்ளியிலுள்ள போதே அவர்களுக்குப் பலவித வாய்ப்புகள் அளிக்க வேண்டும். குறிப்பாக ஆராய்ச்சி அனுபவங்கள் பலவற்றை அவர்களுக்கு அளித்து ஆராயும் திறனை வளர்க்கவேண்டும். இந்தத் துறையில் குறிப்பாக உருசிய நாட்டு முறைகளை நாம் கவனிக்க வேண்டும். அங்கு அறிவியல் வளர்ச்சிக்குப் பொறுப்பாக உள்ளது, அறிவியல் கழகம் (Academy of Sciences) என்றதோர் அமைப்பாகும். அக்கழகத்தின் அங்கத்தினர்களான பல பெரும் அறிவியலாளர்கள் பள்ளி மாணவர்களிடத்திலே ஆராய்ச்சித் திறனை வளர்க்கப் பல முறைகளைக் கையாளுகின்றார்கள். உதாரணமாக வெப்ப மண்டலத்தில் வளரும் ஒரு செடியையோ மரத்தையோ, குளிர் மண்டலத்தில் பயிர் செய்ய முற்படும் போது ஏற்படும் பிரச்னைகளை அறிய முற்படுகின்றபோது, அதில் பள்ளி மாணவர்களுக்கும் ஒரு பங்கினைக் கொடுக்கின்றனர். குறிப்பிட்ட செடி வளரும்போது ஏற்படும் மாறுதல்கள், வெப்ப தட்ப நிலைகள் செடியின் வளர்ச்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பன போன்ற நிகழ்ச்சிகளை உற்று நோக்கி, தொகுத்து எழுதியனுப்பும் பணியினை மாணவர்களுக்கு அளிக்கின்றனர். அந்நிகழ்ச்சிகளை அலசி ஆராய்ந்து முடிவு காணும் பொறுப்பு அறிவியலாளர்களுக்கிருந்தாலும் கூட, அப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் மாணவர்களுக்கும் பங்கு உண்டு.

இம் முறையினை நாமும் நம் கிராமப் பகுதிகளில் கையாளலாம். விவசாயத் துறையில் பல ஆராய்ச்சிப் பண்ணைகள் நம் மாநிலம் எங்கும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப் பண்ணைகளில் நடக்கும் ஆராய்ச்சிகளில் எளியன சிலவற்றை நம் பள்ளி மாணவர்களைக் கொண்டு நடத்த

லாம். ஆராய்ச்சியின் போது நடக்கும் மாற்றங்களைக் கண்டறிந்து தொகுத்தனுப்பும் வாய்ப்பினை மாணவர்களுக்குக் கொடுக்கலாம். தீவிரச் சாகுபடி முறைகள் நடைமுறையிலிருக்கும் பகுதிகளில் மாணவர்களுக்கும், இவ்விதச் சாகுபடி முறைகளில் முக்கியப் படிகளையும், பலன்களையும் அறிவியல் முறையில் தெரிந்துகொள்ளும் வாய்ப்பினைக் கொடுக்கலாம். இவ்விதமாகத் தாவரத் துறையில் ஆராய்ச்சி அனுபவம் பெறுவதற்கு நம் மாணவர்களுக்கு நல் வாய்ப்புக்களை அளித்தால் அவர்களின் ஆராய்ச்சி ஊக்கம் பெருகி, பிற்காலத்தில் தலை சிறந்த ஆராய்ச்சியாளர்களாகத் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

பள்ளி நேரம் தவிர ஏனைய நேரங்களில் மாணவர்களுக்குத் தொழில் துறையனுபவம் அளிப்பது மிகவும் நல்லது. உருசிய நாட்டிலே இளைஞர்களுக்கான தொழில் நிறுவனங்கள் (Young Technicians Stations) பல உண்டு. இவற்றில் மாணவர்கள் வாரம் இருமுறை சென்று தங்கள் ஈடுபாட்டின் வழிச் சில தொழில் துறைகளில் ஆராய்ச்சி செய்யவும், புதுப்புது இயந்திரங்கள் செய்யவும் வாய்ப்புப் பெறுகின்றார்கள். சிறு சிறு ஆகாயவிமான மாதிரிகள், கார், டிராக்டர் மாதிரிகள், வானொலிப் பெட்டிகள் போன்றவை செய்யும் அனுபவம் பெறுகின்றனர். இவ்விதத் தொழிலறிவு தரும் நிறுவனங்களைக் குறிப்பாகக் கிராமப் பகுதிகளில் நாம் அமைத்தால் மாணவர்களுக்குப் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படும். இவ்வித நிறுவனங்களை ஏற்படுத்தி நடத்தும் பொறுப்பினைத் தொழிற்சாலைகள்தான் ஏற்று நடத்த இயலும். மாணவர்கள் பெறும் தொழிலறிவும், தொழிலனுபவமும் அந்தந்தத் தொழிலுக்கே நேரிடையான பலன்களை அளிப்பதோடல்லாமல், மாணாக்கர்களின் படைப்புத் திறனை வளர்த்து நாட்டுக்கும் நலனை அளிக்குமன்றோ?

இவை மாத்திரமன்றிக் கிராமப் பகுதிகளில் ஆங்காங்கே அறிவியல் கழகங்கள் பல ஏற்படவேண்டும். அக் கழகங்களில் மாணவர்களோடு ஊர் மக்களும் பங்கு பெறுதல் வேண்டும். அக் கழகங்களுக்கு மாதமொரு முறையாவது ஆராய்ச்சியாளர்களும், கல்லூரிப் பேராசிரியர்களும் சென்று மக்களுக்கு விரிவான அறிவியலறிவை உண்டாக்கும் பணியில் ஈடுபடலாம். அக் கூட்டங்களில் புதிதான முன்னேற்றங்கள், அவற்றின் பயன்கள் ஆகியவை பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினால் மக்களார்வம் பெருகும். அவர்கள் அறிவும் வளரும். காட்சி, கேள்விக் கருவிகளைப் பயன்படுத்தி மக்கள் கூட்டங்களிலும், அறிவியல் முன்னேற்றத்தை எடுத்துக் காண்பிக்கலாம்.

இவ்விதமாக மக்களிடையே பரவலாக அறிவியல் உணர்வை ஏற்படுத்த வேண்டும். மாணவர்களுக்கு அவர்கள் பள்ளியில் படிக்குங் காலத்திலேயே ஆராய்ச்சி அனுபவம், உற்று நோக்கும் பயிற்சி, அறிவியல் நோக்கு ஆகியவற்றை வளர்க்கப் பல முறைகளைக் கையாளுதல் அவசியம். பல இலட்சம் மாணவர்களுக்கு அளிக்கும் அத்தகைய பயிற்சியின் விளைவாகப் பல ஆயிரம் தலை சிறந்த அறிவியலாளர்கள் நம் நாட்டில் ஏற்படுவார்கள் என்பது உறுதி.

நம்முடைய இளைஞர்கள் தங்கள் குடும்பத்திற்கு நல்ல புதல்வர்களாக இருக்கவேண்டும். சமுதாயத்திற்கு அடக்கமும், வணக்கமும் உடையவர்களாக இருக்கவேண்டும். தங்கள் ஒழுக்கத்தில், விழிப்புடையவர்களாகவும் பொது மக்களிடத்தில் அன்புடையவர்களாகவும் இருக்கவேண்டும். கருணை, அன்பு முதலிய நற்குணமுடையவர்களிடம் நட்புக் கொண்டு பழகவேண்டும். இவை அனைத்தையும் செய்து முடித்த பிறகு அவர்களுக்கு நேரமிருந்தால் நூல்களைக் கற்க வேண்டும்.

— **கன்பூசியஸ்**

தரணி புகழ் சீரணி

க. பரமசாமி, பி.ஏ.
சீரணித் தனி அலுவலர்

மறைந்த மாமேதை தமிழ் நாட்டின் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுச் சுரங்கத்தில் விளைந்த அற்புதங்கள் பற்பல. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குவது சீரணி என்ற அமைப்பாகும். பல்வளங்களையும் பழுதறப் பெற்ற நந்தமிழ் நாட்டில், பெற்ற வளங்களை உற்ற வகையில் பயன்படுத்தி வளர்ச்சித் திட்டங்களை விரைவுபடுத்த — வழிகாண எண்ணினார் பெருந்தகை அண்ணா அவர்கள். பல்கிப் பெருகி நிற்கும் மனித சக்தியை — ஆற்றல் மிகு அப்பெரும் சக்தியை ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்துதலால் விளையும் பயன்கள் அளவிடற்கரியன என்பதைக் கண்டார். இந்த அடிப்படையில் உறங்கிக் கிடக்கும் மனித சக்தியை விழித்தெழச் செய்து நாட்டுப்பணி புரியும் நல்ல திசையில் திருப்பி ஊருக்கும் உலகுக்கும் செம்மை சேர்க்க உருவாக்கிய பேரணிதான் சீரணி.

வியத்தகு வளர்ச்சிகளை விண் உயர ஏற்றிவிட்டவர் அயல் நாட்டவர். அத்தகு வளர்ச்சிக்குக் காரணம் அவர்கள் உழைப்பிற்குத் தரும் உயர்வுதான். இந்தப் பெருங்குணம் நம்மிடம் மங்கும் நிலை உருவாகி விட்டதோடு நாட்டின் வளர்ச்சிக்கும் சிறுகச் சிறுக ஊறு விளைக்கும் நிலையினையும் கண்டார் அறிஞர் அண்ணா அவர்கள். இப்போக்கைத் தடுத்து நிறுத்தி உயர்வுக்கு வழி உழைப்பு என்பதனை அறிவுறுத்தவும், உழைப்பின் உயர்வை உள்ளத்தில் பதிய வைக்கவும், ஒரு சாதனமாக மேற்கொள்ள வேண்டிச் சீரணியை அமைத்தார்கள். மேலும் நம்மிடையே நிலவி நிற்கும் வேண்டப்படாதவற்றில் எதற்கும் பிறரை எதிர்பார்க்கும் நிலையும் ஒன்று. இந்த நிலை வளர்ந்து, வளர்ந்து, எதற்கும் அரசின் துணை நாடும் அவலநிலை பெற்றுவிட்டதையும் அறிந்தார்கள். அதைப் போக்க அயலார் உதவியையோ, அரசின் உதவியையோ நாடாது, தாமே, தம்மிடம் உள்ளவற்றைக் கொண்டே தமது ஊரின் வளத்தைப் பெருக்கி, தமக்கும், தம் நாட்டிற்கும் தொண்டாற்ற முன்வரும் உணர்வை உள்ளத்தில் ஊன்ற வைக்க உருவாக்கப்பட்டதுதான் சீரணி. இதன் விளைவாக அரசாங்க

மானியங்களையே நம்பியிருப்பதைத் தவிர்த்து உள்ளூர் வளங்களைப் பயன்படுத்தி உள்ளூர்த் தேவைகளை நிறைவு செய்தல் மூலம் பிரச்சனைகள் பல விரைவில் தீர்வதோடு, நாட்டு மக்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும் உதவும் என்பதையும் மனதில் கொண்டார்கள்; சீரணி உருவாயிற்று.

சீரணி கண்ட செம்மலுக்கு நாம் செய்யும் கைம்மாறு அவர் விரும்பிய செயலை, செய்து முடிக்க எடுத்துக் கொள்ளும் சூளுரைதான். ஆம்! அத்தகைய சூளுரை செயல் உருவம் பெற 40,000 சீரணித் தொண்டர்கள் தியாக மனப்பான்மையோடு நாட்டில் நல்ல பல பணிகளைச் செய்து வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

''தமது உழைப்பினை உளமுவந்து ஈந்திடப் பற்பல ஆயிரவர் முன் வந்திடின் சமூகம் பெற்றிடக்கூடிய பயன் பெருமை தரத்தக்காத அமையும். தமக்காகவும் தம் குடும்பத்துக்காகவும் செலவிட்ட நேரம் போக எஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும் நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவோம் என்ற உறுதிகொண்ட சிலஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின் சமூகம் மேம்பாடு அடைந்திடுவது உறுதி. இந்த ஆர்வம் கொண்டோர் பல்லாயிரவர் உளர் என்ற நம்பிக்கையுடன் துவக்கக் கட்டமாக மாவட்டத்திற்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு சீரணியை அமைத்திடும் திட்டத்தை மேற்கொண்டேன்'' என்று சீரணித் துவக்க விழாவில் மறைந்த முதல்வர் அவர்கள் கூறியது நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

மக்களின் நல்வாழ்விற்கெனத் தீட்டப்படும் திட்டங்கள் முழு அளவில் நிறைவேற்றப்பட அரசு மட்டும் முயன்றால் போதாது; அரசோடு மக்களும், குறிப்பாகத் தொண்டுள்ளங்கொண்டவர்களும் முன்வர வேண்டும். அத்தகைய கருத்தினை ஒட்டிப் பிறந்ததுதான் சீரணி. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கைம்மாறு கருதாமல் உழைப்பாக நல்கும் நல்லுள்ளங்களின் அணிதான் சீரணி.

''சீரணி'' அரசியல் கட்சிகள் ஈடுபாடில்லாத ஒப்பற்ற அணி—நாட்டின் நல்வாழ்விற்கும், சீரிய சமுதாயத்தை உருவாக்கும் முயற்சிக்கும் வழிகாட்டும் அமைப்புதான் சீரணி. உணர்ச்சிப் பிழம்பாய் உள்ளத் துடிப்போடு நிற்கும் இளைஞர் சமுதாயத்தை ஆக்கப்பணியில் ஈடுபடவைப்பதுதான் சீரணி. நாடு எனக்கென்ன செய்தது என்று வினவாமல், நாட்டிற்காக நான் என்ன செய்தேன் என்று சிந்திக்க வைப்பதுதான் சீரணி. தன் கையே தனக்குதவி என்ற தாரக மந்திரத்தைத் தரணிக்கு உணர்த்துவதுதான் சீரணி.

இத்தகைய கோட்பாடுகளைக் கொண்டு, ''பைந்தமிழ் நாடு பல்வளம் பெறவும், சமூகம் நல் ஏற்றம் எய்தவும், சமூகம் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி காணவும், நல்ல ஆக்கப்பணிகள் ஆற்றவும், சீரணி நோக்கத்தில் நம்பிக்கையும் செயலில் ஈடுபாடும் கொண்டு உள்ளத் தூய்மையோடு காய்தல் உவத்தலகற்றிக் கைம்மாறு கருதாது கட்டுப்பாட்டோடும், கண்ணியத்தோடும் கடமையாற்றுவேன்'' என்று உறுதி மொழி ஏற்றுக் கடந்த பதினெட்டு மாதங்களில் வலிவும் பொலிவும் பெற்று வியக்கத்தக்க சாதனைகளைப் பட்டி தொட்டிகளிலெல்லாம் செய்து காட்டி, நாட்டோர், நல்லோர், மத்திய, மாநில அமைச்சர்கள், அதிகாரிகள் பலரின் பாராட்டுதலைப் பெற்று வீரநடைபோடும் பேரணியாகத் திகழ்கிறது இச் சீரணி. சீரணியின் சாதனைகளை நேரில் காணும் வாய்ப்பினைப் பெற்ற நாட்டின் தலைவர்களில் ஒருவரான சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ''காந்தியார் உயிருடன் இருந்திருந்தால் இச் சீரிய முயற்சிக்கு அவருடைய நல்லாசி கிடைத்திருக்கும். மனமுவந்து மக்களாற்றும் இத்தகைய பணிகளில் தான் நாட்டின் அமைதி, வளம், அதன் எதிர்கால வாழ்வு குடிகொண்டுள்ளன. இச்சீரணி வெற்றி நடைபோடுவதற்கு என்னுடைய நல்வாழ்த்துக்கள்'' என்று கூறிப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது.

இச் சீரணியில் மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், பொறியியல் வல்லுநர்கள் உண்டு; ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் உண்டு; பாட்டாளியும் உண்டு; பாமரனும்

உண்டு இவ்வாருகத் துடிப்பு மிக்கோராய், எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிக்கும் ஆற்றல் பெற்ரோராய்ப் பம்பரமாய்ச் சுழன்றுபணியாற்றி உடலைக் கசக்கி உகிர்த்த வியர்வையின் ஒவ்வொரு துளியும் உருவாக்கித் தந்த சாதனைகள் ஏராளம்! ஏராளம்!!

இதுவரை திருச்சி, மதுரை, செங்கற்பட்டு மாவட்டங்கள் நீங்கலாகச் சீரணியினர் புரிந்த சாதனைகள்:

உயர்ந்து நிற்கும் 247 பள்ளிக் கட்டடங்கள், நீண்டு விரிந்து வளைந்து செல்லும் 235 இணைப்புச் சாலைகள், தார் எடுத்துச் செம்மைப்படுத்தப்பட்ட வாய்க்கால்கள், குளங்களின் எண்ணிக்கை 305, காடுகளைந்து கதிர்களைச் சுமந்து நிற்கும் கழனியாக மாறிவிட்ட 500 ஏக்கர் நிலப்பரப்பு, பயிர்களைத் தாக்கும் நோய்களைப் போக்க மருந்து தெளித்துப் பயிர்ப் பாதுகாப்புப் பெற்ற ஏக்கர்கள் 1500 ஆகிய இத்தனையும் அவர்களின் சாதனை. அதுமட்டுமா? இன்னும் உண்டு. சீரணியைக் கட்டிக் காக்கும் பொறுப்பினை ஏற்றிருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சென்ற கோடை விடுமுறையைப் பயன்படுத்தச் சீரிய திட்டம் ஒன்றைத் தந்தார்கள். அதன் பயனாக வெள்ளையடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் 7751, புதுப்பெயர்ப் பலகைகள் பெற்ற பள்ளிகள் 4554, திருக்குறள் மணம் பரப்பக் குறள் வாக்கியங்கள் பொறிக்கப்பட்ட பள்ளிகள் 4976, பொது மறை தந்த திருவள்ளுவரின் திருவுருவம் தாங்கி நிற்கும் பள்ளிகள் 2326. இத்தனையும் சீரணித் தொண்டர்களால் செய்து முடிக்கப்பட்ட சாதனைகள்.

நாடு நலம் பெற—சமூகம் சீர்பெற—ஊரும் உலகமும் உணர்வு பெற—மக்கள் பொது அறிவு படைத்தோராய் அமைதல் எத்துணை அவசியம் என்பதனை அறிவீர்கள். இப்பெரும் பணியினை நோக்கி அடி வைக்கிறது சீரணி. பட்டி தொட்டிகளில் பாமரர்கள், பாட்டாளிகள் வாழும் பகுதிகளில் சீரணி அறிவகங்கள் சுமார் 534 அமைக்கப்பட்டிருக்கின்றன. அன்றாட உலக நிகழ்ச்சிகள், வளர்ச்சிப் பணிகள், நாட்டு நிலைமைகள், புது வாழ்வுச் சாதனைகள் முதலியவற்றைப் பொது மக்கட்கு எடுத்துக் கூறும் பெரும் பணியில் சீரணித் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இதன் மூலம் நாட்டோரின் நல்லெண்ணத்தைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாகச் சீரணி கண்ட செம்மல்—தமிழ் மறைக்குத் தனித்ததோர் இலக்கணமாய்த் திகழ்ந்து இன்று நம்மிடையே இல்லாத பேரறிஞர் அண்ணாவின் எண்ணத்தைச் சொல்லாலும், செயலாலும் செய்து காட்டி—சீரணியை இட்டுச் செல்லும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கருத்தினைச் செயல்படுத்திச் சிறந்த சமுதாயத்தை உருவாக்கச் சூளுரைப்போமாக.

பண்டைக்காலத்தில் பொதுப்பணியாற்ற வீட்டுக்கொருவர் விரைந்து வர ஊருக்கு முதல்வர் அழைப்பு விடும் பாங்கினை அன்றையச் சமுதாயம் பெற்றிருந்தது. அதனைப் பேணிக் காத்து, நம் இன்றையத் தமிழக முதல்வரின் அழைப்பை ஏற்று நாட்டின் நல் வாழ்விற்குப் பணியாற்ற நல்லோரே, வல்லோரே, துடிப்பு மிக்க இளையோரே, ஆற்றல் வாய்ந்த பெரியோரே, அணிஅணியாக வந்து சீரணியில் சேர்ந்து புதிய சமுதாயத்தை உருவாக்க வாரீர், வாரீர் என்று வேண்டுகிறேன்.

வணக்கம்.

எது சிறந்தது?

நெற்பயிரைத் தாக்கும் குறுத்துப் பூச்சிகளை ஒழித்து, விளைச்சலைப் பெருக்க வேண்டுமா?

''எண்ட்ரின்'' பயன்படுத்தத் தவருதீர்கள். இதனுல் ஒரு ஹெக்டேருக்கு 1600 கிலோ வரை விளைச்சல் கிடைக்கிறது.

வேளாண்மைத் துறை விஞ்ஞானிகள் ஆடுதுறை, கோவை ஆகிய இரண்டிடங்களிலும் செய்த ஆராய்ச்சியின் விளைவாக எண்ட்ரினுல் மிகு விளைச்சல் கிடைப்பது உறுதியெனக் கண்டறிந்துள்ளார்கள்.

தனித்தனியே இரண்டு ஹெக்டேர் நெற்பயிரைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொன்றிலும் 2·5 கிலோ வீதம் லிண்டேனும், எண்ட்ரினும் தெளித்தார்கள்.

ஆடுதுறையிலுள்ள எண்ட்ரின் தெளித்த வயல், மற்ற வயல்களைவிட, 1669 கிலோ அதிக விளைச்சல் தந்தது. இது லிண்டேன் தெளித்த வயலிலிருந்து கிடைத்த விளைச்சலைவிட, 565 கிலோ அதிகமாகும். எண்ட்ரின் பயன்படுத்தப்பட்ட வயல்களிலுள்ள செடிகளின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததுடன், ஒவ்வொரு கதிரிலுள்ள தானிய மணிகளும் கூடுதலாகவேயிருந்தன.

கோவையில் நடைபெற்ற சோதனையிலும் இதே முடிவுகள்தாம் கிடைத்துள்ளன.

இங்குள்ள மற்ற வயல்களைவிட எண்ட்ரின் தெளித்த வயல்களிலிருந்து 1072 கிலோ அதிக விளைச்சல் கிடைத்துள்ளது. லிண்டேன் தெளித்த வயல்களிலிருந்து 89 கிலோ மட்டுமே கூடுதலாக விளைச்சல் கிடைத்துள்ளது.

'லிண்டேன்,' 'எண்ட்ரின்' ஆகியவற்றில் 'எண்ட்ரின்' தான் சிறந்ததென இப்போது சோதனைவாயிலாகத் தெரிந்துவிட்டதல்லவா?

வாழ்வில் சிறப்புடையவை சிறப்பிடம் பெறுக. விளையாட்டினும் பெரிது வேலை; களிப்பினும் பெரிது கடமை; தன்னலத்தினும் பெரிது பிறர் நலம். எந்த ஒன்றையும் ஒழுங்காகத் தொடங்கினுல் அதுவே பாதி வெற்றியாகும். சரியான தொடக்கமில்லாத விளையாட்டு வீரன் தன் பரிசுப் பொருளை இழப்பான். தொடக்கத்தில் தவறிழைக்கும் வணிகன் தன் பெருமையை இழப்பான். முதலில் இடறுகின்ற உண்மை விரும்பி நேர்மையெனும் மணிமுடியை இழப்பான். தூய நினைவோடும், நடுங்குதலற்ற நடுவு நிலையோடும், தன்னலங்கருதாத் தன்மையோடும், குலையாத மனச்சான்ருேடும் தொடங்குதலே ஒழுங்காகத் தொடங்குதல் ஆகும். இவ்வாருகத் தொடங்கினுல் மற்றையவை தாமே பொருத்தமுற வந்து இணையும். வாழ்க்கையும் எளிமைச் சிறப்புடையதாய், அழகு பொருந்தியதாய், வெற்றி நல்குவதாய், அமைதி தழுவியதாய்த் திகழும்.

— ஜேம்ஸ் ஆலன்

வெற்றி உறுதி

பன்னெடுங்காலமாகவே எங்கள் குடும்பம் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளது. இருப்பினும் இம்முறை நான் கம்பு அறுவடை செய்துள்ளதைப்போல், எந்த ஆண்டும் செய்ததில்லை, என்று பெருமையுடன் கூறுகிறார் ஹெச். பி. 1 கம்பு பயிரிட்ட கோவை மாவட்ட உழவர், திரு. பி. என். நாராயணசாமி அவர்கள்.

1966-67ஆம் ஆண்டிற்குரிய மாநில விளைச்சல் போட்டியில் இரண்டாவது பரிசைப் பெற்றுள்ள திரு. நாராயணசாமி, கோவை மாவட்டத்திலுள்ள பிச்சாண்டிபுரம் கிராமத்தைச் சார்ந்தவர்.

உயரமான, வாளிப்பான திரு. நாராயணசாமி ஓர் இரட்டைப் பட்டதாரியும் கூட. நவீன வேளாண்மை முறைகளைக் கையாண்டு, விளைச்சலைப் பன்மடங்கு பெருக்குவதில் இவர் மிகுந்த ஆர்வமுள்ளவர்.

இவருடைய பகுதியிலேயே எச். பி. 1 கம்பை முதன்முதலில் பயிரிட்டதும் இவர்தாம். செழித்து ஓங்கி வளர்ந்து, பச்சைப் பசேலெனக் காட்சியளிக்கும் அவரது பயிரினைக் கண்ணுற்ற பெரிய, சிறிய உழவர்களெல்லாம், எச். பி. 1 கம்பையே பயிரிடத் தொடங்கினர். இப்பயிரைப் பார்த்த பின்னரும் ஐயப்பாடு கொண்டிருந்த சில உழவர்கள் இவருக்கு 1698 கிலோ விளைச்சல் கண்டதை நோக்கியவுடனேயே அவர்களும் இவர் வழியைப் பின்பற்றுவாராயினர்.

நாற்றங்கால் :

நாற்றங்காலுக்கென மூன்று சென்ட் நிலத்தை ஐந்து முறை செம்மையாக உழுது, மூன்று வண்டி பண்ணையுரம் அடித்தார். இறுதி உழவிற்குமுன் 12 : 6 : 6 விகிதத்திலுள்ள இரண்டாம் இன உரத்தில் நான்கு கிலோவை நாற்றங்காலில் இட்டார். விதைகளுடன் 'சல்பர்' கலந்து பக்குவம் செய்து 2 கிலோ விதை தெளிக்கப்பட்டது. பயிர் செழிப்பாக வளர்ந்தது. ஒரே முறை எண்ட்ரின் தெளிக்கப்பட்டது.

70 வண்டிச்சுமை பண்ணையுரமடித்து, பன்முறை உழுது, மண்ணுடன் உரத்தை நன்கு ஒன்றிவிடச் செய்தார். முன்னர்ச் சொன்ன இரண்டாவது இன உரத்தில் ஐந்து மூட்டைகளை மேலும் இட்டார்.

நடவு:

18 நாள் நாற்றங்கால் பயிரை, 1½ அங்குல இடைவெளியில், இரண்டு அல்லது மூன்று நாற்றுக்களைக் கொண்டு நடவு செய்தார்.

50 கிலோ யூரியாவினால் மேலுரம் இட்டார். முன்னேற்பாடாக, எண்ட்ரின் தெளித்தார். பிறகு 10 சதவீத பி. எச். வி. தூவினார்.

நட்டு 82 நாட்களுக்குப் பிறகு அறுவடை செய்து, இயந்திரத்தினுதவியால் தானிய மணிகளைப் பிரித்தெடுத்தார். அவருக்கு 1698 கிலோ விளைச்சல் கிடைத்தது.

திரு. நாராயணசாமி தற்போது தேசீய விளைச்சல் போட்டியில் பங்கு பெறவிருக்கிறார். அவர் வெற்றியடைவது உறுதி.

கல்விச் சீர்திருத்தம்

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் திருவாக்கு. கல்விச் செல்வம் அழியாதது என்ற வள்ளுவரின் கருத்தை மாற்றவோ மறைக்கவோ மறக்கவோ இயலாது!

சென்னை நகர மேயர்

கல்வி என்பது யாது? அதனுள் அடங்கிய பொருள் யாது? ஏட்டுக் கல்வி என்று கூறுகின்றோமே அதை மட்டும் அச்சொல் குறிப்பிடுகின்றதா? அன்றித் தொழிற் கல்வியையும் அது சுட்டுகின்றதா? கற்கவேண்டியவை எவை எவையோ அவற்றையெல்லாம் கல்வி என்பது சுட்டுகின்றது என்பதே பொருத்தமானதாகும். இக் காலக் கல்வியியல் அறிஞர் அவ்வாறுதான் கருதுகின்றனர்.

கல்வி பற்றிய பல்வேறு கருத்துக்கள் உலவுகின்றன. சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் கல்வி பற்றிய நூல்கள் பல தோன்றியுள்ளன. அது ஒரு தனித் துறையாகவே இயங்கி வருகின்றது. அதைப் பட்டப் படிப்புக்குரியதாக்கியும் வைத்துள்ளனர் பல்கலைக் கழகத்தினர். ஆராய்ச்சித் துறையும் அதற்கென ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய கல்வி முறை பெரும்பாலும் ஆங்கிலேயர்களால் வகுக்கப்பட்டதே எனக் கூற முடியும். வாழ வந்த ஆங்கிலேயர் தாம் வாழ்வதற்குரிய வழிவகைகளை வகுக்கும்போது, தங்கட்கு ஏற்ற அடிமை இனத்தை ஏற்படுத்துவதற்காகத் தற்காலக் கல்வி முறையை ஏற்படுத்தினர். தங்கள் ஆட்சியைக் கொண்டுசெல்வதற்கு ஏற்கத் தக்க கல்வி முறையை அவர்கள் வகுத்தனர் என்பது வெள்ளிடைமலை. ஆதலால் அக்கல்வி முறையே நமக்கு ஏலாத ஒன்று என்று தெளிவாகக் கூறிவிட முடியும். இப்படிச் சொல்வதால் அவர்களின் கல்வி முறை அடியோடு ஏற்க முடியாதது, ஒதுக்கி விலக்க வேண்டியது என்பதாக எண்ணக் கூடாது. அக் கல்வி முறையில் கொள்ளுவன

வேலூர் நாராயணன் M.A., B.L.

கொண்டு தள்ளுவன தள்ள வேண்டும் என்பதே என் கருத்து.

'அக்கல்வி முறையில் ஏற்பட்ட தவறுதான் என்ன?' என வினவலாம். கல்வி கற்ற ஒவ்வொருவனும் ஏதேனும் ஓர் உத்தியோகம் பார்த்துத்தான் ஆகவேண்டும் என்ற எண்ணத்தை அக்கல்வி முறை ஏற்படுத்தியுள்ளது என்பது இங்குச் சுட்டிக்காட்ட வேண்டியதொன்று. பி.ஏ., எம்.ஏ., பி.காம்., பி.எஸ்ஸி., மற்றும் பல பட்டப் படிப்புகளோ, அன்றி அவற்றைப் போன்றவையோ, அன்றி அவற்றினும் சற்றுத் தாழ்ந்ததோ, எதுவாயினும், அதைக் கற்றவன் ஊதியம் குறைவாயினும், அந்த ஊதியமின்றி வேறு துறையில் சென்றால், தான் நன்கு வாழவேண்டிய நிலை இருப்பினும், அதை விரும்பாது ஏதாவது ஓர் அலுவலக வேலையையே விரும்புகிறான். அதுதான் ஆங்கிலேயர் வகுத்த கல்வி முறையினால் உண்டான பெருங்கேடு.

கல்வி கற்ற ஒருவன் தன் கல்வியைத் தொழில் வளர்ச்சியில் அல்லது வாணிகத் துறையில் புகுத்த எண்ணுவதில்லை. உத்தியோகம் ஒன்றை ஏற்றுத் தன் கல்விக்கும் செய்யும் வேலைக்கும் தொடர்பின்றி வழக்கமான கடிதங்களை எழுதியும், (பைல்கள்) கோப்புகளைப் பார்த்துக் கொண்டும் இருப்பது எத்துணைக் கேடு பயப்பது! நாடு தந்த கல்வியை ஏற்ற ஒருவன் அந்நாட்டுக்குத் தன் அறிவைப் பயன்படுத்தி, நாட்டின் தொழில் வளர்ச்சி, வாணிக வளர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி ஆகியவற்றில் உதவாமல் தன் வாழ்நாட்களை வீணே கழிப்பது பெருந் துரோகம் என்றே தோன்றுகிறது! இங்ஙனம் தற்காலக் கல்விப்போக்கின் குறைகளை ஆராயப் போனால் அவை பல்கிப் பெருகிக்கொண்டே போகும். சுருக்கமாகக் கூறின், பொருளாதார வளர்ச்சியில் நம் நாடு பின்தங்கியதற்கு நம் கல்வி முறைதான் பெரிதும் காரணம்!

காந்தியடிகள் போன்றோர் கல்வி முறையில் கண்ட குறைகளை மாற்றப் புகுந்தனர். அதனால் அடிகள் வார்தா கல்வி முறைத் திட்டத்தை வகுத்தார். அதன் நடைமுறை மிக மந்த நிலையில் உள்ளதாயினும் அதன் நோக்கம் சிந்திக்கத் தக்கதே! அவர் வழியில் வந்த மதிப்புக்குரிய இராசாசி அவர்கள் தாம் முதல் அமைச்சராக இருந்தபோது ஒரு கல்வி முறையைக் கொண்டுவந்தார். அதைக் 'குலக்கல்வி முறை' என்று அழைத்தனர். அதன் நோக்கமாவது ஒரு மாணவன் அரை நாள் மட்டும் பள்ளியில் கல்வி கற்கவேண்டும் என்பதும் மற்ற நேரத்தில்-அரை நாளில் தன் குடும்பத் தொழிலைக் கற்கலாம் என்பதுமாம். ஓர் அரை நாளில் ஏட்டுக் கல்வியும் மற்றும் ஓர் அரை நாளில் தொழிற் கல்வியும் கற்க வேண்டும் என்பது இராசாசியின் கருத்து. ஆனால் அக்கல்வி முறை தோல்வியே கண்டது.

ஊன்றிப் பார்த்தால் இக்கல்வி முறையில் நிறையும் குறையும் பொதிந்துள்ளன என்பதை அறியலாம்.

ஏட்டுக் கல்வி அரை நாள் கற்றால் போதுமானது என்பதும் தொழிற் கல்வியை அரைநாள் கற்பது சிறந்தது என்பதும் நிறைகள். ஆனால் தொழிற்கல்வியை ஒரு மாணவன் எங்கே சென்று கற்பது? சாதித் தொழிலை அல்லது குலத் தொழிலை வீட்டிலோ வெளியிலோ கற்க வேண்டும் என்பது அக்கல்வி முறையின் குறை. ஏனென்றால் மாணவன் ஒருவன் தானே அவ்வாறு கற்பது நடைமுறையில் இயலாது. மேலும் அவனவன் குலததொழிலையே கற்பதாக வைத்துக்கொண்டாலும் தச்சு வேலை செய்பவனின் மகன் தச்சனாகவும், தெருக்கூட்டுவோனின் மகன் தெருக்கூட்டுவோனாகவும், மரமேறுவோனின் மகன் மரமேறுவோனாகவும் விளங்குவான்; அதாவது சாதி குலங்கள் ஒழியவேண்டுவதற்குப் பதில் அவை நிலைத்து நின்று நீடூழி வாழும்! அது மட்டுமன்று; அவை பெருகித் தழைத்து வளர்ந்து வரும்! ஆகவே அக்கல்வி முறை ஏற்கத் தகாததாயிற்று!

என் கருத்து என்னவென்றால், அரைநாள் ஏட்டுக்கல்வி போதுமானது என்பது. 'முழுநாளும் ஏட்டுக் கல்வி பயிற்றும்போதே போதுமான நிறைவைக் கல்வி கற்போர் பெறவில்லையே!' எனச் சிலர் எண்ணலாம்! நிறைவான கல்வியை மாணவர் இக்காலத்தே பெறவில்லை என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். அதற்குக் காரணம் மாணவர்களோ ஆசிரியர்களோ அல்லர்; கல்வித் துறையில் பல்வகை மாற்றங்களைச் செய்யாமையே காரணம்! ஆசிரியர்கள் ஊதியம், வாழ்வதற்குரிய நல்வசதி முதலியவற்றை மாற்றி அமைப்பது முதலியவற்றைச் செய்து ஆசிரியர்களை ஊக்கத்துடன் தம் அலுவலில் ஈடுபடுத்தலாம். மாணவர்கள் நன்கு ஊக்கத்துடன் கல்வி பயிலச் செய்யப் பல்வேறு முறைகளைக் கல்வியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். எனவே அவற்றை உடனடியாக ஆராய்ந்து பல மாற்றங்களைச் செய்வதன் மூலம் மாணவர்கள் ஊக்கத்துடன் கல்வி பயிலச் செய்யலாம். மேலும் அரை நாள் ஏட்டுக் கல்வி, அரைநாள் தொழிற்கல்வி என்பதொன்றே அவர்களிடையே பேரூக்கத்தை ஏற்படுத்தும் என நான் கருதுகிறேன்.

கல்வி முறையில் செய்ய வேண்டிய திருத்தங்களுள் ஒன்று, இப்போதைய தேர்வு முறையை மாற்றி அமைப்பது! இத்தேர்வு முறை மாணவனின் நினைவாற்றலை வளர்ப்பதற்கு, அல்லது உள்ளதை அறிவதற்குப் பயன்படுகிறதே தவிர வேறு பயனைத் தரவில்லை. இத்தேர்வு முறை பற்றி எண்ணும்போது புகழ்பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீனின் கருத்து நினைவுக்கு வருகிறது. ஒருசமயம் அவரிடம் ஒலி, ஒளியின் வேகத்தைப் பற்றி ஒருவர் வினவினார். அதற்கு அவர் கலைக் களஞ்சியத்தைச் சுட்டி அதில் காணுமாறு கூறினார். வினவைக் கேட்டவர், தொடர்ந்து ''தங்கட்கு அது தெரியாதோ?'' என்று வினவினார். அதற்கு ஐன்ஸ்டீன், ''இதைப் போன்ற வறட்டுச் செய்திகளை நான் மனத்தில் வைத்துக் கொள்வதில்லை'' என்றார்.

இந்நிகழ்ச்சியை ஊன்றி ஆராய்ந்தால் தற்போதைய தேர்வு முறையில் உள்ள குறை தெரியவரும். குறிப்பிட்ட சில, வாழ்க்கையிலோ மேல் கல்வியிலோ பயன்படுவதாயினும், பயன்படாதாயினும் மனப்பாடம் செய்தே தீரவேண்டிய நிலை ஒரு மாணவனுக்கு ஏற்பட்டிருக்கிறது. இது தவிர்க்கப்படவேண்டுமானால் நினைவாற்றலைமட்டும் அளந்தறியும் தேர்வு முறை மாறித்தான் ஆகவேண்டும். ஒரு மாணவனின் அறிவாற்றலை அளக்கத்தக்க முறையில் தேர்வு முறை அமைதல் வேண்டும். அத்தேர்வு முறை எது? இது பற்றிய கருத்தை அறிஞர் பலர் ஒன்றுதிரட்ட வேண்டும்; புதிய தேர்வு முறை புகுத்தப்படவேண்டும். நினைவாற்றலுக்கு மட்டும் இடம் அளிக்காமல், அறிவாற்றலை அளக்கக் கூடிய முறையை விரைவில் வகுப்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது!

சீர்திருத்தம், மாற்றம் என்னும் இவை, பிற துறைகளில் தாமதமாகச் செய்யப்பட்டாலும், கல்வித் துறையில் உடனடியாகச் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும் என்பது என் எண்ணம். ஏனென்றால், கல்வித் துறையில் இன்று நாம் செய்யும் திருத்தம் சில ஆண்டுகளின் பின்னரே பயனைத் தரும்; உடனடியான பயனைத் தராது. 1970ஆம் ஆண்டு ஒரு மாற்றம் அல்லது திருத்தம் தொடக்கப்பள்ளியில் ஏற்படுத்தினால் அதன் பயனை ஏறத்தாழப் பத்தாண்டுகளுக்குப் பின்னரே நாம் காண இயலும். ஆகவேதான் கல்வித்துறையில் உடனடியாகத் திருத்தம் செய்ய வேண்டும் எனக் கருதுகிறேன்! நம் மதிப்புக்குரிய அரசு இதில் கவனம் செலுத்தும் என நம்புகிறேன்!

உழைக்கையிலே நீவிர் உலகத்தின் பண்டை நெடுங்கனவின் ஒரு பகுதியை நிறைவேற்றியவராவீர்! அக்கனவு என்று பிறந்ததோ அன்றே நுமக்கு நும்பங்கும் ஒதுக்கி வைக்கப்பட்டுவிட்டது.

எனவே உழைப்பொடு ஒத்திசைந்து நடக்கையிலே, உண்மையில் நீவீர் வாழ்வைக் காதலித்தவராகின்றீர்.

அவ்வாறாக உழைப்பால் வாழ்வைக் காதலிப்பது, வாழ்வின் ஆழ்ந்த அந்தரங்க இரகசியங்களை நெருங்கி அறிந்து கொள்வதாகும்.

— கலீல் ஜிப்ரான்

பம்பரம்

எல்லார்வி

சாத்தனூர் நிலையத்தில் ரெயில் நின்றது; இறங்கியவர் இருவர்; ஏறியவர் மூவர். ரெயில் கூவி விட்டுப் புறப்பட்டது. கைவேலையை நிறுத்தி ரெயிலை வேடிக்கை பார்த்த பாட்டாளி மக்கள் அது கண்ணுக்கு மறைந்ததும் மீண்டும் அலுவலில் ஈடுபடலாயினர்.

''வணக்கம் ஐயா. நான் சாத்தனூர் கிராமத்திற்குப் போகவேண்டும். இங்கே வண்டி எதையும் காணோமே!''

நிலைய அதிகாரி அந்தப் பட்டணத்துப் பயணியை நிமிர்ந்து குனிந்து ஒரு முறை பார்த்தார். உதட்டைப் பிதுக்கித் தலையை அசைத்தார், 'வண்டி கிடைக்காது' என்ற பாவனையில்.

''என் பேர் சுந்தரமூர்த்தி. சென்னையிலிருந்து கும்பகோணம் வந்தவன், திடீரென்று அங்கிருந்து இங்கு வந்தேன். பண்ணையார் பரமேசுவரன் என் நண்பர். என் வருகை பற்றி முன்கூட்டி அவருக்கு எழுதச் சந்தர்ப்பம் இல்லாது போய்விட்டது. எழுதியிருந்தால் அவர் வண்டி அனுப்பியிருப்பார். நடந்துதான் போகவேண்டும் என்றால் சற்று வழி சொல்கிறீர்களா?'' என்று நயந்து வினவினார் பேராசிரியர் சுந்தரமூர்த்தி.

பண்ணையார் பேரைக்கேட்டதும் நிலைய அதிகாரியிடம் ஒரு குழைவு பிறந்தது. வழி விவரங்களை மிகவும் தெளிவாகவே சொன்னார். சுந்தரமூர்த்தி நன்றி தெரிவித்துக் கைப்பெட்டியுடன் புறப்பட்டார்.

இரண்டே மைல்தான். ஆனால் புதிய இடம். சுந்தரமூர்த்தி நடந்தே அறியாதவர். ஏறும் வெயில் சுள்ளென்று உறைத்தது. இலையுதிர் காலமானதால் சாலையில் உள்ள மரங்களெல்லாம் மொட்டையாக நின்றன. அவர் வேர்க்க விறுவிறுக்கப் போய்க்கொண்டிருந்தார்.

சாத்தனூர்ப் பண்ணையார் பரமேசுவரனும் சுந்தரமூர்த்தியும் இளமைத் தோழர்கள். பரமேசுவரன் சென்னை செல்கிற போதெல்லாம் சுந்தரமூர்த்தியின் விருந்தினராகத் தங்குவது வழக்கம். விருந்தினர் என்றால்... இருவருக்குமே உணவுக் கடையிலே தான் உணவு, சிற்றுண்டி எல்லாம். சுந்தரமூர்த்தியின் இருக்கையில் குளியல், உறக்கம் முதலியன — அவ்வளவே! ஆம்; சுந்தரமூர்த்தி தனி மனிதர்.

'ஒருமுறையாவது என் ஊருக்கு வந்து சில நாட்களாவது தங்கவேண்டும்' என்று பலகாலமாகப் பரமேசுவரன் சுந்தரமூர்த்தியை வற்புறுத்தி வந்தார். பொது நலத்தொண்டில் மிகுதியான ஈடுபாடு உடைய சுந்தரமூர்த்திக்கு அதற்கு ஏற்ற செவ்வி இதுவரை கிட்டவே இல்லை. இப்பொழுதும் கூடத் திட்டமிட்டு அவர் வரவில்லை. அதனால்தான் தம் வருகை குறித்துப் பரமேசுவரனுக்கு முன்ன

தாக அறிவிக்க முடியவில்லை. அதன் விளைவு...

ஹூம்!... மக்களால் கடவுளாகவே மதிக்கப்பெற்ற காந்தி அடிகள், வினோபாபாவே இவர்களை எண்ணும் போது நாம் எம்மாத்திரம்! கால் நடையாக அவர்கள்... அடடா!...' இப்படி ஓடிற்றுச் சுந்தரமூர்த்தியின் சிந்தனை.

'...காந்தி வழியைப் பின்பற்றுகிறேன்; மக்கட்டொண்டாற்றுகிறேன்; நாட்டுக்கு நலம் செய்கிறேன் என்றெல்லாம் எண்ணிக் கொண்டும் சொல்லிக் கொண்டும் மேடைகளில் வாய் வண்ணமாகப் பேசிக்கொண்டும், கார்ச்சவாரி, சுவைமிக்க உணவு—இப்படி இருப்பதில் பொருள் என்ன? இந்த நடையைக் கூடத் தாங்கமுடியவில்லை என்றால்... நாம்... ஒரு...'

எண்ணம் நீண்டு கொண்டே போயிற்று. அதன் வலுவிலே அவர் பிடிவாதமாக நடந்தாரே தவிரப் பழக்கமின்மையால் உடல் தளரத்தான் செய்தது. எதிர்ப்பட்ட குடியானவன் ஒருவனிடம் வழி கேட்டார்.

''அதோ தெரியுது பாருங்க துறை, அதிலே இறங்கி ஆத்தைக் கடந்து கரையேறினாத் தோப்பு; தோப்பைக் கடந்தாக் குறுக்குச்சாலை; அதோடே கொஞ்சதூரம் போனா ஒரு திருப்பம், அதுதானுங்க சாத்தனூர்த் தெரு; தெரு நடுவுலே பண்ணையார் வீடுங்க.''

''என்னப்பா இது! தெருவோட கொல்லைப் பக்கந்தான் தோப்புன்னு பரமேசுவரையா சொன்னாரே!... நீ என்னவோ...''

''ஆமானுங்க. ஆனா தெருவோட வாசப்பக்கத்துக்குப் போகக்குறுக்குச் சாலையைச் சுத்தித்தானுங்க போகணும்.''

சுந்தரமூர்த்தி நடையைத் தொடர்ந்தார்; துறையை அடைந்தார்; ஆற்றிலே அடி எடுத்துவைத்தார். அப்பப்பா! மணல் நெருப்பாய்ச் சுட்டது. அக்கரையை அடைவதற்குள் அவர் தத்தளித்துப் போய் விட்டார்.

நீர் வேட்கை, நாக்கைப் புரட்ட முடியவில்லை. இனி ஓர் அடிகூட எடுத்து வைக்கமுடியாது என்ற நிலையில் கரையேறிய சுந்தரமூர்த்தி தோப்பில் நுழைந்ததும் ஒரு மரத் தடியை அடைந்து, ''அப்பாடா!...'' என்று உட்கார்ந்தார். காற்று மெல்லென வீசிற்று. அவர் மரத்திலே சாய்ந்து கண்ணைமூடிக் களைப்பாறலானார்.

பொத்தென்று என்னவோ மேலே விழுந்தது. திடுக்கிட்டுக் கண்விழித்த சுந்தரமூர்த்தி தம் மடியிலே மாங்காய் ஒன்று கிடப்பதைக் கண்டார். மனத்திலே மகிழ்ச்சி பொங்க ஆவலுடன் அதை எடுத்தார். ஒரு புறம் மூளியாக இருந்தது. 'அணிலின் வேலை' என்று எண்ணியபடி வாயிலே வைத்து நறுக்கென்று கடித்தார். அதே நேரத்தில் அருகே களுக்கென்று சிரிப்பொலி கேட்டது. ஆ!... எவ்வளவு இனிமையான ஒலி!

சுந்தரமூர்த்தி நாற்புறமும் நோக்கினார். யாரையும் காணோம். மேலே சிறு சலசலப்பு. அண்ணாந்து பார்த்தார். அவர்கண்ட காட்சி அவரை அப்படியே மெய்ம்மறக்கச் செய்து விட்டது.

பருமனான கிளை ஒன்றில் எழிலே உருவான பெண் உருவம் ஒன்று ஒய்யாரமாக அமர்ந்து கால்களை ஆட்டிக் கொண்டிருந்தது. 'வனமோகினியா!...' சுந்தரமூர்த்தி திறந்த வாயை மூடவில்லை; வைத்த கண்ணை மீட்கவில்லை.

தங்கநிற மேனி; கடைந்தெடுத்தாற்போன்ற உறுப்புக்கள்; எளிய உடை; ஒரு சில அணிகள். அடர்ந்து நீண்ட கூந்தல்; சடை இல்லை, முடிதான். காற்றலைகளில் முன்புறக் குழற்கற்றைகள் நெற்றியிலே விழுந்து எழுந்து விளையாடின. அந்தக் கயல் விழிகள்!... அவற்றிலே திகழ்ந்த கவர்ச்சி!

அவர் தம்மை மறந்த நிலையில் தன்னையே நோக்குவதைக் கண்டதும் அந்தப் பெண் மீளவும் கலீரென்று சிரித்தாள். சிரிப்பின் முடிவிலே, ''அது எச்சில்!'' என்றாள், கிள்ளை மிழற்றுவது போன்று.

அவர் நா தழுதழுக்க, ''உ...ன்... எ...ச்...சி...ல்...தா...னே?'' என்றார். அவருடைய பார்வை, குரல், சொல் முதலியவை அவள் நிலையிலே ஒரு மாற்றத்தை உண்டு பண்ணின. ஆயினும், ''ஐயே...மாங்காயிலே எச்சில்

விழுகிறது; உங்கள் பேச்சிலே அசடு வழிகிறது !'' என்று கூறிக்கொண்டே சரசரவென்று இறங்கலானாள். அடிமரத்தை அணுகியதும் தொப்பென்று குதித்தாள் ; அவ்வளவுதான் தரையிலே கால் பாவாது எடுத்தாள் ஓட்டம் !

சுந்தரமூர்த்தி நீண்ட பெரு மூச்செறிந்தார். 'என்ன இருந்தாலும் கிராமத்து உயர்வு உயர்வுதான் ! அதன் பசுமை, பயிர்கள் முதல் மனிதர் வரையில் கலந்துதான் மிளிர்கிறது. இயல்பாக இருக்கிற அழகின்மையைச் செயற்கை ஒப்பனைகளால் மேலும் மிகுதியாக்கிக் கொண்டு பட்டணத்துத் தெருக்களிலே நடமாடும் பெண்கள் எங்கே ! இயற்கை எழில் மேனியெங்கும் பரவிச் செழித்து ஒளிவீசக் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க கிராமத்துப் பைங்கிளிகள் எங்கே !'—அவருடைய சிந்தனை அலைகள் புரண்டு புரண்டு உள்ளத்திலே மோதியபடி இருந்தன.





அவருக்கு நாற்பது முடிந்துவிட்டது. பார்வைக்கு முப்பது கூடத் தோன்றாது. அத்தகைய உடற்கட்டு. அது மட்டும் அன்று ; தூய நினைவுகளும் நல்ல ஒழுக்கங்களும் அவர் உடற்கட்டுக்கு உற்ற துணைகளாகி அமைந்திருந்தன.

இருபத்தெட்டாவது வயதிலே அவருக்கு மணமாயிற்று. விருப்பம் இன்றியே, பெற்றோரின் வற்புறுத்தலைத் தட்டமாட்டாமல் திருமணத்திற்கு இசைந்தார். படிப்பு, வருங்காலத்தவர்களை உருவாக்கும் பணி, சமூகத்தொண்டு—இப்படித் தம் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்த அவர் எண்ணத்திற்கு ஏற்ப, திருமணம் ஆன சில காலத்திற்குள்ளாகவே மனைவியை இழந்தார்.

அதன் பின்னர் மறுமணம் என்ற வலைக்குள் அவரை அவர் பெற்றோராலும் மற்றோராலும் வீழ்த்த முடியவில்லை. மேலும் சில காலத்திற்குப் பின் பெற்றோர் மறைய, கடந்த பல ஆண்டுகளாகத் தனிவாழ்விலே அவர் நன்றாகப் பழகிவிட்டார். அந்த வாழ்வு அவரது தொண்டாற்றும் பசியைத்தணிக்க உதவுவதாகவே இருந்தது. சென்னையிலே வீடு இருக்கிறது; சேமிப்பிலே பணம் இருக்கிறது. சிக்கனமாகவே வாழ்ந்து வருபவர். ஆனால் பொது நலப்பணிக்காக நன்கு செலவிட்டார். அறிவும் விவேகமும் அவரை ஒழுக்கத்தில் உயர்த்தி வைத்தன.

* * * *

அவர் விரும்பியிருந்தால் அல்லது பிறர் வற்புறுத்தலுக்கு இணங்கியிருந்தால் மனத்திற்கிசைந்த மங்கையை மணந்து மக்கட் செல்வத்தோடு இல்வாழ்விலே திளைக்கலாம். அவரோ ! பெண்களை உயிரற்ற வெற்றுருவங்களாகப் பார்த்தார் ; அல்லது தெய்வப் பிறவிகளாக மதித்தார். இன்றளவும் அவ்வாறு இருந்து வந்தவர் இன்று சாத்தனூர் மாந்தோப்பிலே பரிச்சயமற்ற பெண் ஒருத்தியைக் கண்டு, அவள்பால் சிந்தையைப் பறிகொடுத்துத் தடுமாறி நின்றது வியப்பினும் வியப்பே. அவரை அறிந்த யாரும் இதை மெய்யென்று நம்பவே மாட்டார்கள்.

''வாருங்கள், வாருங்கள், ரெயிலடியிலிருந்து நடந்தா வந்தீர்கள் ? கடிதம் எழுதியிருந்தால் வண்டியுடன் நிலையத்திற்கு நானே வந்திருப்பேனே !'' என்று மகிழ்ச்சி பொங்க வரவேற்றார் பண்ணையார் பரமேசுவரன். தம் மனநிலையை மறைக்கப் போலியாகச் சிரித்துப் பதில் பேச வாய்திறந்தார் சுந்தரமூர்த்தி. ஆனால்...வாயிற்படியிலே ஏறி வருகிறபோது கொல்லை நடையிலே தென்பட்ட பெண் உருவத்தைக் கண்டதும் அவர் வாய் அடைத்துப் போயிற்று ; புன்னகையும் மெல்லென மறைந்தது. 'மாந்தோப்பில் சற்றுமுன் கண்ட நங்கை இதற்குள் எப்படி இங்கே வந்தாள்? இந்த வீட்டிலே இவளுக்கு என்ன தொடர்பு? இந்த வயதிலே தமக்கு ஒரு பெண் இருப்பதாகப் பரமேசுவரன் சொல்லவே இல்லை!—' என்றெல்லாம் அவர் உள்ளத்திலே கேள்விகள் எழுந்தன.

'ஓ !... தெருவின் கொல்லைப் புறத்திலே தோப்பல்லவா ?'

முதற்கேள்விக்கு விடை கிடைத்ததைத் தொடர்ந்தே ஏனைய ஐயங்களுக்கும் விடைகள் கிடைக்கலாயின.

சென்ற ஆண்டிலே வாழ்விழந்த தம் தங்கை தம்மிடம் வந்து வசிப்பதாகப் பரமேசுவரன் சொல்லியிருந்தது நினைவில் வந்தது. அந்தத் தங்கைக்கு மணப்பருவத்திலே ஒரு பெண் இருப்பதாகவும் அவர் சொல்லியிருந்தார். அவள் இவள் தானோ ?

பரமேசுவரன் சுந்தரமூர்த்தியின் மனநிலையை என்ன கண்டார் ; வாய் ஓயாமல் பேசினார். சுந்தரமூர்த்தி ஒருவாறு ஈடு கொடுத்துச் சமாளித்தார்.

மாலையில் காற்றாட உலவச் சென்றபோது நண்பர்கள் பல செய்திகள் பற்றி உரையாடினார்கள். இடையே பரமேசுவரன் தம் தங்கை பெண் மல்லிகாவின் திருமணம் பற்றிப் பேசினார். சுந்தரமூர்த்தி சுற்றி வளைக்காமல் கூச்சத்தை ஒதுக்கித் தம் உள்ளக் கிடக்கையைப் பளிச்சென்று வெளியிட்டார். பரமேசுவரன் வியப்பே வடிவாகி நண்பரைப் பார்த்தார். ''உண்மையாகவா ?'' என்று நம்பா

மல் கேட்டார்; சுந்தரமூர்த்தி அவரை நம்பவைத்தார்; பரமேசு வரனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

வீடு திரும்பியதும் தங்கையிடம் பரபரப்புடன் செய்தியை அறிவித்தார் பரமேசுவரன். அவள் அமைதியாக, ''நாற்பது நிறைந்துவிட்டது என்கிருயே!'' என்ருள். பிறகு பேசப் பேச, சிறுகச் சிறுக மன நிறைவுகொண்டு இசைவு தெரிவித்தாள். இனி மல்லிகாவின் இசைவு-அது அத்தனை எளிதா?

அவளுடைய துடுக்குத்தனம் குடும்பத்தில் பேர் போனது; ஊரிலும் பேர் போனது. எதற்கும் எடுத்தெறிந்து பேசும் இயல்புடையவள் அவள். இதுவோ வாழ்வின் அடிப்படை. யார் பேசுவது, எப்படிப் பேசுவது? தாய், மாமன் இருவருமே தயங்கினர். சுந்தரமூர்த்திதான் சில நாள் தங்கப் போகிருரே; அவள் அவரை நன்ருக அறிந்துகொள்ளட்டும்; பிறகு பேசலாம்—என்று இருவரும் மனத்தைத் அடக்கிக் கொண்டனர்.

மல்லிகா பேராசிரியர் சுந்தரமூர்த்தியைக் கண்டு நாணிக் கோணி ஓடி ஒளியவும் இல்லை; முற்றின நாகரிகப் போக்கில் அவர் அண்மையில் இருந்து அரட்டை அடிக்கவும் இல்லை. அவர் உள்ளத்திலே அந்த மாந்தோப்பு நிகழ்ச்சி மீட்டும் மீட்டும் இன்ப அலைகளை எழுப்பியபடி இருந்ததுவேயன்றி அவள் அதை முற்றும் மறந்த நிலையிலேதான் இருந்து வந்தாள். அஃது அவள் உள்ளத்திலே இன்பக் கிலுகிலுப்பை உண்டு பண்ணவில்லையா, அல்லது தனது திறமையினுல் அவள் அதை மறந்த நிலையில் இருக்கிருளா?—சுந்தரமூர்த்தி எதையுமே புரிந்துகொள்ள முடியாமல் தவியாய்த் தவித்தார். காலம் செல்லச் செல்ல, மல்லிகாவை அண்மையிலே காணக் காண அவர் உள்ளமும் உடலும் உணர்ச்சியால் பதறின.

மாலை ஐந்து மணி. சுந்தரமூர்த்தி தன்னந் தனியே உலாவச் சென்ருர். தோப்பை அடைந்தார். அந்த மரத்தடியில் அமர்ந்தார். பழைய நினைவுகள் நெஞ்சத்தை முற்றுகையிட்டன. அதன் விளைவாக நீண்ட பெருமூச்சு அவரிடமிருந்து வெளிப்பட்டது.

அன்று இரவு அவர் சென்னை புறப்படுகிருர். அந்த விநாடி வரை மல்லிகாவைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அதற்காக அவர் எப்படியெல்லாமோ முயன்ருர். பயன் சுழிப்புத்தான். 'விரைவில் மல்லிகாவின் இசைவுடன் சென்னை வருகிறேன்' என்ற பரமேசுவரனின் சொல்லைக் கொண்டு மட்டும் அவர் எப்படி மகிழ்ச்சி கொள்ளமுடியும்?

சிந்தனை காரணமாக அவர் கண்ணை மூடிக்கொண்டார். முன்போலவே மென்காற்று வீசிற்று. ஆனுல் மடியிலே மாங்காய் விழவில்லை. கண்ணைத் திறந்து அண்ணுந்து பார்த்தார். கிளையிலே கன்னி இல்லை. ஆனுல்......

கிண்கிணிச் சிரிப்பொலி எங்கிருந்தோ கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தார். யாரையும் காணவில்லை. சிரிப்பொலி மட்டும் கேட்டுக்கொண்டே இருந்தது.

'மல்லிகாவின் சிரிப்புத்தான், சந்தேகமே இல்லை.'

அவர் எழுந்தார்; ஒலிவந்த திசை நோக்கி விரைந்தார்.

புதருக்கு அப்பால், வேலி ஓரத்தில் நாலைந்து பெண்கள் சூழ மல்லிகா இருப்பதை அவர் அறிந்தார்; புதரிலே தலை மறைந்தார்.

''அளக்காதே மல்லி; உன் அம்மா உன்னிடம் இசைவு கேட்டதும் நீ மழுப்பிப் பேசியதும் அறைக்கு வெளியே இருந்த விமலா காதிலே விழுந்து, அவள் வந்து எங்களுக்குச் சொல்லி...''

''போங்களடி பைத்தியக்காரிகளா!...எல்லாம் புரளி!''

''புரளியா?...பட்டணத்துப் பேராசிரியரிடம் நீ பல்லைக்காட்டிக் குழைந்து பேசியதைப் பலமுறை நாங்களே பார்த்திருக்''—

''பேசினுல் தப்பு என்பது பட்டிக் காட்டுப் பண்பு. என்னுல் அதைத் தவருகக் கொள்ளமுடியாது. மேலும் அவர் மேதை, விவேகி''—

''போதும் வருணனை; செய்தியின் முடிவுக்கு வா. நீ...நீ...பேராசிரியர் சுந்தரமூர்த்தியின்''—

''சட்!...மூடடி வாயை!...ஆகுங் காலமெல்லாம் ஆகாயம் பார்த்து விட்டுச் சாகுங் காலத்தில் சரச சல்லாபமா? அப்போதே இருந்திருக்க வேண்டும் இந்தப் புத்தி. அவர் வயசென்ன, என் வயசென்ன? என் அப்பாவை ஒத்தவர். அவருக்கு இனி மேல் திருமணமா? ஏதோ பிரமை. சமூக சேவை செய்யவென்றே பிறந்தவர் அவர். அதனுல்தான் திருமணம் ஆன உடனேயே ஆண்டவன் அவர் மனைவியின் உயிரைப் பறித்துக் கொண்டு அவர் உள்ளத்தை மேலும் உரமேறச் செய்திருக்கிருன். இத்தனை நாளும் உறுதியோடு இருந்தவர் இங்கே வந்து என்னைக் கண்டு தடுமாறி என் மாமாவிடம் ஏதோ உளறியிருக்கிருர். இந்த எல்லையைக் கடந்து சென்னையை அடைந்ததும் அவர் பிரமை தெளிந்துவிடும். இன்றிரவு புறப்படுகிருர். இனி வேறு பேச்சுப் பேசுங்கள்!''

சுந்தரமூர்த்தி மெல்லப் பின் வாங்கி நடந்தார்.

ரெயில் எழும்பூர் நிலையத்தை அடைந்து நின்றது. டாக்ஸி ஏறித் தம் இருக்கையை அடைந்த சுந்தரமூர்த்தி கைப்பெட்டியை வைத்துவிட்டுக் கூடத்தின் நடுவே இருந்த காந்தியடிகளின் படத்துக்கு எதிரே நெடுஞ்சாண் கிடையாக விழுந்தார். நெடுநேரம் எழவே இல்லை; கண்ணீர் குபுகுபு என்று பொங்கி வழிந்தது.

''கண்கண்ட தெய்வமே! சோதனையில் தப்பி வந்துவிட்டேன். இனி என்னை எந்தச் சக்தியும் எதுவும் செய்ய முடியாது. அண்ணலே! இனி எனக்குப் புகல் நீ காட்டிய பாதை தவிர வேறு எதுவுமே இல்லை. பம்பரம் சுழன்றது. முடிவிலே நிலத்திலே சாய்ந்தது. என் உள்ளம் சுழன்றது; உன் பொன்னடியிலே சாய்ந்தது. இனி அது இம்மாதிரி சுழற்சிகளுக்கு உள்ளாகாது.''

இப்படி அவர் நெஞ்சம் புலம்பிற்று.

Parry's
ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1.
நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி
உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

மட்பாண்டங்கள் ஏனைய உலோகங்களைப் போலன்றி, இலேசாகவும், உடைந்து விடக்கூடியதாயிருப்பினும், காலத்தால் அழியாத, நீடித்த தன்மையைப் பெற்றுள்ளன. தகுந்த வெப்பத்தில் சூளையிடப்பட்ட மட்பானைகள் இதற்குத் தகுந்த சான்று பகரும். நம் நாட்டிலும் உலகின் பிறவிடங்களிலும் கண்டெடுக்கப்பட்டுள்ள புதை பொருள்களில், மட்பாண்டங்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகியும் அழியாதிருப்பது நமக்கு நன்கு தெரியும். நம் நாட்டில் 6000 ஆண்டுகளுக்கு முன்பாகவே மட்கலங்கள் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளன. எகிப்து நாட்டிலுள்ள நைல் பள்ளத்தாக்கிலிருந்தோர் கி.மு. 11,000 ஆண்டில் கையாண்ட மட்கலங்கள் இப்போது கிடைத்துள்ளன.

மண்ணால் செய்யப்பட்ட குழாய்கள் எவ்வாறு அண்மையில் பாசனத்திற்குப் பெரிதும் உதவியுள்ளன என்பதுபற்றி இக் கட்டுரை விளக்குகிறது.

தற்போது பயன்படும் இடங்கள் :

உத்தரப் பிரதேசம் காசி மாவட்டத்திலுள்ள 9 உழவர்கள் கூடி 7803 அடி நீளத்திற்கு மட் குழாய்களைச் செய்து, அவற்றின் வாயிலாகப் பாசன வசதி செய்து கொண்டுள்ளனர். தவிர, மீரத்தில் வசிக்கும் ஓர் உழவர், 1000 அடி நீளமும் 2 அங்குல விட்டமுமுள்ள குழாயைக் கடந்த ஐந்தாண்டுகளாகப் பாசனத்திற்குப் பயன்படுத்தி வருகிறார். மேலும் மைசூரிலுள்ள பெல்காம், தார்வார் மாவட்டங்களில் 72 உழவர்கள் 11,380 அடி நீள மட்குழாய்களை அமைத்து, நீர் வளம் பெருக்கி வருகின்றனர். அதே மாநிலத்திலுள்ள ஹஸ்ஸன் மாவட்டத்தில் 7000 அடி நீள மட்குழாய்கள் பூமியினடியில் போடப்பட்டுப் பாசனம் செய்யப்படுகிறது. இரண்டடி நீளம், 6 அங்குல உள் விட்டம் உள்ள ஒரு

துண்டு மட்குழாய் ரூ. 1·50 விலையாகிறது.

நன்மைகள்:

மட்குழாய்களையமைத்துப் பாசனம் செய்வதனால் விளையும் நன்மைகள் யாவை?

கால்நடைகளாலும், வாகனங்களினாலும் பாசனத்திற்கு எவ்வித இடையூறும் ஏற்படுவதில்லை. பாதாளப் பாசனக் குழாய்களினால், அதிக நிலம் விளைச்சலுக்குக் கிடைக்கிறது. இப்போது வாய்க்கால்களுக்காகப் பயன்படும் நிலம் குழாய்களினால் தவிர்க்கப்பட்டு விடுகிறதல்லவா? வாய்க்கால் வழியே ஓடும் நீரின் கன அளவைக் கணக்கிடுவது கடினம். ஆனால் மட்குழாய் வழியே செல்லும் நீரின் அளவைக் கணக்கிட முடியுமாதலால் முறையாக நீர்பாய்ச்ச வழியேற்படுகிறது. வழியிலேற்படும் நீர் விரயம், நீர்ப்பெருக்கு, ஆவியாக மாறுதல் போன்றவை முற்றிலும் தவிர்க்கப்படுகின்றன.

உழைப்பிற்கு ஏற்றவையா?

இவ்வகை மட்குழாய்களனைத்தும் நீண்ட கால உழைப்பிற்கு ஏற்றவை என்பதற்கு, மைசூர் மாநிலத்தில், 1656ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பாதாள மட்குழாய்த் திட்டமே ஒரு சிறந்த சான்றாகும்.

1656ஆம் ஆண்டில் பிஜப்பூரை ஆண்டு வந்த ஆதில்சா, மூன்றிடங்களை இணைக்கும் முறையில் 2 கல் தொலைவிற்கு மட்குழாய்களை அமைத்து, நீரைக் கொண்டு செல்ல வகை செய்தார். அக்குழாய்களெல்லாம் 15 முதல் 20 அடி ஆழத்தில், 1656ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டிருப்பினும், இன்றும்கூட பிஜப்பூர், ஹு¯க்கேரி, அவுரங்காபாத் ஆகிய இடங்களில் நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படுகின்றன.

செய்யும் முறை :

தொன்றுதொட்டே குயவர்கள் தமது சக்கரங்களின் உதவியினாலேயே குழாய்களைச் செய்து வந்துள்ளனர். இக்குழாய்களனைத்தும் சிறிதாக இருப்பதோடன்றி ஒரே சீராக இன்றிச் சில இடங்களில் பருத்தும் சில இடங்களில் சிறுத்தும் காணப்படுகின்றன. பலகைகளால் செய்யப்பட்ட அச்சுக்கள் பயன்படுத்தப்படத் தொடங்கிய பின், செய்யப்பட்ட குழாய்களெல்லாம் வலிவுள்ளனவாகவும், நீளமாகவும், ஒரே அளவினதாகவும் உள்ளன. இவற்றைச் செய்வது மிக எளிது.

பலகைகளாலான தட்டுகளில் பக்குவப்படுத்தபட்ட களிமண்ணைக் கொட்டிச் சீராக்கி, உலர்ந்த நிலையை அது அடையும் வரை உலர வைக்கவேண்டும். பிறகு அதைக் குழாய்போன்ற அச்சில் வார்த்து, இடைவெளியை நன்கு பொருத்தி அழகுள்ளதாகச் செய்துவிடவேண்டும். ஒவ்வொரு குழாயிலும் மற்றொரு குழாயைப் பொருத்துவதற்கு ஓர் அமைப்பையும் அதனோடேயே செய்துவிடவேண்டும். பிறகு சூளையிடப்பட்டபின் அது உறுதியாகிவிடுகிறது. எவ்விதக் கனத்தையும் அது தாங்க வல்லது. சிறப்பாக, பூமிக்கடியில் அமைப்பதற்கு மிகவும் ஏற்றதாகி விடுகிறது.

6 அங்குல விட்டமுள்ள 20 குழாய்களை இரண்டு குயவர்கள் தற்போது உற்பத்தி செய்து, நாளொன்றுக்கு ஒருவர் ரூபாய் ஐந்து வரை பொருளீட்ட முடிகிறது. நல்ல மண் வசதியுள்ள இடங்களில் 9 அங்குல விட்டமுள்ள 15 குழாய்களை இரண்டு குயவர்கள் தயாரிக்கவியலும்.

எளிய முறையில் செய்து, சிக்கனமாகப் பாசன வசதி ஏற்படுத்திக் கொள்ள மட்குழாய்கள் மிகச் சிறந்தவையாகும்.

தமிழரின் குணமும் தாழம்பூவும்

தமிழர்கள் எதையும் தாங்கிக் கொள்வார்கள். தமிழர்கள் எதையும் அமைதியோடு கவனிப்பார்கள். ஆனால் தமிழர்கள் தாழம்பூ போன்றவர்கள். அந்தத் தாழம்பூவை மேலிருந்து தடவிக் கொடுத்தால் மிருதுவாக இருக்கும்; கீழிருந்து எதிர்த்துத் தடவினால் கையிலே முள்குத்தும். இதுதான் தமிழன் பண்பு! அவன் தாழம்பூ போன்றவன். இதை உணர்ந்து மற்றவர்கள் நடந்து கொள்ளவேண்டும்.

கலைஞர் கருணாநிதி

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,

உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண் பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு :

கதர் - கிராமத் தொழில் துறை

2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4

பிறர் நலம் பேணுக

(திருமதி இராசம்மாள் பி. தேவதாஸ், எம்.ஏ., எம்.எஸ்ஸி., பி.எச்.
(ஒஹியோ) முதல்வர், திரு. அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி,
கோயம்புத்தூர்)

மனிதன் சமுதாயத்தின் ஒரு முக்கிய அங்கம். பிறரோடு இணைந்து வாழக் கடமைப்பட்டவன். அங்ஙனமே தமிழன் வாழ்ந்து வந்த பெருமையைத்

"தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென
முயலுநர் உண்மை யானே"

என்று தமிழ் நாட்டு மன்னன் பேசுகின்றான். "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்" என்று அகநானூறு கூறுகின்றது. பிறருக்கு நன்மை செய்வதிலே, தீமைவரினும் ஏற்றுக்கொண்டு, நன்மையே செய்கின்ற பண்பாட்டைத்தான் தமிழ் மறை

"மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்"

என்கிறது.

காலப்போக்கில் பிறர் நலம் பேணுகின்ற பண்பாட்டை மனிதன் இழந்துவிட்டான். அதனால்தான், இன்றைய சமுதாயத்திற்குக் கூட்டுறவுப் பணி—அணி தேவைப்படுகிறது. ஒழுக்கம் விழுப்பமோடு வளரச் 'சீரணி' தோன்ற வேண்டியதாகிறது.

சமுதாயத்தின் நோய்கள் இன்னவை என்று கண்டுபிடித்து அவைகளுக்குப் பரிகாரம் தேடிக் கொடுப்பவர் சீரணிப் படை வீரராவர். அவர்கள் நாட்டின் நலிவை நீக்கி, வளம் பெருக்கி, கழனி திருத்தி, கால்வாய் வெட்டி, தாம் பெற்ற இன்பத்தைத் தமருக்கும் தந்து, சுற்றமாச் சுற்றுவர்.

ஒரு நாட்டில் மண்ணும், மலையும், ஆறும் செழித்திருக்கலாம். அவற்றைப் பயன்படுத்தத் தெரிந்த மக்களும் இருக்கலாம். ஆனால், பரந்த மனப்பான்மை வேண்டாமா? அறிவு, இதயம், சுதந்திரம் ஆகிய மூன்றும் கொண்டுள்ள உயிருள்ள மனிதர்கள் நிறைந்த ஒரு நாட்டுக்குத்தான் உலகோர் உள்ளத்தில் மதிப்பு உண்டு. இந்த மூன்றில் ஏதேனும் ஒன்று குறைந்தால்கூட அந்நாட்டுக்குக் களங்கம்தான் ஏற்படும்.

தமிழ் நாட்டில் ஒரு வள்ளுவன் தோன்றினான். ஒரு கம்பன் பிறந்தான். ஒரு கரிகாற் பெருவளத்தான் ஆண்டான். உண்மை. ஆனால் எந்த ஒரு நாடும் தன் இறந்த காலப் பெருமையிலேயே நிகழ் கால வாழ்வை நடாத்தத் தொடங்குமேயானால், அந்த வாழ்வு மணல்மேட்டில் கட்டிய வீடு போல ஆகிவிடும். ஒவ்வொரு தலைமுறையும் தன் உழைப்பைக் கொண்டு ஊதியம் பெறவேண்டும்.

"கல்லாது நிற்பார் பிறரின்
மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை யவை
வல்லரல் லாரு மில்லை
எல்லாரு மெல்லாப் பெருஞ்
செல்வமு மெய்தலாலே
இல்லாரு மில்லை யுடையார்களு
மில்லை மாதோ"

என்று பாடிய கம்பன் தமிழ்நாடு இப்படித்தான் இருக்க வேண்டுமென்பதை இலட்சியமாக வைத்துக் கொண்டு பாடியிருக்க வேண்டும். இன்றையத் தமிழ்நாடு எப்படியிருக்கிறது? என்பதை உண்மையான அளவுகோல் கொண்டு அளக்க வேண்டுமேயானால், "ஓர் அடி முன்னே; இரண்டடி பின்னே" என்ற கவிஞன் தாகூரின் கவிதை தான் அலைமோதுகிறது. இதற்குக் காரணம் என்ன? நாகரிகம் என்ற பெயரால் போலி வாழ்க்கைக்குக் கேடான பழக்க வழக்கங்கள், சிறப்பில்லாத மக்கட் பண்புகள், வீண் ஆடம்பரம், ஒழுக்கக் குறைபாடுகள் சமுதாயத்தில் மலிந்துவிட்ட தன்மையைப் பார்க்கிறோம்.

சுவாமி விவேகானந்தர், "இன்றைய சமுதாயத்திற்குக் கண் உண்டு; ஆனால் பார்வையில்லை. காதுண்டு; கேள்வியில்லை. காலுண்டு; நடையில்லை. நெற்றியுண்டு; திலகமில்லை. தலையுண்டு; நிலையில்லை. இதனை இப்படியே விட்டு வைக்கலாமா? இதற்கு ஒரு பரிகாரம் தேட வேண்டாமா?" என்று வினவுகிறார்.

புறத்தேயுள்ள வெறும் பழக்க வழக்கங்கள் மட்டுமின்றி உள்ளப் பண்பின் உயர்வுகாண்பதே நாகரிகம்.

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர்
நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்"

என்று திருவள்ளுவர் கூறும்போது இத்தகைய சிறப்பான உள்ளப் பண்பையுடையவர்களையே நாகரிகம் வேண்டுபவர் என்ற சொற்களால் குறிப்பிடுகிறார். இத்தகு நாகரிகத்தை வளர்க்க வேண்டுமானால் நாம் ஒழுக்கசீலர்களாய் வாழவேண்டும்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான்
ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்"

என்பது வள்ளுவம். ஒழுங்கும், ஒழுக்கமும் விடாப்பிடியாகக் கடைப்பிடிக்கப்படும்போது மனிதன் 'நாமார்க்கும் குடியல்லோம்', அஞ்சோம் என்பான். எவர்க்கும் பணியான். ஒழுங்கும், ஒழுக்கமும் ஒரு மனிதனுக்கு இரண்டு கண்கள் போன்றவை. வாழ்வில் ஏற்பட்டுள்ள சமுதாயக் குறைபாடுகளை நீக்கும் பணியினையே சீரணி தலைமைப் பணியாக ஏற்க வேண்டும்.

"உள்ளத்தில் உண்மை ஒளி
உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டு"

என்பது பாரதியார் வாக்கு. ஒழுக்கம் நிரம்பிய வாழ்க்கையை வளர்க்க எண்ணும் சீரணிப் படையினர்கட்குப் பெண்கள் எவ்வாறு உதவலாம்?

ஈன்று புறம் தந்து, சான்றோன் எனக் கேட்டு, கூடி வாழக் கற்றுத் தந்து, விருந்துவரின் உவந்து, போர்வரின் ஆடவரைப் போருக்கனுப்பி, நீதி கேட்டு, யாவற்றிற்கும் மேலாகப் பசிப்பிணி போக்கிய பெண்களின் வன்மைத் திறம்பற்றியெல்லாம் இலக்கியங்கள் பேசுகின்றன.

இன்றைய சமுதாயச் சீரமைப்பில் தாழ்வுற்று, வறுமை மிஞ்சி நிற்கும் நிலையை அடியோடு மாற்ற, அன்னமூட்டும் தெய்வ மணிக்கை மனம் வைத்தால்தான் சீரணி, சீராக வெற்றிபெற முடியும்.

சீரணி ஏற்றுக் கொண்டிருக்கும் பத்துத் திட்டங்களில் பொது நலங் காணத் துப்புரவுப் பணி மேற்கொள்ளல், தீண்டாமைக் கொடுமைகளை அகற்றல், திக்கற்றவர்களுக்குத் துணை புரிதல், அன்பு வழியாகச் சமூகக் கேடுகளைக் களைதல், அறவழி நின்று அனைவருக்கும் உதவுதல் போன்றவற்றில் பெண்களின் பங்கு பெரிது. வளரும் குழந்தைகளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்ப்பதோடு, நாளைய சமுதாயத்திற்கு அவர்களை உருவாக்கும் ஆசானாகவும் பெண் விளங்குகிறாள்.

போதிய வருமானமின்றி அல்லலுறும் குடும்பங்களுக்கு, உபரி வருமானம் பெறுவதற்கான வழியினையும் சீரணியினர் சொல்லித்தர வேண்டும். சிக்கன வாழ்வு, சேமிப்பு முறை, உணவு உற்பத்தியைப் பெருக்கச் சிறு தோட்டங்கள் அமைத்தல், உணவை வீணாக்கா திருத்தல் முதலியவைபற்றித் தாய்க்குலம் உணரத் துவங்கிவிட்டால், சமுதாயத்தில் நிலவி நிற்கும் சில்லறைத் தொல்லைகள் நிச்சயமாக மாறமுடியும்.

புறமாற்றப் பணிகளை மேற்கொள்ள இளைஞர் பலர் சீரணிப் படை வீரர்களாக மாறுவது போல, அக மாற்றப் பணியினைப் பெண்கள் எடுத்துக் கொள்ளவேண்டும். சமுதாயத்தில் சம பங்கு வகிக்கக் கூடிய மகளிர் இப்பணியில் சிந்தனையையும், நேரத்தையும் கொடுக்கும்பொழுது தான் சீரணி வெற்றி பெற முடியும்.

"அன்பர் பணிசெய்ய
ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே
வந்தெய்தும் பராபரமே"

"எங்கோ ஏற்பட்ட கீறல்களிலிருந்து சிக்கல் எழுவதுபோன்ற தன்மை வாய்ந்ததல்ல, நமது பிரச்சினை. அவ்விதம் இருக்குமாயின், அந்தப் பிரச்சினையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது.

ஆனால், நமது பிரச்சினைகள் இதயத்தில் ஏற்படும் மண் அரிப்பு போன்ற செயலால் ஏற்படுவது.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை—இருக்கிற வயலில் உரம் போட்டு—உழவு செய்யும் நிலைமையில் இருக்கிறோம்.

ஆம்; தத்துவங்களைத் தேடிச் செல்லவேண்டிய அவசியமில்லை, அதைவிடக் கடுமையான பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். இருக்கின்ற தத்துவங்களை வகைப்படுத்தி—தொகைப்படுத்தி—தனிக்கைப்படுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக்கூடுகளை அகற்றி, கலந்துவிட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

கண்ணியமிக்க எல்லாவற்றிற்கும் காவலர்கள் நாம்.

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே கண்டு கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். நமது சிந்தனைக் கட்டடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றோம்."

— அண்ணா

* * * *

"கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய மாணவர்கள் இந்தச் சமுதாயத்தை வளம்படுத்தும் பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் அவர்கள் காணும் வெற்றியில்தான் இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை, குடிசையில் வாழும் சாமானிய மனிதனை தனது குழந்தைகளின் எதிர்காலம்பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் மாணவர் சமுதாயம் ஈடுபட வேண்டுகிறேன்.

— அண்ணா

1,500 இந்திய மாணவர்கள்

பிரிட்டன் முழுதும் உள்ள பல்கலைக் கழகங்களில் 15,000க்கும் அதிகமான வெளிநாட்டு மாணவர்கள் முழுநேரக் கல்வி கற்று வருகிறார்கள். இதில் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை 1492 ஆகும்.

காமன்வெல்த் நாடுகளிலேயே கல்விக்காக அதிக எண்ணிக்கையில் மாணவர்களைப் பிரிட்டனுக்கு அனுப்பியுள்ளது இந்தியாதான். இவர்கள் மேற்கொண்ட பாடம் பலதரப்பட்டவை. மருத்துவம், பொறியியல், தொழிலியல், விவசாயம், வனவியல், உடற்கூறு, விஞ்ஞானம், பொது நிர்வாகம், வர்த்தகம், நகர அமைப்பு, மொழிக் கல்வி ஆகியவை அவற்றில் முக்கியமானவை.

மொத்த எண்ணிக்கையான 16,045இல் சுமார் 8000க்கும் அதிகமான மாணவர்கள் மானியம், ஸ்காலர்ஷிப் போன்ற உதவிபெற்று வந்துள்ளார்கள்.

1967-68ஆம் ஆண்டுக்கான இந்தப் புள்ளி விவரங்களை இலண்டனில் உள்ள காமன்வெல்த் பல்கலைக் கழகக் குழு வெளியிட்டுள்ளது.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில்

மனித உரிமைகள் சில அடிப்படையானவை. அவற்றை, இருபது ஆண்டுகளுக்கு முன்னர், உலகநாடுகளின் அவை முடிவு செய்து வெளியிட்ட பின்னர் உலகநாடுகள் அவற்றை ஒப்புக்கொண்டன. அடிப்படை மனித உரிமைகளில் ஒன்று கல்வி. கல்வி அடிப்படைத் தேவையுமாகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், வள்ளுவப் பெருந்தகை சுட்டிக் காட்டி வலியுறுத்தியதை அரசியல் தலைவர்கள் ஒப்புக்கொள்ள இத்தனை காலம் காத்திருக்க நேர்ந்தது. தலைவர்கள் ஒப்புக்கொண்டாலும் செயற்படுத்துவோர் ஒப்புக்கொள்ள எத்தனைக் காலமோ என்கின்ற நிலையே உலகின் பெரும் பகுதியில். காரணம் என்ன? ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர், என்றென்றும் புலி வேடம் போடவேண்டுமென்ற நினைப்பே. மக்களின் குறைகளிலே ஒன்று இது. எல்லோர்க்கும் நீதி என்பதில் ஈடுபாடு ஏற்படுவதே அரிது. ‘எங்களுக்குப் பாதுகாப்பு’ என்று முழங்குவதிலோ, முனைந்து முயல்வதிலோ, மெய்வருத்தம் பாரார், கண் துஞ்சார்.

இத்தகைய நிலையில், ஆதரவற்ற சூழ்நிலையில், கல்வி, பொது மக்கள் கல்வி, பள்ளத்தில் வீழ்ந்திருப்

போரையெல்லாம் கண்கொடுத்து, கைகொடுத்து, உயர்த்திவிடும் கல்வி பரவுவது அரிதாக இருக்கிறது.

கல்வி அடிப்படை உரிமை. அது மட்டுமா? இல்லை. கல்விச் செல்வம் ஒன்றே, உருவால் மனிதராகப் பிறந்தவர்களை, உணர்வில், அறிவில், மதிப்பில் மனிதர்களாக்கும். மற்றவை வெறும் பொருட்களே!

பண்ணையாள் பழநி, எட்டி ஒதுங்கி, கைகட்டி நின்று, ஆணை பெறும் அடிமை; ஆனால் அவருடைய மகன், கண்ணன், கல்லூரிக் கல்வி பெற்றுவிட்டார். ஆசிரியப்பயிற்சி பெற்று உள்ளூர்ப் பள்ளியில் ஆசிரியராக வந்துவிட்டார். இப்போது அவர் அடிமையல்ல; ஆசிரியர். மிராசுதார் மீனாட்சிசுந்தரத்தின் மகன் கனகசபைக்கும் ஆசிரியர். சிறுபயல் கனகசபையைச் 'சின்ன எசமான்' என்று கூப்பிடும் நிலையில் உள்ள பழநியின் மகன், கண்ணன், 'கனகசபை எழுந்து நில்' என்று ஆணையிடும் ஆசிரியர். என்னே தலைகீழ் மாற்றம். இதைச் செய்தது எது? கல்வி வெள்ளமே.

கல்விவெள்ளமே, எல்லோர்க்கும் எட்டும் கல்வி வெள்ளமே, கடைக்கோடிக்கும் எட்டும் கல்வி வெள்ளமே, கடையரையும் கடைத்தேறவைக்கும் கல்விவெள்ளமே சமூக மாற்றத்திற்குத் துணை.

தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளியில்லா ஊர் இல்லை. மகிழ்ச்சிக்குரிய தகவல்.

எங்கும் மூன்று கல் தொலைவிற்குள் நடுத்தரப்பள்ளி. இதுவும் தித்திக்கும் செய்தி. எப்பக்கம் நோக்கினும் ஐந்து கல்லுக்குள் உயர்நிலைப் பள்ளி. இதுவும் தேன் செய்தி.

புகுமுகவகுப்புவரை எல்லோர்க்கும் இலவசக்கல்வி என்பது இன்றைய நன்னிலை. இது முக்கனிபிழிந்தெடுத்து, தேன் கலந்து தரும் செய்தி. இனிப்பில் தமிழோடு போட்டியிடும் செய்தி.

வாய்ப்பினைப் பெருக்கும், வாய்ப்பினை வறியவர்க்கும் வஞ்சனையின்றி அளிக்கும் இப்புதுநிலை கண்டு ஆனந்தப் பள்ளுப்பாட வேண்டும் நாம் அனைவரும்.

பள்ளுப்பாடுவதோடு நின்று விடலாமா? பயன்படுத்திக்கொள்ள வேண்டும். எப்படி?

என்றுமே காணாத கல்வி வாய்ப்பினைச் சிக்கெனப் பிடித்துக்கொள்ள வேண்டும், நம் இளந் தலைமுறையினர். கல்விக்கூடங்களில் இடம் பிடித்துக்கொள்ளுவது மட்டும் போதுமென்று ஏமாந்துவிடக் கூடாது. தேறியவர் பட்டியலிலும் இடம் பிடித்துக்கொள்ளவேண்டும்.

கல்விப் பரீட்சைகள் ஏதோ ஏற முடியாத மலை உச்சிகள் என்று ஏமாற வேண்டாம் நம் தம்பிகளும் தங்கைகளும்; பலரும் ஏறிவரும் சாதாரணக் குன்றுகளே பல்கலைக் கழகப் பரீட்சைகளும்.

நடுக்கமும் கல்வியும் பொருந்தா. நடுக்கமற்றுக் கற்கவேண்டும் மாணவர்கள். தாய்மொழி மூலம் கற்றால், அச்சமற்றுக் கற்கலாம்-பாடங்களை; எளிதில் தெரிந்துகொள்ளலாம் - தகவல்களை.

தாய்மொழி மூலம் கற்கும்போது கவனமாகக் கற்கவேண்டும். கல்வியென்னும் நல்லாள் அழுக்காறுமிக்காள். பிற ஒன்றின் மேல் சிறிது கவனஞ் சென்றாலும் வெகுண்டு விலகிவிடுவாள் கல்வி நங்கை. ஆகவே ஒருமனப்பட்டுக் கற்கப் பழகிக் கொள்ளவேண்டும் இன்றைய மாணவர் சமுதாயம்.

என்றும், யாரும் தாமே கற்பனை செய்து, திட்டமிட்டு, அமைத்துக் கொண்ட உலகில் பிறந்து வாழ்வதில்லை. நிறை குறை செறிந்த உலகில், பலதிசை எண்ண ஓட்டங்கள் உள்ள உலகில், பிறந்து, வாழ்ந்து, முன்னேற வேண்டியவர்களே. உலக நிகழ்ச்சிகள், ஊர் நிகழ்ச்சிகள், குழுக் குறுக்கீடுகள் நம் கவனத்தை ஆட்டும்; குலுக்கும். அன்றாடக் குறைகள் மலையெனத் தோன்றும்; ஆனால் அவை கவனத்தைக் கலைக்க விடாதபடி, சிதைக்க விடாதபடி, காத்துக்கொள்வது அறிவுடைமை; அறிவுடைமை மட்டுமல்ல, சமுதாயத் தன்மானப் போரின் முதல் வெற்றி.

அரசியல் அடிமைத்தனத்தை அகற்றுவது, முந்தைய இரண்டொரு

தலைமுறைகளுக்கு முன்னே நின்ற அறைகூவல்.

அறியாமையை விரட்டுவது இன்றைய இளைஞர்களின் முன்னுள்ள அறைகூவல். 'படிப்பு வராத இனம்' என்ற அவச்சொல்லை, அவமானத்தை அழித்தாகவேண்டும் இத்தலைமுறை. வாழ்க்கை நிலையிலும், சமுதாய நிலையிலும் அடித்தளத்தில் உள்ள மாணவர்கள் இந்த அறைகூவலை ஏற்றுக் கொள்ளவேண்டும். 'அவர் வந்து கை கொடுப்பாரா, இவர் வந்து தாங்குவாரா' என்று காத்துக்கொண்டிராமல் துணிந்து வந்து அறைகூவலை ஏற்றுக்கொள்ள வேண்டும். படிப்போம். பாட்டாளி வீட்டு மக்களும் படிப்போம். ஒவ்வோர் ஆண்டும் தேறுமளவு அக்கறையோடும் கவனத்தோடும் படிப்போம். தேறிக் காட்டுவோம். முதல்தரமாகத் தேறிக் காட்டுவோம். எத்தனைத் தவமிருந்தும், இத்தலைமுறையில் நம் தன்மானத்தைக் காப்போம். கல்விப் பெருக்கினில் ஆடிமகிழ்வோம். வாழ்வுப் பெருக்கிற்கு வழிசெய்து கொள்வோம்.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்.

இது பொய்யாமொழி. இது இயக்கட்டும் இளைஞர்களை.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்.

இதுவும் மெய்யுரை. காலத்தாற் கறைபடாத மெய்யுரை. இதை நினைவில் நிறுத்துவோம். நெறிப்படுவோம்.

புது முயற்சி

குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்தகொண்ட ஒருவர், மற்றோர் அறுவை சிகிசசை செய்துகொண்டு, தற்போது மேலும் ஒரு குழந்தைக்குத் தந்தையாகியுள்ளார்.

சாண்டிகாரிலுள்ள, சுகாதாரப்பணித் துணைச் செயலாளரும், இயக்குநருமான டாக்டர் பிரிதம்சிங் இவ்வகை அறுவை சிகிச்சையைச் செய்துள்ளார்.

தற்போது 42 வயதான திரு. சரன்ஜித்லால் 1948ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டார்.

1953ஆம் ஆண்டில் ஓர் ஆண் குழந்தையும், 1963ஆம் ஆண்டில் இரட்டைப் பெண் குழந்தைகளும் பிறந்தன. 1964ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அவர் முதலில் அறுவை சிகிச்சை செய்துகொண்டார்.

1968ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24ஆம் நாள் மீண்டும் ஓர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஏழு நாட்களுக்குப் பின் அவருக்குத் தையல்கள் பிரிக்கப்பட்டன.

வலதுபுறம் மட்டுமே முதலில் அறுவை செய்யப்பட்டது. இடதுபுறம் இன்னும் செய்யப்படவில்லை. இதற்குள்ளாகவே அண்மையில் அவரது துணைவியார் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்துள்ளார்.

நீர் உயர
நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகும் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC
PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC
DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம், எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்
35/2, உட்ஸ் ரோடு.
சென்னை-2.

இஞ்சி பயிரிடலாமே!

இஞ்சியில் சுக்கு இருக்கலாம்; ஆனால் இஞ்சியைப் பயிரிடுவதால் சுக்குடன் பெருத்த ஆதாயமும் உங்களுக்குக் காத்திருக்கிறதே!

இஞ்சியும் சுக்கும் நம்முடைய அன்றாடத் தேவைப் பொருள்கள்! அயல் நாடுகளிலும் இவை நன்கு விற்பனையாகின்றன.

நவீன முறைகளைக் கையாண்டு, இஞ்சியைப் பயிர் செய்வதால், எளிதில் பெருமளவில் ஆதாயத்தைப் பெறுவதற்குப் போதிய வாய்ப்பிருக்கிறது. அதை எவ்விதம் பயிர் செய்யலாம் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

நிலம், நீர்;

வளம் மிக்க வண்டல் நிலங்களே இஞ்சியைப் பயிர் செய்யச் சாலச் சிறந்த நிலங்களாகும். எனினும் கெட்டியான நிலங்களிலும் இஞ்சியைப் பயிர் செய்யக்கூடும். ஆனால் அந் நிலங்களுக்குப் போதுமான பண்ணையுரங்களை இடுவதுடன், வடிகால் வசதியையும் நிரம்ப ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஆற்றுப் படுகைகளும், வண்டல் சார்ந்த நிழலான இடங்களும் இஞ்சியைப் பயிர் செய்ய ஏற்ற இடங்களே.

பெருமளவில் நீர் தேவைப்படும், இப் பயிரை, 50 முதல் 100 அங்குலம் மழை பொழியும் உயர்ந்த இடங்களில்கூடப் பயிரிடலாம். ஏப்ரல் தொடக்கம் ஜூன் இறுதிக்குள் இதை நடலாம்.

உழுதல் :

'மோல்டு போர்கு' கலப்பைகளைக் கொண்டு மூன்று அல்லது நான்கு முறை, 8 முதல் 9 அங்குல ஆழம் வரை நன்கு உழவேண்டும். உழும் போது, ஏக்கருக்கு 30 முதல் 40 வண்டி பண்ணையுரத்தையும் கலந்து உழுதல் அவசியம். பிறகு வயலைச் சமப்படுத்தவேண்டும்.

வடிகால் வசதியை அமைத்து முடித்தபின், சதுர, நீண்ட அளவில் பாத்திகளை அமைத்துக்கொள்ளுங்கள்.

இஞ்சியா, சுக்கா?

இஞ்சியில் ஈரினங்கள் தாம் பொதுவானவை-நாருள்ளது, நாரில்லாதது. நாரில்லாத இஞ்சியே, சுக்காக விற்பதற்கு ஏற்றது. இஞ்சியை விடச் சுக்கிலிருந்துதான் அதிக ஆதாயம் கிடைக்குமாதலின், பயிரிட நாரில்லாத இஞ்சியைத் தெரிந்தெடுத்துக் கொள்ளுதலே நலம்.

சத்துள்ள, நோயற்ற, வேர்கள் அடங்கிய இஞ்சித் துண்டுகளைப் பொறுக்கியெடுத்து, அவற்றை இரண்டு அங்குல நீளத்தில் வெட்டிக் கொள்ளுங்கள். இரண்டு சதவீத ''அகலால்'' கலந்த திரவத்தில் இஞ்சித் துண்டுகளை ஒரு நிமிடம் ஊற வைத்துப் பின் அவற்றை இரண்டங்குல ஆழத்தில் நடவேண்டும். ஒரு விதைக்கும் இன்னொரு விதைக்குமிடையில் 8 அங்குல இடைவெளியிருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

நட்டு முடிந்த உடனேயே, நீர்ப் பாசனம் செய்து, தழை, இலைகளைக் கொண்டு விதைகள் நட்ட இடங்களை மூடிவிடவேண்டும். ஓர் ஏக்கருக்கு

3 அல்லது 4 குவிண்டால் விதைகள் போதுமானவை.

உரமிடுதல் :

நிலத்தை உழுகையிலேயே 30—40 வண்டிகள் பண்ணையுரம் போட்டு விட்டீர்களல்லவா? அதற்குப்பின், நடுவதற்கு முன் 122 கிலோ அம்மோனியம் சல்பேட், 225 கிலோ சூப்பர் பாஸ்பேட், 100 கிலோ பொடாஷ், 150 கிலோ ஸ்பார்டின் ஆகியவற்றைப் போடவேண்டும். நல்ல விளைச்சலைப் பெறவேண்டுமாயின், இரண்டு அல்லது மூன்றங்குல ஆழத்திலும், விதைகளை யொட்டியே இரண்டு அங்குல தூரத்திலும் உரங்களை இடவேண்டும். மூன்று மணி நேரங்களுக்கு மேல் உரக்கலவையைப் பயன்படுத்தாதிருக்கக் கூடாது. மேலும், உரங்களை உலர்ந்த இடங்களிலேயே வைத்திருந்து பயன்படுத்தவேண்டும்.

40 நாட்களுக்குப் பிறகு 112 கிலோ அம்மோனியம் சல்பேட் கொண்டு மேலுரம் இட்டபின், மீண்டும் 40 நாட்களுக்குப் பிறகு 50 கிலோ யூரியா போடவேண்டும். அடுத்த 40ஆம் நாள் மூன்றும் முறையாக 50 கிலோ யூரியா போடத் தவறக் கூடாது.

கோடைக் காலத்தில் நான்கைந்து நாளைக்கொருமுறை பாசனம் செய்ய வேண்டும். மழைக் காலத்தில் தேவை எழும்போது மட்டும் பாசனம் செய்தால் போதுமானது. செடி (9—12) அங்குல உயரமிருக்கையில், செடியை இலேசாகத் தூக்கிவிடுங்கள்.

பயிர்ப் பாதுகாப்பு :

இஞ்சியின் வேர் அழுகிப்போவது ஒரு நோயாகும். அதனுல் செடி வாடிவிடும். அதைத் தடுப்பதற்கு, வடிகால் வசதி செய்யப்படவேண்டும். மஞ்சள் இளஞ்சிவப்பு நிறம் இலைகளில் பரவக்கூடும். இது ஒரு நோய். இதனுல் இலைகள் உதிர்ந்து, வளர்ச்சி தடைப்படும். அதைத் தடுக்க 'குப்ரமார்' 'ஃபைடோலான', அல்லது 0·5 வலிவுள்ள 'பிலிடோக்ஸ் 50' கலவையைத் திங்களுக்கொருமுறை அல்லது நோய் தாக்கும்போது தெளிக்க வேண்டும். முழுவதுமாக மக்கிப் போகாத பண்ணையுரங்களாலும் பயிருக்குத் தீங்கு நேரிடலாம். எனவே, நன்கு மக்கிய உரங்களையே கையாளவேண்டும். நடுவதற்கு முன் 5 சதவீத 'ஆல்ட்ரின்' அல்லது 5 சதவீத 'பி. எச். ஜி' தூளை மண்ணில் கலக்கவேண்டும்.

அறுவடை:

நவம்பர், டிசம்பரில் இஞ்சியை வெட்டலாம். சிறிதளவு அக்டோபர் திங்களிலும், அறுவடை செய்து, நல்ல விலையில் விற்கலாம். அறுவடைக்கு முன்னர், ஒரு முறை பாசனம் செய்தால், மண் மிருதுவாகி இஞ்சியை எடுப்பது எளிதாகும்.

மேற்கண்ட முறைகளைக் கையாண்டால் 25 முதல் 50 குவிண்டால்வரை ஓர் ஏக்கருக்கு விளைச்சல் கிடைக்கும். மண் கொத்தியால்தான் நாம் இஞ்சியை எடுக்கவேண்டும். அறுவடை செய்தவற்றை, கூடைகளில் போட்டுக் குலுக்கினுல், கற்கள், மண் போன்றவை உதிர்ந்துவிடும். கத்தியையும், பாத்திரங்களையும் பயன்படுத்தினுல் இஞ்சி கருமையடைந்துவிடும்.

இவ்வாறு இஞ்சியைப் பயிரிட்டு, மிகு விளைச்சல் பெற்று, நிரம்ப ஆதாயம் பெறத் தவருதீர்கள்.

— *From* 'Intensive Agriculture'

“எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திடவேண்டும். நன்று இது, தீது இது; மரபு இது; மருள் இது என்பதனை ஆராய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திடவேண்டும்.”

அண்ணா

இளஞ்சிவப்பு நிறத்தில் எக்ஸ்பிரஸ் உறை

அவசரக் கடிதங்களுக்காக இப்போது இளஞ்சிவப்பு நிறத்தில் உறை கிடைக்கிறது. ☐ கண்ணைக் கவரும் இந்த உறையை உபயோகித்தால் கடிதங்களைத் துரிதமாகப் பட்டுவாடா செய்ய உதவியாயிருக்கும். ☐ உறையொன்றுக்கு 40 காசுகள் விதம் எல்லா தபால் நிலையங்களிலும் கிடைக்கிறது.



உங்களுக்கு சிறப்பாகப் பணி புரிய எங்களுக்கு உதவுங்கள்

இந்திய தபால்-தந்தி இலாகா

davp 68/680

ஆசிரியர் நல தேசிய நிறுவனம்

ம.தே.பால்
பள்ளிக் கல்வி இயக்குநர்

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962ஆம் ஆண்டில், 1890இல் இயற்றப்பட்ட தர்ம பரிபாலன சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. வறுமையால் அல்லல் உற்று அவதியுறும் ஆசிரியர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோரின் துயரைத் தீர்ப்பதே இந் நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் ஆகும். மத்திய அரசுக் கல்வி அமைச்சரின் தலைமையில் அமைக்கப்பட்ட பொதுக்குழு, இந் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்றுப் பரிபாலித்து வருகிறது.

தமிழ்நாட்டு மாநிலச் செயற்குழுவின் தலைவர் இம்மாநிலக் கல்வி அமைச்சர் ஆவார்; செயலரும் நிதி நிர்வாகியும் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆவார். இன்னும் இச்செயற்குழுவில் தமிழ்நாடு அரசு நிதித்துறை, கல்வித்துறைத் துணைச் செயலாளர்கள் உட்பட ஐந்து அங்கத்தினர்கள் உள்ளார்கள். மத்திய அரசாலும் மாநில அரசாலும் வழங்கப்படும் மானியத்தாலும், மாநில அரசு இந் நிறுவனத்திற்காக நன்கொடையாகப் பெறும் தொகையாலும் இந் நிறுவனத்திற்கு நிதி கிடைக்கிறது. ஆண்டுதோறும் செப்டம்பர் திங்கள் 5ஆம் நாளன்று கொண்டாடப்படும் ஆசிரியர் நாளையொட்டி இந் நிறுவனத்திற்கு மாநில அரசு நன்கொடையாக நிதியைத் திரட்டுகிறது. மாநிலங்கள் திரட்டும் தொகை புது டில்லியிலுள்ள நிறுவனத்தின் நிதியோடு சேர்க்கப்பட்டு, அந் நிதியிலிருந்து 80 சத விகிதம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் பொதுக் குழுவால் ஒதுக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 1968 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 2ஆம் நாளிலிருந்து மாநிலச் செயற்குழு விண்ணப்பங்களை ஆய்வு செய்து உதவித் தொகையை 1-1-196 இலிருந்து வழங்கத் தொடங்கியது.

7-2-1968இல் நடந்த மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் பணி, விண்ணப்பங்களை ஆய்வு செய்து மாநிலச் செயற்குழுவின் ஒப்புதலை எதிர்நோக்கி விரைவில் உதவித் தொகையை வழங்குவதே ஆகும். இது வரையிலும் சுமார் 200 பேர்களுக்கு உதவித்தொகை அளிக்க முடிவு செய்து, வழங்கப்பட்டு வருகிறது. சிலருக்கு மொத்தமாக முழு உதவித் தொகையும் தரப்பட்டது. மற்றவருக்கு, மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுள் பார்வை இழந்த ஆசிரியர் மூவருக்கு முழு உதவித் தொகையும் மாதாந்தர உதவித் தொகையும் அளிக்கப்பட்டுள்ளன. இம்முறையில் இதுவரையில் வழங்கப்பட்ட தொகை ரூ. 44, 307-87பை. ஆகும். நிற்க, மாவட்டக் கல்வி அதிகாரிகள் பரிசீலனை செய்து அனுப்பியுள்ள 107 விண்ணப்பங்கள் துணைக் குழுவின் ஆய்வுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அனுமதி கிடைத்ததும் உரியவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

உதவி பெறத் தகுதி உடைய, நிரந்தரமாக உடல் நலமின்றி வேலை செய்ய முடியாமல் வருவாய் இன்றி அவதியுறும் ஆசிரியர்களும், வேலை செய்தும் வறுமையில் வாடும் ஆசிரியர்களும் இவ்வுதவித் தொகை பெறுவதில் முதலில் கவனிக்கப்படுவர். உதவிபெறும் ஆசிரியர்களுள் பார்வை இழந்தவர்களும், பக்கவாதம், காசநோய் முதலிய கொடிய நோய்களால் பீடிக்கப்பட்டுத் தம் பணியைச் செய்ய இயலாதவர்களும் உள்ளனர். நீலகிரி மாவட்டத்திலுள்ள திரு. துரைசாமி என்னும் ஆசிரியர் தமது 43-ஆம் வயதில் திடீரென்று பார்வையை இழந்ததால் வேலையை இழக்க நேரிட்டது. பரிதாபம், அவரால் வேறு வேலையும் செய்து பிழைக்க முடியவில்லை; தம்மையும் குடும்பத்திலுள்ள ஆறு பேர்களையும் காப்பாற்றும் பொறுப்பும் இருந்தது. தமிழ்நாடு ஆசிரிய நல நிறுவனம் இந்த ஆசிரியரின் உதவிக்காக மொத்தத் தொகை ரூ. 200-ம் மாதாந்திர உதவித் தொகை ரூ. 60-ம் 1968 சனவரி 1 ஆம் நாள் முதல் வழங்கி வருகிறது. திரு என். என். இராகவாச்சாரி என்னும் இடைநிலை ஆசிரியர் கோயம்புத்தூரில் லாரி விபத்தினால் மரணமடைந்தார். அவர் 28 ஆண்டு காலம் பணி புரிந்தவர். அவரது மனைவியும் ஆண் குழந்தைகள் மூவரும் அவதியுற்றனர். அவரது குடும்பத்தின் இரங்கத் தக்க நிலையைக் கருதி மாநிலச் செயற்குழு மாதந்தோறும் அவ்வாசிரியரின் மனைவிக்கு ரூ. 35 உதவித் தொகையை அளித்து வருகிறது. திரு. கோதண்டராமன் என்னும் ஹையர்கிரேடு ஆசிரியர் பள்ளியிலிருந்து வீட்டுக்கு மிதி வண்டியில் சென்று கொண்டிருக்கும்போது லாரி விபத்துக்குள்ளாகி உயிர் நீத்தார். அவர் மனைவிக்கும் மாதந்தோறும் உதவித்தொகை தரப்படுகிறது. இடைநிலை (செகண்டரிகிரேடு) ஆசிரியர் ஒருவர் 14 ஆண்டுகள் பணிபுரிந்த பிறகு இறந்தார். நீண்டநாள் மருத்துவ சிகிச்சையின் காரணமாகவும், இறந்த பின்னர் நடந்த ஈமச்சடங்குகளின் காரணமாகவும் குடும்பத்துக்குக் கடன் தொல்லை பெருகிவிட்டது. மாநிலச் செயற்குழு அக் குடும்பத்துக்கு ரூ. 500 மொத்தமாக உதவித் தொகையை அளித்தது. ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் பலர், தம் மக்களின் ஆதரவின்றித் தவிக்கின்றனர். ஓய்வு பெற்ற ஆசிரியர்களில் ஒருவர் இட்டளி சுட்டு விற்றுப் பிழைத்து வரும் செய்தி எட்டியதும் அவருக்கு ரூ. 300 மொத்தத் தொகை அளிக்கப்பட்டது. இன்னும் பலர் பார்வை இழந்தும், பக்கவாதம் முதலிய நோய்களால் பாதிக்கப்பட்டும் வேலை செய்ய இயலாதவர்களாக உள்ளனர். அவர்களுக்கும் தமிழ்நாடு செயற்குழுவும் அதன் துணைக்குழுவும் உதவி வழங்கியுள்ளது.

கொடி விற்றல், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், பேசும் படக் கூடங்களில் விளம்பரம் ஆகியவற்றோடு இம்மாதிரி உதவித்தொகை வழங்கும் திட்டம் ஆசிரியர் நாள் கொண்டாட்டத்திற்கு ஒரு பிரசாரமாக விளங்குகிறது. ஆசிரியர்களிடமிருந்தும் அவர்களின் குடும்பத்திலிருந்தும் உதவிக்காகப் பல விண்ணப்பங்கள் வந்துகொண்டே இருக்கின்றன. இதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது. இவ் விண்ணப்பங்களை ஆய்வு செய்து சரி பார்த்துத் தகுதி உள்ளவர்களுக்கு உதவி அளிக்க விரைவாக நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

காடு களைந்தும், நல்ல கழனி திருத்தி உழவு புரிந்தும், ஆழ்கடல், காடு, மலை, அத்தனையிலும் பல சத் தெடுத்தும், புவி பதமுறவே நிதமும் உழைக்கின்றனர் பாட்டாளி மக்கள். அந்த உழைப்புக்கு அவர்களுக்குக் கிட்டும் பரிசு, வறுமை; போதாக்குறைக்குப் பொறுமையும் பணிவும் அடக்கமும் புகட்டும் அறிவுரை. கந்தையணிந்து, இரு கையை ஊறிய சொல்லேர் உழவராம் புலவர்கள். ஆனால் நம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனோ, அதற்கு அப்பால் சென்று, ஆழத் துருவி அந்த இயற்கை அழகினைக் கடைந்தெடுத்து உலகுக்குக் காணிக்கையாகப் படைக்கும் உழைப்பாளிகளின் சாதனையையும், அவர்கள் அனுபவிக்கும் துன்ப வேதனையையும், பசியோடும் பட்டினியோடும் நோயோடும் நலிவோடும் அவர்கள் நித்தம் நித்தம் நடத்தும் போராட்டத்தின் கொடுமையையும் காண்கின்றார்; கலங்குகின்றார். சோலையின் குளிர்ச்சியையும்,

புத்துலகம்

கொள்ளையழகையும் காண்பதுடன் அவர் நிற்கவில்லை. அந்தச் சித்திரச் சோலைகளை வளர்க்க எத்தனை தோழர்கள் தம் இரத்தத்தைச் சிந்தினர் என்று

விரித்துத் தங்கள் மெய்யினைப் போர்த்தும் அவல நிலையில் அவர்கள் அலக்கழிகின்றனர். இவ்விழிநிலையைக் கண்டு கவிஞர் பாரதிதாசன் இரத்தக் கண்ணீர் சிந்துகிறார்.

செருக்கையே முதலாக வைத்து, சுரண்டலையே தொழிலாக நடத்தி, சோம்பலிலே வாழ்க்கையைத் தோய்த்து, சூழ்ச்சியால் ஆதிக்கம் செலுத்தும் செல்வர்களையும், வீணர்களையும் அவர் சாடுகிறார்; சாபமிடுகிறார்; சொல்லால் சுட்டெரிக்கின்றார்.

இயற்கையின் எழிலைச் சித்தரித்து, அந்த இரசனையில் இலயித்து விடுகின்னர், இலக்கிய மரபில் மட்டுமே

எண்ணிப் பார்த்து ஏங்குகிறார். நெல்லினை, நன்னிலத்தினை நோக்குகின்றார் கவிஞர். நிலம் திருத்திப் பயிர்செய்ய எத்தனை மாந்தர்கள் நெற்றி வியர்வையை நீராய்ப் பாய்ச்சினர் என்று நினைத்து அவர் வியர்வைக்கு ஈடாகத் தம் வேதனைக் கண்ணீரைச் சொரிகின்றார் கவிஞர்.

'கீர்த்திகொள் போகப்
பொருட்புவியே—உன்றன்
கீழிருக்கும் கடைக்கால்
—எங்கள்

சீர்த் தொழிலாளர் உழைத்த உடம்பிற்
சிதைந்த நரம்புகள் தோல்!

என்ற பாடல் அவர் இலக்கிய இரசனையிலிருந்து மட்டும் தோன்றியதல்ல; அவர் இலட்சியத் துடிப்பிலிருந்து, அவர் இதயக் கனலிலிருந்து தெறிக்கும் பாடல்.

உழைப்பையே உரமாக இட்டு, உடலையே பணயமாக வைத்து உழவு செய்யும் உழைப்பாளிகள், அரும் நெல் மணிகளை அறுவடை செய்து, ஆண்டானுக்கு அளந்து விட்டு அரை வயிற்றுக் கஞ்சி குடித்து அடிமைகளாகவே வாழும் நிலை அடுக்குமா, அத்தகைய நியதி நெடு நாள் நிலைக்குமா என்று அறைகூவுகிறார் கவிஞர். உழைப்பாளிகள் கெஞ்சும் வரைதானே இது நிலைத்து நிற்கும்? கெஞ்சுவதை விட்டு அவர்கள் கிளர்ந்தெழுந்தால்? அந்தக்

கண்ட புரட்சிக் கவிஞர்

க. திரவியம், ஐ.ஏ.எஸ்.

லுமுன் விவேகத்துடன் நடந்து கொள்ளாவிடில்...

"ஓடப்பரா யிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ"

என்று உலகப்பனுக்கு உணர்த்துகின்றார், உரிமைக் குரலுக்கு உணர்வூட்டும் உலகக் கவிஞர் பாரதிதாசன்.

பாதிக்குதே பசி என்று ஏழை பதைக்கும்போது, செய்த பாவத்தைக் காரணம் காட்டும் போக்கு, பொருளாதார ஆதிக்கத்தைப் பலப்படுத்தும் வகையில் சமய சித்தாந்தங்களைக் குதர்க்கம் செய்வதாகும். சமூகம் செய்யும் சதிக்குச் சமாதானம் கூற, சர்வேசுவரன் இட்ட விதி என்று சப்பைக் கட்டுக்கட்டுவது,

கணக்குத் தீர்க்கும் நாள் வருமுன்பே, புதிய கணக்குப் போட்டுப் பொருளைப் பொதுவுடைமையாக்கு என்று செல்வர்க்கு, சமூகத்துக்கு அறிவுரையாற்றுகின்றார் கவிஞர்.

"செப்புதல் கேட்பீர்... இப்பொழுதே நீர்
பொது இன்பம் விளைத்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே-எங்கள் உடலில் இரத்தம்
கொதிப்பேறு முன்பே"

என்று பாருக்கு எச்சரிக்கின்றார் பாரதிதாசன். அந்த எச்சரிக்கையை ஏற்றுக் கொள்ளாவிடில், வேகம் வந்து வெள்ளமென அடித்துச் செல்

பாமர மக்களின் பகுத்தறிவை முடக்கிப் பண்பைக் குலைத்து, ஆண்மையை ஒடுக்கி, ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்கல்லவா? வாதனை சொல்லி வணங்கி நின்றால் தெய்வ சோதனை என்றவர் சொல்லுவதும் பணச் சாதனையால் நம்மை வெல்லுவதும், மனிதத் தன்மைக்கு மட்டுமல்ல, மக்களைப் படைத்த மகேசுவரனுக்கே மாசு கற்பிப்பதல்லவா? 'நடவு செய்த தோழர் நாலணாவை ஏற்பதும், உடலுழைப்பில்லாத செல்வர் உலகை ஆண்டுலாவலும்' ஏழைகளை என்றென்றும் இருளிலே அடைத்து வைத்து அறியாமையிலும் அடிமைத் தனத்திலும் அவர்களை

அடக்கி வைக்கும் சூழ்ச்சியல்லவா, என்று கனல் தெறிக்க வினவுகிறார் கவிஞர். 'உடை சுமந்த கழுதை கொண்டு உழைத்தோர் நிலைமையும் உடமை முற்றும் படையை ஏவி அடையும் மன்னர் நிலைமையும், கடவுளாணையாயின், அந்த உடை வெளுக்கும் தோழரைக் கடவுள்தான் முன்னேற்றுமா, தன் கழுதைதான் முன்னேற்றுமா, என்று ஆயாசப்பட்டு அங்கலாய்க்கிறார் அருஞ்சொற் கவிஞர். நீயும், உன் கழுதையும் நலியப் பிறந்தவர்கள் என்று சாபமிடும் சமுதாயத்தை, இயன்றால் திருத்த, இல்லாவிடில் தகர்க்கத் துடிக்கின்றார் அவர். அநீதிக்கு உடந்தையாக ஆண்டவனை அழைப்பது, பகுத்தறிவுக்குத் துரோகம் மட்டுமல்ல, பகவானுக்கே துரோகம் என்று படித்துச் சொல்லுகிறார் பாரதிதாசன். பிறிதொரு பாடலில் அவர் ஆண்டவனின் உண்மையான தொண்டர்களுக்கு இலக்கணம்வகுத்தளிப்பதிலிருந்து இது தெளிவாகிறது. 'ஆண்டவன் தொண்டர்கள் ஆகிடத் தக்கவர் யாவர் - எனில் அன்னியர், நான், என்ற பேதமில்லாதவர், தோழா', என்று அவர் கூறி, உண்மையான பக்தன், பொதுமை நெறியைப் போற்றித் தன்னைப் போல் பிறரையும் கருதக் கடமைப் பட்டவன் என்று உணர்த்துகிறார். 'தொண்டர்கள் உள்ளனர், தொண்டு பிறந்தது' என்று கூறி, தத்துவங்களின் உள்ளுணர்வைத் தவற விட்டோம் என்பதையும், அமைப்புக்களின் ஆசாரத்திலே அடிப்படைகளின் சாரம் அழிந்துவிட்டது என்பதையும் சுருக்கமான சொற்றொடரால் சுருக்கெனத் தைக்கிறார், சுப்புரத்தினக் கவி. ''எல்லாம் அவன் செயலே என்று பிறர் பொருளை, வெல்லம் போல் அள்ளி விழுங்கும் மனிதருக்கும், காப்பார் கடவுள் உமைக் சட்டையில் நீர் போகுமட்டும் வேர்ப்பீர், உழைப்பீர் என உரைக்கும் வீணருக்கும், மானிடரின்தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த தேனின் பெருக்கே, என் செந்தமிழே கண்ணுறங்கு'' என்று கவிஞர் இசைத்த தாலாட்டுப் பாடல், பிறந்த குழந்தைக்கல்ல, பிறக்கவிருக்கும் புத்துலகுக்குப் பாடப்பட்ட பாடலே ஆகும். 'பாடுபட்டுப் பருக்கையில்லாததொரு பட்டியில் மாடென' வாழ்கின்ற பாட்டாளி மக்கள், விழிப்புற்றுப் பகுத்தறிவுப் பாதையிலே பீடுநடை போட்டுத் தங்கள் உரிமையைக் கோரிப் பெருமாறு கூவி அழைக்கின்றார் கவிஞர். ''பலிபீடத்தை வீட்டினி நீங்குவீர்; செல்வ நாடு நமக்கென்று வாங்குவீர்''

இல்லார், உடையார் இடையே இன உணர்ச்சியை மட்டுமே மூட்டிவிட்டுப் பகைமையையும் போராட்டத்தையும், வெறுப்பையும் விரோதத்தையும் மட்டுமே வளர்த்திருந்தால், பாரதிதாசன் ஆசுகவியாகவும் தேசக் கவியாகவும் விளங்கியிருக்கமாட்டார்; வெறும் ஏகசுவியாகவே இருந்திருப்பார். வர்க்கக் கொடுமை பற்றி வசை பாடி மட்டும் சென்றிருந்தால், அவர் வறட்சிக் கவியாகவே வற்றியிருப்பார்; புரட்சிக் கவியாக மலர்ந்திரார். சீற்றத்தை மட்டுமே கொட்டிவிட்டுச் சிந்தனை வளத்தினால் சீர்திருத்தப் பாதை வகுக்காமலிருந்தால், அவர் கட்சிப் பிரசாரகராகவே இருந்திருப்பார்; கவிஞர் வரிசையில் இடம் பெற்றிரார். ஆனால், பாரதிதாசனோ நிந்தனைக் கவிஞராக மட்டும் நின்றுவிடாமல், சீரிய சிந்தனைக் கவிஞராக உயர்ந்துள்ளார். பகைமை உணர்வை மட்டுமே பரணி பாடாமல், இன எழுச்சியை மட்டுமே இலக்கியமாகக் காட்டாமல், பாரதிதாசன் புதிய சமுதாயத்துக்குப் பாதை வகுத்து, பொதுமை நெறிக்குப் பொருள் காட்டி, இலட்சிய உலகுக்கு இலக்கணம் வகுக்கின்றார். கன்னியை மட்டும் அவர் காட்டவில்லை; கழனி திருத்தவும் வழிகாட்டுகின்றார். கள்ளத்தைக் காய்ப்பதோடு அவர் நிற்கவில்லை; களங்கமற்ற அன்புப் பாதையையும் அறநெறியையும் காட்டுகின்றார். அவர் காணும் இலட்சிய உலகில் செழிப்பும் செம்மையும் சேர்ந்து இருக்கும்; செல்வமும் சீர்மையும் கலந்து நிற்கும்; பணமும் பண்பும் இணைந்து செல்லும்; வளமும் வாய்மையும் ஒன்றையொன்று தாங்கித் தழைக்கும். நல்லவரே வல்லவராயும் வாழ்வார் அவ்வுலகில். அங்குச் சோம்பல் இராது, சுரண்டலுக்கு இடம் இல்லை என்பதால்; அங்கு வஞ்சனை இராது,

பாட்டாளி மக்கள் பகுத்தறிவு எழுச்சி பெற்றதால். அங்கு வறுமை இராது, பிறர் உழைப்பை உறிஞ்சும் சிறுமை இராததால்.

வாழ்வும் வளமும் பெற்ற சமுதாயம், வரையின்றி வளர்ந்து முழு நிறைவு எய்த வேண்டுமானால், அருளும், பொருளும் ஒருங்கே நாட வேண்டும். அருள்தேட, அவர் காட்டும் அறவழி - பொதுமை நெறி; பொருள்தேட, அவர் தரும் பொருளாதாரத் திட்டம்-கூட்டு முயற்சி.

'இருவர் ஒரு தொழிலில் இரண்டு நாள் ஒத்திருந்த சரிதம் அரிது நம் தாய்நாட்டில் தோழர்களே' என்று நாட்டின் அவல நிலையைக் கண்டு அங்கலாய்க்கிறார் பாரதிதாசன். பிறர் தாழ்ந்தால்தான் தாம் உயர முடியுமென்ற சுயநலச் சிறுமை, சிறிய தொழில் வினைஞர் பலரை விழுங்கிச் சிலர் நிலைநிறுத்தும் ஏகபோக ஆதிக்கம், ஆயிரம்பேர் அழிவை அடித்தளமாக ஆக்கிச் செழிப்பு மாளிகையைச் சிலர் எழுப்பும் செப்படி வித்தை, எண்ணற்றவர் உழைப்பை ஏப்பமிட்டுச் சிலர் ஏற்றம் காணும் சூழ்ச்சி, அறிவும் ஆற்றலும் தகுதியும் திறமையும் பலரிடமும் வளர்ந்து விரிந்து விளங்க வாய்ப்பளிக்காமல் பணபலத்தாலும், அதிகார அமைப்பின் ஆணவத்தாலும், செல்வாக்குச் செருக்காலும், படாடோபப் பகட்டாலும், வாய்ப்புகளும் வசதிகளும் வளங்களும் நலன்களும் ஒரு சிலரிடமே சிக்கச் செய்யும் பொருளாதாரக் குவியல் முறையின் கொட்டம், இவற்றிலிருந்து சமுதாயம் விடுதலை பெற வேண்டுமானால் கூடித்தொழில் செய்யவேண்டுமென்று கூட்டுறவுப் பாதையைக் காட்டுகின்றார் கவிஞர். 'ஒருவன் அறிதொழிலை ஊரார் தொழிலாக்கிப் பெரும் பேறடைவது தான் வெற்றி என்க தோழர்களே' என்ற பொதுமைப் பெற்றியினைப் போதிக்கின்றார். தொழில் திறனும், நுட்ப அறிவும், விஞ்ஞான வளர்ச்சியும் வசதி படைத்த ஒரு சிலர் வசமாகாமல், சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் எல்லா உழைப்பாளிகளுக்கும் உரித்ததாக வேண்டும். நம் நாட்டின் பின்தங்கிய நிலையையும் பிறநாட்டின் முற்போக்கு நிலைமையையும் ஒப்பிட்டு நம் தேக்கத்துக்கும் அவர்கள் வளர்ச்சிக்கும் காரணம் காட்டுகிறார் கவிஞர். 'பீடுற்றார் மேற்கில் பிறநாட்டார் என்பதெல்லாம், கூடிதொழில் செய்யும் கொள்கையினால் தோழர்களே'-அது அங்குள்ள வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் காரணம். 'வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவதெல்லாம் கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே!'-இது இங்குள்ள வறுமைக்கும் நலிவுக்கும் தேக்கத்துக்கும் துன்பத்துக்கும் காரணம். பலரும் கூடி ஒவ்வொருவரும் ஒரு சிறிது முதலிட்டு, ஒன்று சேர்ந்து தொழில் செய்தால், முதலாளி யார், தொழிலாளி யார்? பணக்காரன் ஒருவன், அவனை நம்பிப் பாட்டாளிகள் பலர் என்ற நிலை மாறிப் பங்காளிகள் அனைவரும் என்ற நியதியில் தொழில் வளரும். சுரண்டிச் சேர்த்த செல்வத்தை வைத்து, சுருட்டும் இலாபத்தையே குறியாகக் கொண்டு, ஏழையின் உழைப்பை மட்டுமல்ல, உடலையும் உயிரையும்கூட, போட்ட முதலுக்கு வட்டியாக வசூல் செய்யும் முதாலாளித்துவ ஆதிக்க முறை முறிய வேண்டுமானால், கூடித்தொழில் செய்யும் நெறி வளர்த்துக் குடிமக்கள் கூடி உழைக்கவேண்டும். பொது நலன் நாடி வளர வேண்டும். 'கூடை முறம் கட்டுநரும் கூடித் தொழில் செய்யின் தேடிவரும் லாபம், சிறப்பு வரும்.' சிறு தொழிலிலும் சரி, பெருந்தொழிலிலும் சரி, கூடித்தொழில் செய்வதே குலத்துக்கு நல்லது, கூட்டு முயற்சியே நாட்டுக்கு நல்லது என்று, உழைப்போடு உறவை, உணர்வை, ஒற்றுமையை வளர்த்து, செழிப்போடு செம்மையைப் போற்றிப் பொருளோடு பொதுமையைப் பிணைத்துப் போதனை செய்கிறார் புரட்சிக் கவிஞர்.

இத்தகைய தொழில் நெறியைப் போற்றுகையில் பொருளாதாரம் பலப்பட்டு, பண்பாடு வலுவடைந்து, சமுதாயம் சீர்திருந்தித் தனிமனிதன் தழைப்பான். பொருள் நெறியிலிருந்து அருள் நெறியினைக் கடைந்தெடுக்கும் கவிஞர், பொதுமை உணர்வை, பரந்த உள்ளத்தை, விரிந்த அன்பைப் போற்றுகின்றார்; போதிக்கின்றார்.

''துன்பம் பிறர்க்கு நல் இன்பம்

தமக்கெனும் துட்ட மனோபாவம் அன்பினை மாய்க்கும், அறங்குலைக்கும்; புவி ஆக்கம் தனைக் கெடுக்கும், வன்புக்கெலாம் அதுவே துணையாய் விடும், வறுமையெலாம் சேர்க்கும்'' என்று எச்சரித்து. மனிதன் மனத்தையே மாற்றி, மனிதத் தன்மையை வளர்ப்பதை வலியுறுத்துகின்றார். 'தான், தனது' என்பவற்றிலிருந்து விடுதலை பெற்றால்தான் விமோசனம் என்று சமயத் தத்துவ மெய்யறிஞர்கள் கூறுகின்றனர். மறுமைக்கு வழிகாட்டி, இம்மையிலேயே செம்மை பெறவும், தானென்ற தளையிலிருந்து விடுபட்டுச் சமுதாயத்துடன் சங்கமமாக வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார், அறிவுக்கவி பாரதிதாசன். 'தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம், இவையுண்டு, தானுண்டு என்போன் சின்னதொரு கடுகுபோல் உள்ளம் கொண்டோன்.' கடுகுள்ளம் களைந்து கடல்போல் உள்ளம் பெருகவேண்டும். 'தூய உள்ளம், அன்புள்ளம், பெரிய உள்ளம், தொல்லுக மக்களெல்லாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் என்று தரணிக்குத் தகைமைசால் பொதுமை நெறியினைத் தருகின்றார் தமிழ்க் கவிஞர்.

பள்ளந்தனில் விழும் பிள்ளைப் பூச்சிபோல், பயந்து, நடுங்கி, உள்ளத்தை, உடலை, உயிரைச் சுருக்கி, உணர்விழந்து உழல்வதை ஒழித்து, மனிதன் எழுச்சி பெறவேண்டும். ''அறிவை விரிவு செய், அகண்டமாக்கு, விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை, அணிந்துகொள், உனைச் சங்கமமாக்கு'' என்று அவர் விடும் அழைப்பில் சமயத்தின் சாரமும் சமதர்மத்தின் சாரமும் சங்கமமாகின்றன; அன்பும் அறிவும் கூடிக் கலக்கின்றன. ''உன்வீடு உனது பக்கத்து வீட்டின் இடையில் வைத்த சுவரை இடித்து, வீதிகள் இடையில் திரையை நீக்கி, நாட்டொடு நாட்டை இணைத்து மேலே ஏறு'' என்று அறமும் அரசியலும் கலந்து பாடும்போது பாரதிதாசன், உண்மையில் பாருக்கே தாசனாகி விடுகின்றார்.

வாழப் பிறந்தவர் சிலர், வாடி நலியப்பிறந்தவர் பலர், உழைப்பவர் பலர், உயர்பவர் சிலர், அடிமைகள் பலர், ஆண்டார் சிலர் என்ற இழிவினை மாற்றிப் புதியதொரு பொதுமையான சமுதாயத்தைச் சமைக்கவேண்டும். தரித்திரத்தை வென்ற தனிமனிதன், தானென்னும் தளையிலிருந்து மீண்டு தரணிக்கெலாம் தொண்டாற்ற வேண்டும். கூடித் தொழில் செய்து, கோடி நலன் சேர்த்து, மனித குலம் வளரச் செய்யவேண்டும். அதற்கு ஆதரவாக அரசியல் துறையில் சனநாயகம் அமையவேண்டும்; பொருளாதாரத் துறையில் கூட்டுறவுப் பாதையைப் போற்றவேண்டும்; சமூகத் துறையில் பகுத்தறிவின் எழுச்சி வேண்டும்; அறிவியலில் தன்னலம் பேணாப் பொதுமை உணர்வு வேண்டும். அப்பொழுதுதான் வறுமையும் சிறுமையும் இல்லாத சமுதாயம். வஞ்சமும் வன்முறையும் இல்லாத சமுதாயம், சூதும் சுரண்டலும் இல்லாத சமுதாயம், அறியாமையும் ஆதிக்கமும் நிலவாத சமுதாயம் உருவாகும். ஊனுடலில் உயர்வு காண, மானுடம் வேண்டும் என்பதே பாரதிதாசனின் தாரக மந்திரம். மனிதத் தன்மையும் மனச்சான்றும் மலர்கின்ற சமுதாயத்தில்தான், எனது என்னும் சிறுமை தவிர்ந்து இன்பம் எல்லார்க்கும் என்ற பேரிகை எங்கும் முழங்கிடும் என்று இலட்சியக் கனவு காண்கிறார், புதுமைக் கவிஞர், பொதுமக்கள் கவிஞர், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

—வானொலிப் பேச்சு

ஆகஸ்ட் இதழிலிருந்து தொடர்கதை தொடங்குகிறது.

கோவை மண்டலச் சீரணித் துவக்க விழா
(7—4—1969)

1 & 3. கோவை மண்டலச் சீரணியைத் துவக்கிவைத்துத் தமிழ்நாடு முதல்வர் உரையாற்றுகிறார்.



2. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சீரணிப் பணியைத் துவக்கிவைக்கிறார்.



4. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிறார்.



1. அமைச்சர் பெருமக்கள் அணி வகுப்பைப் பார்வையிடுகின்றனர்.

2. விழாவிற்கு வருகைதந்த பொதுமக்களும். . . .





3 & 4...தொண்டர்களும்.

மேலே: சேலம் மாவட்டத்தில் சிறந்த ஊராட்சி ஒன்றியமெனப் பரிசு பெற்ற கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவரும், உறுப்பினர்களும்.

இடையில்: ஐ. ஆர். 8 நெல்லைப் பயிரிட்டு மிகு விளைச்சல் கண்ட திரு. கோபால் கவுண்டர் [அருகிருப்பவர் ஊர் நலப் பணியாளர் திரு. செயகரன்]



கீழே: வட ஆர்க்காடு மாவட்டத்தில் சிறந்த ஒன்றியமெனப் பரிசுபெற்ற திருப்பத்தூர் ஒன்றியப் பெருந்தலைவரும், உறுப்பினர்களும்.



1 & 2. தொழிலாளர் மாநில ஆயுள் காப்புத் திட்ட மருந்தகங்களை மின்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ.பி. இராமன் அவர்கள் 3-6-1969 அன்று மதுரையில் திறந்து வைத்தார்கள்.

3. தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் மருந்தகத்தைப் பார்வையிடுகிறார்கள்.

4. திருப்பூர் அரசினர் மருத்துவமனை வைர விழாவில் [22-5-1969] அமைச்சர் பெருமக்கள்.

கிராமம் சிறக்குமே!

ப. முத்துசாமி பி. லிட்.

காடு வெட்டி உழவு செய்து
கடமை யாற்றும் பெருமகன்
நாடு கல்வி வாய்த்தி ருப்பின்
நன்மை மிக்க விளையுமே !

கல்வி யற்ற உடலு ழைப்பின்
பலம டங்கு வலிமையாய்
கல்வி கற்ற அறிவு ழைப்பு
கழனி விளைவை ஊக்குமே !

பள்ளி யற்ற ஊரி லாமல்
பரிந்து கல்வி பேணுவோம்
தெள்ளி யாய்ந்து முதிய ருக்கும்
சிறிது கல்வி பயிற்றுவோம் !

கல்வி யறிவும் கடமை யுணர்வும்
கையு ழைப்பின் பெருமையும்
நல்வி தத்தில் இணையின் கிராமம்
நலங்கள் மிக்க வெய்துமே !

விந்தை செய்யும் மின்வி சையும்
விசையி லியங்கும் கருவியும்
சிந்தை யுயர்த்தும் கல்வி யறிவும்
சேரின் கிராமம் சிறக்குமே !

கல்வி யறிவின் நலத்தி னுலே
கலவ ரங்கள் வழக்குகள்
நல்வி தத்தில் ஊரி லேயே
நாடித் தீர்த்துக் கொள்ளுவோம் !

சீ. ஜூன்—6

பட்டி னத்தை விட்டு விட்டுப்
படித்து யர்ந்த மாந்தர் தாம்
பட்டிக் காட்டில் தொண்டு செய்யின்
பயன்நி றைந்து சிறக்குமே !

நகரின் நலங்கள் கல்வி கூத்து
நாட கங்கள் வானொலி
திகழ விவையும் சேரின் கிராமம்
சிறந்த சொர்க்க மல்லவோ !

கால் தடுமாறினால் சமாளித்துக்கொண்டு நிற்கலாம்; ஆனால் நாக்குத் தவறினால் நீங்கள் மீளவே முடியாது.

* * *

முட்டாளின் இருதயம் அவன் வாயில் இருக்கிறது. ஆனால் புத்திசாலியின் வாயோ அவன் இருதயத்துக்குள் இருக்கிறது.

— பெஞ்சமின் பிராங்ளின்

* * *

சிந்தனை செய்யும் தனித்திறன் காரணமாகவே மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். சிந்தனையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. மனிதனாகப் பிறந்தவன் கட்டாயமாகச் சிந்திக்கவேண்டும். சிந்திக்கச் சிந்திக்கத்தான் மனிதனுடைய எண்ணங்கள் உரிய உருப்பெற்றுச் சிறப்படையும். சிந்திப்பது மனிதனுடைய தனி உரிமை! சிந்திக்கத் தெரிந்தவனே மனிதன் !

— ஐன்ஸ்டைன்

* * *

இந்த உலகில் மிகவும் புரட்சிகரமானது எதுவென்றால், அதுதான் கல்வி. ஓர் எழுத்தைக் கற்றுத் தருவது ஒரு புரட்சிக்கு வித்திடுவதாகும். ஒரு பள்ளியைத் தோற்றுவிப்பது என்பது எதிரியைத் தாக்க ஒரு கோட்டை கட்டப்படுகிறது என்று பொருளாகும்.

— இங்கர்சால்

அ.பெ. அழகிரிசாமி, பி.ஏ.,பி.எல்.
துணை இயக்குநர்
கிராம வளர்ச்சித் துறை

நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் குமுதத்தில் வந்த அமுதான தலைப்பு.

"இந்த ஆண்டு சென்ற ஆண்டைக் காட்டிலும் இறப்பு குறைவு............ சுகாதார இலாகாவிற்கு நன்றி. இந்த ஆண்டு சென்ற ஆண்டைக் காட்டிலும் குழந்தை பிறப்பு அதிகம் ......தாய்க் குலத்திற்கு வணக்கம். இன்னும் இதே போல் இறப்புக் குறைவாகிப் பிறப்புச் சிறப்பாகிக் கொண்டே சென்றால் சுமார் முப்பது ஆண்டுகளில் இந்தியாவின் மக்கள் தொகை இரட்டிப்பாகும்......கடுமையான எச்சரிக்கை."

குமுதத்தில்வந்த தலைப்புக்கு விளக்கம் போன்று சென்ற மாத "கஹனியா" என்ற ஆங்கிலஏட்டில் இந்திய அரசு அமைச்சர் மாண்புமிகு டாக்டர் எஸ். சந்திரசேகர் அவர்கள் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார்கள்.

இந்திய மக்கட் பெருக்கத்தின் பெரும் பிரச்சினை என்ன? 1968 ஆம் ஆண்டில் 52கோடி எல்லைக் கோட்டைத் தொட்டு நின்றது. அப்படியானால் உலகில் 7 பேர் வாழ்ந்தால் அதில் ஒருவன் இந்தியன். நூற்றுக்குச் சுமார் 14 சதவிகித மக்கள் இந்தியாவில் வாழ்கின்றனர். ஆனால் இருக்கின்ற நிலப்பரப்போ நூற்றுக்கு 2·4 மட்டும் தான்!

இது இன்றைய நிலை. இந்தக் கோடான கோடியோடு வருடம் ஒன்றுக்குக் கால் கோடி மக்கள் கூடிக் கொண்டே போகின்றனர். இது பிறப்பின் துரித வேகம்.

ஆனால் இறப்போ, நல்ல சுகாதார நடவடிக்கைகளின் காரணமாகப் பெரிதும் குறைக்கப்பட்டிருக்கிறது. காலரா, மலேரியா, அம்மை போன்ற தொத்து நோய்கள் மெத்தவும் பாதிக்காதவகையில் தடைப்படுத்தப் பட்டு விட்டன. இதன் காரணமாக முன்பு சராசரியாக 32 வயது வரை வாழ்ந்த ஓர் இந்தியன் தற்போது 51 வயது வரை வாழ இயலும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது."

இதைவிட இரத்தினச் சுருக்கமாகவும், அதேபோது செறிவான பொருளுடனும் வேறு யாரும் இந்திய மக்கட் பெருக்கத்தின் பெரும் பிரச்சினையை எடுத்தியம்ப இயலுமென்று நான் கருதவில்லை.

நாடு சுதந்திரம் பெற்ற பின்

கடந்த 20 ஆண்டுகளில் சுமார் 18 கோடி மக்கள் கூடுதலாகியுள்ளனர். மக்கள் பெருக்கம் கூடக் கூட உணவுப் பற்றாக்குறையும் மற்ற இடர்ப்பாடுகளும் தாமே தோன்றி விடுகின்றன. எனவேதான் அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள் என்றியம்ப வேண்டுவது அவசியமாகிறது. இதில் கவனிக்கப் படவேண்டியவை இரண்டு. அதிகமான குழந்தைகள் பெறுவதைத் தடுப்பது என்பது ஒன்று. அளவுள்ள குழந்தைகளைத் திட்டமிட்டுப் பெறுதல் என்பது மற்றொன்று.

வருடத்திற்கு 12 மாதங்கள்...... தாய்ச் சூலில் சேய் தங்கியிருக்கிற காலம் 10 மாதங்கள்...எனவே ஐந்து வருடங்களுக்கு 6 குழந்தைகள் என்ற முறையில் குழந்தைகளைப் பெறுகிற மக்களுக்கு எந்தக் கணக்குத் தவறினாலும் 5 வருடங்களுக்கு 60 மாதங்கள் என்ற கணக்கு மட்டும் தவறுவதே இல்லை. அதற்கு எதிர்மறையாக 5 வருடங்களுக்கு ஒரு குழந்தை என்ற ஐந்தாண்டுத் திட்ட நடப்பு முறையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதுவும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். அடிக்கடி குழந்தை பெறுவதனால் தாயின் உடல் நிலை பாதிக்கப்படுகிறது; அதனால் ஏற்படுகிற சார்புடைய நோய்களுக்குத் தாய் ஆளாகி விடுகிறாள் என்ற பேருண்மையை நாம் நினைவில் நிறுத்திக் கொள்ளல் வேண்டும். அதற்கு மேல் இன்னொன்று உண்டு. மனமாச்சரியங்கள் என்று சொல்லப்படுகிற ''சைகலாஜிகல் ஆட்டிடியூட்ஸ்'' பற்றியும் நாம் கவலை கொளல் வேண்டும். ஒரு குழந்தையைப் பெற்றுவிட்ட உடனே கணவன்—மனைவி உறவில் ஏற்படுகிற கண்ணுக்குத் தெரியாத விரிசல், குழந்தைகள் பல பிறந்த பிறகு இடிபாடுகளாக மாறி, இடர்ப்பாடுகளை விளைவித்திருக்கின்றன. நாம் நமது சாதுர்யத்தால் அதை மறைக்கப் பார்க்கலாம். ஆனால் முன்னாள் இலக்கிய நாயகி அதை மறைக்க முயற்சிக்கவேயில்லை. அவள் தன் நிலையை உள்ளது உள்ளபடி பாடுகிறாள்.

ஒரு மகனைப் பெறுகிறாள்; அவனுக்குப் பாலூட்டுகிறாள்; அரும்புக் கொங்கை தொய்ந்து விடுகிறது. இந்தப் பையன் இப்படி ஒரு மாற்றத்தைத் தாயின் உடற்கூறில் ஏற்படுத்தி விடுகிறான். அது மட்டுமல்ல, தகப்பன் மனதை இரும்பாக்கிக் கடினமாக்கி விடுகிறான். தாயை வேம்பாக்கி, வேறொரு தையலைக் கரும்பாக்கி விடுகிறான். இத்தனைக்கும் ஒரே மகன்! அவனும் தலை மகன்!

'அரும்பாக்கிய கொங்கையைப் பாலாக்கி
—உங்கள் அப்பன் நெஞ்சை
இரும்பாக்கி என்நெஞ்சைப் பித்தளை
யாக்கி— அவ் வேந்திழையைக்
கரும்பாக்கி என்னையும் வேம்பாக்கி
—இவ்வண்ணம் கண்டனையே
பெரும்பாக்கிய மலவோ மகனே
—உன்னைப் பெற்றதுவே!

கவிதையில் இழையோடுகிற தன்னிரக்கத்தையும், உடற்கூற்றைப் பற்றி ஊடுருவி நிற்கின்ற பரிதாபப் புலம்பலையும், உள்ளுணர்வுடையவர் அறிய முடிகிறது. மற்றவர்கள்...... எண்ணற்றவர்கள் காது இருந்தும் கேட்காது என்ற நிலையில் உள்ளவர்கள் உணர இயலாது. அவர்களும் உணரும்படிச் செய்வது நம் கடமையாக இருத்தல் வேண்டும்.

''பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க'' என்றதொரு மொழி தீதோ என்ற கேள்வி எங்கிருந்தோ எழுகிறது.

''ஐந்துக்கு மேலே போனால் அரசனும் ஆண்டியாவான்'' என்பதனை அவர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும். ''பதினாறும் பெற்றுப்பெருவாழ்வு வாழ வேண்டும் என்றால்...'' அது பதினாறு குழந்தைகளை ஈன்றெடுத்து வாழ்வதென்பதல்ல; பதினாறு பேறுகளை அதாவது சிறப்புக்களைப் பெற்று வாழ்தலாகும்.

பொன், புகழ், அறிவு, கல்வி,
புண்ணிய மாதின் போகம்,
மன வலி, துணிவு, வாழ்நாள்,
மாமணி, அழகு, வெற்றி,
துன்னு நோயின்மை, நல்லூழ்,
தொடர் சுதர், இளமைப் பேறு
பின்னையாள் அருள், ஈரெட்டும்
பெற்று நீர் வாழி! வாழி!

என்று வரிசையாகப் பதினாறு பேற்றையும், கல்வியோடு-அறிவையும்,

இளமைப்பேற்றோடு-நோயின்மையும், பொன்னோடு - புகழையும், பின்னவளாகிய சீதேவியின் அருளையும், மற்றுமுள்ள பல்வகைப் பேறுகளையும் பெற்றுச் சீரும் சிறப்புமுற்று வாழ வேண்டும் என்பதே இம்முதுமொழியின் சீரிய கருத்தெனக் கொளல் வேண்டும்.

பேரறிஞர், மறைந்த மாமேதை அண்ணா அவர்கள் தமக்கே உரித்தான இனிய, நவீன நடையில் சொல்வார்கள்...... ''சிவனுக்கு இரண்டு மனைவியர்-இருந்தும் அவர் பெற்ற குழந்தைகள் இருவரே. அதில் ஒருவருக்குத் திருமணமே ஆகவில்லை. மற்றொருவருக்கு மனைவியர் இருவர் இருந்தும் அவர் மக்கட்பேற்றை விரும்பாமலேயே இருந்து விடுகிறார். கடவுளர் காட்டும் இந்த வழி நாட்டு மக்களுக்கு நல்வழியாகும். ''நல் வழி எவ்வழி, அவ்வழி நம் வழி'' என்ற அவருடைய பொன்னான மொழியை உய்த்துணர்ந்து நடந்து கொளல் வேண்டும். எனவே சொத்துக்கு ஓர் ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணுமாகப் பெறுதல் வேண்டும். மாற்றாகக் கணவனுக்காக ஓர் ஆணும், மனைவிக்காக ஒரு பெண்ணும் என்று வைத்துக் கொண்டாலும் சரியே. எப்படியோ அந்த அளவோடு பெற்று வளமாக வாழல் வேண்டும். அதற்கு மேல் போனால் அளவிட முடியாத பொருளாதாரச் சிக்கல்கள் பின்னிப் பிணைந்து, வளமான வாழ்க்கையை வசதிக் குறைவோடு மட்டுமின்றிக் கசப்பாகவும் ஆக்கி விடும்.

100 ஆண்டுகளுக்கு முன்பு 100 ஏக்கர் நிலபுலம் வைத்துக் கொண்டு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த ஒரு குடும்பத்திற்கு இன்று கட்டும் மெட்டுமாக வாழ்ந்தும் கூட 60 ஏக்கர்தான் மீதி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அக்குடும்பத்தில் 100 ஆண்டுக் காலத்தில் 30 ஆண்கள் பெருகி இருக்கின்றனர். உள்ள 60 ஏக்கர் நிலத்தை இம் முப்பதின்மரின். சந்ததிகள் பங்கு போட்டுக் கொள்ளும் போது ஆளுக்கு அரை ஏக்கர் வருமோ என்னவோ! இது, அளவின்றி, திட்டமின்றி மக்களைப் பெறுவதனால் எற்பட்ட பொருளாதாரச் சீர்கேடாகும். அளவின்றி மக்கள் பெருகிப்போனால் ஆங்கிலேயப் பொருளாதார நிபுணர் ஒருவர் சொன்னது போல... முடிவில் புதைகுழிக்குமட்டுமே போதுமான நிலம் ஒவ்வொருவருக்கும் மிஞ்சி நிற்கும் நிலை நேரிட்டாலும் வியப்பில்லை.

அதிகம் பெற்று விட்டு அல்லலுறும் மக்களுக்கு அழகியதோர் உவமை காட்டுகிறார் பட்டினத்தடிகள்.

''பூப்பிளக்க வருகின்ற புத்தீசல் போல
பொல பொலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கோர் வகையறியீர் கைவிடவும்
மாட்டீர்
கவர் பிளந்த மரத்துளையில் கால்
நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட குரங்கதனைப்
போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே.''

ஆப்பைஅசைத்து அகப்பட்ட குரங்கு, இது மிகையன்று; முழு உண்மை.

அங்குலம் அங்குலமாகத் தேய்ந்து ஓய்ந்துபோன குடும்பங்கள் ஏராளம்! ஏராளம்! இரு குழந்தைகள் இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கிற வாழ்க்கை வசதிகள், கல்வி கேள்விகள், ஆடை ஆபரணச் சேர்க்கைகள் ஒரு விதமாய் அமையும். அதே வீட்டில் நான்கு குழந்தைகள் இருந்தால் அந்த வசதிகள் பாதியாகக் குறையும். எட்டுக் குழந்தைகள் இருந்தால் அவைகள் வசதிகளாகவே படாத அளவிற்கு வறுமை பீடித்து நிற்கும். பட்டினத்தாரோ அதிகம் பெற்று உழல்கின்றீரே என்று அலுத்துக் கொண்டார். பாவேந்தர் பாரதிதாசனோ ஆயாசத்தைப் போக்க நம்மை அழைக்கிறார். அவர் கூறும் கூற்றைக் காண்போம்.

ஒருவனுக்குத் திருமணம் ஆகிச் சிறிது காலமே ஆயிற்று; மனைவி கர்ப்பமுறுகிறாள்; தலைப்பிரசவம்; விளக்கு வைக்கும் மாலை நேரம்; கணவன் அக்கரையோடும், ஆவலோடும் வெளிப்புறத்தே, திண்ணையதில் உட்கார்ந்திருக்கிறான்; காதினிலே குழந்தை அழும் இன்னொலியைக் கேட்கிறான்.

''உளக்கலசம் வழிந்துவரும் சந்தோ
சத் தாலே
உயிரெல்லாம், உடலெல்லாம் நனைந்து
விட்டான் நன்றாய்!''

வளர்ந்து வந்த குழந்தைக்கு வயது

மூன்றாகி விடுகிறது. மனைவி மற்றுமொரு கர்ப்பமுறுகிறாள். முதலில் பிறந்தது பெண் குழந்தை. இனி ஆண் குழந்தை பிறக்குமா என்று கணவன் ஆசைப்படுகிறான். மனைவி அவ்வாறே பெறுகிறாள். கண்ணழகும் முக அழகும் கண்டு பலநாட்கள் ஆனந்தமாய்க் கழிக்கிறான். இது இரண்டாவது கட்டம்.

மூன்றாவது கட்டம், மனைவிதான் மற்றொன்றும் பின்னொன்றும் பெற்றாள். இரண்டுக்கு மேல் இரண்டு சேர்ந்தவுடன் கணவனின் மனநிலையில் ஏற்பட்ட மாற்றத்தைப் பார்த்தால் அது அவலச் சுவை நிரம்பியதாக இருக்கிறது. இதுவரைக் கூட்டுப் பொறுப்போடு குழந்தைகள் பிறந்தன என்று உணர்ந்து வந்த கணவன், மூன்றாவது நாலாவது குழந்தைகளை "மனைவிதான் பெற்றாள்" என்று கூறி, மழுப்பி, மனைவியின் மேல் பாரத்தைச் சுமத்துகிறான்.

நான்கு குழந்தைகள் பெற்ற பிறகு குடும்பச் சூழ்நிலை சொல்ல இயலாத வேதனையில் இருக்கிறது. கணவனோ அரை மனது கால் மனதுடன் பரிமாறிய உணவை உண்ணுகிறான். உண்ணாமலே மனைவி தன் பிள்ளைகளைக் காத்து நிற்கிறாள். தானும் உணவருந்த ஆரம்பித்தால், பற்றாக் குறை ஏற்பட்டு விடுமே! தாயின் தியாகம்... உச்சக் கட்டத்தில் நின்று பிள்ளைகளைப் பேணிக் காத்து நிற்கிறது.

"எண்ணுமொரு நால்வரையும் எண்ணி உழைத்திட்டேன்
எழில் மனைவி தன்உடலில் முக்காலும் தேய்ந்தாள்!
உண்ணுவதை நான் உண்ண மனம் வருவதில்லை.
உண்ணாமலே மனைவி பிள்ளைகளைக் காத்தாள்!"

இந்தச் சூழ்நிலையில் கணவன் எண்ணுவதை எல்லாம் எண்ணுகிறான். அந்த எண்ணங்கள் சுமையாகி அவனை அழுத்துகின்றன. மேலும் எண்ணங்கள் எழுகின்றன! அவைகளோ ஏக்கங்களாக மாறுகின்றன!

"வரும்படியை நினைக்கையிலே உள்ளமெலாம் நோகும்
வாராத நினைவெல்லாம் வந்துவந்து தோன்றும்
துரும்பேனும் என்னிடத்தில் சொத்தில்லை! நோயால்
தொடர்பாகப் பத்துநாள் படுத்துவிட்டால் தொல்லை
இருப்பா? நான் செத்துவிட்டால் என் பிள்ளைகட்கே
என்னகதி? ஏன்பெற்றேன்?

மேற்கூறியவாறு குடும்பத்தலைவன் மீளாக் கவலையில் மூழ்கி இருக்கும் போது மேலும் ஒரு செய்தி வருகிறது. முதற் பெண்குழந்தையும், இரண்டாம் ஆண் குழந்தையும் கூட்டுப் பொறுப்பு; மூன்றும் நாலும் பிறக்கும்போது தாய்மேல் வெறுப்பு; ஐந்தாம் குழந்தையின் பிறப்பு முத்தாலம்மன் வைத்த கிருபையால் என்று விதியின் மேல் பழி சுமத்துகிற கோரச் சிரிப்பு...... இந்தமாதிரி மாறி வருகிற மன நிலைகளுக்குக் கணவன் ஆளாகிறான்......எந்தச் சூழ்நிலையில் இந்த ஐந்தாம் குழந்தை பிறக்கிறது?......

பட்டகடன் காரர்வந்து படுத்துகின்ற நேரம்
சித்தமெலாம் மூத்தபெண் சுர நோயை எண்ணித்
திடுக்கிடுங்கால், ஒருகிழவி என்னிடத்தில் வந்து
முத்தாலம்மை வைத்த கிருபையினால் நல்ல
முகூர்த்தத்தில் உன்மனைவி பிள்ளை பெற்றாள், என்றாள்.
தொத்துநோய், ஏழ்மை, பணக்காரர் தொல்லை
தொடர்ந்தடிக்கும் சூறையிலே பிள்ளையோ, பிள்ளை!

தொத்துநோய், ஏழ்மை, கடன்காரர் தொல்லை, சூழ்ந்து வாட்டி வதைக்கும் இந்தச் சூழ்நிலையில், உனக்குப் பிள்ளை ஒரு கேடா என்று தன்னையே சபித்துக் கொள்ளுகிறான். வரும்படி போதவில்லை. உழைக்கத் தயார்தான். ஆனால் காலமெல்லாம் உழைக்க அவன் உடல் என்ன இரும்பால் செய்ததா? பத்துநாள் சேர்ந்தாற்போல் படுத்துவிட்டால் யார் அவன் குடும்பத்தைக் காப்பாற்றுவார்கள்? இந்த எண்ணங்கள் கொந்தளித்து அலைமோதி எழுந்து வீழ்ந்து அடங்கியபோது, அவனுக்கு ஒரு தீர்மானம் ஏற்பட்டு விடுகிறது...'குடும்

பக் கட்டுப்பாடு' செய்யுமாறு சொல்பவர்களெல்லாம், அத்தனை பேரும் துறவியாகிவிடவா சொல்லுகிறார்கள்?...... இல்லையே! பின் என்ன சொல்லுகின்றனர்? "அளவோடு பெற்று வளமாக வாழச்" சொல்லுகின்றனர். இதில் என்ன குற்றம்? திருமணம் செய்துகொண்டு, மண வாழ்க்கையைச் சிறப்புற வாழத்தான் சொல்கிறார்கள். ஆனால் குழந்தைகள் பிறக்கும் இடைவெளி ஐந்தாண்டுக்கு ஒருமுறையும், பிறக்கும் குழந்தைகள் இரண்டு அல்லது மூன்றாக அமையுமாறும் ஒரு திட்டம் தீட்டிக் கொள்ளவே சொல்கின்றனர். நல்லதே சொல்கின்றனர். காதல் வாழ்க்கையிலேயே முழுதும் வாழுங்கள், ஆனால் கருப்பாதையைச் சாத்திக் கொண்டு காதல் நடத்தலாமே என்கின்றனர். இதில் யாருக்கு என்ன இழப்பு? ஓதலுக்கெல்லாம் மறுப்பா? அப்படியெனில் இந்த நாடு என்றுதான் உள்ளத்தில், உடலில், உயிரில் உணர்வு கொள்வது? எவ்வழி நல்வழி, அவ்வழி நம்வழி! என்று தன்னுள் தீர்மானித்துக் கொண்ட அந்த வீரமகன், தமிழ் உலகத்தை நோக்கிச் சொல்கிறான்.

காதலுக்கு வழிவைத்துக் கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம் இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை? தவிப்பதற்கோ பிள்ளை?
சந்தான முறைநன்று; தவிர்க்குமுறை தீதோ?
காதலுத்துக் கண்ணுலுத்துக் கைகள் அலுத்துக்
கருத்தலுத்துப் போனோமே! கடைத்தேற மக்கள்
ஓதலுக்கெல்லாம் மறுப்பா? என்னருமை நாடே
உணர்வுகொள்! உள்ளத்தில் உடலுயிரில் நீயே!

பாண்டியின் பணி

ஆறு திங்களிலேயே 2106 மகளிர்க்கு, கருத்தடை வளையங்கள் (லூப்) பொருத்தி, குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையில் அரும் பணியாற்றியுள்ளது, பாண்டிச்சேரி.

1968-69ம் ஆண்டில் 1739 மகளிர்க்குக் கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட்டது.

ஆனால் முதல் ஆறு திங்களிலேயே 2106 பெண்கள் கருத்தடை வளையங்களை அணிந்து, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தழுவியுள்ளனர்.

அறுவைச் சிகிச்சையிலும் பாண்டிச்சேரி பின் தங்கிவிடவில்லை. செப்டம்பர் திங்களில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு இருவார விழாக்காலத்தில் மட்டும் ஆண்களில் 287, பெண்களில் 13 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருப்பதுடன், 447 பேர்களுக்குக் கருத்தடை வளையமும் பொருத்தப்பட்டுள்ளது.



தேடாமல் வந்த சுழற்கேடயம்

சென்ற இதழில்: தேடி வந்த சுழற்கேடயம்
இந்த இதழில்: தேடாமல் வந்த சுழற்கேடயம்
வரும் இதழில்: தானே வந்த சுழற்கேடயம்

———

சென்ற இதழில்: கீழப்பாவூர் (நெல்லைமாவட்டம்) ஒன்றியம்
இந்த இதழில்: திருப்பத்தூர் (வடஆர்க்காடு), கெங்கவல்லி (சேலப்) ஒன்றியங்கள்.

வரும் இதழில்: காத்திருங்கள்! காணலாம்!!

சிறந்த ஊராட்சி ஒன்றியங்களை மாவட்டந்தோறும் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்கத் தமிழக அரசு உருவாக்கிய திட்டத்தில் சுழற் கேடயங்களைப் பரிசாகப் பெற்ற திருப்பத்தூர், கெங்கவல்லி ஒன்றியங்களின் போற்றுதற்குரிய பணிகளை விளக்குகின்றது இக்கட்டுரை.

—ஆசிரியர்.

திருப்பத்தூர்

* ஏற்றமிகு ஏலகிரிமலை
* மணமிகு சந்தன மரக்காடுகள்
* பயன்மிகு காப்பிச் செடிகள்
* வளம்மிகு பழ, தானிய வகைகள்
* 67 ஊராட்சிகள் கொண்ட பெரும் ஒன்றியம்
* 71 ஒன்றிய உறுப்பினர்கள்
* 169·33 சதுரமைல் பரப்பளவு
* 1,59,472மக்கள் தொகை
* 94762·99 ஏக்கர் விளை நிலம்
* குடும்பக் கட்டுப்பாடுப் பணிக்குப் பரிசு
* கதர் விற்பனைக்குப் பரிசு

இவை திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் (வடஆர்க்காடு மாவட்டம்) சில சிறப்புகள்!

தேசிய வளர்ச்சிப் பணித் திட்டத்தில், 2-10-1958 அன்று வளர்ச்சி வட்டாரமாகத் தொடங்கப்பெற்ற திருப்பத்தூர் வட்டாரம், 13-4-1961 முதல் ஊராட்சி முறையின் கீழ் ஒன்றியமாக நிறுவப்பட்டது.

சோலையார்ப்பேட்டை பேரூராட்சியுடன் 67 ஊராட்சிகளைத் தன்னகத்தே கொண்டே பெரும் ஒன்றியமான திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் 67 உறுப்பினர்களையும் 4 இணைப்பு உறுப்பினர்களையும் கொண்டு சிறப்பாகச் செயலாற்றுகிறது.

169·33 சதுர மைல் பரப்பளவுள்ள இவ்வொன்றியத்தின் மக்கள் தொகை 1,59,472.

வேளாண்மை, கால்நடை :

மொத்த விளை நிலமான 94752·99 ஏக்கர்களில் 10,320 ஏக்கர்களில் நன்செய்ப் பயிர்களும், 55795·06 ஏக்கர்களில் புன்செய்ப் பயிர்களும் விளைவிக்கப் படுகின்றன. ஒன்றியம் வசமுள்ள நீர்ப்பாசன ஆதாரங்கள் வாயிலாக 6420 ஏக்கர்களுக்கும், பொதுப் பணித்துறையின் மூலம் 987 ஏக்கர்களுக்கும் போதிய பாசன வசதி கிடைத்து வருகிறது.

நெல், கரும்பு, கேழ்வரகு, நிலக்கடலை, துவரை, சாமை, பருத்தி ஆகியவை முக்கியப் பயிர்களாவன. தவிர மா, பலா, வாழை, கொய்யா, சாத்துக்குடி, திராட்சை ஆகிய பழவகைகளும் இங்குப் பயிரிடப்படுகின்றன.

இவ்வொன்றியத்தில் 90 புதிய கிணறுகளைத் தோண்டுதற்கென ரூ. 90,000 கடன் வழங்கப்பட்டுள்ளது. தவிர 28 மின் நீரிறவைகளை அமைப்பதற்கென ரூ. 56000 கடனுக அளிக்கப்பட்டுள்ளது. மொத்த விளை நிலங்களில் 35 சதவீதப் பரப்பளவிற்குப் பூச்சி மருந்துகள் தெளிக்கப்பட்டு, பயிர்ப் பாதுகாப்புச் செய்யப்பட்டுள்ளது.

கால்நடைப் பராமரிப்புத் திட்டத்தில் 19 உயர்ரகக் கால் நடைகளும், 115 உயர் இனக் கோழிகளும் வழங்கப்பட்டுள்ளன. தவிர மூன்று கோழிப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. 386 எருதுகளுக்குக் காயடிக்கப்பட்டிருப்பதுடன், 16,620 கால்நடைகளுக்குத் தடுப்பு ஊசிகளும் போடப்பட்டுள்ளன.

கல்வி:

இவ்வொன்றியத்தில் இயங்கும்140 பள்ளிகளில் 124 ஒன்றியத்தின் நேர்ப் பார்வையிலிருக்கின்றன. இவற்றில் 490 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். ஒன்றியப் பள்ளிகளில் 75, சொந்தக் கட்டடங்களிலும், 50, இலவசக் கட்டடங்களிலும் செயல்படுகின்றன. 113 மதிய உணவு நிலையங்களிருக்கின்றன. 62 சமூகக் கல்வி நிலையங்களுடன், இளைஞர் மன்றங்கள், கிராம வானொலி மன்றங்கள், வேளாண்மைச் சங்கங்கள் போன்றவையும் சிறந்த முறையில் பணியாற்றுகின்றன. தவிர 62 மகளிர் மன்றங்களும், 62 குழந்தைகள் காப்பகங்களும் இங்குள்ளன.

குடும்பக்கட்டுப்பாடு:

1967—68ஆம் ஆண்டில் மட்டும் 1106 ஆண்கள், 23 பெண்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. தவிர 4680 பேர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டுக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்துறையில் தொடர்ந்து சிறந்த பணியாற்றியமைக்காக 1961—62ம் ஆண்டில் மாநில முதற் பரிசு இவ்வொன்றியத்திற்குக் கிடைத்தது. தவிரப் பல நற்சான்றிதழ்களையும் இவ்வொன்றியம் பெற்றுள்ளது.

கதர் விற்பனையில் கடந்த நான்காண்டுகளாக, மாவட்டத்திலேயே தொடர்ந்து முன்னணியில் நிற்பது திருப்பத்தூர் ஒன்றியமாகும். 1967—68இல் மட்டும் ரூ. 57,000க்குக் கதர் விற்பனை செய்துள்ளது பாராட்டுதற்குரியது.

சீரணி:

மக்களின் சேவை மனப்பான்மையை ஒரு முகப்படுத்தி, வெளிக் கொணரும் முறையில் அமைந்துள்ள சீரணிப் படையினர், ரூ. 7000 மதிப்பீட்டில் புதுப்பேட்டைக் கிராமத்தில் தொடக்கப் பள்ளிக்கென ஒரு கட்டடத்தைக் கட்டி முடித்துள்ளனர். பொருமாப்பட்டு ஊராட்சியில்,

ரூ. 1500 அரசு மானியத்துடன், உயர் தொடக்கப் பள்ளிக்குக் கூடுதலாக ஒரு கட்டடமும் சீரணியினர் அமைத்துக் கொடுத்துள்ளனர். மேலும் மாடப்பள்ளி ஊராட்சியில் ஒரு படிப்பகமும், திருப்பத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த வேலன் நகரில் வள்ளுவர் மன்றக் கட்டடமும் சீரணியினரால் உருவாக்கப்பட்டுள்ளன.

அமைப்பில் பெரிதாய், சேவைகளில் உயரியதாய் விளங்கும் திருப்பத்தூர் ஒன்றியம் புகழில் முன்னணியில் நிற்பது பெருமைக்குரிய சாதனையாகும்.

கெங்கவல்லி

(சேலம் மாவட்டம்)

- பேரூராட்சிகள் 4
- ஊராட்சிகள் 12
- ஒன்றிய மன்ற உறுப்பினர்கள் 18
- மக்கள் தொகை 68,674
- பரப்பளவு 100 சதுர மைல்
- நன்செய் 10,321 ஏக்கர்கள்
- புன்செய் 31,946 ஏக்கர்கள்
- மேல் நிலை நீர்த்தேக்கங்கள் 5
- பள்ளிகள் 36
- ஆசிரியர்கள் 235
- மகளிர் மன்றங்கள் 20
- குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் 250
- சிறுசேமிப்பில் ரூ. 1,43,294.

கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் தொடங்கியகாலை (2-10-1960), இவ்வொன்றியத்தில் இரண்டு பேரூராட்சிகளும் 14 ஊராட்சிகளுமிருந்தன. பின்னர் இரு ஊராட்சிகள் பேரூராட்சியின் நிலைக்கு உயர்த்தப்பட்டன.

1967-68ஆம் ஆண்டில் சிறந்த ஒன்றியமெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவ்வொன்றியம், வளர்ச்சித் துறைகள் அனைத்திலும் திட்ட இலக்குகளை நிறைவேற்றியது பற்றிய சில சிறப்புக் கூறுகளை இங்கே காண்போம்.

வேளாண்மை:

வேளாண்மை அலுவலர்கள் களப் பணியாளர்களின் அயராத உழைப்புடன் உழவர் பெரு மக்களின் ஆர்வமும் பன்மடங்கு பெருகிடவே, இவ்வொன்றியத்தில் மிகு விளைச்சல் தரும் ஏ. எஸ். டி. 11, கோ. 30, ஏ. டி. டி. 27, ஐ. ஆர். 8 போன்ற நெல் இனங்கள் 16,276 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இவற்றால் நெல் உற்பத்தி மேலும் 20 சதவீதத்திற்கு உயர்ந்துள்ளது. தவிர, சோளம் 887 ஏக்கர், கம்பு 453 ஏக்கர், புகையிலை 252 ஏக்கர்களில் செம்மையாகப் பயிரிடப்படுகின்றன.

வேளாண்மையுயர்விற்குப் பின்னணியாகத் திகழ்வது பாசன வசதியாகும். இத்துறையில் பாசன வாய்க்கால், பாசனக் கிணறுகளை உரிய முறையில் பேணுவதற்கு ஒன்றியம் முழுக்கவனம் செலுத்தி வந்துள்ளது. இங்கு 7525 பாசனக் கிணறுகள், 1,844 மின்விசை இறவை இயந்திரங்

கள், 640 எண்ணெயால் இயங்கும் இறவை இயந்திரங்கள் அமைக்கப் பட்டுள்ளன. 257 ஏக்கர் பரப்புள்ள நிலம் ஒன்றியத்தின் குளப் பாசனத் தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

கால்நடைப் பராமரிப்புத் திட்டத் தில் செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் ஒன்று தம்மம்பட்டியில் உள்ளது. சிறிய அளவில் கால் நடை மருத்துவ மனையொன்று செந்தாரப் பட்டியில் இயங்கி வருகிறது. 1967-68ஆம் ஆண்டில் ரூ. 21,000 மதிப்பில் ஒரு கால்நடை மருத்துவ மனை தம்மம்பட்டியில் நிறுவப்பட் டது.

ஒன்றியத்தில் 5 மேல்நிலை நீர்த் தொட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இணைப்புப் பாதைகளுக்கென ஒதுக் கப்பட்ட ரூ. 10,100க்கும் மேலாக, ரூ. 13,045ஐ ஒன்றியமே செலவிட் டுச் சிறந்த சாலைகளை அமைத்துள் ளது.

தொடக்கக் கல்வி:

ஒன்றியத்திலுள்ள 35 பள்ளிகளில் 7 உயர்நிலைத் தொடக்கப்பள்ளிகள், 28 தொடக்கப் பள்ளிகள்; இவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள் எண் ணிக்கை 235. 19 சமூகக்கல்வி நிலை யங்களும், ஒன்றியத் தலைமையிடத் தில் ஒரு தகவல், விளம்பர நிலையமும் செயல்படுகின்றன. ரூ. 3,300 செல வில் மகளிர் மன்றக் கட்டடமொன்று நிறுவப் பட்டுள்ளது. மேலும் 20 மக ளிர் மன்றங்கள் ஒன்றியத்திலுள்ளன.

குடும்ப நலம், சிறு சேமிப்பு :

ஒன்றிய அலுவலர்கள் ஒருமன துடன் ஒத்துழைத்து 248 ஆண்க ளுக்கும் 2 பெண்களுக்கும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துள்ளனர். தவிர 11 மகளிர்க்குக் கருத்தடை வளையங்கள் (லூப்) அணிவிக்கப்பட்டுள்ளன.

அஞ்சலகச் சேமிப்புக் கணக்கை 627 பேர்கள் தொடங்கியுள்ளனர். இதனால் ரூ. 33,929 சேமிக்கப்பட் டுள்ளது. தவிர, வளரும் சேமிப்பில் ரூ. 56590-ம், தேசிய சேமிப்புப் பத்திரத்தில் ரூ. 52875-ம் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

இங்குள்ள சோப்புத் தொழிற் சாலை 1968 முதல் உற்பத்தியைத் தொடங்கி, ரூ. 14,118 மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்துள் ளது.

இங்குள்ள அனைவரும் இதயபூர்வ மான ஒத்துழைப்பை நல்கியதால், எல்லாத் துறைகளிலும் கெங்கவல்லி ஊராட்சி ஒன்றியம் சிறந்து விளங்கு கிறது.

இந்நிலை மாற வேண்டாமா?

மலேசியா நாட்டில் பத்து இலட்சம் தமிழர்களே வாழ்கிறார்கள். அங்கு அரசாங்கம் வெளியிடும் பத்திரிகை நாற்பதாயிரம் விற்பனையாகிறது. ஆனால் நமது தமிழ்நாட்டில் அரசாங்க இதழ்கள் விற்பனை இருபத்தைந்தாயிரம் படிகள் என்ற நிலை தான் உள்ளது. இந்நிலை மாற வேண்டாமா?

இதைச் சொன்னவர் — சிலம்புச் செல்வர்
ம.பொ.சி.

கேட்டு எழுதியவர்—நமது செய்தியாளர்



ஹெர்குலிஸ்

உங்களுக்காகவே தயாரிக்கப்பட்டது

ஹெர்குலிஸ் 135 நாடுகளில் மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுவது. இந்தியாவில் ஏராளமாக விற்பனையாகும் சைக்கிள். உலகின் மாபெரும் சைக்கிள் தயாரிப்பாளர்களான டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிடெட், யு.கே. நிறுவனத்தின் நவீன தொழில் நுட்ப முறையைப் பின்பற்றி தென் கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய, வசதிமிக்க சைக்கிள் தொழிற்சாலை யில் அதி நுட்பமாக தயாரிக்கப்பட்டது.

சைக்கிள் ஒரு சிறந்த முதலீடு. ஹெர்குலிஸைத் தேர்ந்தெடுங் கள். அது மிதமான விலையில் கிடைக்கும் உன்னதமான சைக்கிள்.

TI ஹெர்குலிஸ்®

வெறும சைக்கிள் மட்டுமன்று —
வாழ்நாள் முழுதும் உழைக்கும் ஓர் உறுதுணை

இந்தியாவில் தயாரிப்போர் :
டி.ஐ. சைக்கிள்ஸ் ஆஃப் இந்தியா, அம்பத்தூர், சென்னை-53
உரிமையாளர்கள்: டியூப் இன்வெஸ்ட்மென்ட்ஸ் ஆஃப் இந்தியா லிமிடெட், சென்னை 1 பதிவுபெற்று உபயோகிப்போர்.
ஹெர்குலிஸ் சைக்கிள் & மோட்டார் கம்பெனி லிமிடெட், யு.கே அவர்களின் பதிவு பெற்ற டிரேட் மார்க்

ஊராட்சி அரசிதழ்

GRAMANALAM PART-2

PANCHAYAT GAZETTE

மகளிர் நலத்துறை—மகளிர் நலத்துறையின் கட்டுப் பாட்டிலுள்ள அமைப்பு–துறைப் பெயர்த் தொகுதி மாற்றம். ஆணை பிறப்பிக்கப்படுகின்றது.

(Women's welfare Department-Institution Under the Control of Women's Welfare Department-Change of nomenclature-Ordered.

அரசு மகளிர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அமைப்புகளின் பெயர்களை மாற்றியமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இனிமேல் கீழே உள்ள அட்டவணையின் முதலாவது பத்தியிலுள்ளதுபோல் இருந்த பெயர்கள் இரண்டாவது பத்தியிலுள்ளது போல அழைக்கப்படும்.

அட்டவணை

	I	II
1.	Women's Welfare Branch	மகளிர் நலக் கிளை அலுவலகம் (Mahalir Nala Kilai Aluvalagam)
2.	District Women's Welfare Office	மாவட்ட மகளிர் நல அலுவலகம் (Mavatta Mahalir Nala Aluvalagam)
3.	Police Line Mathar Sangam	காவலர் குடியிருப்பு மகளிர் மன்றம் (Kavalar Kudiyiruppu Mahalir Manram)
4.	Work Centre	மகளிர் தொழிற் பயிற்சி நிலையங்கள் (Mahalir Thozir Payirchi Nilayangal)
5.	Integrated Child Welfare Demonstration Project	குழந்தைகள் நலமுறை விளக்கும் ஒருங்கிணைப்புத் திட்டம் (Kuzhanthaigal Nalamurai Vilakkum Orunginaippu Thittam)
6.	Radio Listening Club (for Women)	மகளிர் வானொலிக் கேட்பகங்கள் (Mahalir Vanoli Manram)
7.	Produotion Unit	பொருள் உற்பத்தி நிலையம் (Porul Urpathi Nilayam)
8.	Service Home	பணி இல்லம் (Pani Illam)
9.	Tailoring Unit	தையல் வேலைப் பகுதி (Thaiyal Velai Paguthi)
10.	Physically handicapped Section	உறுப்பு நலங்குறைந்தோர் பிரிவு (Uruppu Nalankurainthor Pirivu)
11.	Special Home for unattached Women among Burma Repatriates	பர்மா அகதிகள் சார்பிலாப் பெண்கள் இல்லம் (Burma Agathigal Sarbila Pengal Illam)
12.	State Social Welfare Board	மாநிலச் சமூக நல வாரியம் (Manila Samooga Nala Variyam)
13.	District Women's Welfare Committee	மாவட்ட மகளிர் நலக்குழு (Mavatta Mahalir Nala Kuzhu)
14.	Panchayat Union Women's Welfare Committee	ஊராட்சி ஒன்றிய மகளிர் நலக்குழு (Ooratchi Ondriya Mahalir Nala Kuzhu)

இந்த அமைப்புகளுடன் தொடர்புகொள்ளும் எல்லா அலுவலகங்களும் மேலே தரப்பட்ட பெயர்களின் பேரிலேயே எல்லாத் தொடர்புகளையும் கொள்ள வேண்டும். அந்தந்த அலுவலகங்களும் அலுவலக எல்லையிலுள்ள பெயர்ப் பலகையில் புதிய பெயர்களை அமைக்க வேண்டும்.

(சமூக நலத் துறையின் ஏப்ரல் திங்கள் 26-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 253-ன் சுருக்கம்)

தேனி நகராட்சியைத் 'தேனி-அல்லி நகரம்' எனப் பெயர் மாற்றுதல்

மதுரை மாவட்டத்திலுள்ள அல்லி நகரம் நகராட்சியானது, தேனி நகராட்சியென விளங்குமென்று ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 11—5—1966 நாளிட்ட அரசு ஆணை எண் 1215-ல் அரசு ஆணையிட்டது. இனி அந்த நகராட்சியின் பெயர், ''தேனி-அல்லி நகரம்'' என்று மாற்றப் பட வேண்டுமென்று அரசு தற்போது ஆணையிடுகிறது.

(ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 10—6—1969 நாளிட்ட அரசு ஆணை எண். 1017).

அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தை ஊராட்சி நிறுவனங்களில் அமைத்தல்

மகாத்மா காந்தி, இந்தியக் குடியரசுத் தலைவர், சர்தார் படேல், ஜவஹர்லால் நேரு ஆகியோரின் திருவுருவப்படங்களை வாங்கி, அவற்றை சென்னை மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், நகரியங்கள் போன்ற உள்ளாட்சித்துறை நிறுவனங்களில் அமைப்பதற்கு உள்ளாட்சிகளுக்கு அனுமதி வழங்கி, உள்ளாட்சித் துறையின் 3—1—1953, நாளிட்ட அரசு ஆணை எண் 17, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 23—4—1953 நாளிட்ட அரசு ஆணை எண் 911, 3—12—1962 நாளிட்ட அரசு ஆணை எண் 2635, மற்றும் 22—4—1968 நாளிட்ட அரசு ஆணை எண் 830 ஆகியவற்றில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வேறு எவ்வித அனுமதியுமின்றியே, ஒவ்வோர் உருவப்படத்திற்கும் ரூ. 50/- (ரூபாய் ஐம்பது வரை) செலவிடலாம். மேற்கண்ட பொதுவான அனுமதியை, முதலமைச்சர் அமரர் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தை வாங்கி அமைப்பதற்கும் விரிவுபடுத்தலாம் என்று அரசு பரிசீலனை செய்தது. அதன் பேரில் உள்ளாட்சி நிறுவனங்கள், தமது சொந்த நிதியிலிருந்து ரூ. 50 (ரூபாய் ஐம்பது) வரை செலவிட்டு முதலமைச்சர் அமரர் அறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப்படத்தை வாங்கி அமைப்பதற்கு, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு அனுமதியளிக்கிறது.

(ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 2—4—1969 நாளிட்ட அரசு ஆணை எண் 621-ன் சுருக்கம்).

'பஞ்சாயத்து ராஜ்', 'இன்டென்சிவ் அக்ரிகல்சர்' போன்ற இதழ்களிலிருந்து இடம் பெறுபவை. பக்கங்கள்: 41, 42, 52, 53, 58, 61, 63, 64.

'Articles reproduced from Panchayat Raj', 'Intensive Agriculture' etc., Pages: 41, 42, 52, 53, 58, 61, 63, 64.

தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குநரால் ஸ்ரீ பி.எல்.எஸ். அச்சகத்தில் (65/1 ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப்பட்டது.

இணைக்குநர்கள் :

1. திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
   ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்.
2. திரு. ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.
   ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர்.

பதிப்பாளர் : திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ.

ஆசிரியர் : திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்

சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

REGD. No. M. 7277

© தமிழ் நாடு அரசு, 1969

Stanes

தைப் பட்டத்தில் அமோக விளைச்சலும், பெருகிய லாபமும் பெற

கோல்டு ஸீட் (GOLD SEED) வீரிய விதைகள்

1. வீரிய ஒட்டுச் சோளம் CSH 1
2. வீரிய ஒட்டுக் கம்பு HB 1
3. வீரிய ஒட்டு மக்காச் சோளம் - டெக்கான் & கங்கா-ஸ்டார்ச்

விதை உற்பத்தியாளர்கள் :

CSC
COIMBATORE SEEDS CORPORATION
Gold Seed

தந்தி: " கோல்டு ஸீட் " போன் : 30442

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர் அஞ்சல், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விவரங்களுக்கும் :

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்,
(உர இலாகா), தபால் பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18

(அல்லது)

ஸ்டேன்ஸ் உரத் தொழிற்சாலைகள் :

வளவனூர், விழுப்புரம், போன்-25	துடியலூர், போன் : 25385 CBE	ஆவணியாபுரம், மதுரை, போன் : 5533	தச்சநல்லூர் திருநெல்வேலி, போன் : 1125

குறிப்பு : மக்காச்சோள விதைகள் இருப்பு தீர்ந்து, வருகிற பிப்ரவரி-மார்ச்சில் விநியோகத்துக்கு வரும். சோளம் (CSH-1) கம்பு (HB-1) இருப்பு விரைவில் குறைந்து வருவதால், தேவைக்கு உடனே எழுதவும்.

சீரணி



கிழக்கு ஜெர்மனியில் உள்ள ஹாலே நகர மேயர் அவர்கள் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்களைக் கோட்டையில் சந்தித்து உரையாடினர்.

சீரணி

(கிராம நலம்)

கதிர் 14] சூலை 1969 [நெல் 10



வன வள இதழ்

தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி &
உள்ளாட்சித் துறைத் திங்கள் இதழ்



உங்கள்

தொழில் வளர

வணிகம் ஓங்க

'சீரணி'யில்

விளம்பரம் செய்வீர்!

"சீரணி" விளம்பரக் கட்டண விவரம்

	அவ்வப்போது வெளியிடப்பெறும் விளம்பரங்களுக்கு (1) ஒவ்வோர் இதழுக்கும் ரூ.	குத்தகையாக ஒரே இட அளவிற்கு [குறைந்தது 12 விளம்பரங்கள்] (2) ஒவ்வோர் இதழுக்கும் ரூ.
இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)		
முழுப் பக்கம்	420	315
அரைப் பக்கம்	215	165
நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)		
முழுப் பக்கம்	450	325
அரைப் பக்கம்	230	170
உள் பக்கம்		
முழுப் பக்கம்	400	300
அரைப் பக்கம்	210	160

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்

1.	நம்மை வாழவைக்கும் மரங்களை நாம் வாழ வைக்க வேண்டாமா?	4
2.	கல்வி உலகிற்கோர் அறைகூவல்	6
3.	எழுந்திடுவீர்! செயல்படுவீர்!	9
4.	தொண்டுள்ளம், கடமையுணர்வு, கொள்கைப்பற்று	10
5.	மாயூரத்தில் மகசூல் பெருக்கு விழா	13
6.	குடும்ப ரகசியம்	17
7.	வள்ளுவர் வழியில் ஊருக்கொருவர்	23
8.	மூன்று புதிய நெல் வகைகள்	27
9.	நல்ல கல்வி	30
10.	கிராம நலக் காவலர்	33
11.	சீரணி	37
12.	குன்று உழைப்பிற்கு அழியா நினைவு	40
13.	காந்தி நூற்றுண்டு	43
14.	தமிழே பயிற்சி மொழி: ஏன்?	46
15.	மாதங்கி	49
16.	சக்கரம்	55
17.	கன்று பிறந்ததும்...	58
18.	வன வளம்	59
19.	அன்பின் பரிசு	67
20.	பரிசு ஏன் கிடைக்காது?	73
21.	தாவர வளர்ச்சியில் பயிருணவின் பங்கு	75
22.	வாழவைத்த பரிசு!	78
23.	பாலையில் பசுமை	81
24.	ஊராட்சி அரசிதழ்	86



நம்மை வாழவைக்கும் மரங்களை

மரங்களும் செடி கொடிகளும் அழிக்கப்பட்டால் மனித குலம் உயிர்வாழ முடியாது என்பதை நீங்கள் அறிவீர்களா? நாம் உயிர் வாழ உயிர்வளியை (பிராண வாயுவை) உட்கொள்ள வேண்டும் இந்த உயிர்வளி தீர்வின்றிக் காற்று மண்டலத்தில் இருப்பது எவ்வாறு என்பதை நீங்கள் உணரவேண்டும்.

மனிதர்களும் மற்ற உயிரினங்களும் உயிர் வளியை உட்கொண்டு கரி வளியை (கரியமில வாயுவை) வெளிவிடுகின்றன. மரம், செடி, கொடிகளோ கரிவளியை உட்கொண்டு உயிர் வளியை வெளிவிடுகின்றன. கோடிக் கணக்கான மனிதர்களும் உயிரினங்களும் உட்கொள்ள வேண்டிய உயிர் வளி, உலகிலுள்ள மரம், செடி, கொடிகள் வெளிவிடுவதனால்தான் காற்று வெளியில் என்றும் ஒரே நிலை உள்ளதாக்கப்படுகிறது. எனவே நாம் உயிர் வாழ்வதற்குக் காரணமாகத் தாவரங்கள் இருப்பதை நாம் அறியவேண்டும். மேலும் நமக்கு நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ உணவளிப்பதும் மரம், செடி, கொடிகளேயாம். இவ்வாறாக உயிர்க்குலத்தை வாழவைப்பது இயற்கைப் பெருவளமே! இப் பெருவளம் குறைய, அழிய இடமளிப்பது நன்றி மறக்கும் செயலாகும். நம்மை வாழவைக்கும் மரம், செடி, கொடிகளை நாம் வாழவைக்க வேண்டாமா?

காடுகள் நமக்கு மேலும் பலவகைகளிலும் பயனளிக்கின்றன. எரிபொருளாகிய விறகை அளிக்கிறது. நாகரிக உலகில் தாள் (Paper) மிக முக்கியத்துவம் வாய்ந்தது. மரத்திலிருந்து உண்டாக்கப்படும் கூழ், தாள் செய்யப் பயன்படுகின்றது. நாள்தோறும் நாம் பயன்படுத்தும் புதுமைப் பொருள்கள் பல, காடுகளிலிருந்து கிடைப்பவையே! அவை காடுபடு பொருள்களிலிருந்து உண்டாக்கப்பட்டவை என்பதை நம்பக்கூட முடியாத அளவுக்கு விஞ்ஞானிகள் அவற்றை நமக்குச் செய்து தருகின்றனர். வழவழப்புத்தாள் (செலபோன்), செயற்கைத்தோல், மர இழைப்பட்டு (ரயான்), படச் சுருள் (பிலிம்), சாயவகைகள் போன்றவை அவ்வகையைச் சார்ந்தவை.

நாம் வாழத் தேவையான காற்றைக் கொடுத்து, வணிகத்துக்குத் தேவையான பொருள்களை ஈவதோடு வேறுபல தொடர்புகளையும் காடுகள் நம்மிடத்தே கொண்டுள்ளன. காடுகள் வெப்பமான நாட்களில் குளிர்ச்சியைத் தருகின்றன. மழை பெய்வதை மிகுதிப் படுத்துகின்றன. பெருகி வரும் காட்டாற்று வெள்ளங்களைக் கட்டுப்படுத்துகின்றன. காட்டு நிலம் மற்ற நிலங்களைவிடத் தண்ணீரை மிகுதியாக உறிஞ்சிக் கொள்ளும். ஆற்றுப் போக்கில் காடுகள் மிகுதியாக, மிகுதியாக, வெள்ள அழிப்புக் குறைந்துகொண்டே போகும்.

இன்று நாம் மின்சக்தி உலகில் வாழ்ந்து வருகிறோம். மின்சாரம் காட்டுடன் தொடர்பு கொண்டுள்ளதை நாம் நன்கறிவோம். மின்சாரம் உண்டாக்கத் தேவையான நீர்வீழ்ச்சிகளுக்குக் காரணமான ஊற்றுக்களை உண்டாக்கித் தருபவை காடுகளே! காடுகள் மண் அரிப்பைத் தடுக்கின்றன. மண் அரிப்பைத் தடுப்பது இன்றையப் பெருங் கேள்விகளில் ஒன்றாகும். வனவிலங்குகள் வாழ்ந்து வரக் காடுகள் பெரிதும் தேவைப்படுகின்றன. இவ்வாறாக வாழ்க்கையில் நல்லன எல்லாவற்றோடும் காடுகள் இணைந்துள்ளன. அவற்றை வளர்ப்பது நம் வாழ்வை வளப்படுத்திக் கொள்வதேயாகும்!

நாம் வாழவைக்க வேண்டாமா?

கல்வி உலகிற்கோர் அறைகூவல்

மனிதன் மனித வடிவத்திலேயே பிறக்கிறான். ஆனால், பின்னே மனிதனாக வளர்கிறான். மனிதனை முழுநிறை மனிதனாக்குவதில் கல்வியே முக்கியமான பாத்திரத்தை வகிக்கிறது. கல்வி, மனிதனுக்குக் காற்றைப் போல இன்றியமையாத பொருள். உடல் உயிர்க் கூட்டுக்குக் காற்றே களம். உயிர், ஒழுக்கத்திற் சிறக்கக் கல்வியே களம்.

கல்வியென்பது உயிரிடத்தில் ஒளிந்து கிடக்கும் அறிவை-ஆற்றலை வெளிப்படுத்துவதாகும். அந்த அறிவிலும் ஆற்றலிலும் இயற்கையில் காணப்பெறும் குறைகளை நீக்கி நிறைவு செய்வதுமாகும். கல்வி மனிதனை அறிவுடையவனாக்கி முழு மனிதனாக்கும் சக்தியுடையது. அத்தகைய சாதனைகளைச் செய்யும் ஒன்றுக்கே கல்வி என்று பெயர். இன்றோ, கல்வி இத்தகு நலன்கள் செறிந்ததாக இல்லை. இன்றையக் கல்வி சில செய்திகள் தெரிந்துகொள்ளவே பயன்படுகிறது; அல்லது மூளையில் சிலவற்றை ஏற்றித் திணித்துச் சந்தர்ப்பம் வரும்பொழுது பெருமையாக ஒப்பித்துக் காட்டப் பயன்படுகிறது. இன்றையக் கல்வி அறிவுப்புலனுக்கு ஆற்றல் தருவதாக இல்லை. கல்வியின் பயனாகிய அறிவு நம்முடைய சமுதாயத்தில் வளரவில்லை. நிறையப் படித்த பலரைக் காண்கிறோம். ஆனால், அவர்களிடத்தில் அறிவு என்பது அரைக் காசுக்குக் கூட இல்லை என்பது வெளிப்படை.

கல்வி பற்றித் திருக்குறள் தெளிவுறப் பேசுகிறது.

''கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என்ற திருக்குறள் கல்வியின் தத்துவத்தை மிகத் தெளிவாக

எடுத்துக் கூறுகிறது. ஆனால் இந்தத் திருக்குறளுக்கு ஏற்றவாறு நம்முடைய சிந்தனைப் போக்கு வளரவில்லை. கல்வி கற்பதற்குப் பயனுடைய நூல்கள் தேவை. சிறந்த நூல்கள் உயிர்க்கு மருந்தாகவும் உணவாகவும் பயன்படும். நூல்கள் உயிர்க்கு மருந்து என்று குறிப்பிடுவது ஆன்றோர் வழக்கு. கோணல் நீக்கி நேர் நிறுத்துவது நல்ல நூல் என்பது தமிழ்க் கருத்து. நம்முடைய மனக்குற்றங்களை நீக்குதற்குரிய நூல்களாகத் தேர்ந்தெடுத்துக் கற்க வேண்டும். அந்தக் குற்றங்கள் நீங்குகிற வரையில் கற்கவேண்டும். இந்த அடிப்படையில் நூல்களைப் பொறுக்கியெடுக்கும் பண்பு வளரவில்லை. மாறாக உள்ள நோயினைப் பெருக்கிச் சீரழிக்கும் நூல்களே மலிகின்றன. அவற்றை வாங்கிப் பழகின சுவைப் புலனுக்குத் தீனிதந்து, மாறுபட்டு நின்று வஞ்சனை செய்யும் வஞ்சப் புலனைந்துக்கும் இரைபோட்டு அழியத் துணை செய்யும் நூல்களின் பெருக்கம் அம்மம்ம, கொடுமை!

பயில்வதைவிடப் பயிலுதற்குரிய நூலைத் தேர்ந்தெடுப்பதிலேயே அதிக கவனம் தேவை. அதிலேயே வாழ்க்கையின் வெற்றி அமைந்து கிடக்கிறது. நூலாசிரியனாதல் எளிய ஒன்றன்று. அதிலும், வாழ்க்கைக்கு வடிவம் தந்து, வலிவும் பொலிவும் தரத்தக்க நூலாசிரியனாதல் அருமையில் ஆகக் கூடிய முயற்சி. நூலைவிட நூலாசிரியன் உயர்ந்து விளங்கவேண்டும். சித்தையில் சிறந்த தெளிவை, வாழ்க்கையென்ற ஏட்டில், சாதனையென்ற எழுதுகோலால், உணர்வு என்ற மையில் நனைத்து எழுதுபவனாக இருக்க வேண்டும். இதற்குப் பிறகே புறவெளிப்பாடாகிய நூல் தோன்ற வேண்டும். இங்ஙனம், தோன்றும் நூல்கள் மக்கட் சமுதாயத்திற்கு ஏணியெனவும் தோணியெனவும் பயன்படும். ஆதலால், ''கசடறக் கற்பவை கற்க'' என்ற வள்ளுவத்தின் ஆணை மீற முடியாத ஒன்று.

கல்வி, தொடர்ந்து பயிலத்தக்க ஒன்று. அதற்குக் கால எல்லை கிடையாது. இப்பொழுதோ பலர் படித்து முடித்துவிட்டதாகவே கூறுகிறார்கள். மனிதன் சாகிற வரையில் கற்க வேண்டும். இந்த அடிப்படையில்தான் ''சாந்துணையும் கற்க வேண்டும்'' என்று வள்ளுவம் ஆணையிடுகிறது. இன்று நம்முடைய தமிழக அரசு கல்வியில் போதிய ஆர்வம் காட்டுவது பாராட்டத் தக்கதேயாகும். ஆனாலும், கல்வியின் தரம் உயர-மக்கள் மன்றத்தில் அறிவு வீச்சு ஏற்பட-மேலும் பல பணிகளைச் செய்ய வேண்டும். இன்றைய ஆரம்பக் கல்வி அறிவுக் கிளர்ச்சி செய்யத் தக்கதாக இல்லை என்பது பெரிய உண்மை. ஆரம்ப ஆசிரியர்கள் சிறந்த அறிவுத்திறன் உடையவர்களாகவும், உளவியல் வல்லுநர்களாகவும், வாழ்க்கையில் சிறந்தவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியம். இன்றைய ஆரம்ப ஆசிரியர்களை மிகக் குறைந்த தரமுடையவர்களாகப் பார்த்து எடுக்கிறோம். சிந்திக்கும் திறன் பெற்ற வயதுவந்த காலத்தில் சிறந்த ஆசிரியர்களையும், சிந்திக்கும் திறனையே கற்றுத்தர வேண்டிய அறியாப் பருவத்தில் தரங் குறைந்த ஆசிரியர்களையும் வழங்கும் முறை நன்றன்று. குழந்தைப் பருவத்தில் வண்ணமும் வடிவும் பெறாது பசுமையென நிற்கும் உள்ளத்தோடு பழகிச் சிந்திக்கக் கற்றுக் கொடுத்து-சிந்திக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி-வண்ணமும் வடிவமும் கொடுக்கக் கூடிய கைதேர்ந்த பேராசிரியர்கள் தேவை. அப்பொழுது தான் உறங்கிக் கிடக்கும் அறிவொளி வெளிப்படும்.

கல்விக் கூடங்களுக்கு மிகச் சிறந்த நூலகங்கள் தேவை. நூலகத்திற் பயிலுதலையும், பாடத் திட்டத்தோடு சேர்க்கவேண்டும். எல்லா பள்ளிகளிலும் அறிவியல், ஆய்வுக் கூடங்கள் இருக்கவேண்டும். அறிவியல் துறையில் போதிய அறிவைப் பெற ஓயாது உழைக்க வேண்டும்.

எல்லாப் பள்ளிகளும், கல்லூரிகளும் தங்கிப் படிக்கும் வகையினதாகவே அமைய வேண்டும். வளமற்றோர் அரசுப் பொறுப்பிலும் வளமுடையோர் சொந்தப் பொறுப்பிலும் தங்கிப் பயிலவேண்டும். இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பல பள்ளிகள் அமைவதைவிட மையப்படுத்திய-எண்ணிக்கைக்கு உட்பட்ட - பள்ளிகளே நலம் தருவன. எண்ணிக்கையில் பள்ளிகள் அதிகமாகும்போது போதுமான மாணவர்கள் இல்லா

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மல் வீண் செலவும், சில்லறைச் செலவுகளும் அதிகமாக ஆகிறது. பள்ளிகளை மையப்படுத்தி, எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும்பொழுது வீண் விரயத்தைத் தவிர்க்க முடியும். அதோடு, நூலகம், அறிவியற் கூடம் ஆகியவைகளைச் சிறந்த முறையில் அமைத்துத் தரமுடியும், இங்ஙனம் பள்ளிகளை மையப்படுத்துவதில் வேறொரு சிறந்த இலாபமும் உண்டு. அதாவது தற்போதைய பள்ளி அமைப்பு முறையில் மாணவர்கள் தங்களையொத்த திறனுடைய மாணவரிடத்திலேயே பழகமுடிகிறது. பள்ளிகளை மையப்படுத்தும் பொழுது வேறு பிற பகுதி மாணவர்களிடமும் பழகும் வாய்ப்பு ஏற்படுவதால் கொண்டும் கொடுத்தும் அறிவு, ஆற்றல்களைப் பரிமாறிக் கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

பொதுவாக, நம்முடைய நாடு இரண்டு தலைமுறைகளுக்கு மேலாக அரசியலடிமைப்பட்டுக் கிடந்த நாடாகும். ஒரு நாடு அரசியல் அடிமைப் படுவதற்கு ஏதுவாக வேண்டுமானால் அதற்கு முன்பே பல நூறு ஆண்டுகள் அறிவிலும் அது முடங்கி, முடம்பட்டுப் போயிருந்தால் தான் அரசியல் அடிமைத்தனம் உருவாகும். இந்த வகையில் ஆழச் சிந்தித்தால் நம்முடைய நாடு கடந்த பல நூறு ஆண்டுகளாகச் சிந்தனையிலும், செயலிலும் முடக்குவாதம் கொண்டு அழிந்திருப்பது தெரிய வரும். திருவள்ளுவர், திருநாவுக்கரசர் போன்ற வைத்தியர்களாலும் இந்த முடக்குவாதத்தை அகற்ற முடியவில்லையே என்ற உண்மையை அறியும்பொழுது நமக்கு இரக்கமே மேலிடுகிறது. ஆதலால், கல்வி உலகத்தில் மிகவும் விழிப்புடனும், தீவிர உணர்ச்சியுடனும் அணுகினாலேயே இந்தத் தலைமுறையிலாவது வரலாற்றை மாற்ற முடியும். பொதுவாகக் கல்வியில் இன்று சுவைத்திறன் குறைந்திருக்கிறது. நலிந்து கிடக்கும் உள்ளத்திற்கு ஊட்டம் தரக்கூடிய சக்தி, நம்முடைய கல்வி உலகுக்கு இன்னும் வரவில்லை யென்பது என்னவோ உண்மை. கல்வி, சுவையுடையதாக மாறி, அறிவாக்கத்தினைத் தந்து நம்மைப் பீடித்துள்ள மூடப் பழக்க வழக்கங்களும் துன்பமும் தொலைந்து, வலிவும் பொலிவும், எழுச்சியும் ஏற்றமும், ஆள்வினையும் ஆக்கமும், அன்பும் அறனும் நிறைந்த சிறந்ததொரு வாழ்க்கை உருவாக வேண்டும். இதைச் சாதிக்க முடியுமா என்பது இன்றையக் கல்வி உலகத்திற்கு ஓர் அறைகூவல்.

காக்கை கரைய வில்லையா? கன்று கதற வில்லையா? குயில் கூவ வில்லையா? ஆந்தை அலற வில்லையா? இவற்றிடையே மொழியில்லை என்பது உண்மைதான். ஆனல் அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமல் தவிக்கிறோமோ? இல்லையே! எனவே, மொழியோடு, மொழியை ஒட்டிய நாகரிகம் இல்லையானல் மொழியேகூட வேண்டுவதில்லை என்று கூறுவதில் ஏதும் தவறில்லை. மொழி ஊற்றுக்கண் போன்றது; மனித சமுதாயத்தின் - சமுதாய நாகரிகத்தின் ஊற்றுக் கண். அந்த ஊற்றுக் கண் அடைபட்டுவிட்டால் மனித சமுதாயம் காட்டுமிராண்டியாகிவிடும்; செயலற்றதாகிவிடும்; வேட்கை தணிக்கும் நீரில்லா ஊருணியாகிவிடும்.

— குன்றக்குடி அடிகளார்

எழுந்திடுவீர்! செயல் படுவீர்!

'சுமதி' ராஜேந்திரன்

வேங்கைப்பூ எழில்காட்டும் ; பெண்டிர் தம்மின்
விரல்காட்டும் காந்தட்பூ ; நீர்த்தேக் கத்தில்
ஆங்காங்கே சுனைக்குவளை; இயற்கைத் தாயின்
ஆட்சியிலே எத்திசையும் பசுமைக் காடாம்!
மூங்கில், அகில் சந்தனம், தேக்(கு) அசோகம், நாகம்,
முடியாலே விண்தடவு வேங்கை யாவும்
ஓங்கிவளர்ந் திருப்பதனல் குறிஞ்சி யில்தான்
உடல்நடுக்கும் குளிரிருக்கும் என்னல் கண்டோம்!

வில்லைப்போய் முகத்தினிலே வளைத்து வைத்து,
விழியம்பைக் கீழேவைத் துயிரை வாங்கும்
வல்லியிடை மெல்லியலார் சிரிப்பைக் காட்டும்
வெண்முல்லை சிரிக்கின்ற மருதத் தில்தான்
சில்லென்று மண்ணிருக்கும்! எதனு லென்றல்,
சீர்த்திமிகு கார்காலம் நிலைப்ப தாலே!
நில்லைய்யா, எதற்கய்யா பழசை யெல்லாம்
நீர்விவரிக் கின்றீர் என் போரே, கேண்மின்!

அடிநகர்த்தா தாடுகின்ற மரவ னப்பும்,
அசைந்தாடும் கொடிச்சிறப்பும், பசுமை மிக்க
செடித்தலையில் பூச்சிரிப்பும் இருந்தா லன்றிச்
செவ்வானம் இருக்காது முகில்மொய்க் காது,
அடிக்கடிவான் வழங்காது மழையை என்றர்,
அரியபெரும் விஞ்ஞான நுணுக்கம் கற்றர்!
இடிச்சத்தம் மழைஈரம் வேண்டும் என்றல்,
இந்நாட்டில் காட்டுவளம் மிகுதல் வேண்டும்!

ஒரிசாவில், கேரளத்தில் இன்றி ருக்கும்
ஓங்குபுகழ் காட்டுவளத் தாலே, இங்கே
அரிதான மழைஅங்கே தொடர்க தைபோல்
அன்றடம் தொடர்கிறது! தண்ணீர்ப் பஞ்சம்
பெரிதாயிற் றிங்கென்றல், ராஜஸ் தானைப்
போல்இங்கும் பசுமைஅற்ற தால்தான் என்பேன்!
தெரியாத வித்தையல்ல மரம்உண் டாக்கல்?
தெரிந்தும்அதைச் செய்யாமல் காய்தல் நன்றே?

என்னருமைத் தமிழ்நாட்டீர்! இனிமே லேனும்
எல்லாரும் மரம்நடுவீர்; பாது காப்பீர்!
பொன்னன இந்நாட்டைப் பாலை யாகப்
போகவிட லாமாநாம்? சிந்திப் பீர்நீர்!
என்றைக்கும் மழையிருக்க, உயிரி னத்தின்
இன்னல்அற, நாட்டுவளம் செழிப்புற் றேங்க
இன்றைக்கே காட்டுவளம் தழைக்கச் செய்ய
எழுந்திடுவீர்! செயல்படுவீ! வாரீர், வாரீர்!

தொண்டுள்ளம்

கடமை உணர்வு

கொள்கைப் பற்று

திரு. மு. சண்முகம்

1969 ஜூலை 26 : தமிழகத்தின் ஆளுங்கட்சியான முன்னேற்றக் கழகத்தின் உயர்பதவியான பொதுச்செயலாளர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர் யார் என்பதில் நாட்டில் கிளப்பப்பட்ட வினாவுக்குக் கழகத் தலைவர்கள் தங்களது அரிய முயற்சியால் முடிவு கண்ட நேரம். அந்த மகிழ்ச்சியான நேரத்தில் தன்னுடைய பூரிப்பை வெளிப்படுத்திக் கழகத் தோழர்களுக்குச் சில பல சொல்லமுயன்றார் கழகத்தின் முதுபெரும் தலைவரும் சட்டமன்ற மேலவை உறுப்பினருமான திரு. சி.பி. சிற்றரசு அவர்கள். தமக்கே உரிய வெண்கலக் குரலில் வேடிக்கையும் விவகாரமும் நிரம்ப அவர் பேச்சைத் துவக்கினார்.

''இந்த நாள் நமக்கெல்லாம் பெரிய மகிழ்ச்சிக்குரிய நாள். அதாவது நமது வீடுகளில் ஆண் குழந்தை பிறந்தால், எப்படி மகிழ்ச்சியடைவோமோ அப்படி மகிழ்ச்சியடையக் கூடிய நாள்...''

திரு. சி. பி. சி. அவர்கள் தமது வார்த்தையை முடிக்கவில்லை. மண்டபத்தின் மற்றொரு கோடியிலிருந்து சன்னமான குரல் ஒன்று அழுத்தமாகக் கேட்டது.

''ஏன்? பெண் குழந்தை பிறந்தால் நமக்கெல்லாம் மகிழ்ச்சி பிறக்காதா? மண்டபத்தில் கூடியிருந்த நூற்றுக் கணக்கானவர்களும், முதலமைச்சர் உட்பட எல்லா அமைச்சர்களும் குபீரெனச் சிரித்துவிட்டனர். திரு. சி. பி. சி. அவர்கள் தொடர்ந்தார்.

''திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் இங்கிருக்கிறார்கள் என்பதை நான் மறந்துவிட்டேன்...... பெண் குழந்தை பிறந்தாலும் நமக்கு மகிழ்ச்சியே...''

தன் காலமெல்லாம் பெண்ணுரிமை, பெண்கல்வி, பெண்கள் சமுதாய முன்னேற்றம் என்றே பேசிப் பேசி தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சொல் வீச்சையும் கல்வீச்சையும்பொருட்படுத்தாமல் கொள்கைப் பரப்புரை செய்து சிறந்த முதியவர் சி. பி. சி. போன்றவர்களே கூட, மாண்புமிகு அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்களுக்கு முன்னால் விளையாட்டாகவேனும் 'பெண் குழந்தை'களைக் குறைத்துப் பேசத் துணிவதில்லை என்பதை நினைத்துப்பார்த்தால் இந் நாட்டுப் பெண் குலத்திற்குத் தி. மு. கழகத்திலும், அரசிலும் எத்தகைய முதன்மையிடம், பாதுகாப்பு, அரண் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

ஆண்கள்கூட அஞ்சிய தி.மு. கழகக் கொள்கைப் பரப்பு இயக்கத்தில் அந்தக்காலத்தில், திருமதி சத்தியவாணிமுத்து பெரும் உறுப்பாக இருந்து பணியாற்றிய பெண்மணி ஆவார். ''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?'' என்று கேள்வி கேட்டுக் கொண்டிருந்த நாட்களில், திருமதி

சத்தியவாணிமுத்து படித்தது மட்டுமன்று; சமுதாயச் சீர்த்திருத்தத் துறையிலும், அரசியல் இயக்கங்களிலும் சென்னை நகரின் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தார்.

சமுதாயத் துறையில் கேடுகளாக இருந்தவைகளைப் பட்டியல் போட்டு ஒழிக்கத் துடித்தவர்கள் அத்தனைப் பேரும் பெண்குலத்தின் அடிமைத் தளையை அகற்றுவதற்கு அவசியமோ அவசரமோ காண்பிக்காத காலம் அது. புராண இதிகாசங்களை ஒப்புக் கொண்டு அதன் அடிப்படையிலேயே மறுமலர்ச்சி காணத் துடித்த முன்னேற்றவாதிகள் இடையிலேதான் முகிலைக் கிழித்து வெளிவரும் முழு மதியைப்போல, பெரியார் ஈ. வெ. ரா. உலா வரத் தொடங்கினார். அதே நேரத்தில் சாதிக் கொடுமைகளையும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாய இழிநிலைமைகளையும் ஒரே மூச்சில் துடைத்து எறிந்துவிடும் ஆவேசத்தோடு வடக்கில் டாக்டர் அம்பேத்கார் புறப்பட்டார். தெற்கில் பெரியார் ஈ. வெ. ரா. வுக்கும் வடக்கில் டாக்டர் அம்பேத்காருக்கும் இருந்த வேறுபாடு ஒன்றே ஒன்றுதான்.

டாக்டர் அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களின் புறவாழ்க்கையின் மேம்பாட்டுக்குப் பாடுபட்டார். பெரியாரும் அறிஞர் அண்ணா அவர்களும் தாழ்த்தப்பட்ட மக்களின் அகவாழ்வின் மறுமலர்ச்சிக்கு ஓயாது உழைத்தார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் சமுதாயத்தைத் தனியாகப் பிரித்துத் தனி அரசியல் முறைபற்றி அம்பேத்கார் பேசிக்கொண்டிருந்த நேரத்தில், மொத்தச் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயம் ஒரு பெரிய முக்கிய அங்கமாகுமே தவிர, அதனைத் தனிமைப் படுத்திப் பேசுவதோ பகுத்து வைத்துப் பார்ப்பதோ நியாயம் அல்ல என்பது திராவிட இயக்கங் கண்ட தலைவர்களின் வாதமாக இருந்தது.

வடக்கில் இந்துக்கள் எனவும் முஸ்லீம்கள் எனவும் அந்தக் காலத்தில் பாகுபடுத்தி அரசியல் இயக்கங்கள் நடத்தப்பட்டதுபோல், தாழ்த்தப்பட்ட மக்களின் சமுதாயத்தைத் திரட்டி மூன்றாவது அணியை உருவாக்க முயன்றார் அம்பேத்கார்.

ஆனால், அது தெற்கில் அவ்வளவாக வேரூன்றாமல் தாழ்த்தப்பட்ட மக்கள், மொத்த சமுதாயத்தின் மூத்த உறுப்பினர்களே என்பதை நிலைநிறுத்த, முதலில் பெரியார் அவர்களுக்கும் பிறகு அறிஞர் அண்ணா அவர்களுக்கும் பெருந்துணையாக இருந்தவர்களில் பெருமதிப்புக் குரியவர் அமைச்சர் சத்தியவாணி முத்து அம்மையார் ஆவார். பெண் சமுதாய முன்னேற்றப் பணிகளில் காந்தியடிகளுக்குக் கவிக்குயில் சரோஜினி எப்படி உறுதுணையாக நின்றாரோ, அப்படி அறிஞர் அண்ணா அவர்களுக்குத் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் துணை நின்றார். பெண்கள் சமுதாயத் தொடர்பான எவற்றிற்கும், ''எதற்கும் சத்தியவாணிமுத்து அம்மையார் வரட்டும்'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொல்வது சாதாரணமாகக் கழகத் தோழர்களுக்குப் பழக்கமானதாகும்.

பெண்கள் சமுதாயம், தாழ்த்தப்பட்ட சமூகம் ஆகிய இரண்டுக்கும் சார்பாளராகக் கழகத்தில் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ஆற்றிய தொண்டுகள் ஏராளம். கழகத்திலும், கழக அரசிலும் அவர் இன்று பெற்றுள்ள இடங்கள் நெடுங்கால உழைப்பிற்குப் பிறகு கிடைத்த சிறப்புக்களாகும்; நெடிய அனுபவத்திற்குப் பிறகு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும்.

பெண்ணுரிமை, தாழ்த்தப்பட்டோர் நலன் ஆகிய இரண்டுக்கும் எங்காவது தீங்கோ தடங்கலோ ஏற்படுமானால், அந்த இடத்தில் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களின் ஆவேசக் கனலைக் காணலாம். தம் மினத்துக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்துப் போர்க் கொடி உயர்த்திய பெண்குலம், இன்னமும் ஓயவில்லை என்பதை அம்மையார் அவர்களிடம் தெளிவாகக் காணலாம். கழகத்தின் மேல் மட்ட ஆலோசனைக் கூட்டமானாலும் சரி, அமைச்சரவைக் கூட்டமானாலும் சரி, சட்டமன்றக் கூட்டமானாலும் சரி, அம்மையாரின் 'போர்க்குரல்' தெளிவாகக் கேட்கும்.

கழக அமைச்சரவை சாதித்த சாதனைகளில் சுய மரியாதைத் திரு

மணச் சட்டம் மிக முக்கியமான ஒன்று. கலப்பு மணம் செய்து கொள்வோருக்கு உற்சாகமும் பாதுகாப்புணர்வும் அளிக்கக்கூடிய வகையில்பதக்கம் வழங்குவது மற்றொன்று. இவ்விரண்டிலும் அம்மையாரின் பங்கு கணிசமான அளவு உண்டு. அம்மையார் சுயமரியாதைத் திருமணம் புரிந்து கொண்டவர். புத்தமதத்தைத் தழுவிய பெற்றோர்க்குப் பிறந்து இந்து மதத்தவர் எனப் பிறரால் சொல்லப்பட்ட தோழர் முத்து அவர்களை மணஞ்செய்து கொண்டவர்.

ஆக, இரண்டு சட்டங்களுமே அம்மையார் வாழ்வோடு தொடர்பு கொண்டவை. அம்மையாரைப்பற்றி நினைக்கும் கழகத் தோழர் ஒவ்வொருவரும் அவருடைய துணைவர் திரு. முத்து அவர்களை நினைவு கொள்ளாதிருக்க முடியாது. காருக்கும் டாக்சிக்கும் செலவழிக்க முடியாத அந்த நாட்களில், பழைய சைக்கிள் வண்டி ஒன்றைக் கையில் பிடித்துத் தள்ளிக் கொண்டே சென்னை நகரத் தெருக்களில் பொதுத் தொண்டு ஆற்றிய அருந்தொண்டர் அவர். வெறுமனே தள்ளிக் கொண்டு போவதற்குச் சைக்கிள் எதற்கு என்றுகூடக் கேட்பார்கள். ஆனாலும், ஜான்சன் கையில் குடையைப்போல், தோழர் முத்துவின் கரத்தில் எப்போதும் சைக்கிள் வண்டி உருளும்.

ஓய்வு நேரத்தில் பொதுத் தொண்டாற்றப் புகுந்தவரல்ல, அம்மையார். தன் இனத்துக்கும் தன் குலத்துக்கும் ஆண்டாண்டு காலமாக இழைக்கப்பட்டுவரும் சமுதாய அநீதிகளைக் கண்டு பொறாமல் பொங்கி எழுந்து அண்ணாவின் அணியில் சேர்ந்தவர் அவர். இன்றைக்கு அமைச்சராக வீற்றிருக்கும் நிலைமையைக் கனவுகூடக் காணமுடியாத அந்த நாட்களில், காடு மேடுகளிலும், வயல் வரப்புகளிலும் பணியாற்றிப் புடம் போட்ட தொண்டர் அவர். அவருக்குள்ள ஒரே தடங்கல், தான் ஒரு பெண் என்பதை ஒருபோதும் மறவாமைதான். மற்றபடி மிகத் துணிச்சலான ஆண்களோடும் போட்டி போட்டுப் பணியாற்றும் ஆற்றல் படைத்தவர் அவர்.

நாட்டு மக்களில் சரிபாதிக்கு மேல் பெண்கள் என்பதாலோ, அல்லது கழகத்தின் சமுதாய சீர்திருத்தத் திட்டங்கள் பெண்களைத்தான் அதிகமாகச் சென்றடைய வேண்டும் என்பதாலோ, அறிஞர் அண்ணா அவர்கள் அம்மையார் அவர்களைக் கழகத்தின் 'கொள்கைப் பரப்புச் செயலாளராக' நியமித்தார். கழகத்தின் கொள்கைகளும் திட்டங்களும் பெண்களின் மனத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தன என்பது 1967 பொதுத் தேர்தலில் கழகத்திற்கு வாக்களித்தவர்களில் பெண்களே அதிகம் என்பதைப் பார்க்கும்போது தெரிந்தது.

கழகத்தில் கொள்கைப் பரப்புச் செயலாளராகச் சிறப்புறத் தொண்டாற்றியதைக் கண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் தமது அமைச்சரவையில், செய்தி — பிரச்சார இலாகாவை அம்மையாரிடம் ஒப்படைத்தார்.

உலகத் தமிழ் மாநாடு, படி அரிசித் திட்டம் ஆகியவைகட்கு மக்களிடையில் செய்யப்பட்ட விளம்பரம் அம்மையார் இலாகாவின் திறமைகளுக்குச் சான்றுகூறும். கலைஞர் கருணாநிதி அவர்கள் முதலமைச்சராகப் பதவி ஏற்ற உடன் முக்கிய இலாகாவான பொது சுகாதார இலாகாவை அம்மையாரிடம் ஒப்படைத்தார். அம்மையார் அவர்களே சில ஆண்டுகளுக்கு முன்னால், பெரும் நோய்வாய்ப்பட்டுச் சென்னை பெரிய மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றபோது மருத்துவமனை நிர்வாகத்தின் குறைபாடுகளையும், தேவைகளையும் வெளிப்படையாகத் தோழர்களிடம் விவாதித்திருக்கிறார். ஆகவே, கண்கூடாகக் கண்ட மருத்துவமனைகளின் நிர்வாகக் குறைபாடுகளைக் களைந்து, அனுபவ பூர்வமாக அறிந்த அவைகளின் தேவைகளை அமைச்சர் என்ற முறையில் சிறப்புற நிறைவு செய்தார்.

குடும்பத்தின் தாயாக, ஆளும் கட்சியான தி.மு. கழகத்தின் முன்னணித் தலைவராக, நிதானமாக ஆனால் உறுதியாக முன்னேறிவரும் பெண் குலத்தின் பிரதிநிதியாக, ஒடுக்கப்பட்ட ஒரு சமுதாயத்திற்கு உற்ற துணையாக, அருந்தொண்டாற்றும் அமைச்சராக அம்மையார் ஆற்றும் பணி போற்றக்கூடியது.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப் பெயர்பெற்ற தஞ்சை மாவட்டத்தில் மாயூரம் நகரம் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரி அன்னை தனது அழகிய கரங்களால் திரை விரித்துப் பொலிவூட்டும் பல ஊர்களில் மாயூரமும் ஒன்று. இயற்கை அழகினைச் செயற்கை அழகால் மேம்படுத்த முற்படுவதுபோல் ஆங்காங்கே தோரணங்களும் கொடிகளும் வரவேற்பு வளைவுகளும் கட்டப்பட்டிருந்தன. உழவுக்கும் தொழிலுக்கும் விழா எடுத்துப் பழக்கப்பட்ட தமிழினம் அன்றும் உழவுத் தொழில் சம்பந்தமான விழா ஒன்றினுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தது. நாவல் புனைந்த வேதநாயகம் பிள்ளை இலக்கிய உலகில் தோன்றிப்பெருமை சேர்த்தஊரான மாயூரம் அன்று புதியதோர் வரலாறு படைக்கும் எழிலோடு திகழ்ந்து கொண்டிருந்தது. கல்கி, தோன்றி இத் தமிழ் மண்ணுக்குப் பெருமை தேடித்தந்த மாயூரம், அன்று ஒரு விழா எடுத்து மேலும் ஒரு புகழ் மணியைத் தன் நெற்றியில் பதித்துக் கொள்ளக் காத்திருந்தது.

தமிழக அரசு மேற்கொண்டுள்ள தீவிர விவசாயத் திட்டத்தின்கீழ், திருந்திய விவசாய முறைகளைக் கையாண்டு, நெல், கோதுமை முதலான பயிர்களில் துரிதமாக அதிக விளைச்சலைப் பெற மத்திய அரசு 1071 வானொலிப் பெட்டிகளை அளித்துள்ளது. இவற்றைத் தீவிர விவசாயத் திட்டம் செயல்படும் தஞ்சை மாவட்ட ஊர்நலப் பணியாளர்களுக்கு 720 வானொலிப் பெட்டிகளும், திருச்சி மாவட்ட ஊர்நலப் பணியாளர்களுக்கு 300 வானொலிப் பெட்டிகளுமாக வழங்கத் திருச்சி வானொலி நிலையத்தாரால் சூலைத் திங்கள் 13ஆம் நாள் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிக்காகத்தான் மாயூரம் விழாக் கோலம் பூண்டது.

காலை 11-30 மணி. மாயூரத்தின் மையப்பகுதியில் எழிலோடு விளங்கும் கௌரி திரைப்பட அரங்கு மக்கள் வெள்ளத்தால் நிரம்பி வழிந்தது. விவசாயப் பெருங்குடி மக்களும், ஊராட்சித் துறை அலுவலர்களும், வேளாண்மைத் துறை அலுவலர்களும் ஆவலோடு காலையிலிருந்தே திரண்டிருந்தனர். அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையுடன் பண்டு சோழ மன்னர்கள் பவனி வந்த அதே இடத்தில் அன்று காட்சிக்கு எளியனும் கடுஞ்சொல் அல்லனும் என்ற முதுரைக்கு இலக்கணமாக, மக்கள் குரலே மகேசன் குரல் என்ற மறைந்த முதல்வர் பேரறிஞர் அண்ணாவின் அருளுரையை

நினைவுறுத்தும் வகையில், தஞ்சைத் தரணி பெற்றெடுத்த செஞ்சொற் கலைஞராம் தமிழக முதல்வர், மக்கள் வெள்ளம் புடைசூழ மன்றத்தில் ஏறி அமர்ந்தார்கள்.

காட்டையும் மேட்டையும் கழனிகளாக்கி நாட்டுக்கு நல்லுணவு அளித்து வரும் நல்லேர் உழவர் குடியில் தோன்றி, கரடு முரடான அறிவு படைத்த கள்ளமிலா உள்ளங்களைத் திருத்திப் பகுத்தறிவுக் கழனிகளாக்கிக் கல்வி எனும் நீரோடையைப் பாய்ச்சும் பணி செய்து, இன்று ஊராட்சித் துறையேற்றுச் சீராட்சி செய்து வரும் உள்ளுராட்சி அமைச்சரவர்கள் கலைஞர் அருகே அமர்ந்தார்கள். மற்றும் தஞ்சை மாவட்டச் செயலாளர் திரு. மன்னை நாராயணசாமி, மாயூரம் கிட்டப்பா, மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சி வானொலி நிலைய இயக்குநர், கிராம வளர்ச்சி நெறியாளர், மற்றேனைய அலுவலர் அனைவரும் அமர்ந்தனர்.

தமிழக முதல்வர் கலைஞர் தலைமையில் விழா ஆரம்பமாயிற்று. விழிகள் அனைத்தும் விழா மேடையையே நோக்கின. திருச்சி வானொலி நிலைய இயக்குநர் அவர்கள் திட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார்கள். மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், வேளாண்மைத் துறை இயக்குநர், திரு. மன்னை நாராயணசாமி, மற்றும் பலர் மாரிபோல் வாரி வளம் மிக்க கருத்துக்களை வழங்கினர்.

மாண்புமிகு அமைச்சர் முத்துசாமி அவர்களின் உரை குடியானவர்களின் குரலாக விளங்கிக் குழுமியிருந்தோரின் மனதுக்கு நிறைவு அளிக்கத்தக்கதாக அமைந்தது.

''இன்று நாட்டு மக்களுக்குத் தேவையான அடிப்படை அறிவையும் அவர்கள் வாழ்வதற்குத் தேவையான உணவையும் வழங்குகிற முயற்சியில் வெற்றி பெற்றால்தான் நாம் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற்றவர்களாக இருக்க முடியும். உலக நாடுகள் பலவற்றுள்ளும் தன்னிறைவு; ஆனால் இயற்கைச் செல்வங்கள் ஏராளமாக இருக்கும் இங்கோ எதிலும் குறை. ஒரு பக்கம் அறிவுப் பசி; மற்றொரு பக்கம் வயிற்றுப் பசி. இவைகளைப் போக்க மற்றவர்களுக்கு இருக்கும் பங்கைவிடக் கிராமங்களில் பணியாற்றும் ஆரம்ப ஆசிரியர்களுக்கும், ஊர்நலப் பணியார்களுக்கும் மிகுந்த பொறுப்பு உண்டு.''

''நாள்தோறும் நடக்கின்ற உண்மைகளை, விவசாயிகளுக்குப் பயன்படும் நவீன முறைகளை, அனுபவங்களை, நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறும் முறையை வானொலி மன்றங்கள் இன்றைக்குச் செய்து வருகின்றன. இஸ்ரேல் நாட்டில் இதற்கென ஒரு படை ஏற்படுத்தப்பட்டு அது நாள்தோறும் இத்தகைய கருத்துக்களை மட்டுமல்லாமல் நாட்டின் பழம் பெருமைகளையும் பாரம்பரியத்தையும் எடுத்துக் கூறும் பெரும் பொறுப்பினை ஏற்றுத் திறம்பட நடத்தி வருகிறது. இலங்கையிலே இதுபோன்ற இளைஞர் படைகள் செயல்பட்டுத் தரிசு நிலங்களை விளைநிலங்களாக மாற்றி வருகின்றன. இங்கு வானொலி மூலம் இது போன்ற கருத்துக்கள் வேளாண்மைத் துறைக்கு உகந்து கூறப்பட்டு வருகின்ற முறையை விரிவுபடுத்தும் வகையில் ஊர்நலப் பணியாளர்களுக்கு இப்போது வானொலிப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன.''

ஊர் நலப் பணியாளர்களுக்கு அமைச்சரவர்கள் விடுத்த உருக்கமான வேண்டுகோள் அனைவர் நெஞ்சங்களையும் தொட்டுத் தடவிச் சென்றது. ''வானொலிப் பெட்டிகள் இல்லாத ஊர்களில் ஊர்நலப் பணியாளர்கள், விவசாயச் செய்திகளை ஏந்திச் செல்லும் திருத்தொண்டர்களாக, தமிழக அரசின் தூதுவர்களாகச் சென்று கிராம மக்களுக்குப் பயனுள்ள முறைகளை எடுத்துக் கூறி அவர்களுக்கு ஆர்வம் ஏற்படுத்தத் தக்க வகையில் அவர்களோடு ஒன்றிப் பணியாற்ற வேண்டும். ஆக்கத் துறைகளில் ஈடுபட்டுள்ள நீங்கள் இந்நாட்டினை வளப்படுத்தத் தமிழக அரசு எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சிகளுக்கு உறுதுணையாக மெழுகுவர்த்தியைப் போன்று தியாக உணர்வோடு பணியாற்ற வேண்டும். சீரணித்தொண்டர்களையும் விவசாய ஆக்கப் பணிக்கு நீங்கள் தக்க முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அதே சமயத்தில் ஊர் நல ஊழியர்களுக்கு வசதிகளையும்

வாய்ப்பையும் இன்றைய அரசு ஏற்படுத்தித் தரும்.''

"வானொலியில் அறிஞர்கள் பலரின் கருத்துக்களை ஒலி பரப்புகிறீர்கள். அதுபோலவே அனுபவமிக்க கிராம விவசாயிகளையும் அழைத்து அவர்கள் கருத்துக்களைக் கூறச் செய்ய வேண்டும். கிராமத்திலே பணியாற்றுகின்ற ஊர் நல ஊழியர்களுக்கு மாதம் ஒருமுறை அல்லது இருமுறை வானொலியில் பேசக்கூடிய வாய்ப்பினைத் தரவேண்டும். குடும்ப நலத் திட்டத்தினைச் சீரிய வகையில் பரப்ப வேண்டும்.'' இவை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரைக் கடலில் கிடைத்த நல்முத்துக்கள்.

இறுதியாக முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய பேருரைகளை அனைவரும் கையொலி எழுப்பிய வண்ணம் ஏற்றனர். எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் குறிப்பிட்டதுபோல் வெளிநாடுகளில் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றங்களை மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளிலும் நாள்தோறும் உருவாகி வரும் புதுமைகளை அறிவிப்பதற்கு அவர்கள் வானொலியிலிருந்து முன்னேறி 'டெலிவிஷன்' வரை சென்றிருக்கிறார்கள். இன்று அமெரிக்காவிலும் ருசியாவிலும் பயன்படுத்தப்படுகின்ற வானொலிகள் சந்திர மண்டலத்திற்கு அருகாமையில் இருக்கும் செய்திகளை, புதுமைகளை நம்முடைய பூமிக்குத் தெரிவிக்கின்ற முன்னேற்றத்தைப் பெற்றிருக்கின்றன. நம்முடைய நாட்டிலோ வேளாண்மைத் துறைக்கு வானொலியைப் பயன்படுத்துவதிலாவது சரியான முன்னேற்றத்தைப் பெற்றிருக்கிறோமா என்றால் இல்லை.''

ஊர் நலப் பணியாளர்கள் மிகுந்த உற்சாகமடையத் தக்க முறையில் முதல்வர் அவர்களின் உரை தொடர்ந்தது. ''ஊர் நலப் பணியாளர்கள் இரவு 7½ மணியிலிருந்து 8 மணி வரை விவசாயப் பெருமக்களுக்காகத் தங்கள் கவனத்தைச் செலுத்துவதோடு பயிர்த்தொழில் தொடர்பான வேறு நிகழ்ச்சிகளிலும் அவர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தலாம் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அனுமதி தந்துள்ளார். இந்த ½ மணி நேர நிகழ்ச்சியை ஊர் நல ஊழியர்கள் கேட்டு, மீண்டும் பகலெல்லாம் மற்றவர்கள் கேட்டு உற்சாகப்படும் அளவிற்கு எடுத்துச் சொல்லவேண்டும். ஊர் நல ஊழியர்கள் தங்கள் குறைகளைக் கூறியதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறையில்லாதவர்களே யாரும் கிடையாது. எந்தக் கட்டத்திலே இருந்து நாம் குறைகளைத் தொடங்குகிறோம் என்பதைச் சிந்திக்கவேண்டும். நீங்கள் எல்லாம் மெழுகுவர்த்தி போல் நின்று பணியாற்ற வேண்டும் என்று ஊராட்சி அமைச்சரவர்கள் சொன்னார்கள். நீங்கள் உங்களை அழித்துக் கொள்ளாமல் அகல் விளக்காக நின்று பணியாற்றினாலே போதும். அவ்விளக்கொளி மங்காமல் இருப்பதற்கு இந்த அரசு தன்னாலான முயற்சிகளை நிச்சயம் மேற்கொள்ளும். அகல் விளக்காக இருக்கும் உங்களைக் குத்துவிளக்காகவும், மேலும் சிறப்பாக மின்விளக்காகவும் மாற்றுவது அரசின் கடமை.''

''படித்த இளைஞர்கள் கொஞ்சமும் கசப்புக் காட்டாமல் கையிலே கலப்பையைப் பிடிக்கவேண்டும். படித்தவர்கள் ஏர் பிடிக்கத்தான் வேண்டும் என்பது அல்ல. ஏர் பிடித்தவர்கள் படித்தவர்களாக இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள உழவனுக்கு உலக நடவடிக்கைகள் தெரியாது. மழை, சேறு, வெயில் இவைதான் தெரியும். ஆனால் வருங்காலத்தில் உழவர்கள் உலகம் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும்.'' இவை படித்த இளைஞர்களுக்கு நமது முதல்வர் வழங்கிய அறிவுரைகள்.

''வானொலியின் மூலமாக ஒலி பரப்பப்படுகிற விவசாய நிகழ்ச்சிகள் பல நேரங்களில் கேட்பாரற்று இருப்பதை நாம் கண்டிருக்கின்றோம். ஏனென்றால் அது இசை நிகழ்ச்சிகளைப்போல அமையாத காரணத்தினாலும், பயிர்த் தொழிலைப்பற்றியே பெரும்பாலும் கருத்துக்கள் பரிமாறப்படுகின்ற காரணத்தினாலும், இது அலுப்புக்குரிய ஒன்றாக, சலிப்புக்குரிய ஒன்றாகக் கருதப்படுகின்றது. அந்தக் காரணத்தினால்தான் முன்னும் பின்னும் சுவையான நிகழ்ச்சிகளை இணைத்து இடையில் ஆங்கிலத்திலே சொல்வார்களே 'போர்' அடிக்கிற நிகழ்ச்சி என்று அப்படிப்பட்ட நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி

பலகாலம் கருதப்பட்டு இன்றைக்கு அரசாங்கமும் வானொலி நிலையத்தாரும் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் பலனாக இது கேட்டுத் தீரவேண்டிய ஒரு நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சியை மக்கள் விரும்பிக் கேட்கும் நிலையை நாம் உருவாக்க வேண்டும். மாதத்தில் ஒருநாள் மக்களுடைய மனதிலே இடம் பெற்றுள்ள நடிகர் பெருமக்களைக் கொண்டு விவசாய நிகழ்ச்சிகள் அமைத்திடவேண்டும். நடிகர்கள் ஒத்துக் கொள்ள மறுக்கிறார்கள் என்று நிலைய இயக்குநர் கருதினால் நான் வேண்டுமானாலும் பொறுப்பேற்றுக்கொண்டு அப்படிப்பட்ட நடிகர்களை வரச் சம்மதிக்கச் சொல்லுகிறேன். அவர்கள் அந்த ஏற்பாட்டினைச் செய்வதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். நானும் இதற்கு ஆவன செய்கிறேன்.''—வானொலி நிலையத்தார்க்கு முதல்வர் அளித்த பொன்னுரைகள் இவை.

இறுதியாக முதலமைச்சரவர்கள் கூறியது கூடியிருந்தோரைச் சிந்திக்க வைக்கக் கூடியதாகவும், எல்லாரையும் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைப்பதாகவும் அமைந்திருந்தது. ''வானொலி நிலையத்தாருக்கு ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது தமிழக அரசு—தமிழ்நாடு அரசு. இந்த அரசில் ஒலி பரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகள் எல்லாம் கூடுமானவரையில் தமிழிலேயே இருப்பது நல்லது. நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்கள் பேசுகின்ற தமிழ் அநேகமாக 100க்கு 90 வீதம் நல்ல தமிழாகும்—தூய்மையான தமிழாகும். இப்படிப்பட்ட தமிழிலேயே நிகழ்ச்சிகளை அமைப்பதற்கு வானொலி நிலையத்தார் ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். முதலில் பிராந்தியச் செய்தியை மாநிலச் செய்தியாக மாற்றிட வேண்டும். பிராந்தியச் செய்தி, பிராந்தியச் செய்தி என்றால் மதுவிலக்கு செயற்படுத்தப்பட்டுள்ள நாட்டில் அது வேறு ஒரு சொல்லை நினைவுபடுத்துவதாக அமைகின்றது. ஆகவே காந்தி நூற்றாண்டு விழா கொண்டாடும் இந்த ஆண்டிலாவது இதனைச் சிந்தித்து வானொலி நிலையத்தார் 'மாநிலச் செய்திகள்' என்று மாற்றிட முயற்சி எடுக்க வேண்டுகிறேன்.''

பின்னர் தமிழக முதல்வர் கலைஞர் தலைமையில் மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் வானொலிப் பெட்டிகளை ஊர்நலப் பணியாளர்களுக்கு வழங்கினார்கள். பிற்பகல் மணி 2½ ஆயிற்று. செவிக்குணவு கிடைத்த நிறைவோடு மக்கள் வெள்ளம் கலைந்து சென்றது. செவிக்குணவு வாரி வழங்கிய பெருமக்கள் பசிக்குணவு கொள்ளப் பயணிகள் விடுதி சென்றடைந்தனர்.

கனியும் கல்லும்

தென்றலில்லா வடநாட்டில் கவிதைத் தென்றலாய் அக்பர் அவையில் உலவி வந்த கானே கானம் ஒரு நாள் தெருவழியே ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். அப்பொழுது அம்மாமேதைமீது பகைமை கொண்ட ஒருவன் மண்கட்டி ஒன்றையெடுத்து வீசினான். உடனே அவர் அவனைப் பிடித்துவர ஆணையிட்டார். அவர் கட்டளையைக் கேட்ட பட்டாள வீரர்கள் அம்மண் கட்டி எறிந்தவனைக் கட்டியிழுத்து வந்தனர். அவர் என்ன தண்டனை கொடுக்கச் சொன்னாலும் நிறைவேற்ற ஆயத்தமாக அதிகாரி ஒருவர் அருகிலே நின்றிருந்தார். 'ஆயிரம் ரூபாய் அவனுக்குக் கொடுத்திடுக'—இது புலவர் கானேகானம் சொன்னது, 'ஆயிரம் ரூபாயா, அவனுக்கா, ஆகாது பாவலரே'—இது அதிகாரியின் மறுப்புக் குரல். சிந்தனைத் தேக்கமான கவிஞர், 'கல்லை எறிந்தவனுக்குக் கனியைத் தருகிறது மரம்.மண் கட்டியை என்மேல் எறிந்தவனுக்கு நான் பொன் கட்டியல்லவா தரவேண்டும்? எங்கே? இப்போதே ஆயிரம் ரூபாய் அவனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்!' என்றார் கவி கானே கானம்!

13-7-1969 அன்று மாயூரத்தில் திருச்சி வானொலி நிலையத்தாரால் தீவிர ஒலிபரப்புத் திட்ட ஆண்டு விழா தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



அவ்விழாவில் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் ஊர்நல ஊழியர்கட்கு வானொலிப் பெட்டிகளை வழங்கினார்கள்.

13-7-1969 அன்று மாயூரத்தில் நடைபெற்ற தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்ட ஆண்டு விழாவில் தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் பேசுகிறார்கள்.



வானொலிப் பெட்டிகளுடன் ஊர்நல ஊழியர்கள்.



பதினைன்காவது ஆண்டு மாநில 'கேரம்' விளையாட்டுப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கு மின்சாரத்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்கள் பரிசுகள் வழங்கினர். [29-6-1969]



மைய அரசினுல் அமைக்கப்பெற்ற, ஊதியம் வராத இரயில் கிளைப் பாதைகள் குழுவினர் [Uneconomic Branch Lines Committee] தமிழ்நாடு பொதுப் பணித்துறை அமைச்சர் மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்களைச் சந்தித்தனர் [4-7-1969.]



தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகச் சங்கத்தின் ஆண்டு விழா 5-7-1969இல் நடைபெற்றது. விழாமலரினைத் தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அளிக்கிறார்.



மராட்டிய மாநில ஆளுநர் திரு. பி. வி. செரியன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சரை அவருடைய இல்லத்தில் சந்தித்து உரையாடினர். [11-7-1969]



குடும்ப ரகசியம்

"கலைமாமணி" ப. கண்ணன்

உறுப்பினர்கள்

1. மூத்தையன் — ஊராட்சித் தண்டலர்
2. பாலசுந்தரம் — தெளிவற்ற முரடன்
3. சித்தலிங்கம் — தன்னலம் மிகுந்த செல்வர்
4. பொன்னன் — சித்தலிங்கத்தின் பணியாள்
5. மணிமாலை — முத்தையனின் நல்ல மனைவி
6. கோமதி — பாலசுந்தரத்தின் பொல்லாத மனைவி
7. பொற்கொடி — சிறுமி

மற்றும் சிலர்

காட்சி 1

இடம்: சித்தலிங்கம் வீடு.

காலம்: முற்பகல்.

[செல்வர் சித்தலிங்கமும், பணியாள் பொன்னனும் இருக்கின்றனர்.]

சித்த: டேய் பொன்னு!

பொன்: ஏனுங்க எசமான்?

சித்த: கொஞ்ச நாளா பாலு ஏண்டா இந்தப்பக்கமே வர்றதில்லே?

பொன்: அவுரு, ஒட்டுத் திண்ணையிலே டீக்கடை வச்சு ஒக்காந்திட்டாருங்க.

சித்த: ஓ! வியாபாரம் பண்ண ஆரம்பிச்சிட்டானு?

பொன்: பெண்டாட்டி புள்ளே, வாயி வயிறு இருக்குதுங்களே! ஏதாச்சும் ஒண்ணு பண்ணித்தானே ஆகணுமுங்க?

சித்த: என்னடா ஆச்சரியம்! ஆட்சி மாறிப்போனு ஆளும் மாறிப்போவானு? வேலையே செய்யா

தவன் செய்யருனே! பாலு என்ன உற்பத்தியைப் பெருக்கருரு?

பொன்: ஆமாங்க, நெறைய பெருக்கிபிருக்காருங்க.

சித்த: என்னந்தையடா?

பொன்: குழந்தைகளை! அவருக்கு ஆனுலே நாலு, பொண்ணுலே ஏழு! ஆகமொத்தம் பதினென்னுங்க.

சித்த: (வியந்து) அப்படியா?

பொன்: அய்யாவோட யோகம், அம்மாளுக்கு வருஷம் ஒண்ணுப் பொறக்குதுங்க.

சித்த: நல்லாப் பொறந்தது போடா! கோமதியைப் பார்த்தா அப்படியொன்னும் தெரியலையே! இளமையாத்தானே இருக்கரு!

பொன்: கட்டான ஒடம்பு. மெட்டான அழகு.

சித்த: ஆமாம்...பாலு இப்ப எப்படிடா இருக்கிருன்?

பொன்: எப்பவும் போலே ஏட்டிக்குப் போட்டிதான். கொட்டை எழுத்து அரசியல் பேச்சுத்தான். பொண்ணைக் கண்டா போச்சு!

சித்த: அதுலே, பாலு கெட்டிக்காரன்டா பொன்னு.

பொன்: நீங்கமட்டும் என்ன எசமான்! அதிலே சொத்தையா? சோடையா?

சித்த: அடேய்! அது கெடக்கட்டும். அந்தத் திருவரங்கம் சங்கதி என்னடா ஆச்சு?

பொன்: (யோசித்து) திருவரங்கம்...! அந்த ஸ்ரீரங்கத்து அம்மாவைப் பத்திக் கேக்கறீங்களா?

சித்த: டேய்; மடையா! என்னடா ஒளர்றே? தியாகி திருவரங்கம்டா.

பொன்: ஓ! தேர்தல் செலவுக்குக் கடன் வாங்கின திருவரங்கமா? அவருதான் சட்டசபைத் தேர்தல்லே மட்டம் போட்டுட்டாரே!

சித்த: சட்டசபைத் தேர்தல்லே தோத்துட்டாலும் இன்னைக்கும் அவந்தான்டா நம்மோட ஊராட்சித் தலைவன்?

பொன்: ஊராட்சித் தலைவர்தான்; தாய்மொழிக்காகச் சிறை சென்ற தியாகிதான்; நாலுந்தெரிஞ்ச நல்லவர்தான்; இருந்தென்ன பண்றது; பணங்காசு குலுங்கிளுத்தானே பத்துப்பேரு சுத்துவாங்க?

சித்த: பொன்னு; அவனைப் பத்துப்பேரு சுத்துனு என்ன சுந்தாமெ விட்டா என்ன? நான் கொடுத்த பணத்தை வட்டியும் மொதலுமா வச்சாகணும். இல்லே; கட்டின புதுவீட்டைக் காலி பண்ணிக் கொடுத்துக் கணக்கைத் தீர்க்கட்டும். ரெண்டிலே ஒண்ணு நடந்தாகணும். செய்யருனு இல்லியா கேட்டுப் போடு.

பொன்: கொடுத்த கடன் ஆயிரம். எழுதிய பத்திரம் ரெண்டாயிரம். அந்த வீடு கட்டினது எட்டாயிரம். எசமான், கொடுப்பாரா வீட்டை?

சித்த: வீட்டு மதிப்பு எதுவா இருக்கட்டும். இப்ப அவன் கையிலே காசு ஏதுடா? கோர்ட்லே போட்டு வீட்டை ஏலத்துக்குக் கொண்டார்றேன்; நானே ஆளைவச்சு எடுக்கறேன். இந்த ஊர்லே எனக்குப் போட்டியா எவன்டா வந்திடுவான்? இல்லே எவன் வந்திடுவாங்கிறேன்?

பொன்: யாருங்க வரமுடியும்? அரமனைக்கு எதிர்மனையா? சிவன் கோயில் தருமகர்த்தா சித்தலிங்கப் பிரபு நெனைச்சது நெறைவேறலேங்கிற சரித்திரமே கெடையாதுங்களே!

சித்த: அதைத்தானே கேட்டேன், பொன்னு! நாளைக்கே திருவரங்கத்தைப் பாரு, வசூலிக்க வகை பண்ணு. நெருக்கினுத்தான் வழி பொறக்கும்.

பொன்: ஆகட்டுமுங்க.

[ஊராட்சித் தண்டலர் முத்தையன் வருகிறன், இரசீதுப் புத்தகங்களோடு.]

முத்தை: வணக்கம், ஐயா!

சித்த: வா முத்தையா! என்ன சங்கதி?

முத்தை: வரி வசூலுக்கு வந்தேனுங்க.

சித்த: நீயொரு கடன்காரன். வசூல் வசூலுன்னு அலையாதே! நான் எவ்வளவப்பா கொடுத்துத் தொலைக்கணும்?

முத்தை: ஐயா! இதோ சொல்றேனுங்க.

[இரசீதுப் புத்தகங்களைப் புரட்டிப் பார்க்கிருன்]

முத்தை: ஆறுமாத வரி, வீடுகளுக்ும் கடைகளுக்கும் சேர்த்து நூற்றிஅறுபது ரூபா எண்பது காசு. இதல்லாமல் பழைய பாக்கி நூற்றியறுபது இருக்குதுங்க.

முத்தை: (மெதுவாக) உண்மையைச் சொன்னேனுங்க.

பொன்: எசமான்! அவன் சொல்றது உண்மையாம்! நீங்க சொல்றது பொய்யாம்!

முத்தை: மெய் தெரியாத மேதாவியே! வாயை மூடு!

சித்த: அநியாயக்காரப் பசங்க, பஞ்சாயத்துத் தலைவன், மெம்பர், குமாஸ்தா, பில் கலெக்டர்னு

சித்த: ஆகமொத்தம் முன்னூத்தி இருபது ரூபா கொடுக்கணுமா?... என்னது?... முன்னூத்தி இருபது ரூபாயா? இதென்னடா அநியாயம்! எனக்கு இவ்வளவு வரியா? எனக்கா இவ்வளவு அதிக வரி போடறது?

முத்தை: பெரிய சொத்து, பலமான வீடுங்க, கடைங்க, தகுந்த நியாயமான வரிதான் போட்டிருக்காங்க.

சித்த: (சினந்து) அடேய்! எது நியாயம்? எங்கிட்டே வந்து நியாயமா பேசறே?

சொல்லிகிட்டு ஊரைக் கொள்ளையடிக்கிறீங்களே! பெரியவங்க சின்னவங்கன்னு மரியாதையில்லாமெ வரியை வச்சுத் தீட்டறீங்களே! இந்த அக்கிரமத்துக்கு முடிவேயில்லியா? இதைக் கேக்கறவங்க யாருமே இல்லியா?

முத்தை: அக்கிரமமா இருந்தாத்தானே யாரும் கேப்பாங்க?

சித்த: டேய்! முத்தையா! இந்த வூர்லே என்னைக் காட்டிலும் பெரிய மனிதன் எவன்டா? எனக்கு இவ்வளவு வரி போடறது, அக்கிரமம் இல்லியா? நான் எதுக்கடா வரி கொடுக்கணும்?

முத்தை: மன்னிக்கணும், ஊர்க்குடிகளில் நீங்களும் ஒருவர். வரி கொடுக்காமல் ஊராட்சி எப்படிங்க நடக்கும்? தெருவிலே விளக்குப்போடவும், குப்பைகளைக் கூட்டவும், பள்ளிக்கூடம் கட்டவும், படிப்பகம் நடத்தவும் வரிகொடுத்துத்தானே ஆகணும்?

சித்த: சரிடா! வரி வட்டங்கொடுக்க ஊர்லே யாருமில்லே? நான்தானா கெடைச்சேன்?

முத்தை: ஏழை பணக்காரன், தொழிலாளி முதலாளி எல்லாருந்தான் வரி கொடுக்கணுங்க. அளவு, அவரவர் தகுதியைப் பொறுத்தது. அதிகமான வரி கொடுக்கறதே ஒரு பெருமையாச்சுங்களே! இதை மறுக்கலாமா?

சித்த: அந்தப் பெருமை தேவையில் லேங்கறேன். எப்பவும், யாரும் எனக்கு இவ்வளவு வரி போட்டதில்லையே! அடேய்! அதெல்லாம் எதுக்கு? ஊர்லே இருக்கற பெரியவங்களுக்கு வரிச்சலுகை உண்டா? இல்லியா?

முத்தை: கட்ட முடியாத ஏழை பாழைங்க கேக்கலாம், நீங்களா கேக்கறது? ஊராட்சித் தலைவரும், உறுப்பினரும் என்ன நினைப்பாங்க? கேவலமில்லே?

சித்த: கவலையில்லே, அவங்களைப் பத்தி நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? பணக்காரனுக்கு அதிக வரி போட்டுக் கொடுங்கோலாட்சி நடத்தறுங்கடா! கொடுங்கோலாட்சி நடத்தறுங்க!

முத்தை: அதை ஒங்ககிட்டேயிருந்து இனிமேத்தான் பழகணும்.

சித்த: (சினந்து) டேய்! முத்தையா என்னைக் கிண்டலா பண்ணறே? ஏங்கிட்டே வாதம்மா பேசறே?

முத்தை: நான் ஓர் ஏழைத் தண்டலர். உங்களைக் கிண்டல் பண்ணும் தகுதி எனக்கேதுங்க? வசூலுக்கு வந்தவனிடம் நீங்க வாதம் பேசறீங்க. வரியைக் கொடுத்திட்டா நான் போயிடறேன்.

பொன்: அப்ப, கொடுக்கலேன்னு ஓர் அடி நகரமாட்டான் எசமான்! உடும்புப் பிடிதான்!

முத்தை: எரியற நெருப்பிலே எண்ணெயை ஊத்தாதே பொன்னு!

சித்த: (சினந்து) அயோக்கியப் பயலே! இதென்ன வரி வசூலா? கடன் வசூலா? மொதல்லே ஒங்க தலைவன் எங்கிட்டே வாங்கின கடனைக் கொடுக்கட்டும். அப்புறம் வரியைக் கொடுக்கிறேன். அதுக்கு முன்னாலே எங்கிட்டே வந்தே, காலை ஒடிச்சுப் போடுவேன், ஒடிச்சு!

முத்தை: கொஞ்சம் மரியாதையாப் பேசுங்க. நான் ஊராட்சித் தண்டலர். வரி வசூலிப்பது என்னோட வேலை; கொடுப்பது ஒங்களோட கடமை. கடமையை மறந்து யாரும் கவலைப்பட்டே ஆகணும். இதை மறந்திட வேண்டாம். சொல்லவேண்டியதைச் சொல்லிட்டேன்.

சித்த: வரி கொடுக்கலேன்னு என்னடா செய்வே?

முத்தை: நான் ஏதும் செய்யமாட்டேன். அரசாங்கம், சட்டம், நீதிமன்றம், அதனதன் கடமையை அதது செய்யும்.

சித்த: அடேய்! முத்தையா! நான் யார் தெரியுமாடா?

முத்தை: நன்றாகத் தெரியுமே! பொதுநலத்தில் சுயநலம் தேடுகின்ற புண்ணியவான்! ஐநூறு கொடுத்து ஆயிரத்துக்கு எழுதுகின்ற அறச் செம்மல்! கோழைகளை மிரட்டுகின்ற மாவீரர்!

சித்த: ஆங்! என்ன சொன்னே?

முத்தை: ஆச்சரியப்படாதீங்க, ஏமாந்து கொடுத்திட்ட திருவரங்கம் விதவை சொர்ணத்தோட பணத்தை மோசடி பண்ணி, பிரபுத்துவம் பெற்ற ஒங்களோட குடும்பரகசியம் எனக்குத் தெரியும்!

சித்த: ஆங்! என்ன திமிரான பேச்சு! எதையெதையோ சொல்றானே! பொய்! சுத்தப் பொய்! (சினந்து) டேய்! பொன்னு! பொன்னு!...

பொன்: இதோ, இருக்கறேன், எசமான்.

சித்த: இவனைப் பிடிச்சுக் கட்டிப் போடு கம்பத்திலே. தோலை உரிச்சுச் சதையைக் கிழிச்சுக் கூறு போடணும், கூறு!

பொன்: வேணாமுங்க எசமான்! இவன் பொல்லாதவன்னாலும், இவனோட அண்ணன் பாலு நமக்கு வேண்டியவர். அவருக்காக விட்டிடுங்க; போகட்டும், விட்டிடுங்க!

முத்தை: கட்டிப் போடறீங்களா கம்பத்திலே? தோலை உரிக்கறீங்களா? சித்தலிங்கனாரே! ஒம்மோட வேடம், போலித்தனம், ஊரையடித்து உலையில் போடும் சதி வேலைகளைப் பொதுமக்களுக்குத் தோலுரிச்சிக் காட்டுவேன்! உமது கௌரவம் காற்றிலே பறக்கும்! செல்வாக்கு, சிதைந்த கோட்டையாகும்! ஜாக்கிரதை!

[வெடுக்கென்று போகிறான்.]

சித்த: ஐயோ! என்னை அவமானப் படுத்திட்டானே! குடும்பரகசியத்தைச் சொல்லி மனசைக் கொழப்பிட்டானே! என்னை எதிர்த்துப் பேசினவன் உசுரோட போறானே! போறானே! போறானே! பொன்னு!...பொன்னு...

[சோர்ந்து நாற்காலியில் உட்காருகிறார். பொன்னன் மடியிலிருந்த டப்பியைத் திறந்து மாத்திரைகளை எடுக்கிறான்.]

பொன்: கெடக்கறான் எசமான்! போக்கிரிப்பய, விட்டுத் தள்ளுங்க. இரத்தக் கொதிப்பு! இரத்தக் கொதிப்பு! மாத்திரை! மாத்திரை!

[மாத்திரைகளை அவர் வாயில் போடுகிறான். விழுங்குகிறார்.]

[தொடரும்]

பரிசுபெற்ற உழவர்கள்

பயிர் விளைச்சல் போட்டிகளில் பங்கு பெற்று மிகு விளைச்சலை ஈட்டித் தந்த 188 உழவர்களுக்கு மத்தியப் பிரதேச அரசாங்கம் பரிசுகள் வழங்கியுள்ளது. இவர்களில் 160 உழவர்கள் கிராம நிலையிலும், 28 உழவர்கள் வட்டார நிலையிலும் பரிசு பெற்றவர்களாவர்.

பரிசுகள் அனைத்தும் உழுபடைக் கருவிகளாகவே அளிக்கப்பட்டன.

நெல் விளைச்சல் போட்டியில் முதற்பரிசு பெற்ற திரு. பஞ்சிலால் அவர்கள், ஓர் ஏக்கர் நிலத்தில் 46 குவிண்டல் 96 கிலோ விளைவித்துக் காட்டினார். இரண்டாம் பரிசு பெற்ற திரு. இராசாராம் தேவநகம் அவர்கள் 46 குவிண்டல் 58 கிலோ அறுவடை செய்தார்.

பெருமளவு நிலத்தில் பொறுக்கு விதைகளைக் கையாண்டு, விளைச்சலைப் பன்மடங்கு பெருக்கி உதவியதற்கென, வேளாண்மை இணைச் சங்கத்திற்குச் சப்பான் நாட்டினர் உவந்தளித்த விசை ''டில்லர்'' பரிசாக அளிக்கப்பட்டது.

'பஞ்சாயத்து ராஜ்' இதழிலிருந்து



அகிலன்

இது திருவள்ளுவருக்கு ஈராயிரம் ஆண்டுவிழாக் கொண்டாடும் ஆண்டு; அதுபோலவே காந்தியடிகளுக்கும் நூறும் ஆண்டுவிழா நடைபெறும் ஆண்டு. இந்த இரண்டுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அந்தத் தொடர்பைச் சுட்டிக் காட்டவும், கூடுமானல் ஊருக்கொருவராவது இவர்கள் வழியில் நடக்க முன்வரவேண்டுமென்று வேண்டிக் கொள்ளவுமே இதை எழுதுகிறேன்.

ஆழ்ந்து படிக்கத் தெரிந்த எந்தத் தமிழருமே திருக்குறளை இதுவரையில் படிக்காமல் இருக்கமாட்டார். அப்படி இருந்தால் அவர் படிப்பு பயனற்ற படிப்பு. அவர் தம்மைத் தமிழர் என்று சொல்லிக் கொள்வதற்கு உண்மையிலேயே வெட்கப்படவேண்டும். 'நாமமது தமிழர் எனக்கொண்டிங்கு வாழ்ந்திடுதல்' போதாது. உடலுக்குத் தாய்ப் பாலைப்போல. உள்ளத்துக்கும் சிந்தனைக்கும் ஆன்மாவுக்கும் வள்ளுவம் அடிப்படை உணவு. வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடிக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்கு அது.

அதைப்போலவே விடுதலை பெற்ற இந்த இந்திய நாட்டின் வாய்ப்புக்கள், வசதிகள், இன்பங்கள், துன்பங்கள் முதலியவற்றை அனுபவித்து வரும் குடியாட்சிக் குடிமகன் ஒவ்வொருவரும், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் அறப்போர் நடத்தி நாட்டை அன்னிய ஆதிக்கத்திலிருந்து மீட்டதையும் கற்று உணரக் கடமைப் பட்டவர். 'நாமிருக்கும் நாடு நமது என்பதறிவோம்' என்ற அறிவும் உணர்வும் உள்ள ஒவ்வொருவரும் காந்தியடிகளின் வாழ்க்கையை ஆழ்ந்து படிக்க வேண்டியவர்கள்.

வள்ளுவத்தையும் காந்தியத்தையும் கற்றுணர்வதற்குப் பயன்படாத கல்வி தமிழ்க் கல்வியுமாகாது; இந்தியக் கல்வியுமாகாது. தமிழகத்தில் ஒருவர் எவ்வளவுதான் அதிகமாய்ப் படித்து எத்தனை பட்டங்கள் பெற்றிருந்தாலும் இந்த இரண்டிலும் ஓரளவேனும் அவருக்கு அடிப்படை இல்லையென்றால் அவர் பெற்ற கல்வி வெறும் வயிற்றுக் கல்வியே என்பது என் கருத்து.

வள்ளுவரும் காந்தியும் உலகப் பொது மனிதர்கள். சாதி, சமயம், இனம், மொழி, அரசியல் கட்சி இவற்றின் பிடிகளுக்கு அப்பாற்பட்டவர்கள். விடுதலைப் போராட்டக் காலத்தில், அதற்காகத் தீவிரமாகப் போராடிய ஓர் அரசியல் கட்சியோடு காந்தியடிகள் நெருங்கிய தொடர்பு கொண்டு அதை வழிநடத்திச் சென்றார் என்பது உண்மைதான். ஆனல், பின்னர் அதில் அவர் ஒரு சாதாரண உறுப்பினராகக் கூட இருக்கவில்லை. அது மாத்திரமல்ல; விடுதலை கிடைத்தவுடன் அந்தக் கட்சியைக் கலைத்து விடுமாறு அவர் ஆலோசனை கூறினர்.

ஆகவே, கட்சிக் கண்ணேட்டம் என்ற விருப்பு - வெறுப்போடு எவ்வாறு வள்ளுவரை அணுகுவது தவருமோ, அதேபோல் காந்தியை அணுகுவதும் தவருகும். இருவருமே இந்த நாட்டு மண்ணில் விளைந்த உலக உத்தமர்கள்; உலகப் பொது மனிதர்கள்.

வள்ளுவத்தை வாழ்ந்து காட்டியவர்:

வள்ளுவத்தைப் பற்றியும் காந்தியத்தைப்பற்றியும் மிகுதியாகப் பேசப்படுகிற காலம் இது. விழாக்கள், கூட்டங்கள், பேச்சுக்கள், புறச்சடங்குகள், சின்னங்கள் இவையெல்லாம் ஓரளவுக்குத் தேவையானவையே. அவற்றைப் பரப்பவும், மக்களின் ஆர்வத்தைத் தூண்டி அவற்றின்பால் திருப்பவும், மக்களுக்கு விழிப்பூட்டவும் ஓரளவுக்கு இவை பயன்படுகின்றன. ஆனால் இவற்றோடு நின்றுவிட்டால், சமயங்கள் கூறும் சில நெறி முறைகள் எவ்வாறு வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்படாமல், வெறும் ஆரவாரப் புறச்சடங்குகளோடு நின்றுவிடுகின்றனவோ அவ்வாறே இவையும் வெற்று வேட்டுக்களாகி விடக்கூடும் என நான் அஞ்சுகிறேன். வள்ளுவரின் கொல்லாமையும் காந்தியின் அகிம்சையும் இந்த மண்ணிலிருந்து களையப்பட்டு, வேற்று நாட்டு வன்முறைத் தத்துவங்களுக்கு நம் இளைஞர்கள் பலியாகிவிடாமல் காக்க வேண்டியது நம் கடமை.

காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலேயே ஓரளவுக்குத் தமிழ் பயின்றவர். தமிழ்ப் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க முயன்றவர்! ''திருக்குறளை மூலத்தில் படித்துப் பயன்பெறும் அளவுக்கு என்னால் நன்றாகத் தமிழ் கற்க முடியவில்லையே'' என்று ஏங்கியவர். கீதையை அவர் தம் வாழ்க்கையின் வழிகாட்டியாகக் கொண்டிருந்தார் என்பது உண்மையே. ஆனாலும் அவருக்கு வள்ளுவத்தைப் பற்றித் தெரிந்துதான் இருந்தது.

கீதையைப்பற்றி ஈராயிரம் ஆண்டுகளாகப் பேசி வந்தவர்கள் பலர். வள்ளுவரைப் பற்றியும் அவ்வாறே நாம் பேசி வந்திருக்கிறோம். ''நடந்து காட்டுவோம்'' என்று முன் வந்தவர்கள் மிகச் சிலர். அவர்களிலும் வெற்றி பெற்றவர்கள் ஒரு சிலர்; வாழ்ந்து காட்டி, மாபெரும் வெற்றி கண்டு, உலக அதிசயம் நிகழ்த்தியவர் காந்தி அடிகள்.

வள்ளுவர் குறளுக்கு இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை விளக்கம் வேண்டுமா? தயவு செய்து காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றைப் படியுங்கள். அதில் தெள்ளத்தெளிவாகக் கிடைக்கும். இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒருவர் எழுதிய எழுத்துக்கு இந்த நூற்றாண்டில் மற்றொருவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை மிகச் சிறந்த உரையாகத் திகழ்வதைக் காண்பீர்கள்.

ஊருக்கு ஒருவரை அழைக்கிறேன்:

கன்னட மாநிலத்தில் பிறந்து வளரும் பொன்னி நல்லாள் நம் தஞ்சைத் தரணியின் நெற்கதிராய்க் குலுங்கி நமக்கு உணவூட்டி வருகிறாள். நம்மால் வங்கத்துக்காரியான கங்கையையும் இங்கே கொண்டு வரமுடியும். இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்களை நிகழ்த்தி நம் வறுமை, அறியாமை, நோய், வறட்சி, பஞ்சம் இவற்றையெல்லாம் இந்த நாட்டிலிருந்தே அடியோடு களைந்தெறிய முடியும். இந்த அற்புதத்தைக் கத்தியின்றி, இரத்தமின்றி, எவ்வித வன்முறைச் செயலுமின்றி நம்மால் நிகழ்த்திவிட முடியும். வள்ளுவர் - காந்தி வழியில் நாம் கட்டாயம் முன்னேற முடியும்.

குமரிமுதல் இமயம் வரை நமக்குச் சொந்தமான இந்தப் பரந்த நிலப் பரப்பில் மண்வளம், நீர்வளம், கனிவளம் எல்லாம் தேவைக்கு அதிகமாகவே இருக்கின்றன. மனித சக்தியும் தேவைக்கு அதிகமாக இருக்கிறது. இப்படி இருந்தும் ஏன் இங்கு வறுமை? ஏன் இங்கு வேலையில்லாத் திண்டாட்டம்? ஏன் பற்றாக்குறைப் போராட்டம்? ஏன் ஒற்றுமையைக் குலைக்கும் தேவையற்ற வன்முறைச் செயல்கள்?

வள்ளுவரையும் காந்தியையும் மாபெரும் அகச் செல்வங்களாக நாம் வைத்துக் கொண்டு, இவ்வளவு அளப்பரிய புறச் செல்வங்களையும் வைத்துக்கொண்டு, நாம் பெற்ற குடியாட்சி வாழ்க்கையை நாம் ஏன் இப்படி அலைக்கழிக்கிறோம் என்பது தான் எனக்குப் புரியவில்லை.

வள்ளுவரின் பெயராலும் காந்தியின் பெயராலும் ஊருக்கு ஓர் இளைஞனை நான் கூவி அழைக்கிறேன். கிராமத்துக்கு ஓர் ஆண்மகனை நான் அன்போடு அழைக்கிறேன். எந்தச்

சமயம், எந்தச் சாதி, எந்தக் கட்சிக்காரனாக அவன் இருந்தாலும் சரி.

இதோ, அவனுக்கொரு வேலைத் திட்டம்:

(1) அந்தந்த ஊரின், அல்லது தெருவின், அல்லது கிராமத்தின் அடிப்படைக் குறைகள் எவை என்று அவன் ஆராயவேண்டும். மற்றவர்கள் அவனைத் தூண்டவேண்டும் என்று இல்லாமல், அவனே மற்றவர்களையும் தூண்டி அழைத்துச் சென்று ஆராயவேண்டும்.

(2) குறைகளைப்போக்க வழிகளைப் பற்றி அலசி ஆராய்ந்து திட்டங்கள் வகுத்துக் கொள்ளவேண்டும். மனித சக்தி, காலம், பொருள் உதவி இவை பற்றிய திட்டம் அவசியம்.

(3) அவனும் அவன் நண்பர்களும் செய்யக்கூடியதை அவன் முதலில் செய்து காட்டவேண்டும். இதில் ஊர்ப்பழிக்கு அஞ்சுவதோ, விளம்பரத்துக்கு ஆசைப்பட்டு மயங்குவதோ கூடாது.

(4) ஊர்க்காரர், அரசாங்கம், மக்கள் பிரதிநிதி, அரசாங்க ஊழியர் இவர்கள் செய்யவேண்டியதையும் செய்யும்படி தூண்டி, அவர்களுக்குப் பின்பலமாக விளங்கவேண்டும்.

(5) தவறுகள் நடந்தால், அவற்றை ஆராய்ந்து உண்மை தெளிந்த பின், மற்ற எல்லாச் சமாதான முறைகளையும் கையாண்டு பார்த்தபின், கடைசியாக அவற்றோடு அறப்போர்—மறப்போரல்ல—தொடுக்க வேண்டும். தியாக சிந்தையும், நேர்மைத் துணிவும், யாரிடமும் பகையைப் பாராட்டாப் பண்பும் வெற்றிக்கு வழிகள்.

(6) ஊரின் ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் உழைத்தால், அந்த ஒற்றுமையும் உயர்வும் அந்த ஊரார் ஒவ்வொருவருக்கும் பயன்தரும் என்பதை அவர்களுக்குச் சொல்லாலும் செயலாலும் உணர்த்தவேண்டும்.

இப்படி உழைக்க முன்வரும் ஆயிரமாயிரம் இளைஞர்களிடையே ஒரு வள்ளுவரும் ஒரு காந்தியும் தோன்றாமல் இருக்கமாட்டார்கள். அவர்களை இந்த நாடுமட்டுமல்ல, உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

பாம்பின் நஞ்சு இந்தப் பல்லியிடம் பலிக்காது!

கொடிய நச்சுப் பாம்பின் ஒரு தனி நஞ்சு 4,000 பேர்களைக் கொல்லமுடியும்; ஆனால், இவ்வளவு கொடிய நஞ்சு மத்திய ஆசியாவின் பாலைவனப் பகுதிகளில் வாழும் மானிடார் என்றழைக்கப்படும் பாலைவனப் பல்லியை ஒன்றுமே செய்வதில்லை. இப்பல்லியைக் கொடிய நச்சுப்பாம்பு கையுர்ஜாவைக் கொட்டும்படி செய்த போதும் அதற்கு ஒரு விளைவும் ஏற்படவில்லை.

நச்சுத் தாக்குதலிலிருந்து இயற்கையான பாதுகாப்புப் பெற்றுள்ள இப்பல்லியின் தன்மை விதிவிலக்கான, தனித்தன்மை பெற்றதாகும்.

இப்பல்லியை மேலும் ஆராய்ச்சி செய்து, எவ்வகையான நச்சுப் பாம்புக்கடிக்கும் பொருந்தும்படியான நச்சு எதிர்ப்பு மருந்தாகப் பயன்படுத்தக்கூடிய ஒரு நிணநீரைக் கண்டுபிடிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல; விவசாயத்தின்மூலம் கிடைக்கும் வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் – கிராமத் தொழில்களை ஆதரிப்பது,

உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண் பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள் கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை ''குறளகத்''தில் இயங்கும் கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும் விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:

கதர் - கிராமத் தொழில் துறை

2, சர் தேசிகாச்சாரி ரோடு

சென்னை-4

3 புதிய நெல் வகைகள்

விவசாய உற்பத்தி பெருகி விவசாயப் பெருமக்கள் மேம்பட ஆராய்ச்சி, ஆணி வேர் போன்றதாகும். விவசாயத் தொடர்பாக மத்திய மாநில ஒருங்கிணைந்த ஆராய்ச்சியின் பயனாக நமது நாட்டில் விளைச்சல் பல மடங்கு பெருகி வருகிறது. ஆயினும் மக்கள் தொகை மிக அதிகமான அளவில் கூடிவருவதால் உணவுப் பொருட் பெருக்கத்தையும் அதற்கேற்ப அதிகரிக்க வேண்டியிருக்கிறது. எனவே இப்பெரும் முயற்சியில் அரசு, ஆராய்ச்சியாளர்கள், விரிவினைத் துறையினர், விவசாயப் பெருமக்கள் ஆகிய அனைவரும் முழுப்பங்கு கொண்டு செயல்படுவது அவசியமாகிறது. உற்பத்தி உயர்வுக்கு உயர்ரக வித்துக்கள் பல வெளிவந்து விவசாயிகளால் பயிரிடப்பட்டு வருகின்றன.

1968ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் மத்தியப் புதுரக விதை வெளியீட்டுக் கழகம் ''ஜெயா'', ''பத்மா'' என்ற இரண்டு வகை புதிய நெல் ரகங்களை வெளியிட்டதன் மூலம் இம் முயற்சி மேலும் வெற்றியடைய வாய்ப்புள்ளது. அகில இந்திய ஒருங்கிணைந்த நெல் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் நமது நாட்டின் பல பாகங்களிலும் மேற்சொன்ன ரகங்களின் தனித்திறமையைச் சோதித்துப் பார்த்துள்ளனர். இப் புதிய ரகங்கள் பற்றிய சில குறிப்புகள் இதோ வருமாறு:

1. ஜெயா நெல் (ஐ. ஈ. டி. 723):

இந்த ரகமானது அகில இந்திய ஒருங்கிணைந்த நெல் அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் மிகக் குறுகிய காலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. டைச்சுங் நேடிவ்-1 (டீ. என். 1) நெல், டி. 141 என்ற ஓரிசா நெல் இவைகள் இரண்டையும் ஒட்டுச் சேர்த்து 'ஜெயா' வெளியிடப்பட்டுள்ளது. ஐ. ஆர். 8 என்ற அதிசய நெல் ரகத்தைவிட 12 சதமும், டைச்சுங் நேடிவ் 1ஐ விட 21 சதமும் அதிக மகசூல் கொடுக்கும் தன்மையுடையது 'ஜெயா' நெல். பயிரின் தன்மை,



நெல்லின் தரம் ஆகியவை ஐ. ஆர். 8ஐ ஒத்திருந்த போதிலும் இதன் வயது ஐ. ஆர். 8ஐ விட ஒரு வாரம் குறைவு. விதைப்பிலிருந்து அறுவடை வரை சுமார் 130 முதல் 140 நாட்களேயாகும். ஐ. ஆர். 8ஐ விட நிலையான மகசூல் கொடுக்கும் தன்மையுடையது. பாக்டீரியா இலைக் கருகல் நோயிற்கு (Bacteria leaf blight) ஓரளவு இலக்காகும் தன்மையுள்ளதாக இருந்தாலும், வயலில் இந்த நோய் தாக்குவது ஐ. ஆர். 8 நெல்லை

விடக் குறைவே. 10 செ. மீ. × 10 செ. மீ. (அதாவது 4 அங். × 4 அங்.) முதல் 30 செ. மீ. × 30 செ. மீ. (அதாவது 12 அங். × 12 அங்.) வரை எந்தவித இடைவெளியில் நடவு செய்தாலும் இதன் மகசூல் ஒரே மாதிரியாக இருக்கிறது. தழைச்சத்தைக் கிரகித்துக் கொள்ளுவதில் ஐ. ஆர். 8 நெல்லைக் காட்டிலும் ஜெயா நெற்பயிர் சிறப்புச் சக்தியுடையது. ஏக்கருக்கு 200 பவுண்டு தழைச் சத்து வரை அதாவது 90 கிலோ வரை இந்தச் சக்தி தென்படுகிறது. அகில இந்திய ஒருங்கிணைந்த நெல் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள முதல்ரகம் ''ஜெயா'' நெல். இந்நெல் விதை வேண்டுவோர் தேசீய விதைக் கார்ப்பொரேசன், விசயவாடா என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

2. பத்மா நெல் (சி. ஆர். 28-25)

ஒரிசா மாநிலத்தில் கட்டாக்கிலுள்ள டி. 141, டைச்சுங் நேடிவ் 1 (டி. என். 1) ஆகிய இரண்டின் ஒட்டுச் சேர்க்கையில் தோன்றிய புதிய ரகமாகும். ஆனால் 'ஜெயா' நெல் ஒட்டுச் சேர்க்கைக்கு எதிர்முறை ஒட்டுச் சேர்க்கையால் 'பத்மா' நெல் வெளியிடப்பட்டுள்ளது. மகசூல்,

பத்மா

டைச்சுங் நேடிவ் 1ஐவிட 8 சதமும், ஐ. ஆர். 8ஐ விட 17 சதமும் குறைவே இருப்பினும் இதனுடைய அரிசியின் நயமான தன்மை, குறைந்த வயது ஆகிய இரண்டு சிறப்புக் குணங்களை நோக்கும்போது மேற்கூறப்பட்ட மகசூல் குறைவை நாம் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டுவதில்லை. இது டைச்சுங் நேடிவ் 1ஐ விட ஒரு வாரம் முன்கூட்டியே அறுவடைக்கு வரும். அதிக வயது, நயமில்லாத அரிசி ஆகிய காரணங்களுக்காக ஐ. ஆர். 8, டைச்சுங் நேடிவ்-1 ஆகிய ரகங்களைப் பயிரிடமுடியாத விவசாயிகளுக்குப் 'பத்மா' நெல் பொருத்தமானதாக இருக்கும். இந்த ரகம் டி. என். 1, ஐ. ஆர். 8 ஐப் போலவே எல்லா இடங்களிலும் பயிர் செய்ய உகந்ததாகத் தெரிகிறது. குறுகிய கால நெல் ரகப் பயிர் செய்யவேண்டிய இடங்களுக்குப் 'பத்மா' நெல் பொருத்தமானதாகும்.

இது தமிழ்நாட்டில் குறுவைப் பட்டத்திற்கு ஏற்றதாக இருக்கலாம். 1967-68 முன் பருவத்தில் மத்திய நெல் ஆராய்ச்சி நிலையத்தினுல் விவசாயிகளின் வயல்களில் நடத்தப்பட்ட தேசீய விளக்கங்களின் மூலம் ஹெக்டேருக்குச் சராசரி 4980 கிலோ, அதாவது ஏக்கருக்கு 2000 கிலோ மகசூல் கொடுப்பது காணப்பட்டது. மில் அறைவையில் 70 சதமும், தீட்டாத கொழியல் முறையில் குத்துவதால் 76 அல்லது 77 சதமும் அரிசி கிடைக்கும். அறைவையில் அரிசி அதிகம் உடைவதில்லை. உப்பு மண் நிலங்களில் ஐ. ஆர். 8, டி. என். 1 ஐக் காட்டிலும் உப்பைத் தாங்கும் சக்தியுடையது. விதை வேண்டுவோர் ''தேசிய விதைக் கார்ப்பொரேசன், விசயவாடா'' என்ற முகவரிக்கு எழுதவும்.

3. ஹம்சா நெல் (சி. 5342):

இந்த ரகம் ஆந்திரப் பிரதேச விவசாயப் பல்கலைக் கழகத்தினரால் வெளியிடப்பட்டதாகும். டைச்சுங் நேடிவ் 1, எச். ஆர் 12 என்ற ரகங்களை ஒட்டுச் சேர்த்து வெளியிடப்பட்டதாகும். தண்மைப் பிரதேசங்களில் ஐ. ஆர். 8, டி. என். 1 நெற்களின் வயது நீண்டு கொண்டே போகும்; ஆனால் ஹம்சாவின் வயது

ஹம்சா

முன்பட்டத்தில் 120 நாளும், பின்பட்டத்தில் சுமார் 130 நாளும்தான். இன்னும் சொல்லப் போனால் ஆந்திரப் பிரதேசத்தில் கடலோர வெப்பப் பகுதியில் இதன் வயது இன்னும் குறைந்து 105 நாளில் அறுவடைக்கு வரும். 60 கிலோ தழைச் சத்து அளவிலேயே சராசரியாக ஹெக்டேருக்கு 5000 கிலோ (அதாவது

ஏக்கருக்கு 2000 கிலோ-28 கிலோ தழைச்சத்தில்) மகசூல் கொடுக்கிறது. 100கிலோ தழைச்சத்து இடும்போது ஹெக்டேருக்கு 7000 கிலோ (அதாவது ஏக்கருக்கு 2800 கிலோ-45 கிலோ தழைச்சத்தில்) அளவில் விளைச்சல் உயர்ந்தது. சன்னரக, மிக நயமான, படிகம் போன்ற அரிசியையுடையது. ஆனால் குலை நோய், பாக்டீரியா இலைக் கருகல் நோய், ஆனைக் கொம்பு (Gall-fly) இவைகளுக்கு எளிதில் இலக்காகும் தன்மையுள்ளதாகையால் மேற்படி நோய்ப் பூச்சிகள் வழக்கமாகக் காணப்படும் பகுதிகளில் இதைப் பயிரிடக் கூடாது.

இந்த ரகத்தைப் பின் பருவத்தில் (Late season) பயிர் செய்யப் பரிந்துரைக்கப்படுகிறது. இப்போது மைசூரிலும், ஆந்திர மாநிலத்திலும் இந்த ரகம் பரவிவருகிறது. விதை வேண்டுவோர் ஆந்திரப் பிரதேச விவசாயப் பல்கலைக்கழகம், இராசேந்திர நகர், ஹைதராபாத் என்ற முகவரிக்கு எழுதவும்.

குறிப்பு:

பத்மா நெல் பயிரிட விரும்புவோர் கவனிக்க: குறுவைப் பட்டத்திலும், கார்ப் பட்டத்திலும் பத்மா நெல்லுடன் தமிழ்நாட்டு வெளியீடான ஆடுதுறை 27, கோ. 29, டி. கே. எம். 6 என்ற நெற்களையும் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள சாகுபடிச் செய்நேர்த்திக் குறிப்புக்களைக் கடைப்பிடித்துப் பயிர் செய்து செலவுத் தொகை உட்பட ஒப்பிட்டுப் பார்த்து எந்த ரகம் தங்கள் நிலங்களில் சிறந்த முறையில் மகசூல் கொடுக்கிறது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுதல் நலம்.

[கோவை விரிவினை இயல் வல்லுநர் வெளியிடும் விவசாயச் செய்திக் கதிரிலிருந்து எடுக்கப்பட்டது]



கரிசல் மண்ணில் கம்புப் பயிர்

கரிசல் மண்ணில் பொதுவாக பாஸ்பேட் மிகுதியாகவிருப்பதில்லையென்றும், அதைச் சேர்த்துக் கம்பு பயிரிடுவதால் நல்ல உற்பத்தி கிடைக்குமென்றும் கோயில்பட்டியிலுள்ள வட்டார ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்துள்ளது.

அக்டோபர் நவம்பர் மற்றும் ஜூன் திங்கள்களில் பயிரிடப்படும் இரண்டு கம்புப் பயிர்களுக்கும் இவ்வுரமுறை சாலச் சிறந்ததென்ற உண்மை தற்போது வெளியாகியுள்ளது.

ஒரு ஹெக்டேர் நிலத்தில் சூப்பர் பாஸ்பேட் பண்ணையுரமிட்டுக் கம்பு பயிரிட்டதில், 1,400 கிலோ கிடைத்துள்ளது. ஆனால் அதே ஒரு ஹெக்டேர் நிலத்தில் பண்ணையுரம் ஒன்றையே போட்டுப் பயிரிட்டதில் 1160 கிலோ வரைதான் விளைச்சல் கிடைத்தது. கோடையில் இரு உரங்களையும் சேர்த்துப் பயிரிட்டதில் 3970 கிலோவும், பண்ணையுரம் மட்டுமே போட்டுப் பயிரிட்டதில் 3200 கிலோவுமே விளைந்தன.

முன் சொன்ன பயிருக்கு 210 கிலோ சூப்பர் பாஸ்பேட்டுடன், 12·55 டன் பண்ணையுரமும், கோடைகாலப் பயிருக்கு 420 கிலோ சூப்பர் பாஸ்பேட்டுடன் 12·55 டன் பண்ணையுரமும் போடப்பட்டன.

நல்ல கல்வி

கல்வி, மனப் பழக்கம்:

மக்களை விலங்குகளிலிருந்து வேறுபிரிப்பது கல்வி; காரணம், மக்களுக்கே சிறப்பாக அமைந்துள்ள மன நலத்தைக் கல்வி பெருக்குகிறது. ''வைத்ததொரு கல்வி மனப் பழக்கம்.''

கற்றல் சிந்தித்தல் :

ஆழ்ந்து சிந்திக்கும் மனப் பயிற்சியே 'கல்வி' என்பது. 'கற்றல்' என்றாலும், 'கல்வி' என்றாலும், 'கற்பு' என்றாலும், சொற்பொருள் ஒன்றே. இதனை ஓர் உவமையாகத் தெய்வத் திருவள்ளுவர் விளக்கிக் காட்டுவார். மணற் கேணி தோண்டிய ஆழத்தினளவு நீர் ஊறும் எனவும், மனம் படைத்த மாந்தர் ஆழ்ந்து சிந்திக்குமளவு அறிவு ஊறும் எனவும் அப்பெருமான் தெரிவிப்பார்.

சிந்திப்பது எதனை?

ஆழ்ந்து சிந்திப்பது எதனை? நூல்களைப் படித்தாலும் அவற்றில் உள்ள கருத்துக்களையே ஆழ்ந்து சிந்திக்க வேண்டியுள்ளது. நூல்களில் உள்ள கருத்துக்கள், உலக இயற்கைகள், மக்களின் வாழ்க்கையியற்கைகள் முதலியனவே. அப்படியானால் ஆழ்ந்து சிந்திப்பதென்பது, பொதுவாக இயற்கையை என்றே கொள்ளலாம்.



இயற்கையிலுள்ள பொருள்களை இயன்றவரை சிந்தித்து நலம்பெறுவோரே, கல்வியாளர்! அதற்கு உதவுவனவே நூல்கள்!

சிந்தனைச் செல்வம் :

பிறவியில் இத்தகைய சிந்தனைச் செல்வம் தலையானது. மற்றவை இதற்கு நிகரானவையல்ல.

நுணுகி நுணுகி இயற்கையை ஆழ்ந்து சிந்திப்பவர், இயற்கைப் பொருள்களைப் பயன் கொண்டு வாழும் வகைபற்றியும் அறிந்து கொள்வர். மக்களிடமும் சிற்றுயிர்களிடமும் பழகும் வகைகளையும் உன்னியறிந்து, எங்கும் மகிழ்ச்சியும் நலமும் விளைவிப்பர்.

புலமையும் புலமைத் தொழிலும்:

உடம்பின் உட்கருவிகளும் புறக் கருவிகளும் இதற்கு மிகவும் பயன்படும். ஆராய்ச்சியால் புலன்களைப் பயன்படுத்தி, உலகப் புலன்களை நுனித்தறிந்து, மக்கள் புலவராவார்கள். அத்தகையோரை மற்றவர் காணும்போது மகிழ்ச்சியும் அவர் பிரியும்போது ஏக்கமும் உண்டாகும். உலகுக்கு உவப்பை உண்டாக்குவது புலவர் தொழில்!

புலவன்மார் பார்வை, அறிவை உமிழும். அல்லாதார் கண்கள் வெறும் புண்களென்றே எண்ணப்படும். அவர்கள் எங்கே சென்றாலும் அங்கந்த இடமும் ஆராய்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் பயன்படுமாதலால், எல்லாம் அவர்கட்கு உரிமையிடமே. தம்மைப்போல் மற்றவர்களையும் பயிற்சி செய்வித்து இன்புறச் செய்யும் ஆற்றல் அக் கல்வியாளரின் இயல்பு!

பிறவிதோறும் இந்நிலைமை பெருகி இன்புறுத்தும். ஆழ்ந்த சிந்தனையை எவ்வளவு காலம் செய்து வந்தாலும் அது மேன்மேலும் ஆழ்ந்து செய்வதோடு, முன் செய்த சிந்தனை பின் சிந்தனைக்கு உதவியாகவும் இருக்கும். ஒரு பிறவிச் சிந்தனை பல பிறவிக்கும் உதவும். அதனால் பிறவியின் இறுதி வரையிற் சிந்திப்பதும் நன்மையே.

செய்கையாளர் யார்?

சிந்தனை என்றாலும் எண்ணம் என்றாலும் பொருந்தும். பலகாலும் எண்ணுதல், உருச்செய்தல் என்றும் கூறப்படும். எண்ண எண்ண எண்ணம் செடலாகும். கற்றோர் அதனால் செயலாளராகின்றனர். கல்லாதார்க்கு இச் செயலறிவோ செய்கைகளோ இல்லை. செய்வோர் எவரோ அவரே கற்றோர்! எண்ணத் தெரிந்தவர்! சிந்தித்துச் செயலாற்றுவோர்!

எண்ணும் எழுத்தும்:

ஒரு பொருளைப்பற்றி எண்ணிவந்தால், அப் பொருளைப் பற்றிய சிந்தனையடுக்கு, பலதுறை உண்மைகளை அப் பொருளிலிருந்து விரித்துப் பல கலைகளை உண்டாக்குகிறது. அவற்றை எழுத்தில் வடித்தால், பல வகையான கலை நூல்களாகின்றன. அக் கலைகளும் எழுத்துக்களும் மக்களுக்கு உண்மையான அகக் கண்களாகும்.

மேன்மேற் கல்வி:

உலகியற்கை அவ்வளவையும் ஒரு மனிதர் ஒரு பிறவியில் ஆழ்ந்து எண்ணி நிறைவு பெற்றுவிட முடியாது. சூழலில் உள்ள சிலவற்றை வாழ்வுக்குப் பயன்படு முகமாகக் கற்றுக்கொள்ளுதல் இயல்வதாகும்.

கற்பவை கற்றபின், அதுவும் பெரியோர் துணைகொண்டு ஐயந்திரிபுகளாகிய கசடுகள் அறக் கற்றபின், நடக்கையிற் பயன்படுத்துதல் வேண்டும்; கற்றபடி நடக்கை கொண்டால், அது வாழ்க்கைக்கு நலம் செய்வதோடு, மேன்மேற் கல்வி பெறுதற்கும் உதவும். கற்றவரையில் நடந்து நடந்தே தெரிந்தோர், மேன்மேற் கல்விகளைப் பெறுகின்றனர். நடக்கையில் தெளிந்து அப்படிப் பெறுங் கல்வியே உண்மைக் கல்வி!

குறிக்கோளும் அடைவும்:

கற்றலைக் 'கல்வி' என்று சொல்லுவதனாலும், பெரும்பாலும் 'கற்பு' என்பது ஒருவனைப் பற்றி ஓரகத்திருப்பதாய் வழங்குவதனாலும், கல்வியின் குறிக்கோளும் அடைவும் இனிது விளங்குகின்றன.

உலக இயற்கைப் பொருள்களை ஆழ்ந்து எண்ண எண்ண, அப்படி எண்ணுவோர், அவற்றின் அடிப்படையையே அடைகின்றனர். அதாவது அவற்றின் பாதத்தையே தொடுகின்றனர்.

அந்த அடிப்படை என்பது, எல்லா இயற்கைப் பொருள்களுக்கும் மூல

மாய், அவை யெல்லாவற்றிலும் கலந்து நிறைந்து அவற்றை ஓர் ஒற்றுமையில் நெறிப்படுத்தி நிற்ப தாய், இவற்றின் இயக்கங்களுக்குக் காரணமாய், எல்லாம் வல்லதாய், எல்லாம் நிலை மாறும்போதும் தான் நிலை மாருததாய், தனக்கு உவமை இல்லாததாய், தன்னைத் தடைக்கு மேல் நின்று இயக்குவதும இல்லாத தாய்த் தன்ப்பெருந் தலைமையில் திகழும் ஒரே ஒரு பேரறிவுப் பொரு ளாகத் தோற்றுகிறது. அதனையே பெரியோர், 'கடவுள்' என்று துணிந்து எல்லாம் வல்ல அதன் முழு முதல் ஆற்றலைத் தெளிந்து, உண்மை அம்மையப்பராய்க் கண்டு அதனில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆதி பகவனுகிய இந்த ஆதிமூலத் தையே உலகம் முதலாக உடைய தென்று, உலகக் குரவர் திருவள்ளுவ ரும் தெரிவித்தார். திருவள்ளுவர் வாக்கு மறைவாக்கு என்று பேர் பெற்றது!

இம் முதல்வன் பாதமே பற்றி நின்றுரைப் பற்ரு பாவம் என்று சமயக் குரவர் திருஞான சம்பந்தரும் வாக்களித்தார்.

இப்படி ஒருவனைப் பற்றி ஓருள்ள மாயிருத்தல் 'கற்பு' எனப்படும். கல்வியின் பயன் அப்பேரறிவுப் பொருளின் நற்ருள் தொழுதலே என்று மக்கள் துணிந்து, வாழ்க்கை யைச் செம்மைப படுத்திக் கொள் வார்களாக! ஆணையோடு கூடிய நிம் மதியும், உள்வீறு பெற்ற அமைதி யும், செயலாற்றல் சிறந்த வல்லமை யும், வள்ளன்மையும ஓங்கியவர் களாய் விளங்குவார்களாக!

பயனற்ற கல்வி :

அந்நிலை பெருத கல்விகள் பொரு ளற்ற கல்விகளாய் வீண்படும்; அத் தகைய கல்வியைக் 'கல்லாமை' யென்றே கூறிவிடலாம். அது நற் கேள்வியும் ஆகாது, பெறுவது நற் பேறும் ஆகாது.

கற்றுங் கல்லாமையான அதனுற் குற்றங் கடிதல் இயலாது; பெரி யோர் துணையுங் கூடாது.

மக்கள் சிற்றினமாய், எதனையுந் தெரிந்து செய்ய மாட்டாதவராய், ஆற்றல் அடையாதவராய், காலமும் இடமும் தெள்ந்து நடக்க இயலா தவராய், ஆய்ந்து செயல்படாதவ ராய், சூழலைப் பயன்கொள்ள அறி யாதவராய், வாழ்க்கையை வீணுக் கிக் கொள்வர்.

விரும்பத்தக்கது :

உலகம் மிக ஆழ்ந்த சிந்தனையால் நற்கல்வி கேள்விகளும் அறிவும் உடையதாய் விளங்குக என விரும்பு வோம்.

ஊராட்சிகளுக்குப் பரிசு

காந்தி அண்ணல் நூற்றுண்டு விழா நினைவாகச் சிறந்த ஊராட்சிச் சமிதிகளையும், சிறந்த ஊராட்சிகளையும் தேர்ந்தெடுத்து அவற்றிற்குப் பரிசளிப்பதென மகாராட்டிர அரசு முடிவு செய் துள்ளது.

சிறந்த ஊராட்சிகளுக்கு முதற் பரிசாக . 3000மும், இரண்டாவது பரிசாக, ரூ. 2000மும், மாவட்ட அளவில் ரூ. 10,000மும் வழங்கப்பெறும்.

'குருட்சேத்திரா'—இதழிலிருந்து



முப்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாட்டின் எல்லாப் பாகங்களிலும் மக்கள் மத்தியில் ஒரு புதிய உணர்ச்சியும் வேகமும் காணப் பட்டது. தேசத்தந்தை காந்தியடி கள் ஆங்கில அரசை எதிர்த்து வர லாறு காணுத ஒரு புதிய முறையில் சுதந்திரத்திற்காகத் தேசத்தையே ஒரு போராட்டத்திற்குத் தயார் செய்து கொண்டிருந்தார். இன்றுள்ள குஜராத் மாநிலத்தில் இருக்கும் 'தண்டி' என்ற கடற்கரை நகரை நோக்கி ஒரு புனிதப் பயணம் செய்து கொண்டிருந்தார். அவருடைய பய ணம் முடிவுக்கட்டத்தை நெருங்கும் போது ஆங்கில அரசு அவரைக் கைது செய்துவிட்டது. இந்தச் செய்தி நாடெங்கிலும் ஒரு பரபரப்பையும் ஆவேசத்தை யும் எதிரொலிக்கச் செய்தது. விடுதலை வேட்கை திருச்சி தேசியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாண வனையும் ஆட்கொண்டது. அது அவன் கடமையை நினைவு படுத்திஅவனுடைய உணர்ச்சி களைத் தட்டி எழுப்பியது. அந்தச் சிறுவன் மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட் டிக்கு அருகாமையிலுள்ள கோபிநாயகன்பட்டி என்ற சிறிய கிராமத்தைச் சேர்ந்த வன். வசதியற்ற குடும்பத்தில் பிறந்ததன் விளைவாகப் படிப்பை விரைவில் முடித்துக்கொண்டு ஏதாவ தொருவேலையில் அமர்ந்து குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண் டிய நிலையிலிருந்தான். நல்வாய்ப்பும் அவனை நாடிச் சென்றது. நிமிர்ந்த நடையும், உறுதியான உடற்கட்டும் உடைய அவன் அப்போது எல்லோ ருக்கும் கவர்ச்சியாக இருந்த காவல் துறையில் சப் இன்ஸ்பெக்டர் பத விக்கான தேர்வில் வெற்றி பெற்ருன். ஆனல் அந்த இளைஞனின் மனது அரசாங்க வேலையில் நாட்டங் கொள்ளவில்லை. விடுதலைப் போராட் டத்தில் குதித்துத் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று அவன் எண்ணி ஞன். தான் படித்த கல்லூரி முதல் வரிடம் தன்மனப் போராட் டத்தை விளக்கிஞன். கல்லூரி முதல்வரும் விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்து நாட்டுக்குத் தொண்டு செய் வதே அவனுடைய உள்ளப் போக்கிற்கு உகந்தது என்று முடிவாகக் கூறிவிட்டார். இளைஞனும் பெரும் மகிழ்ச்சி யோடு அரசியல் போராட்டத் தில் குதித்தான். அவ்விளை ஞன்தான் சென்ற ஜூன் பதின்மூன்றும் நாள் (13-6-'69) மதுரை எர்ஸ்க்கின் மருத்துவ இல்லத்தில் இதய நோய் காரணமாக மறைந்த, தமிழ் நாடு போற்றும் ஒப்பற்ற தேசத் தொண்டர் உயர்திரு

கோ. வேங்கடாசலபதி ஆவார்.

திரு. வேங்கடாசலபதி அவர்கள் 1930ஆம் ஆண்டிலிருந்து 1946ஆம் ஆண்டுவரையில் நாடு விடுதலை அடைவதற்காகப் பல போராட்டங்களில் பங்கு கொண்டார்கள். அதன்காரணமாகப் பல முறை சிறை செல்ல வேண்டியிருந்தது. கிராம மக்களைச் சுதந்திர இயக்கத்தில் பெருவாரியாக ஈடுபடுத்தும் பணியில் அவர் கவனம் செலுத்தினர். அவர் மேற்கொண்டிருந்த ஆசிரியத் தொழில் இதற்கு நல்ல வாய்ப்பளித்தது. தன்னுடைய மாணவர்களுக்கெல்லாம் பாரதியின் உணர்ச்சி மிக்க கவிதைகளை அப்பிஞ்சு உள்ளங்கள் நெகிழும் வண்ணம் சொல்லிக் கொடுப்பார். அண்ணல் காந்தி காட்டிய அறவழியில் செல்லத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டார். மதுரை மாவட்ட ஊராண்மைக்கழக உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதன் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். அவர் துணைத்தலைவராக இருந்த காலத்தில் பல வழிகளில் ஆரம்பப் பள்ளிகளின் வேலைத்தரம் உயர்வதற்காகப் பாடுபட்டார். ஆரம்ப ஆசிரியர் கூட்டமே அவரைத் தம் குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் என்று கருதிற்று.

அரசியலில் முழுமையாக ஈடுபட்டிருந்த திரு. வேங்கடாசலபதிக்கு அன்றே கிராமமக்களைப்பற்றிய கவலை உள்ளத்தே உறுத்திக் கொண்டுஇருந்தது. தான் சிறுவனாக இருந்த காலத்திலேயே தன்னுடைய கிராமத்திலிருந்து விளைபொருள்களை விருதுநகர் சந்தைக்குக் கொண்டு செல்வதைப் பார்த்திருந்தார். ஆண்டு தோறும் பாடுபட்டு மக்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் அந்த வேளாண்மைக் குடியினர் நிலைமை தேய்ந்து வருவதையும் நன்கு அறிந்திருந்தார். அதே நேரத்தில், அந்த விவசாயப் பொருள்களைப் பெற்று வாணிபம் செய்த விருதுநகரோ பெரும் நகரமாக வளர்ந்து வளர்ந்து வருவதையும் கூர்ந்து கவனித்தார். காந்தியடிகள் கிராமப் பொருளாதாரத்தைப்பற்றி எடுத்துரைத்த கருத்துக்களின் உண்மையைத் தெளிவாகக் கண்டார். கிராம மக்கள் காந்தியடிகள் கூறிய முறையில் தன்னிறைவு பெற்று வளர்ச்சியடைய வேண்டும்; அந்தப் பணியில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு ஓர் அமைப்பைத் துவக்க வேண்டுமென்று முடிவு செய்தார். அதன் விளைவாக ஏற்பட்டதுதான் இன்று காந்தீய நிர்மாணப் பணியில் சிறந்து விளங்கும் 'காந்தி நிகேதன ஆஸ்ரமம்.' ஆதாரக் கல்வி, கதர், கிராமக் கைத்தொழில்கள், அரிசனத் தொண்டு, முதியோர் கல்வி போன்ற திட்டங்கள் இவ்வமைப்பு தொடங்கிய காலம் தொட்டே நிறைவேற்றப்பட்டு வந்துள்ளன. இன்று இந்த அமைப்புப் பெரிய தொரு வளர்ச்சியடைந்திருக்கிறது; சுற்று வட்டாரக் கிராமங்களுக்குச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகிறது.

திரு. வேங்கடாசலபதி அவர்களின் கிராமப்பற்றும், தூய தொண்டும் 1947ஆம் ஆண்டில் அரசின் கவனத்தைக் கவர்ந்தன. அன்று தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த ஓ. பி. இராமசாமி ரெட்டியார் அவர்கள் திரு. வேங்கடாசலபதியைப் ''பிர்க்கா அபிவிருத்தித்'' திட்டத்திற்குப் பொறுப்பேற்கும்படி அழைத்தார்கள். இன்று சமுதாய நலத்திட்டம் போன்றவைகட்கெல்லாம் இந்தப் பிர்க்கா அபிவிருத்தித் திட்டமே முன்னோடியாக இருந்தது. கிராமப் பணிகளுக்குக் கிராமத் தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும் என்று அப்பொழுதே திரு. வேங்கடாசலபதி அவர்கள் வற்புறுத்தி வந்தார்கள். மக்கள் வாழ்வுக்கு இன்றியமையாத உணவு உற்பத்தி செய்யும் வேள்வியில் ஈடுபட்டிருக்கும் வேள்விச்சாலைகளாக ஊர்களை அரசாங்கம் கருத வேண்டுமென்றும் அவற்றின் வளர்ச்சியைப் புறக்கணித்து விடக்கூடாதென்றும் எல்லாத் துறைகளைச் சேர்ந்த தலைவர்களுக்கும் அலுக்காது எடுத்துரைத்து வந்தார்.

'இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்'

என்ற குறளை அடிக்கடி எடுத்துரைத்து விளக்கம் தருவார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கிராமங்களின் வளர்ச்சியில் கவனம் செலுத்தினர்கள் என்றால் அதற்கு முக்கியக் காரணம் திரு. வேங்கடாசலபதி அவர்கள் தான். 1953ம் ஆண்டில் National Extension Scheme 'தேசிய வளர்ச்சித் திட்டம்' உருவாயிற்று. அத்திட்டத்துடன் பிர்க்கா அபிவிருத்தித் திட்டமும் கலந்து விட்டது. அரசாங்கம் திரு. வேங்கடாசலபதி அவர்களைத் தலைமைச் செயலகப் பொறுப்பு நிலையுள்ள கிராம வளர்ச்சி இயக்குநராக நியமித்தது. இத்திட்டத்திற்கு மத்திய அரசாங்கத்தில் பொறுப்பை ஏற்றவர் திரு. எஸ். கே. டே அவர்கள். திரு. வேங்கடாசலபதி அவர்கள், கிராமங்கள் வளர்ச்சியடைய வேண்டுமென்றால் கிராம மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்றங்கள் (கிராமப் பஞ்சாயத்துக்கள்) உருவாக வேண்டுமென்று உறுதியாக நினைத்தார்கள். நல்வாய்ப்பாக உயர்திரு. ஆர். ஏ. கோபால்சாமி, I. C. S. அவர்கள் தமிழ் நாடு அரசுத் தலைமைச் செயலாளராகப் பதவி ஏற்றார்கள். திரு. வேங்கடாசலபதி அவர்கள் அரசாங்கத் தலைமைச் செயலாளர், இந்நாட்டின் நிலைமைக்கேற்ப அபிவிருத்திக் கமிஷனராகப் பணியேற்கவேண்டுமே தவிர ஆங்கில அரசாங்கம் இயங்கியது போல் நிர்வாகப் பொறுப்பு ஏற்று நடத்துவதுசரியல்ல என்று விளக்கினார்கள். திரு. ஆர். ஏ. கோபால்சாமி அவர்கள் கிராம வளர்ச்சியில் பெரும் அக்கறை கொண்டு திரு. வேங்கடாசலபதி அவர்கள் ஆலோசனைப்படி ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் சனநாயக முறையில் அமைவதற்கான வழிவகைகள் செய்து, அதற்கான ஒரு மசோதாவையும் தயார் செய்தனர்கள். இன்று தமிழ் நாட்டிலே பன்னிரண்டாயிரத்துக்கு மேற்பட்ட ஊராட்சிகளும், முன்னூற்று எழுபத்து நான்கு ஊராட்சி ஒன்றியங்களும் இயங்கி வருகின்றன என்றால் அதற்கு முக்கியக் காரணம் திரு. ஆர். ஏ. கோபால்சாமி அவர்களும் திரு. வேங்கடாசலபதி அவர்களுமே ஆவர்.

எல்லா அதிகாரங்களும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று வாதாடி வளர்ச்சித் துறைகள் அத்தனையும் ஒன்றுபட்டு ஒன்றியங்கள் மூலம் செயல்பட வைத்தார். ஒன்றியங்களெல்லாம், காந்தி கண்ட 'கிராம ராஜ்யம்' என்னவென்பதை எல்லோரும் அறிந்து கொள்ளும் வண்ணம் விளம்பரப்படுத்தவேண்டும் என்று கூறினர். ஒன்றியங்கள் பள்ளிகளைச்சரிவர நடத்த வேண்டுமென்றும், ஒன்றியப்பள்ளிகள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்க வேண்டுமென்றும் கூட்டங்கள் கூட்டி ஆசிரியர்களிடம் ஓயாது கூறிவந்தார்.

காந்தி கண்ட ஊராட்சி அமைப்பைப் பற்றி விளக்கும்பொழுது கீழ்க்கண்ட கூற்றை மேற்கோளாக எடுத்துரைப்பார். ''கிராமம் ஐந்து பேரைக் கொண்ட பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்தப் பஞ்சாயத்தின் மூலம்தான் கிராம நிர்வாகம் நடைபெறும். ஆண்டுதோறும் இந்தப் 'பஞ்சாயத்து' தேர்ந்தெடுக்கப்படும். சில குறிப்பிட்ட தகுதி உள்ள ஆண்களும்பெண்களும் இப் பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவர் ஆவர். அவசியமான அதிகாரமெல்லாம் இந்தப் பஞ்சாயத்துக்கு இருக்கும். இப்பஞ்சாயத்து, சட்ட சபையாகவும் இருக்கும். அதன் பதவிக் காலத்தில் நீதி மன்றமாகவும், அரசாங்கமாகவும் இருக்கும். கிராமக் குடியரசில் தனி மனிதர் சுதந்திரத்தை அடிப்படை

யாகக் கொண்ட பூரண குடியாட்சி இருக்கும். ஒவ்வொரு மனிதனும் தன் அரசாங்கத்தின் சிற்பியாக இருப்பான். அவனும் அவனது அரசாங்கமும் அகிம்சையின் விதிப்படியே நடப்பர். உலகமெல்லாம் திரண்டு வந்தாலும் அவர்கள் எதிர்க்கும் சக்தி உள்ளவர்களாக இருப்பர். ஏனெனில் ஒவ்வொரு கிராமவாசியும் தனது மானத்தையும் தனது கிராமத்தின் மரியாதையையும் பாதுகாப்பதற்காகத் தன்னுடைய உயிரையும் கொடுக்கத் தயாராக இருப்பான்.''

''இங்கு நான் விவரித்திருப்பவைகளில் மனித சக்திக்கு அப்பாற்பட்டது எதுவும் இல்லை. இப்படிப்பட்ட மாதிரிக் கிராமம் ஒன்றை அமைப்பது வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டிய சேவையாக இருக்கலாம். ஆனால் உண்மையான குடியாட்சியையும் கிராம வாழ்க்கையையும் விரும்பும் ஒருவர், ஒரு கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அதைத் தமது உலகமாகக் கருதி, தமது முழுச் சேவையையும் அதற்கே அளிக்கலாம்.''

இவ்வாறெல்லாம் கூறிவந்தும் கிராமங்கள் சரிவரக் கவனிக்கப்படவில்லை என்று தன் இறுதிக் காலத்தில் மிக்க வேதனையுடன் கூறிவந்தார்.

''காலப் போக்கில் கிராமவாசியை நாம் ஓரளவு மறந்துவிட்டோம். 'மனிதனை உருவாக்கும்' நோக்கத்தில் நாம் முழு வெற்றி பெறவில்லை. ஒவ்வொரு தனி மனிதனையும் மாற்றுவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். இதில் கிராமப் பஞ்சாயத்துக்கள் ஆற்றவேண்டிய பங்கை மறத்தல் கூடாது.''

உயர்திரு டி. பிரகாசம் அவர்கள் இம் மாநிலத்தின் முதல்வராக இருந்தபோது காந்தியடிகளுடன் கலந்து ஆய்ந்து, அரசே நேரடியாக ஏற்று நடத்தும் கதர்த் திட்டம் ஒன்றைத் தயார் செய்தார். அவருடைய வீழ்ச்சிக்குரிய பல காரணங்களுள் இந்தத் திட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்டு நூற்பு ஆலைகளைப் புதிதாக அனுமதிக்க மறுத்ததுவும் ஒன்றாகும். திரு. வேங்கடாசலபதி அவர்கள் திரு. பிரகாசம் அவர்கள் கொண்டுவந்த திட்டத்தை முழு மனதுடன் ஆதரித்தார்கள். தான் அரசாங்கப் பொறுப்பு ஏற்ற பின்பு கதர் திட்டத்தில் மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டார். இன்று இந்தியாவிலேயே வேறெங்கும் அரசு நேரிடையாகக் கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதைக் காணமுடியாது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் கதர் இயக்கத்திற்கென்றே ஓர் அமைப்பும், தனித் துறையும் ஏற்பட்டுள்ளதென்றால் அதற்குக் காரணமாயிருந்தவர் திரு. வேங்கடாசலபதி அவர்கள் தான். மேமாதம் 19ஆம் நாள் அவர் கடும் நோய்க்குள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருபத்தைந்து நாட்கள் அந்நோயுடன் போராடி மறைந்தார்கள். மே மாதம் 16ஆம் நாள் எழுதியிருந்த கடிதமொன்றில் இக் கதர் இயக்கத்தின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற வினாவை எழுப்பி, ''அரசியலில் அகிம்சையை நான் கண்டு பிடித்தது போலவே, பொருளாதாரத் துறையில் கதர் என்னுடைய கண்டுபிடிப்பு ஆகும் என்று காந்தியடிகள் சொல்லியிருக்கிறார். மாமுனிவர்கள் நினைத்தது வீணாய்ப் போகாது என்று நிறைவுகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.'' என்று தன் மன ஓட்டத்தை வரைந்திருந்தார்.

மறைந்த திரு. வேங்கடாசலபதி அவர்களைத் தெரியாத கிராம ஊழியரோ, கதர்ப் பணியாளரோ தமிழ் நாட்டில் இருக்கமுடியாது. கூறப்போனால் அவர்களில் பெரும்பாலோர் திரு. வேங்கடாசலபதி அவர்களுக்குக் கடமைப்பட்டவர்கள். ஆகவே உரமுள்ள கிராம சமுதாயத்தை, காந்தி கண்ட நெறியிலே வளர்ப்பது ஒன்றே நாம் அவர் நினைவாகச் செய்யக்கூடிய சிறந்த பணியாகும்.



ஏரணிக்கு நேரணியாய் நன்றாய் ஓங்கி,
தாரணியில் ஓரணியாய் நிற்கும் நல்ல
ஊரணியாய்ச் செயலணியாய்ச் சாற்றும் வீரச்
சீரணியில் தமிழர்தொண்டு சிறந்து வாழ்க!

அறிஞர்விரல் அசைவினிலே அமைந்த கூட்டம்!
வறிஞர்குரல் மாற்றுவதில் உள்ளம் நாட்டம்!
கலைஞர்வழி இளைஞர்பலர் செல்லும் ஓட்டம்!
கொலைஞர்களும் சீரணியால் பெறுவர் மாற்றம்!

ஆதிமுதல் ஆற்றிடும்நல் அருந்தொண் டெல்லாம்
ஊதியங்கள் பெற்றிடாமல் உழைப்பால் நல்கும்!
நாதியற்றோர் நல்வாழ்வில் துணையாய் நிற்கும்!
சாதிமதத் தீண்டாமை அகற்றிக் காக்கும்!

எண்ணெழுத்தும் கண்ணெனவே போற்றிக் காக்கும்!
ஏட்டறிவும் நாட்டறிவும் எடுத்துச் சொல்லும்!
பள்ளித்தலம் அத்தனையும் பாங்காய்க் கட்டி
பாரதியின் பாக்கனவை நனவாய்ச் செய்யும்!

உழவினையும் தொழிலினையும் வணக்கம் செய்து
உழைப்பினையும் தந்துஉயர் பேரும் சேர்க்கும்!
தன்மதிப்பு நம்பிக்கை உளத்தில் வைத்து,
அன்புவழிச் சொல்லிநாட்டின் கேட்டை நீக்கும்!

மடமைஇருள் மண்டலத்தில் மாற்றச் செய்ய
கடமைதனைக் கடைப்பிடிக்கும் கருத்தைச் சொன்னார்!
புண்ணியத்தால் புதுவுலகை எண்ணும் மக்காள்
கண்ணியத்தால் பூவுலகில் புகழைச் சேர்ப்பீர்!

உன்புலத்தில் கட்டுப்பாடு செய்தால் போதும்!
தென்னகத்தார் வாழ்வுஎன்றும் சிறந்தே ஓங்கும்!
எவ்வணிக்கும் இக்கருத்து ஏற்கா தென்றே
சீரணியாம் பேரணியை 'அண்ணா' செய்தார்!

என்கடனும் பணிசெய்து கிடப்ப தென்றே,
தன்னலத்தைப் பேணுத நடுவர் கூட்டம்!
இப்புரவும் அப்புரவும் உலகில் நாட்டி,
நாட்டுறவும் கூட்டுறவும் உளத்தில் காட்டும் !

அறவழியில் பொருள்நிலையை அடையச் செய்து,
குறள்நெறியைப் பூவுலகில் நிலைக்கச் செய்வர் !
அருள்பொழியும் அறிஞர்வழி பத்துச் சொல்லும்
இருள்அகற்றி இன்பத்தமிழ் நாட்டை வெல்லும் !

செங்காவல் படையிதுவோ எனவே அஞ்சி,
தங்காமல் பறைசாற்றி வந்தார் எத்தர் !
சீரழிக்க வந்தஒரு சிவசேனைப் போல்
சீரணியும் அதுவெனவே சீறிப் பாய்ந்தார் !

அறிஞர்அண்ணு அணிவிளக்கம் அறைந்த போது,
வெறியர்விழி பிதுங்கிநிலை தளர்ந்தார் பாரில் !
நல்லணியே சீரணியாம் நாட்டைக் காக்கும்
சொல்லணியாய் சிறந்துபுகழ் சேர்த்து வாழ்க !

With Best Compliments
from
KUTTI & NATHAN
Authorised Dealers in AEI and GEC Motors, Lister Engines, Kilburn Starters, Pumps, Pipes and Accessories.

Head Office :
Post Box No. 1936
, Angappa Naicken Street,
MADRAS-1
Phone : 24874

Branch Office :
93, Nageswaran North Street
KUMBAKONAM
Phone : 651



மேற்குக்கோதாவரி (ஆந்திர மாநிலம்) உழவர்களுக்குப் பல்லாண்டுகளாக ஒரு பெருங்குறை நீங்கப் பெருமலேயே இருந்தது.

வேளாண்மையையே தழுவி வாழும் இப்பகுதி வாழ் மக்களின் வயல்களுக்கு நிலையான, போதிய பாசன வசதிகளேயில்லை. வானத்தை உற்று நோக்கி, மழையை எதிர்பார்த்து, வேளாண்மை செய்யும் இவர்களைக் கடுமையான வறட்சி சென்ற ஆண்டு தாக்கியதில் நிலைமை மேலும் மோசமாயிற்று.

எர்ணகூடெம் என்ற இடத்தில் ஒரு துணை மின் நிலையத்தை அமைத்து, அதன் வாயிலாக அப்பகுதி உழவர்களுக்கு மின் வசதியளிக்கப்பட்டால், நிலத்தினடியிலுள்ள நீரனைத்தையும் வெளிக்கொணர்ந்து, விளைச்சலைப் பெருக்க உழவர்கள் காத்து நின்றனர். ஆனல் அந்த மின்வசதியோ கிட்டாத ஓர் அரிய பொருளாகவே அவர்களுக்கு இருந்துவிட்டதே!



குன்று உழைப்பிற்கு

அண்மையில் எர்ணகூடெம் என்ற இடத்தில் துணை மின் நிலையம் நிறுவப்பட்டுவிட்டது. இந்தச் சாதனைக்குப் பின்னணியாக மக்களும், அலுவலர்களும், மேற்குக் கோதாவரி மாவட்ட வளர்ச்சி மன்றத்தினரும் ஒன்று சேர்ந்து நின்று அரும்பாடுபட்டனர்.



செயலில் எளிதல்ல...

இதற்கென ஆந்திர மாநில அரசும், மின்வாரியமும் ஒன்றுகூடி ஒரு திட்டத்தை உருவாக்கினர். வேளாண்மைக்செனக் குறைந்தது 20 உழவர்களாவது ஒன்றுசேர்ந்து, ஒவ்வொருவரும் ரூ. 2500ஐ முன்பணமாகச் செலுத்த முன்வரின், அவ்வூருக்கு மின் வசதியளிக்கப்படும் என்பதே அத்திட்டமாகும்.



ஆனல் செயலளவில் இது எளிதல்ல. ஏனெனில் இதற்கு முதலில் நிலவளவுச் செய்யவேண்டும். கிணறுகள் தோண்ட மூலதனம் வேண்டும். மின்வாரியத்திற்குப் பணம் கட்டக் கடன் வேண்டும். இவை பற்பல துறைகள் தொடர்புள்ள ஒரு திட்டமாகும்.

துறைகளனைத்தையும் ஒன்றுசேர்த்துக் காரியமாற்றும் பணியினைச் செய்ய, மாவட்ட வளர்ச்சி மன்றம் மகிழ்ச்சியுடன் பொறுப்பேற்றுக் கொள்ள முன்வந்தது.

தொடக்கத்தில் மூன்று ஊராட்சிச் சமிதிகள் இத்திட்டத்தில் சேர ஆர்வங் காட்டின. இதனுல் 31 கிராமங்களில் 1020 இறைவை இயந்திரங்களுக்கு மின் வசதி கிடைப்பதுடன், 6 தொழிற் பிரிவுகளுக்கும் 500 வீடுகளுக்கும் மின்வசதி கிடைக்கும். எண்ணிறந்த தெரு விளக்குகளும் பொருத்தப்படலாம்.

அலுவலகம் இல்லத்திற்கு வந்தது...



கிராமவாசிகள் பலதுறை அதிகாரிகளை நாடிச் செல்வது முதலில் தவிர்க்கப்பட்டது. தொடர்புள்ள அதிகாரிகளனைவரும் ஒவ்வொரு கிராமவாசியின் இல்லத்திற்கும் சென்று, படிவங்களைப் பூர்த்தி செய்து, கடன்களுக்கு ஒப்புதல் வழங்கினர்.

மின்வாரியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய முன்பணம் முழுவதும், நில அடமான வங்கியின் வாயிலாகப் பெறப்பட்டது. கிராமத் தலைவர்கள் ஒன்றுகூடி, விண்ணப்பங்களைப் பெற்று, தாமே நடவடிக்கை மேற்கொண்டனர். வெகு விரைவிலேயே நில அடமான வங்கியினர் எல்லா உழவர்களுக்கும் சேர்த்து ரூ. 23,35,000ஐக் கடனுக வழங்கினர்.



இது முடிவுற்றதும் மின் வாரியத் தலைவரை அணுகி, முன் பணத்தை அளித்தனர். மக்களும், அதிகாரிகளும் நிலையை அவரிடம் தெளிவாக விளக்கினர்.

அழியா நினைவு

மக்களின் பேரார்வத்தை நேரில் கண்ணுற்ற அவர், எர்ணகூடெத்தில் ஒரு துணை மின் நிலயத்தை நிறுவுவதற்கும், அதற்குத் தேவையான அலுவலர்களுக்கும் உடனே ஆணை பிறப்பித்தார்.



ஓய்வில்லா உழைப்பு...



மின் வாரியத்தின் ஆணை கிடைத்ததும், திட்டம் புது ஊக்கத்தையும், வேகத்தையும் பெற்றது. இரவும் பகலுமாகத் தொடர்ந்து வேலைகள் நடைபெற்றன. ஊராட்சி அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், ஊர்க் கணக்கர் போன்ற கிராம அதிகாரிகள், நில அடமான வங்கியினர், கூட்டுறவு, பத்திரப்பதிவுத் துறையினர் போன்ரோர் ஒன்றுகூடி, ஆர்வத்துடன் செயலாற்றியது மெத்தப் போற்றுதற்குரியதாய் அமைந்து பெருவியப்பைத் தந்தது.

கிராமங்களுக்கு மின் வசதியளிப்பதற்கு முன், துணை நிலயத்தை நிறுவியாக வேண்டும். மக்களின் உற்சாகத்தைக் கண்ணுற்ற மின் வாரியத்

தலைவர் வாரியத்தின் செலவிலேயே 33/11 கிலோவாட் துணை நிலையத்தை ரூ. 11 இலட்சம் செலவில் அமைக்க ஆணையிட்டார்.

பிரச்னைகள் தகர்ந்தன...

துணை நிலையம் அமைப்பதற்குரிய நிலமும், பெரும் பிரச்னைகளின்றிப் பெறப்பட்டு மின்வாரியத்திடம் அளிக்கப்பட்டது.

தொடர்ந்து வந்த மூன்று வறட்சிகளின் காரணமாக, உழவர்கள் மிக்க இன்னலுற்றிருந்தனர். முதலாவதாகச் செலுத்தக்கூடிய தொகையைக் கூடச் செலுத்திக் கடன் பெறவியலா நிலை அவர்களுடையதாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் இதற்கொரு முறையைக் கையாண்டு நல்லுதவி செய்தார். தக்காவிக் கடன்களை அளித்து அத்தொகையைக் கொண்டு முன் பணம் அளிக்க வகை செய்தார்.

1968ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் நாளன்று துணை நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப் பெற்றது. அந்த நல்ல வேளையில் இத்திட்டத்தின் வெற்றிக்கென அயராதுழைத்து அரும்பணியாற்றிய கிராம அதிகாரிகள், வட்டார வளர்ச்சி அதிகாரிகள், மக்கள் தலைவர்கள் போன்றோருக்கு வெள்ளிப்பதக்கமும், நற்சான்றிதழும் வழங்கப்பட்டன. அண்மையில் துணை நிலையம் இயங்கத் தொடங்கிவிட்டது.

எர்ணகூடெம் மின் துணை நிலையம், மக்கள்—அதிகாரிகளின் குன்றா உழைப்பிற்கு அழியா நினைவாய்க் கவினுற விளங்குகிறது.

'பஞ்சாயத் ராஜ்'—இதழிலிருந்து

"முழு வயிறு காணாதார், முதுகெலும்பு முறியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணார், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர்—இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய், கொடிமரமாய், பாதையாய், பகட்டுக்களாய், அமுல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

வியர்வை பணமாகிறது—வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழகம் முதல் தொடக்கப் பள்ளிவரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந்நாடு இந்நாளில் உள்ளது என்பதனை, எத்தனை ஏழ்மை இடையில் இந்நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றனர் என்பதனை மாணவர் உணர்ந்திடின் அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும். ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே இத்தனையும் தந்திடும் ஏழையர்க்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்."

— அண்ணா

அண்ணல் காந்தியாருக்கு நூற்றாண்டு விழா வருகிறது!

அவராலே சுதந்திரப் பறவைகளாக்கப்பட்ட நாம், அவர் காட்டிய வழியில் எவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறோம்? அவருக்கு நன்றி செலுத்தவும் அஞ்சலி செய்யவும் எந்த அளவு நம்மைத் தயார் செய்து கொண்டிருக்கிறோம்?

இரண்டும் கொஞ்சம் தயக்கத்துடன் பதில் சொல்லக் கூடிய கேள்விகள்!

வாழ்நாள் முழுவதும் கிராமங்கள் நலம்பெற வேண்டும் என்பதற்காகவே வாழ்ந்தார் அவர்!

அவர் அடியொட்டி வந்த கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் என்னென்ன செய்கிறது கிராம நலத்துக்கு?

பல பேருக்கு முழு விவரமும் தெரிய நியாயமில்லை.

ஒரு கட்டுரைக்குள் - ஒரு புத்தகத்துக்குள் அடக்கிவிடமுடியாத - அளவுக்குக் கதர் - கிராமக் கைத்தொழில் வாரியத்திடம் திட்டங்கள் உண்டு. செயல்முறைகள் உண்டு. நடவடிக்கைகள் உண்டு.

ஐயப்பாடு, பொது மக்கள் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்களா என்பதிலேதான் இருக்கிறது.

உதாரணமாக, இயந்திரமயமாகத் துவங்கிவிட்ட இந்தியாவில் பிற்காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தால் தவிக்கப் போகிறார்கள் இந்தியக் குடிமக்கள் என்று காந்தியார் அன்றே கண்டார் — கதர்த் திட்டம் கொண்டு வந்தார்.

ஆனால் துர்ப்பாக்கியம் - கதர் ஏதோ ஒரு கட்சியினருக்குமட்டுந்தானோ? என்கிற மனப்பான்மை பரவலாகப் பொதுமக்களிடம் உலவ ஆரம்பித்து விட்டது.

அதனால் அனைவரும் கதர் அணிவதென்று ஆரம்பித்தால் எத்தனை லட்சக்கணக்கான சோற்றுக்கில்லாதவர்களுக்குச் சோறு கிடைக்கும் என்கிற தூய நினைப்பு கொஞ்சம் கொஞ்சமாகச் சாகத் துவங்கிவிட்டது.

இரண்டு சட்டை - இரண்டு வேட்டி வைத்திருப்பவர்கள் அதிலே ஒரு சட்டை, ஒரு வேட்டி கதரில்தான் என்கிற உறுதிக்கு வருவார்களானால் -ஏழைகளை வாழவைப்பதற்காகப் பாடுபட்ட காந்தியார் மறைந்துவிட்டாலும் அந்த ஏழைகளை நாமெல்லாம் கைவிட்டுவிடவில்லை என்கிற நிலைமை உருவாகாதா?

காந்தியார் மாடமாளிகைத் தொழில்களை மறந்துவிட்டு, குடிசைத் தொழில் வளர வேண்டும் என்று பாடுபட்டதற்குக் காரணம் என்ன? நம்முடைய நாட்டில் குடிசைகள்தாம் அதிகம்.

கதர்-கிராமக் கைத்தொழில் வாரியம் குடிசைத் தொழில்களை ஊக்குவிக்க - வளர்க்க, ஆண்டு தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவு செய்கிறது. குடிசை வாழ் மக்களைப் பாதுகாக்கிறது. அதனுல் ஏழைகள் முன்னேறுகிருர்கள். இல்லாமை ஒழிகிறது.

ஆதாரமாக, இயற்கையன்னை நமக்கு அளித்திருக்கிற பனைமரம் எத்தனை விதம் விதமான குடிசைத் தொழில்களுக்கு உதவுகிறது. எவ்வளவு பேருடைய வேதனையைப் போக்குகிறது.

காலஞ்சென்ற காந்தியாருக்கு மிகவும் பிடித்தமானது பதநீர், பனை வெல்லம்தாம். முப்பது ஆண்டுகளுக்கு முன்பே, காந்தியார் தானும் பதநீர் அருந்தியதோடு, ஆசிரமத்துக்குத் தன்னைக் காண வருகிறவர்கட்கும் அதையே அளித்தார்.

பதநீர், உடலுக்குக் குளிர்ச்சி தருவது மட்டுமல்ல: உள்ளத்துக்குத் தெம்பூட்டும் மருந்து மட்டுமல்ல; வயிற்றுக்கு உணவும்கூட என்பதைக் காந்தியார் தெளிவாக அறிந்து வைத்திருந்தார்.

அதனுல்தான், வெள்ளையனை விரட்டுவதற்காக, உண்ணுவிரதம் என்கிற பெயரில் வாழ்நாளில் பெரும் பகுதி பட்டினியே கிடந்த அந்தக் காந்தியார் மூன்று வேளை, நான்கு வேளை என்று சத்தில்லாத உணவுகளைச் சாப்பிடுபவர்களுக்கு நேருவது போல் மாரடைப்பால் சாகவில்லை; காய்ச்சலால் மறையவில்லை. ஒரு கொடியவன் சுட்டுத்தான் அந்தத் தள்ளாத வயதிலும் அவரைக் கொல்ல முடிந்தது. பதநீர், பனை வெல்லம் போன்றவை வயதைக் கூட்டும். வாழ்வைப் பெருக்கும் என்பதற்குச் சாட்சி காந்தியார் ஒருவர் போதாதா? வைத்தியத்திற்குப் பனங் கற்கண்டைப் பயன்படுத்துகிறோமல்லவா? பனஞ்சீனி முன்பெல்லாம் கறுப்பாயிருக்கும், பார்க்க அருவருப்பாக. ஆனுல் கதர் - கிராமக் கைத்தொழில் வாரியம் இப்போது பனஞ்சீனியை வெள்ளையாக்கி விற்பனைக்கு ஏற்பாடுகள் செய்துள்ளது. அதிலிருந்தே குழந்தைகளும் விரும்பி உண்ணச் சாக்லெட்டுகளும், மிட்டாய்களும் தயாராக்கப்பட்டு, விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

இவை தவிர, பனையிலேயிருந்து தயாரிக்கப்படுகிற கட்டில் சயிறு நார்கள், படுப்பதற்கு உறுத்தாமல் வழுவழுப்பாக மிகவும் இதமாயிருக்கும்.

இன்னும் வீடு கூட்டுவதிலேயிருந்து சகலவிதமான உபயோகங்களுக்கும் துடைப்பான், கைத்தடி, வேலைப்பாடமைந்த கூடைகள், மிதியடி, மற்றும் எராளமான பொருள்களைச் செய்கிற குடிசைத் தொழில்களுக்குக் கிராமக் கைத்தொழில் வாரியம் பண உதவி புரிந்து துணை செய்கிறது. மேலும் பனைத்தும்பு ஆண்டு தோறும் வெளிநாட்டிற்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

நமது தச்சுப்பட்டறையில் அழகான மேசை, நாற்காலி முதலியவைகளும் செய்யப்படுகின்றன.

வெயில் காலங்களில் உண்பதற்கு மிகச் சுகமாயிருக்கிற நுங்கு நன்கு பதனிடப்பட்டு, சுவைக்காக இனிப்பையும் கூடச் சேர்த்து அழகிய டப்பாக்களில் அடைக்கப்பட்டு, விற்பனைக்கு வருகின்றன. வெளிநாடுகளுக்கும் அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மருத்துவர் எவரும் எந்த மருந்தைக் கொடுத்தாலும் தேனிலே குழைத்துத்தான் சாப்பிடச் சொல்வார். ஏன்? தேனும் ஒரு மூலிகை மருந்துதான் என்பதனுல்!

காடுகளில்தான் மூலிகை விளையும், மணக்கும்; அங்கேதான் பற்பல விதமான பூக்கள் மருத்துவ பூர்வமான மகரந்தங்களோடு இருக்கின்றன. தேனீக்கள் அவற்றை உறிஞ்சிக் கூடு கட்டித் தேனுக்குகின்றன. அந்தத் தேனே மருந்தாகி விடுகிறது.

கதர்-கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பண உதவி பெற்ற நிறுவனங்கள் அந்தத் தேனைச் சேகரித்துக் கொஞ்சம் கூடக் கலப்படமில்லாமல் விற்பனை செய்கின்றன. அதன் மூலம் கலப்பட அபாயத்திலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றும் சேவை நடைபெறுகிறது.

முன்பெல்லாம் ஒரு கூளை வைத்துப் பானை, சட்டி செய்து பிழைத்துவந்த பாமரர்களுக்கும் கதர்-கிராமக் கைத்

தொழில் வாரியம் பண உதவி புரிகிறது; கை தூக்கி விடுகிறது. மண்பாண்டங்களைப் புதிய விதத்திலும் கவர்ச்சிகரமாகவும் செய்யச் சொல்லி ஊக்குவிக்கிறது.

செங்கல் சூளையா? சுண்ணும்புக் காளவாயா? கடனுண்டு!

செருப்புத் தைப்பதிலேயிருந்து தோல் சம்பந்தப்பட்ட எல்லாப் பொருள்களையும் செய்வதற்குப் பண உதவி உண்டு.

கால் அணி, கலப்படமில்லாத- அட்டையோ மற்றவைகளோ இடைச் செருகல் ஆகாமல் - முழுக்க முழுக்கத் தோலிலேயே தயாரிக்கப்படுகிறது. ஏனென்றுல் தோல் மட்டும்தான் தரையிலேயிருந்து உடலுக்குப் பாய்கிற சூட்டைத் தடுத்து நிறுத்தும்! மற்றவைகள் சூட்டை வாங்கி உடலுக்குள் பாய்ச்சும்! இவை மட்டுமா?

வறுகடலைத் தொழிலாளிக்கும் கடனுண்டு! அவர்களுக்கென்று 'சொசைட்டி' உண்டு. துணி துவைக்க, அதைத் தூயதாக்க, கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் சோப்புகளைப் போல் வேறு எந்தச் சோப்பும் கிடையாது என்று பெரும்பாலான மக்கள் இப்போது பேசுகிருர்களல்லவா? இது நமக்கு வெற்றி. கமகமக்கும் வாசனை சோப்புக்களும் இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டன.

மிஷின் எண்ணெய் உடலுக்குக் கேடு! மரச் செக்கிலே ஆட்டப்படுகிற எண்ணெய் வகைகள் மிகுந்த மணமுள்ளவை; தூய்மையானவை! உடலுக்குப் பலம் சேர்ப்பவை! கதர் கிராமக் கைத்தொழில் வாரியம் இந்தப் பணியில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது - மக்களுக்குச் சேவை செய்கிறது.

குடிசைத்தொழிலில் காகிதமும், கைக்குத்தல் அரிசியும், தீப்பெட்டியும் தயாரிக்கப்படுகின்றன.

தலைவர்கள், தெய்வங்கள், இயற்கைக் காட்சிகள், இன்னும் விதம் விதமான உருவங்கள் பொம்மைகளாக, அவைகளை வைத்தால் வீடுகள் மிகவும் அழகாகக் காட்சி அளிக்கும் வகையில் தயாரிக்கப்படுகின்றன.

சர்பத்-கனிச்சாறு-பனஞ் சர்க்கரை எல்லாமே கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தின் தயாரிப்புகளில் உண்டு!

பொதுமக்களின் வாழ்வைப் பாதுகாக்கிற பணியில் கதர்-கிராமக் கைத்தொழில் வாரியம் ஒவ்வொரு நாளும் பங்கு கொள்கிறது!

ஒவ்வொரு தொழிலுக்கும் மானியமாகவும் கடனுகவும் தந்து உதவி ஏழைகளைக் கைதூக்கி விடுகிற பணியில் கதர் - கிராமக் கைத்தொழில் வாரியம் மிக வேகமாகச் சேவை செய்கிறது.

அதன் மூலம் கிராம நலம் பாதுகாக்கப்படுகிறது.

அண்ணல் காந்தியாரின் கனவு நனவாகிறது.

தென்னகத்துக் காந்தி அண்ணுவின் ஆசை நிறைவேறுகிறது.

அவர்களை வணங்குவோம். அவர்களுக்கு நன்றி தெரிவிப்போம். அஞ்சலி செய்வோம்.

அதன் மூலம் கதர் - கிராமக் கைத்தொழில் வாரியத்தின் பணிகளுக்கு ஒவ்வொருவரும் ஒத்துழைப்போம். அதன் தயாரிப்புக்களைப் பெருமளவில் பயன்படுத்தி இந்த நாட்டைப் பாதுகாப்போம். கிராமநலத்தைப் பேணுவோம்! என்று காந்தி நூற்றுண்டு விழாவில் உறுதி எடுப்போம்! வாரீர்!

''சந்தனத் திருமேனி தாங்கிவந்த நம் காந்தி, தாள்கொண்டு குறளுரை எழுதாமல், தனது வாழ்நாள் கொண்டே எழுதியவர்! நடை சிறந்த உரையாளர்!''

தமிழே பயிற்சி மொழி ஏன்?

ம.ரா.போ.குருசாமி

''கடந்த காலத்தில் ஆங்கிலம் மூலமாகப் படித்ததால் நாம் அடைந்த இழப்பு பெரிது, மிகப் பெரிது; சிந்திப்பதற்குப் பதிலாக—பகுத்தறிவதற்குப் பதிலாக—உருவேற்றி ஒப்புவிப்பதிலேயே நாம் உறுதி பூண்டோம். பொருள்களைப் பற்றியும் நிலவரங்களைப் பற்றியும் உண்மையான தெளிவு பெறுவதற்குப் பதிலாக, ஒருவகையான சொற்சிலம்பம் ஆடும் முறையைத் தெரிந்துகொண்டோம். இதன் விளைவு என்ன? சிந்தனையின் தனித்தன்மை மலரவில்லை; தாய்மொழியில் இலக்கியம் வளரவில்லை; நம்மை நாமே (அறிவில்) ஏழைகளாக்கிக் கொண்டோம். நாம் அவ்வளவு ஆசையோடு படித்த அந்த அயல் மொழியையாவது வளப்படுத்தினோமா? அதுவும் இல்லை; கூடவில்லை. ஒரு மொழி பேசுகிறவர்கள் இன்னொரு மொழியில் மதிப்புமிக்க இலக்கியம் தருவதென்பது மிகமிக அபூர்வமான நிகழ்ச்சியாகும். பண்பாட்டை வளர்த்து மெருகூட்டுவதிலும், உண்மை நேயத்தை வளர்ப்பதிலும் பெரிய இலக்கியங்கள் ஆற்றல் மிக்க கருவிகளாகும். படித்தவர்களெல்லாம் தங்கள் மொழியல்லாத அயல்மொழியில் ஈடுபாடு கொண்டதால்தான் பெருமைக்குரிய இலக்கியங்கள் தோன்றவில்லை; இவ்விளைவு தவிர்க்க முடியாதது. எனவே, கற்றவர்களெல்லாம் அயல்மொழியில் ஈடுபாடு கொண்டதால் அறிவு, சமுதாயம் ஆகிய இருதுறைகளிலுமாக இரட்டை இழப்பு ஏற்பட்டது.''

மேலே தந்துள்ள கருத்துரையை ஆங்கில ஆதிக்க எதிர்ப்புவாதியோ தமிழ் வெறியரோ சொல்லவில்லை. பல்கலைக் கழக ஆணைக் குழுவினர் ஆராய்ந்து அறிவித்த சிறந்த அறிக்கையிலிருந்து மேற்கண்ட கருத்துரையை எடுத்துத் தந்திருக்கிறேன்.

சங்க காலத்திற்குப்பின் அயலவரின் ஆட்சியாலும் அயல் பண்பாடுகளின் 'படையெடு'ப்பாலும் தன் தனி இயல்புக்கு உரிய இடம் பெறாமல் தளர்நடை இட்டு வந்துள்ளது தமிழகம். 1947 ஆகஸ்ட்டு 15இல் அரசியல் உரிமை வந்தது; உண்மைதான். ஆனால், அதன் பிறகு கூடப் பொதுவாக இந்தியாவிலோ—குறிப்பாகத் தமிழகத்திலோ நம் பண்பாட்டுக்கும் தேவைக்கும் ஏற்ற கல்வி முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. அரசியல் உரிமையை நம் தலைவர்கள் தக்கவகையில் கல்வித்துறையில் பயன்படுத்திக் கொள்ளாமையால், நம் நாட்டுக் கல்வியாளர்கள் கற்றறி மூடர்களாக உள்ளனர். இப்படிச் சொல்வது சற்று நாகரிகக் குறைவாக இருப்பதாகவும் சிலர் கருதலாம். ஆனால், சற்று ஆழ்ந்து சிந்தித்து நிலவரத்தைக் கணித்துப் பார்ப்பவர்களுக்குத்தான் சொல்வது உண்மையென்று தெளிவாக விளங்கும். கபில பரணர்களின் இலக்கிய நுட்பமும், இளங்கோவடிகளின் காவிய நீதியும், கம்பனின் சொல்லாட்சி கவிநயத்தில் இணைந்து காணும் கவர்ச்சியும், ஆழ்வார்களும் நாயன்மார்களும் வழங்கியருளிய திருப்பாடல்களின் கனிவும் தமிழகத்துப் பட்டதாரிகளில் எத்தனை பேருக்குக் கைவந்த செல்வமாக ஆகியிருக்கிறது? அகம் புறம் என்ற பொருட் பாகுபாட்டின் அருமைப்பாடும், அறத்தொடு நிற்றல் என்ற துறையின் நாகரிக நுட்பமும், களவு கற்பின்றி அமையாது என விளக்கிய பண்பாட்டுச் சீர்மையும் என்ன என்பதை நம் நாட்டுக் 'கல்விச் செல்வர்கள்' அறிவார்களா? மிசிசிபியின் நீளம் என்ன, ஆல்ப்ஸ் மலையின் உயரம் எவ்வளவு, வால்ட் டிஸ்னியின் மிக்கி மௌஸ் தோன்றியது எப்போது, ராக் அன் ரோல் என்றும் டுவிஸ்ட் என்றும் வழங்குகின்ற கூத்துக்களை ஆடுவது எப்படி, விருந்துக்குப் போகும் வெள்ளைக்காரன் உடுத்தும் உடை அமைப்பு எது......இந்த வினாக்களுக்கு நம்மவர்கள் விடை தருவார்கள்; விநாயகர் வழிபாடு தமிழகத்துக்கு எப்போது வந்தது என்றால், தெரியாது என்பார்கள். ஆங்கிலத்திலே தப்பாகப் பேசிவிடக் கூடாது என்று கவலைகாட்டும் மேதைகள் தமிழ் மொழிக் கொலை செய்வதற்குச் சற்றும் தயங்குவதே இல்லை. ''A, An'' பயன்படுத்துவதில் காட்டும் எச்சரிக்கையை ''ஒரு, ஓர்'' பயன்படுத்துவதில் நாம் காட்டுவதில்லை......இப்படிப்பட்ட கவலையீனத்துக்கு நூற்றுக் கணக்கான எடுத்துக்காட்டுக்கள் தரமுடியும். நம் நாட்டுத் தேவையையும் பண்பாட்டையும் பற்றிக் கவலைப்படாததால்—அயன்மை செறிந்த கல்வி முறையே இங்கு இடம் பெற்றதால் இத்தகைய இழப்பும் இழிவும் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கருத்தைத்தான் பல்கலைக் கழக ஆணைக் குழுவின் அறிக்கை தெரிவித்திருக்கிறது.

இந்த அவக்கேடு மாறுவதற்குக் கல்வித் துறையிலே மாற்றங்கள் பல செய்தல் இன்றியமையாதது. உண்மை அறிவும், ஆராய்ச்சிப் பாங்கும் வளர்ந்து ஆக்கச் சிந்தனை பெருகுவதற்கு முதலில் வேண்டிய நடவடிக்கை நம் மொழியைப் பயிற்சி மொழியாக ஆக்குவதாகும். தமிழர்கள் தமிழிலேயே படிக்கும்போது ஐயங்கள் எளிதாகத் தீர்கின்றன; புதிது புதிதாக அறியும் ஆர்வம் பெருகுகின்றது; ஆர்வம் செயல்பட்டு அறிவு வளரும்போது ஆராய்ச்சி நாட்டமும் வளர்கின்றது; ஆராய்ச்சி வளர்ச்சியால் ஆக்கப் படைப்புகள் தோன்றுகின்றன; அதன்வாயிலாக நாட்டின் வளமும் பெருகும். இந்த வளர்ச்சி நிரல் கல்விக் கோட்பாட்டின் அடிப்படையாகும். பயிற்சிமொழி மாற்றத்தால் மற்றொரு நன்மையும் உண்டு. ஆங்கிலத்தைப் பயிற்சிமொழியாகக் கொண்டுள்ள மாணவர்கள் கருத்தைப் புரிந்துகொள்வதற்குத் தடையாக ஆங்கில மொழியைப் புரிந்துகொள்ளச் செய்யும் முயற்சி மிகப் பெரிது; அந்த மொழிச் சுமையால் அறிவு ஆர்வம் குன்றி வளர்ச்சியில் முடக்கம் ஏற்படுகிறது. தமிழே பயிற்சி மொழியாகும்போது மொழித் தடை நீங்கிவிடுகின்றது. ஆதலால் அறிவு வளர்ச்சிக்கு எவ்விதத் தடையும் இல்லை; வளர்ச்சி நிரல் நிறைவேறும் என்ற நம்பிக்கை ஏற்படுகின்றது.

தமிழைப் பயிற்று மொழியாக்குவதால் ஆங்கில அறிவு தடைபடும் என்று பலர் பொருந்தாத் தடை எழுப்புகிறார்கள். தமிழகத்தில் ஆங்கிலம் படிப்பதை எவருமே தடுப்பதில்லை. மூன்றாம் வகுப்பிலிருந்து தமிழக மாணவன் ஆங்கிலம் படிக்கிறான். பள்ளியிறுதி முடிய ஒன்பது ஆண்டுகள் ஆங்கிலத்தைத் தமிழைக் காட்டிலும் அதிகப் பிரிவேளைகளில் பயில்கிறான். உலகத்தில் எந்த நாட்டிலும் அயல்மொழி படிப்பதற்கு இத்துணைக் காலம் ஒதுக்குவதில்லை என்பதையும் இங்கே நினைவூட்டவேண்டும்.

ஆங்கிலத்தை ஒரு மொழியாகப் படிக்கும் வாய்ப்பு நம் நாட்டில் இருப்பதால், உலகத்து அறிவுகளையெல்லாம் அந்த மொழிவாயிலாகத் தமிழ் நாட்டான் பெறுவதில் தடையே இல்லை. அயல் மாநிலங்களிலோ அயல்நாடுகளிலோ தமிழ் நாட்டான் அறிந்த ஆங்கிலத்தைக் கொண்டு வாழவும் வளரவும் தடையே இருக்க முடியாது.

தமிழ்நாட்டில் தமிழே ஆட்சி மொழி என்று சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் திறம்படச் செயல்படுவதற்குத் தமிழில் ஆற்றல் உள்ளவர்களே அலுவல்களில் அமர்த்தப்படுவது நல்லது. தமிழைப் படித்தவர்களும் தமிழில் மற்றப் பாடங்களைப் படித்தவர்களும் அந்தத் தகுதி பெற்றவர்கள் என்பதில் ஐயமில்லை. எனவே, தமிழ்நாட்டில் அவர்களுக்கே வேலைவாய்ப்பு என்ற அறி

விப்பும் ஆணையும் இயற்கையாகப் பிறக்க வேண்டியவையே.

இத்தகைய முற்போக்கான வளர்ச்சிகள் நாட்டில் ஏற்படுவதற்குக் கல்வித் துறையில் அடிப்படையான பயிற்சிமொழி மாற்றம் இன்றியமையாதது. இன்றைய தமிழ்நாடு அரசு தமிழ்ப் பயிற்சிமொழித் திட்டத்தில் ஆர்வமும் தீவிரமும் காட்டுவது மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்கும் உரியனவாகும். குடியாட்சிக் கோட்பாட்டுக்கு இயைய அவர்கள் இவ்வகையில் செயல்படுவது தமிழர்களின் நல்லூழாகும்.

—''அ......ன்''

''மேலே காட்டிய குறியின் பொருள் யாது?

''தமிழ் நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகர முதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா வ்யவஹாரங்களும் தமிழ் பாஷையில் நடத்தவேண்டும் என்பது பொருள்.

''...பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டால் அங்கு நூல்களெல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவதும் அன்றிப் பலகை, குச்சி எல்லாவற்றுக்கும் தமிழிலே பெயர் சொல்ல வேண்டும்; 'ஸ்லேட்', 'பென்ஸில்' என்று சொல்லக் கூடாது.'

— பாரதியார்.

இத்தகைய விழிப்பு ஏற்படுவதற்கான சூழ்நிலை தமிழகத்தில் உருவாகி வருகிறது. நல்ல எதிர்காலம் தமிழுக்கு உண்டு என்ற நம்பிக்கை பிறக்கிறது.

வாழ்க தமிழ்!

FDSEID 968

நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதறாஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● கிடைத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை



வி.பார்த்திபன்

நான் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை! என்னை அதிகாரிகள் அழைத்து இந்த ஊர்பேர் தெரியாத கிராமத்திற்குப் போகும்படிக் கூறியபோது என் உள்ளம் கைப்புணர்ச்சியில் ஆழ்ந்து சலித்துக் கொண்டதென்னவோ உண்மை. போயும் போயும் ஏதோ ஒரு கிராமத்திற்கு அனுப்புகிறார்களே என எண்ணி எண்ணி வருந்தியதும் உண்மை. ஆனால் இங்கே வந்ததுமோ?...

பூஞ்சோலை என்ற இக் கிராமம் உண்மையிலேயே பெயருக்குத் தகுந்தபடி அளவு கடந்த இயற்கை எழிலைத் தன்னுள்ளே அடக்கிச் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். 'உன் நகரங்களில் இதுபோன்ற ஆழ்ந்த அமைதியான அழகை நீ காணமுடியுமா? அதில் ஒன்றி மனம் நிம்மதியில் ஆழ முடியுமா?...' என என்னைப் பார்த்துச் சிரிப்பதுபோல் இருந்தது. உண்மை! கடிகார முட்களோடு தங்களைப் பிணைத்துக் கொண்டு இயந்திரமாக இயங்கிக் கொண்டும், இரசனை சிறிதும் இன்றி 'ஏதோ பிறந்தோம், வாழ்வோம், மறைவோம்' என்ற நிலையில் ஒரு குறிக்கோளோ, கோட்பாடோ இன்றி வாழும் மனிதர்கள்; அமைதி இல்லாத வாழ்க்கை; உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கூட்டம்; எப்பொழுது ஏமாறுவான் என்று காத்து நிற்கும் காக்காய்க் கூட்டம்; நெஞ்சில் ஈரமில்லாத உள்ளங்கள்; வாழ்க்கையின் உட்புறமாக மறைந்து நின்று சிரிக்கும் உள்ளங்களைக் காணத் தெரியாமலோ அல்லாது காணமுடியாமலோ இயங்குகின்ற சமுதாயம், இவ்வளவையும் தன்னகத்தே கொண்ட—வெளிப் பூச்சில் மயக்க முயல்கின்ற நகர்ப்புற வாழ்

வில் நான் இது நாள் வரை காணாத எத்தனையோ இன்பங்களை இந்தச் சிறிய பூஞ்சோலையில்— நடந்தால் ஒரு நாளைக்குள் ஊர் முழுவதையும் அளந்து முடித்து விடுகிற நிலையில் இருக்கின்ற பூஞ்சோலைக் கிராமத்தில்—நான் கண்டேன்! தினமும் கண்டும் வருகிறேன்.

உள்ளம் நிறைபோடும் தராசாகக் 'கிராமம்' என்ற ஒன்றை ஒரு தட்டிலும், நகரம் எனும் ஒன்றை மற்றதிலுமாக நிறுத்தி எடை போடும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இதே நேரத்தில், இதோ நான் நடந்து கொண்டிருக்கின்றேன்.

குண்டும் குழியுமாக இருக்கும் மண் சாலை; கண்ணுக் கெட்டியவரை இங்கொன்றும் அங்கொன்றுமாகவே காட்சியளிக்கின்ற சில வீடுகள்; பச்சென்று சிரிக்கும் வயல்கள்; அவற்றில் அன்றையப் பாட்டை முடித்துவிட்டு வரும் ஆண்கள், பெண்கள்; சில பெண்களின் இடுப்பில் அமர்ந்து சிரிக்கும் இளம் சிறார்கள்; பாட்டாளிகளின் முகங்களில் கடமையை முடித்துவிட்ட ஒரு நிம்மதி; அதோடு கலந்தாற்போலவே, காலதேவன் தங்கள் பாட்டிற்குத் தகுந்த பயனைத் தருவானோ என்ற ஒரு சந்தேகக் குறி.

நான் சிரித்துக் கொள்கிறேன். 'கடமையைச் செய்; பயனைக் கருதாதே' என்ற தத்துவார்த்தமான கொள்கையை இவர்கள்தான்— இது போன்ற கிராமங்களில் வாழ்கின்ற எளிய மக்கள்தான்—உண்மையாகக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

நான் நடந்து கொண்டே இருக்கிறேன். இயற்கை என்னை அடிமையாக்கிவிட்டது. மாலை மயங்கி இருள் கவியத் தொடங்கும் நேரம். ஊரின் புறத்தினின்றும் ஒதுங்கித் தனியாக இருந்த ஒரு புறம் போக்கு நிலம். அங்கே பல சிலைகள் கேட்பாரற்றுக் கிடந்தன. நான் திகைத்து நின்றேன்.

பார்த்துக் கொண்டே இருந்தேன். எல்லாச் சிலைகளையும் பார்த்துவிட்டேன். எல்லாச் சிலைகளிலும் நிறைவான கலை இருந்தது. ஆனால் அந்தச் சிவப்புச் சிலை! தனியான சிவப்பு. உடலைப் பிளந்ததும் பீறிடும் குருதி நிறம். மாலைச் சூரியன் மலைவாயிலில் மறைகையில் வானத்தில் பொங்கிப் பெருகும் வண்ணம். அந்தச் சிலைமட்டும் தனியாக அங்கேயிருந்தால் அதன் பெருமை தெரியுமோ தெரியாதோ! ஒரு கைப்பிடி அள்ளித் துணியில் போடப்பட்ட நீலக்கற்களுக்கு நடுவில், தவறி வந்து சிரிக்கும் சிவப்பு இரத்தினமாக இருந்தது அது.

கலைஞனின் கைத்திறனா? கல்லின் தனித் தன்மையா? பச்சிலை விந்தையா? அனுபவம் தந்த பாடத்தினால் உண்டாக்கப்பட்ட சாதனையா? காலம் செய்த கோலமா? இது போன்ற ஆயிரமாயிரம் கேள்விகள் என் உள்ளத்தில் அடுக்கடுக்காய்ப் பளிச்சிட்டன. ஆனால் பதில்?— அதை யாரிடம் அறிவது? வியப்பு விழிகளில் வழிந்தோட வெறித்த நோக்குடன் நின்று கொண்டிருந்தேன்.

''ஹஹ் ... ஹஹ் ... ஹ ...''

கிணற்று உருளை, எண்ணெய் இன்றிக் கிறீச்சிடுவது போன்ற சிரிப்பொலி. திடுக்கிட்டுத் திரும்பினேன். என்னருகில் ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

''அந்தச் சிவப்புச் சிலையைக்கண்டு தானே ஆச்சரிய மடைந்தீர்கள்?...''

என் தலை 'ஆம்' என்று அசைந்தது.

''அது ஏன் அவ்வளவு சிவப்பாக இருக்கிறது தெரியுமா?''

''......''

''அதற்கு, அந்நிறம் வந்தது பற்றி ஒரு கதையே வழங்குகிறது ... தெரியுமா?...''

''அப்படியா!... கொஞ்சம் சொல்கிறீர்களா?''

''சொல்கிறேன்!...''

என் உள்ளம் துள்ளியது. கிராமங்கள் பல கதைகளின் பிறப்பிடம் அல்லவா? இவர் சொல்லப் போகும் இக்கதை எத்தகைய சுவை உடையதோ! என் காதுகள் கூர்மையடைந்தன. அவர் ஆரம்பித்தார்.

* * *

''நீ சொல்வது எனக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், கூடவே ஒருவித அதிர்ச்சியையும் அளிக்கிறது மகேந்திரா...''

''இதில் ஆச்சரியப்படுவதற்கோ, அதிர்ச்சியடைவதற்கோ ஒன்றுமேயில்லை. அவளைக் கண்டேன்! மனம் அவள் அழகில் ஒன்றியது; அது...''

''அதெல்லாம் சரி மகேந்திரா. இத்தனை நாட்களாக மணம் செய்து கொள்ள மனமிசையாத நீ இப்பொழுது அவளை மணந்து கொள்வேன் எனத் துடிப்பதற்கு அவள் அழகு காரணமாக இருக்கலாம். ஆனால் அவள் யாருடைய மகள் என்பதையெல்லாம் சிந்தித்தாயா?''

''எல்லாவற்றையும் அறிந்து வந்து விட்டேன் மன்னா! அவள் பெயர் மாதங்கி. அவள் தந்தையார் ஒரு சிற்பி... அவருடைய பெயர் இரகுவர்மர். அவள் அவருடைய ஒரே செல்வ மகள்தான்.''

''ஆனால் ஓர் இடர்ப்பாடு இருக்கிறதே?''

''என்ன?...''

''நீயோ கலையுணர்வே இல்லாதவன். போர் போர் என ஓடுபவன். வாட்களின் ஓசையையே இன்னிசையாகவும், முண்டங்களின் ஆட்டத்தையே நடனமாகவும் எண்ணிக் கொண்டு பெருக்கெடுத்தோடும் குருதி ஆற்றில் மூழ்கி எழுந்து திளைக்க நினைப்பவன். இரகுவர்மரோ உலகம் போற்றும் சிற்ப மாமேதை. அவருடைய திருமகள் மாதங்கி. அவருடைய கலையாற்றலில் சிறிதளவேனும் அவளிடம் இருப்பது உறுதி. அப்படிப்பட்டவளுடன் உன்னை இணைப்பதை அறிவுடைய செயலாக நான் கருதவில்லை...''

''அதெல்லாம் தெரியாது. நான் அவளை நேசிக்கிறேன். என் திருமணம் நடந்தே ஆக வேண்டும். இல்லாவிட்டால்...

''அப்படி ஒரு முடிவிற்கு வந்து விடாதே மகேந்திரா'' இடைவெட்டினார் அரசர். மகனில்லாக் குறையை நீக்கிக்கொள்ளக் குழந்தையாயிருந்த போதே அவனை எடுத்து வளர்த்த பாசம் அப்படி.

மகேந்திரன் போய்விட்டான். மன்னர் சிந்தித்தார். வேறு வழியில்லை என்ற முடிவிற்கு வந்தார். முத்திரை ஓலை பறந்தது.

* * *

''மகளே, மாதங்கி!... இது என்ன அம்மா வீண் பிடிவாதம்?''

''......''

''மகேந்திரன்! நானும் பார்த்திருக்கிறேன். என்ன அழகு! எவ்வளவு கம்பீரம்! எத்தகைய வீரம்! இதெல்லாம் உன் உள்ளத்தில் படவில்லையா அம்மா? நாம் சிறிதும் தேடி அலையாமலே நம்மைத் தேடி வந்துள்ள இத்தகைய பெருமை உன் எண்ணத்தில் சிறிதும் எழுச்சியை ஊட்டவில்லையா?...''

மாதங்கி தலை நிமிர்ந்து தந்தையை நோக்கினாள்.

''அப்பா, நீங்கள் சொன்னதெல்லாம் சரிதான். ஆனால் ஒன்றை மட்டும் நீங்கள் சிந்திக்கவில்லையே. அழகு! அது என்னிடம் அளவுக்கு மீறியே இருக்கிறது. கம்பீரம்! அது வளர்ந்து நிமிர்ந்த மலையினிடமும் இருக்கிறது. வீரம்! அது நாகத்தை எதிர்த்துப் போராடும் கீரியிடமும் காணக்கூடிய ஒன்றே. ஆனால் கலையறிவு இல்லாத உயிர்களை நான் மதிப்பதே இல்லையப்பா... இசையறிவில்லாதவர்களுக்கு இரு செவியிருந்தென்ன? ஆடலை அனுபவிக்கத் தெரியாதவர்களுக்கு ஆழ்கடலையும் ஊடுருவும் அழகுக் கண்களிருந்தென்ன? கலைகளை, அவைகளின் உயர்வை அறியாத மனிதர்களுக்கு உயிரே தேவையில்லை... அவர்கள் என்புதோல் போர்த்த கூடுகள்.

''ஆனால் இவையெல்லாம் இருந்தும் செல்வமொன்றில்லாவிட்டால்? அதனை நீ சிந்தித்தாயா? உன்னை எவ்வளவோ வசதி படைத்த இடத்தில் வாழ்க்கைப்படுத்த வேண்டும் என எத்தனை இரவுகள் கண் தூங்காமல் நான் கவலைப்பட்டிருப்பேன் தெரியுமா? அப்படி இருக்கையில் தேடி வந்த வாய்ப்பை நீ உதறி எறிகிறாய்?...

''நன்றாகச் சிந்தித்துவிட்டேனப்பா... என்னால் முடியாது.''

அடங்கியே இருந்த இரகுவர்மரின் குரல், மகள் வளவாழ்வு வாழ வேண்டுமெனும் எண்ணத்தில், ஓங்கியது. ''மாதங்கி! தாய்க்குத் தாயாய், தந்தைக்குத் தந்தையாய் இருந்து உன்னை வளர்த்து ஆளாக்கியவன் நான். நான் சொல்கிறேன். இதற்கு நீ உடன்பட்டே ஆகவேண்டும்.

மறுத்தால் எனக்கும் உனக்கும் உள்ள உறவும், எனக்கும் இந்த உலகிற்கும் உள்ள தொடர்பும் கனவாவது நிச்சயம் !''

இரகுவர்மர் நடந்தார். மாதங்கியின் உடல் கட்டிலைச் சரணடைந்தது. அவள் நினைவில் குணபாலனின் உருவம் நின்று சிரிக்கலாயிற்று.

*   *   *

நாட்கள் நடந்து மறைந்து கொண்டிருந்தன.

இப்பொழுது மாதங்கி சாதாரணச் சிற்பியின் மகளல்ல. உலகம் போற்றும் மகேந்திரனின் மனையாள். இந்த வாழ்வு அவளுக்கு இனித்ததா ? இல்லை. வேம்பெனக் கசந்தது. என்ன செய்வது ? மணமான சில நாட்கள் வரை வாழ்வு தேன் பாகாகத்தான் இனித்தது. சில நாட்களுக்குப் பின்னர்... மாதங்கி ஆடினால் மகேந்திரன் அலுத்துக் கொண்டான். பாடினால் பதைத்துச் சீறினான். வீரர்களின் வாழ்க்கையில் நளினமே கூடாது என்பது அவன் வாதம்.

வாழ்க்கையே நளினமானது என்பது மாதங்கியின் எண்ணம்.

ஒரு நாள்...

மாதங்கி மன ஆறுதலை நாடித் தன்னந்தனியே சென்று உலவி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள். எங்கிருந்தோ எழுந்த சிற்றுளியின் ஓசை அவளைக் கட்டியது. தன்னை மறந்து நின்றாள் ; ஒலி நின்று குரல் எழுந்தது.

''மா...த...ங்...கி !...''

பழகிய குரல் ; மாதங்கியின் உடல் குலுங்கியது. குரல் வந்த திசை நோக்கித் திரும்பினாள். குணபாலன் நின்று கொண்டிருந்தான். இருவர் கண்களும் இணைந்து மீண்டன. இருவருமே தடுமாறினர். ஒரு கணம் தான் !

''நீ... இங்குதான்... வாழ்கிறாயா ?...''

''ஆமாம்!..நீ..ங்..க..ள்..எங்கே.. இப்படி...''

அவனிருந்த இடம்நோக்கி அடி பெயர்த்தாள் அவள். அவன் மாதங்கியின் முடிமுதல் அடிவரையில் நிதானமாகப் பார்த்தான் ; சட்டெனக் கண்களை மூடிக்கொண்டான். அவளை அவனுள் அடக்கிக் கொண்டானோ ?

''நின்றபடியே துயில்கிறீர்களா?'' அவள் சிரித்தாள்.

''ம் ! இல்லை... ஏதேதோ நினைவுகள். வேறொன்றுமில்லை...'' குணபாலன் கண் மலர்ந்தான். அதே நினைவுகள் அவளுள்ளும் எழுவதை அவன் அறிவானா ?...

''இங்கே சில பூங்காக்களுக்கும், வீதிமுட்டு முனைகளுக்கும் சிலைகள் செய்து தரவேண்டும் என்று மன்னர் அழைப்பு விடுத்தார். உன் தந்தை யார் என்னை அனுப்பினார்... உள்ளே வந்து பார்க்கிறாயா ?...''

''இல்லை. இன்றுபோய் இன்னொரு நாள் வருகிறேன்...''

மாதங்கி திரும்பினாள். அப்போது அவளைத் தாண்டிக்கொண்டு ஒரு குதிரை சென்றது ; அதில் மகேந்திரன் அமர்ந்திருந்தான்.

*   *   *

''மாதங்கி......!''

மாதங்கி திரும்பினாள் ; மகேந்திரன் நின்றிருந்தான்.

''குணபாலன் என்று உன்னுடைய உயிர்த்தோழன் இருக்கிறானே, அவன் செதுக்கிப்போட்டிருக்கும் சிலைகளை மன்னருடன் சென்று பார்த்து வரவேண்டும்...''

''உயிர்த்தோழன் — அப்படியென்றால்...''

''அதை நான் ஏன் சொல்லவேண்டும் ? அன்று நீ அவனுடன் ஆடிய ஆட்டத்தைப் பார்த்தால்... ஐயே... என்ன சிரிப்பு !...'' மகேந்திரன் பல்லைக் கடித்தான்.

''சே!... ஓர் ஆண்மகன் பேசும் பேச்சா இது !... உங்களுக்கே நன்றாயிருக்கிறதா ;...''

''அடீ !... செய்த செயல் தவறானது... அதைச் சுட்டிக் காட்டினால் துள்ளுகிறாயா ?... இருக்கட்டும். மன்னர் காத்துக் கொண்டிருப்பார். போய் வந்து பேசிக் கொள்கிறேன். உம்!... சீக்கிரம் கிளம்பு !...''

மகேந்திரன் நகர்ந்தான்.

*   *   *

ஒவ்வொரு சிலையாகப் பார்த்துப் புகழ்ந்து கொண்டே வந்த அரசர் ஒரு சிலையைக் கண்டதும் தாமே சிலையானார்.

''ஆகா !... அருமை....! குணபாலரே ! அருமை !...'' அரசரின் கரம் கழுத்திற்கு உயர்ந்தது. கழுத்திலிருந்த மணிமாலை கரத்தையடைந்து குணபாலனின் மார்பை அழகு செய்தது.

எல்லோருடைய கண்களுமே அச் சிலையின்மீது பாய்ந்தன.

அரசரின் உள்ளம் இரசனையில் மிதந்தது ; குணபாலனின் மனம் பெருமையால் மலர்ந்தது ; மகேந்திரனின் நெஞ்சம் கோபத்தால் துடித்தது ! மாதங்கியின் இதயம் அச்சத்தால் நடுங்கியது.

பெண்ணொருத்தி இடுப்பில் குடம் வைத்துக் கொண்டிருக்கிறாள் ; அதிலிருந்து வழிந்த நீர் அவள் மேல் சிந்தியிருக்கிறது ; பாதி உலர்ந்த உடை ; மறுபாதி ஈர உடை. இது தான் சிலை! ஆனால் அங்குச் சிலை தானா நின்றது ? இல்லை. மாதங்கிதான் சிலைவடிவாக உருவாக்கி நிறுத்தப் பட்டிருந்தாள்.

''அரசே, சற்று விலகி நில்லுங்கள்!...''

மகேந்திரனின் வேண்டுதலின் காரணம் புரியாமல் மன்னர் விலகி நின்ருர்.

''மாதங்கி! நீ அச் சிலையருகில் நின்று கொள்...''

அவள் நின்ருள்.

யாருமே எதிர்பார்க்கவில்லை. கண் இமைக்கும் நேரத்தில் மகேந்திரனின் உடைவாள்... மாதங்கியின் கழுத்தை முத்தமிட்டது. மாதங்கியின் தலை குணபாலனின் காலடியில் உருண்டது. அவள் உடல் அச்சிலையைத் தழுவியது. பீறிட்ட குருதி சிலையைக் கழுவியது.

* * *

கதை முடியவில்லை.

பெரியவர் திடீரென்று தலை தெறிக்க ஓடினுர்.

'குருதியில் மூழ்கியதால் சிவப்பு நிறமா?...' சிந்தித்த வண்ணம் திரும்பினேன். இரண்டு மூன்றுபேர் நான் இருந்த இடம் நோக்கி வந்தனர். அவர்களைக் கண்டுதான் அவர் ஓடியிருக்கிருர்.

''நீங்க ஊருக்குப் புதியவரா?...''

''ஆமாம்! எப்படித் தெரிந்தது?..''

''அந்தக் கிழவரோடு பேசிக் கொண்டிருந்தீர்களே?''

''ஏன்? நன்ருகத்தானே பேசிக் கொண்டிருந்தார்?''

''அதெல்லாம் பேசுவார்... ஆனுல் பைத்தியம்...''

''அப்படியா!...''

''ஆமாம்! நன்ருகத்தான் இருந்தார். சில ஆண்டுகட்கு முன்னே அவருடைய மகள் ஏனே தற்கொலை செய்து கொண்டாள். அதிலேயிருந்து...'' — அவர்கள் சிரித்து விட்டு நடந்தனர்.

நானும் நடக்கலானேன். என் உள்ளத்திற்கு அந்த அழகிய பூஞ்சோலைக் கிராமம் அழகையும், ஆச்சரியத்தையும், அமைதியையும், இன்பத்தையும் மட்டும் கொடுக்கவில்லை; ஒரு புதுமையான கதையையும் தந்திருக்கிறது. எனக்கு மட்டுமா? உங்களுக்கும்தான். வாழ்க பூஞ்சோலை!

நெப்போலியன் எழுதிய கையெழுத்துப் படி

1814 ஏப்ரல் மாதத்தில் நெப்போலியன் அரசுரிமையைத் துறக்கும் அறிக்கை, அவரது கையினுல் எழுதப்பட்டது, இப்போது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆர்மீனிய இசைத் திறனய்வாளர் கோர்கனேவின் பழைய தாள்களுக்கிடையே இது கிடைத்துள்ளது. இத்தாட்கள் கலை, மற்றும் இலக்கியத்திற்கான எரவான் தேசியக் கண்காட்சிச்சாலையில் உள்ளன.

நெப்போலியனின் இந்த அறிக்கை சாதாரணத் தாளில் எழுதப்பட்டு இருக்கிறது; சற்று மஞ்சள் நிறமாகியுள்ளது; ஆனுல் மிக நன்ருகப் பாதுகாக்கப்பட்டு உள்ளது. இந்த அரிய அறிக்கை கோர்கனேவின் வசம் எவ்வாறு வந்தது என்பது தெரியவில்லை.

இத்துடன் இன்னும் ஜெர்மன், ஃபிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளின் பல படிகளும் இருக்கின்றன. இவை எல்லாம் அதிகார பூர்வமானவை என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.



அவசர அவசரமாக உணவை உண்டுவிட்டு, உடையை உடுத்திக் கொண்டு அலுவலகம் புறப்படுகிருர் தந்தை. ''அப்பா!'' என்று ஓடிவந்து இடைமறிக்கிருள் அருமை மகள். ''காசு தாப்பா!'' என்று கொஞ்சிடும் மழலைமொழிக்கு உருகிப் பத்து காசைக் கையில் கொடுத்துப் பதிலுக்குக் கன்னத்தில் ஒன்று இதமாக வாங்கிக்கொண்டு அலுவலகம் நடக்கிருர் அந்தத் தந்தை.

மற்ருெரு காட்சி. பள்ளியில் மகனை விட்டுவிட்டு வீடு திரும்பிட முற்படுகிருள் தாய்! கண்ணைக் கசக்குகிருன் மைந்தன். மகன் முகத்தில் சிரிப்பைக் காணுவிட்டால் அன்று மாலையில் அவன் வீடு திரும்பும்வரை நிம்மதியே இருக்காது அந்தத் தாய்க்கு. அழகுப் பையைத் திறந்து கையில் கிடைத்த காசை மகனின் பைக்குள் போடுகிருள். அவன் பொங்கும் புன்னகையுடன் அன்னைக்கு ''டாட்டா'' கூறிக் கையசைத்து விடை கொடுக்கிருன். இவை எத்தனையோ குடும்பங்களில் நடைபெறும் அன்ருடக் காட்சிகள்.

தேவையற்ற பழக்கம்:

ஐந்து ஐந்தாய், பத்துப் பத்தாய் கொடுக்கப்படும் அந்தக் காசுகள் என்ன ஆகின்றன? பஞ்சு மிட்டாய்களாகப் பறக்கின்றன; 'ஐஸ் புரூட்டாக' உருகுகின்றன; 'கமற்கட்டா'க் கரைகின்றன.

ஐந்து வயதிலே 'ஐஸ் புரூட்'டுக்கு ஆசைப்படும் அந்தப் பிள்ளை மனம், பத்து வயதிலே திரைப்படத் தாரகைளின் படங்களுக்கும், பதினெட்டு வயதிலே சினிமா, சிகரெட் ஆகியவற்றிற்கும் ஆசைப்படுகிறது. பணத்தை அவற்றில் வீண் விரயம் செய்கிறது. அதுவே ஒரு பழக்கமாய் மறக்கமுடியாத- மாற்றமுடியாத ஒரு தேவையாய் வளருகிறது.

எனவேதான் ஐந்து வயதான அந்தப் பிஞ்சு உள்ளங்களில், பணத்தின் அருமையை, அது சேமிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மெள்ள மெள்ளப் பயிற்றுவிக்க வேண்டியது அவசியமாகிறது.

சேமிப்புப் பண்பு வளருகிறது:

பணத்தைச் சேமிக்க ஆரம்பிக்கும் குழந்தையிடம் வீண் செலவு குறைகிறது; சேமிப்புப் பண்பு வளருகிறது. கண்ட பண்டங்களைக் கண்ட இடத்தில் வாங்கி உண்ணும் பழக்கம் ஒழிகிறது. அவன் பெரியவன் ஆனவுடனும், சிகரெட் குடித்தல், அடிக்கடி சினிமாப் பார்த்தல், ஆபாசப் படங்கள், ஆபாசப் புத்தகங்களை வாங்குதல் முதலியவற்றில் பணத்தைப் பாழ

டிக்காமல் இன்றியமையாத் தேவைகளுக்கு மட்டுமே பணத்தைப் பயன்படுத்துகிறுன். தனது பள்ளிப் பாடப் புத்தகங்கள், துணிமணிகளைக் கிழிக்காமல் பேணிப் பயன்படுத்துகிறுன். தங்கள் செல்வ மகன் சேமிக்கிறுன் என்பதை அறிந்து பெற்ருேரும் அக மகிழ்கிருர்கள்.

சிக்கனத்திலிருந்து ஒழுக்கம் பிறக்கிறது. அவன் வளரவளர நல்லொழுக்கமும் பண்பும் பணமும் கூட வளருகின்றன. தனக்கும், தன்னுடைய குடும்பத்திற்கும், சுற்றத்தாருக்கும், நாட்டிற்கும் பயன்பட வாழ்கிறுன். இந்த நல்ல நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான், இன்றையத் தினம் பள்ளியில் சிறுசேமிப்புத் திட்டத்தைத் தீவிரமாக அமுலாக்குவதில் தமிழ்நாடு அரசு தனிக் கவனம் செலுத்துகிறது. மாநிலச் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவரான திரு. எம். ஜி. இராமச்சந்திரன், எம். எல். ஏ. அவர்களும் இத்திட்டத்தின்பால் தனி ஆர்வம் காட்டி வருகிருர்கள். மாணவ, மாணவிகளைச் சந்தித்து அவர்களிடம் சிறுசேமிப்பைப்பற்றிப் பேசுவதென்ருல் அவர்களுக்குத் தனி மகிழ்ச்சி. மாணவர்களுக்கும் இவரைக் காணும் பேரார்வம்.

மாணவ, மாணவிகள் கூட்டத்தில் பேசும் ஒவ்வொரு சமயமும் துணைத் தலைவர் அவர்கள் ஒழுக்கத்தையே வலியுறுத்தி வருகிருர்கள். நீங்கள் இத்தனை ஆயிரம் ரூபாய் வசூலித்துத் தரவேண்டும். உங்கள் கல்லூரிக்கு இத்தனை இலட்ச ரூபாய் குறியிலக்காக ஒதுக்கியிருக்கிறது என்று பணத்தின் அடிப்படையில் பேசுவதே கிடையாது.

அவரது பேச்சின் ஒவ்வொரு சொற்ருெடரும், சொற்ருெடரின் ஒவ்வொரு சொல்லும், சொல்லின் ஒவ்வோர் எழுத்தும் ஒழுக்கத்தைப் பற்றியதாகவே இருக்கும். 'சேமிப்பு ஒழுக்கத்தை வளர்க்கும். ஒழுக்கம் சேமிப்பை வளர்க்கும்!' என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

அதிலும் குறிப்பாக மாணவிகள்-வருங்காலத் தாய்மார்கள்-சேமிப்பில் மிகுந்த அக்கரை காட்டவேண்டும் என்று அவர் விரும்புகிருர். சென்னை நகரில் நடந்த சிறுசேமிப்புப் பேச்சுப் போட்டியில் எத்திராசு மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி தமயந்திதேவி முதல் பரிசு பெற்றதைக் கேள்வியுற்றுப் பேருவகை எய்திஞர். அந்த மாணவிக்குப் பரிசு வழங்கும்போது, ''தாய்க்குலத்தைச் சேர்ந்தவருக்கு முதல் பரிசு கிடைத்ததை நான் பாராட்டுகிறேன்'' என்று மனமாரத் துணைத் தலைவர் பாராட்டிஞர். குடும்பத் தலைவி குழந்தைகளை நல்ல பண்போடு வளர்க்கவேண்டிய பொறுப்பில் உள்ளவள். எனவே, தாய், சேமிப்பில் அக்கரை காட்டிஞல், அந்தக் குடும்பமே அந்தப் பண்பின் உறைவிடமாக மாறிவிடும் என்பதுதான் அவர்தம் கருத்து.

எனவே, இந்தச் சேமிப்புப் பண்பை மாணவர்-மாணவிகளிடையே வளர்ப்பதற்குத் தமிழ்நாடு அரசு ஒரு திட்டம் தீட்டி உள்ளது. அதன்படி ஒவ்வொரு பள்ளியிலும் சிறுசேமிப்புக் கருத்தரங்கு நடைபெறும். பள்ளி ஆசிரியர்கள், மாணவ-மாணவிகள், சிறுசேமிப்பு அலுவலர் ஆகியோர் சிறுசேமிப்பின் பயன் பற்றி அப்போது உரை நிகழ்த்துவார்கள். அதன்பின் சிறுசேமிப்பின் அவசியத்தையும் அதன் வழிமுறைகளையும் தெளிவாகக் காட்டும் திரைப்படங்கள் காட்டப்படும். தொடர்ந்து சிறுசேமிப்புப் பற்றிய புத்தகங்கள் விநியோகிக்கப்படும். சேமிப்பு அட்டைகள் ஆசிரியர்கள் வசம் தரப்படும்.

இரு மாணவர்கள் உரையாடல்:

''டேய்! பஸ் செலவுக்கும் புத்தகம் வாங்குவதுக்குமே வீட்டிலே காசுக்கு வழியில்லை! சேமித்து எப்படிடா வைக்கிறது?''

''ஏண்டா முடியாது? பஸ் செலவு போக மீதமுள்ள காசு, உறவுக்காரங்க யாராச்சும் தரும் காசு, இதெல்லாம் அப்போ அப்போ சேர்த்து வைச்சா நிறைய சேரும்டா. நான் அப்படித்தான்! எங்கப்பா எனக்கு ஓர் உண்டி வாங்கித் தந்திருக்கிருர். எங்க அண்ணன், எங்க சித்தி, எங்க மாமா, யாராவது காசு கொடுத்தா அதை உண்டியலிலே போட்டுவிடுவேன். நான் ஒரு புது கிரிக்கெட் மட்டை வாங்கினேனே, அதுகூட

இப்படித்தான்! நீகூட அப்படிப் பணம் சேருடா! இங்கிலாந்து அமெரிக்காவிலே எல்லாம் பள்ளியில் 'சேவிங்ஸ் பாங்கி'ன்னு இருக்காம்! மாணவர்களெல்லாம் அதிலே பணம் போட்டு வைப்பார்களாம்! சீனுக்காரன் நம்ம நாட்டோடு சண்டை பிடிச்சப்போ வெளிநாட்டு மாணவர்கள் அவங்க சேமிப்பிலே இருந்து நமக்குப் பணம் கொடுத்தாங்களாம்! எங்கப்பா அடிக்கடி இதை சொல்லுவார்.''

சிறுசேமிப்புத் திட்டத்தின் நடுவில் இரு மாணவர்கள் பேசிக்கொண்டவை இவை. முதல் மாணவனுக்கு எழுந்த அதே ஐயம் உங்களுக்கும் எழலாம். ஐந்து, பத்துக் காசுகளைக் கொண்டு எவ்விதம் சேமிக்க முடியும் என்று நீங்கள் வினவலாம்.

சேமிப்பு அட்டைகள், வில்லைகள் :

இதற்காகவே மாணவர்க்கென்று சிறுசேமிப்பில் தனி வசதி இருக்கிறது. 25 காசுக்குச் சேமிப்பு வில்லைகள் அஞ்சலகத்திலே கிடைக்கும். அவ்வப்போது 25 காசு சேர்ந்தவுடன் ஒரு சேமிப்பு வில்லை வாங்கி, சேமிப்பு அட்டையில் ஒட்டிக் கொள்ளலாம். இந்தச் சேமிப்பு அட்டைகள் வகுப்பு ஆசிரியரிடமாவது, தலைமை ஆசிரியரிடமாவது கிடைக்கும்.

சேமிப்பு வில்லைகள் 5 ரூபாய் மதிப்பிற்குச் சேர்ந்ததும், அதை அஞ்சலகத்திற்கு எடுத்துச் சென்ருல், அந்தப் பணத்திற்கு அந்த மாணவன் பெயரில் ஒரு சேமிப்புக் கணக்குத் துவக்கித் தருவார்கள். அதன்பின் அவ்வப்போது ஒரு ரூபாய் அளவிற்கு வில்லைகள் சேர்ந்தால்கூட அதை அந்த மாணவன் கணக்கில் அஞ்சலகத்தில் வரவு வைப்பார்கள். இவ்வாறு சேமிப்பு வளரத் தொடங்கும்.

மாணவர்கள் அவ்வப்போது இந்தச் சேமிப்பு வில்லைகளுக்காக அஞ்சலகங்களுக்கு அலையவேண்டியதைத் தவிர்ப்பதற்காக இப்போது ஒரு புதிய திட்டத்தை அரசு தீட்டி உள்ளது. அதன்படி ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு சிறிய தொகையை அதாவது ரூபாய் 25ஐச் சிறுசேமிப்பு நிறுவனம் கொடுக்கும். அந்தப் பணத்தைக் கொண்டு அந்தப்பள்ளியில் அதற்காக நியமிக்கப்படும் ஆசிரியர் சேமிப்பு வில்லைகள் வாங்கித் தன்வசம் வைத்திருப்பார். அவரிடமிருந்து மாணவர்கள் சேமிப்பு வில்லைகளை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். இதற்காக ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு சேமிப்புக்குழு அமைத்து அதன்மூலம் இந்தச் சேமிப்புப் பண்பை வளர்க்க வகை செய்யப்பட்டுள்ளது.

போட்டி மனப்பான்மை:

சிறுவர்களிடம் எப்போதுமே ஒரு போட்டி மனப்பான்மை உண்டு. அதை இவ்வாறு ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தும்போது அது பெரிதும் பயன் தருகிறது. சத்தியன் 4 ரூபாய் சேர்த்துவிட்டான் என்றதும் அன்பரசன் தான் 10 ரூபாய் சேர்த்துவிடவேண்டும் என்று முழு மூச்சுடன் சேமிக்கத் தலைப்படுகிறுன். அவர்களுடைய போட்டியுடன் போட்டி போட்டுக்கொண்டு பணமும் வளருகிறது.

இவ்வாறு சேமிக்கும் மாணவன் தனக்கு மட்டுமல்லாது, தாய்நாட்டிற்கும் சேவை செய்து வருகிறுன். அவன் சிறுசேமிப்பில் போடும் ஒவ்வொரு காசும், நாட்டின் முன்னேற்றத் திட்டங்களுக்கும், பாதுகாப்பு முயற்சிகளுக்கும் பயன்படுகிறது. அதை எண்ணி அவன் பெருமிதம் அடையலாம். அவ்வாறு உள்ள நல்ல மாணவனை நினைத்து நாடும் பெருமை அடையும்.

சேமிப்பின் மூலம் ஒழுக்கம் வளரும்; ஒழுக்கத்தின் மூலம் சேமிப்பு வளரும். இது ஒரு சக்கரம். இதன் மூலம் நல்ல பண்பு, நல்ல கல்வி, வருங்கால முன்னேற்றம், வளமான வாழ்வு என்ற சக்கரங்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து வாழ்க்கைப் பாதையில் சீராகப் பயணம் செய்ய வழி வகுக்கின்றன.

வளர்க இச் சிறுசேமிப்புப் பண்பு!

சூலுற்றிருக்கும் பசுவையும், அது கன்றை ஈனும் தருணத்திலும், ஈன்ற பின்னரும், பசுவையும், கன்றையும் நன்கு கவனித்தல் மிக்க அவசியம்.

அவற்றிற்குரிய சில எளிய முறைகளைத் தெளிவாக விளக்குகிறது இக் கட்டுரை.

— ஆசிரியர்



கன்று பிறந்ததும்...

கன்றீனும் வேளையில் பசுவிற்கு எவ்வித இடையூறும் இருக்கலாகாது. அது அமைதியாகவிருப்பதற்குப் போதிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும். அவ்வேளையில் பசுவிற்கு மிக அருகில் எவரும் நிற்கக்கூடாது; கூச்சலிடக்கூடாது. ஒருவர் மட்டுமே அருகில் நிற்பது அவசியமெனத் தோன்றினால், அவர் தூரத்தில் நின்று பசுவைக் கவனிக்கலாம். அதில் தவறில்லை.

கன்று வெளியானபின், அதன் மேலுள்ள தூய்மையற்றனவற்றைப் பசு தின்பதற்கு முயலும். அதைத் தடுத்துவிட வேண்டும். உண்பதால், பசுவிற்கு வயிற்றுக் கோளாறு ஏற்படுவதுடன் சீரண சக்தியும் பாதிக்கப்படும்.

பிறந்த கன்றைத் தாய்ப்பசு, வேகமாக, உற்சாகமாக நாக்கால் நக்கும். இதனால் கன்று சுத்தமாக்கப்படுவதுடன், அது நன்றாக மூச்சுவிடவும் வழியேற்படுகிறது.

பசு இதைச் செய்யாவிடில், கன்றின் மூக்கையொட்டியுள்ள மெல்லிய தோல்களை நாமே அகற்றிவிட வேண்டும். பின்னர் உலர்ந்த துணி, அல்லது வைக்கோலைக் கொண்டு கன்றை நன்றாகத் தேய்க்கவேண்டும். இதனால் கன்று நன்றாக மூச்சுவிடும்.

பிறந்த 20 வினாடிகளுக்குள்ளேயே வலிவுள்ள கன்றுகள் எழுந்து நிற்கும். சற்று வலிவு குறைவாயுள்ள கன்றுகளை, நாமே தூக்கி நிறுத்தி, தாயின் மடிக்கு அருகில் நிறுத்தவேண்டும்.

வெதுவெதுப்பான நீரில் மடியைக் கழுவி, உலர்ந்த பின்னர்த்தான் கன்றைப் பால் குடிக்க விடவேண்டும்.

முதலாவதாகக் கிடைக்கும் பாலில் கன்றுக்கு வேண்டிய சத்துக்கள் அனைத்தும் நிறைந்துள்ளன. மற்றப் பாலைவிட இதில் இரண்டு மடங்கு கொழுப்புச் சத்தும், தாதுச்சத்தும், 'டி' உயிர்ச் சத்து மூன்று மடங்கும், இரும்புச் சத்து 10 மடங்கும் உள்ளன. பிறந்த 24 முதல் 36 மணி நேரத்திற்குள்ளாகக் கன்றைத் தாக்கும் எந்த நோயையும் எதிர்க்கவல்ல சக்திகளனைத்தும் இப்பாலில் மலிந்துள்ளன. இது ஒரு நல்ல மருந்துமாகும். மேலும் இது சீரண சக்திகளை ஊக்குவித்து அவ்வுறுப்புகளைச் செம்மையுறச் செய்கிறது.

இந்த 'முதல் பாலை'ப் பசு அளிக்கத் தவறினால், அதற்கு மாறாக, சாதாரணப் பாலுடன் 'காட்லிவர்' எண்ணெயில் ஒரு கரண்டி அளவையும் சேர்த்துக் கன்றுக்கு ஊட்டலாம். விளக்கெண்ணெயில் இரண்டு 'அவுன்ஸ்' கொடுப்பது மிக நன்று.

கன்றை ஈன்ற உடனே, பசுவிற்கு ஏற்படும் தாகத்தை அளவிட இயலாது. அதனுடலிலுள்ள திரவப் பொருள்களனைத்தையும் வெளியாக்கி விடுவதால் இந்தப் பெருந் தாகம் அதற்கு ஏற்பட்டுவிடுகிறது. அதற்கெனக் கோதுமை அல்லது கம்பு கலந்து தயாரித்த கஞ்சியில், சிறிதளவு வெல்லம், இஞ்சித்தூள், உப்பைச் சேர்த்துப் பசுவிற்கு அளிக்க வேண்டும். இவ்வகை உணவை இரண்டாம் நாள் தொடக்கம் அதிகரித்துக் கொள்ளவேண்டும். சுமார் இரண்டு கிழமைக்குள், முழு உணவளிக்கலாம்.

முதல் பால் நிலை முடிவுற்ற பின்னர், அப் பசுவை இதர பசுக்களுடன் சேர்த்து விடலாம்.

வன வளம்

1968-69இல் காட்டு வள நிர்வாகம் குறித்த முக்கியக் கூறுகளும் 1969-70ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களும்

தமிழ் நாட்டின் நிலப் பரப்பில் பதினேழு சதவீதம் காடுகள் அடர்ந்துள்ளன. இக்காடுகளில் பெரும்பாலானவை உலர்ந்த காடுகளாகும்; அல்லது அடர்த்திக் குறைவான காடுகளாகும்.

வளர்ச்சிப் பணிகள் பெருமளவில் நிறைவேற்றப்பட்டு வருவதாலும், வீட்டுத் தேவைகளுக்கு விறகும், எரிபொருளும் அதிக அளவில் தேவைப்படுவதாலும், காடுகளை வேளாண்மைக்கான விளைநிலங்களாக மாற்றுவதற்கான தேவையினாலும், வன விலங்குகள் கண்மூடித்தனமாக அழிக்கப்படுவதாலும், நமது காடுகள் வெகு விரைவில் அழிந்து வருகின்றன. தற்போதுள்ள காடுகளைப் பாதுகாத்து, பேணி, நல்லமுறையில் பயன்படுத்துவதற்கும், புதிய காடுகளை வளர்ப்பதற்கும் நமக்குள்ள திறமையைவிட அதிக விரைவாக அடவிகள் அழிந்து வருகின்றன. காடுபடு பொருள்களுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தேவையை நிறைவு செய்வதற்காக, ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து வெட்டு மரம், வீட்டுத் தேவைகளுக்கான மரம், முந்திரி, அரக்கு, சந்தனம், இரப்பர் போன்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், மண் வளப் பாதுகாப்பு வேலைகளை முக்கியமான நீர்த் தேக்கங்களின் நீர்கோட் பகுதிகளில் மேற்கொள்ளவும், நமது காடுகளையும் காடுவாழ் வனவிலங்குகளையும் பாதுகாக்கச் சட்டங்களைச் செயல்படுத்தவும், பரப்புரை செய்யவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. காடுகளின் கீழ்க் குறைவான நிலப்பரப்பேயுள்ளதால், அரசுக்குச் சொந்தமான தரிசு நிலங்களும், ஊராட்சிக்குச் சொந்தமான தரிசு நிலங்களும் காடுகள் வளர்க்கப் பயன்படுத்தட் படுகின்றன.

நமது காட்டுப் பகுதியை நீட்டிப் பார்ப்பதற்கும் ஓர் எல்லை உண்டு. காடு வளர்ப்புப் பணிகளை மும்முரமாக நிறைவேற்றவும், காடுபடு பொருள்களைப் பெருக்கவும் ஏற்ற தருணம் இதுவே. வேளாண்மை நிலத்தில் விளைச்சல் திறனை அதிகரிக்க நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் போன்றே இத்துறையிலும் மும்முரமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டில் காடுகள் பரப்பளவு குறைவுதான்; என்றாலும் காடுகளிலிருந்து நமது மாநிலத்திற்குக் கணிசமான வருவாய் கிடைக்கிறது. 1967-68இல் ரூ. 338·65 இலட்சம் வருவாய் கிடைத்தது. இது இதுவரையில் கிடைத்துள்ள வருவாயிலேயே மிகவும் அதிகமானதாகும். காடுகள் துறை, காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழில்களுக்கான மூலப் பொருள்களை வழங்குவதற்காகக் காடுகளை வளர்ப்பது குறித்து அண்மைக் காலத்தில் மும்முரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டதே இந்த வருவாய் உயர்

வுக்குக் காரணமாகும். மேலும், காடுகள் அண்மையில் உள்ள கிராம மக்களுக்கான, சிறு வெட்டு மரங்கள், எரிபொருள், தழை உரம், காடுபடு சிறு பொருள், மேய்ச்சல் நிலம் ஆகியவை குறித்த தேவைகளையும் நிறைவு செய்ய இந்த நடவடிக்கைகள் பயன்பட்டன.

தமிழ் நாட்டில் ஒதுக்குக் காடுகளின் மொத்தப் பரப்பளவு 17,264 சதுர கிலோ மீட்டர்; ஒதுக்க நிலங்களின் மொத்தப் பரப்பளவு 3,731 சதுர கிலோ மீட்டராகும். 34,000 க. மீட்டர் வெட்டு மரங்கள் நமது காடுகளிலிருந்து மொத்தம் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1967-68இல் இரயில்வே நிர்வாகத்திற்கு ரூ. 7·68 இலட்சம் மதிப்புள்ள 29,500 தண்டவாளக் கட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இதைத் தவிர ஒவ்வொரு குடும்பத்திற்குத் தேவையான விறகும் 377 இலட்சம் க. மீட்டர் அளவிற்கு, காடுகள் துறையினால் வழங்கப்படுகிறது. முந்திரி, கடுக்காய், தேன், அரக்கு, வாட்டில் பட்டை போன்ற காடுபடு சிறு பொருள்களும் ரூ. 27·15 இலட்சம் மதிப்பிற்குக் காடுகளிலிருந்து வழங்கப்பட்டுள்ளன.

செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களிலுள்ள திறந்த வெளி, முட்புதர்க் காடுகளை காடுகள் துறை கடந்த 13 ஆண்டுகளில் முந்திரி மரத் தோட்டங்களாக மாற்றியுள்ளது. காடுகள் துறை இது வரை ரூ. 15·72 இலட்சம் மொத்தச் செலவில் 27,400 ஹெக்டேர்பரப்பளவில் முந்திரிக்காடுகளை வளர்த்துள்ளது. முன்புவளர்க்கப்பட்ட முந்திரிமரத் தோட்டங்களில் நமது மாநிலத்திற்குக் கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது. 1968ஆம் ஆண்டு ரூ. 11 இலட்சம் வருவாய் கிட்டியுள்ளது. ரூ. 0·79 இலட்சம் மதிப்புள்ள அரக்கும், அரக்குப் பொருள்களும் விற்பனை செய்யப்பட்டன. தேன் விற்பனையிலிருந்து 0·22 இலட்சம் கிட்டியுள்ளது.

காடுகள்துறை, காகித ஆலைகளுக்கான மூங்கில்களையும், தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக வாட்டில் பட்டைகளையும், இரயான் தொழிற் சாலைகளுக்காகக் கற்பூர மரங்களையும், சந்தனத் தைலத் தொழிற் சாலைகளுக்காகச் சந்தன மரங்களையும் வழங்குகின்றது. தோல் பதனிடு தொழில், காகிதத் தொழில் ஆகியவற்றிற்காக மூலப் பொருள்களை இத்துறை வெளிச் சந்தை விலையைவிடக் குறைவான விலையில் வழங்குகின்றது. தமிழ் நாட்டில் இத்தகைய தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிப்பதே இதன் நோக்கமாகும்.

1082 டன் அளவு சந்தன மரம் விற்கப்பட்டது. இந்த விற்பனையிலிருந்து ரூ. 117·66 இலட்சம் கிடைத்தது. காட்டில் உலர்ந்த 39,993டன் மூங்கில் பள்ளிப் பாளையத்திலுள்ள திருவாளர்கள் சேசாயி காகித அட்டைகள் தயாரிப்பு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. திருவாளர்கள் டான் இந்தியா வாட்டில் வெட்டியெடுக்கும் நிறுவனம் வாட்டில் மரங்களை வெட்டியெடுப்பதற்காக 249 ஹெக்டேர் பரப்பளவுள்ள வாட்டில் மரக் காடுகளும், திருவாளர்கள் தென்னிந்திய விஸ்போஸ் நிறுவனத்திற்கு 264 ஹெக்டேர் பரப்புள்ள கற்பூர மரக்காடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

காட்டுப் பகுதிகளில் மேய்ச்சல் காரியங்களுக்குப் பழைய கட்டணங்களே வசூலிக்கப்படுகின்றன. 16·69 இலட்சம் கால்நடைகள் மேய்வதற்கு மேய்ச்சல் உரிமம் வழங்கப்பட்டு அவை மூலம் ரூ. 5·39 இலட்சம் வருவாய் கிடைத்தது.

தமிழ் நாட்டிலுள்ள வன விலங்குகளைப் பாதுகாப்பதற்கும், நிர்வகிப்பதற்கும், மாநில வன விலங்குப் பாதுகாப்பு நிறுவனம் என்று அழைக்கப்படும் தனிப்பட்டதொரு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. முதுமலை, கோடிக்கரை ஆகிய இடங்களிலுள்ள வன விலங்குகள் உய்விடங்களையும் முண்டந்துறையில் புலிகளுக்கான உய்விடத்தையும் பேணிவரும் பொறுப்பு, இந்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மரம் வெட்டும் தொழிலை நவீன முறையில் மேற்கொள்ளுவதிலும், மரங்களைத் துண்டுகளாக வெட்டும் கருவிகளைப் பயன்படுத்துவதிலும், காடுகள்துறைப் பணியாளார்களுக்குப்

பயிற்சியளிக்கும் திட்டமொன்றைக் காடுகள் துறை செயலுக்குக்கொண்டு வந்துள்ளது. மரம் வெட்டுவதில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படைத் தொழில் முறைகளில், காடுகள் துறை அதிகாரிகளுக்குப் பயிற்சியளிப்பதற்காக மரங்கள் வெட்டுத்தொழில் பயிற்சி நிலையமொன்றை இந்திய அரசு கோவையில் தொடங்கியது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏறத்தாழ 1800 ஹெக்டேர் பரப்பளவில் இரப்பர் மரத் தோட்டங்களை வளர்த்ததே இத்துறையின் மகத்தான சாதனையாகும். இரப்பர் வணிக முக்கியத்துவம் வாய்ந்த பொருளாகும். பழைய இரப்பர் மரத் தோட்டங்கள் சிலவற்றிலிருந்து இரப்பர் மரப்பால் தயாரிக்கப்பட்டு, இதிலிருந்து இரப்பர் விரிப்புகள் தயாரிக்கப்பட்டு அவற்றை அரசாங்க இரப்பர் மரத் தோட்டப் பொது மேலாளர் ஏலம் போடுவதன்மூலம் விற்பனை செய்கிறார். இரப்பர் மரப்பாலை வேலை முறைக்குட்படுத்துவதற்காக இறக்குமதி செய்யப்படும் பொறியுடன் நவீன வகைத் தொழிற்சாலையொன்று விரைவில் நிறுவப்படும்.

இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் இந்தியர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக இத்துறை நீலகிரி மாவட்டத்தில் 1,500 ஹெக்டேர் பரப்பில் தேயிலைத் தோட்டங்களை நிறுவும் பணியை மேற்கொண்டுள்ளது. ரூ. 5·68 கோடி செலவில் நிறுவப்படும் இத்தேயிலைத் தோட்டத்திற்கான செலவு குறித்து இந்திய அரசின் உதவியும் கிடைக்கும். இலங்கையிலிருந்து திருப்பி அனுப்படும் 1,700 குடும்பங்களைக் குடியேற்றுவதற்கு, இந்தத் தேயிலைத் தோட்டங்கள் உதவும்.

இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் 333 குடும்பங்களைக் குடியேற்றுவதற்காகக் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ. 81·49 இலட்சம் செலவில் 800 ஹெக்டேர் பரப்பளவில் இரப்பர் மரத் தோட்டங்களை வளர்க்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருவரங்குளம் கிராமத்தில் உள்ள 1,200 ஹெக்டேர் பரப்பளவு காட்டு நிலத்தை இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் இந்தியர்களுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒதுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்படும் இந்தியர்களைக் குடியேற்றுவதற்காகத் தென்னை வளர்ச்சித் திட்டம் ஒன்றை மேற்கொள்ளுவதற்காக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருவாடானை; முதுகுளத்தூர் வட்டங்களைச் சேர்ந்த காடுகள், வேளாண்மைத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தமிழ் நாட்டின் மொத்த நிலப் பரப்பளவில் ஒதுக்கக் காடுகளின் பரப்பளவு 13 சதவீதம். ஆயினும், காட்டு வளமல்லாத பிற காரியங்களுக்காகக் காடுகளை வளர்ப்பதற்கான தேவை அதிகரித்து வருகிறது. காட்டு நிலங்கள் வேளாண்மைக் காரியங்களுக்காகத் தனிப்பட்டவர்களுக்குப் பொதுவாகக் கொடுக்கப்படுவதில்லை. ஆயினும், காடுகள் வளர்ப்புக்காக உடனடியாகத் தேவைப்படாத காட்டு நிலங்களை, தற்போதுள்ள உணவுப் பற்றாக்குறையை முன்னிட்டுப் பயிர் வளர்ப்பதற்காக நிலமற்ற ஏழைகளுக்குக் குத்தகைக்கு விடப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் :

முன்னாள் ஜமீன் காடுகளையும், ஊராட்சிக் காடுகளையும் மீண்டும் தளிர்க்கச் செய்வதற்காகவும், விறகு மரக் காடுகளையும், தீக்குச்சி மரக் காடுகளையும் வளர்ப்பதற்காகவும் இப்பணித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மொத்தச் செலவு ரூ. 30·43 இலட்சம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் :

முன்னாள் ஜமீன், முன்னாள் ஊராட்சிக் காடுகளைத் தளிர்க்கச் செய்ய வகை செய்யும் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டன. முந்திரி மரக்காடுகள் பெருமளவில் வளர்க்கப்பட்டன. 18,970 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி மரக்காடுகள் வளர்க்கப்பட்டன.

(1) ஆற்றங்கரைகளிலும், கால்வாய்க் கரைகளிலும், குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் தேக்கு மரங்களையும், பிற கடின மரங்களை

யும் வளர்த்தல் (2) காடுகளை விரைவில் மேற்பார்வையிடுவதற்கும், காடுபடு பொருள்களை விரைவில் அகற்றுவதற்கும் வசதியாக இருக்கும் வகையில் காட்டுப் பகுதிகளில் புதிய சாலைகளை அமைத்தல் (3) ஒதுக்குக் காடுகளுக்கு வெளியே மண் அரிக்கப்பட்டுள்ள நிலங்களைக் காடுகளை வளர்ப்பதற்காக ஆய்வு செய்தல் (4) இம்மாநிலத்தில் தீவன வாயில்களை மேம்படுத்துதல் ஆகிய காரியங்களுக்காகப் புதிய கோட்டங்கள் அமைக்கப்பட்டன. பெருமளவுப் பகுதிகளில் தேக்கு, தீக்குச்சி மரம், வாட்டில், கற்பூர மரங்கள் வளர்க்கும் பணியும் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டன. இப் பகுதிகளில் எரிபொருள் வாயில்களை அதிகரிக்கும் பொருட்டு விறகு மரக்காடுகள் வளர்க்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது.

ஓய்வு இல்லம் ஏற்படுத்துவதன் மூலமும், சாலைகளை மேம்பாடு செய்வதன் மூலமும் முதுமலை வனவிலங்குகள் உய்விடம் ரூ. 4·35 லட்சம் செலவில் மேம்படுத்தப்பட்டது. கிராமங்களிலும், கிராமங்களைச் சுற்றிலும் உள்ள பகுதிகளிலும் பண்ணைக்காடுகளை வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 60 ஹெக்டேர் பரப்பளவிற்கு மேற்பட்ட நிலங்களில் இரப்பர் மரத்தோட்டங்கள் வளர்க்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

தகுந்த பகுதிகளில் அரக்கு பற்றும் மரங்கள் வளர்க்கப்பட்டன.

திட்டப்பணிகளுக்காக ரூ. 147·27 இலட்சம் செலவிடப்பட்டது.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டம் :

வெட்டுமரம், எரிபொருள், தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருள்கள் ஆகியவை குறித்த இம் மாநிலத்தின் நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்வதே மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

கிராம மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தில் ஒதுக்கக் காடுகளுக்குப் புறம்பேயுள்ள தரிசு நிலங்களில் பெருமளவில் பண்ணைக் காடுகள் வளர்க்கப்படுகின்றன. தொழில்களின் வளர்ந்து வரும் தேவையைச் சரிக்கட்ட சுமார் 1,775 ஹெக்டேர் பரப்பளவில் விரைந்து வளரும் மரவகைகள் வளர்க்கப்பட்டன.

இரப்பர் மரங்கள் பரந்த அளவில் வளர்க்கப்பட்டன. சுமார் 1,190 ஹெக்டேர் பரப்பளவில் இரப்பர் மரங்கள் வளர்க்கப்பட்டன. தேக்கு, மென்மரம், சவுக்கு, கற்பூர மரம், வாட்டில் ஆகிய மரங்கள் தொடர்ந்து பயிரிடப்பட்டன.

வைகை அணையில் காடுகள்துறைப் பணியாளர்களுக்கும் காடுகள் துறைப் பாதுகாப்பாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப் பள்ளி ஒன்று தொடங்கப்பட்டது. வாட்டில் மரம் பற்றி முனைப்பாக ஆராய ஒரு பிரிவு தொடங்கப்பட்டது. பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

குந்தா ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்தின் நீர்கோட் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளத் தனி அமைப்பு ஒன்று தொடங்கப்பட்டது. வைகை, மேட்டூர் நீர்கோட் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகளைத் தொடங்க இப்போது பிரிவுகள் உள்ளன. தனிப் பிரிவுகளில் செயல் திட்டங்கள் தயாரிக்கப்படவும், பணிகளைச் சிறப்பாக மேற்பார்வையிடவும், திட்டச்செயல் வட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. திட்டப் பணிகளின் செலவு ரூ. 372 இலட்சம்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மேற்பட்ட காலப்பகுதி (1966-69) :

மூன்ருவது திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து செயல்பட்டன. விரைந்து வளரும் மரங்களைப் பயிரிடவும், வாட்டில், கற்பூர மரம், மூங்கில், சந்தன மரம் முதலிய தொழில் மதிப்புள்ள மரங்களை வளர்க்கவும், தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட்டது.

நான்காம் திட்டப் பணிகள் :

இத்திட்டத்தின் தலையாய குறிக்கோள்கள் வருமாறு :

(அ) உயர் அளவுப் பலன் பெறக் காடுகளில் உற்பத்தி அளவைப் பெருக்குதல்.

(ஆ) காகிதம், கூழ், இரயான், பிற காடுபடு பொருள்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள் ஆகியவற்றின் தேவையைச் சரிக்கட்டுதல்.

(இ) காடுகளிலிருந்து கிடைக்கும் வணிக மதிப்புள்ள மரங்களின் பலனை அதிகரித்தல்.

(ஈ) வெட்டுமரம், விறகுமரம், பிற மரங்கள் சம்பந்தமாக இயன்ற அளவிற்கு உள்ளூர்ப் பொது மக்களின் தேவையைச் சரிக்கட்டுதல்.

(உ) வன விலங்குகளைப் பாதுகாத்து மேம்படுத்துதல்.

(ஊ) இம் மாநிலத்திலுள்ள காட்டு வளம் பற்றிய சிறப்பான கூறுகளில் ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.

காட்டுவளத் திட்டங்களுக்காகும் மொத்தசெலவு ரூ. 472·50 இலட்சம்.

கிராமங்களைச் சுற்றிலும் உள்ள தொகுதியான, தகுந்த நிலப் பரப்புகளிலும், 20 ஹெக்டேர் பரப்பிற்கு மேற்பட்ட அரசாங்கத் தரிசு நிலங்களிலும், புறம்போக்குகளிலும் கிராமக் காடுகளை வளர்ப்பது இத் திட்டத்தின் சிறப்பான நோக்கமாகும். கிராம மக்களுக்கு ஏற்படும் அன்ருடத் தேவைகளான விறகு, வெட்டுமரம், தழை உரம், தீவனம் ஆகியவற்றை இக் கிராமக் காடுகள் நிறைவு செய்யும்.

நான்காம் திட்டக் காலத்தில் 18,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 40 இலட்சம் மொத்தச் செலவில் இக்காடுகள் பயிரிடப்படும். 1969-70 இல் ரூ. 5 இலட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் நிலத்தில் கிராமக் காடுகள் பயிரிடப்படும்.

விறகு மரங்கள் : விறகு மரங்கள் குறித்த பெரும் பற்ருக்குறையைச் சரிக்கட்ட மக்கள் பெருக்கம் மிக்க பகுதிகளின் அண்டைப் பரப்புகளில் விறகு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். நான்காம் திட்டக் காலத்தில் 6,000 ஹெக்டேர் பரப்பில் விறகு மரங்கள் பயிரிடப்படும். 1969-70இல் 600 ஹெக்டேர் பரப்பில் ரூ. 2·55 இலட்சம் செலவில் யூக்லிப்டஸ் மரங்களும் பிற மரங்களும் பயிரிடப்படும்.

தேக்கு:

தற்போதுள்ள ஆதாரங்களைப் பெருக்குவதற்கு, தேக்கு மரங்களையும், கடின மரங்களையும் வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும். நான்காவது திட்டத்தில் ரூ. 15இலட்சம் செலவில் 2,000 ஹெக்டேர் பரப்பில் மரங்கள் பயிரிடப்படும், 1969-70 இல் ரூ. 0·92 இலட்சம் செலவில் 465 ஹெக்டேர் பரப்பில் இம் மரங்கள் பயிரிடப்படும்.

மென்மரம்:

தீப்பெட்டித் தயாரிப்புத் தொழிலுக்குத் தற்போது வழங்கப்படும் மரங்களை அதிகப்படுத்தும் பொருட்டு தீக்குச்சி வெட்டு மரங்களை வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது திட்டக் காலத்தில் 1,500 ஹெக்டேரில் மென்மரங்கள் ரூ. 5 இலட்சம் செலவில் பயிரிடப்படும். 1969-70இல் ரூ. 0·75 இலட்சம் செலவில் 300 ஹெக்டேர் பரப்பளவில் இம்மரங்கள் பயிரிடப்படும்.

சவுக்கு:

கிராமப் புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் தேவைப் படும் விறகுகளை வழங்குவதற்குப் படுகை நிலங்களிலும் கடற்கரையோரங்களிலும் சவுக்கு மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக்காலத்தில் 2,000 ஹெக்டேர் பரப்பில் ரூ. 10 இலட்சம் செலவில் சவுக்கு பயிரிடப்படும்.

சந்தன மரம்:

இம்மாநிலத்தின் சந்தன மரங்களின் வளத்தைப் பெருக்குவதற்கெனச் சந்தன மரங்களை வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காவது திட்டக்காலத்தில் ரூ. 10 இலட்சம் செலவில் 1000 ஹெக்டேர் பரப்பில் இம் மரங்கள் பயிரிடப்படும். 1969-70இல் ரூ. 1·06 இலட்சம் செலவில் 160 ஹெக்டேர் பரப்பில் சந்தனமரம் பயிரிடப்படும். சத்தியமங்கலத்தில் சந்தன மரத்திற்காக, தூய்மைப்படுத்தி, சேமித்து வைக்கும் கூடம் ஒன்று கட்டப்படும்.

இரப்பர், வாணிகச் சிறப்புள்ள பொருளாகையால் கன்னியாகுமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டங்களை வளர்ப்பது இத் திட்டத்தின் நோக்கமாகும்.

நான்காம் திட்டக்காலத்தில் 800 ஹெக்டேர் பரப்பில் ரூ. 100இலட்சம்

செலவில் இரப்பர் பயிரிடப்படும். 1969-70இல் 200 ஹெக்டேர் பரப்பில் ரூ. 10·82 இலட்சம் செலவில் இரப்பர் பயிரிடப்படும்.

வேளாண்மை வளர்ச்சிக்கும், கால் நடை வளர்ப்புக்கும் காடுகளைப் போதுமான அளவில் வளர்ப்பது இன்றியமையாதது என வலியுறுத்தத் தேவையில்லை. மரங்களை நட்டு அவை பெரிதாவதற்குப் பல ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் பெரிதான மரங்களை இமைப் பொழுதில் வெட்டிவிடலாம். வேளாண்மைக்கு உறுதுணையாக விளங்கும் மண்ணின் மேற்பரப்பு ஓர் அங்குலம் உயர்வதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகும். ஆனால் மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள் இராமையினால் இந்த மண்வள மேற்பரப்பு ஒரு சில ஆண்டுகளில் கரைந்து போய்விடலாம். காடுகளை வளர்த்துப் பாதுகாத்து அவற்றை நல்ல முறையில் பயன்படுத்துவது என்பது பெரியதொரு பணியாகும். மக்களும் அவர்கள் தலைவர்களும் இதனை உணர்ந்து தாமாக முன் வந்து அரசுடன் ஒத்துழைத்தால்தான் இப்பெரியதொரு பணியை நிறைவேற்ற அரசால் இயலும்.

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க :

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற :

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்.



CODE MB-1/VL

தயாரிப்பவர்கள் :

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்.,

மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள் :

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:	கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071	தொலைபேசி எண் 81227
75, கலாசி பாளையம்	38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 539	தபால் பெட்டி எண் 677
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2	இராயப்பேட்டை, சென்னை-14



அனைத்துநாட்டுத் தொழிலாளர் நிறுவனப் பொன்விழா 20-7-1969 அன்று சென்னை இராசாசி மண்டபத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கிவைக்கப்பட்டது.



தேசிய சேமிப்புத் திட்ட இயக்கத்தின் புதிய அமைப்புக்குழு அளித்த கேடயத்தைப் பரங்கிமலை வட்டார வளர்ச்சி அதிகாரி திரு. டி. நாகசுந்தரம் சிட்லப்பாக்கத்தில் 16-7-1969 அன்று நடைபெற்ற விழாவில் அளித்தார்.



இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர்
திரு. எல். கே. ஜா. தமிழ்நாடு தலைமைச் செயலகத்தில்
முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்களைச் சந்தித்தார்.
படத்தில் தொழிலமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் அவர்களையும் காணலாம்.



ரிசர்வ் வங்கி கவர்னர் திரு. எல். கே. ஜா. தமிழக அமைச்சர்களைக் கோட்டையில் சந்தித்து உரையாடினர். [15-7-1969]

உணவுத் தானியங்கள் கள்ளக் கடத்தலைத் தடுத்து நிறுத்துவதுபற்றி மாவட்டக் காவற்றுறை அதிகாரிகளுடன் மாண்புமிகு முதலமைச்சரும், மாண்புமிகு உணவு அமைச்சரும் ஆலோசனை நடத்தினர். [6-7-1969]

ரிசர்வ் வங்கி கவர்னர் திரு. எல். கே. ஜா. தமிழக அமைச்சர்களைக் கோட்டையில் சந்தித்து உரையாடினர். [15-7-1969]



உணவுத் தானியங்கள் கள்ளக் கடத்தலைத் தடுத்து நிறுத்துவதுபற்றி மாவட்டக் காவற்றுறை அதிகாரிகளுடன் மாண்புமிகு முதலமைச்சரும், மாண்புமிகு உணவு அமைச்சரும் ஆலோசனை நடத்தினர். [6-7-1969]

கிராமங்களில் தொழில் வளர்ச்சி

கிராமத் தொழில்கள் திட்டத்தில் இது வரை 49 திட்டங்கள் நாடெங்கிலும் மேற்கொள்ளப்பட்டுச் செம்மையாக இயங்குகின்றன. 15 மாநிலங்களிலும் 4 மைய அரசுப் பகுதிகளிலும் நிறைவேற்றப்பட்டு வரும் இத்திட்டத்தில், 234 வட்டாரங்களிலுள்ள 34,073 கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

தொடக்கக் காலத்தில் சோதனை முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட இத்திட்டம், தற்போது சிறந்த பயனை அளித்துவருகிறது. இவற்றால் 2,900 புதிய தொழிற் பிரிவுகள் தொடங்கப் பெற்றுள்ளன. அவற்றில் 95,000 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது. தவிர மேலும் 2800 பழைய தொழிற் பிரிவுகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டுள்ளது. இந்த 2800 பிரிவுகளுக்கும் கடன்களும், உதவித் தொகைகளும் சிறப்பாக வழங்கப்பட்டன.

மொத்தம் 5,700 பிரிவுகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ள ரூ. 1,105 இலட்சத்தில், சுமார் 50 சதவீதம் தனியார் சேமிப்பிலிருந்து செய்யப்பெற்ற முதலீடாகும்.

இத்தொழிற் பிரிவுகள் பற்பல நவீன, அழகிய அன்றாடத் தேவைப் பொருட்களை கிராமங்களிலேயே உற்பத்தி செய்த வண்ணமிருக்கின்றன. சுமார் 150 விதமான பொருட்கள் இவற்றில் உற்பத்தியாகின்றன.

இவை மைய அரசின், தொழில் வளர்ச்சி அமைச்சகத்தின் மேற்பார்வையில் செயற்படுகின்றன.

'பஞ்சாயத்து ராஜ்' — இதழிலிருந்து

சமுதாய வளர்ச்சித் திட்டம் — ஒரு கண்ணோட்டம்

எண்.	வரிசை விவரம் (ஊராட்சி ஒன்றியங்களால்)	31-3-66-ல்	31-3-67-ல்	31-3-68-ல்	31-12-68-ல்
1.	நிர்வகிக்கப்பட்டு வரும் கிராமச் சாலைகளின் நீளம் (மைல்களில்) ...	14,896	15,665	18,015	19,197
2.	மேல்நிலை நீர்த் தொட்டிகள் ...	1,936	2,240	2,506	2,770
3.	கிணறுகள் ...	43,256	47,945	52,126	54,285
4.	மருந்தகங்கள் ...	262	262	263	270

எண். வரிசை விவரம்	31-3-66-ல்	31-3-67-ல்	31-3-68-ல்	31-12-68-ல்
5. சொந்தக் கட்டடங்களில் இயங்கும் ஆதாரச் சுகாதார நிலையங்கள் ...	136	156	172	*
6. மகப்பேறு, குழந்தைகள் நல நிலையங்கள் ...	2,364	2,381	2,515	2,527
7. சொந்தக் கட்டடங்களில் இயங்கும் கால் நடை மருந்தகங்கள் ...	143	166	244	276
8. சொந்தக் கட்டடங்களுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ...	260	289	306	322
9. ஒன்றிய அலுவலர்களுக்கான குடியிருப்புகள் ...	978	1,008	1,031	1,122
10. ஊர்ப்பணியாளர்களுக்கான குடியிருப்புகள் ...	447	497	573	638
11. ஆசிரியைகளுக்கான குடியிருப்புகள் ...	8,93	1,002	1,114	1,170
12. ஊராட்சி ஒன்றியங்களின் மேற்பார்வையிலுள்ள குளங்கள் ...	23,273	23,786	24,048	*
13. ஊராட்சி ஒன்றியங்கள் வசமுள்ள பாசனப் பரப்பளவு (இலட்சம் ஏக்கர்களில்) ...	8·5	9·6	10·4	*
14. ஊராட்சி ஒன்றியப்பள்ளிகள், உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் ...	1,09,616	1,13,601	1,15,417	1,15,733
15. மேற்காணும் பள்ளிகளில் கல்விகற்கும் மாணவர்கள் (இலட்சங்களில்) ...	35·5	37·4	39·5	41·5
16. சொந்தக் கட்டடங்களைப் பெற்றுள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ...	9,874	10,555	11,619	12,139
17. சமுதாயக் கல்வி நிலையங்கள் ...	13,607	13,727	13,856	*
18. வானொலிப் பெட்டிகள் வழங்கப்பெற்றுள்ள ஊராட்சிகள் ...	12,600	12,693	12,838	*
19. வழங்கப் பெற்றுள்ள வானொலிப் பெட்டிகள் ...	14,845	15,869	16,875	17,130

அன்பின் பரிசு

தினந்தோறும் பள்ளி விட்டதும் மாலையில் குழந்தைகள் அத்தனைப் பேரும் அந்தத் தோட்டத்தில் வந்து விளையாடாமல் போகமாட்டார்கள். அசுரன் ஒருவனுக்குச் சொந்தமானது அது. விசாலமான தோட்டம்; தோட்டமெங்கும் மரகதத் திரைச் சீலை விரித்தாற்போல் பசும்புல் அழகாகக். காட்சியளிக்கும். பூத்துக் குலுங்கும் பூச் செடிகள் கண்ணைப் பறிக்கும். அந்தத் தோட்டத்தில் வந்து விளையாடுவதில் குழந்தைகளின் மகிழ்ச்சி சொல்ல முடியாது.

பல்லாண்டுகளாக வெளியூர் சென்றிருந்த அந்தத் தோட்டத்துச் சொந்தக்காரன் ஒரு நாள் ஊர் திரும்பி வந்தான். அவன் வந்த நேரம் மாலை வேளை; தோட்டத்தில் குழந்தைகள் குதூகலமாக ஆடிக்கொண்டிருந்தனர். அதைக் கண்டு அவனுக்கு எரிச்சல்தான் வந்தது. குழந்தைகளை அடித்து விரட்டினான். அவனுடைய அச்சுறுத்தலைக் கண்டு அந்த இளம் குழந்தைகள் அஞ்சி வெளியே ஓடினர்.

சுயநலம் பிடித்த அந்த அசுரனால் விரட்டப்பட்ட அக் குழந்தைகள் மாலை வேளையில் விளையாட இடம் இல்லாமல் தவித்தனர். சில நாட்களுக்கு முன் வரை அத் தோட்டத்தில் மன மகிழ்வுடன் ஆடிப்பாடி விளையாடிய இன்ப நினைவுகளை நினைத்து நினைத்து அவர்கள் ஏங்கினார்கள்.

இந் நிலையில் இளவேனிற் காலம் வந்தது. கண்ணைப் பறிக்கும் மலர்கள் காணுமிடமெல்லாம் பூத்துக்குலுங்கி இதயங்களைச் சொக்க வைத்தன. அழகும் நளினமும் வேனிலின் வருகையினால் புது மெருகு பெற்று மிளிரத்

மூலம்: ஆஸ்கார் ஒயில்டு
தமிழாக்கம்: வ. சம்பந்தம்

தொடங்கின. தென்றல் இன்ப இசை இசைக்க இயற்கைக் கன்னி எங்கும் எழில் குலுங்க நின்றாள். எங்கும் மனம் மகிழச் செய்யும் சூழ்நிலை! ஆனால் அசுரனின் தோட்டத்திற்கு மட்டும் வேனில் வரவில்லை. அந்த இடத்தில் மட்டும் வேனிலின் சாயலே படவில்லை. அங்கே மட்டும் மழையும் குளிரும்தான் ஆட்சி புரிந்தன. பறவைகள் அந்தத் தோட்டத்திலே மட்டும் பாடவில்லை! பூச் செடிகளெல்லாம் அங்கே அழகிழந்து சோம்பிக் கிடந்தன. பனிப்படலம் எங்கும் படர்ந்து பசுமையான புல் தரையை மறைத்தது. உறைபனி பெய்யவே பூச்செடிகள் எல்லாம் பசுமையும் செழிப்பும் குன்றி வெண்மையாகச் சோம்பிக் காட்சி அளித்தன. வாடைக் காற்று வேறு தன் திருவிளையாடலைக் காட்டத் தவறவில்லை. சிறு சுவர்க்கம் போல் காட்சி அளித்து விளங்கிய அந்தத் தோட்டம் நரகமாக மாறிக்கொண்டிருந்தது. ஆலங்கட்டி மழை அடித்து அந்தத் தோட்டத்தையே நாசமாக்கி விட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் ஒரே சேறும் சகதியுமாக நிறைந்து கிடந்தது.

அசுரனுக்கு ஒன்றும் புரியவில்லை; எங்கும் வேனில் ஆட்சி செய்யும் அவ்வேளையில் தன்னுடைய தோட்டம் மட்டும் அழகிழந்து கிடப்பது கண்டு அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அங்கும் வேனில் காட்சிகள் தோன்றும் என்ற நம்பிக்கை மட்டும் இருந்தது அவனுக்கு. ஆயினும் வேனிலின் தன்மை அங்குத் தோன்றவேயில்லை. மற்ற எல்லா இடங்களிலும் மரம் செடிகள் எல்லாம் பூத்து, காய்க்கத் தொடங்கின. ஆனால் அசுரனின் தோட்டத்தில் மட்டும் ஒன்றுமே கிடையாது. அவனுடைய சுயநலத்தைக் கண்டு நல்லனவெல்லாம் ஒதுங்கியே நின்றன. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்தானே. அந்தத் தோட்டத்திலே ஆலங்கட்டி மழையும் உறைபனியும் கும்மாளம் போட்டுக் கொண்டிருந்தன!

ஒருநாள் தன்னுடைய தோட்டத்திலே அமர்ந்து அசுரன் வானத்தை நோக்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் காதுகளிலே தூரத்தில் யாரோ பாடும் இன்னிசை வந்து விழுந்தது. பாட்டின் இனிமை அவனைக் குதூகலத்தில் ஆழ்த்தியது. யார் பாடுவது என்று வெளியே வந்து பார்த்தான். தூரத்திலே குயில் ஒன்று பாடிக்கொண்டிருந்தது. அந்த இன்னிசையைக் கேட்டு வெகு நாளாகிவிடவே உலகத்திலே இனிமையான இசை அதைவிட வேறு கிடையாது என்று நினைத்தான் அவன். சற்று நேரத்திற்கெல்லாம் ஆலங்கட்டி மழை பெய்தது. பனி கொட்டியது. வாடைக்காற்று பயங்கரமாக வீசியது. எல்லாம் சற்று நேரத்திற்குத்தான். ஆனால் அத்தனையையும் மீறிக்கொண்டு மனத்தை ஈர்க்கும் மணம் அந்த இடத்திலே வீசத்தான் செய்தது. அசுரனுக்குச் செய்தி மெள்ள மெள்ள விளங்கியது. வேனில் வந்துவிட்டது; என் தோட்டத்திற்கும் வேனில் வந்துவிட்டது! என்று குதித்துக்கொண்டே அப்படியும் இப்படியும் ஓடினான் அவன். அவன் உள்ளம் உவகைக் கூத்தாடியது.

அந்த தோட்டத்துச் சுவரில் உள்ள ஒரு பெரிய ஓட்டையின் வழியாக முன்பு அவனால் விரட்டப்பட்ட குழந்தைகள் ஒவ்வொன்றாக உள்ளேவந்து மரங்களில் ஏறி அமர்ந்து கொண்டிருந்தனர். ஒவ்வொரு மரத்திலும் ஒரு சிறுவன் அமர்ந்திருந்தான். குழந்தைகள் தங்களிடம் வந்து அமரவே மரங்களில் உள்ள மலர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் மறுபடியும் மலரத் தொடங்கின. குழந்தைகளோடு மரக்கிளைகள் கொஞ்சி விளையாடின! பறவைகள் மறுபிறவி பெற்றது போல் குதூகலத்தால் அங்குமிங்கும் ஆடிப் பாடி விளையாடின. மலர்கள் புது மணப்பெண் போல் பூத்துக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன! பார்ப்பதற்கே இந்தக் காட்சி மிகவும் இனிமையாக இருந்தது. தோட்டம் முழுதும் வேனில் தன் முத்திரையைப் பொறித்தது. எங்கு பார்த்தாலும் வேனிலின் மோகனச் சூழ்நிலை காணப்பட்டது. ஆனால் தோட்டத்தின் ஒரு மூலையில் மட்டும் பழைய மாதிரியே மழையும் பனியுமாகக் கிடந்தது. இந்த இடத்தில் மட்டும் வேனிற்கால அறிகுறியே இல்லை. அந்த மூலையிலே ஒரு சிறு பையன் நின்று கொண்டிருந்தான். சின்னஞ் சிறு பையன். அதனால் அவனால் மரத்தின்மீது ஏற முடியவில்லை. அழுது கொண்டே மரத்தைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான் அவன். அந்த மரத்தில் மட்டும் பனி மூடிக் கொண்டிருந்தது. வாடைக்காற்று அங்கு மட்டும் வீசியது. அந்த மரம் என்னவோ பையன் ஏறவேண்டிக் கிளைகளைத் தாழ்த்திக் கொடுத்தது. ஆனால் பையனால் முடியவில்லை.

இந்தக் காட்சி அசுரனின் கண்களிலே பட்டது. அந்தச் சின்னஞ்சிறு குழந்தையின் அவலநிலை கண்டு அவன் மனம் இளகியது! தோட்டத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டு அதன் காரணத்தைக் கண்டு அவன் புத்தி தெளிந்தது. அவனுடைய சுயநலத் தன்மை கண்டு அவனே வெறுக்கத் தொடங்கினான். சே! இத்தனை நாள் நான் எவ்வளவு சுயநலத்துடன் நடந்து கொண்டேன். கள்ளங்கபடமற்ற சிறுவர்களை அடித்து விரட்டினேனே. பின் எப்படி வேனில் என் தோட்டத்திற்கு வரும்? அந்தப் பையனை மரத்தின்மீது ஏற்றி விடுகிறேன். தோட்டத்துச் சுவரையே உடைத்தெறிகிறேன். எல்லாக் குழந்தைகளும் எப்பொழுது வேண்டுமானாலும் தோட்டத்தில் வந்து விளையாடட்டும் என்று தனக்குள்ளே ஒரு முடிவுசெய்து கொண்டான் அவன். இவ்வாறு முடிவு செய்து கொண்டே அந்தப் பையன் நிற்கும் மூலையை நோக்கி ஓடினான். அசுரன் ஓடி வருவதைக் கண்ட குழந்தைகள் பயத்தினால் மூலைக்கொன்றாகப் பிய்த்துக் கொண்டன! குழந்தைகள் போய்விடவே அவர்களுடன் வேனிலும் போய்விட்டது. அந்தச் சிறு பையன் மட்டும் போகவில்லை. அவன் அழுதுகொண்டே இருந்தபடியால் தண்ணீர்த் துளிகள் அவன் பார்வையை மறைத்துவிட்டன போலும்! அசுரன் மெள்ள வந்து அந்தப் பையனை மெதுவாக ஆசையுடன் தூக்கி மரத்தின்மீது உட்கார வைத்தான். உடனே மரத்தின்மீது சோம்பிக் கிடந்த மலர்கள் எல்லாம் மறுபடியும் தலைதூக்கி மலரத் தொடங்கின. பறவைகள் குதூகலத்துடன் சுற்றிச் சுற்றி வந்து இன்னிசையை எழவிட்டன. சிறுவன் தன் பிஞ்சுக் கரங்களினால் அசுரனின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனுக்கு ஒரு முத்தம் கொடுத்தான்... தூரத்தில் இருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மற்றக் குழந்தைகளும் அசுரனின் மனமாற்றத்தைக் கண்டு பயம் தெளிந்து தோட்டத்தினுள் வந்தனர்! அவர்களுடன் வேனிலும் வந்தது!

''என் அன்புக் குழந்தைகளே! இனிமேல் இது உங்கள் தோட்டம். நீங்கள் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். எங்கு வேண்டுமானாலும் விளையாடலாம்!' என்று கூறிக் கொண்டே அந்த அசுரன் ஒரு கோடாலியை எடுத்துவந்து தோட்டத்து மதிள்சுவரை உடைக்க ஆரம்பித்தான். நடுப்பகல் வேளையில் அந்தப்பக்கம் வந்த மக்கள் அசுரன் குழந்தையுடன் ஒரு குழந்தையாக விளையாடுவதைக் கண்டார்கள். குழந்தைகள் அன்று பகல் முழுதும் அவனுடன் விளையாடினர். மாலையில் வீடு திரும்பும் வேளையில்தான் மரத்தின்மீது தூக்கி உட்கார வைத்த அந்தச் சின்னஞ் சிறுவனை மட்டும் அந்தக் கும்பலில் காணாமல் அசுரன் "அவன் எங்கே?'' என்று மற்றக் குழந்தைகளைக் கேட்டான். மற்றக் குழந்தைகளுக்கு அந்தப் பையனைப் பற்றி ஒன்றுமே தெரியவில்லை. ''நாளைக்குப் பார்த்தால் அவனையும் கண்டிப்பாக உங்களுடன் விளையாட அழைத்து வாருங்கள்'' என்று அசுரன் சொல்லி அனுப்பினான். அதற்கு அந்தக் குழந்தைகள் ''அந்தப் பையனைப்பற்றித் தங்களுக்கு ஒன்றும் தெரியாதென்றும் தாங்கள் இதற்கு முன்னால் அவனைப் பார்த்ததே இல்லையென்றும் அவன் யாரோ புதுப் பையன் என்றும் கூறினர். இதைக் கேட்டு அசுரன் மனக்கவலையில் ஆழ்ந்தான்.

அதன் பிறகு ஒவ்வொருநாள் மாலையிலும் குழந்தைகள் தோட்டத்திற்கு வந்து விளையாடிவிட்டுப் போவது வழக்கமாகிவிட்டது. ஆனால் அசுரனின் அன்பை மிகவும் கவர்ந்துவிட்ட அந்தச் சிறுவன் மட்டும் அதன்பிறகு வருவதே கிடையாது! அவனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. எல்லாக் குழந்தைகள் மீதும் அசுரனுக்கு ஆசைதான். ஆனால் அந்தப் பையன் மட்டும் அவனுடைய அன்பைக் கொள்ளையே கொண்டிருந்தான்!

ஆண்டுகள் ஓடின. அசுரனுக்கு வயது ஏறிவிட்டது. முதுமையடைந்துவிட்டான் அவன். வயதாகிவிடவே குழந்தைகளுடன் முன்போல் அவனால் விளையாட முடியவில்லை. சாய்வு நாற்காலியில் அமர்ந்துகொண்டே குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்து இன்பத்தை அனுபவித்துக் கொண்டேயிருப்பான். அந்தத் தோட்டம் இப்பொழுதெல்லாம் அற்புதமான அழகைச் சொரிந்து கொண்டிருந்தது. 'தோட்டத்தை அழகான மலர்கள் எழிலாக்குகின்றன! ஆனால் குழந்தைகள் தான் எல்லா மலர்களையும்விட அழகானவர்கள்!' என்று தனக்குள்ளே கூறிக்கொள்வான் அவன்!

அப்பொழுது குளிர்காலம். ஒரு நாள் வழக்கம்போல் நாற்காலியில் அமர்ந்து சாளரத்தின் வழியாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தான் அசுரன். இப்பொழுதெல்லாம் குளிர்காலம் என்றால் அவன் வெறுப்படைவதே கிடையாது. வேனில் அடுத்தபடி வந்து விடுமல்லவா? அன்று தோட்டத்தில் அவன் கண்ட காட்சி அவனைத் தூக்கி வாரிப்

போட்டது! தோட்டத்தில் அன்று ஒருநாள் வந்து பின்பு மறைந்து போன அந்தச் சிறுவன் ஒரு மூலையில் நின்று அழுது கொண்டிருந்தான். அம் மூலையில் இருந்த மரத்தில் மலர்கள் எல்லாம் குளிர் காலமான அப்பொழுதும்கூட மலர்ந்து இருந்தன! அதனுடைய பழங்கள் தங்க நிற ஒளியை வீசின! இலைகள் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கினால் அசைந்தாடி விளையாடின! அந்த மரத்தின் கீழே அந்தப் பையன், அசுரனின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்தப் பையன் நின்று கொண்டிருந்தான். அந்த அற்புதக் காட்சியை அசுரனால் நம்பமுடியவில்லை. மகிழ்ச்சிப் பெருக்குடன் பையன் நின்றிருந்த திசை நோக்கி ஓடினான் அவன். ஆனால் அருகில் சென்று பையனைப் பார்த்ததும் மகிழ்ச்சியெல்லாம் கோபமும் துக்கமுமாக மாறியது... ''என் அன்பே! யார் உன்னை இந்தமாதிரிக் காயப்படுத்தியது சொல்?'' என்று கத்தினான் அவன். அந்தச் சிறுவனின் இரண்டு உள்ளங் கைகளிலும் பாதங்களிலும் ஆணியால் குத்தியதுபோல் காயங்கள் இருந்தன. ''யார் உன்னை இவ்வாறு செய்தார்கள்? சொல் மகனே! யாராக இருந்தாலும் சரி; அவனை என் வாளுக்கிரையாக்காமல் விட மாட்டேன்!'' என்று சினத்துடன் கத்தினான் அசுரன்.

''யாருமில்லை, யாரும் எனக்குத் தீங்கு செய்யவில்லை; இவைகள் வெறும் காயங்கள் அல்ல; அன்புக் காயங்கள். தெரியாத அன்பின் சின்னங்கள்!'' என்றான் சிறுவன்.

'அப்படியென்றால் என் மகனே!... நீ யார்? யார் நீ?' என்று தட்டுத்தடுமாறிக்கொண்டே கூறினான் அசுரன். அவனால் பேசமுடியவில்லை. ஆச்சரியத்தினாலும் திகைப்பினாலும் திக்குமுக்காடிப் போய்விட்டான் அவன். அப்படியே அந்தச் சிறுவனின் பாதங்களிலே வீழ்ந்து வணங்கினான் அவன்!

அந்தச் சிறுவன் சிரித்துக்கொண்டே 'நீ என்னை உன்னுடைய தோட்டத்திலே அன்றொருநாள் ஒரு தடவை விளையாட அனுமதித்தாய்! அதற்கு மாற்றாக உன்னை நான் என்னுடைய தோட்டத்திற்கு அழைத்துச் செல்லப்போகிறேன். என்னுடைய தோட்டம் எது தெரியுமா? அதுதான் சொர்க்கம்'' என்றான்...

அன்று மாலை குழந்தைகள் வழக்கம் போல் தோட்டத்திற்கு விளையாட வந்த பொழுது அந்த மரத்தின் அடியில் அசுரன் அப்படியே படுத்தமாதிரி செத்துக் கிடப்பதையும் அவன் முகத்தில் அற்புதமான களை மிளிர்வதையும் அந்த மரமே மலர்களால் நிறைந்து இருப்பதையும் கண்டார்கள்.

பெண்ணின் பெருமை

ஒரு பெரியார், 'திங்கள், மலர், சங்கீதம், பெண், கிறித்து ஆகிய இவ்வைந்தும் தம் உள்ளத்துக்கு இன்ப மூட்டும் பொருள்கள்' எனக் கூறியுள்ளார். யான் இவ்வைந்தும் பெண்ணே என்று சொல்வேன். அழகிய திங்களையும், செழிய மலரையும், இன்பப் பாட்டையும், அன்புக் கிறித்துவையும் பெண் தெய்வத்தினிடத்தில் காண்கிறேன்!

* * *

எவர்க்கும் எல்லாவற்றிற்கும் தாய் பெண்ணே. தாயாக ஈன்று தங்கையாக நேசித்துத் தாரமாகக் காப்பவள் பெண்ணே. அத்தகைய பெண்ணைத் தெய்வமாக அன்றோ தொழுதல்வேண்டும்.

— திரு. வி. க.

அடிப்படை இலக்கியத்திற்குரிய ஏழாவது அனைத்திந்தியப் போட்டி, 1969

இந்திய அரசின், அடிப்படை இலக்கியத்திற்குரிய ஏழாவது அனைத்திந்தியப் போட்டிக்குக் கீழ்க்கண்ட பொருள்களைப்பற்றி, இந்தியக் கட்டுரையாளர்களிடமிருந்து கைப்பிரதிகள் / நூல்கள் (நாடகங்கள் உட்பட) கோரப்படுகின்றன.

1. ஊராட்சி வாயிலாக காந்திஜி மனத்தால் எண்ணிய அரசியல் குடியரசு. 2. ஊராட்சிகள், கூட்டுறவுகள் வாயிலாக, காந்திஜி கருத்தில் கொண்ட பொருளாதாரக் குடியரசு. 3. ஊராட்சி, கிராம வளர்ச்சித் திட்டங்கள் வாயிலாகக் காந்திஜி உருவாக்க எண்ணிய சமூகக் குடியரசு. 4. ஊராட்சிகளின் அடிப்படையில் கீழ் நிலையிலிருந்து திட்டமிடுதல். 5. ஊராட்சி நிறுவனங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளும், கருத்தொருமித்த எண்ணங்களும். 6. ஊராட்சிகள் மற்றும் உள்ளூர் ஆதாரங்களைத் திரட்டுதல். 7. விரைவில் நீதியைப் பெறுதற்கு நியாய ஊராட்சிகள். 8. உருவாகி வரும் தலைவர்கள்-செயல்முறையில் ஊராட்சிகள். 9. உணவு, உணவுச் சத்து, மற்றும் சமுதாயம். 10. சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவை வலுப்படுத்த மாணவர்கள் பங்கேற்றல். 11. இளைஞர்களும், ஊராட்சி நிறுவனங்களும். 12. ஊராட்சி முறையில் மகளிர், குழந்தைகள் நலம். 13. நிலச் சீர்திருத்தங்களும், அவற்றில் ஊராட்சி நிறுவனங்கள் பங்கேற்றலும். 14. கூட்டுறவு இயக்கத்தில், தேசிய சம்மேளனங்களின் பங்கு. 15. கோழி வளர்ப்பு மற்றும் கோழித் தீவனக் கூட்டுறவுகள். 16. பாசனம் மற்றும் மின்சக்திக் கூட்டுறவுகள். 17. வேளாண்மை உற்பத்திக்கு, கூட்டுறவு நிறுவனங்களின் நிதியுதவி. 18. பெருமளவில் வேளாண்மை விளைச்சலைப் பெருக்குவதற்கு, வேளாண்மைக்கு வேண்டிய பொருள்களை வழங்குவதில் கூட்டுறவுகளின் பங்கு. 19. கூட்டுறவுகளுக்குப் படிப்படியான நிலைகளை அமைத்தல். 20. கூட்டுறவு அலுவலர்களுக்குக் கல்வியும் பயிற்சியும். 21. மீனளக் கூட்டுறவுகள்.

ஒவ்வொன்றிலும் ரூ. 1,000 வீதம் 21 பரிசுகள் அளிக்கப்படும். எந்த ஒரு பொருளைப் பற்றிய கட்டுரைக்கும், ஒரு பரிசுக்கு மேல் கிடையாது.

[அடுத்த பக்கம் பார்க்க

மொழியும் நடையும்: கீழ்க்கண்ட மொழிகள் எதிலும் கட்டுரைகள் இருக்கலாம்.

1. அஸ்ஸாமி 2. வங்காளம் 3. குஜராதி 4. குர்முகி 5. ஹிந்தி 6. கன்னடம் 7. காஷ்மீரி 8. மலையாளம் 9. மராத்தி 10. ஒரியா 11. சிந்தி 12. தமிழ் 13. தெலுங்கு 14. உருது

அளவு: சமுதாய வளர்ச்சி, ஊராட்சி, கூட்டுறவுத் திட்டங்கள் தொடர்புள்ள பணியாளர்களுக்கெனவே இக்கட்டுரைகள் பயன்படவேண்டியிருப்பதால், அவர்கள் புரிந்து கொள்ளும் முறையிலும் அவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கும் முறையிலும், கட்டுரைகள் எளிய, தெளிவான முறையில் இருத்தல் மிக அவசியம். கைப்பிரதியாய் இருப்பின் சுமார் 10,000 சொற்கள் கொண்ட அளவிற்கு, அல்லது 16 ‘பாயிண்ட்’டிற்குக் குறைவில்லாத எழுத்தைக் கொண்டு, ‘டெமி-ஆக்டேவோ’ அளவில் அச்சடிக்கும்போது, சுமார் 40 பக்கங்களுக்கு இருக்கவேண்டும். நூல்களாக இருப்பின், அவை போதுமான அளவில் படங்களுடன் விளக்கப்பட்டிருக்க வேண்டும்.

காப்பிரைட்: பரிசு பெற்ற கட்டுரைகளுக்குரிய வெளியிடும் உரிமைகளை, வில்லங்கமின்றி இலவசமாக இந்திய அரசிற்கு அளித்து விடவேண்டும். இந்திய அரசு, பரிசு பெற்றக் கட்டுரையாளர் ஆகிய இருவரும் ஒருவருக்கொருவர் ஏற்றுக்கொண்டவாறு, ஒரு தகுந்த தொகை, வெளியிடும் உரிமைக்கெனத் தரப்படும்.

நுழைவுக் கட்டணம்: கட்டுரையாளர் அனுப்பும் ஒவ்வொரு கட்டுரைக்கும் ரூ. 3/- வீதம் நுழைவுக் கட்டணம்.

இறுதி நாள்: கட்டுரைகளைப் பெறும் இறுதிநாள் 15-9-1969.

கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பம் செய்து, இப்போட்டிக்குரிய விதிகளையும், விளக்கங்களையும் பற்றிய விரிவான விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இயக்குநர் (அடிப்படை இலக்கியம்)

உணவு, வேளாண்மை, சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவு அமைச்சகம் (சமுதாய வளர்ச்சி, கூட்டுறவுத் துறைகள்)

கிரிஷ் பவன், புதுடெல்லி.

Davp 69/70

பரிசு ஏன் கிடைக்காது?

தஞ்சைத் தரணியிலே ஒரு கிராமம், சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுப்பரிசளிக்கப்பட்டிருப்பின், அது வேளாண்மையில் சிறந்த முன்னேற்றம் பெற்றிருக்கும் என்பதனை விளக்கவும் வேண்டுமோ!

வேளாண்மையிலும் இன்னும் பிற துறைகளிலும் போற்றுதற்குரிய வெற்றிப்பட்டியலைத் தரும் நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள எடமேலையூர் கிராமம் 1965-66ஆம் ஆண்டிற்குரிய சிறந்த கிராமத்தின் பரிசைப் பெறும் பெருமையை அடைந்துள்ளது.

4256 மக்களைக் கொண்டு விளங்கும் இக்கிராமத்தில் ஆடுதுறை 27 நெல் விதை மட்டும் ஒரு விளைச்சலுக்கு 20 டன் வினியோகிக்கப்பட்டுள்ளது. தவிரப் பொறுக்குவிதைகள் மட்டும் பயிரிடப்பட்டுள்ள மொத்தப் பரப்பளவு 2,200 ஏக்கர்களாகும். சப்பானிய முறையைத் தழுவி 1050 ஏக்கர்கள் சிறந்த முறையில் பயிரிடப் பட்டுள்ளன.

ஏற்ற மிகு எடமேலையூர்

உரங்கள்

இரசாயன உரங்களைக் கையாள்வதில் இவ்வூர் உழவர்கள் தலை சிறந்தவர்கள். 1965-66ஆம் ஆண்டில் மட்டும் அம்மோனியம் சல்பேட் 170 டன், யூரியா 102 டன், சூப்பர் பாஸ்பேட் 340 டன், கலப்புரம் 20 டன் ஆகியவற்றை இவ்வூர் உழவர்கள் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கியுள்ளார்கள். இவைதவிர, பசுந்தாள் உரம் இட்டுப் பயிரிடப்பட்டது மட்டும் 1500 ஏக்கர்களாகும். மேலும் 1200 டன் கலவை உரமும் இவ்வூராட்சியில் தயார் செய்யப்பட்டது.

சுமார் 3,000 ஏக்கர்களுக்குப்பயிர்ப் பாதுகாப்புச் செய்யப்பட்டுள்ளது. பொறுக்கு விதைகளுடன் அக்ரசான் கலந்து விதைகள் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. மருந்து தெளிக்கும், தூவும் கருவிகள் வாங்கப்பெற்று விநியோகிக்கப்பட்டன. மேலூர் கலப்பைகளில் 2150 கலப்பைகளும், தழை மிதிக்கும் கருவிகளில் பதின்மூன்றும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வூராட்சியில் 1600 தென்னம்பிள்ளைகளும், 230 பழச்செடிகளும் நடப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனம்

பாசனத்திற்கென 15 ஆழ் கிணறுகள் தோண்டப் பெற்றிருப்பதுடன் தண்ணீர் இறைக்கும் பொறிகளில் ஐந்தும் பொருத்தப்பட்டுள்ளன. 12,000 மீன் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1350 கால்நடைகளுக்கும், 876கோழிகளுக்கும் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன.

தெருக்கள் தோறும் மின்விளக்குகள் ஒளியை உமிழ்ந்து இரவைப் பகலாக்கி வருகின்றன.

குடிநீர்

குடிநீர் வசதிக்கென, கையால் இயக்கும் இரண்டு குழாய்களும், 16 கிணறுகளும் அமைக்கப்பட்டுச் சீரிய முறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ரூ. 25,000 செலவில் ஒரு மேல்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டு, அதற்குரிய தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமூகக் கல்வி நிலையத்திற்குத் தினத்தாட்கள் தருவிக்கப்படுகின்றன.

கிராம வானொலி மன்றங்கள் சிறப்பாகச் செயல்படுகின்றன. அவற்றிற்கு இரண்டு வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராமப் பெருங்குடி மக்களின் போக்குவரத்தை எளிதாக்க, மன்னார் குடிக்கும் இவ்வூருக்கும் இடையே நகரப் பேருந்துகள் இயங்கிடுவதற்கும் வேண்டிய வசதிகளனைத்தும் செய்யப்பட்டுள்ளன.

கூட்டுறவு, சிறு சேமிப்பு

கூட்டுறவுச் சங்கத்தின் வாயிலாக ரூ. 1,80,478ஐ உழவர்கள் கடனாகப் பெற்று வேளாண்மையில் முதலீடு செய்துள்ளனர்.

சிறுசேமிப்பில் ரூ. 15,000 முதலீடு செய்யப்பட்டுள்ளது. அளவுள்ள குடும்பமே ஆனந்த மயமான குடும்பம் என்பதை வலியுறுத்தி, பிறரும் பின்பற்றும் முறையில் அமைவதற்கென 256 பேர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன.

வேளாண்மை, பாசனம், மீன் வளம், கால்நடை, மின்வசதி, குடிநீர்வசதி, போக்குவரத்து, குடும்பக் கட்டுப்பாடு இவையனைத்திலும் எடமேலையூர் சிறந்து விளங்கப் பின்னணியாகத் திகழ்வது திரு. எஸ். சொக்கலிங்கம் அவர்களின் தலைமையுடன் அமைந்து 13 உறுப்பினர்களைக் கொண்ட ஊராட்சி மன்றமே எனலாம்.

இவ்வூராட்சிக்குப் பரிசு ஏன் கிடைக்காது?

We Manufacture High Quality Pyrotechnic Aluminium Powder and Atomised Aluminium Powder with West German Collaboration.

The quality of our Aluminium powder is far better than the imported powder and will be appreciated by the consumers. We are glad to inform that we save foreign exchange to the tune of Rs. 25 lakhs every year.

THE METAL POWDER COMPANY LIMITED

Maravankulam, Tirumangalam Post
MADURAI DISTRICT

Phone: Madurai 8147 Grams: "Powders" Madurai

தாவர வளர்ச்சியில் பயிருணவின் பங்கு

மனிதர்க்கு உணவு தருவன தாவரங்கள். மனிதருணவைப் பெருக்க நினைக்கும் நாம் தாவர உணவுபற்றிச் சிறிதேனும் சிந்திக்க வேண்டாமா? அதன் அடிப்படை உண்மைகள் சிலவற்றைப்பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

பயிர்களின் வளர்ச்சிக்குப் பல மூலப் பொருள்கள் தேவைப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைப் பயிர்கள் நிலத்திலிருந்து எடுத்துக்கொள்கின்றன. அப்படிமண்ணிலிருந்து பயிர்களால் கிரகித்துக் கொள்ளப்படும் மூலப் பொருள்கள் சாதாரணமாகப் ''பயிருணவு'' என்று குறிக்கப்படுகின்றன. பயிர் வளர்ச்சிக்குக் கரியமிலவாயு, பிராணவாயு, நைட்ரஜன் முதலியனவும் தேவைப்படுகின்றன. இவற்றைப் பயிர்கள் காற்றிலிருந்தோ அல்லது வேர்களால் உறிஞ்சப்படும் தண்ணீரிலிருந்தோ எடுத்துக் கொள்கின்றன. பயிர்கள் தழைத்து வளர்ந்து காயும் கனியும் உண்டாக்குவதற்கு இந்த மூலகங்கள் கச்சாப் பொருள்கள் போல உதவுகின்றன.

தாவரங்களின் விதையில் இனவிருத்திக்கான கரு இருக்கின்றது. அவ்விதையை மண்ணுக்குள் விதைத்ததும் அது முதலில் தண்ணீரை உறிஞ்சிக் கொள்கின்றது. விதையிலேயே உள்ள உணவானது இந்தத் தண்ணீரில் கரைந்து கருவின் வளர்ச்சிக்குப் பயன்படுகின்றது. ஆரம்பத்தில் இந்த உணவை உட்கொண்டு கரு முளைத்து வளரத் தொடங்குகின்றது. சாதாரணமாக, எந்த விதையிலும் உணவு சிறிதளவு மட்டுமே சேமித்து வைக்கப்பட்டு இருக்கும். முளை கிளம்பி ஆணிவேர் மண்ணுக்குள் பதியும் வரைக்கும்தான் இந்த உணவு போதுமானதாய் இருக்கும். இதற்குள் ஒரு சில இலைகளும் மேலே கிளம்பித் தோன்றிவிடும். இதன் பிறகு தாவரமானது தானாகவே தனக்கு வேண்டிய தாவர உணவையும் பிராணவாயு முதலானவற்றையும் வேர் மூலமாகவும், இலைகளின் மூலமாகவும் தேடிக்கொள்ளத் தொடங்கும்.

மண்ணை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவையாவன :

(1) தாதுப் பொருள் கலந்த மண் (2) அங்ககப் பொருள் கலந்த மண் என்பனவாகும். முதல் வகை மண்ணில் 90 முதல் 99·8% வரை தாதுப் பொருள்கள் கலந்திருக்கும். இரண்டாவது வகை மண்ணில் 70 முதல் 80% வரை அங்ககச் சத்துடைய பொருள்கள் கலந்திருக்கும். அதில் தாதுப்பொருள்கள் 20 முதல் 30% தான் இருக்கும்.

தாதுப் பொருள் மிகுந்த மண்ணில் தாவரங்களுக்கு அவசியமாகவேண்டிய பலவித மூலகங்களும் தாராளமாக இருக்கும். அப்படியிருந்தாலும் தாவரங்களால் நேராகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் அவை கரையக் கூடியனவாக இருக்கும் என்று சொல்ல முடியாது. அவை பொதுவாகப் பலவித இரசாயனக் கலவைகளாக இருக்குமாதலால் தாவரங்களின் வேர்களால் அவற்றை நேரடியாக இழுத்துச் செடிக்கு உணவாகக் கொடுத்துவிட முடியாது. ஆகவேதான் பயிருக்கு வேண்டிய பலவித மூலகங்களை இரசாயன உரங்கள் அல்லது தழை உரங்கள் வாயிலாக அவ்வப் பயிருக்கு வேண்டிய அளவுகளில் நாம் கொடுத்து வருகின்றோம்.

சத்துப்பொருள் :

தாவரங்கள் பூமியிலிருந்து எண்ணற்ற மூலகங்களை எடுத்துக் கொள்கின்றன. ஆனால் அந்த அத்தனை மூலகங்களும் பயிரின் வளர்ச்சிக்குத் தேவையானவை என்று சொல்ல முடியாது. மண்ணிலுள்ள நீர்க் கரைசலில் அம்மூலகங்கள் அனைத்தும்கலந்திருப்பதால் அச்செடிகள் அவற்றை அப்படியே உட்கொள்ளுகின்றன. ஆனால் அவற்றின் சில மூலகங்

கள் மட்டுமே பயிரின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் உதவுகின்றன. அப்படிப் பயிரின் வளர்ச்சிக்கு இன்றியமையாது விளங்குகின்ற மூலகங்களுக்கு ''முக்கிய மூலகங்கள்'' என்று பெயர். இவற்றில் சில மூலகங்கள் பெரிய அளவில் தேவைப்படும். சில மூலகங்கள் கொஞ்சமாக இருந்தால் போதும். அதிகமாகத் தேவைப்படுகின்ற மூலகங்களைப் பெரும்பான்மைத் தேவைச்சத்து என்றும், குறைந்த அளவு தேவைப்படும் மூலகங்களைச் சிறுபான்மைத் தேவைச் சத்தென்றும் பிரித்திருக்கிறார்கள். பெரும்பான்மைத் தேவைச்சத்துக்களை மூன்று துணைப் பிரிவுகளாகக் கூறலாம். அவை யாவன:

தொகுதி: 1. கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன்.

தொகுதி: 2. நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், கந்தகம்.

தொகுதி: 3. கால்சியம், மக்னீசியம்.

சிறுபான்மைத் தேவைச் சத்துக்களில் இரும்பு, மாங்கனீஸ், போரான், துத்தநாகம், தாமிரம், மாலிபெட்னம் என்பவையெல்லாம் அடங்கும்.

தாவரங்களில் காணப்படும் குளோரின், அயோடின் கோபல்ட், சோடியம் முதலான சில மூலகங்கள் தாவரங்களின் வளர்ச்சிக்கோ அல்லது விருத்திக்கோ நேரடியாகத் தேவைப்படுவன அல்ல. ஆனாலும் பூமியிலிருந்து கிரகிக்கப்பட்டுத் தாவரங்களால் சேமித்து வைக்கப்படுகின்ற இந்த மூலகங்கள் மனித உணவோடு சேரும்போது ஆரோக்கியத்திற்கு மிகவும் உதவுகின்றன. பயிரில் சேமிக்கப்படும் வேறு சில மூலகங்கள் மனித உணவோடு சேரும்போது போதையூட்டுவனவாயிருக்கின்றன. ஈயம், கார் ஈயம், ஆர்சனிக் குளோரின் முதலானவற்றை இந்த மூலகங்களுக்கு உதாரணமாகக் காட்டலாம்.

பெருந்தேவைச் சத்துப் பொருள்கள்:

(1) கார்பன்: தாவரங்களுக்குக் கார்பன் ஒரு முக்கியமான தேவைப் பொருளாகும். காற்றிலுள்ள கரியமிலவாயுவை உட்கொண்டு தாவரங்கள் தமக்கு வேண்டிய கார்பனைச் சேகரித்துக் கொள்கின்றன. காற்றில் 10,000 பங்கு பரிமாணமுடைய கரியமிலவாயுவில் 3 பங்கு கார்பன் கலந்திருக்கின்றது. இது நேரிடையாகத் தாவரங்களுக்குக் கிடைத்து விடுகின்றது. இப்படிக் கிடைக்கும் பயிருணவிலிருந்துதான் தாவரங்கள் சர்க்கரையையும், இதர உணவுப் பொருள்களையும் உற்பத்தி செய்கின்றன. மற்றோர் உண்மை என்னவெனில் தாவரங்கள் காற்றிலுள்ள கார்பனை உணவாக எடுத்துக் கொண்டபோதிலும் அவை சுவாசிக்கும்போது கரியமிலவாயுவை ஏராளமாக வெளித் தள்ளுகின்றன. இதனால் காற்றிலுள்ள கரியமிலவாயுவின் அளவு குறைந்து விடுவதில்லை.

நிலத்திலும் மண்ணைச் சுற்றிக் கார்பன்-டை-ஆக்ஸைடு இருக்கிறது. ஆனால் தாவரங்கள் வேர்கள் மூலமாகக் கரியமிலவாயுவைக் கிரகிப்பதில்லை. வேர்கள் மூலமாகவும், தாவரங்கள் சுவாசிப்பதால் பூமிக்குள் கரியமிலவாயு மிகுந்து பிராணவாயு குறைகிறது. பூமிக்குள் மிகுந்து நிற்கும் கரியமிலவாயு காற்றோடு கலந்து வெளியேறி விடுகிறது.

மண்ணில் உள்ள அங்ககப் பொருள்கள் அழுகிச் சிதையும்போது ஏராளமான கரியமிலவாயு உண்டாகிறது. மரம், நிலக்கரி, கஸோலியம் முதலியன எரியும்போதும் கரியமிலவாயு வெளிப்படுகின்றது. இக்காரணங்களால் நிலவெளியில் மிகுதிப்படுகின்ற கரியமிலவாயுவைத் தாவரங்கள் வளரும்போது தம் தேவைக்காகக் கிரகித்துக் கொண்டுவிடுவதால் அண்ட வெளியில் எந்த நாளும் இவ்வாயுக்களின் விகிதம் அளவுக்கு மேல் உயர்ந்து விடுவது கிடையாது.

ஹைட்ரஜன்:

தண்ணீரில் இரண்டு பங்கு ஹைட்ரஜனும் ஒரு பங்கு பிராணவாயுவும் இருக்கிறது. தாவரங்கள் அவற்றிற்கு வேண்டிய ஹைட்ரஜனைத் தண்ணீரிலிருந்தே எடுத்துக் கொள்கின்றன. தண்ணீரிலுள்ள கார்பனைத் தாவரங்கள் அவற்றின் தேவைக்காக எடுத்துக் கொள்ளும்போது உண்டாகின்ற சிதைவினால் ஹைட்ரஜன் தாவரங்களின் தேவைக்குப் பயன்பட்டுவிடுகின்றது. நிலவெளியில் ஹைட்ரஜன் எந்த நாளும் தனியாக நிலைத்திருப்பதில்லை. அங்ககப் பொருள்கள் சிதையும்போது தோன்றுகின்ற ஹைட்ரஜன் நில வெளியிலுள்ள பிராண வாயுவோடு கலந்து தண்ணீராகி விடுகின்றது.

தாவரங்கள் நிலத்திலிருந்து உறிஞ்சிக் கொள்கிற தண்ணீர் அனைத்தும் தாவர வளர்ச்சிக்குப் பயன்படுவதில்லை. அதில் ஒரு சிறு பாகமே வளர்ச்சிப் பணிக்கு உபயோகமாகிறது. இந்தச் சிறுபகுதி தண்ணீரிலிருந்து கார்பன் பிரிக்கப்பட்ட பிறகு எஞ்சி நிற்கின்ற ஹைட்ரஜனைத்தான் தாவரங்கள் உணவாக உட்கொள்கின்றன. இதன் காரணமாகத்தான் எந்த நாளும் மண்ணில் ஈரப்பதம் இருக்க வேண்டியது அவசியமாகிறது.

பிராணவாயு:

தாவரங்களுக்குப் பிராணவாயு ஒரு முக்கியத் தேவையாகும். அது பல வழிகளில் அவற்றிற்குக் கிடைக்கிறது. தாவரங்களால் உறிஞ்சப்படும் தண்ணீர் உள்ளுக்குள்ளேயே சிதைவு படும்போது பிராணவாயு வெளிப்படுகின்றது. இதனைத் தாவரங்கள் தமது வளர்ச்சிக்காக எடுத்துக் கொள்கின்றன. நில வெளியில் இருக்கும் பிராணவாயுவைத் தரைக்குமேலுள்ள தாவரப் பகுதிகள் சுவாசித்து உள்ளுக்குள் தருகின்றன.

இப்படித் தாவரங்களுக்கு வேண்டிய உணவை இயற்கை பரிந்து அளிக்கிறது. தாவரங்களோ அந்த இயற்கையிலிருந்து கிடைப்பனவற்றைப் பெற்றுத் தாம் வளர்வதோடு நமக்கும் சேகரித்துத் தந்து உதவுகின்றன.

ஸ்ரீ முத்துமாரியம்மன் துணை

'பிறந்த உலகீர்; பெருமை அருமை சிறந்து பெற வாரீர் சேர்ந்து'

தாயமங்கலத்துத் தனிமுத்துமாரியம்மை நேயமுடன் காப்பாள் நிறைந்து, உள்ளத் தூய்மையுடன் கண்டு, அவளருளால் காரியங்கள் கைகூடல் உண்டு என வாரீர் உவந்து:

ஒரு நாள்-அது திருநாள்-உலகிற்கே பெருநாள். நீர் சூழ்ந்த உலகம், சீர் சூழ்ந்து வாழப் பேர் உள்ளம் கொண்ட முத்துமாரியை, கிள்ளைமொழி பேசும் பிள்ளை ஒன்றுடன் ஏழைமுதல் யாவரும் இனிது வணங்கி ஏற்றம் இணங்கிடக் கலைக் கோயிலாக்கிக் கைகூப்பி நின்றனர்.



பங்குனி தோறும் மங்கலத் திருவிழா
பாங்குடன் நிகழும் பார்எலாம் புகழும்.
ஆதலால் நாமும் அருள், பொருள் ஏற்கக்
காதலால் கூப்புவோம் கையை.

அனைவரும் வருக! அவளருள் பெறுக!

என அழைக்கும்

ந. அ. முத்துப்பால் செட்டியார்
பரம்பரைப் பாதுகாவலர்
ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்

தாயமங்கலம்
இராமநாதபுரம் மாவட்டம்

அவள் சிரித்தாள். அவன் திரும்பினான். கண் இமைகள் படபடத்தன. ஒரு சாயலாகத் தரையை நோக்கின மீனாவின் கண்கள்.

''ஏன் மீனா!''

''ஒன்றுமில்லை''...

''தவறு. ஏதோ சொல்ல வந்தாய். ஆனால்......!''

அவள் பேசவில்லையாயினும் அவளுடைய உள்ளமும் உதடுகளும் எண்ணத்தைச் சொல்லமாட்டாமல் சோகத்தைக் கண்களிலே தெள்ளத் தெளிவாய் எடுத்துக் காட்டின.

''புரிகிறது! நீ ஏன் கவலைப்படுகிறாய்! என்று நான் உன் நெஞ்சத்தில் இடம்பெற்றேனோ அன்றுமுதல் இன்றுவரை உன் நினைவலைகள் என் நெஞ்சத்தில் வேரூன்றி விட்டன.

அன்புக்குத் தடை விதித்து அழியும் செல்வத்தை வரவேற்கும் இவ்வுலக நியதியில் என் பெற்றோர்கள் மட்டும் விதிவிலக்கா என்ன...? அவர்களின் சொற்களையும் மீற முடியவில்லை. உன்னையும் என் மனம் நினைக்க மறக்கவில்லை.



ஆனால் ஒன்று! அன்பை அழிக்க முடியாது. தோல்விகளே பின்னால் வரப்போகும் வெற்றியின் அடிப்படை வித்து. மனதைத் தளர விடாதே மீனா.'' மூர்த்தி வேர்க்க விறுவிறுக்கச் சொல்லி முடித்தான்.

அவள் கண்கள் தரை மணலைவிட்டு இன்னும் மீண்டதாகத் தெரியவில்லை. கண்ணீர் முத்துக்களாய்ச் சிதறி, புடவையின் ஒருபுறத் தலைப்பை ஈரமாக்கியிருப்பதைக் கண்டான்.

அவன் மனம் மேலும் இளகியது. அவள் முகத்தைத் தனது கரங்களால் நிமிர்த்தி மார்போடு புதைத்துக் கொண்டான். அவளுடைய விம்மல் ஒலிகள் அவன் இதயத்தில் எதிரொலித்தன.

''மீனா! இதோ பார்! வீணாக மனதைத் தளரவிடாதே. நான் என்றும் உனக்கே சொந்தம். எத்தனை ஆண்டுகளாயினும் காத்திருக்கத் தயார். உன்னைத் தவிர என் மனம் வேறு யாரையும் நாடாது. இது நிச்சயம்; சத்தியமும்கூட. எனக்காக, என் வருகைக்காக, என் நண்பர்கள் காத்துக்கொண்டு நிற்கிறார்கள். வருகிறேன். மீண்டும் சந்திப்போம்.'' என்று ஆறுதல் கூறி அவ்விடம்விட்டு அகன்றான் மூர்த்தி.

அவள் ஒரு பேதை. பெண் மனம் யாரையும் எளிதில் விரும்பாது; விரும்பியபின் வெறுக்காது! பெண்களுக்கே உரிய தனிப் பண்பு இது.

அலை கடல் ஓலமிட்ட வண்ணம் இருந்தது. தாவிவரும் அலைகள் அவளுடையகால்களைத்தொடுவதும் மீண்டும் சென்று கடலோடு கலப்பதுமாக இருந்தன. இதயக் கொந்தளிப்பின் முன் கடலின் கொந்தளிப்பு எம்மாத்திரம்? இதயம் இனியது; ஆனால் இதயத்தின் குமுறல் கொடியது.

மீனா தன் பதினைந்தாவது வயதிலேயே தாயை இழந்தவள். தந்தை குமரநாதன் தன் 60ஆம் வயதிலும் ஓர் அலுவலகத்தில் எழுத்தாளராகத் தொடர்ந்து சளைக்காமல் தன் ஒரே மகள் மீனாவின் வாழ்வுக்காகத் தள்ளாத முதுமையிலும் ஓடாய் உழைத்து வந்தார். ஏதோ ஓரளவு சிறுசேமிப்பிலும் சேர்த்திருந்தார். அதுமட்டுமல்ல, எட்டாம் வகுப்பு வரை படித்து இடையிலே படிப்பை நிறுத்திவிட்ட மீனாவைத் தையல் வகுப்பில் சேர்த்து, அதில் நல்ல தேர்ச்சியை அடையச் செய்திருந்தார்.

தனக்குத் தெரிந்த அந்தத் தொழிலையே பற்றுக்கோடாக அவள் மனம் காட்டியது. எண்ணத்திலே ஒரு சுடர் ஒளித்தது.

இந்த உலகம் பணத்தைத்தானே விரும்புகிறது. பண்பாட்டினும் பணம்தானே பெரிது? பணம் சேர்த்தாகவேண்டும். அதற்கு ஒரே வழி தன்னுடைய தையல் கலைதான்! ஓயாது ஒழியாது ஓய்வு நேரங்களை மையமாக்கி மீனா தையற்தொழிலில் ஈடுபட்டாள்.

கிடைத்த தொகையில் தேவையைத் தவிர எஞ்சியது பெட்டியில் குவியத் தொடங்கியது.

தன்னுடையகாதலன்மூர்த்தியைப் போலத் தானும் ஓர் பணக்காரியாக அவள் விரும்பவில்லை. மூர்த்தியை அடையத் தானும் அதில் ஒரு பங்காவது இருக்கவேண்டாமா? அந்த ஒரே எண்ணம்தான் அவள் நெஞ்சில் ஓயாது நின்றது.

சேர்ந்த ஊதியத்தில் மற்றுமிரண்டு தையல் பொறிகளை வாங்கினாள். நாட் கூலியில் இருவரை அமர்த்தி ஒரு பெரிய தையற்கூடம் ஏற்படுத்தினாள். அவள் பொறுப்புடனும்

நேர்த்தியுடனும் துணிகளைத் தைத்துக் கொடுத்தமையால் ''ஸ்டிச்சிங் மீனா'' என்றால் அவளைத் தெரியாதவர்களே இல்லையென்ற அளவுக்குத் தையல் துறையில் அவள் பெயர் பரவியது.

ஒருநாள்மாலை அவ்வூர்ப்பூங்காவை நாடினாள் அவள். அங்கே சாய்வு பெஞ்சியில் அமர்ந்தவள் கைவிரல்களை நெற்றியில் தட்டியவாறு எதையோ சிந்தித்தவளாய் இருந்தாள்! சிந்தனை எங்கோ பறந்து சென்றது!

முல்லையின் நறுமணம் காற்றோடு கலந்து வீசியது. காற்றசைவில் இலைகள் ஒன்றோடொன்று மோதிச் சலசலப்பை உண்டு பண்ணிக்கொண்டிருந்தன. தென்றலிலே நறுமணம் கலந்திருந்தது. அவளுடைய நெஞ்சிலே அம்மணம் இல்லையே!

இளந் தளிர்களின் இடையிடையே செவ்விய இதழ்மொட்டுகளும், மலர் அரும்புகளும் மலர்ந்து தம் அழகிய இதழ்களை விரித்து எவ்வளவு அழகாய்க் காணப்படுகின்றன! இதயமும் ஒரு மலர் போன்றதுதானே. ஏன் இந்த இதயத்தில் மட்டும் அம் மலர்ச்சிக்கு மாறாகக் கலக்கம் கலந்திருக்க வேண்டும்!

ஏ! வானமே! வானம் நோக்கிய மலர்களே! நீங்கள் கவலையின்றிக் காற்றிலே அசைந்து இனிய மணம் பரப்பி மகிழ்வாய்க் காட்சியளிக்கிறீர்களே! என் மனம் மட்டும் ஏன் உங்களைப்போல் இன்னிசை பாடவில்லை?

ஏ உதிர்ந்து மண்ணிலே சிதறிக் கிடக்கும் மல்லிகையே! எங்கே உன் பெருமிதம்! செடியில் காம்போடு பொருந்தியிருந்தவரைதானே உன் பெருமை! வெயிலிலே வாடி அழியப்போகும் நீ மீண்டும் அசைந்து சென்று கிளைகளில் காம்போடு பொருந்துவாயோ? மாட்டாய்! அது உன்னால் முடியாது.

ஆம்; நீர்க்குமிழிகள்கூட அப்படித்தான் காட்சியளிக்கின்றன. குமிழ் உடைந்து மறையும் வரை ஓரிரு விநாடிகள்தான் நீரில் அதன் ஆட்டமும் பாட்டமும். அழியப்போகும் அந்த விநாடியிலும்கூட அது எவ்வளவு அழகாய்க் காட்சியளிக்கிறது! என் மனம் என்றுதான் மகிழுமோ? என் இதயமலர் என்று மலருமோ? மலரவே மலராதோ?

ஏ விண்ணில் சிறகடித்து வட்டமிடும் பறவைகளே! இனத்தோடு

பகிரும் காகங்களே! கிள்ளை மொழி பேசிடும் கிளியினங்களே ... நீவிர் எங்கே செல்கிறீர்கள்? அங்குமிங்கும் வட்டமிட்டு ஆனந்தப் பண் பாடுகிறீர்களே...... எப்படியோ? என்றும் கவலையின்றி இயற்கையோடு இணைந்து உங்கள் நாட்களை இன்பமாக்கிக் கொள்கிறீர்களே! எப்படித் தான் முடிகிறதோ?

நானும் உங்களைப்போல் சுதந்திரப் பறவையாகஇருக்கமுடியவில்லையே.. ஏன்? இந்தப் பெண்ணினம் அதற்கு விதிவிலக்கோ?

மீனுவின் சிந்தனை அலை பாய்ந்தது. அவள் நெஞ்சத்தில் ஓராயிரம் எண்ணங்கள் அடுக்கடுக்காக மின்னி மறைந்தன. திடீரென அவள் எண்ண ஓட்டம் தடைப்பட்டது. காரணம் அவள் தன்னுடைய தந்தையை அங்கே கண்டதுதான்.

ஏதோ கனவு கண்டவள்போலக் கண்களைக் கசக்கிக்கொண்டே 'என்னப்பா என்னைத் தேடிக்கொண்டா... வார்த்தையை முடிக்கவில்லை மீனு.

''வீட்டுக்கு வர நேரமானால் நீ எங்கு இருப்பாய் என்பது எனக்குத் தெரியுமேம்மா......நேரம் ஆகியும் இன்னும் நீ வரவில்லையே என்று தான்......''

''சற்றே அமைதிக்காக இங்கே வந்தேன், அப்பா, வேறொன்றுமில்லை வாருங்கள்''''...... என்று கூறியவள் அவருடன் இல்லம் அடைந்தாள்.

அன்றைய நாள் ஒருவாறு சென்றது. இரவு வந்தது. மீனு கண்ணயரவில்லை. வெகுநேரம் பழைய நினைவுகள் தொடரவே, பாதியிரவுக்குமேல் கண்கள் மெல்ல அயர்ந்து மூடின. நினைவுத் திரையிலும் கனவுகளே ஆட்சி செலுத்தின.

''கொக்கரக்கோ'' கோழியின் கூவல், விடிவதை அறிவுறுத்தவே, அவள் கண் விழித்தாள். காலை வேலைகளைத் தொடர்ந்தாள். ''மீனு!'' ''மீனு!'' என்ற அவள் தந்தையின் குரல் கேட்டது.

'ஏனப்பா! கூப்பிட்டீர்களா. இதோ காப்பி தயார்' என்று கூறிக் கொண்டு குவளையை மேசைமீது வைத்தாள் மீனு.

'அதில்லையம்மா!' என்றவர் மேசை டிராயரை இழுத்து எதையோ தேடியவராய் ஒவ்வொன்றையும் படபடப்பாகப் புரட்டினார்.

அவர் தேடியது கிடைத்தது. மேசை மீதிருந்த செய்தித்தாளைப் பரப்பரப்புடன் நோக்கினார்.

மீனு ஆச்சரியத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

குமரநாதனின் முகம் சிறிது சிறிதாக மலர்ந்து மகிழ்ச்சிக்கான மாற்றத்தைக் காட்டும் அடையாளமாக மாறியது. ''மீனு உன் அதிர்ஷ்டம் இதோபார்! நம் தமிழகஅரசுப் பரிசுச் சீட்டு ஒன்று வாங்கியிருந்தேன். நேற்றையக் குலுக்கலில் நம் சீட்டுக்கு இலட்சம் ரூபாய் பரிசு விழுந்திருக்கிறது'' என்று கூறியவர் மீனுவின் உச்சி முதல் உள்ளங்கால் வரை உற்று நோக்கினார்.

''மீனு! நான் யாருக்காகப் பாடுபட்டேனோ, கவலைப்பட்டேனோ, அது நிறைவேறிவிட்டது. உன் திருமணம், நீ நல்ல இடத்தில்வாழவேண்டும் என்ற என் எண்ணம், ஆசை, அனைத்தும் நிறைவேறிவிட்டது. அரசின் பரிசு சீட்டு இன்று உன் வாழ்வை வளப்படுத்திவிட்டது.'' அவருடைய மகிழ்ச்சிக் கண்ணீர் எல்லை மீறியதாயிற்று. ''எத்தனையோ பேர் வாங்குகிறார்கள். எல்லோருக்குமா பரிசு கிடைத்துவிடுகிறது. பாவம் நட்டம்தானே அவர்களுக்கு என்று இடையிலே கேட்டாள் மீனு!''

''அப்படி இல்லையம்மா! ஒருவன் ஒரு சீட்டு வாங்கினால் அது ஒரு பெரிய நட்டமாகிவிடாது. ஆனால் அதே ஒருவன் பல சீட்டுகளைப் பேராசையின் காரணமாக வாங்குகிறானே, அதுதான் தவறும் நட்டமும்.'' என்று அதற்கும் அமைதியாகப் பதிலளித்தார் குமரநாதன்.

நாட்கள் நகர்ந்தன. செய்தி மூர்த்தியின் தந்தைக்கு எட்டியது. மூர்த்தியால் விரும்பப்பட்டவள் மீனு. ஏன் இருவரிடையிலும் ஒரு பிளவை உண்டு செய்யவேண்டும். மீனுவிற்கோ அதிர்ஷ்டப் பரிசு இலட்சம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இன்றோ அவள் நிலை பெரிது என எண்ணிய மூர்த்தியின் தந்தை மீனுவை மருமகளாக அழைத்துக்கொள்ள ஒப்புக் கொண்டார்.

திருமணம் உறுதிப் படுத்தப்பட்டது. அன்றைய இருபத்தோராவது நாள் மீனு மூர்த்தி திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறியது. இனியும் சொல்ல வேண்டுமோ மீனுவின் நெஞ்ச மகிழ்ச்சியை!

பாலையில் பசுமை

சூ.செ

பண்டைத் தமிழ் மக்கள் நிலங்களை நால்வகையாகப் பிரித்தனர். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனவும், காடுகளும் அதைச் சார்ந்த பகுதிகளும் முல்லை எனவும், வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும் பெயர் பெற்றன. இவற்றுள் முல்லையும் குறிஞ்சியும் வெப்பத்தால் காய்ந்து திரிந்த நிலம் அதாவது கல்லும் மணலும் கலந்த வெப்பம் மிக்க பரந்த வெளி பாலை எனப்பட்டது.

மழை தவழும் மலைச் சாரலில் பல்வேறு பூக்கள் மலர்ந்திருந்த போதிலும், அவற்றுள் தேன் நிறைந்த பூவான குறிஞ்சிப் பூவே சிறப்புப் பெற்றிருந்தது. அதனால் மலையும், மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப் பெயர் பெற்றது. இதே போன்று தான் மற்ற நிலப்பகுதிகளும் அதனதனிடத்தில் உள்ள ஒரு சிறப்பான பொருளைக் கொண்டு அதனதன் பெயர்களைப் பெறலாயின.

மலையும் காடும் மயங்கிய வெப்பம் மிக்க பரந்த வெளியில், உயர்ந்து வளர்ந்த பாலை மரங்கள் நிறைந்திருந்தமையால் அப்பகுதி பாலை நிலம் என்ற பெயரைக் கொண்டது. காடுகளிலே வளர்ந்த முல்லைக் கொடிகள், தம் வெள்ளை மலர் காட்டி, அங்கு வருவோர்க்கு இன்ப மணம் ஊட்டியதால், காடுகள் முல்லை எனச் சிறப்பிக்கப்பட்டன. நெல்லாலும் கரும்பாலும் அணிபூண்ட வய

லிடத்தே வேலை செய்வோர்க்கு, மருத மரத்தின் நிழல் மகிழ்வூட்டுவதாக அமைந்ததால் வயற்புறங்கள் மருதம் எனப் பெயர் பெற்றன. கடலையடுத்துள்ள உப்பங்கழிகளில் குவளை, ஆம்பல் போன்ற பல்வேறு மலர்கள் மலர்ந்திருந்த போதிலும், நெய்தல் மலர்த் தொகுதியானது, தம் பசிய இலைகளுக்கு மேலே தலை தூக்கி நின்று, மகளிருடைய மையுண்ட கண்களைப் போல் மாட்சிமை பெற்று விளங்கி, அக்கழியை அழகு செய்தலான் கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப் பெயர் பூண்டது. இவ்வாறாக, இயற்கையமைப்புக்கு ஏற்பப் பிரித்து, அவ்வப் பகுதிகளில் சிறந்து விளங்கும் ஒரு பொருளைக் கொண்டே அவ்வப் பகுதிகளுக்குப் பெயரிட்டு, நிலத்தைப் பாகுபாடு செய்து அழைத்த பெருமை, உலகில் வேறு எந்த நாட்டவர்க்கும் கிடைக்காது, தமிழர்களுக்கு மட்டுமே கிடைத்த தனிப் பெரும் பெருமையாகும்.

பாலை நிலம் வெப்பம் நிறைந்தது. நீரற்று வறண்டு கிடப்பது. இப்பாலை நிலத்தைப் பற்றிக் கலித்தொகையில் சேரமன்னன் ஒருவன் பாடியுள்ளான். பாலையைப் பற்றிச் சுவைபடப் பாடியுள்ளமையால் அவன் 'சேரமான் பாலை பாடிய பெருங் கடுங்கோ' என்றே அழைக்கப்பட்டான். அவன் பாடியது பசுமையற்ற பாலையைப் பற்றியது. ஆயினும் பசுமையான கருத்துக்கள் பலவற்றை அங்கே நாம் காணமுடிகிறது.

'சீரணி'யின் இந்த இதழ் காடுகளைப் பற்றிய செய்திகளைக் கொண்டு வெளிவருகிறது. எனவே பாலையில் உள்ள காடு தரும் கருத்துக்களை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்கும். பாலையில் உள்ள காடோ வளமற்ற காடு. ஆயினும் அது வளமான நீதியைத் தர மன்னன் கடுங்கோவுக்குப் பயன்படுகிறது.

பாலையில் உள்ள மரம் எவ்வாறு உள்ளது? கிளைகள் வாடிச் சிறுத்துச் சோம்பி உள்ளது. இலைகள் உதிர்ந்து விட்டமையால் சிறிதும் நிழலில்லை. மரம் வெம்பிப் போய் உலர்ந்துள்ளது. இவ்வாறான மரங்கள் பல சேர்ந்து பொலிவற்ற ஒரு காட்சியைத் தோற்றுவிக்கிறது. மரத்தின் கிளைகளைப் பார்த்ததும் வறுமை மரத்தை நாடிச் செல்வார் இல்லை. மரமாக நின்றும் அதனால் மற்றவர்கட்குப் பயனில்லை. சிறுமைக் குணம் உள்ளவர்களிடம் செல்வம் இருந்தாலும் அதனால் மற்றெவர்க்கும் பயன் இராது என்பதைக் காட்டுவது போல இது உள்ளது. ஒருவனிடத்தில் உள்ள செல்வம் மற்றவர்களை வளப்படுத்த உதவ வேண்டும். செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல். நல்ல மனமுடையோரிடத்தில் உள்ள செல்வம் ஊருணியில் உள்ள நீர்போன்று உலகுக்குப் பயன்படும். நன்னெஞ்சில்லாதவர்கள் பெற்ற செல்வம் நடு ஊரில் நச்சு மரம் பழுத்தது போல ஆகும். பாலை நிலத்தில் மரம் இருந்தும் நிழல் தராத் தன்மை, செல்வம் இருந்தும் பிறர்க்குப் பயன்படாச் சிறுமையாளர்களை ஒத்தது.

யாளன் நினைவிற்கு வருகிறான். 'கொடிது கொடிது, வறுமை கொடிது; அதனினும் கொடிது இளமையில் வறுமை.' ஒருவன் வறியவனானால்-வயிறார உண்ண உணவு பெறாதவனானால்-அவனுடைய உடல் சிறுத்துப்போகும். அதுவும் இளமையிலேயே வறுமைப்பட்டு விட்டானானால் அவனது உறுப்புக்களில் உயிர்த் தன்மையையே காண முடியாது. வறியவன் இளமைச் செவ்வியின்றி இருக்குமாறு போல வாடின கிளைகள் உள்ளன.

இலைகள் உதிர்ந்து மொட்டை மரமாக நிற்பதால் நிழல் கிடையாது. நிழல் இருந்தால் தானே அங்கு நிற்பார்கள்! நிழலைத் தராமையால் அம்

பாலை வெப்பத்தின் கொடுமையால் மரங்கள் மட்டுமல்ல; அவற்றின் வேர்களும் வெம்பியுள்ளன. உலக ஒழுக்கத்தைக் கடந்து நடப்பவன் தான் மட்டும் கெடுவதோடன்றித் தன் சுற்றத்தாரும் அழியக் காரணமாகி விடுகிறான். 'ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்!' என்ற உயரிய நீதியை உலகுக்கு உரைப்பவை போன்றுள்ளன உலர்ந்த வேர்கள்.

இத்தகைய பசுமையற்ற மரங்கள் சேர்ந்து பொலிவிழந்து கிடக்கும் காட்டின் தோற்றம் கொடுங்கோல் மன்னனுடைய நாட்டில் சோர்வுற்றுச் சுருண்டு கிடக்கும் மக்களை நினைக்கச் செய்கிறது. மரங்கள் வெப்பத்தால் உலர்ந்துள்ளன; அவற்றை

நாடி வருவார்க்கு நிழலையும் கனியையும் தரமுடியாது. அது போன்றே கொடுங்கோன்மை நிலவும் நாட்டிலும் மக்கள் வருந்திச் சோர்வர்; அவர்களை அண்டி வருவோர்க்கும் எவ்விதப் பயனும் அவர்களால் இருக்க முடியாது. பாலையில் உள்ள காடு இவ்வளவையும் எண்ணச் செய்கிறது.

வறியவன் இளமைபோல்
  வாடிய சினையவாய்ச்
சிறியவன் செல்வம்போற்
  சேர்ந்தார்க்கு நிழலின்றி
யார்கண்ணு மிகந்துசெய்து
  இசைகெட்டான் இறுதிபோல்
வேரோடு மரம்வெம்ப
  விரிகதிர் தெறுதலின்
அலவுற்றுக் குடிகூவ
  ஆறின்றிப் பொருள்வெஃகிக்
கொலையஞ்சா வினைவராற்
  கோல்கோடி அவன்நிழல்
உலகுபோல் உலறிய
  உயர்மர வெஞ்சுரம் !

[பாலைக் கலி 10, வரிகள் 1-7]

வெஞ்சுரம் வேந்தனுக்கோர் அரிய கருத்து விருந்தானது. வறுமை, நலனைக் கெடுக்கும் கொடுமையானது; சிறியோரிடம் சேர்ந்த செல்வம் பிறர்க்குப் பயன்படாது; தவறு செய்பவன் தன்னை மட்டுமன்றித் தன் சுற்றத்தையும் அழித்துக் கொள்வான்; கொடுமையாளர்களின் ஆட்சியில் நாடு பொலிவிழந்து கிடக்கும் என்ற பசுமைக் கருத்துக்களைப் பாலையில் உள்ள காட்டைக்கொண்டு படைக்கிறார் கடுங்கோ !

தலைவன் ஒருவன் தலைவியை விட்டுப் பொருளீட்டப் பிரிந்து சென்றிருக்கிறான். இளவேனில் வருகிறது. தலைவன் வரவை எதிர்நோக்கியிருக்கிறாள் தலைவி. இளவேனிலால் ஆற்றங்கரையில் உள்ள மரங்கள் தளிர் விட்டுத் தழைக்கின்றன. வெண் முல்லை பூக்கிறது. ஆற்றங்கரையிலுள்ள மணல் தளிர்களாலும் பூக்களாலும் பொலிவு பெறுகிறது.

வெஞ்சுரத்தைப் பாடிய சேரவேந்தன் கடுங்கோ, இவ்வாறான கவின் பெற்ற மரக்காவையும் பாட நேர்கிறது. இங்கும் அரிய செய்திகளை அழகுறத் தருகிறார்.

இலையுதிர் காலத்தில் மரங்களில் இலைகள் முற்றிலுமாக உதிர்ந்திருக்கும். இளவேனில் மழை பெய்யத் தொடங்கியதும் தளிர்கள் நெருங்கித் தோன்றுகின்றன. ஒவ்வொரு நாளும் புதிது புதிதான தளிர்கள் தோன்றிய வண்ணமுள்ளன. ஈதலில் குறைகாட்டாது, வாழும் நெறியறிந்து வாழ்பவனின் செல்வம் மேலும் மேலும் வளர்ந்து செல்வது போலிருக்கிறதாம் மரங்கள் தழைப்பது. மயக்குவிக்கும் மொழியையும், மானின் நோக்கையும் உடைய மகளிர் முறுவலிக்கத் தோன்றும் பல்லின் வெள்ளையொப்ப முல்லைப் பூக்கள் எங்கும் பூக்கின்றன. நெய்யுண்டு, நீண்டு, நெளிந்த மகளிருடைய கருங்கூந்தல் போன்று ஆற்றில் கறுமணல் நெளி நெளியாய்ப் பரந்து கிடக்கிறது. காதலர்ப் புணர்ந்த கோதையரின் கூந்தல் போல ஆற்று மணலும் தளிர்களாலும், மலர்களாலும் அழகு பெறுகின்றது.

ஈதலிற் குறைகாட்டா
  தறனறிந் தொழுகிய
தீதிலான் செல்வம்போல்
  தீங்கரை மரம்நந்தப்
பேதுறு மடமொழிப் பிணையெழில்
  மானோக்கின்
மாதரார் முறுவல்போல்
  மணமௌவல் முகையூழ்ப்பக்
காதலர்ப் புணர்ந்தவர்
  கதுப்புப்போற் கழல்குபு
தாதொடுந் தளிரொடுந்
  தண்ணறல் தகைபெற

[பாலைக் கலி 27, வரிகள் 1-6]

அறநெறியில் செல்பவனின் ஆக்கம் வளர்வதையும், வளமிக்க மனை வாழ்க்கையின் மாண்பினையும் எடுத்தியம்புவனவாக இவ் வரிகள் அமைகின்றன.

இளவேனிலின் எழிற்காட்சியை மற்றொரு பாடலிலும் வரைகிறார் கவிஞர். மாந்தளிர் மென்மைபெற எங்கும் தோன்றியுள்ளது. அண்மையில் ஈன்றவளுடைய துத்திபோல நெய்ப்பினைக் கொண்டுள்ளன அத்தளிர்கள். காலம் வருந்துணையும் அடங்கியிருந்து, ஏற்ற காலம் கிட்டியதும் வெளிப்படுத்திக் கொள்ளும் அறிவாளர் போலச் செவ்வி வாய்த்ததும் மரக் கொம்புகள் அரும்புகளைத் தோற்றுவித்தன. எங்கும் பசுமை செறிந்த புதர்கள். அவற்றில் மலர்ந்துள்ள பூக்களில் படிந்து தேனுண்ணும் வண்டுகள் எழுப்பும் ஒலியானது வல்லானிசைத்த யாழொலியை ஒத்தது. காற்றினால் அசைந்தாடும் கொம்புகள் காண்பார்க்கு நல்ல கூத்தினை அளிக்கின்றன. நிலையாமையை உணர்ந்து, உள்ள போதே வாரிக் கொடுக்கும் வள்ளல்கள் ஒப்ப மரங்கள் அரும்புகளை வாரிச் சிறக்கின்றன. அன்பால் கூடுபவருடைய புல்லுதலைப் போலக் கொடிகள் பின்னிப் பிணைந்து திகழ்கின்றன.

ஈன்றவள் திதலைபோல் ஈர்பெய்யுந்
தளிரொடும்
ஆன்றவர் அடக்கம்போல்
அலர்செல்லாச் சினையொடும்
வல்லவர் யாழ்போல வண்டார்க்கும்
புதலொடும்
நல்லவர் நுடக்கம்போல் நயம்வந்த
கொம்பொடும்
உணர்ந்தவர் ஈகைபோல் இணரூழ்த்த
மரத்தொடும்
புணர்ந்தவர் முயக்கம்போற் புரிவுற்ற
கொடியொடும்
நயந்தார்க்கோ நல்லைமன் இளவேனில்
எம்போல.

[பாலைக் கலி 32, வரிகள் 7-13]

மரங்களைக் கொண்டே மதிக்கத்தக்க கருத்துக்களை மற்றும் பல இடங்களில் பாலைக் கலியில் நாம் காணலாம். சோம்பல் இல்லாதவன் செல்வம் பெருகும்; அசைவிலா ஊக்கமுடையவனிடம் செல்வம் வழி வினவிச் செல்லும் என்பார் வள்ளுவர். மரங்களில் நாளுக்கு நாள் பூக்கள் மிகுவதை ஊக்கமுடையவனிடம் பெருகும் செல்வத்திற்கு ஒப்பிடுகிறார் கடுங்கோ.

'மடியிலான் செல்வம்போல் மரம்நந்த'

என்பது அவர் கூற்று.

பாவங்களில் மிகவும் கொடுமையானது பொய்ச் சாட்சி கூறுதல். பொய்ச் சாட்சி சொன்ன ஒருவன் ஒரு மரத்தின் கீழ் நின்றால் அவன் கொடுமையை வெளிப்படுத்தும் வகையிலும், அவன் பாவத்தைத் தாங்க இயலாமலும் அந்த மரம் வாடி நிற்குமாம். ''கரிபொய்த்தான் கீழிருந்த மரம் போலக் கவின் வாடி'' என்று பாடுவதன் மூலம் பொய்க் கரியாளர்களைப் அப்பெருவேந்தன் எந்த அளவு வெறுத்தான் என்பது புலனாகிறது.

இத்தகைய அரிய கருத்துக்களைக் கொண்டிருப்பதால்தான் கலித்தொகை கற்றறிந்தோர் ஏத்தும் பெருமை பெருகிறது. அக் கலியில் பாராண்ட வேந்தன் பாடியுள்ள பாலைபற்றிய கருத்துக்களை முழுதுமாகப் படித்து இன்புறுமாறு வேண்டுகிறேன்.

அமெரிக்காவில் ஏட்டாட்சி

ஆங்கிலத்தில் 1800 நாளிதழ்களும், 9000 வார இதழ்களும் அமெரிக்காவில் வெளிவருகின்றன. ஏறத்தாழ முப்பது மொழிகளில் 400க்கும் மிகுதியான வேற்றுமொழி ஏடுகளும் இதழ்களும் அங்கு அச்சிடப்படுகின்றன. 125 தேசிய இதழ்கள் வெளிவருகின்றன. அவற்றில் 47 இதழ்கள் பத்து இலட்சம் படிகளுக்குமேல் விற்பனையாகின்றன. இவற்றுள் 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' என்னும் இதழ் திங்கள் தோறும் 140 இலட்சம் படிகள் விற்பனையாகின்றன.

நீர் உயர நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகும் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC
PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC
DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம். எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS STATE SMALL INDUSTRIES CORPORATION LTD

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்
35/2, உட்ஸ் ரோடு.
சென்னை-2.

கிராமநலம் பகுதி 2
GRAMANALAM PART-2
ஊராட்சி அரசிதழ்
PANCHAYAT GAZETTE

சீரணிக்குரிய கணக்குகளை நிர்வகித்தல்—பின்பற்றபட வேண்டிய நடைமுறை

குறிப்பாணை எண். 119159 / பி9 / 68. 7 ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித்துறை, நாள் 13-6-1969.

இராணிப்பேட்டை வருவாய்க்கோட்ட அதிகாரி வினவியுள்ள சில குறிப்புகளின் மீது தெளிவுரை வழங்குமாறு, வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அரசைக் கேட்டுள்ளார். அவை கீழ்க் கண்டவாறு விளக்கப்படுகின்றன.

	குறிப்பு	தெளிவுரை
1.	ரூ. 50/-க்கு மேற்படாத மூலத் துணைக் கைச்சாற்றுக்களை (Original Sub-Voucher) தொடர்புள்ள அதிகாரியே வைத்துக் கொள்ளலாமா? அதாவது தல நிதிக் கணக்குகள் ஆய்வாளர், மற்றும் கணக்காய்வுத் தலைவர் ஆகியோர் கணக்குகளைத் தணிக்கை செய்கையில், அவர்களிடம் காண்பிப்பதற்கென ஊராட்சி ஒன்றியமும், நகராட்சிகளும் மேற்கண்ட கைச்சாற்றுகளை வைத்துக் கொள்ளலாமா?	தணிக்கையின் போது அளிப்பதற்கெனக் கைச்சாற்றுப் படிகள் (Duplicate Vouchers), முத்திரையிட்ட இரசீதுகள் (Stamped Receipts) போன்றவற்றை அலுவலகத்திலேயே வைத்துக் கொள்ளலாம்.
2.	எதிர்பாராச் செலவுப் பட்டியல் எம். டி. சி. 58 (Contingent Bill M. T. C. 58) அல்லது பல்வகைப் பட்டியல் எம். டி. சி. 40 (Miscellaneous Bill, M. T. C. 40)-ல் பணத்தைப் பெறலாமா?	கருவிகள், சாதனங்கள், மற்றும் இதர பொருட்களை வாங்குவதற்குரிய செலவுகளுக்கு, எம். டி. சி படிவம் 58-ல் பணம் பெறலாம்.

3.	இதர அரசு மானியங்களில் பின்பற்றப்படுவது போன்று, சீரணிப் பணிகளுக்குரிய செலவினங்களைத் தொடக்கத்தில் ஊராட்சி ஒன்றிய மன்றம் அல்லது நகராட்சி நிதிகளிலிருந்தே செலவிட்டுப் பின்னர், வருவாய்க் கோட்ட அதிகாரியின் ஒப்புதல் ஆணையின் பேரில் அப்பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாமா?	அரசு ஆணை எண். 279, ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித்துறை நாள் 16-2-1968-ல் உள்ள நடைமுறைகள் தொடர்ந்திருந்து வரலாம். அரசு குறிப்பாணை எண். 7294/ பி9-69.2 நாள் 26-2-1969 இன் படிச் சீரணிக்குரிய கணக்குகள், ஊராட்சி ஒன்றிய மன்றக் கணக்குகளிலிருந்து தனியே பிரித்து வைக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

கே. ஏ. நம்பியார்,
அரசின் துணைச் செயலர்.

'சுள்ளெறும்பு' என்ற ஊராட்சியின் பெயரை முருநெல்லிக்கோட்டை என்று மாற்றுதல்.

* * * *

முனிவர் ஜார்ஜ் அரசிதழில் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு வெளியாகும்.

பிற்சேர்க்கை—அறிவிப்பு

மதுரை மாவட்டம் திண்டுக்கல் வட்டத்திலுள்ள ''சுள்ளெறும்பு'' ஊராட்சியின் பெயரை ''முருநெல்லிக் கோட்டை'' என்று மாற்றுதற்கு

1. தற்போதுள்ள சுள்ளெறும்பு ஊராட்சியில் முருநெல்லிக் கோட்டை என்ற கிராமமானது, மிகப் பெரிய கிராமங்களிலொன்றாகவிருக்கிறதென்றும்

2. ஊராட்சி அலுவலகம், அஞ்சலகம், மகப்பேறு, குழந்தைகள் நிலையம் போன்றவை முருநெல்லிக் கோட்டையிலே உள்ளனவென்றும்

3. இவ்வூராட்சியிலுள்ள இதர எட்டுக் கிராமங்களுக்கு இக்கிராமம் மிக அருகிலுள்ளதென்றும்

4. அஞ்சல்களைப் பெறுதற்கு ஊராட்சி மிக இன்னலையடைகின்றதென்ற...

காரணங்களுண்டென்று கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதால், 1958-ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள பிரிவு 3 (2)இன் படி, தேவையான நடைமுறைகளைப் பின்பற்றிய பிறகு, ஊர் வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 29-9-1965 நாளிட்ட அரசு ஆணை எண். 2191 உடன் 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 3ஆவது பகுதியிலுள்ள துணைப் பிரிவு 2இல் உள்ள பிரிவு (C)இன் துணைப்பிரிவு (iii) இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மதுரை மாவட்டம் (இரெட்டியார்ச் சத்திரம்) திண்டுக்கல் வட்டத்திலுள்ள ''சுள்ளெறும்பு'' ஊராட்சியின் பெயரை 'முருநெல்லிக் கோட்டை' என்று மாற்றப்பட வேண்டுமெனக் கிராம வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பிக்கிறார்.

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 13-6-1969 நாளிட்ட செயல்முறை எண் ஆர். டிஸ். 142657/68-ன் சுருக்கம்)

ஊராட்சி ஒன்றிய ஆணையர் அனைவருக்கும்
கிராம வளர்ச்சி இயக்குநர் அவர்களின் வேண்டுகோள்

ஜி. திருமால், எம்.ஏ.,ஐ. ஏ.எஸ்.
கிராம வளர்ச்சி இயக்குநர்

கோட்டை
சென்னை-9

நே. மு. க. எண். 93855/69-1 (எம்) நாள் 27-6-1969

அன்புள்ள திரு

பொருள் : ''கிராமநலம்'' — சுவையான, தரமான செய்திகளை வெளியிடுதல்.

''கிராமநலம்'' இதழை மேலும் சிறப்புடையதாக்கி, உரிய காலத்தில் வெளியிடுவதற்கு ஆக்க முறையிலான பற்பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

''கிராமநலம்'' இதழ், சிறிய அளவில், கைக்கடக்கமாய்க் குறைக்கப்பட்டு, மே திங்கள் முதல் கவினுற வெளிவருகிறது. தவிர, ''கிராமநலம்'' என்ற பெயரையே மாற்றி, அதற்குச் ''சீரணி'' என்ற புதுப் பெயரிட்டு வெளியிடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. வெகு விரைவில் ''கிராமநலம்'', ''சீரணி'' என்ற பெயரில் வெளிவரும்.

''கிராமநலம்'' இதழை மேலும் பயனுள்ளாதாக்குவதற்கு, மக்கள் விரும்பிப்படிக்கும் இதழாக மலர்வதற்கு, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின் ஒத்துழைப்பு, பெருமளவில் தேவைப்படுகிறதென்பதை நான் விளக்கத் தேவையில்லை.

ஊராட்சிகள், பேரூராட்சிகள். ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளைத் தொகுத்து எளிய, இனிய முறையில் ''கிராமநலம்'' இதழில் வெளியிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, உங்களுடைய ஒன்றியத்தில் அவ்வப்போது நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகள், சிறப்புச் செய்திகள், சாதனைக் குறிப்புகள் போற்றுதற்குரிய பணியாற்றியுள்ள ஊராட்சித் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள்—குறிப்பாக விவசாயத்துறையில் பாராட்டத்தக்க பணிபுரிந்துள்ளோர்—ஆசிரியர்கள், பொறியாளர்கள், வளர்ச்சி அலுவலர்கள், ஊர்ப்பணியாளர்கள் போன்றோரின் பணிகளைப் பற்றிய தகவல்களைப் புகைப்படங்களுடன் சேகரித்து, அவற்றை அவ்வப்போது ஆசிரியர், ''கிராமநலத்''திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அத்துடன், உங்கள் ஒன்றியத்தில் உள்ள ஊர்களைப் பற்றிய சிறப்புச் செய்திகள், ''கிராமநலம்'' பணி பற்றிய சுவையான சம்பவங்கள் ஆகியவற்றையும் தொகுத்து, அவ்வப்போது, தவறுமல் ஆசிரியர், ''கிராமநலத்''திற்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேலும் கிராம வளர்ச்சிக்கேற்ற கட்டுரைகள், கதைகள், கவிதைகள், நாடகங்கள், 'கார்ட்டூன்கள்' கிடைப்பின் அவைகளையும் அனுப்பிவைக்கலாம்.

இந்த வகையில் நீங்கள் ஆர்வத்துடன் பணியாற்றினுல், 'கிராமநலம்' மேலும் மேலும் சிறப்புற்றேங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

உண்மையுள்ள,
ஜி. திருமால்

தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குநரால் ஸ்ரீ பி.எல்.எஸ். அச்சகத்தில் (65/1 ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப்பட்டது.

இணைக்குநர்கள் :

1. திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
   ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்.
2. திரு. ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.
   ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர்.

பதிப்பாளர் : திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ.
ஆசிரியர் : திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

ஓரிரண்டு குழந்தைகள் போதுமே

அளவோடு பெற்று வளமோடு வாழ்வோம்

''நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்,
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம் ;
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்ரு இரண்டா உரைத்திடவே முடியாது.
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்!''

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை—ஆரம்ப சுகாதார நிலையம்—குடும்பநலத்திட்ட நிலையம் ஒன்றை அணுகித் தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு: சுகாதாரம் —
குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6

REGD. No. M. 7277
© தமிழ் நாடு அரசு, 1969

Stanes

தைப் பட்டத்தில் அமோக விளைச்சலும், பெருகிய லாபமும் பெற

கோல்டு ஸீட் (GOLD SEED) வீரிய விதைகள்

1. வீரிய ஒட்டுச் சோளம் CSH-1
2. வீரிய ஒட்டுக் கம்பு HB-1
3. வீரிய ஒட்டு மக்காச் சோளம்
   டெக்கான் & கங்கா ஸ்டார்ச்.

விதை உற்பத்தியாளர்கள் :

தந்தி: "கோல்டு ஸீட்"

போன் : 30442

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர் அஞ்சல், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விவரங்களுக்கும் :

டி ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்,
(உர இலாகா), தபால் பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18

(அல்லது)

ஸ்டேன்ஸ் உரத் தொழிற்சாலைகள் :

வளவனூர், விழுப்புரம், போன்-25	துடியலூர், போன் : 25385 CBE	ஆவணியாபுரம் மதுரை, போன் : 5533	தச்சநல்லூர் திருநெல்வேலி, போன் : 1125

குறிப்பு : மக்காச்சோள விதைகள் இருப்பு தீர்ந்து, வருகிற பிப்ரவரி-மார்ச்சில் விநியோகத்துக்கு வரும். சோளம் (CSH-1) கம்பு (HB-1) இருப்பு விரைவில் குறைந்து வருவதால், தேவைக்கு உடனே எழுதவும்.

Best compliments from

M/s. TRACTORS & AGRICULTURAL IMPLEMENTS
48-A, North Masi Street
MADURAI

Dealers in

INTERNATIONAL TRACTORS AND MATCHED IMPLEMENTS
FOR
MADURAI, RAMANATHAPURAM, THIRUNELVELI AND
KANYAKUMARI DISTRICTS.

'சீரணி' திங்களிதழுக்குக்

கதை, கட்டுரை, கவிதை, சுவையான செய்திகள்
வரவேற்கப்படுகின்றன.

அனுப்புவோர்

ஆசிரியர்
'சீரணி'
கோட்டை :: சென்னை-9
என்ற
முகவரிக்கு அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சீரணி

(கிராம நலம்)

கதிர் 14] ஆகஸ்ட்டு 1969 [நெல் 11

விடுதலை நாள் இதழ்

தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி &
உள்ளாட்சித் துறைத் திங்கள் இதழ்



உங்கள்

தொழில் வளர

வணிகம் ஓங்க

'சீரணி'யில்

விளம்பரம் செய்வீர்!

'சீரணி' விளம்பரக் கட்டண விவரம்

	அவ்வப்போது வெளியிடப்பெறும் விளம்பரங்களுக்கு (1) ஒவ்வோர் இதழுக்கும் ரூ.	குத்தகையாக ஒரே இட அளவிற்கு [குறைந்தது 12 விளம்பரங்கள்] (2) ஒவ்வோர் இதழுக்கும் ரூ.
இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)		
முழுப் பக்கம்	420	315
அரைப் பக்கம்	215	165
நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)		
முழுப் பக்கம்	450	325
அரைப் பக்கம்	230	170
உள் பக்கம்		
முழுப் பக்கம்	400	300
அரைப் பக்கம்	210	160

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்
1.	விடுதலை நாள்	5
2.	இல்லறம் இனிமை பெறவேண்டுமானல்...	6
3.	இனிமைத் தமிழ் மொழி எமது!	9
4.	உரிமையும் கடமையும்	14
5.	குடும்ப ரகசியம்	17
6.	அண்ணல் வழியில்	23
7.	நாவலர் தமிழ்க் காவலர்	25
8.	அள்ளி அள்ளிக் கொடுப்பீர்	33
9.	நிலாவில் உலா	36
10.	மாங்காடு மக்களிடையே அயல் நாட்டினர்	41
11.	எங்கள் வயது 55	43
12.	வள்ளுவர் வழியில் இளங்கோ	45
13.	வாழ்வோடு கலந்தது	50
14.	ஆட்டுப்பாக்கம் காட்டும் வழி	55
15.	தள்ளா விளையுள் ஆடுதுறை நெல்லே பயிரிடு! பயன்பெறு!	56
16.	உழவர் எழுத்தறிவு நடைமுறை இயக்கம்	59
17.	வளரும் வருவாய்க்கு வாழை	65
18.	வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்	67
19.	அறியனும் நம் நெஞ்சு	73
20.	வேளாண்மைக்கு நவீன இயந்திரங்கள்	75
21.	ஒன்றியம் செயல்படுத்தும் தவணைத் திட்டம்	77
22.	'க'ளுவா 'கா'வன்னுவா	79
23.	சுழற்கேடயம் பெற்ற ஒன்றியம்	84
24.	ஊராட்சி அரசிதழ்	87



விடுதலை நாள்

ஆகஸ்ட் திங்கள் பதினைந்தாம் நாள்.
இந்தியத் துணைக் கண்டத்தின் விடுதலை நாள்!
வெள்ளையரின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாள்!
அந்நிய ஆட்சிக்குக் கணக்குத் தீர்க்கப்பட்ட நாள்.

அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல ''கணக்குத் தீர்க்கப்பட்ட நாள், இன்று கணக்குப் பார்க்கும் நாளாக மாறியுள்ளது.''

''பெற்ற சுதந்திரத்தால் பெருகிவரும் நன்மைகள் யாவை?'' என்று சாதாரண நிலையில் உள்ள குடிமகனிலிருந்து, பெரும் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள்வரை கேள்வி எழுப்பும் சூழ்நிலை.

உலகிலே மாபெரும் மக்களாட்சி நாடாகத் திகழும் நம் நாட்டில் 'வளர்ந்துவரும் தேவைகள்' நாளுக்கு நாள் பெருகி வருகின்றன. உணவுத் தேவை, மக்கள் தொகை பெருக்கம் போன்ற பல்வேறு பிரச்னைகளுடன் பருவநிலை தவறுவதால் ஏற்படும் பிரச்னைகளும் சேர்ந்து நமக்கு பெரும் சோதனைகளை உருவாக்கி வருகின்றன.

இப்பிரச்னைகளுக்கு முடிவு காண அயராது உழைக்கவும், நம் முயற்சிகள் மேலும் மேலும் பெருகவும், நமது உரிமைகள் காக்கப் படவும் விடுதலை நாளில் உறுதி பூணுவோம்.

'விடுதலை நாள்' ஒரு சிலர்க்குமட்டுமே உரியது; அதைக் கொண்டாடும் உரிமை உடையவர்கள் ஓர் அரசியல் கட்சியினர்தாம் என்னும் மனப்போக்கு எப்படியோ மக்களிடம் வேரோடிவிட்டது. தகாத இப்போக்கின் தலைவிதியை மாற்றி அமைத்துவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

ஆம், அவருடைய முயற்சியால் அனைத்துக் கட்சியினரும் பங்கேற்ற விடுதலை நாள் விழா சென்னை கோட்டையில் நடைபெற்றது. இப் போக்கு, பட்டித் தொட்டிகளில் எல்லாம் பரவி நாட்டு மக்கள் அனைவரும் இணைந்து மகிழ்வோடு கொண்டாடும் நாளாக வரும் ஆண்டுகளில் விடுதலை நாள் அமையவேண்டும்.

விடுதலை வீரர்களை வாழ்த்துவோம்!
எதிர்கால நல்வாழ்வுக்காக நம் பணிகளைத் தொடருவோம்!
நலன்களைப் பெருக்குவோம்!
முயற்சி திருவினையாக்கும்!
விடுதலை நாள் இவ்வெண்ணங்களை நமக்கு ஊட்டட்டும்.

அட்டைப் படத்தைக் கட்டணமின்றி வரைந்துதவிய ஓவியர் திரு. சேகர் அவர்கட்கு எம் நன்றி.

இல்லறம் இனிமை பெற வேண்டுமானால்...

இரு வேறு சோலைகளிலே தனித் தனியே கீதம் இசைத்துக் கொண்டிருக்கிற ஆணும் பெண்ணுமான இரு குயில்கள், ஒரு கிளையிலே இணைந்து கூட்டுக் குரலிலே இனிய கீதம் பாடுவதுதான் இல்லற வாழ்வு.

அந்தக் கீதத்திலே அலுப்பு வரும் போது மழலைக் கீதத்தைக் கேட்க அந்தக் குடும்பக் குயில்கள் விரும்புகின்றன. அதற்குப் பெயர்தான் பிள்ளைப் பேறு.

''குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்''

என்றார் தமிழரின் வாழ்க்கை நெறிக்கு வழிவகுத்த இறையான வள்ளுவர்.

இல்வாழ்வில் குழலிசை இனிமையாகக் கேட்கவேண்டும். யாழிசை ஒருபுறம் சிங்காரமாக ஒலிக்கவேண்டும். ஆனால் ஒரே நேரத்தில் யாழிசையும், குழலிசையும், பறையோசையும், முழவோசையும், மத்தள வோசையும் ஒன்றாகச் சேர்ந்து ஒலிக்குமானால் செவிகளுக்கா இன்பம் கிடைக்கும்? அந்த ஒலிச் சத்தங்களை இசையென்று சொல்ல முடியும்? காதை மூடிக் கொண்டு ஏன் இவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அலறுகின்றன என்றல்லவா ஓடுகிறோம்.

இல்லறத்துச் சங்கீத மேடையிலும் மழலைக்கீதம் அளவோடு இசைக்கப் பட்டால்தான் வாழ்க்கையே சுவைக்கிறது. இல்லையென்றால் வாழ்க்கையில் 'விரக்தி'யும் 'வேதனை'யும் வளர்ந்து ''ஏன் படைத்தாய் இறைவா?'' என்று கேட்கவேண்டிய நிலைக்கு ஓடுகிறோம்.

அது மட்டுமல்ல.

வாழ்க்கைப் பூந்தோட்டத்தைப் பயிரிடுகிற நாம், அங்கே மகிழ்ச்சி மலர் குலுங்க, வாழ்நாளெல்லாம் இனிமை மணம் கமழவேண்டுமென்று நினைக்கிறோம். இல்லறம் என்ற இன்பச் சோலையில் மிகுதியாக உருவாகும் குழந்தைகள் நமக்கு முன் புகுந்து அந்த மகிழ்ச்சி மலர்களைப் பிய்த்து எறிந்து விடுகின்றன. 'இவ்வளவுதானா நாம் உருவாக்கிய தோட்டத்தின் பலன்?' என்ற பெருங் கவலை நமக்கு வந்துவிடுகின்றது. இதைப் பார்த்துத்தான் பட்டினத் தடிகள்,

'பூப் பிளக்க வருகின்ற புற்றீசல் போலப்
பொலபொலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதுவும் வகையறியீர் கைவிடவும் மாட்டீர்'

என்று ஒருபடி மேலே போய், 'ஏ, மனிதகுலமே; உனக்கு இல்லறமே தேவைதானா?' என்று எதிர்க்க வேண்டிய கட்டத்திற்குச் சென்றார்.

உப்பில்லாத உணவு சப்பென்றிருக்கும் என்றாலும், அந்த உணவில் உப்பே மிக அதிகமாகக் கலக்கப் பட்டுவிடுமானால், உப்பு மிகுந்த உணவின் மீதே வெறுப்பு ஏற்படுவதில்லையா?

மாண்புமிகு
கா. வேழவேந்தன் பி.ஏ., பி.எல்.
தொழிலாளர் துறை அமைச்சர்

வாழ்க்கையில் நாமாக வரம்பு கட்டிக் கொள்ளாமல் மிகுதியான

பிள்ளைகளைப் பெறுவதால்தான் வாழ்க்கையே கசந்து போகிறது என்பதை நித்தம் நித்தம் பார்க்கிறோம்.

பல குழந்தைகளைப் பெற்ற நல்ல தங்காள் படாத பாடுபட்டதை நாடகத்திலே பார்த்து, 'ஐயோ பாவம்!' என்று பரிதாபப்படுகிற தாய்மார்கள் தங்கள் வாழ்க்கையில் அதைப் பாடமாகக் கொள்ள வில்லையே என்பதுதான் நல்லறிவாளரின் வருத்தம்!

உழக்கரிசியை மட்டுமே உலையில் போடும் வருவாயையுடைய கணவனும் மனைவியும், என்னதான் பாடு பட்டாலும் அரைப்படி அரிசிக்குமேல் சம்பாதிக்க வழியில்லாமல் இருக்கும் போது, இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்வது முறைதானா?

இப்படி இருக்கும் நிலையில், அதற்கு மேல் நான்கோ, ஆறோ பெற்றுக் கொண்டால், கால் ஆழாக்கு அரிசியும் கிடைக்காமல், தேய்ந்து, மெலிந்து, எலும்பும் தோலுமாக அல்லவா காட்சி தருகிறார்கள்!

நம் வீட்டுக்குப் பின்புறம் போடும் தோட்டத்திலேகூட, கிடைக்கும் நிலத்தளவை ஒட்டித்தானே தென்னங்கன்றோ, வாழைக் கன்றோ வைக்கமுடிகிறது!

அடர்த்தியான வகையில் கீரைகள் இயற்கையாக முளைத்து விட்டால் கூட, எல்லாம் வளர்ந்தால் எதுவுமே வளமாக வளராது, வெளுத்துப் போகுமே என்று நினைத்து ஈவிரக்கம் காட்டாமல் அவற்றைப் பிடுங்கி எறிந்து, ஒன்றிரண்டை மட்டுமே தண்டாக உருவாக்கி வளர விடுகிறோமே, ஏன்?

குடும்பநலத் திட்டத்தில் அப்படிக் கடூரமாகக் கூடச் சொல்லவில்லை.

இயற்கை படைத்திருக்கிற வசதிகளும், உணவு நிலையும், எதிர்காலத்திலே போதாத நிலை ஏற்பட்டு, எங்கெங்கும் பசி, பட்டினி, போராட்டம், போட்டி, பொறாமை, புரட்சி ஆகியவை மிகுந்துவிடக் கூடாதே என்பதுதான் இந்தத் திட்டத்தின் அடிப்படையான நோக்கமாகும்.

'முப்பது கோடி முகமுடையாள்' என்று பாரதத் தாயைப்பற்றி பாரதி பாடி முடித்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன? எவ்வளவு விரைவில் அந்தக் கவிதை பொய்யாகிவிட்டது. 'ஐம்பது கோடி முகமுடையாள்', 'அறுபது கோடி முகமுடையாள்' என்றல்லவா பாரதி எழுந்துவந்து திருத்திப் பாடவேண்டிய சூழ்நிலை உருவாகிவிட்டது இன்று.

உலகத்தின் ஆறு பெரிய கண்டங்களில், இந்தியாவோ ஒரு கண்டத்தின் ஒரு பகுதியாக ஒட்டிக் கொண்டிருக்கிற ஒருநாடு. ஆனால், உலக முழுதும் பிறக்கும் ஏழு குழந்தைகளில் ஒரு குழந்தை தவறாமல் நம் நாட்டில் பிறந்துகொண்டே இருக்கிறது. 'ஒன்றரை வினாடிக்கு ஒரு குழந்தை வீதம் பிறக்கிறது.' இந்த ஒரு வாக்கியத்தை நான் சொல்வதற்குள் எங்கோ இரண்டு குழந்தைகள் பிறந்துவிட்டிருக்கின்றன! இப்படிப் புதுப்புது வாய்களும், வயிறுகளும் நொடிக்கு நொடி உருவாகிக்கொண்டே இருக்கத்தான் வேண்டுமா? அதே நேரத்தில் நொடிக்கு நொடி வையத்திலே இருக்கிற வயல் நிலம் வளருகிறதா? 'ஆண்டுக்கு மூன்று போகம் என்றில்லாமல் முந்நூறு போகம் விளைகிறோம்' என்று கழனிகள் கூறிவிட்டனவா? இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

'ஆண்டவன் படைப்பிலே நம்மால் என்ன செய்யமுடியும்?' என்று கையைப் பிசைகிறவர்களாக நம்மில் சிலபேர் இருக்கிறோம். ஆண்டவன் காதையை எடுத்துக் கொண்டாலும் நமக்கு அது பாடமாக அமையவில்லையா? எண்ணி இரண்டே பிள்ளைகளான விநாயகரையும் முருகனையும் பெற்ற பரமசிவனாரும் பார்வதியும், ஒரு பழத்தைப் பகிர்ந்து கொடுக்க முடியாமற் போனதால்தானே கந்த புராணம் உருவாயிற்று!

அதே சிக்கலும் உணவுப் போராட்டமும் எதிர்காலத்திலே உருவாகாமல் இருக்கவேண்டுமானால், ஆண்டவன் குழந்தைகளான நாமும், ஆண்டவன் தந்த அறிவைப் பயன்படுத்தி, குடும்பநலத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். இதில் முறைகேடு என்ன இருக்க முடியும்?

மண மேடையிலே தங்கச் சிலையாகக் காட்சியளிக்கிற பெண், மகப்பேறு விடுதிக்குத் தொடர்ந்து ஐந்தாறு தடவை போய்விட்டு வந்தால், மூதாட்டிக் கோலத்திலே மாறிவிடு

கிருளே, அங்கே இல்லறம் இனிக்க முடியுமா?

ஆகவே, அதிகக் குழந்தைகளைப் பெறுவது அகத்தின் அமைதியை மட்டுமே அழிக்கவில்லை; அகத்தரசியின் தோற்றத்தையும் பறித்துக் கொண்டு போய்விடுகிறது.

வயதிலே குறைந்தவளானாலும், மனைவி தோற்றத்தால் பலவீனமாகவும் முதிர்ந்தவளாகவும் தென்படுகிறாள். குடும்பத்திலே சிக்கலும் சச்சரவுகளும் ஏற்படுகின்றன!

அது மட்டுமே அல்ல. குழந்தைச் செல்வம் என்பது நாற்றங்காலை உருவாக்கி எதிர்காலப் பயிரை இடுவது என்று சொல்வார்கள். உருவாகிற நாற்றுக்கு நல்ல பராமரிப்பும், நேரடிக் கண்காணிப்பும், உணவு வசதிகளும் தேவை. தாய் குறைந்தது மூன்றாண்டுகள் ஒரு குழந்தையின்மீது தீவிரக் கவனம் செலுத்தி எல்லா வகையிலும் உருவாக்காவிடில் அதன் மூளையே பாதிக்கப்படுகிறது என்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

அதிகமாகப் பிறந்த, நூறு என்ற எண்ணிக்கையயுடைய கௌரவர்களின் மூளை பலமின்மையையும் ஐந்து பேரான பாண்டவர்களின் அறிவாற்றலையும் நாம் மகாபாரதத்திலே காணவில்லையா?

மந்தங்கள் பலவற்றைப் பெறுவதைவிட, மண்மீது ஒளிவிளக்காகத் திகழ்வதற்கு இரு வைர மணிகளைப் பெற்றெடுப்பது எல்வளவோ சிறப்பல்லவா?

எல்லாப் பாத்திகட்கும் பட்டும் படாமல் நீர் பாய்ச்சுவதைவிட, இருக்கும் தண்ணீரைக் குறிப்பிட்ட பாத்திகளுக்கு இறுதிவரை பாய்ச்சினால்தானே, தோட்டத்திலே இருந்திய பயிர் காய்த்துக் குலுங்கும். அளவோடு பெற்று, அறிவு மிகுந்தவர்களாகப் படிக்கவைத்து, சமுதாயத்தின் முன்னணியிலே நிறுத்துவது தான் அறிவாளர்களின் பணியே தவிர, பல பெற்று, தெருவிலே தேம்ப விட்டேன் என்பதா வாழ்வின் வெற்றி? அதுமட்டுமல்ல.

'படைத்தவன் நீர் ஊற்றுவான்' என்று பாரத்தைக் கடவுளின் மேல் போட்டுவந்த பழியெல்லாம் இனி முடியாது.

'என் எதிர்காலத்தைச் சீரிய முறையிலே உருவாக்கத் திட்டமில்லாவிட்டால் ஏன் பெற்றீர்?' என்று பிள்ளைகள் கேட்கிற காலத்துக்கு நாம் வந்துகொண்டிருக்கிறோம்.

நீதிமன்றத்திலே பாதிக்கு மேற்பட்ட வழக்குகள் சொத்துத் தகராறுகளைப் பற்றியே குவிந்துகொண்டிருக்கின்றனவே, காரணம்?

'எனக்கெங்கே?', 'எனக்கென்ன?' என்று பாகப்பிரிவினை வழக்குகள் மிகுதியாவதற்குக் காரணங்கள்தாம் என்ன? சமுதாயத்திலே திருட்டும், களவும் பெருகுவதற்கும் யார் இடம் தருகிறோம்? கையிருப்பிலே இருப்பதற்குமேல் வையத்திலே மக்கள் தொகை பெருகுவதால் அல்லவா இந்த வாழ்க்கைப் போராட்டங்களும், ஒழுக்கக் கேடுகளும் மலிகின்றன?

ஒரே மகன் இருக்கிற வீட்டில் அப்பாவின் பெட்டியை ஒரு கை பார்ப்பவனைப் பார்க்க முடிவதில்லை. அதே நேரத்தில் பல பிள்ளைகள் இருக்கிற வீட்டில், தந்தையின் பணப் பையையே களவாடும் பிள்ளைகள் உருவாவதற்கு என்ன காரணம்? அப்படிப்பட்ட குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்குமா? அமைதி தவழுமா?

ஆகவே, குடும்ப நலத்திட்டந்தான் எதிர்காலச் சமுதாயச் சீர்த்திருத்தத்திற்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளது.

இல்வாழ்க்கைப் பூங்காவில் இன்ப மலர் பூத்துக் குலுங்கவேண்டுமானால், அளவோடு பெற்று வளமோடு வாழவேண்டும்.

எதிர்கால வாழ்க்கையை நாமே செப்பனிட்டு, வீட்டிலும் நாட்டிலும் பூரிப்பையும், மகிழ்ச்சியையும் உலவ விடுவோம். வாழ்க இல்லறம்; வெல்க குடும்பநலத் திட்டம்.

[நாகைத் தமிழ்ச் சங்கத்தார் பாவேந்தர் பாரதிதாசனின் 'இனிமைத் தமிழ்மொழி எமது' என்ற பாடலின் வரிகளைத் தலைப்புக்களாகக் கொடுத்து பதின்மூன்று கட்டுரைகளைத் தயாரித்தனர். அக் கட்டுரைத் தொகுப்புக்கு தமிழ்நாடு அரசின் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மொழி நயமும், இலக்கியப் பொலிவும் இணையத் தந்துள்ள மதிப்புரை இது.]

— ஆசிரியர்

'இனிமைத் தமிழ் மொழி எமது!' என்று தொடங்கும் பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் வரிகளில் உள்ள சொற்றொடர்களைத் தலைப்புக்களாகக் கொண்டு பதின்மூன்று புலவர்கள் தமிழுக்கு அவ்வத்தலைப்புப் பொருந்துவதை வெகு தெளிவாக இந்நூலில் விளக்கியுள்ளார்கள்.

''தமிழ், இனிமையானது - நமக்கு வாய்த்த நல்லமுது - கனி பிழிந்த சாறு - இதை மொழியாகப் பெற்றது நம் பேறு!

''சொற்சுவை செறிந்தது தமிழ் - இதையொத்த சுவையை வேறெங்கும் நாம் கண்டதில்லை - இம் மொழி மீது யாவர்க்கும் தனியுண்டு காதல்.

''தமிழ் எங்கள் உயிர் - இதன் வளர்ச்சி குறையுமேல் நாடெல்லாம் இருள் - இம் மொழி மேலும் மேலும் உயர நாம் நாளும் செய்வோம் நல்ல தொண்டு.

''தமிழனே! தமிழ் என்று தோள் தட்டி ஆடு - தமிழ் வெல்க என்றே தினம் பாடு'' - இவையே இவ்வறிஞர்கள் எடுத்தியம்பியுள்ளவற்றின் சாரம்.

தமிழ் மொழியின் இனிமைக்கு அதன் சொல்வளத்தை எடுத்துக் காட்டுகிறார், புலவர் அறிவொளி. 'கொண்ம்' என்ற சிலப்பதிகாரச் சொல்லின் ஒலியளவு, கண்ணகியின் மனத் தடுமாற்றத்தைக் காட்டும் தன்மையை அழகுற விளக்குகிறார். ஒலியளவு (மாத்திரை) கொண்டு நயம் காட்டத்தக்க சொற்கள் தமிழில் ஏராளம் உண்டு. திருக்குறளில் புல்லறிவாண்மை என்ற அதிகாரத்தில்,

''ஏவவும் செய்கலான் தான்தேறான்
அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய்''

என்ற குறள் உண்டு.

தானும் தெளியானாய்ப் பிறர் ஏவினாலும் கேளானாய் உள்ளவனுடைய உயிர் போகுமளவும் ஒரு நோய் என்பது இதன் பொருள். புல்லறிவாளர்களுடைய உயிர் சமூகத்தைப் பீடித்துள்ள கொடிய நோய். அத்தகையோருடைய உயிர் விரைவில் நீங்கி விடுவது நல்லது. ஆனால் நல்ல உயிர் விரைவில் நீங்குவதும், கெட்ட உயிர் நீண்டு செல்வதும் உலக இயற்கையாக இருக்கக் காண்கிறோம். புல்லறிவாளர்களுடைய உயிர் விரைவில் நீங்காது என்பதைத்தான்- அந்த உயிர் நீட்டிக்கொண்டே போகும் என்பதைத்தான்- போஒம் என்ற அளபெடையின்மூலம் நீட்டி வள்ளுவர் சொல்கிறார் என அறிஞர் பெருமக்கள் கூறுவர். போம் என்பதைப் போஒம் என அளபெடுத்துச் சொல்லியுள்ளதன் நயம் அறிந்து இன்புறத்தக்கது. இவ்வாறாகத் தமிழ், சொல் நலம் பெற்றிருப்பதோடு, பொருள் நலம், எழுத்து நலம், யாப்பு நலம், அணி நலம் ஆகியவையும் பெற்றுச் சிறந்து நிற்கிறது என்பதை யாரே மறுப்பர்?

புலவர் பல்கதிர்ச் செல்வன் கவின் மிகு கற்பனைகொண்ட இலக்கியங்களைக் காண்போர் இதுவன்றோ எமக்கு இன்பம் எனப் பூரிப்பர் என்கிறார். உண்மைதான்! மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் மண்ணோடு மறைபவை. ஆனால், கவிதை மாளிகைகளோ காலத்தைக் கடந்து நிற்பவை. ஆங்கில நாடகப் பேராசிரியர் ஷேக்ஸ்பியர் உலகில் கற்பனையாளர்களாக மூவரைக் காண்கிறார். பைத்தியக்காரன், காதலன், கவிஞன் ஆகிய மூவரும் கற்பனையின் செறிவாகத் திகழ்பவர்களாம். இதில் பைத்தியக்காரன் கற்பனை, தான் காணும் அனைத்தையும் பேய்க் கூட்டமாகக் காணும். தான் விரும்பும் பெண்ணின் அழகிலே அனைத்தையும் காணும் அற்புதக் கற்பனையாகக் காதலனின் கற்பனை திகழும். கவிஞனின் கற்பனையோ, விண்ணுக்கும் மண்ணுக்குமாகத் தாவி ஒன்றுமற்ற ஒன்றுக்கு ஒரு பெயரையும் அழகையும் தரும். காலையில் காக்கை 'கா, கா' எனக் கரைகிறது. கவிஞர் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை இதைக் கேட்கிறார். அவரது கற்பனை சிறகடித்துப் பறக்கிறது. காக்கை, ஏன் 'கா கா' எனக் கத்துகிறது என்ற ஒரு வினாவை எழுப்பி, விடையும் பகர்கிறார். காலையில் பகலவன் தோன்றியதும் அவனுடைய முதல் வேலை இருட்டை உண்பதாகும். ''நாம் இருக்கிறோம் கறுப்பாக; நம்மையும் இருட்டு என்று எண்ணிப் பகலவன் விழுங்கி விட்டால் என்ன செய்வது?'' என்ற அச்சம் காக்கைக்குத் தோன்றி விட்டதாம். அதனால், நடுங்கிய காக்கை, பகலவனைப் பார்த்து முறையிடுகிறதாம், 'பகலவனே! நான் கறுப்பாக இருப்பதால் இருட்டு என்று எண்ணி என்னை விழுங்கிவிடாதே! நான் ஒரு பறவை! என்னைக் காப்பாற்று (கா), காப்பாற்று(கா)' என முறையிடுகிறதாம்! கா என்பதற்கு உள்ள காப்பாற்று என்ற பொருளைக்கொண்டு அருமையான கற்பனையைத் தோற்றுவிக்கிறார் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை.

''இருட்பகை இரவி இருளெனத்
தம்மையும்
கருதிக் காய்வனோ என்றுயிர்த்
திருசிறைக்
கையான் மார்பிற் புடைத்துக் கலங்கி
மெய்யாம் தம்பெயர் விளம்பி வாயசம்
பதறியெத் திசையிலும் சிதறியோ
டுதலும்''

என்ற இத்தகு கற்பனைகளைக் காணும் போது ''இன்பம்! இன்பம்!'' என்று சொல்லி மகிழாமல் இருக்கமுடியுமா?

தமிழின் பொருளமைப்பு புலவர்க்கும், அறிஞர்க்கும், ஆய்வாளர்க்கும் வாய்த்த நல்லமுது என்கிறார் புலவர் மாணிக்க கணபதி. பொறுமையுடையவனைக் கண்டு பொறாமைப்பட்டுத் திருமகள் தன் தமக்கைக்கு அவனைக் காட்டி நீங்கிவிடுவாள் என்ற கருத்துடைய குறளின் பொருள் அமைப்புச் சிறப்பை இவர் விளக்குகிறார். சீதேவி, மூதேவி ஆகிய இருவரைப் பற்றியும், மற்றோர் இடத்திலும் வள்ளுவர் நயந்தோன்றப் பேசுகிறார்.

''மடியுளாள் மாமுகடி என்ப
மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்''

மாமுகடி - மூதேவி ஒருவனுடைய மடியிலேயும், திருமகள் தாளிலேயும் இருப்பதாக வள்ளுவர் கூறுகிறார். மாமுகடிக்கு மடியையும், திருமகளுக்குத் தாளையும் ஒதுக்கி மூதேவிக்கு உயர்ந்த இடம் தருவதுபோல இருக்கிறது, சொல்லமைப்பு. ஆனால் பொருளமைப்போ? மடி என்பதற்குப் பொருள் சோம்பல்; தாள் என்பதற்குப் பொருள் முயற்சி. மடியிலே (சோம்பலில்) வாழ்பவள் மூதேவி; தாளிலே (முயற்சியிலே) உறைபவள் திருமகள். இத்தகு சொல் நயமும் பொருள் நயமும் வாய்ந்த திருக்குறளையும் மற்ற பல்வேறு இலக்கியங்களையும் கொண்டுள்ள தமிழை நமக்கு வாய்த்த நல்லமுது என்று சொல்லத்தானே வேண்டும்!

'கனியைப் பிழிந்திட்ட சாறு' என்ற கவிஞரின் சொற்றொடரைத் தலைப்பாகக்கொண்டு, தமிழ், கனிச்சாறாய்ப் பேசப்படும் இடங்கள் பலவற்றைப் புலவர் சாமிநாதய்யர் அச்சாறொத்த இனிப்புடன் இயம்புகிறார். தமிழ் கனிச்சாறென இனிப்பது என்கிறார் பாவேந்தர். மீனாட்சியம்மையைத் தமிழ்ச் சுவையை ஒப்பவள் என்கிறார் குமரகுருபரர். ''துறைத் தீந்தமிழில் ஒழுகும் நறுஞ் சுவையே!'' என்பது அவருடைய சொற்றொடர். இறைவியைத் தமிழ்ச் சுவையாகக் காணுகிறார் அவர். 'கவிதைக் கனி பிழிந்த சாற்றினிலே, பண் கூத்து எனும் இவற்றின் சாரம் எலாம் ஏறித்' தித்தித்து நிற்பது தீந்தமிழ்.

தமிழ் நமக்குக் கிடைத்த பெறற்கரிய பேறு. இதைத்தான் பாரதிதாசன், ''யாம் பெற்ற பேறு'' என்று இறுமாந்து பேசுகிறார். இத்தலைப்பில் கட்டுரை யாத்துள்ள புலவர் வை. மு. சண்முக தேசிகரோ நாகைத் தமிழ்ச் சங்கம் செய்துவந்த தொண்டுகளால் விளைந்த, இனி விளைய இருக்கும் நன்மைகள் யாவற்றையும் நாகை மக்கள் தாம் பெற்ற பேறாக எண்ணி மகிழ வேண்டுமென நிமிர்ந்து பேசுகிறார். நாகைத் தமிழ்ச் சங்கம் புரிவது நற்றமிழ்த் தொண்டே! அச் சங்கத்தைப் பாராட்டுவது தமிழைப் பாராட்டுவதேயாகும்! சங்கத்தை - அதன் மூலம் தமிழைப் பெறும் நாகை மக்கள் பேறு பெற்றவர்களே!

அடுத்து, தனிமைச் சுவையுள்ளதாக, சிலப்பதிகாரத்தில் உள்ள 'வீழ்' என்ற சொல்லின் நயத்தை விளக்குகிறார் புலவர் இராசு. பாண்டியன் முறையாட்சி நடத்திவந்தவரை அவன் திருவீழ் (திரு விரும்புகின்ற) மார்பினனாக இருந்தான். அவனது கோல் கோடிய பின்னரோ அவன் திருவீழ் (திரு வீழ்ந்துவிட்ட - நீங்கி விட்ட) மார்பினன் ஆனான். 'திரு வீழ்' என்ற சொல்லுக்கு நம் உள்ளம் வீழ் (விரும்பும்) நயத்தை இங்கே கட்டுரை ஆசிரியர் காட்டியுள்ளார். இதுபோன்ற மற்றோர் இடத்தையும் சிலம்பிலே காட்டுவார்கள் புலவர் பெருமக்கள். கோவலனும் கண்ணகியும் மதுரையில் மாதரி வீட்டில் தங்கினர். கோவலனுக்குக் கண்ணகி உணவு படைத்தாள். உண்டு ஓய்வெடுத்த பின்னர் கோவலன் கண்ணகியின் குண நலன்களைப் பாராட்டியவனாய்

''கற்பின் கொழுந்தே பொற்பின்
செல்வி

சீறடிச் சிலம்பி னொன்றுகொண்
டியான்போய்
மாறி வருவன் மயங்கா தொழிகென''க்

கூறிச் சிலம்பு விற்கச் செல்கிறான். மாறி வருவேன் எனக் கோவலன் கூறும்போது அவன் நினைந்தது இச் சிலம்பை விற்று வருவேன் என்பது தான். நாமோ அங்கு வேறொரு பொருளையும் நினைந்து பார்க்கமுடிகிறது. சிலம்பைக் கையிலே கொண்டு இப்போது செல்கிறேன்; இந்த உருவிலிருந்து மாறித்தான் இனி வருவேன்; முழு வடிவோடு செல்கின்ற என்னை இனித் தலையும் உடலும் பிரிக்கப்பட்ட - மாறிய நிலையில்தான் காண முடியும் என்று சொல்வது போன்ற கருத்தையும் இங்கே நாம் அறிய முடிகிறது.

வாய்மையே உறுதியளிக்கும் என்ற கருத்தை வேதநாயகப் பெரியார் ஒரு பாடலில் சொல்லும் முறையைக் காணும்போது, அவர் சொற்சுவையொப்ப வேறெங்கும் தான் கண்டதில்லை எனக் கூறத் தோன்றுகிறது என்கிறார் புலவர் செ. சூசை அவர்கள்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல்
அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து''

என்பதை உணர்ந்த புலவர்கள் தாம் சொல்வதைச் சிறப்புறச் சொல்வது இயல்பேயாகும். கருத்தை அழகுபடக் கூறும் முறை புலவர்களின் உடன் தோன்றி வளரும் ஒரு சிறப்பாகும்.

சயங்கொண்டாரின் பரணியிலே காதல்கொண்டு, காதற் சுவையமைந்த ஒரு பாடலைப் பிடித்து ''இங்கே நனியுண்டு காதல்; இதைக் காணீர்'' என அழைக்கிறார் புலவர் சண்முகம். மங்கையர்மீது கொள்ளும் காதலைவிடத் தமிழ்மீது பெருங்காதல் கொண்டவர் நம் நாட்டார். ''மங்கையொருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழ்க்கு ஈடில்லை என்றுரைப்போம்'' என்று சிந்து பாடும் தமிழ்க் காதலர் நிரம்பியது இந் நாடு. எனவே, தமிழின்பால் 'நனியுண்டு காதல்' என்ற கூற்று முற்றிலும் பொருந்துவதாகும்.

தமிழ் எங்கள் உயிர் என்ற தலைப்பில் புலவர் சுந்தரராசனார் உயிரை, உணர்வை, வளர்ப்பது தமிழே என்பதை உணர்ச்சி ததும்ப உரைத்துச் செல்கிறார். நாடு இன்று பல துறைகளிலும் முன்னேறி வருகிறது. எத்துறையாவது தமிழை நீக்கி மற்ற மொழியைக் கொள்ளுமேயானால், அது உயிரற்ற உடலுக்கு ஒப்பு என நாம் எண்ண வேண்டும்.

தமிழ் குன்றினால் நாடே இருண்டுவிடும். இந்த நூற்றாண்டில் தமிழே அண்ணா - அண்ணாவே தமிழ் என்ற அளவுக்குத் தமிழும் அண்ணாவும் ஒன்றெனப் பிணைந்து நின்றதை நாமறிவோம். அண்ணா மறைந்தார், தமிழே மறைந்தது போன்ற உணர்வை நாம் பெறுகிறோம். புலவர் கோ. இராமசாமி கூறுவது போன்று நாடே இருண்ட நிலையில் இருப்பதாக அலமந்து நிற்கிறோம். இருப்பினும் அவர் தந்த தமிழால் அறிவொளி சிறக்கச் செய்வோம்! 'மணக்க வரும் தென்றலிலே குளிரா இல்லை? தோப்பில் நிழலா இல்லை?'' இவை என்றும் போல இன்றும் உண்டு. இவை போன்றே தவறாது இருக்கவேண்டிய ஒன்று இல்லை. என்ன அது? ''தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ் தான் இல்லை.'' கடந்த சில ஆண்டுகளாகத் தமிழறிஞர்கள் - தொண்டர்களின் அரிய முயற்சியால் இருள்நிலை நீங்கி ஒளி நிலைபெற்று வருகிறோம். இவ்வொளி பேரொளியாகத் திகழ முயல்வோமாக.

தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பண்புடைய ஆன்றோர்கள் வாழ்தலினாலேயே இவ்வுலகம் நின்று நிலவுகிறது என்ற புறநானூற்றுப் புலவரின் கருத்தோடு தொடங்கி அத்தகைய பெரும் பண்பைப் பெற்றிருந்த மறைமலையடிகளாரைப் பின்பற்றித் தனித் தமிழ் வளர நாம் நாளும் செய்வோம் நல்ல தொண்டு என்கிறார் புலவர் இரா. பா. பால்ராசு. தனித் தமிழ் இயக்கம் மேலும் வளர்ந்து வலிவும் பொலிவும் பெற வேண்டுமென்ற இவ்வாசிரியரின் ஆர்வம் பாராட்டுக்குரியது. ''எல்லாம் தமிழ், எங்கும் தமிழ்'' என்ற நிலை மலர நாம் பாடுபடுவோமாக.

தமிழ் மூன்றெழுத்துச் சொல், அதன் பொருளான இனிமை என்பதும் மூன்றெழுத்துச் சொல்லே. தமிழின் பிரிவும் இயல், இசை, கூத்

தென மூன்று - நாடும் சேர, சோழ, பாண்டிய நாடென மூன்று. இவ்வாறாக மூன்றின் பெருமையைச் சுட்டிக்காட்டி முத்தமிழின் பெருமையை எண்ணித் தோள் தட்டி ஆடு என்கிறார் புலவர் எம். மணிமேகலை.

இத்தனை பெருமையும்கொண்ட தமிழே ''நீ வெல்க!'' என வாழ்த்துகிறார் பேராசிரியர் சயச்சந்திரன். சயச்சந்திரன் - வெற்றி ஒளி அல்லவா? எனவேதான் தமிழும் வெற்றி ஒளிவீசும் நிலவாக விளங்க வேண்டுமென உளம் குளிர்ந்து வாழ்த்துகிறார்.

'வெல்க தமிழ்' என்ற முழக்கம் இன்று எங்கும் கேட்கிறது. இந் நிலை ஏற்படத் தமிழறிஞர்கள் ஏற்ற தொல்லைகள் கொஞ்சமா? 'எந்தமிழ் வாழ்க!' என்றெழுப்பிய வாழ்த்தை இழித்துரைத்தோர் - கண்டித்தோர் பலர். 'தமிழ் வாழ்க! என்று முழங்குகிறார்களே! தமிழ் வாழவேண்டுமென்பது இவர்கள்நோக்கமன்று. மற்றொரு மொழி ஒழிக - அதாவது இந்தி ஒழிக என்பதையே மறைமுகமாக இவ்வாறு கூறுகிறார்கள்' என்றனர் இழிமதி படைத்தோர். அத்தகையோர்க்குக் கண்ணியமான விளக்கம் தரப்பட்டது. திருமண வீட்டுக்குச் செல்கிறோம். ''மலரோடு மணமக்கள் இனிதாக வாழ்க! மாடப்புறாவென்ன மனமொத்து வாழ்க!'' என்று வாழ்த்துகிறோம் என்றால் மணமக்கள் மட்டும் வாழவேண்டும்; மணத்திற்கு வந்திருக்கும் மற்றையோர் மாள வேண்டும் என்பதா பொருள்? மணமக்களை வாழ்த்த வேண்டிய வேளை; வாழ்க என வாழ்த்துகிறோம். தமிழ் நம் தாய்மொழி. எம் தாயே நீ வாழ்க! என வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இது மற்றெந்த மொழியையும் பழிப்பதோ இழிப்பதோ ஆகாது என எடுத்துக் கூறப்பட்டது. 'எந் தமிழே வாழ்க, என்கிறார்களே'-தமிழ் இவர்களுக்கு மட்டும்தான் சொந்தமா? என்று கேட்டாரும் உண்டு. அவர்கட்கும் தக்க பதில் தரப்பட்டது. தாயொருத்தி தன் குழந்தையை எடுத்து, 'என் கண்ணே! என் மணியே!'' என்று கொஞ்சினால் அருகில் உள்ள தந்தை அறிவுள்ளவனாக இருந்தால் இந்தக் குழந்தை நமக்குச் சொந்தமில்லையா என்று எண்ணமாட்டான். தந்தை அருகிருக்கிறான் என்ற காரணத்தினால் எந்தத் தாயும் ''எங்கள் கண்ணே'' என்று விளிக்க மாட்டாள். உரிமை நெருக்கத்தைக் குறிக்கவே எந் தமிழே வாழ்க என வாழ்த்துவதாக விளக்கம் கூறப்பட்டது. அறிஞர்கள் இவ்வாறெல்லாம் எடுத்துக் கூறித் தமிழ் முழக்கம் செய்து வந்தமையால் இன்று தமிழாய்ந்த தமிழ்ச் சான்றோர்கள் ஆட்சிப் பொறுப்பையேற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் தமிழை வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கை மீதூற 'வெல்க தமிழ்' என வெற்றிக் களிப்போடு கூறி மகிழ்வோமாக!

பாவேந்தரின் பாடலில் வரிக்கு வரி வளம் காணும் நாகைத் தமிழ்ச் சங்கத்தாரின் முயற்சி வளர்க! வெல்க!

சிறு சேமிப்பு ஊர்

சிறு சேமிப்பிற்குச் சிறந்ததொரு சான்று மகபூப் நகர் (லக்னோ அருகில்) என்ற சிறிய கிராமம்.

இங்குள்ள 135 குடும்பங்களில் 111 குடும்பங்கள், தேசிய சேமிப்புத் திட்டத்தில் பங்குகொண்டு, சேமிப்புப் பத்திரங்கள் பெற்றுள்ளன. தவிர, அஞ்சலகத்தில் 103 சேமிப்புக் கணக்குகளும் 8 வளரும் சேமிப்புக் கணக்குகளும் தொடங்கப்பட்டுள்ளன. ஐந்து கிராமவாசிகள், தேசிய சேமிப்புப் பத்திரங்கள் பெற்றுள்ளனர். விரைவிலேயே, எஞ்சி நிற்கும் கிராமவாசிகளும் சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து பங்கு பெறுவர்.

உரிமையும் கடமையும்

எல். டி. சுந்தரம்

குயில்ஒன்று பாடுதற்கு உரிமைகேட்டுக்
    கொடிஏந்திப் போராட்டம் செய்வதுண்டா?
புயல்எழுந்து வீசுதற்கு உரிமைவேண்டிப்
    பொதுக்கூட்டம் போடுமொரு வழக்கமுண்டா?
ஒயிலான கலைவானம் பாடியிங்கு
    விளையாட விண்வெளியில் வேலியுண்டோ!
கயலழகு விழிபேசிக் கலகம்செய்யும்
    கன்னியிளம் புரட்சிக்கும் தடைகள்இல்லை!

செயலற்ற சிறுமனிதர் காதல்பாடும்
    சிங்காரப் புலவர்க்கும் தடைகள்இல்லை
ஜெயங்கொண்டார் பரணியென விடுதலைப்போர்
    செயவந்த வீரர்க்கோ தடைகள்உண்டு!
துயில்விட்டு நம்மவரை எழுப்பவந்த
    திருப்பள்ளி எழுச்சிக்கே தடைகள்உண்டு!
பயிருக்கு வெயில்போன்ற உரிமைவேண்டி
    பெரியோர்கள் மடிந்தகதை தெரியவேண்டும்!

பச்சைமயில் தோகைவிரித் தாடுதற்கோர்
    பாராளும் மந்திரியின் ஆணைவேண்டாம்!
இச்சைகொண்ட கிளிக்கூட்டம் எங்கும்செல்லும்
    இதற்கென்று சட்டசபை கூடவேண்டாம்!
நச்சரிக்கும் காக்காய்கள் நரிக்கூட்டங்கள்
    நடமாடத் தடையேதும் நாட்டில்இல்லை
உச்சரிக்கும் மனிதர்க்கே உரிமைஇல்லை
    ஒருவருக்கும் ஏன்என்ற உணர்ச்சிஇல்லை!

அச்சுறுத்தும் தடைச்சட்டம் உண்டுஅந்நாள்
    அறிவுக்கே தண்டனைகள் அதிகம்உண்டு
எச்சரிக்கை செய்திடுவார் ஏற்காவிட்டால்
    இருவிலங்குப் பரிசுண்டு உதைகள்உண்டு.

அச்சாணி இல்லாத தேரைப்போன்றே
    ஆண்கள்எலாம் அடிமைகளாய் அழிவதுண்டு.
இச்சிறுமை தனைஓட்டி இந்தநாட்டை
    எழுந்திருக்கச் செயஎழுந்தார் இளஞ்சிங்கங்கள்!

மண்காத்த வீரர்களில் மனிதமேதை
    மகத்தான விடுதலைக்கு வகுத்தான்பாதை
கண்ணிருக்கும் நல்லவர்க்குக் கதிரேபோன்றான்
    கல்வியெனும் கடலுக்குக் கரையும்கண்டான்
வண்மையிலே பாரியவன் வினைவல்லாளன்
    வெற்றியிலே விற்சேரன் வீரவேளாண்!
அண்மையிலே இந்நாட்டில் வாழ்ந்தவீரன்
    அதற்குள்ளே நாம்மறந்தால் நன்றியில்லை!

பாரத நாட்டின்மேல் பாசங்கொண்டான்
    பரதேசி ஆட்சிதனை எதிர்த்தெழுந்தான்
பேர்புகழும் தேசபக்தன் தியாகச்செம்மல்
    பெற்றதெலாம் பறிகொடுத்தான் விடுதலைக்கே
சீர்சிறப்பு செல்வமுயர் சுகமிழந்தான்
    செக்கிழுத்தான் சித்ரவதை அனுபவித்தான்!
நேரமில்லை வேதனைக்கு நிகரேஇல்லை
    நன்றியிதை மறந்தால்நாம் மனிதரில்லை!

வந்தனைசெய் திந்நாட்டை வாழ்த்தவந்த வ.உ.சி.
    நொந்துள்ளம் நைந்துருக இருஜன்மம் தண்டித்தார்;
எந்தாயின் விடுதலையை எடுத்தவனும் சொன்னதற்கு
    பந்தாடி விட்டான்கள் பாண்டியனை பெருமகனை!
பைந்தமிழ் பாரதத்தைப் பாடவந்த குறைக்காக
    பெருமுனிவன் சிவமென்பான் பாழ்ச்சிறையில் உதைபட்டான்!
நைந்ததிரு நாட்டுக்கோர் நற்கொடியைக் காத்தமகன்
    நம்குமரன் தலைசிதற நடுப்பகலில் கொன்றார்கள்!

பாடிப் பறந்தகுயில் பாகுக் கவியமுதம்
    பாலைப் பொழிந்தமுகில் மாலைப் புகுந்தமதி
தத்தித் தவழும்நதி சக்தித் தமிழ்க்கங்கை
    சுத்திச் சுழல்பெருகும் சொக்கும் சுகக்கவிதை
பச்சைக் குழந்தைமனம் பாசக் குழல்கீதம்
    பண்வானம் பாடியவன் பாரதிஎம் செல்வத்தை
படைகாட்டிப் பயங்காட்டிப் பாவலனைப் புதுவைக்குக்
    கடத்தினன் கனிக்குயிலின் கலைச்சிறகை ஒடித்துவிட்டான்!

இம்மட்டோ எண்ணறிய எத்தனையோ வீரர்கதை
    நாம்இன்று வாழ்வதற்கு அவர்அன்று அழிந்தகதை
எம்மவர்க்குத் தெரியாத ஏடாகப் போச்சுதுகாண்
    அம்மனித வீரர்குலம் ஆக்கிவைத்த நம்முரிமை!



செம்மைபெறு திருவிளக்கு ஜீவனுள்ள பொன்னேடு
மும்மையிலும் காத்தால்தான் முன்னேறும் இந்நாடு!
அம்மைதந்த உயிரைவிட அரிதாகும் தன்மானம்
அம்மான உணர்வுக்கே அடையாளம் நம்முரிமை!

வாடாத நல்லுரிமை வளமாக வேண்டுமெனில்
வீணாக மேடையிலே உறுமுவதில் பயனில்லை.
ஈடற்ற உரிமைக்கு எழில்கடமை உணவாகும்
கடமைசெயும் வீரர்க்கே காசினியில் நிலம்சொந்தம்!
வீடுபுகழ்க் காப்பவர்க்கே ஊரெங்கும்பேர் சொந்தம்
பாடுபடும் நல்லவர்க்கே பண்ணையிலே நெல்சொந்தம்
நீடுபுகழ் வீரர்க்கே நெடுவிழியாள் மனம்சொந்தம்
நெறியாக நடப்பவர்க்கே நல்லதிருக் குறள்சொந்தம்.

கடல்செய்யும் தியாகத்தால் கார்முகிலே மழைபாடும்
கடமைசெயும் சாதனையால் காலம்நம் புகழ்பாடும்
கடமைஎன்ற வீரனையே காதலிப்பாள் உரிமைப்பெண்
கடமைக்கும் உரிமைக்கும் கலியாண மேவாழ்க்கை
கடமைஎன்ற நற்கணவன் கைவிட்டுப் போய்விட்டால்
கண்ணான உரிமைப்பெண் காணாமற் போய்விடுவாள்!
திடமாக உரிமையெனும் திருவோங்க வேண்டுமெனில்
தினங்கோடி தொழில்வேண்டும் திறமையிலே வளம்வேண்டும்!

தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்

வரிசை எண்	மாவட்டம்	தொடக்கப் பள்ளிகள்	உயர்தரத் தொடக்கப் பள்ளிகள்	மொத்த பள்ளிகள்
1.	செங்கை	1481	306	1787
2.	தென் ஆர்க்காடு	1667	358	2025
3.	வட ஆர்க்காடு	1890	390	2280
4.	சேலம்	1415	220	1635
5.	கோவை	2097	377	2474
6.	தஞ்சை	1758	381	2139
7.	திருச்சி	2177	379	2556
8.	இராமநாதபுரம்	1735	238	1973
9.	மதுரை	1520	268	1788
10.	நெல்லை	810	164	974
11.	தருமபுரி	1334	216	1550
12.	நீலகிரி	194	37	231
		18078	3334	21412

உறுப்பினர்கள்

1. முத்தையன் — ஊராட்சித் தண்டலர்
2. பாலசுந்தரம் — தெளிவற்ற முரடன்
3. சித்தலிங்கம் — தன்னலம் மிகுந்த செல்வர்
4. பொன்னன் — சித்தலிங்கத்தின் பணியாள்
5. மணிமாலை — முத்தையனின் நல்ல மனைவி
6. கோமதி — பாலசுந்தரத்தின் பொல்லாத மனைவி
7. பொற்கொடி — சிறுமி

மற்றும் சிலர்

காட்சி 2

இடம்: முத்தையன் வீடு.

காலம்: மாலை

[மணிமாலை திருக்குறள் புத்தகம் படித்துக் கொண்டிருந்தவள், பாடுகிறாள்]

மணி: ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது சீரியது என்று ஒன்றைச் செப்பரிதால்- ஆரியம் வேதம் உடைத்து; தமிழ் திருள்ளுவனார் ஓதும் குறட்பா உடைத்து.

(தண்டலர் முத்தையன் வருகிறான்)

முத்தை: மணிமாலை! என்ன புதுப் பாட்டு?

மணி: புதிதன்று அத்தான்! மிகவும் பழமையானது. திருவள்ளுவ மாலை.

முத்தை: என் மணிமாலையைக் கவர்ந்த வள்ளுவ மாலைக்கு என்ன சிறப்போ?

மணி: இது திருக்குறள், திருவள்ளுவர் சிறப்புக்களை விளக்கிக் கூறுவது; பல புலவர்களின் பாடல் தொகுப்பு.

முத்தை: நீ பாடிய பாட்டின் கருத்து மணத்தை, உன் கணவன் நுகரலாமோ?

மணி : ஆனந்தமாக நுகருங்கள் அத்தான். ''ஆரியம் என்று சொல்லப்படும் சமஸ்கிருத மொழியும், அழகு தமிழ் மொழியும் சமமான தகுதியைப் பெற்றதாம். வட மொழிக்கு வேதத்தால் பெருமை; தென் மொழிக்குத் திருக்குறளால் பெருமை'' என்கிறார் புலவர் வண்ணக்கஞ் சாத்தனார்.

முத்தை : அந்தப் புலவர் நிரம்பக் கெட்டிக்காரர்!

மணி : எப்படி அத்தான்?

முத்தை : அருட்பிரகாசர் இராமலிங்க வள்ளலாரின் ஆன்மீகத் துறை ஒருமைப்பாட்டுச் சமரச வழியை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மொழித் துறையில் சொல்லிவிட்டாரே புலவர்!

மணி : பழங்கவிஞர்கள் பண்பாடு நிறைந்தவர்கள் அத்தான்.

முத்தை : அப்படியென்றால், புதுக் கவிஞர் எல்லோரும் பண்பாடு இல்லாதவர்களா மணிமாலை?

மணி : எல்லோருமா? இல்லை! இல்லை! இல்லை!

[''இல்லை, இல்லை'' என்று சொல்லியவண்ணம் சிறுமி பொற்கொடி வருகிறாள்.]

மணி : வாம்மா கண்ணு! என்னடியம்மா இல்லை?

பொற் : ''இல்லை இல்லை என்று
சொல்லாதே-பணம்
இல்லாத வாழ்வெங்கும்
வெல்லாது!''

மணி : ஓ! அந்தச் சிறு சேமிப்புப் பாடலா?

பொற் : ஆமாம்மா! இந்த 'இல்லை'ப் பாட்டு எங்க வாத்தியாரம்மாவுக்கு ரொம்பப் பிடிக்குது. இந்தப் பாட்டுக்கு நாட்டியம் ஆடினா ரொம்ப நல்லாருக்குமாம். என்னைப் பழகிட்டு வரச் சொன்னாங்க அம்மா! நீ நல்ல அம்மா இல்லே! எனக்கு நாட்டியம் கத்துக் கொடும்மா! நான் பள்ளிக்கூடத்திலே ஆடணும்மா!

முத்தை : பொற்கொடி!

பொற் : ஏம்ப்பா!

முத்தை : உனக்கு இந்தப் பாட்டைச் சொல்லிக் கொடுத்தது யாரம்மா?

பொற் : யாரு சொல்லிக் கொடுப்பாங்க? அம்மா தான்.

முத்தை : அம்மா பாட்டுத்தானா? பலே! மணிமாலை! இதென்ன சொந்தப் பாட்டா? சொல்லை மாத்தா? எதிலேருந்து தோண்டி எடுத்தே?

மணி : என்னை என்னன்னு நெனைச்சீங்க அத்தான்? நான் கற்பனைக் கண்ணவிந்த கவியன்று, மாற்றான் தோட்டத்து மலர் பறித்து மயக்கத்திலே மாலைதொடுக்க! சுயமாக எழுதின சொந்தப் பாட்டு அத்தான், சொந்தப் பாட்டு!

முத்தை : ஆனா, ரொம்பச் சின்னப் பாட்டு.

மணி : முழுதும் கேளுங்க, அப்புறம் முடிவு சொல்லுங்க.

முத்தை : கேக்கறது மட்டுமன்று மணிமாலை! இதுக்கு ஆடறதையும் பார்க்கணும். எப்படியும் பொற்கொடிக்கு நாட்டியம் பழக்கத் தானே போறே? உன்னுடைய நாட்டியக் கலையை நானும்தான் கொஞ்சம் சுவைக்கிறேனே!

மணி : அத்தான்! நீங்க பெரிய ஆளுதான்.

முத்தை : சின்ன ஆளாயிருந்தா உன்னை எப்படியம்மா சமாளிப்பேன்? உம்... நடக்கட்டுமே கண்ணு நாட்டிய விருந்து.

பொற் : நீ சொல்லும்மா, நான் ஆடறேன்.

மணி : ஊஃகும்! முதல்லே நான் ஆடிக் காட்டறேன் அப்பறம் நீ ஆடலாம்.

பொற் : அப்பா ஆடவேணுமா?

மணி : ஊஃகும்! அப்பா சும்மா பார்த்துக் கிட்டிருந்தாலே போதும்!

முத்தை : ஏன்? நானுந்தான் கொஞ்சம் ஆடிப் பார்க்கறேனே! எனக்கு மட்டும் ஆசையில்லையா?

மணி : ஐயையே! வேண்டாம் அத்தான்! நம்ப ஆட்டத்தை அப்புறம் வச்சுக்குவோம். இப்பப் பொற்கொடிக்காக நான் ஆடறேன்.

முத்தை : எனக்கில்லியா?

மணி : (வேடிக்கையாக) இல்லை!... இல்லை!... இல்லை!...

[பாடிக் கொண்டு ஆடுகிறாள் மணிமாலை. சிறுமியும் தாய் போல அபிநயம் பிடித்துப் பார்க்கிறாள்]

எடுப்பு

இல்லை இல்லை என்று சொல்லாதே-
பணம்
இல்லாத வாழ்வெங்கும் வெல்லாது-
கையில் (இ)

தொடுப்பு

1. வல்லமையாய் சிக்கனமாய்
சேமிப்பாய்-தம்பி
வைத்திருந்து தேவையைச்
சமாளிப்பாய்.
நல்லதிந்த பழக்கமிதைச் சாதிப்
பாய்-உனது
நண்பருக்கும் இதனருமை
போதிப்பாய்-தம்பி (இ)

2. வரவுக்குமேல் செலவுகளைச் செய்
யாதே-பிறகு
வறுமையுற்றுக் கையிளைத்துப்
போகாதே.
திறனுக்குமே உயிரதுதான் மெய்
யாக-பணம்
தேடுவதில் பொய்புரட்டைப்
பெய்யாதே-தம்பி (இ)

3. அழகுக்காக வீண்செலவு பண்
ணாதே-பிறகு
ஐயோகடன் வந்ததென்று
பாடாதே
பழகுவதில் சிக்கனத்தை எண்
ணாதே-நல்ல
பகுத்தறிவோர் நட்புறவு கண்ணு
கும்-தம்பி (இ)

[கையிலே அரிகரண்டியோடு வந்த கோமதி பாடலையும் ஆடலையும் பார்த்து நிற்கிறாள்; கோபத்தால் கொதிப்படைகிறாள்.

பாட்டின் மூலம் தன்னையே திட்டுவதாகக் கருதிய கோமதியிடம் சிறுமி அபிநயம் பிடித்துக் காட்ட, மேலும் சிறுமியை அடிக்கிறாள்]

கோமதி : ஏண்டி சிறுக்கி! என்ன கொழுப்படி உனக்கு? நாங்கதான் இல்லே இல்லேன்னு சொல்றமா? கடன்பட்டுச் சாகறமா? வரவுக்கு மேலே செலவு பண்ணிக் கையிளைச்சுப் போறோமா? நீங்க ரொக்கப் புள்ளிகளோ? உங்கம்மா சீவிச் சிங்காரிச்சு, பவுடரைப் பூசிக்கிட்டுத் தெருவிலே போறதில்லையா? அழகுக்காக நான்தான் வீண் செலவு பண்றேனா? ஏண்டி! ஏம் பொழைப்பு எகத்தாளமாய்ப் போச்சாடி உங்களுக் கெல்லாம்?

[மீண்டும் அடிக்கிறாள்]

பொற் : (அஞ்சி) அம்மா! அம்மா!... அம்மா!...

[ஓடிச் சென்று தாயைக் கட்டிக்கொண்டு அழுகிறாள்.]

மணி : (அணைத்து) ஐயோ! ஏனக்கா இப்படி அடிக்கறீங்க?... அழாதேம்மா; அழாதே!...

[சிறுமியைத் தேற்றுகிறாள்]

முத்தை: அண்ணி! இதென்ன வம்பு. ஒங்களுக்கேன் இவ்வளவு கடுப்பு? இந்தப் பாட்டிலே உங்களைக் குறிப்பிட்டு ஒண்ணுமே சொல்லலியே!

கோமதி : உங்களைச் சொல்லி என்ன பண்றது? இது என்னோட விதி; என்னோட கதி; என்னோட வியாகூலம்; என்னோட நெலைமை; கொண்டவன் திறமையா இருந்தாக் கூரையேறிச் சண்டை பிடிக்கலாம்!

முத்தை : குடும்பத்திலே சண்டை சச்சரவு இல்லாமலேயும் இருக்கலாமே!

கோமதி : விடுவாளா உன்பெண்டாட்டி? இருக்க விடுவாளா?

முத்தை : என்ன அண்ணி பண்ணிறெ, இருக்க விடாமெ?

கோமதி : படிக்கத் தெரிஞ்சவ, பாடத் தெரிஞ்சவ, ஆடத் தெரிஞ்சவ, எழுதத் தெரிஞ்சவ, ஏசத் தெரிஞ்சவ! எப்படிச் சும்மா இருப்பா? அவ எதைத்தாஞ் செய்யட்டுமே; பெண்டாட்டியேக்கம் உன்னைப் பாக்கவுடுமா? பேசவுடுமா? என்னை இடிக்கிற இடிப்பும், நொடிக்கிற நொடிப்பும் தெரிஞ்சாலும் கண்டிக்கவுடுமா மயக்கம்? நீதான் பெண்டாட்டித் தாசன் பெரியதாசனாயிட்டியே!

முத்தை : மணிமாலை செய்த குற்றத்தைச் சொல்லுங்களண்ணி! இப்பவே, இங்கேயே கண்டிக்கிறேன்.

கோமதி : ஒன்னைச் சொல்லி என்ன? அவளைச் சொல்லியென்ன? எல்லாம் எங்களோட விதி! கையிலேருந்த காசுபணத்தைப் பொம்பளைக் கச்சேரி, சீட்டுக் கச்சேரியிலே கரைச்சுப் போட்டு, ஒட்டுத் திண்ணையிலே டீக்கடை வச்சிருக்கிற ஒங்கண்ணனைச் சொல்லணும். வடை முறுக்குச் சுட்டுகிட்டு நெருப்பிலே வேகற என்னைச் சொல்லணும். எங்களோட பிள்ளை குட்டிகளைச் சொல்லணும். ஈனப் பொழப்பைச் சொல்லணும்!

முத்தை: சும்மா அடுக்காதிங்க அண்ணி! அதுக்கு நாங்க என்ன அண்ணி பண்றது?

கோமதி : பாடுங்க, எங்களைக் கேலி பண்ணி ஆடுங்க! தையாதக்கா போடுங்க! தடுமாறி நாசமாய்ப் போங்க!

[அரி கரண்டியை ஆட்டிக் கொண்டே வேகமாகப் போகிறாள்]

முத்தை : அண்ணனும் தம்பியும் கூடிவாழும் ஒற்றுமையென்னும் குடும்ப நாடகத்தின் ஒரு காட்சி இது! இல்லையா மணிமாலை?

மணி : ஆமாம். பனைமரத்திலே தேள் கொட்டி, தென்னை மரத்திலே நெறி கட்டியதாமே, அந்தக் கதை இது. சிக்கனமாச் செலவு பண்ணிப் பணத்தைச்சேமித்துவைக்கணும்னு நாட்டுக்காகப் பாட்டுப்பாடினா? இவுங்களுக்கேன் இப்படிக் கோபம் வரணும்? இவுங்களுக்காகவா பாடினேன்? இடிக்கறா, நொடிக்கறான்னு எதுக்கு இந்தப் பத்ரகாளி வேஷம் போடணும்?

முத்தை : மணிமாலை! உள்ளதைச் சொன்னால், ஒடம்பெரிச்சல். அண்ணிக்கு மட்டுமன்று; சிக்கனமா வாழ்ந்து சேமிச்சு வைக்காமெ அழகிலும் ஆடம்பரத்திலும் அறிவைப் பறிகொடுத்து, கையிளைத்துக் கடன்பட்டும் புத்திவராத கற்பனைக் குருடர்களுக்கே இப்படித்தான் கோபம் வரும்! குற்றமுள்ள நெஞ்சு குறு குறுங்குது! அண்ணியோட சுபாவம் தெரிஞ்சது தானே? விட்டுத் தள்ளு.

பொற் : அப்பா! நான் என்ன குத்தம்ப்பா பண்ணினேன்? என்னை ஏம்ப்பா பெரியம்மா அடிச்சாங்க?

முத்தை : ஒங்கிட்டே ஒரு தப்பு இருக்குதடா கண்ணு :

பொற் : ஏங்கிட்டையா? எதப்பா தப்பு?

முத்தை : ஒங்க தாத்தா கல்யாண சுந்தரம் பெரிய தமிழ்ப் புலவர். பேரும் புகழுமா வாழ்ந்தவர். அவருக்குப் புள்ளையாப் பொறந்த எங்களுக்குப் படிப்பு வரலே. என் மகளாப் பொறந்த ஒனக்குப் படிப்பும் வருது; அறிவும் வருது! இதைப் பார்த்த சில பேருக்குப் பொறாமை பொங்கி வருது!

பொற் : அப்பா! எனக்குப் படிப்பு, அறிவு, ஆடல், பாடல் எல்லாம் வருதாப்பா?

முத்தை: ஆமாண்டா கண்ணு! என்னோட 'பிராவிடண்டு ஃபண்டிலே' சிறுகச் சிறுகச் சேர்ற பணத்தைக் கொண்டு ஒன்னைப் படிக்கவச்சு, பட்டதாரியாக்கி, கல்வி நட்சத்திரமாகவே பண்ணப்போறேம்மா.

பொற் : அப்பா! எனக்கோர் ஆசை, கேட்டா, குடுப்பீங்களா?

முத்தை : ஓ! கேளுடா கண்ணு.

பொற் : தபாலாபீசிலே கால்ரூபா தலை ஒவ்வொண்ணு வாங்கி அட்டையிலே ஒட்டிவைக்கணும். அஞ்சு ரூபாய்க்குச் சேர்ந்தப்புறம் ஒரு சிறு சேமிப்புப் புத்தகம் வாங்கணும்ப்பா! எங்க வகுப்புப் பிள்

ளெங்கல்லாம் வாங்கருங்கப்பா! நானும் வாங்கணும்ப்பா!

மணி : பலே! பொற்கொடி! சேமிக்கிறதிலே கண்ணுங்கருத்துமா இருக்கருளே! நல்ல சமயம் பார்த்துச் சேமிக்கிற வேலையைத் தொடங்கிட்டாளே!

முத்தை : பொற்கொடி யாரு பெத்த மகள்? மணிமாலே பெற்றெடுத்த மாணிக்க மாலேயல்லவோ? பேச்சிலே குறையுமா? ஒளி வீச்சிலே குறையுமா?

[செல்லமாக அவள் கன்னத்திலே தட்டுகிருன். அவள் நாணுகிருள்.]

மணி : போங்களத்தான்! ஒளி வீசும் முத்துக்களின் தலேவர் நீங்கள். வெறும் மணிமாலே நான்! உங்களாலன்ருே எனக்குப் பெருமை!

முத்தை : என் மார்பை அலங்கரிக்கும் மணிமாலேயால்தான் எனக்குப் பெருமை! இல்லேயா கண்ணு?

[அவளேத் தழுவுகிருன்.]

பொற் : (கைகொட்டி) அம்மா பலே! அப்பா பலே! அம்மாவும் அப்பாவும் சேமிக்கிருங்க! சேமிக்கிருங்கோ!...

[சொல்லியவண்ணம் ஓடுகிருள்.]

இருவரும் : பொற்கொடி! பொற்கொடி!

[தொடர்ந்து போகின்றனர்.]

இறைவனின் கட்டளே

இறைவன் தன் வான தூதர்களுக்குக் கட்டளேயிடுகிருன்.

வானவர்களே! எழுந்து உலகில் வாழும் என் ஏழைகளேத் தட்டி எழுப்புங்கள்.

செல்வர்களின் மாடமாளிகைகளே அசைத்து அடித் தளத்தோடு அதிரச் செய்யுங்கள்?

சோர்ந்து கிடக்கும் அடிமைகளின் இரத்த நாளங்களேத் தன்னம்பிக்கை யென்னும் உயிரால் வெப்பப்படுத்துங்கள்.

சின்னஞ்சிறு சிட்டுக்குருவியை வல்லூறையும் எதிர்த்துப் போராடச் செய்யுங்கள்.

மக்களாட்சியின் மாண்புறு காலம் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது.

பழைய அடிமைச் சின்னங்களேக் காணுமிடமெல்லாம் அழித்து ஒழியுங்கள்.

உழவனுக்கு உணவுதராக் கழனிகள் இருப்பின் அதில் ஒரு மணி கூட இல்லாமல் எரித்துக் கொளுத்துங்கள்.

படைத்தவனுக்கும் அவன் படைப்புக்களுக்கும் இடையே ஏன் திரை? இதற்குக் காரணமான பூசாரிகளேத் தேவாலயத்திலிருந்து அப்புறப்படுத்துங்கள்.

சிர வணக்கத்திற்காக இப் பூசாரிகள் இறையை விற்றுவிடுகிருர்கள்; வலம் வருகைக்காகச் சிலேயை விலே பேசுகின்ருர்கள். இதைவிட இத்தகைய பள்ளிவாசல் விளக்குகளே அணேத்துவிடுவதே மேலானது.

சலவைக் கற்களாலான இவ்வணக்க இடங்களே நான் வெறுக்கிறேன். எனக்காக மண்ணுலான பள்ளி வாசல்களேயே எழுப்புங்கள்.

— அல்லாம இக்பால்



தமிழ்நாடு அரசு சீரணி (கிராம நலம்) என்ற ஒரு பத்திரிகை வெளியிடுவது கிராமங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதாகும். கிராமங்களேப்பற்றி நம்முடைய கவனத்தை முதன்முதலாகத் திருப்பியவர் அண்ணல் காந்தியடிகளே.

அதற்கு முன்பெல்லாம் நகரங்கள் தான் அதிகக் கவனம் பெற்றுவந்தன. முன்பிருந்த அந்நிய ஆட்சிக்கு வரி வசூலிக்கும் அக்கறை ஒன்றே கிராமங்கள் மீதிருந்தது. மக்களும் கிராம நிலேயை உணர்ந்து நகரங்களேயே நாடி நின்றனர்.

நகரங்களில் மக்கள் தொகை பெருகி, சுகாதாரம் கெட்டு, வேலே யில்லாத் திண்டாட்டமும் வறுமையும் அதிகரித்து வந்தன. இருந்தும் கிராம மக்கள் நகரையே நாடிச் சென்றமையாலும், கிராம வளர்ச்சியில் போதுமான அக்கறை காட்டாததிஞலும் கிராமங்கள் கேவல நிலேயையடைந்தன. புலவர்களால் போற்றப்பட்ட உழவுத் தொழிலும் சீர்கெட்டுப் போயிற்று. ஆஞல், பண்டைக் காலத்தில் இவ்வாறு இல்லே. அப்பொழுது கிராமங்கள் உயர் நிலேயில் இருந்தன. அதன் சின்னத்தை அற்புதமான கோயில்கள் மூலமும் பெரிய பெரிய தெருக்கள் மூலமும் நாம் காண்கின்ருேம்.

எம். பக்தவத்சலம்
முன்னாள் முதலமைச்சர்

இன்றுள்ள ஒரு சில நகரங்களும் கூடக் காலப் போக்கில் கிராமங்களிலிருந்தே உருவாகியிருக்கின்றன.

சென்னே நகரம் தொண்டை நாட்டைச் சேர்ந்த பல கிராமங்கள் இணேக்கப்பெற்ற வட்டாரமே!

பண்டைக் காலத்தில் நம் நாட்டில் மக்கள் தொகை குறைவு. கிராமங்களில் மக்கள் சீரிய முறையில் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டனர். கிராம நிலேயில் செழிப்பிருந்தது. மக்கள் உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தனர்.

தஞ்சையிலுள்ள ஒரு சில பழந் துறைமுகங்களிலிருந்து அரிசிகூட வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நம் நாட்டுக்கும் அயல் நாட்டுக்கு மிருந்த பண்டைக் காலத் தொடர்பு கிராமங்களில் விளேந்த பொருள்கள் மூலம்தான். நம் ஒப்புயர்வற்ற நாகரிகம் அயல் நாடுகளில் பொறிக்கப்பட்டிருக்கிறது என்ருல் அது நம் கிராமங்களின் ஒப்புயர்வற்ற கலேஞர்களால்தான். எனவே, பண்டை நாட்களில் வாழ்ந்த மக்கள் உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தார்கள். இந்த நிலேயில்தான் "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்று அவர்கள் போற்றப்பட்டார்கள். ஆஞல், நாளாவட்டத்தில் கிராமங்களில் மக்கள்தொகை பெருகிக் கொண்டு வந்தது. அதற்கேற்ற வகையில் நிலம் விரிவு அடையவில்லே.

கிராமக் கைத்தொழில்களும் நசித்துப் போயின.

மேலும் அந்நிய ஆட்சியின்கீழ் கிராமங்கள் பெரிதும் புறக்கணிக்கப்பட்டு அவை அடியோடு நசித்துப் போயின.

கிராம மக்கள் தங்கள் உயர்வுக்கான வழி ஏதுமில்லை என்று ஏங்கியிருந்தனர். நாட்டுக் கல்வியும் பாதிக்கப்பட்டது. பிழைக்க வழி 'அரசாங்க உத்தியோகம்' தான் என்றும் அதற்கு ஏற்றது ஆங்கிலக் கல்விதான் என்றும் எண்ணினர். ஆனால் அதுவும் எல்லோருக்கும் கிட்டவில்லை.

இந்நிலையை உணர்ந்த அண்ணல் காந்தியடிகள் இந்நாட்டு வறுமையை அகற்றுவதற்கும் மக்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்கும் கிராமங்களின்மீது முழுக் கவனம் செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அது அந்நிய ஆட்சியின்கீழ் எதிர்பார்க்கக் கூடியதன்று என்றும் உணர்த்தினார்கள்.

காந்தியடிகள் இந்த நாட்டுக்கு விடுதலை கோரி மக்களை ஈடுபடச் செய்து போராடியது இந்த அடிப்படையிலேதான்.

உலக உய்வுக்குத் தோன்றிய அந்தப் பெருமகன் கிராமங்கள் உயர்வதற்குச் சிறந்த வழிகாட்டியிருக்கிறார். நாம் உரிமை பெற்றுப் பெரியதொரு குடியரசை அமைத்த பிறகு அவர் காட்டிய அந்த வழியைத்தான் பின்பற்றப் பார்க்கின்றோம்.

நாம் அடிமைத் தளையிலிருந்து விடுபட்ட இருபது ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவுக்குக் கிராமங்கள் உயர்ந்திருக்கின்றன. ஆனால், இன்னும் நாம் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இதில் நாம் வெற்றி பெற்று 'ஊர் நலம்' என்ற உயர் குறிக்கோளை முழுமையாக அடைய வேண்டுமென்றால், காந்தியடிகள் வகுத்துக் கொடுத்துள்ள பாதையிலேதான் நாம் தவறாமல் செல்லவேண்டும்.

காந்தியடிகளின் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. நாமும் கொண்டாட முற்பட்டிருக்கிறோம்.

இந்த நூற்றாண்டு விழா, நமக்குச் சிறந்த வாய்ப்பை அளிக்கிறது.

கிராமங்களில் உள்ள குறைகளையும் பிற்போக்கு மனப்பான்மையையும் அகற்றிக் கிராமங்கள் உயர்வதற்குரிய வகையில் நாம் கவனம் செலுத்தவேண்டும்.

நம் விவசாயிகளைப்பற்றி நாம் பெருமைப்படுகிறோம். அவர்கள் நவீன முறைகளைக் கையாண்டு நிலத்தின் உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டு வருகிறார்கள். அவர்களை நாம் மேலும் ஊக்குவிக்கவேண்டும்.

நம் கிராமங்களில் கூடச் சுகாதாரம் கெட்டுப் போயிருப்பதைக் கண்டு கலங்குகிறோம்.

காந்தியடிகள் கிராமச் சுகாதாரத்தைப்பற்றி வலியுறுத்தியுள்ளார்கள். கிராமங்களில் எல்லா வசதிகளும் இருந்தால் மக்கள் ஏன் நகரங்களுக்குப் போய்க் குவிந்து அவற்றை நரகமாக்கவேண்டும். கிராமங்களில் வசதிகள் ஓரளவு பெருகியிருக்கின்றன என்றாலும் மேலும் பெருக்கும் வகையில் நாம் கவனம் செலுத்த வேண்டும். கிராமங்களின் செல்வநிலை உயர்ந்தாலன்றி நம் நாடு உயர்ந்த நிலை அடையாது.

இந்த இலட்சியத்தை ஈடேற்றுவதற்குக் காந்தியடிகள் காட்டிய பாதையில் நின்று, காந்தி நூற்றாண்டு விழாவை உருப்படியான வழியில் கொண்டாடுவோமாக!

வறட்சியால் அவதியுறும் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள 10,000 கால்நடைகள் மத்தியப் பிரதேசத்திலுள்ள பாலகாட் மாவட்டத்தில் இலவசமாக மேயவிடப்பட்டன.

— 'பஞ்சாயத்து ராஜ்' இதழிலிருந்து

ஆகஸ்ட்டில் ஆட்சிப் பொறுப்பேற்ற அமைச்சர் பெருமக்கள்

மாண்புமிகு
இரா. நெடுஞ்செழியன்
கல்வி-சுகாதார அமைச்சர்



மாண்புமிகு
என். வி. நடராசன்
பிற்பட்டோர் நல அமைச்சர்

மாண்புமிகு கா. வேழவேந்தன்
தொழிலாளர் நல அமைச்சர்

புதிய
அமைச்சர்கள்



பொறுப்
பேற்கும்

காட்சிகள்





தமிழ்நாடு அமைச்சரவை



ஆகஸ்ட் 15, விடுதலை நாள் விழா - சென்னை கோட்டையில் மேதகு ஆளுநர் கொடியேற்றுவித்தார்.

அன்று மாலை நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உரையாற்றினர்.



நாவலர் தமிழ்க் காவலர்



மா. செங்குட்டுவன்

வடக்காலத்தூர் இராசகோபால நாராயணசாமி என்பவர்தான் இன்றையத் தமிழ்நாட்டின் கல்வியமைச்சர் என்றால் யார் நம்புவர்? ஆம்! அந்தப் பெயருக்குரியவர்தான் 'நாவலர்' என்ற நான்கு எழுத்துக்குள் அடங்கி நமது கல்வியமைச்சராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகவும் இன்று திகழ்கிறார்.

பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளியில் பயின்ற வ. இரா. நாராயணசாமிதான் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அடைந்ததும் வ. இரா. நெடுஞ்செழியன் ஆனார். (பின்னர் ஆங்கிலத்தில் வி. ஆர். நெடுஞ்செழியனாகவும் தமிழில் இரா. நெடுஞ்செழியனாகவும் ஆக்கிக் கொண்டார்.) பல ஆண்டுகட்குப் பிறகு அதே அண்ணாமலை நகரில் நடந்த ஒரு கூட்டத்தில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் திரு. நெடுஞ்செழியன் அவர்களை, 'நாவலர்' என்ற அடைமொழியுடன் முதன்

முதலாகக் குறிப்பிட்டுப் பேசினார். அன்று முதல் நாடறிந்த நாவலரானார் திரு. நெடுஞ்செழியன்.

தமிழ்நாட்டில் 'நாவலர்' என்றால் பசுமலை சோமசுந்தர பாரதியாரைத்தான் குறிக்கும். அவருக்குப்பின், அவருடைய மாணவரான திரு. நெடுஞ்செழியனுக்கு அந்தச் சிறப்புப் பெயர் நிலைத்துவிட்டது. இன்று எங்கும், யாரும், 'நாவலர்' என்றே அழைக்கின்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நாட்டுக்குத் தந்த நன்மணிகளுள் ஒருவராகத் திகழ்பவர் நமது நாவலர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்திலேயே தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கையில் ஈடுபாடும், பேரறிஞர் அண்ணாவுடன் தொடர்பும் ஏற்பட்டதன் பயனாகத் திரு. நெடுஞ்செழியன் நாவன்மை மிக்க சொற்பொழிவாளராகத் தமிழ்நாட்டுக்கு அறிமுகமானார். உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டும் அவரது பேச்சைக் கேட்டுத் திராவிடர் இயக்கத்தில் சேர்ந்தவர்கள் தொகை பெரிது.

இன்று அரை நூற்றாண்டு வயதை அடைந்திருக்கும் நாவலர், இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் இயக்கப் பரப்புரைப் பணியிலேயே முழுக்க முழுக்கத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டவர். தொழில் முறையைக் கருதியிருப்பாரேயானால், ஏதேனும் ஒரு கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றச் சென்றிருப்பார். மிக எளிய குடும்பத்தில் பிறந்தவர் தான் அவர். வேலைபார்த்தால்தான் வாழ்க்கை நடத்தமுடியும் என்ற நிலை இருந்தும் தம்மைத் தேடிவந்த அலுவல்களை யெல்லாம் தட்டிக் கழித்துவிட்டு, இயக்கப் பணிகளிலே ஈடுபடக் காரணம், அவருக்கிருந்த கொள்கைப் பிடிப்பேயாகும்.

கோவையைவிட்டு ஈரோட்டுப் பாசறைக்கு:

கல்லூரிப் படிப்பை முடித்ததும் தொழில் மேதை ஜி.டி. நாயுடு அவர்களின் யு.எம்.எஸ். விடுதிக் காப்பாளராகப் (வார்டன்) பொறுப் பேற்றுக் கொண்ட திரு. நெடுஞ்செழியன் அவர்கள், தொடர்ந்து அந்தப் பணியில் நீடித்திருக்க முடியவில்லை. வாரத்தில் ஒரு நாள்தான் (ஞாயிற்றுக் கிழமை) ஓய்வு கிடைக்கும். அந்நாளில் மட்டுந்தான் இயக்கப் பரப்புரையில் ஈடுபட வாய்ப்பிருந்தது. எனவே அந்த வேலையையும் உதறித் தள்ளிவிட்டு நேரே ஈரோட்டுக்குச் சென்று வெண்தாடி வேந்தர் பெரியாருடன் கொள்கைப் பரப்புரையில் ஈடுபடலானார் இளந்தாடி நெடுஞ்செழியன்!

வெண்தாடி வேந்தருடன்:

இருவரும் சேர்ந்து ஊர் ஊராகச் செல்வார்கள். ஒவ்வோர் ஊரிலும் பெரிய ஊர்வலம் இருக்கும்; பொதுக் கூட்டம் இருக்கும்; ஒப்பனை ஊர்தியில் பெரியாருக்குப் பக்கத்தில் இவர் அமர்ந்துவரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்; "வெண்தாடி வேந்தர் பெரியார் வாழ்க! இளந்தாடி நெடுஞ்செழியன் வாழ்க" என்ற முழக்கங்கள் எங்கும் எழும்!

பொதுக் கூட்டத்தில் பெரியார் பேசுவதற்கு முன் இளைஞர் நெடுஞ்செழியனின் வீரமுழக்கம் கேட்கும். அவருடைய பேச்சே தனி! 'கிராப்' தலையுடன், கருகருத்த நீண்ட தாடியுடன், வெள்ளை 'ஜிப்பா' அணிந்து, மேலேதுண்டில்லாமல், ஒரு பாதிரியாரைப் போன்ற தோற்றம் அளிக்கும் அவருடைய குரலில் வீர உணர்ச்சி கொப்புளிக்கும். பெரியார் முன்னிலையில் அவர் அரைமணி நேரத்துக்கு மேல் பேச இயலாது. (சிறிது நீண்டுவிட்டாலும் பெரியாரின் கைத்தடி மேடையைத் தட்டும்.) அந்த அரைமணி நேரப் பேச்சில் திராவிட இன, மொழி, பண்பாடு, வரலாறு, அரசியல் நிலை ஆகிய அத்துணையும் அடங்கும்.

தேடி வந்த வேலை:

திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டு இரண்டாண்டுகளே ஆகியிருந்தன. நாவலர் நெடுஞ்செழியன் கழகத்தில் முன்னணியில் இருந்து முழுநேரப் பணியாற்றிவந்த நேரம். அப்போது மதுரையிலிருந்து வெளிவரத் தொடங்கிய 'தமிழ்நாடு' நாளிதழின் ஆசிரியராகப் பொறுப் பேற்கும்படித் திரு. நெடுஞ்செழியன் அவர்கட்கு அழைப்பு வந்தது. முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்தான் நாவலரின் பெயரைப் பரிந்துரைத்தார். "நல்ல ஊதியம் கிடைக்கும்; வேண்டிய வசதிகள் செய்துதரச் சொல்லியிருக்கிறேன். தாங்கள் தட்டாது இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று அவர் நாவலருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதற்குப் பதில் எழுதாதிருந்த நாவலருக்குத் தந்திமேல் தந்தி வந்துகொண்டிருந்தது. நாவலரோ எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை. நண்பர்கள் தூண்டியும் கூட அந்த வேலையை ஏற்க மறுத்துவிட்டார்.

"தமிழ்நாடு என்ற பெயரும் பிடிக்கிறது. அது தனித் தமிழில் வெளிவர இருக்கிறது என்ற செய்தியும் இனிக்கிறது. அதற்கு ஆசிரியராக அமர்ந்து பணியாற்றுவதிலும் எனக்கு அட்டியில்லை. ஆனால் அந்த இதழுக்கு உரிமையாளர் யார் என்பதை எண்ணிப் பார்க்கும்போது தான் தயக்கம் ஏற்படுகிறது. அவரோ பல ஆலைகட்குச் சொந்தக்காரரான கருமுத்து தியாகராசன் செட்டியார். நானோ பாட்டாளிகளின் பாசறையான திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவன். அவருடைய ஆலை ஒன்றில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது தமிழ்நாடு நாளிதழில் நான் யாரை ஆதரித்துத் தலையங்கம் எழுதமுடியும்? வேலை நிறுத்தம் செய்யும் பாட்டாளிகளை ஆதரித்தால் என் வேலை நிலைக்குமா? ஆலை முதலாளியை ஆதரித்து எழுதினால் என் கொள்கை என்ன ஆவது? எனவேதான் நான் அந்தப் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை" என்று திரு. நெடுஞ்செழியன் நண்பர்கட்குச் சமாதானம் கூறினார்.

சீர்திருத்தச் செம்மல் :

நாவலரின் தங்கை திருமணம் 1948 இல் திருவாரூரில் நடைபெற்றது. திருமணத்தில் ஆடம்பரமோ அர்த்தமற்ற செலவோ கூடாது என்ற கொள்கையில் உறுதி கொண்டவரான நாவலர், மிக நெருங்கிய உறவினர்கள், நண்பர்கட்கு மட்டுமே அழைப்பு அனுப்பியிருந்தார். கழகத் தோழர்கட்கு 'விடுதலை' பத்திரிகையில் பொதுவாகத் திருமணச் செய்தியைத் தெரிவித்ததோடு சரி; யாருக்கும் தனித்தனியாக அழைப்பு அனுப்பவில்லை. வெளியூர்த் தலைவர் யாரும் அழைக்கப்படவில்லை. உள்ளூர்ப் பெரியவர் ஒருவரைத் தலைமை வகிக்கச் சொல்லித் திருமணத்தை நடத்தச் செய்தார். அந்த நேரத்தில் நாவலர் விரும்பாத, அவரே எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்துவிட்டது.

தாலி கட்டும் சடங்கு வேண்டாம்; மோதிரம் மாற்றிக் கொண்டால் போதும் என்பது அவருடைய முடிவு. ஆனால் அவருக்கே தெரியாமல் மாப்பிள்ளை வீட்டாரின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் முன்கூட்டியே தாலி கோர்த்த மங்கல நாணை மாலையோடு இணைத்து வைத்துவிட்டார்கள் நாவலரின் குடும்பத்தார்; இதை அவர் கவனிக்கவில்லை. மணமகன் மணமகள் கழுத்தில் மாலையணிவித்தபோதுதான் இது அவருக்குத் தெரிந்தது!

நன்றி கூறுமுகத்தான் நாவலர் எழுந்து பேசத் தொடங்கினார். திருமணத்தில் தாலி கட்டுவதும் மூடச் சடங்குதான் என்றார். பகுத்தறிவுச் சீர்த்திருத்தத் திருமணம் எப்படி அமையவேண்டும் என்பதை அழகாக விளக்கி ஒரு மணிநேரம் பேசினார். அப்போது அவர்,

> 'இப்போதுகூட ஒன்றும் கெட்டு விடவில்லை. மணமகன் நினைத்தால் இந்தத் தாலியை இப்போதேகூடக் கழற்றி விடலாம். என்ன நேருமோ ஏது நேருமோ என்று அஞ்சவேண்டாம். துணிவும் தன்னம்பிக்கையும்தான் தேவை.'

என்று அவர் கூறியதும், மணப்பந்தலில் அமர்ந்திருந்த பல பெரியவர்கள் அதிர்ச்சியடைந்தனர். தாய்மார்களில் பலர் முணுமுணுத்தனர். "என்ன இருந்தாலும் இப்படியா அமங்கலமாகப் பேசுவது; கட்டிய தாலியை அவிழ்ப்பதாவது?" என்று அவர்கள் பேசிக் கொண்டனர். அதைப்பற்றி யெல்லாம் நாவலர் பொருட் படுத்தவில்லை.

> "ஒரு பகுத்தறிவுத் திருமணம் எப்படி நடைபெறவேண்டும் என்பதற்கு எடுத்துக் காட்டாக எங்கள் வீட்டுத் திருமணம்

இருக்கவேண்டும் என்று கருதியே, நான் கூடியவரை எளிமையாகவும், சிக்கனமாகவும், மூடச்சடங்குகளை அறவே நீக்கியும் இத் திருமணத்தை நடத்த ஏற்பாடு செய்தேன். மேளதாளம்கூட வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். என்னையும் அறியாமல் சிற்சில காரியங்கள் நடந்துவிட்டன.''

என்று அவர் பேசுகையில் குறிப்பிட்டார். ''அடுத்து எங்கள் வீட்டில் நடக்கும் திருமணத்தை இன்னும் எளிமையாக நடத்த முயலுவேன்'' என்றார். அதன்படியே தன் திருமணத்தைச் செய்து கொண்டார்.

1950ஆம் ஆண்டு நாவலரின் திருமணம் சேலத்தில் நடைபெற்றது. சேலத்தைச் சேர்ந்த திரு. இராமலிங்கனார் அவர்களின் திருமகளார் டாக்டர் விசாலாட்சி அம்மையாரை நாவலர் மணந்தார்.

இந்தத் திருமணத்துக்கு, மூன்று திங்கட்கு முன்பே நாள் குறிப்பிடப்பட்டுவிட்டது. இடையிலே பல முறை மணமக்கள் ஒருவர்க்கொருவர் சந்தித்து உரையாடியதும் உண்டு. நாவலர் சேலம் வழியாகச் சுற்றுப் பயணம் செல்கிறார் என்றால், முன்கூட்டியே சேலத்துக்கு முடங்கல் தீட்டிவிடுவார். டாக்டர் அம்மையார் காரை எடுத்துக்கொண்டு புகைவண்டி நிலையத்துக்கு வந்து நாவலரை வீட்டுக்கு அழைத்துச் சென்று அளவளாவியபிறகு வழியனுப்பி வைப்பார். இருவரும் ஒருவர்க்கொருவர் மடல்களும் பரிமாறிக்கொள்வர். இதன் மூலம் ஒருவர் உள்ளத்தை மற்றவர் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

இவ்வளவிருந்தும் நாவலருக்குத் திருமணம் நடைபெறப்போகிறது என்ற அறிகுறிகூட வெளியே தெரியவில்லை. கழகத்தோழர்களிடம் தன் திருமணம்பற்றி நாவலர் குறிப்பாகக் கூடத் தெரிவிக்கவில்லை! நெருங்கிய நண்பர்களுக்குக்கூடத் தெரியாது. மணமகன் வீட்டாருக்கும் மணமகள் வீட்டாருக்கும்தான் தெரியும்.

அப்போது திராவிட முன்னேற்றக் கழக நாளிதழாக வெளிவந்து கொண்டிருந்த மாலைமணியின் பொறுப்பாசிரியராக நாவலர் பணியாற்றிக் கொண்டிருந்தார். திருமணத்தன்று மாலைமணி இதழில் நெடுஞ்செழியன் விசாலாட்சி தம்பதிகளின் புகைப்படம் அச்சிடப்பட்டிருந்தது. ''நானும் சேலம் டாக்டர் ஆர். விசாலாட்சியும் சேலத்தில் இன்று காலை பதிவுத் திருமணம் செய்துகொண்டோம்'' என்று அந்தப் புகைப் படத்தின் கீழே குறிப்பிடப்பட்டிருந்தது. அதைப் பார்த்த பின்னர்தான் அனைவருக்கும் நாவலரின் திருமணச் செய்தி தெரியும்!

'மாலைமணி' அலுவலகத்தில் நாவலருடன் பணியாற்றிக் கொண்டிருந்த நண்பர்கட்குக்கூடத் திருமணத்தன்றைக்கு முதல்நாள்தான் செய்தியே தெரியும். சேலத்துக்குப் புறப்படுமுன் புகைப்படத்தைத் துணையாசிரியர்களிடம் கொடுத்து ''இதை பிளாக் செய்து நாளை இதழில் இப்படி வெளியிடுங்கள்'' என்று கூறிவிட்டுச் சென்றார். அப்போதுதான் அலுவலகத் தொண்டர்கள் வியப்புடன் நாவலரிடம் அவர் திருமணத்தைப்பற்றி விவரம் கேட்டறிந்தனர். அழைப்பிதழே அச்சிடவில்லை.

'திருமணத்தை இப்படி யாருக்கும் சொல்லாமல் செய்துகொண்டு விட்டீர்களே' என்று அங்கலாய்த்துக் கொண்ட சென்னை நண்பர்கட்காக, திருமணம் முடிந்து சில நாட்கள் கழித்து 'மைசூர்கேப்' மாடியில் ஒரு வரவேற்புத் தேநீர் விருந்துக்கு ஏற்பாடு செய்து, அழைத்து மகிழ்வித்தார்.

சீர்திருத்த எண்ணங்களைச் செயல் படுத்துவதிலும், சுயமரியாதை இயக்கக் கொள்கையினைக் கடைப்பிடித் தொழுகுவதிலும் எந்த அளவுக்குப் பிடிவாதமாக நாவலர் இருந்து வந்திருக்கிறார் என்பதற்கு மேலே குறிப்பட்ட இரு திருமண நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுக்களாகும்.

நல்லியல்புகள்:

மிகவும் கண்டிப்பானவர் என்றாலும், தோற்றத்திலே மிடுக்காகக் காணப்பட்டாலும், மென்மையான உள்ளங்கொண்டவர் என்பது அவருடன் நெருங்கிப் பழகியவர்கட்குத் தெரியும். பழகுவதற்கு இனிமையானவர். கோபாவேசமெல்லாம் மேடையில்தான். நேரில் பேசும் போது கோபம் என்பதையே அவர் முகத்தில் காண முடியாது.

கழகத் தோழர்களிடம் கண்டிப்புக் காட்டுவதற்காகச் சில வேளைகளில் முகத்தில் கடுகடுப்பைத் தருவித்துக் கொள்வார் என்றாலும் அது உண்மையான கோபமாக நீடிக்காது. அடுத்த விநாடியே கடுமை குறைந்து இனிமை தவழும்.

தவறு செய்பவர்களை நேருக்கு நேர் கண்டிக்கத் தவறமாட்டார் என்றாலும், மன்னிக்கும் இயல்பு அவரிடம் அண்ணாவைப் போலவே நிரம்ப உண்டு. கண்டிக்க வேண்டியதை, கண்டிக்கவேண்டிய இடத்தில் கண்டிக்கத் தவறமாட்டார்; ஆனால் தண்டிக்க விரும்பார்; மன்னித்து விடுவார்; அத்தோடு அதனை மறந்தும் விடுவார். உரத்த குரலில் பேசினாலும் கடிந்துரைத்தலை அவரிடத்துக் கேட்க இயலாது.

ஒரு கூட்டத்துக்கு அவரிடம் ஒப்புதல் பெறுவது - தேதி வாங்குவது - எவ்வளவு கடினமானது என்பதைக் கழகத்தோழர்கள் நன்கு அறிவர். ஒப்புதல் அளித்துவிட்டார் என்றால் கூட்டத்திற்கு வரத் தவற மாட்டார். எவ்வளவு தவிர்க்க இயலாத தடங்கல் ஏற்பட்டாலும் அதனைத் தவிர்த்துக் கொண்டு முன்னதாகவே கூட்டத்திற்கு வந்துவிடுவார். அப்படி இயலவில்லையென்றால் உரியநேரத்தில் அதனை உரியவர்கட்குத் தெரிவித்து மாற்றுத் தேதியும் உடன் தந்துவிடுவார்.

தமக்கு வரும் கடிதம் எதுவானாலும் அதற்குப் பதில் எழுதத்தவற மாட்டார். அதுவும் தம் கைப்படவே எழுதுவார். அமைச்சர் என்ற முறையில் எழுதப்படும் கடிதங்கள் தவிர்த்து, தனிப்பட்ட முறையில் எழுதும் கடிதங்களையெல்லாம் தம் கைப்படவே இன்றும் எழுதி வருகிறார்.

நாவலரின் கையெழுத்து மணிமணியாகச் சரங்கோத்தது போல் அமைந்திருக்கும். அவர் ஏடும் எழுதுகோலும் எடுத்து வைத்துக்கொண்டு எழுதத் தொடங்கினாரென்றால், எதிரில் யார் வந்து நின்றாலும் கவனிக்கமாட்டார். குனிந்த தலை நிமிராமல், நிறுத்தி, அழகாக, அடித்தல் திருத்தல் இல்லாமல், எழுதுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருப்பார். நினைத்ததை எழுதி முடித்துவிட்டுத் தான் நிமிர்ந்து பார்ப்பார்.

எழுதிக்கொண்டிருக்கும் போதும் சரி, வேறு ஏதேனும் அலுவலைக் கவனித்துக் கொண்டிருந்தாலும் சரி, பசியைப்பற்றிச் சிறிதும் கருதமாட்டார். எடுத்த பணியை முடித்துவிட்டுத்தான் உணவைப்பற்றி எண்ணுவார். இடையில் யாரேனும் உணவை நினைவு படுத்தி அழைத்தாலும் எழமாட்டார். காப்பியோ, தேநீரோ கண்டிப்பாக அருந்தியே தீரவேண்டும் என்ற பழக்கத்திற்கு அடிமையாகாதவர். வெற்றிலை பாக்கு, புகைபிடித்தல் ஆகிய பழக்கங்களும் அவரை ஆட்கொள்ள முடியவில்லை.

பல மாவட்டங்களுக்கு உறவினர்:

நாவலர் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திருச்சியில் நடைபெற்ற இரண்டாவது மாநில மாநாட்டுக்குத் தலைமையேற்கிறார்; தலைவரை வழிமொழிந்து ஒவ்வொரு மாவட்டச் செயலாளராகப் பேசுகின்றனர்.

நமது பொதுச் செயலாளர் எங்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று அந்த மாவட்டச் செயலாளர் பெருமையுடன் குறிப்பிட்டார்.

நாவலர் தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவரேயானாலும் எங்கள் மாவட்டத்தில்தான் படித்துப் பட்டம் பெற்றார் என்று தென்னார்க்காடு மாவட்டச் செயலாளர் தமது மாவட்டத்துக்கும் பெருமையில் பங்கு சேர்த்தார்.

இதைக்கேட்டுக் கொண்டிருந்த சேலம் மாவட்டச் செயலாளர், நாவலர் தஞ்சையிலே பிறந்து நெல்லையிலே பயின்று பட்டம் பெற்றிருந்தாலும் எங்கள் மாவட்டத்தில்தான் பெண்ணெடுத்தார் என்று தமது மாவட்டத்துக்குரிய உரிமையை நிலைநாட்டிக் கொண்டார்.

மதுரை மாவட்டச் செயலாளர் மட்டும் விடுவாரா? அவர் பேச

வந்தார். நாவலர் நெடுஞ்செழியன் எங்கள் மாவட்டத்துக்கும் சொந்தக்காரர்தான். அவர் குடும்பத்திலிருந்து எங்கள் மாவட்டம் பெண்ணெடுத்திருக்கிறது என்றார். (சோழ வந்தான் ஆவுடையப்பன் நாவலரின் தமக்கை கணவர்.)

'எந்த மாவட்டம் என்ன சம்பந்தம் கொண்டாடினாலும் நாவலர் எங்கள் மாவட்டத்துக்குத்தான் உரியவர். அவர் இப்பொழுது இருப்பது எங்கள் மாவட்டத்தில்தான்' என்றார் சென்னை மாவட்டச் செயலாளர்.

இப்படி ஒவ்வொரு மாவட்டச் செயலாளரும் தங்கள் மாவட்டத்துக்கும் நாவலருக்கும் உள்ள உறவு முறைகளை எடுத்துக்கூறிப் பெருமைப் பட்டுக்கொண்டனர்.

இப்படி மாவட்டங்கள் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டு 'உறவு' பாராட்டிக் கொண்டது போலவே தஞ்சை மாவட்டத்திலே உள்ள பல ஊர்க்காரர்களும் தங்கள் தங்கள் ஊர்க்கும் நாவலருக்கும் உள்ள உறவை எடுத்துச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்வதுண்டு.

நற்றமிழுக்கொரு நாவலர்:

'நாவலர் நல்ல தமிழ்க் காவலர்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்லுவார்கள். தமிழில் பி. ஏ. ஆனர்சு (பின்னர் எம். ஏ.) பட்டம் பெற்ற நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், தமது பேச்சிலும் எழுத்திலும் நல்ல தமிழ் நடையைக் கையாள்வார். இலக்கணம் வழுவாது தூய தமிழில் எழுதுவதைப் 'பத்திய'மாகக் கொண்டவர் அவர். இப்பொழுது வழக்கிலே உள்ள பல தமிழ்ச் சொற்கள் நாவலரால் வழக்கிற்குக் கொண்டு வரப் பட்டவையாகும்.

திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக்களிலே இன்று கையாளப்படும் சொற்கள் நாவலரால் அறிமுகப்படுத்தப் பட்டவையேயாகும். திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்டபோது கிளைக் கழகங்கள் அமைப்பதற்கான பல விதிமுறைகளையும் நடைமுறைகளையும் மாலைமணி இதழின் வாயிலாக அவ்வப்போது அறிவித்துக் கொண்டிருப்பார். அந்த அறிவிப்புக்களில் பல புதிய தமிழ்ச் சொற்கள் அறிமுகமாகும். கழகத் தோழர்கள் அவற்றை உடனே வழக்கிற்குக் கொண்டுவந்து விடுவர்.

திராடர் கழகமாக இருந்தபோது நிர்வாகக் கமிட்டி என்றும் கமிட்டிக்கூட்டம் என்றும் பல பிறமொழிச் சொற்களைத்தான் கையாண்டு வந்தார்கள். நாவலர் அவற்றையெல்லாம் மாற்றினார். தலைமைச் செயற்குழு - ஆய்வுக்குழு - பொது உறுப்பினர் கூட்டம்-கிளைக்கழகம்-உட்கிளை-உட்குழு - சார்பு மன்றம்-பணிமனை-சிறப்புக் கூட்டம் - சிறப்பு நிகழ்ச்சி - கலை நிகழ்ச்சி - இப்படிப் பல சொற்களை அவர் கையாளச் செய்தார். அபேட்சகரை, வேட்பாளர் என்று மாற்றியவரே நாவலர் அவர்கள் தான்!

படித்தவர்கள் கூட்டத்தில்தான் இலக்கணம் வழுவாது பேசவேண்டும் என்று சிலர் கருதுவர்; ஆனால் நாவலரோ பாமர மக்கள் மிகுதியாகக் குழுமியிருக்கும் கூட்டமாக இருந்தாலும் தனித் தமிழில் இலக்கணம் வழுவாது பேசுவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தவர் நல்ல தமிழில் பேசக் கூடியவர்கள் என்று நாட்டுமக்கள் சொல்லும் படியான நிலை உருவானதற்கு நாவலரின் பணியும் பெருங் காரணமாகும்.

பாட்டுக்கொரு புலவர் பாரதி, விருத்தத்திற்கொரு கம்பன், வெண்பாவுக்கு ஒரு புகழேந்தி, அடுக்குச் சொல்லுக்கு ஓர் அண்ணா என்பது போல் நற்றமிழுக்கொரு நாவலர் கிடைத்திருக்கிறார்.

இதழாசிரியராக:

நாவலர் அவர்கள் இடையிடையே இதழாசிரியராகவும் அவ்வப்போது பணியாற்றியிருக்கிறார்.

1948ஆம் ஆண்டில் 'சுதந்தர நாடு' என்ற தமிழ் நாளிதழ் வெளிவந்தது. அந்த இதழின் துணையாசிரியராக நமது நாவலர் பணியாற்றினார். அப்போது, தாமே, 'மன்றம்' திங்கள் இதழைத் துவக்கி நடத்தினார். செம்புதாசு தெருவில் உள்ள 'கார்னர் எஸ்டேட்' என்னும் கட்டடத்தின் நான்காவது மாடியில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்திக்

கொண்டு நண்பர்களுடன் சேர்ந்து தங்கியிருந்தார். அந்த அறையே 'மன்றம்' இதழின் பணிமனையாகவும் திகழ்ந்தது!

அப்போது வெளியான மன்றம் மிகச் சிறப்பான முறையில் புத்தக வடிவில் இருந்தது; நாட்டில் அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்தது. எனினும் நாவலரால் அதனைத் தொடர்ந்து நடத்த இயலாமற் போயிற்று.

பின்னர் தி.மு.க. துவக்க நாளில் 'மாலைமணி' நாளிதழின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றினார்.

இடையிலே சிறிது காலம் காஞ்சியில் தங்கி அண்ணா அவர்களின் 'திராவிட நாடு' இதழிலும் துணையாசிரியராகப் பணியாற்றினார்.

பின்னர் மீண்டும் 1953ஆம் ஆண்டு 'மன்றம்' இதழைத் துவக்கி (திங்கள் இருமுறை) வெளியிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் 'நம் நாடு' நாளிதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

அண்மையில் அமைச்சரவையில் சேரும் வரை மன்றம் வார இதழின் ஆசிரியராக இருந்தார்.

மன்றம் இதழிலும் மற்ற இதழ்களிலும் நாவலர் எழுதிய இலக்கியக் கட்டுரைகள் என்றும் படித்துச் சுவைத்து மகிழத்தக்கவையாகும். அவற்றில் சில தொகுக்கப்பட்டு நூல் வடிவிலும் வெளிவந்துள்ளன.

கொடுமைகளை ஏற்றுக் கொள்கை பரப்பினார்:

கழகக் கொள்கை பரப்பும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் பொதுவாக ஏற்க நேரும் தொல்லைகள், இடையூறுகள் அனைத்தையும் நாவலரும் ஏற்றிருக்கிறார். மாற்றுக் கட்சியினரின் கல்லடியையும் சொல்லடியையும் நிறையத் தாங்கிக் கொண்டிருக்கிறார்.

சேலத்தில் ஒரு முறை பெரியாருடன் காரில் அமர்ந்து ஊர்வலமாக வந்துகொண்டிருந்தபோது, மாற்றுக் கட்சியினர் சோடா புட்டிகளை வீசி ஊர்வலத்தைக் கலைக்க முயன்றனர். பெரியார் - நாவலர் அமர்ந்து வந்த ஊர்தியை நோக்கி ஒரு சோடா புட்டி வந்து விழுந்தது. குறிவைத்து வீசப்பட்ட அது, குறி தவறியதால் பெரியாரும் நாவலரும் உயிர் தப்பினர்.

அதேபோல நாவலர் அவர்கள் தேனியில் கலந்து கொண்ட கூட்டத்தில் பெருங்கலவரம் விளைவித்து, நாவலரின் தலையில் ஒரு பெரிய பாறுங்கல்லை ஒருவன் தூக்கிப்போட முற்பட்டபோது அதைக் கவனித்த கழகத் தோழர் ஒருவர் தக்க நேரத்தில் அந்தப் படுபாதகனின் குறியிலிருந்து நாவலரைத் தப்பவைத்தார். இல்லையேல் அன்றே நாவலரின் தலை சுக்குநூறாகிப்போயிருக்கும்!

சிறைக்கொடுமைகளையும் நாவலர் பல முறை அனுபவித்திருக்கிறார். கழகம் நடத்திய ஒவ்வொரு போராட்டத்திலும் நாவலர் பங்குகொண்டு தண்டனையேற்றிருக்கிறார்.

கல்வி சிறக்க...:

நந்தமிழ் நாட்டின் கல்வியமைச்சராக நாவலர் அவர்கள் பொறுப்பேற்றிருப்பது சாலப் பொருத்தமுடையதாகும். கல்வியின் தரம் கூடவும், தமிழ் மொழியினைப் பேணவும் வேணவாக் கொண்டவரான அவர், தக்கநேரத்தில் பயன்தரத் தக்க சீர்திருத்தங்களைக் கல்வித் துறையில் செய்திடுவார் என்பது உறுதி.

மாணவர்களின் அறிவுத்திறனை மதிப்பிட ஒரு புதிய முறையினை சென்ற ஆண்டு வகுத்தளித்தார் நாவலர். வெறும் பாடத் தேர்வினால் மட்டும் ஒரு மாணவனின் முழுத் திறனையும் அறிய இயலாது; அவனுடைய நடத்தை, கையெழுத்து, விளையாட்டுக்களில் அவன் கொண்டிருக்கும் ஆர்வம் முதலியனவற்றையும் மதிப்பிட்டு அவற்றிற்கெனக் குறிப்பிட்ட அளவு மதிப்பெண்களை ஒதுக்கவேண்டும் என்பதே அவர் அறிமுகப் படுத்திய முறை. இதனைக் கோவை மாவட்டத்தில் ஒரு பள்ளியில் செயற்படுத்தி நற்பயனையும் கண்டுள்ளனர்.

இந்த முறையை எல்லாப் பள்ளிகளும் கடைப்பிடித்தால் நற்பயன் விளையும் என்பதும் சென்ற ஆண்டி

லேயே அறியப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட புதிய சீர்திருத்தங்களை நாவலர் செயற்படுத்துவார் என்பதில் ஐயமில்லை.

நாடெங்கும் சுற்றிச் சுழன்று அறிவியக்கக் கொள்கைகளைப் பரப்பி, 'நடமாடும் பல்கலைக் கழகம்' என்று அறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டப்பெற்ற நாவலர், தமிழ்நாட்டையே ஒரு பல்கலைக் கழகமாக்க ஆர்வம் கொண்டவர் ஆவார்!

நாவலரை அமைச்சராகக் கொண்டதால் தமிழகத்தின் கல்வித் துறை நனிசிறக்கும் - நாட்டிற்கு பல நன்மைகள் பிறக்கும் என்று உறுதியாக நம்பலாம்.

வள்ளியம்மாள், நாகப்பன், நாராயணசாமி இவர்களைப்பற்றிக் காந்தியடிகள்

எல்லாவற்றிலும் அதிக முக்கியமானது, வள்ளியம்மாள் பிறந்த இடம் ஜொஹனஸ்பர்க். நான் இங்கே பேசும்போது அந்த இளம் பெண்ணின் உருவம் என் கண்முன்னால் இருக்கிறது. சத்திய இலட்சியத்திற்காக வள்ளியம்மாள் உயிரைத் தியாகம் செய்தாள். இலட்சியத்தில் குருட்டு நம்பிக்கை கொண்டவள். எனக்குத் தெரிந்துள்ள அளவுக்கு அவளுக்குச் செய்திகள் தெரியா. சாத்துவிக எதிர்ப்பு என்ன என்பதை அவள் அறியாள். இதனால் தன் சமூகம் என்ன நன்மையை அடையும் என்பதும் வள்ளியம்மாளுக்குத் தெரியாது. தன் நாட்டு மக்களின் எல்லையற்ற உற்சாகத்தினால் பரவசம் அடைந்தாள்; சிறை புகுந்தாள். நோயுற்று உடல்நிலை பாழாகி வெளியே வந்தாள்; சில தினங்களில் மாண்டாள். இதே போலவே, இளம்வயதிலேயே உயிர்த்தியாகம் செய்துவிட்ட அழகான இளைஞர்களான நாகப்பனையும், நாராயணசாமியையும் பெற்ற இடம் ஜொஹன்ஸ்பர்க்குதான். இவர்களெல்லாம் மறைந்துபோயும் நானும் என் மனைவியும் உங்கள் முன்னால் உயிருடன் நிற்கிறோம். நானும் என் மனைவியும், எல்லோரும் அறிய முன்னாலிருந்து வேலை செய்தோம். ஆனால் அவர்களோ மறைவாயிருந்தே பணியாற்றினர். தாங்கள் செய்வது நியாயமானது; சரியானது என்பது ஒன்றைத் தவிர. தாங்கள் செல்வது எதை நோக்கி என்பதையும் அவர்கள் அறியார்கள். ஆகையால், புகழுக்கும் பாராட்டுதலுக்கும் உரியவர்கள் யாராவது உண்டென்றால், போராட்டத்தில் உயிர் நீத்த அந்த மூவருமே அதற்குரியவராவர்.

[ஜொஹன்ஸ்பர்க் வழியனுப்புக் கூட்டத்தில் காந்தியடிகள் பேசியது]
(பக்கம் 491)
மகாத்மா காந்தி நூல்கள்
(முதல் தொகுப்பு)

அள்ளிக் கொடுப்பீர்!

உலக உத்தமர் காந்தியார் நூற்றாண்டு விழா - தில்லையாடி வள்ளியம்மை நகரமைப்பு

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி, B.A.,B.T., அவர்களின் வேண்டுகோள் :

அடிமைகளாக்கப்பட்டிருந்த இந்திய மக்களை ஒன்றுதிரட்டி உரிமை வேட்கையூட்டி விடுதலைக்குப்போராடச் செய்து வெற்றி கண்ட உத்தமர் காந்தியடிகளுக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் ஆண்டு இவ்வாண்டு. ஊராட்சிகள், ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகிய பல்வேறு நிறுவனங்கள் அப் பெருமகனின் நினைவாகப் பெருமை தரத்தக்க திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றவுள்ளன. தாம் பிறந்த பொன்னாட்டினரின் இழிவைத் துடைக்கத் தென்னாப்பிரிக்காவில் காந்தியடிகள் மேற்கொண்ட அறப்போரில் 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை'யாக வெஞ்சிறையை ஏற்று உயிரிழந்த உத்தமத் தியாகிகளான வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி, பச்சியப்பன் ஆகியோரின் தியாகத்துக்கு வணக்கம் செலுத்தும் முறையில் தஞ்சையில் உள்ள தில்லையாடியில் மேற்கொள்ளப்பட விருக்கும் பணிகளே அடிகளின் நினைவாகச் செய்யப்படுவனவற்றுள் சிறந்தவையாகும் - தலைமையிடம் பெறுபவையாகும். அவ்வீரப் பெருமக்களைப் பெருமைப் படுத்துவது காந்தியடிகளையே பெருமைப்படுத்துவதாகும்.

தமிழ்ப் பெண்மணிகள் உச்சிமேல் வைத்துப் பாராட்டத்தக்க பண்பு வாய்ந்த வள்ளியம்மை 14ஆவது வயதிலேயே, தென்னாப்பிரிக்காவில் நடந்த இந்தியர்கட்கான அறப்போரில் சிறைசென்று நோய்வாய்ப்பட்டு 22-2-1914இல் மாண்டு அழியாப் புகழ்பெற்று அமரத்துவம் அடைந்தார். பிறர் வாழத் தன்னுயிர் ஈந்த அப் பெண் குலத்தின் பொன் விளக்கான வள்ளியம்மையின் நினைவாகத் தென்னாப்பிரிக்க இந்தியர்கள் மண்டபம் ஒன்றை எழுப்ப முயன்றனர். என்ன காரணத்தாலோ அஃது ஈடேறாது போயிற்று. ஆயினும் 'நல்லவர் உள்ளந்தோறும் அழித்திட முடியா அழகு மாளிகையாக உருப்பெற்றுவிட்டாள் அவ்வுத்தமத் தமிழ்ப் பெண். "மண்டபம் கல்லினாலும் காரையினாலும் கட்டினால்தான் என்ன? கட்டாவிட்டால்தான் என்ன? வள்ளியம்மையின் தொண்டு அழியாதது. தன் கரங்களினாலேயே சேவை என்னும் கோயிலை அவள் எழுப்பினாள். அவளுடைய மாண்பார் உருவம் பலர் இதயங்களில் நிரந்தரமாகப் பதிந்து இருக்கிறது. இந்தியா உள்ள வரையில் தென்னாப்பிரிக்க அறப்போர் வரலாற்றில் வள்ளியம்மையின் பெயரும் நீங்கா இடம் பெற்றிருக்கும்" என்று காந்தியடிகளே மனமுருகப் புகழ்ந்துரைத்தார்கள். நாகப்பன், நாராயணசாமி ஆகிய நல்லிளைஞர்களும் இவ்வாறே சிறைப்பட்டுத் "தேசத்திற்காக நண்பர்களைத் தழுவுவதுபோல் சாவைத் தழுவினர்." தென்னாப்பிரிக்க அறப்போர் வெற்றியடைய இவர்கள் செய்த தியாகமே முதற் காரணம் எனக் காந்தியடிகள் கூட்டங்களில் பேசியும் ஏடுகளில் எழுதியுமுள்ளார்கள். தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியதும் முதல் வேலையாக அண்ணல் காந்தி உயிரிழந்த அவ்வொப்புரவாளர்கட்கு வணக்கம் தெரிவிக்கும் முறையில் தில்லையாடிக்கு வருகை தந்தார்.

இந் நல்லோர்களின் நினைவாக ரூ 7½ இலட்சம் மதிப்பீட்டில் வேலைகள் தொடர இருக்கின்றன. மூன்று சாலைகட்குச் சரளையிடுதல், ஒரு பாலத்தை அகலப்படுத்துதல், தில்லை

யாடியில் தாய்சேய் நலவிடுதிக் கட்டடம் ஒன்று அமைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்பட இருக்கும் திட்டங்கள். வள்ளியம்மை நகர், நாகப்பன் நகர் என்ற பெயர்களில் 158 வீடுகளைக்கொண்ட இரண்டு அரிசனக் குடியிருப்புகள் ஏற்படவுள்ளன. தற்போதுள்ள அரிசன மாணவர் இல்லத்திற்கு இரண்டு கட்டடங்கள் கட்டப்படவேண்டும். தென்னாப்பிரிக்காவில் எடுக்கப்படாது நின்று போன மண்டபத்தை நன்றி மறவாத் தன்மையாக நாம் எழுப்பியாக வேண்டும். நினைப்போர் கண்களைப் பெருமிதத்தால், நீரால் நனைக்கும் முறையில் உயிர் நீத்த அறச்செல்வியின் பெயரால் அறிவாலயமாகப் பள்ளியொன்று திறக்கப்படவேண்டியது அவசியமாகும். மற்றத் தியாகிகட்கும் சிலைகள் நிறுவி அவர்கள் நம் சிந்தனையில் நீங்காது நிலவி வருவதை உணர்த்தவேண்டும். இக்காரியங்கட்காகத் தமிழ்நாடு அரசு ரூ. 5 இலட்சம் செலவிட உள்ளது.

அரசு பெருநிதி செலவிட்டு இவற்றைச் செய்து முடிக்க முடியுமாயினும் மக்கள் நலனுக்காக மறைந்த அம் மாமணிகளின் நினைவுக்கு மக்கள் காணிக்கை செய்தலே முறையாகும், பெருமையுமாகும்; நன்றி மறவாத் தன்மையுமாகும்.

எனவே தமிழ் நாட்டுப் பெருங்குடி மக்களே! அறப்போர் வீரர்களுக்கு எடுக்கப்படும் அழியாச் சின்னங்கட்கு அள்ளி அள்ளிக் கொடுப்பீராக என அன்புடன் வேண்டுகிறேன். அடிகள் பிறந்த நாளான 2-10-1969 அன்றோ, அல்லது அந்நாளை ஒட்டியோ இத் திட்டங்கட்கான துவக்க விழா தில்லையாடியில் நடைபெறவுள்ளது. நிதியளிப்போர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகிறேன்.

''தில்லையாடி வள்ளியம்மை
நகரமைப்பு நிதிக்காக''

'மாண்புமிகு முதலமைச்சர்
தமிழ்நாடு
சென்னை-9.'

ஆனைமலையில் அளவிடற்கரிய அறுவைச் சிகிச்சைகள்

இவ்வாண்டு சூன் திங்கள் முடிய 3316 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து, இரண்டாம் முறையாகச் சுழற்கேடயம் பெறவிருக்கிறது, கோவை மாவட்ட ஆனைமலை ஒன்றியம்.

1967ஆம் ஆண்டில் 974 அறுவைச் சிகிச்சைகளை மேற்கொண்டு முதலிடம் பெற்றதற்கென ஆனைமலை ஒன்றியத்திற்குச் சுழற்கேடயம் அளிக்கப்பட்டது. சென்ற ஆண்டிலும் 351 அறுவைச் சிகிச்சைகளைச் செய்து, ஆனைமலை ஒன்றியமே முதலிடம் பெற்றதால், அவ்வாண்டிற்கான சுழற்கேடயத்தையும் ஆனைமலையே பெறவிருக்கிறது.

ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்திற்குச் 'சீரணி'யின் உளங்கனிந்த பாராட்டுக்கள்!

தேவை

தச்சு, கருமார் வேலையில் பயிற்சி

இடம் : கிராம நலப் பயிற்சி நிலையங்களின் தொழில் பிரிவுகள், கே. கல்லுப்பட்டி, பவானி சாகர், பட்டுக்கோட்டை, சத்தியவிஜய நகரம், கிருஷ்ணகிரி.

பயிற்சியின் காலம் : ஓர் ஆண்டு

தேவைகள் : (அ) தமிழ் பேச, படிக்க, எழுதத் தெரிய வேண்டும். (ஆ) தச்சு அல்லது கருமார் வேலையில் குறைந்த அளவு மூன்று ஆண்டுகள் அனுபவம் இருக்கவேண்டும்.

உதவித்தொகை : மாதம் ரூ. 45 (ரூபாய் நாற்பத்தைந்து)

விண்ணப்பித்தல் :
விண்ணப்பதாரரின் பெயர்
தகப்பனார் பெயர்
முகவரி
பிறந்த தேதி
படிப்புத் தகுதி
தச்சு அல்லது கருமார் வேலையில் உள்ள அநுபவம் குறித்துக் 'கிராம வளர்ச்சி இயக்குநர், குறளகம், சென்னை-1' என்ற முகவரிக்கு, செப்டம்பர் 20ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

பயிற்சி முடிந்ததும் பயிற்சியாளர்கள் தங்களுடைய கிராமத்தில் தொழிற்பட்டறை அமைத்துக்கொள்ளவேண்டும். இதற்கு வேண்டிய உதவிகள் செய்யப்படும்.

ஜா. சா. பொன்னையா
இணை இயக்குநர்
கிராம வளர்ச்சி இயக்குநருக்காக
சென்னை-1

நிலாவில் உலா

1969ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 21ஆம் நாள் திங்கட்கிழமை காலை மணி 8-27; மனிதகுல வரலாற்றிலேயே மாபெரும் சாதனையை அன்று மனிதன் சாதித்துவிட்டான். மனிதகுலம் தோன்றியதிலிருந்து கவிஞருக்கு உவமைப் பொருளாய், காதலர்க்கு உணர்ச்சிப் பொருளாய், குழந்தைகளுக்குக் காட்சிப் பொருளாய், விஞ்ஞானிகளுக்கு விந்தைப் பொருளாய் திகழ்ந்த சந்திரனை அவன் மேல்நோக்கித்தான் பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அன்று, வரலாறு மறக்கமுடியாத அன்று, அதைத் தன் காலடியில் ஆட்கொண்டான்.

இந்த வியப்பூட்டும் அரிய சாதனையின் முயற்சி ஏறத்தாழ 11 ஆண்டுகட்குமுன் சோவியத் ஒன்றியம் 'ஸ்புட்னிக்கை' உலகைச் சுற்றிப் பறக்கவிட்டதிலிருந்து தொடங்கியது. அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி அப்போது சோவியத் ஒன்றியத்தைவிடப் பின்தங்கியிருந்த போதிலும் பிறகு அது வெகுவாக முன்னேறிவிட்டது. 1961ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் அப்போதைய குடியரசுத் தலைவராக இருந்த ஜான் எப் கென்னடி அமெரிக்கக் காங்கிரசுக்கு விடுத்த அறிக்கையில் ''1970க்குள் மனிதன் சந்திர மண்டலத்தில் சென்று இறங்குவதை நமது இலட்சியமாகக் கொண்டு உழைப்போம்'' என்று கூறினார். அவருடைய கனவு இப்போது நனவாகியுள்ளது மனித குலத்தின் இடைவிடா முயற்சியால். ஆனால் அந்தோ! அமெரிக்கக் குடிமகன் சந்திரனில் முதல் அடி எடுத்து வைப்பதைப் பார்ப்பதற்கு இன்று அவர் உயிரோடு இல்லை.

சந்திர மண்டல முதற் பயணம் சென்ற 1968ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21ஆம் நாள் தொடங்கியது. அப்போலா 8 என அழைக்கப்பட்ட அப்பயணம் பலவகையில் முதன்மை பெற்றது. அப்பயணம் தான் மனிதனை முதன் முதலாகப் பூமியின் ஈர்ப்புச் சக்தியிலிருந்து (Gravitational Force) விடுவித்து மற்றொரு வான மண்டல உறுப்பின் அருகில் கொண்டு சென்றது. அந்தப் பயணத்தில்தான் எப்போதும் உலகத்திற்குத் தெரியாத சந்திரனின் மற்றொரு பகுதியை மனிதன் பார்த்தான். அந்தப் பயணத்தில்தான் மனிதன் எப்போதும் செல்லாத தூரத்தை - போகவர ஏறத்தாழ 5,00,000 மைல்கள் - சென்று வந்தான்; எப்போதும் செல்லாத வேகத்தில் - மணிக்கு சுமார் 25,000 மைல்கள் - சென்றான். அப்போலா 8 சந்திரனிலிருந்து ஏறத்தாழ 70 மைல் தொலைவில் மணிக்கு 3700 மைல் வேகத்தில் 10 சுற்றுகள் சுற்றிவிட்டுப் பூமிக்குத் திரும்பியது.

1969 மே திங்கள் 18ஆம் நாள் தொடங்கிய இரண்டாவது சந்திர மண்டலப் பயணமான அப்போலா 10இல் தாய்க்கலம் (Command module) சந்திரனை அதிலிருந்து சுமார் 69 மைல்கள் தொலைவில் சுற்றி வரும்போது இரண்டு விண்வெளி வீரர்கள் மட்டும் பிரிந்து 'லெம்' (LEM) என்றழைக்கப்பட்ட சிலந்தி போன்ற கருவியில் சந்திரனுக்கு 50,000 அடிவரை (சுமார் 9 மைல்கள்) சென்று, சந்திரனில் இறங்கவேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பிறகு மறுபடியும் தாய்க்கலத்தில் சேர்ந்து பூமிக்குத் திரும்பினார்கள்.

மூன்றாவது சந்திர மண்டலப் பயணமான அப்போலா 11இன் குறிக்கோள்கள்: மனிதனைச் சந்திரனில் இறக்குவது; சந்திரனில் சில முக்கியமான கருவிகளைப் பொருத்துவது; சந்திரனிலிருந்து மண்ணையும் கற்களையும் பூமிக்குக் கொண்டு வருவது. அப்போலா 11இன் பயணம் 1969 ஜூலை 16ஆம் நாள் புதன்கிழமை இந்திய நேரப்படி இரவு 7-02 மணிக்குத் தொடங்கியது. அதில் நீல் ஆர்ம்ஸ்டிராங், எட்வின் ஆல்டிரின், மைக்கேல் காலின்ஸ் என்ற மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள் பயணமானார்கள். உலகத்தின் பல பாகங்களில் உள்ள மக்கள் சுமார் 53 கோடி பேர்கள் அப் பயணத்தை 'டெலிவிஷன்' மூலம் கண்டு களித்தனர். விண்கலத்தைப் பூமியின் ஈர்ப்புச் சக்தியிலிருந்து வெளித்தள்ளுவதற்குச் சாட்டர்ன் 5 என்ற மிகச்சக்தி வாய்ந்த ஏவுகணை (Rocket) பயன்படுத்தப்பட்டது.

ஆர். சிவசேகரன்

ஏவுகணையில் மூன்று கட்டங்கள் இருந்தன. முதல் கட்டம் எரிந்து விண்கலத்தை மணிக்கு 6000 மைல் வேகத்தில் பூமியிலிருந்து சுமார் 38 மைல் உயரத்திற்குச் செலுத்தியது. பிறகு இரண்டாம் கட்டம் எரிந்து வேகத்தை மணிக்கு 14000 மைல்களாக அதிகரிக்கச் செய்து கலத்தை 118 மைல் உயரத்திற்குக் கொணர்ந்தது. இவையனைத்தும் ஏவுகணை இயக்கப்பட்ட 9 நிமிடங்களில் முடிவுற்றன. அதற்குப் பிறகு மூன்றாவது கட்டம் எரிந்து விண்கலத்தைப் பூமியைச் சுற்றி வட்டப்பாதையில் அமைத்தது. மூன்றாவது கட்டம் மட்டும் விண்கலத்துடன் உலகைச் சுற்றி வருமாறு அமைக்கப்பட்டிருந்தது. இரண்டரை மணியில் பூமியை ஒன்றரைமுறை சுற்றியதும் ஏவுகணையின் மூன்றாவது கட்டத்தை இரண்டாவது முறையாக இயக்கியபோது ஏவுகணையும் விண்கலமும் பூமியைச் சுற்றிவரும் வட்டப்பாதையிலிருந்து பிரிந்து, புவிஈர்ப்புச் சக்தியிலிருந்து விலகிச் சந்திர மண்டலத்தை நோக்கிப் பயணமாகியது. இத் தருணத்தில் மிக முக்கியமான ஓர் இயக்கத்தை விண்வெளி வீரர்கள் செய்தார்கள். சந்திரனில் இறங்கவேண்டிய பாகமான 'லெம்' ஏவுகணையின் மூன்றாவது கட்டத்திற்குள் இருந்தது. வேகமாகச் செல்லும் போதே விண்கலத்தை மட்டும் தனியாகக் கழற்றி 15 கஜ தொலைவு பின்னோக்கிச் செலுத்தி 180°க்கு அரை வட்டமாகத் திருப்பி விண்கலத்தின் கூரிய முனையை ஏவுகணையின் முனையோடு பதியும்படிச் செய்தார்கள். பிறகு ஏவுகணையில் இருந்த ''லெம்''மோடு விண்கலத்தை நன்கு பொருத்திக்கொண்டு ஏவுகணையை விடுவித்துக் கொண்டனர். அதன் பின்னர் விண்கலத்தோடு 'லெம்' மட்டும் இணைக்கப்பட்டு இரண்டும் சந்திரனை நோக்கிப் பயணமாயின. ஏவுகணை தனியாகக் கழன்று வீழ்ந்துவிட்டது. இச் செய்கை கப்பலோடு இணைப்புத் திட்டம் (docking manoeuvre) என்று அழைக்கபபட்டது. இது நடைபெற்றபோது மணி இரவு 10-17.

அடுத்த இரண்டு நாட்கள் விண்கலம் சந்திரனை நோக்கிய பயணத்தைச் செய்து கொண்டிருந்தது. பூமியின் ஈர்ப்புச் சக்தி குறையக்குறைய வேகமும் குறைந்துகொண்டே வந்தது. நான்காவதுநாள் அவர்கள் மொத்தத் தூரத்தில் ஆறில் ஐந்து பங்கைக் கடந்தவுடன் சந்திரனின் ஈர்ப்புச் சக்தியால் விண்கலத்தின் வேகம் மறுபடியும் அதிகரித்தது. சந்திரனிலிருந்து சுமார் 5600 மைல்கள் இருக்கும்போது பணிக்கல (Service module)னிலுள்ள ஒருவிசையின் உதவியால் சந்திரனின் ஈர்ப்புச் சக்தியால் விண்கலத்தின் வேகம் அதிகரிப்பது கட்டுப்படுத்தப்பட்டு, விண்கலம் சந்திரனைச் சுற்றி வரும்படி (Lunar orbit) செய்யப்பட்டது.

ஞாயிறு மாலை 6-55க்கு முதலில் ஆல்ட்ரின் இணைந்து பறந்து கொண்டிருந்த தாய்க்கப்பலிலிருந்து நிலவு ஊர்திக்கு ஒரு குழாய் வழியாக ஊர்ந்து சென்றார். பின்னர் ஆர்ம்ஸ்டிராங்கும் சென்று அவருடன் சேர்ந்து கொண்டார் அவர்களுடைய தோழரான காலின்ஸ் தாய்க்கப்பலிலேயே தங்கிவிட்டார் நிலவுக் கப்பலில் இருந்த கருவிகளையெல்லாம் சரி பார்த்துக்கொண்டு, இரவு 11-17க்கு நிலவு ஊர்தியை மட்டும் தனியாகப் பிரித்து நிலவை நோக்கி இறக்கத் தொடங்கினர். உலக மக்கள் ஆவலுடனும் பரபரப்புடனும் காத்திருந்தனர். திங்கட்கிழமை விடியற்காலை 1-35 மணிக்கு நிலவு ஊர்தியின் கீழ் நோக்கிச் செல்லும் வேகம் குறைக்கப்பட்டு, நிலவு ஊர்தி சந்திரனில் மெதுவாக இறக்

கப்பட்டது. அப்போது மணி 1-47. ''பருந்து''(நிலவு ஊர்தியின் பெயர்) இறங்கிவிட்டது என்றுஆர்ம்ஸ்டிராங் அறிவித்தார்.

சந்திரனில் ஊர்தி இறங்கியவுடன் அவர்கள் ஊர்தியை விட்டு உடனே இறங்க அனுமதிக்கப் படவில்லை. ஆயினும் குறித்த நேரமான திங்கட்கிழமை காலை 11-47க்குச் சற்று முன்னதாகவே அவர்கள் இறங்க அனுமதிக்கப்பட்டனர். நீல் ஆர்ம்ஸ்டிராங் முதலில் நிலவு ஊர்தியிலிருந்த ஏணி வழியாகக் கீழிறங்கி நிலாத் தரையில் அடி எடுத்து வைத்தார். அப்போது மணி காலை 8-27. ''நான் எடுத்துவைப்பது ஒரு சிறிய அடியாக இருந்தாலும், மனிதகுல வரலாற்றின் அடிச் சுவட்டில் மாபெரும் முன்னேற்றமாக அமைந்து விடுகிறது'' என்று அவர் கூறினார். அவரை அடுத்து ஆல்டிரின் இறங்கினார். பூமியிலிருந்து கோடானகோடி மக்கள் டெலிவிஷனில் இக்காட்சியைக் கண்டு களித்தனர்.

இருவரும் வெகு கவனத்துடன் அடிமேல் அடியெடுத்து வைத்தனர். அவர்கள் பூமியில் நடப்பதைப் போன்று வேகமாக நடந்தால் (சந்திரனின் ஈர்ப்புச் சக்தி பூமியின் ஈர்ப்புச் சக்தியில் ஆறில் ஒரு பங்கே இருப்பதால்) அவர்கள் வெகுதூரம் தூக்கிச் செல்லப் படுவார்கள். அவர்கள் நிலாத் தரையில் கல், மண் மாதிரிகளைச் சேகரித்தார்கள். கற்கள் சன்ன மணலுடன் கூடியதாக இருந்ததாகவும் தரை வழுக்குவதாகவும் தெரிவித்தார்கள். சந்திரனின் அதிர்ச்சியை அளப்பதற்கு ஒரு கருவியையும் சந்திரனின் தூரத்தை அங்குலம் பிசகாமல் கணக்கிடுவதற்குப் பயன்படும் 'லாஸர்கிரண' ஆடி ஒன்றையும் பொருத்தினர். மொத்தம் 2 மணி 40 நிமிடகாலம் விண்வெளி வீரர்கள் நிலாத்தரையில் இருந்து கொண்டு அவர்களுக்கு இட்ட பணியைச் செய்து முடித்து நிலவு ஊர்திக்குத் திரும்பினர். இரவு 11-24க்கு அதாவது நிலவில் இறங்கி 21 மணி 37 நிமிடங்களுக்குப் பின், நிலவு ஊர்தியில் கிளம்பினர். 69 மைல் உயரத்தில் தாய்க் கப்பலில் நிலாவை வட்டமிட்டுக் கொண்டிருந்த காலின்ஸை $3\frac{1}{2}$ மணி நேரத்திற்குப்பின் பிடித்தனர். செவ்வாய் காலை 3-02க்கு இருகப்பல்களும் நன்கு பிணைக்கப்பட்டு விண்வெளி வீரர்கள் மூவரும் மறுபடியும் ஒன்று சேர்ந்தனர். சேர்ந்தவுடன் நிலா ஊர்தி மட்டும் தனியாகப் பிரித்து விடப்பட்டது.

காலை 10-25க்கு, தாய்க் கப்பலிலிருந்த விசையை இயக்கி, வேகத்தை மணிக்கு 5460 மைல்களாக அதிகரித்துச் சந்திரனின் ஈர்ப்புச் சக்தியிலிருந்து விடுபட்டு இரண்டேகால் இலட்சம் மைல் தொலைவிலுள்ள பூமியை நோக்கிப் பயணமானார்கள். பூமியை நெருங்க நெருங்க புவிஈர்ப்புச்சக்தியினால் விண்கலத்தின் வேகம் அதிகரித்துக் கொண்டே வந்தது. பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தை நெருங்குவதற்குச் சற்று முன்பு, விண்கலத்தில் அதன் பிறகு தேவையற்றதாகக் கருதப்பட்ட பணிக்கலத்தைப் பிரித்து விட்டார்கள். அவர்கள் அமர்ந்திருந்த பகுதி மட்டும் மணிக்கு 25,000 மைல் வேகத்தில், பூமியைச்சுற்றி 70 மைல் உயரம் வரை பரவியுள்ள வாயு மண்டலத்தில் வரும்போது சுமார் 5000° பாரன் ஹைட் வெப்பத்தினால் கலம் பழுக்கக் காய்ச்சியது போல் ஆனாலும் உள்ளே அவர்கள் இருந்த அறை குளு குளுவென 80° வெப்பத்திலேயே வைக்கப்பட்டிருந்தது. பூமியிலிருந்து 24,000 அடி உயரத்தில் இருக்கும்போது, இரண்டு பாரகூட்டுகள் விரிந்து கொடுத்துக் கலத்தின் வேகத்தைக் குறைத்தன. 10,000 அடி உயரத்தில், மேலும் மூன்று பாரகூட்டுகள் விரிந்து கொடுக்க, கலத்தின் வேகம் மேலும் மேலும் குறைந்து அதிக அதிர்ச்சியின்றி பசிபிக் பெருங்கடலில், 'ஹவாய்த்' தீவின் அருகே குறிப்பிட்டிருந்த இடத்திற்கு ஒரு மைலுக்குள்ளாக இந்திய நேரப்படி வியாழன் இரவு 10-20 மணிக்கு, அதாவது விண்கலம் பூமியிலிருந்து செலுத்தப்பட்டு 195மணி, 18 நிமிடங்கள், 21 விநாடிகள் கழித்து, பத்திரமாக இறங்கியது. மொத்தம் 3100டன் எடையுள்ள ஏவுகணை அனுப்பப்பட்டதில் 6டன் எடையுள்ள கலமே பூமிக்குத் திரும்பிவந்தது. குடியரசுத் தலைவர் நிக்ஸன் அவர்கள் வரவேற்க, விண்

வெளி வீரர்கள் வெற்றி வீரர்களாகப் பூமிக்குத் திரும்பினர்.

வெகு நாட்களாகக் கனவு கண்டிருந்த சந்திரப் பயணம் முடிந்துவிட்டது. இனி என்ன? இதனால் என்ன பயன்? என்று கேட்கலாம். தேவை அறிவை வளர்க்கிறது. சந்திரனில் அடி எடுத்துவைக்க வேண்டும் என்ற எண்ணமே ஆராய்ச்சிக்கு அடிநிலையாக அமைந்து மனிதனை மேன்மேலும் ஊக்குவித்தது. விண்வெளிக் கலத்திலும் ஏவுகணையிலுமுள்ள முப்பது இலட்சத்திற்கும் மேற்பட்ட பாகங்கள் 100க்கு99·999 சதவீதம் சரியானபடி இயங்கவேண்டும். அமெரிக்க நாட்டிலுள்ள பெரிதும் சிறிதுமான சுமார் இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட நிறுவனங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், சர்வகலாசாலைகள் ஒரே குறிக்கோளைக் கொண்டு உழைத்தன. இதனால் ஆராய்ச்சித்திறனும் கல்வியின் தரமும் பல மடங்கு உயர்ந்தது.

சந்திரனுக்கும் பூமிக்கும் உள்ள



நிலவுப் பயணத்தைக்காட்டும் விளக்கப்படம்

[பூமியைச் சுற்றுவதைக்காட்ட வெவ்வேறு இடங்களில் நிலா குறிக்கப்பட்டிருப்பதைக் காண்க.]

1. ஏவுகணை கிளம்புகிறது.
2. ஏவுகணை பூமியைச்சுற்றி வட்டப் பாதையில் அமைக்கப்படுகிறது.
3. ஏவுகணை நிலாவை நோக்கிக் கிளம்புகிறது.
4. ஏவுகணையின் மூன்றாவது கட்டம் இயக்கப்படுகிறது.
5. 'லெம்' கப்பலோடு இணைக்கப் படுகிறது.
6&7. விண்கலம் நிலாவைச் சுற்றி வட்டப்பாதையில் அமைக்கப் படுகிறது.
8. தாய்க் கப்பலிலிருந்து 'லெம்' பிரிகிறது.
9. நிலாவில் 'லெம்'
10. நிலாவிலிருந்து கிளம்பிய 'லெம்' தாய்க் கப்பலுடன் இணைகிறது.
11. தாய்க் கப்பல் நிலாவைச் சுற்றுகிறது.
12. தாய்க்கப்பல் பூமியை நோக்கிக் கிளம்புகிறது.
13. பூமியை நோக்கிய பாதையில் தாய்க்கப்பல்.
14. பணிக்கலம் பிரிக்கப்படுகிறது.
15. பாரகூட்டுகள் விரிவடைந்து கலம் பசிபிக் பெருங்கடலில் இறங்குகிறது.

ஒரு முக்கியமான வேறுபாடு என்னவென்றால் அங்குக் காற்று மண்டலமற்ற வெற்றிடச் சூழ்நிலை உண்டு. அதனால் காற்றுக் கலப்படமற்ற சுத்தமான உலோகங்களைத் தயாரிப்பது சாத்யமாகலாம். மேலும் அங்கு நிலவும் எடைக்குறைவான சூழ்நிலையைப் பயன்படுத்தி உயர்தரமான கண்ணாடிகளும், பல்வேறு இயந்திரங்களுக்குப் பயன்படும் 'பால் பேரிங்கு' உருளைகளும் தரமாகத் தயாரிக்கலாம். அங்கு ஈர்ப்புச்சக்தி குறைவாக உள்ளதால் பலவீனமான இதயமுள்ளவர்கள் சுகமாக வாழலாம்.

சந்திரன் எவ்வாறு உண்டாயிற்று என்பதைப்பற்றி நெடுங்காலமாக விஞ்ஞானிகளிடையே கருத்து வேற்றுமையுள்ளது. இதை ஆராயவும், மற்றும் சந்திரனின் காலத்தைக் கணிக்கவும் முடியும். சந்திரனிலிருந்து எடுத்து வரும் மண், கற்களைக் கொண்டு இதை ஆராய முடியுமென்று எதிர் பார்க்கப்படுகிறது. பூமியிலுள்ள மேற்பகுதி கோடிக் கணக்கான ஆண்டுகளாகக் காற்று மண்டலத்தினால் பாதிக்கப்பட்டுப் பலவித மாறுதல்களை அடைந்துள்ளமையால் பூமியில் இருக்கும் கற்களும் மணலும் இவ்வாராய்ச்சிக்கு அவ்வளவு பொருத்தமாயிரா. ஆனால் சந்திரனின் மேற்பகுதி எவ்வித மாறுதல்களுக்கும் உட்படாமல், தோன்றிய காலத்தில் உள்ளபடியே இருக்குமாதலால் நிலவுக் கற்கள் நிலவின் காலத்தை மட்டுமன்றி, சூரிய மண்டலத்தின் காலத்தையும் கணிக்க உதவும்.

சாதிக்க முடியாது என்று கருதப்படும் காரியங்களைக்கூட நவீன விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் கொண்டு மனிதனால் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையையும், மனித முயற்சியால் கனவையும் நனவாக்க முடியும் என்ற நம்பிக்கையையும் இப்பயணத்தின் மிகப் பெரிய சாதனைகளாகக் கொண்டால் அவை மிகையாகா.

விஞ்ஞானம் வளர்ந்துவரும் வேகத்தில் இன்னும் சில ஆண்டுகளில் சந்திரனுக்குச் செல்வது தற்போது விமானத்தில் செல்வது போல் அவ்வளவு எளிதாக ஆகிவிடலாம். இந்த நூற்றாண்டுக்குள் மனிதன் அருகிலுள்ள மற்றக் கிரகங்களான செவ்வாய், வெள்ளி இவைகளுக்கும் சென்றுவரலாம்.

''முயற்சி திருவினையாக்கும்'' என்பது வள்ளுவர் வாக்கு. மனித முயற்சியினால் அடைய முடியாததுமுண்டோ?

நிதி வளமிக்க ஊராட்சிகள்

நாட்டில் வசூலிக்கப்படும் வரிகளில் சுமார் 65 சதவீதம் ஊராட்சிகளாலேயே வசூலிக்கப்படுகின்றன. தமிழ்நாடு, மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்கள் இவ்வகையில் முன்னணியில் நிற்கின்றன. ஊராட்சிகள் திரட்டும் நிதிக்கேற்றவாறு, இம் மாநில அரசுகள் ஈட்டு மானியம் வழங்குவதாலேயே இம்மாநிலங்களிலுள்ள ஊராட்சிகள் நிதி நிலை வளமுடையதாயுள்ளதென அறியமுடிகிறது. இதுபோன்ற ஈட்டு மானியங்கள் வழங்கும் திட்டம் நாட்டில் வேறு மாநிலங்களில் செயல்படவில்லையெனத் தெரிகிறது.

இரண்டாவது திட்டகாலம் வரை, ஊராட்சிகளுக்கு மக்கள் தாமாகவே முன்வந்து நன்கொடையளித்தனர். ஆனால் இது நாளடைவில் சிறிது சிறிதாகக் குறைந்து விட்டதனால், ஊராட்சிகள் வரிகள் வாயிலாக வருவாயைத்தேடிக் கொள்கின்றன.

1961-62ஆம் ஆண்டில் ரூ. 10·5 கோடியையும் 1965-66இல் ரூ. 25 கோடியையும் ஊராட்சிகள் வரிகளாக வசூலித்தன. 1968-69ஆம் ஆண்டில் ஊராட்சிகள் வசூலிக்கும் வரித்தொகை ரூ. 26·5 கோடியாகவிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1967-68ஆம் ஆண்டுவரை திட்டத்தின் வாயிலாக, சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்கென செலவிடப்பட்டது ரூ. 570 கோடியாகும். இதில் மக்கள் தாமாகவே உழைப்பையும், பொருளையும், பணத்தையும் அளித்தது ரூ. 285 கோடியாகும்.

— 'பஞ்சாயத்து ராஜ்' இதழிலிருந்து

மாங்காடு மக்களிடையே அயல் நாட்டினர்

அயல் நாடுகள் பலவற்றிலிருந்தும் நம் நாட்டிற்கு வருவோரில் பெரும்பான்மையானவர்கள் நம் நகரங்களிலேயே தங்கி, நகரங்களையே சுற்றிப் பார்த்துவிட்டுத் தாயகம் திரும்புகின்றனர். ஆனால் உண்மை இந்தியாவின் உறைவிடமான கிராமங்களையும், அங்கே நிறை மனத்துடனும், விருந்தோம்பும் பெருநோக்குடனும் வாழும் எண்ணிறந்த கிராமப் பெருமக்களையும் கண்டு, அவர்களுடன் அளவளாவி, உணவுண்டு, மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்துத் திரும்பும் வெளிநாட்டினர் மிகச் சிலரே!

அத்தகைய கிடைத்தற்கரிய வாய்ப்பு ஓர் அமெரிக்க நிபுணர்கள் குழுவுக்கு அண்மையில் கிடைத்தது. அக் குழு செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாங்காடு என்னும் சிற்றூரைப்பற்றி அறிய 12-7-1969 மாலை அவ் ஊருக்கு வருகை தந்தது. அந் நிபுணர்கள் குழுவில் பங்கு பெறும் அரிய வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

வரவேற்பும் பாராட்டும்:

முதலில் நிபுணர்கள் மாங்காடு (ஊராட்சி ஒன்றியம்) உயர் தொடக்கப் பள்ளிக்கு வருகை தந்தனர். அங்கு அவர்களுக்குச் சிறந்த வரவேற்பொன்று அப் பள்ளித் தலைமையாசிரியர், பிற ஆசிரியர்கள், மாணவர்கள், ஊராட்சித் தலைவர்கள் போன்றோரால் அளிக்கப்பட்டது. நிபுணர் குழுவை வரவேற்றுத் திரு. எம். வி. சோலையப்பன் அவர்கள் (குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர்) பேசினார். அவர் தம் சொற்பொழிவில் சிற்றூர்களிலுள்ள குழந்தைகள் படிப்பதற்குத் தமிழ் நாடு அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றியும், நண்பகல் உணவுத் திட்டத்திற்கு அமெரிக்கக் ''கேர்'' நிலையத்தினர் பால்தூள், ரவை, சோள ரவை, எண்ணெய் ஆகியவை தந்து வரும் தொண்டு குறித்தும் பாராட்டினார்.

பிறகு கல்வி கற்பிக்கும் முறைகள் பற்றிய கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பெற்றன. தமிழ் நாட்டில் ஆறும் வகுப்பிலிருந்து பதினொன்றும் வகுப்பு முடிய உயர்நிலைப் பள்ளிகளில் வகுப்புக்கள் இருக்கின்றனவென்றும், தமிழ், ஆங்கிலம், கணக்கு, அறிவியல், வரலாறு, நில நூல் முதலிய பாடங்கள் எல்லா மாணவர்க்கும் கற்பிக்கப் பெறுகின்

றன என்றும் விளக்கப்பட்டது. நிபுணர்கள் இதன் தொடர்பாக அவர்கள்தம் நாட்டில் முப்பது மாணவர்க்கு ஓர் ஆசிரியர் உள்ளனர் என்றனர்.

அவர்களுக்குக் கிடைத்த அரிய காட்சிகள் :

இதற்குப் பின் குயவர்கள் கூட்டுறவு முறையில் மண்பாண்டங்கள் செய்யும் இடத்திற்கு அவ்வறிஞர்களை அழைத்துச் சென்றோம். அங்குச் சக்கரத்தின் சுழற்சியால், மண்ணிலிருந்து வெவ்வேறு வகையான பாண்டங்களைக் கையைப் பயன்படுத்தியே செய்வதைக்கண்டு வியந்தனர். நிபுணர் குழுத் தலைவர் அவர்கள், சக்கரத்திலிருந்து பாண்டத்தினை எவ்வாறு நீக்குகின்றனர் என்பதனையும் அடிப்பகுதியை எவ்வாறு அமைக்கின்றனர்கள் என்பதனையும் அறிந்து கொள்ள விரும்பினர். பிறகு குழுவினர் அவற்றை நேரில் கண்டறிந்து கொண்டனர். அப்போது ஊர் மக்கள் திரளாக வந்து அவர்களை வாழ்த்தினர். சிறுவர், சிறுமியரோ ஆரவாரம் செய்துகொண்டு பின் தொடர்ந்தனர். குழுவில் முதியவரான ஒருவர், புகைப்படம் பிடிக்கும் கருவியைச் சிறுவர்களிடம் கொடுத்துப் புகைப்படம் எடுக்கும் முறையைக் கற்பித்துக்கொண்டு வந்தார். சிறுவர்கள் அவரையே சூழ்ந்து கொண்டனர். மேலும், நடந்து வந்து கொண்டிருந்தபோது ஓரிடத்தில் வீட்டைப் பிரித்து, ஓடு மாற்றிக் கொண்டிருந்தனர். அக் காட்சி அவர்கட்குப் புதிதாகக் காணப்பட்டதால், புகைப்படம் எடுத்தனர்.

அன்பும் விருந்தும் :

மக்கள் வெள்ளம் அவ்விடத்திலிருந்து நீங்கிப் பேரூராட்சி மண்டபத்தை அடைந்தது. அங்கு ஊராட்சி மன்ற உறுப்பினர்களும், நிர்வாக அலுவலரும், மற்றோரும் அமெரிக்க நிபுணர்களை வரவேற்றனர். இந்தியர்கள், அயல் நாட்டினர் மேல் அன்பு செலுத்தும் திறத்தினை இங்கே அவர்கள் கண்டனர்.

''அன்புஈனும் ஆர்வம் உடைமை
அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு''

என்னும் திருவள்ளுவர் வாக்கின் உண்மையைக் கண்டேன். வரவேற்பிற்குப் பிறகு, பூப்பந்தாடும் நிகழ்ச்சியைக் காணச் சென்றவர்கள் தாங்களும் விளையாட்டு வீரர்களோடு சேர்ந்து விளையாடினர். சிறிது நேரத்திற்குப் பின் ஊராட்சி ஒன்றிய உயர்தொடக்கப் பள்ளியை அடைந்தோம். வழியில் சிறுவர்கள் குழாயில் தண்ணீர் அடித்து இறைத்துக் கொண்டிருந்ததையும், வறட்டிகள் தட்டியிருந்த சுவரினையும் அவர்கள் புகைப்படம் எடுத்தனர்.

உயர்தொடக்கப் பள்ளியில் ஆசிரியர்களும் மாணவர்களும் குழுமியிருந்து அமெரிக்க விருந்தினர்களை வரவேற்றனர். அவர்களுக்குத் தேநீர் விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்திற்குப் பிறகு அமெரிக்கர்கள் இரு பாடல்களைப் பாடி, ஊர் மக்களைக் களிப்புக் கடலில் ஆழ்த்தினர். அடுத்து, அவர்கள் இத்தகு காட்சி தரும் ஊரைப் பார்வையிட ஏற்பாடு செய்தவர்களுக்கு நன்றி தெரிவித்து, நகரங்களையே சுற்றிப் பார்த்த தங்களுக்குச் சிற்றூரின் அமைதியான சூழ்நிலை புதிய மகிழ்ச்சியைத் தந்ததாகவும், ஊர் மக்கள் காட்டிய மேலான அன்புக்கு நன்றி தெரிவிக்கச் சொற்களே இல்லையாதலால் இயலவில்லையெனவும் கூறினர். தமிழ்நாடு பொதுமக்கள் தொடர்புத்துறை அலுவலர் அவர்கள் அரசின் சார்பில் நன்றி நவின்ற பின் அப் பெருமக்கள் 'எல்லோருக்கும் வணக்கம்' என்று தமிழில் அன்பு மிகக் கூறிப் பிரியாவிடை பெற்றனர். அவர்களுக்காக ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த வண்டியில் ஏறி அமர்ந்தவுடன் கையசைத்து அவர்கட்கு ஊர்ப் பொது மக்களும், சிறுவர்களும் விடை கொடுத்தனர். இந் நிகழ்ச்சி அவ் வூர் வரலாற்றில் இடம் பெறத்தக்க நிகழ்ச்சி என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அமெரிக்க அறிஞர்கள் சிறு நிகழ்ச்சியையும் மிக உற்றுநோக்கி அறிகிறார்கள் என்பதனை, அவர்களுடைய வருகை நமக்கு அறிவிக்கிறது. மாலை போட்டவுடன் கழற்றிவிடும் நம் நாட்டில், பெற்ற மாலையைப் போட்டுக்கொண்டே ஊர் முழுதும் சுற்றி வந்த, அத் தலைவரின் கோலம், நம் நெஞ்சில் என்றும் நீங்காமல் நிலைத்து நிற்கும் என்பது திண்ணம்.

போதூர் கிராமத்தில் (மேற்குக் கோதாவரி மாவட்டம்) நடுவினிலே ஒரு குளம்; அதைச் சுற்றியும் பற்பல கிராம நிறுவனங்களின் அலுவலகங்கள், கட்டடங்கள் புதிதாகத் தோன்றியுள்ளன.

அழகிய ஊராட்சி அலுவலகம், மகளிர் மன்றக் கட்டடம், ஊராட்சிச் ச்மிதித் தொடக்கப் பள்ளி, கிராமக் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் ஆகியவை அனைத்தும் அக் குளத்தைச் சுற்றியுள்ளன.

தவிர, ஒரு மேல்நிலை நீர்த் தொட்டியும் அமைக்கப்பட்டு, கிராமத்திற்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, அங்கே ஒரு நூலகம் மிகச் சிறப்புடன் கடந்த 55 ஆண்டுகளாகப் பணியாற்றிவருகிறது. அதன் பெயர் ''திரு. இராமச்சந்திரா நூலகம்'' என்பதாகும்.

1914ஆம் ஆண்டு சூன் திங்கள் 3ஆம் நாள், திரு. இராமச்சந்திரா நூலகம் செயல்படத் தொடங்கியது. அன்றிலிருந்து இந் நாள்வரை, போதூர் மக்களனைவரும், இந் நூலகத்தின் வளர்ச்சியில் பெரும் ஆர்வங் காட்டிக் கண்ணும் கருத்துமாய்ப் போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்துள்ளனர். மேற்குக் கோதாவரி மாவட்டத்திலேயே இன்றளவில் ஒரு சிறந்த நூலகம் உண்டென்றால் அஃது இதுவன்றி வேறொன்றிருக்க முடியாது. மறைந்த திரு. போதூர் இராமச்சந்திரா ராவ் அவர்கள் உவந்தளித்த ஓர் அறையில் தொடக்கப் பெற்ற இந் நூலகம் இன்றுவரை, அரசிடமிருந்து, எவ்வித நிதியுதவியும் கோரவேயில்லை. நூலகக் குழு, இந் நூலகத்தைச் சிறந்த முறையில் நிர்வகிக்கிறது.

நூல்களைத் திரட்டுதல்:

இந் நூலகத்தின் தனிச்சிறப்பு அது நூல்களைத் திரட்டக் கையாளும் முறையேயாம். நூலகக் குழு 1950 ஆம் ஆண்டிலெடுத்த முடிவிற்கேற்ப, விழா நாட்களில், குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவருடைய இல்லந்தோறும் தவறாது சென்று, நூல்களை நன்கொடையாகப் பெற்று, நூலகத்தில் கொண்டு சேர்க்கின்றனர். இதர நாட்களில், அன்பளிப்பாக அளிக்கப்

படும் நூல்களையும் மனமுவந்து ஏற்றுக் கொள்கின்றனர்.

இன்று போதூர் நூலகத்தில் 12,300 நூல்களிருக்கின்றன. அவற்றில் 11,000 நூல்கள் தெலுங்கு மொழியிலுள்ளவை; எஞ்சியவை இந்தி, ஆங்கில நூல்களாகும்.

போதூர் மக்கள், தம் நிலைக்கேற்ப நிதியுதவி அளித்திருப்பது மட்டுமின்றி, நூலகத்திற்கும் அவ்வப்போது சென்று பயனடைகின்றனர். பெரும்பான்மையோர் இலவசப் படிப்பகத்திற்குச் சென்று நாளிதழ்கள், நூல்களைப் படிக்கின்றனர். இங்கு எவ்விதச் சந்தாவும் வசூலிக்கப் படுவதில்லை. நூலகத்திற்கென 34 செய்தித் தாட்கள், இதழ்கள் ஆகியவை நாள்தோறும் தருவிக்கப்படுகின்றன.

திங்கள்தோறும் சந்தாச் செலுத்தி உறுப்பினராயிருப்போர், நூல்களை வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம். 1930ஆம் ஆண்டில் பத்துப் பேர்களே உறுப்பினர்களாக இருந்தனர். இது 1964ஆம் ஆண்டில் 57க்கு உயர்ந்தது. 1951ஆம் ஆண்டில் 472 நூல்களும், 1963இல் 1,063 நூல்களும், 1965இல் 1165 நூல்களும் படிக்கப் பட்டுள்ளன. 1950ஆம் ஆண்டில், இல்லங்களுக்கு எடுத்துச் செல்லப் பட்ட நூல்கள் 3913 மட்டுமே. ஆனால் 1965இல் எடுத்துச் செல்லப் பட்ட நூல்களோ 9,778 ஆகும்.

அறிவைப் பரப்பும் அரும்பணி :

விஞ்ஞான அறிவைக் கிராம மக்களிடையே பரப்புவதற்கு நூலகம் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்கிறது. விஞ்ஞானத் துறையில் சிறப்புற்று விளங்குவோரை நூலகம் அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்கிறது. தவிர மதத் தொடர்பான சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன.

நூலகத்தின் நிதி நிலை ஆண்டுதோறும் சீரிய முறையில் பெருகி வந்துள்ளது. 1919ஆம் ஆண்டில், இந் நூலகத்தின் நிதி ரூ. 184 மட்டுமே. இது 1932ஆம் ஆண்டில் ரூ. 1147க்கும், 1950இல் ரூ. 4,473க்கும் உயர்ந்து, 1961ஆம் ஆண்டில் ரூ. 6000ஐ எட்டிப்பிடித்து, இன்றளவில் ரூ. 10,000 ஆகியுள்ளது. இது நூலகத்தின் நிலையான வளர்ச்சியைத் தெளிவாகக் காட்டுகிறது. இந் நிதியை நூலகம் செலவிடுவதில்லை. இதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டே நூலகம் நிர்வகிக்கப்படுகிறது.

நிதி திரட்டும் முறை :

போதூர் நூலகத்தினர் நிதி திரட்டும் முறைகளில் ஒன்று மிக விந்தையானது.

திருமணத் தம்பதிகள் இருவரிடமிருந்தும் ''சுபகட்டணம்'' என்ற ஒரு நன்கொடையை நூலகம் வசூலிக்கிறது. இந்தச் ''சுபகட்டணத்தினால்'' ஆண்டொன்றிற்கு ரூ. 300 வரை வருவாய் கிடைக்கிறது.

35 ஆண்டுகளாக ஒரே இடத்தில் இயங்கிய இந் நூலகத்தின் கட்டடம் பழுதுற்று, பழையதாகிவிட்டதனால், ஒரு புதிய கட்டடத் தேவையெழுந்தது. அந் நிலையிலும் அஃது அரசின் உதவியை நாடவில்லை. நூலகக் குழுவினர், அன்பளிப்புக் கோரி வேண்டுகோள் விடுத்தனர். கொடை உள்ளம் பெற்ற 10 பெரியோர்கள் ஒவ்வொருவரும் ரூ. 1,116வும், ஐவர் தலைக்கு ரூ. 500வும் நன்கொடையளித்தனர். தவிர இதர நன்கொடைகளையும் சேர்த்து ரூ. 15,000 மதிப்பீட்டில் ஒரு கட்டடம் எழுப்பப்பட்டது. அதில் தான், இன்று போதூர் நூலகம் சிறப்புடன் தன் பல்லாண்டுப் பணியைத் தொடர்ந்து ஆற்றிவருகிறது.

கிராம மக்களின் குன்றா ஆர்வமும் நூலகக் குழுவினரின் அயரா உழைப்புமே, போதூர் நூலகத்தின் மகத்தான வளர்சிக்கு அடித்தளங்களாயின. போதூர் நூலகச் சொத்தின் இன்றைய மதிப்பு ரூ. 56,000 ஆகும். தவிரக் கட்டடத்தின் மதிப்பு ரூ. 24,000; நூல்களின் மதிப்பு ரூ. 15,000.

முதியோர்களின் அருஞ்சேவை :

திரு. ருத்ராஜராவ் நரசிம்மலு அவர்களுக்கு 1930ஆம் ஆண்டிலிருந்து, இந் நூலகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்குண்டு. தவிர திரு. நரசிம்மராஜு அவர்களுக்கு வயது 70 ஆயிற்றெனினும், நாள்தோறும் நூலகத்திற்கு வந்து, தம் பணியைத் தவறாது செய்து வருகிறார். நூலகத்திலுள்ள நூல்கள் அனைத்திற்கும் இவர்தாம் கட்டமைத்தவர் (பைண்டிங்); இன்றுங்கூட அவர் நூல்களுக்குக் கட்டமைக்கத் தவறுவதில்லை.

தமிழ்ப் பண்பாட்டைத் தரணிக்கு எடுத்தியம்பும் தன்னேரிலா இலக்கியம் திருக்குறள். இத் திருக்குறளை யாத்த ''வள்ளுவன் தன்னை, உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு.'' வள்ளுவன் தந்த குறள்மறை, தமிழ் மாதின் இனிய உயிர்நிலை. இதனை உள்ளம் தெளிவுறப் போற்றுவார் என்றும் உத்தமராகி ஒழுகுவார்.

விளக்கில் அகல் ஒன்று காணப்படும்; அதனுள் எண்ணெய் பெய்து திரியிட்டுச் சுடர் ஏற்றுவர். அகலைத் தாங்கத் தண்டு ஒன்றும் இருக்கும். திருக்குறளும் ஒரு விளக்கே. அறம் என்ற அகலில், பொருள் என்ற திரியை இட்டு, இன்பம் என்ற நெய்யைப் பெய்து, தன் செம்மைசான்ற சொல் என்ற தீகொண்டு, குறள் என்ற விளக்கை ஏற்றியுள்ளார், வள்ளுவர். குறுகிய வெண்பா என்ற தண்டு இவ் விளக்கைத் தாங்குகிறது. அகல் விளக்கு வெளி இருளை ஓட்டும்; ஆனால் குறள் விளக்கோ உள்ள இருளை - மன மாசை-அகற்றும். இக் கருத்தை, நப்பாலத்தனார் என்ற புலவர் அழகுறப் பின்வருமாறு கூறுகிறார்.

''அறம்தகளி யான்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு - குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.''

திருக்குறள், அதனை அடுத்துப் பின்னர்த் தோன்றிய இலக்கியங்கட்குக் கருத்து வித்தாக அமைந்தது. திருவள்ளுவருக்குப் பிறகு தோன்றிய புலவர்கட்கு இலக்கியப் பாதையில் திருக்குறள் ஒரு கைகாட்டி. அவர்கள் திருக்குறளின் சொல்லையும், பொருளையும் பொன்னேபோற் போற்றித் தங்கள் இலக்கியங்களில் எடுத்துக் கையாண்டுள்ளார்கள். நெஞ்சையள்ளும் காப்பியமாகச் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் திருக்குறள் கருத்துக்களில் தோய்ந்து, தம் நூலில் பல இடங்களில் அவற்றைப் பதிய வைத்திருக்கிறார்.

பண்பு உடையவர்களிடத்தில் பொருந்தியிருப்பதால் உலகம் உள்ளதாய் இயங்குகிறது; அஃது இல்லையேல் மண்ணில் புகுந்து அழிந்து போகும். இதை வள்ளுவர்,

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்''

எனக் கூறிப் போந்தார். இக் கருத்து, இளங்கோவடிகளைப் பெரிதும் கவர்ந்திருக்கிறது. கதையின் தொடக்கத்தில் புகார் நகரைப் பற்றிக் கூற வரும் அடிகள், இமய மலை, பொதியமலை, புகார் நகரம் ஆகிய மூன்றிற்கும் என்றைக்கும் அழிவில்லை என்பதற்குச் சிறந்த ஒரு கருத்துரையைக் காரணம் காட்டுகிறார். 'குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்' திகழப் பரமசிவன் வீற்றிருக்கும் காரணத்தால் இமயத்திற்கு அழிவில்லை,

தமிழ் கற்ற முனிவர் பலர் தங்கள் வாழிடமாகப் பொதியத்தைக் கொண்டமையால் அதற்கும் அழிவில்லை. புகாருக்கு ஏன் அழிவில்லை தெரியுமா? அங்கு உயர்ந்த பண்பாளர் வாழ்கின்ற தன்மையினால்.

"ஆங்கு,
பொதியி லாயினும் இமய மாயினும்
பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய
பொதுவறு சிறப்பின் புகாரே யாயினும்
நடுக்கின்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கங் கூறார் உயர்ந்தோர் உண்மையின்
முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே"

என்பன சிலப்பதிகார வரிகள்.

ஊருக்கு அழகு உத்தமர்கள் வாழ்தல் என்ற உண்மையை, பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்ற வள்ளுவரின் வாய்மொழியை, இளங்கோவடிகள் "உயர்ந்தோர் உண்மையின் ஒடுக்கம் கூறார்" என்ற சொற்களில் செறித்துக் காட்டுவது சுவை பயப்பதாகும்.

தமிழில் உள்ள சிறப்பு 'ழ'கரம் மிகவும் அருமை வாய்ந்ததோர் எழுத்து. இவ் வெழுத்தமைந்த பல சொற்களைப் பொருத்தமானதோர் இடத்தில் பெய்து காட்டுகிறார் இளங்கோவடிகள். கோவலனும் கண்ணகியும் நெடுநிலை மாடத்து, இடைநிலத்து இருந்துழி, தென்றல் காற்று மெல்லென அவர்கள்மீது படிந்து செல்கிறது. இன்பப் பெருக்கோடு கோவலன் கண்ணகியின் பேச்சின் சிறப்பைப் பாராட்டுகிறான். கண்ணகியின் பேச்சு மழலைக் கிளவியாம். எத்தகைய மழலை தெரியுமா?

"குழலும் யாழும் அமிழ்தும் குழைத்தநின்
மழலை..............."

என்பது கோவலன் பாராட்டுரை. சொல்லுக்குச் சொல் தமிழின் சிறப்பெழுத்தான 'ழ'கரத்தை இட்டு, தமிழின் இனிப்புபோலக் கண்ணகியின் பேச்சும் சுவை கூட்டுவதாகக் கூறுகிறான் கோவலன். 'குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த மழலை' என்ற சிலப்பதிகார வரிகள் நமக்கு,

"குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்."

என்ற அருமைத் திருக்குறளை நினைவூட்டவில்லையா?

விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரம் செய்தற் பொருட்டே இல்லறம் நடத்தப்படுகிறது. துறந்தவர்க்கும், வறியவர்க்கும், தன்னிடத்தே இறந்தார்க்கும் இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்றவர்கள் துணையாக இருக்கவேண்டும். இக் கருத்துக்களை,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்ற குறட்பாக்கள் கூறுகின்றன.

இல்வாழ்வோர் கொள்ள வேண்டிய கடமைகள் எவ்வெவை என்பதை இளங்கோவடிகளும் குறிப்பிடுகிறார். கோவலன் மாதவியை அடைந்து, இல்லற நெறியைத் துறந்து வாழ்ந்த காலத்தில் கண்ணகி இல்லற வாழ்க்கையின் சிறந்த பயன்களை இழந்து நின்றதாகக் கூறும் பகுதி, படிப்போர் இதயத்தை நெகிழச் செய்வதாகும்.

"அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை......"

என்பது கண்ணகி கூற்று. வள்ளுவர் கூறிய இல்லறக் கடமைகளை இளங்கோவும் எடுத்தாண்டிருப்பதை இங்குக் காண முடிகிறது.

சிலம்பில் இந்திர விழவூரெடுத்த காதையில் ஓர் அருமையான பகுதி- பரத்தையர் வீடு சென்ற காளையர் அவர்களின் அழகைப் புகழ்வது. கரிகாற் பெருவளத்தான் ஆட்சியில் கூற்றுவன் காவிரிப் பூம்பட்டினத்துக்குள் நுழைய அஞ்சுகிறான். அங்கு

நுழையாவிட்டால் உயிர்களைக் கவர முடியாதே! உயிர்களைக் கவர்வது தானே அவன் வேலை. அவன் வேலைக்கு இடையூறாக வளவனின் செங்கோன்மை நிற்கிறது. தன் தொழில் கெடாதிருக்க என்ன செய்வது என்று எண்ணிப் பார்க்கிறான் கூற்றுவன். சிந்தனையின் விளைவு அவன் பெண் வடிவம் கொள்கிறான். நாணினையுடைய கோலத்தையும் நகை முகத்தையும் உண்டாக்கிக் கொண்டு யாழின் நரம்புபோன்ற பண்ணாகிய மொழியைப் பேசிப் பெண்ணாகக் காவிரிப்பூம்பட்டினத்துள் கூற்றம் நுழைகிறது. அழகால் மயக்கி ஆடவர் உயிரைக் கொள்ளை கொண்டு தன் தொழிலைச் செய்கிறதாம் கூற்றம்.

"மன்னவன் செங்கோல் மறுத்தல் அஞ்சிப்
பல்லுயிர் பருகும் பகுவாய்க் கூற்றம்
ஆண்மையில் திரிந்துதன் அருந்தொழில் திரியாது
நாணுடைக் கோலத்து நகைமுகங் கோட்டிப்
பண்மொழி நரம்பின் திவவியாழ் மிழற்றிப்
பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டு......"

பெண்கள், அழகால் தம் உயிரைக் கொள்ளை கொள்வதாகக் காவிரிப் பூம்பட்டினத்து ஆடவர்கள் கூறும் கூற்று இது. அடிகட்கு இவ்வாறு எழுதத் தோன்றுவதற்குக் கருத்துத் தந்தது,

"பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு"

என்ற திருக்குறளே யாகும்.

எமன் என்று சொல்லப்படுவதை முன்பு அறியேன்; இப்பொழுது கண்டறிந்தேன். அது பெண் தன்மையுடன் போர் செய்யும் பெரிய கண்களையுடையது என்ற வள்ளுவரின் இக் கருத்தைத்தான் இளங்கோவடிகள், "கூற்றம் பெண்மையிற் திரியும் பெற்றியும் உண்டு" எனக் குறிப்பிடுகிறார்.

துன்பம் வரும்போது நகுதல் வேண்டும். இது வள்ளுவர் கட்டளை. இதைச் செயல்முறையில் காட்டத் தக்க ஓர் இடத்தை இளங்கோவடிகள் படைத்துக் காட்டுகிறார். கோவலனும் கண்ணகியும் மதுரையை நோக்கிப் பயணம் செய்தனர். காவிரிப்பூம்பட்டினத்தின் நகர் வாயிலைக் கடந்து, காவிரியின் வடகரை வழியாகச் சோலைகளினூடே மேற்றிசை நோக்கி ஒரு காத தொலைவு கடந்ததும், கவுந்தியடிகளின் தவப்பள்ளி இருக்கும் சோலையை அடைந்தனர். அப்போது மெல்லியளாகிய கண்ணகி, இடையும் அடியும் மிக வருந்தி, இளைப்பானே, பலவாகக் குறுக மூச்செறிந்து, முற்றாத மழலைபோன்ற சொற்களாலே "மதுரை மூதூர் எதுவோ?" என்று கேட்டாள். அதற்குக் கோவலன் "நம் நாட்டிற்கு அப்பால் ஆறைங்காதமே; அண்மையிலேதான் உள்ளது" என்று கூறி நகைத்தான். ஒரு காதமே நடந்துள்ளார்கள். இன்னும் இருபத்தொன்பது காதங்கள் நடந்தாக வேண்டும். அதற்குள் வருந்தி மதுரை இன்னும் எவ்வளவு தொலைவு?' என்று கேட்கிறாளே. இல்லத்தை விட்டு வெளிச் சென்றறியாத இக்கற்புடை நங்கையைக் காட்டு வழியே இட்டுச் செல்லும் இடுக்கண் நேர்ந்திருக்கிறதே என்ற எண்ணம் தோன்றக் கோவலன் மெல்ல நகைத்தான். 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற குறளடிக்கு ஏற்ற ஒரு காட்சியாக இதைவிட நாம் வேறெங்குக் காண முடியும்!

சேரநாடடைந்து தெய்வமாய கண்ணகிக்குக் கோவிலமைத்து விழாவெடுக்க விரும்பினான் சேரன் செங்குட்டுவன். இமயத்தில் கல்லெடுத்து, கங்கையில் நீராட்டி, வஞ்சிமாநகரில் கண்ணகியின் திருவுருவை நிறுவ ஆசைப்பட்டான் அக் காவலன். கல்கொணர அவன் புறப்படும்முன் வடநாட்டில் இருந்த கனகன், விசயன் என்ற சிற்றரசர் இருவர், வடவரசர் பலர் கூடியிருந்த அவையில், தமிழ் நாட்டரசருடைய வீரத்தைப் பழித்துரைத்தனர் என வறிந்து பெருஞ்சினங் கொண்டான். அவர்களுக்குத் தக்கதொரு பாடம் கற்பிக்க வேண்டுமெனச் சேனையுடன் சென்றான். சேனை செல்வதன் நோக்கம்,

''காவா நாவின் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடும் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்திலர் ஆங்கெனக்
கூற்றங் கொண்டுஇச் சேனை செல்வது''

எனச் சிலப்பதிகாரம் கூறுகிறது. போர் நிகழ்ந்தது. போரின் முடிவில் கனகனும் விசயனும் கைது செய்யப் பட்டனர்.

''யாகாவார் ஆயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு''

என்ற குறள் கனக, விசயர் வரை உண்மையானதைச் சிலப்பதிகாரம் நன்கு விளக்குகிறது.

செல்லும் இடமெல்லாம், செய்யக் கூடிய வகையில் எக் காரணம் கொண்டும் விடாமல் அறச் செயல்களைச் செய்து வரவேண்டும். அவ் வறச் செயலை, நாம் இளமையாகத் தானே உள்ளோம்; பிற்காலத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணமல் அவ்வப்போதே செய்து முடிக்கவேண்டும். அறனை வலி யுறுத்தி வள்ளுவர் கூறும் கருத்துக்கள் இவை. இளங்கோவடிகளும் இதே கருத்தைத் தம் நூலில் கூறி யுள்ளார்கள் - மாடலன் என்னும் மறையோன் கூற்முக. ''அடுத்த நாளில் அறம் செய்வோம் என்று நாம் கருதின் இன்றே நம் உயிர் நீங்கினுலும் நீங்கும். தம் வாழ்நாள் இத்துணைத்தென வரையறை செய்து அறிந்தவர் இவ் வுலகில் யாங்கணும் இல்லை.''

''நாளைச் செய்குவம் அறமெனில் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழுநா ளுணர்ந்தோர்
முதுநீர் உலகில் முழுவது மில்லை.''

எனவே நன்முகிய அறத்தைச் செய். அதையும் இன்றே செய் என்று அடிகள் கூறுகிருர்.

திருக்குறட் சொற்களையும், அடிகளையும் இளங்கோவடிகள் பல இடங்களில் அவ்வவ்வாறே எடுத்தாண்டுள்ளார்.

''பிறர்க்கு இன்ஞ முற்பகல் செய்யின் தமக்குஇன்ஞ
பிற்பகல் தாமே வரும்''
—இது குறள்.

''முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய காண்''
—இவை சிலப்பதிகார வரிகள்.

''அல்லற்பட்டு ஆற்ருது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் 'படை''
என்ற குறள்

''அல்லலுற் ருற்ரு தழுவாளைக் கண்டேங்கி
மல்லல் மதுரையா ரெல்லாருந் தாமயங்கி
களையாத துன்பமிக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்த திதுவென் கொல்''

எனச் சிலப்பதிகாரத்தில் உருப்பெறுகிறது.

''தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.''
என்பது குறள்.

''தெய்வந் தொழாஅள் கொழுநற் ருெழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து''
என்பது சிலப்பதிகார வெண்பா.

சிலப்பதிகாரத்தின் இறுதியில் கண்ணகியின் கதையைக் கேட்போர் கொள்ள வேண்டிய நெறிகளை அடிகள் கூறுகிருர்.

''தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்

தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை நீங்குமின்
தானம் செய்மின்; தவம்பல தாங்குமின்
செய்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின்; அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவ தொழியாது
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென்''

இப் பகுதியில் திருக்குறளின் அதிகாரப் பெயர்கள் பல இடம் பெறுகின்றன.

கடவுள் வாழ்த்து, நீத்தார் பெருமை, வாய்மை, புறங் கூருமை, கொல்லாமை, செய்நன்றி அறிதல், தீ நட்பு, அறன் வலியுறுத்தல், இல் வாழ்க்கை, கள்ளுண்ணமை, கள்ளாமை, குற்றங் கடிதல், பயனில சொல்லாமை, வெருவந்த செய்யாமை, நிலையாமை போன்ற குறள் அதிகாரங்களை மனத்தில்கொண்டு இளங்கோவடிகள் இதனை எழுதியதாகத் தெரிகிறது.

அரசன் கொடுமை செய்தான் என்று கூறப்படும் சொல்லைப் பெறும் வேந்தன் தன் ஆயுள் குறைந்து விரைவில் அழிவான்.

''இறைகடியன் என்றுரைக்கும் இன்ஞச்சொல் வேந்தன்
உறைகடுகி ஒல்லைக் கெடும்''

என்கிறது குறள். இதற்கான விளக்கத்தைச் சிலம்பில் காண முடிகிறது.

நெடுஞ்செழியனைக் கண்ணகி 'தேரா மன்ஞ' என விளித்து அவன் தவறு செய்தமையைச் சுட்டிக் காட்டியதும்,

''யானே அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்''

என மயங்கி விழுந்தான் - மாண்டான். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்முனமை இங்கே விளக்கம் பெறுகிறது.

''பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்''
என்கிறது குறள்.

திண்மையான கற்பைப் பெற்றமையால் கண்ணகி தெய்வமெனப் பாராட்டப்பட்டதை-உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவதைச் சிலம்பு விவரிக்கிறது.

'ஊழிற் பெருவலி யாவுள?' எனக் கேட்கிறது குறள். எதுவும் இல்லை. 'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என விடை பகர்கிறது சிலப்பதிகாரம்.

இவற்றை நோக்குமிடத்து குறள் கூறும் இலக்கணங்களை விளக்கும் இலக்கியமாகச் சிலம்பு திகழ்வதைக் காணலாம். இளங்கோவடிகள், தான் புனைந்த ஆரமாகிய சிலப்பதிகாரத்தில் குறள் மணிகளை அழகுறப் பொருத்தமாகப் பதித்து நம் நெஞ்சையள்ளும் மணியாரமாக அதனைச் செய்துள்ளார். வாழ்க அவர் புகழ்! வளர்க குறள் நெறி!

பொழுதோடு கலந்தது

இரண்டே நாட்களில்-வீட்டையே இரண்டாக்கி விட்ட குறுக்குச் சுவரையே இமையாது பார்த்துக் கொண்டிருந்தான் தங்கராசு.

அறையின் வாசலிலே— நிலைப்படியோரமாக, முக்காலியில் வைத்திருந்த அகல் விளக்கின் ஒளியில், ஈரம் உலராதபோதே வெள்ளையடிக்கப்பட்ட செங்கல் சுவர் கருப்பாகவே தெரிந்தது.

பாத்திரங்களையும், வீட்டையும் பிரித்துக் கொண்டாயிற்று. குறித்துள்ளபடி நாளைக்கு—கிராமப் பஞ்சாயத்தார் முன்னிலையில், அசையும், அசையாச் சொத்துக்களைப் பிரித்து, பதிவு செய்துவிட்டால்— அப்புறம் அண்ணன்வேறு, தம்பி வேறுதான்.

கூடத்தை ஒட்டிய அறைக்குள்ளே கட்டிலில் சாய்ந்திருந்தவனுக்குப் பெருமூச்சுப் பீறிட்டுக் கொண்டு வந்தது.

கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவே, தாயும் தந்தையுமாக நின்று, தம்பி தங்கராசுவை இந்த அளவுக்கு ஆளாக்கி விட்டவன் மூத்தவன் கன்னையா. படித்த படிப்பும் முற்றுப் பெருமல், உடல் வருந்தி உழைக்கவும் இயலாமல் திரிந்த தம்பிக்கு, தேடிப்பிடித்துத் திருமணத்தையும் செய்து வைத்தான் கன்னையா.

இளையவனுக்கு வாய்த்தவள் மரகதம். வயதில் சிறியவளாக இருந்தாலும், அனைத்தையும் தேடிக் கொள்ள வேண்டும் என்பதிலேயே ஆர்வமாக இருப்பவள்.



சோம.மகாதேவன்

எப்படியோ — நேற்றுவரை ஒரே குடும்பமாக வாழ்ந்து விட்டதே பெரும் சாதனையல்லவா?

கட்டிலிலிருந்த படியே சாய்ந்து தரையைப் பார்த்தான் தங்கராசு. வீட்டைக் கழுவி விட்டிருக்கிருள் மரகதம். ஈரம் உலரவில்லை. தனக்கென்று வந்துவிட்டால், எவ்வளவு அக்கறை வந்து குவிந்துவிடுகிறது. முந்தானையால் கைகளைத் துடைத்துக்கொண்டே அங்கு வந்த மரகதம் குனிந்து விளக்கை எடுத்துக்கொண்டு அறையின் வாசலுக்கு வந்தவள் விளக்கைத் தூக்கிப் பிடித்து அவனைப் பார்த்தாள்.

அவன் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீங்க?''

''உனக்கும் இப்படி வேலை செய்ய முடியுமான்னு—நினைக்கிறப்ப...''

''ஆச்சரியமா இருக்காக்கும். இனிமே செய்யாம தீருமா?''

அவள், கட்டிலருகே நெருங்கி வந்தாள்.

''என்னங்க...நாம...இங்கே பேசிக்கிறது பக்கத்து வீட்டுக்குக் கேட்குமா?'' என்று குரலைத் தணித்துக் கொண்டு கேட்டாள்.

''சுவரிலே ஒரு சாளரமாவது வச்சிருந்தா கேட்கும். அதுதான் நெத்தி மட்டத்துக்குச் சுவர் கட்டியாச்சே'' என்ருன் தங்கராசு.

''இடையிலே சாளரம் வேறே வேணுமாக்கும். பேசணும்ன்னு வாசல் வழி போயிட்டுப் போருேம்'' என்று சொல்லிக் கொண்டே உட்கார்ந்து கொண்டாள்.

பொழுது விடிந்தால், நன்செய்யும் புன்செய்யும் பகிர்ந்து கொள்ள இருக்கும்போது, இரவெல்லாம் கண்ணுறக்கம் வருமா?

''என்னங்க — வயக்காட்டுலேயும், தோட்டத்திலேயும், பாதி பாதி தான் பிரிச்சுக்குவாங்களா?'' என்று கருத்தோடு கேட்டாள் மரகதம்.

''ஆமா''

''அது எனக்குப் பிடிக்கலே. வயக்காடு பூராவும் நாம எடுத்துக்கிட்டு, தோட்டத்தை அவங்களுக்கே விட்டிடலாம்.'' என்று ஆவலோடு சொன்ஞள் அவள்.

தங்கராசு திரும்பிஞன்.

''உனக்கும் ஆசைதான். நான் பார்க்க அந்தத் தோட்டம் தரிசாக் கிடந்திச்சு. அதிலே கிணத்தை வெட்டி, பாடுபட்டு, தோட்டமாக்கி இருக்காரு, அண்ணன்''

''எல்லாம் பொதுப்பணம்தானே. உழைச்சாரு—இல்லேன்னு சொல்லலே — அந்தத் தோட்டத்தையே அவரு எடுத்துக்கட்டும். உழைக்கிறவரு—எப்படியும் கட்டிக் காத்துப் போடுவாரு. உங்களாலே அந்த மாதிரி காட்டுவேலை செய்ய முடியுமா?

''அதுக்காக''

''எல்லாத்தையும் நினைச்சுத்தான் சொல்றேன். நாலு நாளா எனக்கு இதே எண்ணம்தான். என் பேச்சைக் கேட்டிங்கன்ஞ வயக்காடு பூராவும் நமக்குத்தான். குத்தகைக்கு விட்டாலும் நெல்லு வீடு வந்து சேரும்'' என்று இரகசியமான குரலில் சொன்ஞள் அவள்.

தங்கராசு அவளை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான்.

தோட்டத்தைவிட நன்செய்யின் மதிப்பு எவ்வளவோ கூடுதலாகுமே. சரிக்குச் சரியாக விடுவார்களா?

''என்ன செய்யணும் சொல்லு''

''நாளைக்கு — பஞ்சாயத்திலே — தோட்டத்தை எனக்குக் கொடுத்திட்டு—அண்ணன் வயக்காட்டை எடுத்துக்கட்டும்ன்னு சொல்லுங்க?''

''நேர்மாரு ... கேட்கச் சொல்றியே''

''கேளுங்க — அப்புறம் தெரியும். உங்க அண்ணியம்மா ஆசையோட சரியின்னு சொல்லும். உங்க அண்ணன் ஒரு போதும் ஒத்துக்க மாட்டாரு.''

''அவ்வளவு உறுதியா சொல்ல முடியுமா?''

''எனக்குத் தெரியும் — அவரு தோட்டத்தை விடவே மாட்டாரு. அப்ப வயக்காட்டை நமக்கு விட்டுத் தானே ஆகணும்.''

தங்கராசு நன்ருகச் சாய்ந்து கொண்டான்.

உடன் பிறந்து வளர்ந்தவனைவிட, நேற்று வந்தவள் எடை போட்டுச் சொல்லுகிருள்.

''என்னங்க...பேசலையே.''

அதான் யோசிக்கிறேன்.''

இதிலே யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு? எல்லாத்தையும் சுருட்டிக் கிட்டு ஓடியா போகப்போருேம். பக்கத்திலேதானே இருக்கோம். நாளைக்கி அவங்க துன்பப்பட்டாப் பார்த்துக் கிட்டு இருக்கமுடியுமா!''

அவள் நெருங்கி உட்கார்ந்து அந்தரங்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கும்போது அவஞல் கண்களை மூடிக் கொள்ள முடியுமா?

* * *

2

கிராமக் கட்டுப்பாட்டுக்கு, நாலு பெரிய மனிதர்கள் கூடி முடிவு செய்யும் பஞ்சாயத்துக்கள், பெரும்பாலும் எல்லை தாண்டிப் போவதில்லை. பங்கு, பாகப் பிரிவினை எல்லாம் அந்தந்த வீடுகளிலேதான் நடக்கும்.

கன்னையாவின் வீட்டுத் திண்ணையில் காலையிலேயே கும்பல் சேர்ந்து விட்டது.

பொன்னுரங்கம் நடு நாயகமாக அமர்ந்திருந்தார். அவர், அந்தக் கிராமத்துக்கே மூத்தவர். நல்ல மனிதனென்று இளமையிலேயே பெயரெடுத்து, இன்று முதுமையிலும் நல்ல மனிதராகவே இருப்பவர். அவருக்குக் கன்னையாவின்மீது மிகுந்த பாசம் உண்டு. தானுண்டு தன் வேலையுண்டு என்றிருக்கும் அந்த உழைப்பாளியை அடிக்கடி எடுத்துக்காட்டுக்காகச் சுட்டிக் காட்டுவார்.

''இதிலே சிக்கல் ஒண்ணுமில்லையே; சீக்கிரம் பேசிமுடிக்க வேண்டியது

தானே?'' என்று முன்னாலிருந்தவர் எடுத்துக் கொடுத்தார்.

பொன்னுரங்கம் ஒரு முறை சுற்றிலும் பார்த்துக் கொண்டார். கன்னையா பழைய தலைவாசல் ஓரமாயும் தங்கராசு புது நிலைப்படியருகிலேயும் அமர்ந்திருந்தனர். ''தங்கராசு ... இப்படி முன்னாலே வந்து உட்காரு?'' என்று அழைத்தார் பொன்னுரங்கம். வீட்டினுள்ளே நின்று கொண்டிருந்த மரகதத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு நகர்ந்து வந்து உட்கார்ந்தான் அவன்.

பொன்னுரங்கம் மெதுவாக ஆரம்பித்தார்.

''தங்கராசு இந்தப் பிரிவினை நடக்குறதுக்கு முன்னாலே — உனக்குத்தான் நிறையச் சொல்ல வேண்டியிருக்கும். கூடப் பிறந்தவனுக்குச் செய்யவேண்டிய கடமையை ஒரு குறையும் இல்லாம செய்திருக்கான் கன்னையா. சொத்துக்களை இந்த அளவுக்கு விரிவு பண்ணி வச்சிருக்கிறதே பெரிய காரியம். அவன் பாடுபட்டது வீண் போகாம, இதுக்கு மேலே நீதான் பொறுப்போட நடந்துக்கணும்'' என்று ஆரம்பித்தார்.

''இனிமே பொறுப்பு இல்லாம இருந்தா முடியுமா? அதெல்லாம் தானாவே வந்து சேரும்'' என்று எதிர்த் திண்ணையிலிருந்து ஒரு குரல் வந்தது.

''இப்ப இருக்கிறது தோட்டமும் நன்செய்யும்தானே. இரண்டையும் தனித்தனியா பிரிக்க வகையில்லே. மதிப்பு போடுறப்ப நன்செய்க்கு கூடுதலா வருது'' என்று சொல்லி, வந்த காரியத்தைத் தொட்டார் முன்னாலிருந்த கிராமக் கணக்கர்.

கொஞ்சம் இழுத்துப் பிடிப்பதற்குள்ளாகக் கணக்கர் அவசரப்படுகிறாரே என்ற விதத்தில் பொன்னுரங்கம் தயங்கினார்.

தோட்டத்தைக் கன்னையாவுக்குக் கொடுத்து — நன்செய்யிலும் ஒரு பங்கு கொடுக்கவேண்டும் என்றஎண்ணம் அவருக்கு இருந்தது. ஊரறிய அந்தத் தோட்டத்தை உருவாக்கியவனே கன்னையா. அவனது உழைப்புக்குப் பலன் இருக்க வேண்டாமா?

''என்ன கன்னையா—நீ என்ன சொல்றே?'' என்று அவனிருந்த பக்கமாகத் திரும்பிக் கேட்டார் பொன்னுரங்கம்.

கன்னையாவும் முன்னால் வந்து உட்கார்ந்தான்.

''நான் என்னங்க சொல்லப் போறேன். நீங்க பெரியவங்க பாத்து என்ன முடிவு சொன்னாலும் ஒத்துக்கிட்டுப் போறேன்'' என்றான்.

பொன்னுரங்கம் திரும்பினார்.

''தங்கராசு—நீ ஏதாவது சொல்லணுமா?'' என்று கேட்டார்.

''நஞ்சையையும்... தோட்டத்தையும் தனித் தனியாவே பிரிச்சிடுங்க'' என்று கேட்டுக் கொண்டான் அவன்.

''தனித்தனியா எப்படிப் போட முடியும். மதிப்பிலே தோட்டம் குறையத்தானே செய்யும்!''

''அண்ணன் நஞ்சையை எடுத்துக்கட்டும். நானே தோட்டத்தை எடுத்துக்கிறேன்'' என்று தங்கராசு சொன்னபோது, கூடி இருந்தவர்களிடையே பரபரப்பு ஏற்பட்டது. இளையவன் இப்படித் தானாகவே வந்து விட்டுக் கொடுப்பான் என்பதை யாருமே எதிர்பார்க்கவில்லை.

தலைவாசலையடுத்த உள் நடையில் பிள்ளைகளுடன் உட்கார்ந்திருந்த கன்னையாவின் மனைவி முத்தம்மாள், எழுந்து ஆவலோடு நிலைப்படியோரமாக வந்து நின்றாள்.

பொன்னுரங்கம் கன்னையாவைத் திரும்பிப் பார்த்தார்.

இவ்வளவு காலம் அரும்பாடுபட்டதுக்கு கொஞ்சத்துக்காவது பலன் கிடைச்சிருக்கு.

''என்ன கன்னையா...அப்படியே முடிக்க வேண்டியதுதானே'' என்று மகிழ்ச்சி ததும்பக் கேட்டார் பொன்னுரங்கம்.

கன்னையா பேசாது உட்கார்ந்திருந்தான்.

''சொல்லுங்க'' என்று முத்தம்மாளும் உள்ளிருந்தே தலையை நீட்டிச் சொன்னாள்.

''உன் மனசிலே இருக்கிறதையும் சொல்லு கன்னையா?'' என்று மேலும் கேட்டார் பொன்னுரங்கம்.

கன்னையா தலைநிமிர்ந்தான்.

''தோட்டத்தைத் தம்பி கட்டிக் காத்துவிடுவானா?'' என்று கேட்டான்.

''பாகம் பிரிக்கிறப்ப இந்தக் கவலையெல்லாம் உனக்கெதுக்கு'' என்று கேட்டார் கணக்கர்.

''சரி...ன்னு சொல்லுங்க'' என்று, மேலும் ஆத்திரத்துடன் குறுக்கிட்டாள் முத்தம்மா.

கன்னையா வாய் திறக்கவில்லை.

வந்திருந்தவர்களில் யார் யாரோ எடுத்துச் சொன்னார்கள்.

பொன்னுரங்கத்துக்கு, கன்னையா இப்படி மௌனமாக இருப்பதன் கருத்து அப்போது புரியவில்லை. ''இந்த முடிவிலே உனக்குச் சம்மதம் இல்லையின்னு எடுத்துக்கலாமா?'' என்று முடிவாகக் கேட்டார்.

''ஒருபொழுது தவணை கொடுங்க. நாளைக்கிச் சொல்கிறேன்'' என்று கடைசியாகக் கேட்டுக்கொண்டான் கன்னையா.

அதற்கு மேல் யார் என்ன பேச முடியும்?

''இதிலே யோசிக்கிறதுக்கு எதுவும் இருக்கிறதாத் தெரியலே, எதுக்கும் ஒரு முடிவுக்கு வந்து காலையிலே சொல்லு'' என்று சொல்லிவிட்டுப் பொன்னுரங்கம் எழுந்தார்.

கூட்டமும் கலைந்தது.

வீட்டிற்குள் நுழைந்த கன்னையாவை—பிள்ளைகளையும் இழுத்துக் கொண்டு ஆவேசத்தோடு பின் தொடர்ந்தாள் முத்தம்மா.

* * *

3

தகப்பன் கண்ணை மூடியபிறகு, பத்து ஆண்டுகளுக்கு முன்பாக, அந்தத் தரிசு நிலத்தைச் செய்கால் படுத்த ஆரம்பித்தான் கன்னையா. அதை வளமான தோட்டமாக்கி விடவேண்டும் என்பதில், அவனுக்கு ஓர் ஆவேசமே பொங்கி வந்தது. அவனது இளமை முறுக்கிலே எழுந்த உழைப்பையெல்லாம், இந்த மரங்களுக்காக, இந்த மண்ணிலே பாடுபடுவதிலேயே செலவிட்டான். தன்னை மறந்து உழைத்துக் கொண்டே இருந்ததில், அது பொதுவான சொத்து என்பது அவனுடைய நினைவிற்கு எட்டவே இல்லை.

மேட்டுப்பாங்கான களத்திலே வற்றாத ஊற்றோடு கிணறு அமைந்துவிட்டது. மொத்தம் மூன்று ஏக்கர் பரப்புக்கும் தலைகீழாக நீர்பாயும்.

கிணற்றுக்கு அருகாமையில் ஓர் ஏக்கருக்கு வரப்பெடுத்து அச்சுப் போட்டு வயலாக்கினான். அதில் ஒருபோகம் நெல் விளையும். மற்றபடித் தோட்டம் முழுதும் பலவகையான கனிதரும் மரங்கள் கண்ணுக்கு அழகாகத் தோற்றமளிக்கும்.

தோட்டத்தைச் சுற்றிலும் பாதுகாப்பான சீமைக் கருவேல் வேலி. அதையடுத்து, நெட்டுக்கு, உள்சுற்று முழுவதுமாகத் தென்னைக் கன்றுகள். மையத்திலே, சூலுற்ற பேரிளம் பெண்கள் மஞ்சள் பட்டுடுத்தி நிற்பதே போன்று, வரிசை வரிசையாக மஞ்சள் நிறப் பூக்களைச் சொரிந்து நிற்கும் ஒட்டு மாமரங்கள். இடையிடையே பசுமையான தோகைகளை விரித்தாடும் பப்பாளி மரங்கள்; இன்னும், கொய்யா, பலா மரங்களும் வகைக்குச் சில உண்டு.

கன்னையா இந்த மரங்களுக்கு மத்தியிலே உழைத்துப் பழகிப் போனவன். அவை, துளிர்விட்டு, கிளைவிட்ட ஒவ்வொரு பருவத்திலும், அவனும் அவற்றோடு கலந்துவிட்டவன். ஒரு செடி நோயுற்று, இலைகருகி நின்றால், அதற்கு மருந்தடித்து, பக்குவம் செய்து, தெளிவடைந்த பிறகுதான் அவனுக்குக் கண்ணுறக்கமே வரும்.

இன்றைக்கு முத்தம்மாளின் பேச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தோட்டத்திற்கே ஓடிவந்து, கிணற்றுக்குப் பக்கத்திலே கிடக்கும் பட்டியல் கல்லின்மீது அமர்ந்து, எதிரே குடைபோல் கவிழ்ந்திருக்கும் தோட்டத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறான் கன்னையா.

''தோட்டத்திலே என்ன புதையலா இருக்கு?'' என்கிறாள் முத்தம்மா.

கன்னையா குனிந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தான்.

அதோ, தென்னையெல்லாம் பாளை போட்டு, மஞ்சப் பூசி நிக்கிதே...அது புதையல் இல்லையா?

பின்புறமாகச் சந்தடி கேட்டது. முத்தம்மாளும் தொடர்ந்து வந்துவிடுவாளென்று அவனுக்குத் தெரியும்.

மேல் மூச்சோடு பக்கத்தில் வந்து நின்ற முத்தம்மாளுக்குக் கோபம் பெருகி இருந்தது.

''எதுவும் சொல்லாம—வழக்கம் போல இங்கே வந்து உட்கார்ந்திட்டிங்களே—இது நல்லா இருக்கா?'' என்று குமுறலோடு கேட்டாள் அவள்.

''என்ன சொல்லணும். உனக்குத் தெரியாதது என்ன இருக்கு'' என்று பதட்டமில்லாமலே சொன்னான் அவன்.

''இவ்வளவு காலமா உழைச்சது போதாதா? இனிமேலாவது நன்செய்யை வாங்கிக்கிட்டு நிம்மதியா இருக்க வழி விட மாட்டிங்களா?'' என்று சொல்லி அவனுடைய காலடியிலே உட்கார்ந்தவளுக்குக் கண்களிலே நீர் வழிந்தது.

கன்னையா குனிந்து அவளைப் பார்த்தான்.

''எனக்கு நிம்மதி இங்கேதான் இருக்கு'' என்றான்.

அவள் அழுகையும் குமுறலுமாகச் சொன்னாள். "கழுத்துக் கொடுத்த நாள் முதலா நானும் பார்த்துக்கிட்டுத்தானே இருக்கேன். நான் எதுக்கு, பிள்ளைக எதுக்கு, தோட்டம் தான் பெரிசு...உங்களுக்கு.''

அவன் சற்று நேரம் மௌனமாக இருந்தான். பிறகு, ''நல்லா தலை நிமிர்ந்து பாரு... இந்தக் கையாலே நட்டுவச்ச அத்தனை மரங்களும்—இப்ப பூத்துக் குலுங்கி நிற்குதே இவை எனக்குப் பிள்ளைக இல்லையா?''

''நான் கண்டதுமில்லை கேட்டதுமில்லே. உங்களுக்குப் பித்துத்தான் பிடிச்சிருக்கு.'' அவள் மேலும் சொல்லிக்கொண்டே இருந்தாள். கடைசியாக அவன் சொன்னான்.

''என் தம்பி என்னைப் புரிஞ்சுக்கிட்டிருக்கிற அளவுக்கு உனக்கு என்னைப் புரியலே.''

''என்ன புரியலே'' என்று திருப்பிக் கேட்டாள் அவள்.

அவன் கீழே இறங்கி அவளுக்குப் பக்கமாக உட்கார்ந்து கொண்டான்.

''இந்தத் தோட்டத்தை விட்டு விட்டு என்னாலே உயிரோடு இருக்க முடியும்னு......நம்புறியா முத்து'' என்று கேட்டபோது, அவனது கண்கள் கலங்கின.

முத்தம்மாள் திடுக்கிட்டவளாகத் திரும்பினாள்.

''என்ன வார்த்தை பேசுறிங்க''

''உள்ளதைச் சொல்லிட்டேன்'' என்று கலக்கத்துடன் சொன்னான் அவன்.

முத்தம்மாள் சற்று நேரம் வரை அவனைப் பார்த்தவாறே உட்கார்ந்திருந்தாள். பிறகு குனிந்து கண்களைத் துடைத்துக்கொண்டு அவனுடைய கரங்களைப் பற்றிக் கண்களிலே ஒற்றிக்கொண்டாள்.

அவன் சிரித்தான்.

''உங்க மனசு வேறே என் மனசு வேறயா? எனக்கு நீங்கதான் வேணும்'' என்று சொன்னவள், அவனுடைய தோளோடு சாய்ந்து கொண்டாள்.

பஜ்ஜி, போண்டா, உப்புமா — ஒன்றியம் விற்பனை செய்தல்

கோதுமையினால் செய்யப்பெற்ற உப்புமா, சப்பாத்தி, சுக்கா ரொட்டி, பஜ்ஜி, போண்டா, இனிப்புப் பொருள்கள் முதலியவற்றைச் செய்யார் ஊராட்சி ஒன்றியம் (வட ஆர்க்காடு) அடக்க விலையில் மக்களுக்கு விற்பனை செய்துள்ளது.

கோதுமை உணவை மக்கள் விரும்பி உண்ண வேண்டுமென்பதற்கெனச் செய்யார் ஒன்றியம் இம் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

ஏனைய ஒன்றியங்களும் இதைச் செய்யலாமே !

ஆட்டுப்பாக்கம் காட்டும் வழி

உயிர்த்துடிப்பின்றி உறங்கிக் கிடந்திருக்க வேண்டிய ஒரு கிராமத்தில், கிராம மக்களின் தளரா முயற்சியினால் இன்று மாபெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள நெமிலி ஊராட்சி ஒன்றியத்திலிருக்கும் ஆட்டுப்பாக்கம் கிராமத்தில் நடந்ததைத்தாம் இங்குக் குறிப்பிடுகிறோம்.

அந்தக் கிராமத்திற்கு மின் வசதியைக்கொண்டுவருவதற்காகச் சுமார் 15 ஆண்டுகளுக்குமுன் நான்கு கிராமவாசிகள் முதல் முயற்சி மேற்கொண்டார்கள். தெரு மின்விளக்குகளை நிர்வகிக்கும் பொறுப்பைப் பல்லாண்டுகளுக்குமுன் அந்த ஊராட்சி ஏற்றுக் கொண்டதன் பின், அக் கிராமத்தின் வளர்ச்சி மேலும் துரிதமாயிற்று. பாசன வசதிகளை அதிகமாக்குவதற்கு ஒரு தூண்டுகோலாக மின் இறவை இயந்திரங்களை உழவர்கள் வரவேற்றனர். தெருவிளக்கு வசதிகள் பெருகின. வசதியுடன், வானொலிப் பெட்டிகளும் வந்தன. அந்தக் கிராமம் இவ்வாறாக வெளி உலகுடன் தொடர்பு கொள்ள முடிந்தது.

நவீன வேளாண்மை உத்திகளைக் கையாளுவதற்கு அந்தக் கிராமம் ஆயத்தமாக இருப்பதிலிருந்து, எந்தத் துறையிலும் முதல் முயற்சி மேற்கொள்வதற்குக் கிராமவாசிகள் தயங்குவதில்லை என்பது தெரிய வருகிறது.

''ஐ.ஆர். 8'' இன நெல்லை, நெமிலி ஊராட்சி ஒன்றியத்தில் முதன் முறையாகச் சாகுபடி செய்த கிராமம் ஆட்டுப்பாக்கமே. இதில் அந்தக் கிராமம் பெருமை கொள்கிறது. ''ஐ. ஆர். 8'' இன நெல்லைப் பயன்படுத்தியதனால் ஏற்பட்ட அமோக விளைச்சலின் காரணமாக, ஆட்டுப்பாக்கம் ஊராட்சியின் தலைவர் அந்த இன நெல்லையே பயன்படுத்துமாறு ஊக்குவிக்கிறார். இவர் நெமிலி ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் இருக்கிறார். எப்போதும் சாகுபடி செய்யும் நெல் இனத்திலிருந்து, ஏக்கருக்குச் சராசரியாக 20 மூட்டைகள் மட்டுமே நெல் விளையும். (ஒரு மூட்டையில் 75 கிலோ நெல் இருக்கும்), ஐ.ஆர். 8 வகையைப் பயன்படுத்தியபோது குறைந்த அளவாக 35 மூட்டைகள் விளைச்சலிருந்தது. இந்த கிராமத்தில் உள்ள ஒரு நாற்றங்காலில் இருக்கும் அறிவிப்புப் பலகை ஒன்றில் ஐ.ஆர்.8 இன நெல்லை ''அதிசய நெல்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆட்டுப்பாக்கத்தில், சிறிய அளவில் துவங்கிய இந்த முயற்சி அந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மற்றக் கிராமங்களுக்கும் பரவியிருக்கிறது. சாகுபடி செய்யப்படும் 450 ஏக்கர் மொத்த நிலப்பரப்பில், 250 ஏக்கரில் ஐ.ஆர். 8 இன நெல்லையே சாகுபடி செய்கிறார்கள்.

தீவிர விளைச்சல் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஊராட்சி ஒன்றியம் நவீன வேளாண்மைக் கருவிகளை வாங்கியிருக்கிறது. இப் பகுதியில் உள்ள உழவர்களுக்கு இவற்றை வாடகைக்கு விடுகிறார்கள்.

ஒரு துளி மை
பத்து இலட்சம்பேர்களைச் சிந்தனை
செய்யத் தூண்டக்கூடியது.

— பைரன்

தள்ளா விளையுள் ஆடுதுறை

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்'—அந்த
'உண்டி முதற்றே உலகு'—அந்த
உண்டிக்கு உயிர்கொடுக்கும் பயிர்கள் தம்மை
கண்டறிந்து பயிர்செய்த வகைதான் சொல்வேன்
உழைப்பினிலே உயர்ந்த பெரும் உழவன் என்றே!

* * * *

பெருகிவரும் மக்கள்தொகை கட்டுப்பாடும்—நாட்டில்
பெருக்கிவரும் உணவுமுறை திட்டத்தோடு—அரசும்
அரசுவழி குடிமக்கள் இருப்பும் நன்றாம்!

உரிமையில் உயிரை வைத்தான்
உயிரினில் மானம் வைத்தான்—அந்த
''மானத்தை அடகு வைத்து
உணவுக்கு அலையலாமா?'' என்ற
கொள்கையில் உண்மை கண்டார்!

* * * *

உணவுத் துறையினிலே—நாடு
உயர் தன்னிறைவு பெறவேதான்
உணவுப் பெருக்கத்தையே—தீவிர
மாக்கி ஆய்வு நடத்தியதே!—அந்தத்
தீவிர சாகுபடித் திட்டம் தன்னில்
ஆடுதுறை இருபத்து ஏழுநெல்லைப்
பாடுவதன் காரணந்தான் ஏதுசொல்வேன்.

* * * *

அரியும் சிவனும் மறந்தோடும்
அரிசிவா அரிசிவா என்றேங்கி
வரிசையில் நின்றுதவம் செய்யவைத்த
அரிசியே மூலமாம் முதற்பொருளாம்.
பரிசால் இதைக்கொண்டேன்! பரிசுங்கொண்டேன்!

* * * *

உழவப் புலவன்

நிலனைந்து பூதங்கள்—ஒன்றாய்க்
கலந்த மயக்கந்தான்—நன்றாம்
உலகம்! அதன் வழியே—அந்தக்
கலப்புச் சுவையன்றோ—இந்தக்
கலப்புத் திருமணமும்?
கலப்பில் சுவை வைத்தான்—மக்கள்
கலப்பில் சுவை கண்டார்—பயிர்
கலப்பில் பயன் கொண்டார்—அந்தக்
கலப்புப் பயிர்தான்—இந்த
'சப்பான்' நங்கைக்கும்
இந்தியத் தந்தைக்கும்
கலப்பில் பிறந்தமகள் ஆடுதுறை
இருபத்தேழு; இவள் ஆடுதுறை
பிறந்ததினால் ஆடுதுறை பெயர்பெற்றாள்!
ஆடுதுறை சாகுபடி
பாடுமுறை கேளுங்களீர்!

* * * *

நாற்றங்கால் :

காற்றுப் புழுதியினில் பன்னிரு சென்டு
நாற்றுவிட நிலத்தைப் பக்குவம் செய்து
ஏற்ற தொழு உரத்தை இட்டதில் மீண்டு
ஏரை உழச்செய்து சேறாய்ச் செய்தேன்!
வேளாண்மை அலுவலகத்தில் பதினெண்கிலோநெல்
வாங்கிவந்து 'அக்ரசான்' கலந்து முளைவைத்தேன்.
வேளாண்மைப் பயிர்நிலத்தில் மறுநாள் விதைஇரைத்தேன்.
விளைகின்ற பயிரென்று முளையில் கண்டேன்!
வளர்கின்ற பயிர்கண்டு பதினைந்தாம் நாளில்
கிலோ அம்மோனியம் சல்பேட் உரம்இரைத்தேன்;பின்
இருபதிலே பி.எச்.சி. பத்துசதம் தூவி
இளம் பயிரை நோய் அணுகாப் பாதுகாத்தேன்!

விளைநிலம் :

நன்செய்யினில் பத்துவண்டி தொழுஉரத்தை இட்டு
முன்பு தரிசடித்து மறுநாள் சேறடித்துவிட்டு
நன்கு பரம்படித்து வரப்பெடுத்துப் பின்னர்
நற்கொழுஞ்சி இருவண்டி மிதித்துச் சமன்செய்தேன்!
நன்றாக வளர்ந்த பயிர் இருபத்தைந்தாம் நாள்
நாலைந்து விரற்கிடை இடையில் விட்டு

நெல்லே பயிரிடு! பயன் பெறு!

மண்ணுழ வரிசைப்படி நடவும் செய்தேன்!
மதிகதிராய்ப் பயிர்வெடித்து வளர்ச்சி காட்ட
கொன்றுயிரின் கொலைஞரைத்தான் கடிதல்போல
களையெடுத்தேன்; கலப்புரத்தை ஐந்துமூட்டை
நன்றாக மேலுரமாய்த் தெளித்தேன் நோய்க்கு
'என்டிரி'னெனும் மருந்தடித்தேன்; வளர்ச்சிகண்டேன்!

* * * *

வளரும் பயிர்நிலத்தில்—உலகம்
வாழத் துடிக்குதடா—இந்த
வளரும் பயிர்நமக்கு—பல
நீதி படிக்குதடா!

* * * *

கன்னியரின் பருவம்போல் வளர்ச்சிகாட்டும்
காளையரின் திறம்போல நிமிர்ந்துநிற்கும்
எண்ணரிய கலைவல்ல அறிஞன் போல
எழிலுருவில் கருக்கொள்ளும், தமிழைப்போல
பின்னலொடு தலைவிரித்து மணக்கும்; பூவில்
பெருஞ்செல்வ மேலோர் போல் விளைச்சல்காட்டும்
கன்னித்தமிழ்ப் பெண்ணைப்போல் நிலத்தை நோக்கும்
கற்றபெரும் சான்றோர்போல் தலையும் சாயும்!

நூற்றைந்து நாள்சென்று விளைச்சல் கண்டு
நெல்லறுத்துக் களத்திட்டேன்; அடித்துப் பார்த்தேன்;
தூற்றிமணி அளந்துவிட வியப்பை யூட்டும்
நூறுபத்து மூன்றடுக்கில் கிலோவில் காட்டும்
வேற்றுவகை நெல்லெல்லாம் இதன்முன் நிற்கா
விதைத்துப்பார் ஆடுதுறை! விளைச்சல் நன்றே!
ஏற்றமுறும் வீட்டுக்கும் விளைச்சல் வேண்டும்
ஏனிந்த நாட்டுக்கும் வளர்ச்சி யுண்டே!

* * * *

'பசியும் பிணியும் நீங்க
வசியும் வளனும் சுரக்க'
தள்ளா விளையுள் ஆடுதுறை
நெல்லே பயிரிடு! பயன்பெறு!!

ஆடுதுறையே அதிகவிளைச்சல்—அதனால்
மேழிச்செல்வம் கோழைபடாது!

அமோக விளைச்சலுக்கு யூரியா

இது ஓர்
நெய்வேலி
லிக்னைட்
கார்ப்பொரேஷன்
தயாரிப்பு

FDSNLC 1142TM

உழவர் நடைமுறை எழுத்தறிவு இயக்கம்

நெ.து.சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி.
சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர்

கல்வி என்பது கண்ணெனத்தகும். கல்விக் கண் நமது பிறப்புரிமை. இது, எல்லோருக்கும் பிறப்புரிமை. இப் பிறப்புரிமையை உலக நாடுகள் ஒப்புக்கொண்டு இருபது ஆண்டுகள் ஆயின. ஆயினும், இது எல்லோருக்கும் கிடைப்பதற்கான முயற்சி, இனியும் தேவைப்படுகிறது. பெருமளவும் தேவைப்படுகிறது. காரணம் என்ன?

இன்றும் உலக மக்களில் பெரும்பாலோர் எழுதப் படிக்கக்கூடத் தெரியாதவர்; நம் இந்திய மக்களிலும் நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் எழுத்தறிவற்றவர்கள். இவ்வறியாமை நோய், வாழ்க்கையைப் பாழ்படுத்துகிறது. மக்களாகப் பிறந்தவர்களை, மக்கள் உருவில் உள்ளவர்களை, மக்கட் பண்போடு பேசவும் மரியாதையோடு நடக்கவும் முடியாமல் முடமாக்கி விட்டுள்ளது. எனவே, நாட்டின் பொதுத் தரம் கீழாகி உள்ளது.

கூடித் தொழில் புரியவும் அறிவு தேவை. காலத்திற்கேற்ற அறிவு தேவை. இவ்விஞ்ஞான யுகத்தில், தொழில் துறைகளில் மட்டுமல்லாது, பயிர்த்தொழிலுக்கும் கல்வியறிவு துணையாகும். அறியாமையில் மூழ்கியுள்ள எந்த நாடும், பொருளாதாரத்தில் போதிய அளவு முன்னேறியதில்லை. பொருளாதார வளம் பெற்ற எந்த நாட்டிலும் பொதுமக்கள் எழுத்தறிவு பெருமலில்லை. பொருள் வளமும் கல்விப்பெருக்கும் கைகோர்த்து நிற்பதே உலக வரலாறு. எழுத்தறிவு புதிய முறைகளைப் படித்துத் தெரிந்துகொள்ள உதவும். எனவே உணவு உற்பத்திப் பெருக்கிற்கும், உழவர்களிடையே எழுத்தறிவு வளரவேண்டும். மரக்கலப்பைக் காலம் மாறிவருகிறது. இயந்திரக் கலப்பைகள் கிராமங்களுக்கும் வந்துவிட்டன. இயற்கை எருவோடு, இரசாயன உரம் சிற்றூர் தோறும் நுழைந்துவிட்டது. இவற்றை நல்ல முறையில் பயன்படுத்த எழுத்தறிவு வேண்டும்.

பாலப் பருவத்தே, கல்வியைத் தொடங்கிவிடவேண்டும். ஆனால் நம்மவர் பலருக்கு அப்போது கல்வி தவறிவிட்டது. ஒருமுறை தவறிவிட்டால் எப்போதும் பெறவேண்டாம் என்பது அநீதி. சின்னஞ்சிறு வயதில் படிக்கத் தவறிவிட்டதால், பின்னர், வாலிபத்தில், நடுவயதில், ஏன் முதுமையிலும் படிப்பு வராது என்பது அறியாத பேச்சு. சிறுவர்களுக்கு, ''பசுமைத்தன்மை'' கல்விக்கு மூலதனம் ஆகும். வயது வந்தவர்களுக்கோ ''வைராக்கியம் மூலதனம்''; அவர்களுடைய வாழ்க்கை அனுபவம் பெரிய துணை. இவ்வனுபவமும், வைராக்கியமும் முதியோர் எழுத்தறிவு முயற்சிக்கு வேகம் கொடுக்கின்றன. இவ்வேகத்தால் உந்தப்பட்ட முதியவர்கள் சிலவேளை சிறுவர்களைவிட விரைவாக எழுதப் படிக்கக் கற்றுக்கொள்கிறார்கள். ஏராளமான பத்திரிகை நடமாட்டமுள்ள இந்நாட்களில், முதியோர் பெற்ற எழுத்தறிவு வாடி, பட்டுப் போவதில்லை. மாறாக, எளிதில் கிடைக்கும் நாளிதழ்களும், திங்கள் இதழ்களும் எழுத்தறிவைப் பச்சென்று இருக்கத் துணை செய்கின்றன. இதுவே முதியோர் எழுத்தறிவு இயக்கத்தின் படிப்பினை. எனவே முதியோர் கல்வி தேவை; இது பெறக்கூடிய ஒன்று; நிலைக்கக்கூடிய ஒன்று.

இளமையில், கல்வி பெறும் அரிய வாய்ப்பினை இழந்துவிட்டு, வாலிபர்களாகி, முதியவர்களாகி, உலகிற்கு உயிர் கொடுக்கும் உழவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல இலட்சக் கணக்கான உழவர்களுக்கும் எழுத்தறிவு ஊட்டவேண்டும். இதனால் அவர்கள் முழு மனிதத் தன்மை பெற வாய்ப்பு உண்டு. அவர்கள், உழவுத் தொழிலை மேலும் திறமையாகச் செய்ய வழி ஏற்படும். உழவுத் தொழிலின் தரம் உயர்ந்தால்... உணவு உற்பத்தி பெருகும்.

பல பலன் விளைவிக்கும் உழவர் எழுத்தறிவு இயக்கத்தை நம் இந்திய நாட்டில் சில பகுதிகளில், முன்னோடித் திட்டமாக நடத்திப் பார்க்கக் கருதியது இந்தியப் பேரரசு. ''யூனெஸ்கோ'' என்றழைக்கப்படும் உலகக் கல்வி, விஞ்ஞான, பண்பாட்டு நிறுவனமும், உலக உணவு, விவசாயக் கழகமும் இக்கருத்தினை வாழ்த்தி ஆதரித்தன.

எப்பகுதிகளில் தொடங்குவதென்று ஆலோசிக்கப்பட்டது. மிகு விளைச்சல் மாவட்டங்களாக ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் இம்முன்னோடித் திட்டத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது.

எத்தகைய எழுத்தறிவுப் பாடங்கள் முதிய உழவர்களுக்கு ஏற்றது என்ற கேள்வி எழுந்தது. முதியோர் எழுத்தறிவுப் பாடங்கள் அவர்கள் வாழ்க்கை ஈடுபாடுகளையும் தொழில்களையும் சார்ந்ததாக இருக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. எனவே உழவர் எழுத்தறிவுப் பாடநூல் பயிர்த் தொழிலையும் அதை மேலும் சிறப்பாகச் செய்யும் வழியையும் பற்றியதாக அமைகிறது. இது வெறும் எழுத்தறிவல்ல, செயல்முறை எழுத்தறிவாகும்.

உழவர் செயல்முறை எழுத்தறிவு முன்னோடித் திட்டத்தைச் சென்ற ஆண்டு, பிற மூன்று மாநிலங்களில், மாநிலம் ஒன்றிற்கு ஒரு மாவட்டமாகத் தொடங்கினர். இவ்வாண்டு ஐந்து மாவட்டங்களில் இது செயலுக்கு வருகிறது. இவ்வைந்து மாவட்டங்களுள் நம் தமிழ் நாட்டைச் சேர்ந்த கோவை மாவட்டம் ஒன்றாகும்.

கோவை மாவட்டத்தில், உடுமலை வட்டத்தில், உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம் ஆகிய மூன்று ஒன்றியங்கள் இம்முயற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வோர் ஒன்றியத்திலும், மக்கள் ஆர்வம், மக்கள் தொகை, மின்சார வசதி, ஊக்கமுள்ள ஆசிரியர் இருப்பு ஆகிய அடிப்படையில் இருபது ஊர்களைத் தேர்ந்தெடுத்தோம். ஒவ்வோர் ஊரிலும் உழவர் செயல்முறை எழுத்தறிவு நிலையம் ஒன்று தொடங்கப்படும், ஒவ்வொன்றிலும் முப்பது முதியவர்கள் சேர்க்கப்படுவர். ஆறு மாத காலம் பயிற்சி பெறுவர்.

சாதாரணமாக, மாதத்திற்கு இருபது நாள், முதியோர் இரவுதோறும் இந்நிலையத்திற்கு வருவர். இரண்டு மணி நேரம் இருந்து பாடம் படிப்பர். அந்நேரத்தில் விவசாயிகளுக்கான வானொலி நிகழ்ச்சியைக் கேட்பர். பொதுக் கேள்விகளும் கேட்டு அறிவு பெறுவர். சாதாரணப் பள்ளிக்கூடங்களில் காணும் கண்டிப்பான, வளையாச் சட்டமுறை இங்கே இராது. இது பெரும்பாலும் உறவாடிக் கற்கும் முறையாக இருக்கும்.

இம்முதியோர் கல்வித் திட்டத்திற்காக, தனியாகப் பாட நூலொன்றை எழுதியுள்ளேன். அதைத் தமிழக அரசினரே, அச்சிட்டு, இலவசமாக, எல்லா முதிய மாணவர்களுக்கும் கொடுப்பர். மாணவர்களுக்கு எழுதப் பலகையும் நோட்டும்கூட இனமாகக் கொடுக்கப்படும். எனவே கற்போருக்குச் செலவு ஒன்றும் இல்லை. பள்ளிக்கூட நேரத்தையும் அந்தந்த ஊரின் நிலைக்கு ஏற்ப முன்பின் வைத்துக் கொள்ளலாம். ஆகவே முதியவர்கள்,

தங்கள் வசதிக்கேற்ப, ஓய்வுநேரத்தில் இரண்டு மணி நேரத்தை ஒதுக்கி எழுத்தறிவு பெறுவதோடு, விவசாயிகளுக்கான வானொலி நிகழ்ச்சிகளையும் கேட்டறிந்து நன்மை பெறலாம்.

முதியோர் கல்விக்கான பாட நூல், அவர்களின் தேவையையும், சக்தியையும் கருத்தில் கொண்டு, அதிகச் சுமையாகாதபடி, படிப்படியாக உயரும் வகையில் அமைந்துள்ளது. அந்நூல் ஆறுமுகம் என்ற நல்ல உழவரைப்பற்றியது. அவரது குடும்பம், வேலை, மக்கள், மனைவி வள்ளியின் ஆதரவு, அவர் பயிரிடும் தக்காண மக்காச்சோளம், ஐ. ஆர். 8 நெல் பற்றியும், ஊராட்சி மன்றம், கூட்டுறவு விற்பனைக் கழகம் பற்றியும் அந்நூல் கூறுகிறது. கணக்குப் பாடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அந்நூலில், இத்தனையும் சொல்ல எத்தனைச் சொற்களோ என்று மலைக்காதீர்கள். 312 சொற்களிலேயே இத்தனையும் அறிமுகமாகின்றன. அச்சொற்களிலும் பெரும்பாலானவை ஈரெழுத்து, மூன்றெழுத்துச் சொற்கள். எனவே, எளிதில் கற்கக்கூடிய சொற்கள். சொற்களில் எளிமை, கருத்தில் முதுமை கொண்டுள்ளது இந்நூல். இந்நூலைக் கற்று முடிக்க, மூன்று நான்கு மாதங்கள் ஆகும். அதற்கப்புறம், விருப்பமான நூல்களை எடுத்துப் படிக்கப்போதுமான துணை நூல்கள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

இவ்வழியில் ஆறு மாதங்கள் கல்வி கற்ற உழவர், செயல்முறை எழுத்தறிவுபெற்று, புதிய ஆர்வத்தோடும், தன்னம்பிக்கையோடும், அதிக ஊக்கத்தோடும் பயிர்த்தொழில் செய்து விளைச்சலைப் பெருக்குவதோடு, கல்விக் கண்ணைப் பெற்று அறிவொளியை மேன்மேலும் வளர்த்துக் கொண்டு சிறந்து வாழ்வர் என்பதைத் திடமாக நம்பலாம்.

உழவர் நடைமுறை எழுத்தறிவு இயக்கத்தை நடத்த, அறுபது ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு ஒரு வாரப் பயிற்சி கொடுக்கப்பட்டது. அவர்கள் அனைவரும் ஆர்வத்தோடு உறுதியான நம்பிக்கையும் தளராத முயற்சியும் உடையவர்களாக உள்ளனர்.

உழவர் நடைமுறை எழுத்தறிவு இயக்கத்திற்கு முழு ஆதரவும் ஊக்கமும் உதவியும் கொடுத்து, கல்விப் பயிரை வளர்க்கும்படி எல்லா ஊராட்சித் தலைவர்களையும் பெரியோர்களையும் வேண்டிக்கொள்வோம்.

வாழ்க கல்விப் பயிர்!

செழிக்க தானியப் பயிர்!

வாழ்க மக்கள் இனம்!

* * *

திருச்சி வானொலிப் பேச்சு

நிகர் ஏது?

''யார் பேசுவதில் எவ்வளவு இன்பம் இருந்தாலும், தாய் நம்மை 'வாடா மகனே!' என்று கூறும்போது ஏற்படும் இன்பத்திற்கு நிகரில்லை. அதுபோல தாய்மொழியின் இன்பத்திற்கு நிகர் ஏதுமில்லை.''

— அண்ணா

நீர் உயர நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எஃகும் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

MSSIC
PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



MSSIC
DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம், எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

MADRAS STATE SMALL INDUSTRIES CORPORATION LTD.

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்
தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்
35/2, உட்ஸ் ரோடு,
சென்னை-2.

வளரும் வருவாய்க்கு வாழை

தம் நாட்டில் எல்லாவிடங்களிலும் பெருமளவில் உற்பத்தியாகும் வாழைகளுக்கு வெளியுலகில் பெருமதிப்பும், விலையும் கிடைத்துள்ளன. சோவியத் யூனியன், இத்தாலி, மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு இந்திய வாழைப்பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட வண்ணமிருக்கின்றன. உலகின் மற்ற நாடுகளும், நமது வாழைப்பழங்களை இறக்குமதி செய்ய முயற்சிகள் மேற்கொண்டுள்ளன. இவற்றால் வெளி நாடுகளிலும், நம் நாட்டிலும் வாழைப்பழத்திற்கு நல்ல விலையும், விற்பனையும் கிடைத்துள்ளன.

இந்திய மண்ணில் விளைவிக்கப்படும் எந்த ஓர் உணவுப் பொருளையும் விட, வாழைப் பழங்களிலிருந்துதான் நமக்கு அதிக அன்னியச் செலாவணி கிடைக்கிறது. ஓராயிரம் ஏக்கர்களில் கரும்பை விளைவிப்பதனால் ரூ. 20 இலட்சமும், முந்திரியினால் ரூ. 12 இலட்சமும், மிளகினால் ரூ. 4 இலட்சமுமே கிடைக்கின்றன. ஆனால் அதே ஆயிரம் ஏக்கரில் வாழையைப் பயிரிடுவதாலோ, நமக்குக் கிடைப்பது ஒரு கோடி ரூபாய் அன்னியச் செலாவணியாகும்.

கவலையின்றி வாழ வாழை :

எனவே, உழவர்களில் பெரும்பான்மையினர் வாழையைப் பயிரிடுவதில் பெரும் ஆதாயம் பெறுகின்றனர்.

வாழையை வயல் வெளிகளில் மட்டுமின்றி, வீட்டுத் தோட்டங்களிலும் பயிரிடலாமல்லவா? ஒருவர் 365 வாழையை நட்டு விட்டாரானால், அவர் ஆண்டின் 365 நாட்களிலும் கவலையற்று இன்புற்று வாழலாம். வாழை ஆண்டு முழுவதும் பயிரிடப்படுவதால், ஆண்டு முழுவதும் நிலையான, மிகு வருவாய் தடையின்றிக் கிடைக்கிறது.

மற்றெல்லாக் காய்கறிகள், பழங்களிலில்லாத உயிர்ச் சத்துக்களனைத்தும் வாழைப்பழங்களில் மலிந்துள்ளன. எளியோர், செல்வர், நோயற்றோர், நோயுற்றோர், இளைஞர், முதியோர் எவரும் வாழைப் பழங்களை உண்பதில் பெருமகிழ்வடைகின்றனர். நமது ஒவ்வொரு குடும்ப நிகழ்ச்சியிலும் இப்பழங்கள் தவறாது ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

இதைக் காயாகவும், கனியாகவும், பொடியாகவும் உண்ணலாம். பல்வேறு நாடுகளில் இப் பழத்தைத் திரவமாக்கி, மிகச் சிறந்த பானமாகக் கருதி அருந்துகின்றனர். வாழைக்காயைப் பொடியாக்கி உண்ணுவதில் அதிகச் சத்துக்கள் உடலுக்குக் கிடைக்கின்றனவென்று தெரிந்துள்ளது. இதிலுள்ள சத்துப் பொருட்கள் கோதுமை மாவில்கூட இல்லையென்றும் கூறப்படுகிறது. மைசூரிலுள்ள மைய உணவு ஆராய்ச்சிக் கழகம் வாழைப்பழத்திலிருந்து சேமியா தயாரிக்கும் முறையை அண்மையில் கண்டுபிடித்துள்ளது.

எனவே வாழை உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கி, அன்னியச் செலாவணியையும் பெறுதற்கான முயற்சிகளை, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மேற்கொண்டுள்ளது. வாழையின் பல்வேறு கூறுகளையும் நுணுக்கமாக ஆராய்ந்து, செயல்படுதற்கென, ஐந்து ஆராய்ச்சி நிறுவனங்கள் அமைக்கப் பட்டுள்ளன. சின்சூரா (மேற்கு வங்கம்), ஆடுதுறை (தமிழ்நாடு), பூனா (மகாராஷ்டிரம்), துனுகு (ஆந்திரம்), கன்னரா (கேரளம்) ஆகியவிடங்களில் இந்நிறுவனங்கள் செயற்படுகின்றன.

சுமார் 60 வகை வாழைகள் இந்தியாவில் உள்ளன. ஆனால் அவற்றில் 12 இன வாழைகள் மட்டுமே வணிகப் பயிராகப் பெருமளவில் விளைவிக்கப்படுகின்றன. இவ்வினங்கள், உருசியில் சிறந்ததாக விருப்பது மட்டுமின்றி, நீண்ட பிரயாணங்களில் கெடாதிருக்கும் தன்மையும் கொண்டவையாகும்.

எனவே அருகிலுள்ள வேளாண்மை அலுவலர்களைச் சந்தித்துச் சிறந்த வாழையினங்கள் பற்றியத் தகவல்களைப் பெற்று வாழையைப் பயிரிட்டுப் பெரும் பயன் பெறுவீர்களாக!

['இன்டென்சிவ் அக்ரிகல்சர்' என்ற இதழிலிருந்து.]

விடுதலை நாள்

வல்லமைமிக்க ஓர் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபடும் ஆற்றலைப் பெற்றிட முடிந்தது என்று எண்ணும்போது, கடந்த காலத்தின் புகழ் ஒளி கண்களுக்குத் தெரிவது மட்டுமல்ல - இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளை - இன்னல்களை - நாம் தீர்த்துக் கொள்ளத்தக்க ஆற்றலைப் பெற்றிட முடியும்; பெற்றுக் கொள்வோம் என்ற உறுதியையும், அந்த உறுதி வழி நின்று பணியாற்றி நாட்டினைப் புன்னகைப் பூந்தோட்டமாக்கிட முடியும் என்ற திடமான எண்ணமும் தோன்றி எதிர்காலத்துப் பொன்னொளியும் நமது கண்களுக்குத் தெரிந்திடக்கூடிய நாள் விடுதலை நாள்!

— அண்ணா

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது,
உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு
உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண் பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4

1. நிறைமொழி மாந்தர் பெருமை :

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

பொன்னி நதியின் கரங்கள் பட்டுப் பொன்கொழிக்கும் ஊர் பொன்மேடு. அது இருநூறு குடும்பங்கள் கொண்ட சிற்றூர். ஊரைச் சுற்றிலும் எட்டிய தூரம் வரை வயல்கள்; ஓங்கி வளர்ந்த தென்னை மரங்கள்; அவற்றினூடே பாக்கு, பலா, வாழை மரங்கள்; இடையிடையே அடர்த்தியான செங்கரும்புத் தோட்டங்கள். இவை யாவும் தொலைவுப் பார்வைக்கு மரகதத்தின் குவியல் போலப் பச்சை வண்ணத்தைக் காட்டி நிற்கின்றன.

வயல்களிலே முதிர்ந்த நெற்கதிர்கள், கற்றுணர்ந்த மூதறிஞர்கள் போன்று தலைகளைச் சாய்த்து நிற்கின்றன; மெல்லிய பூங்காற்று அவைகளை மென்மையாக ஆட்டிவிட்டு ஒன்றோடொன்று இறுகத் தழுவச் செய்து பின் நெகிழச் செய்கின்றது. இந்த ஆழிசூழ் உலகம் நிலைத்திருப்பது எதனால்? தமக்கென வாழாது பிறர்க்கெனவே வாழும் தகைமையாளர்கள் இருப்பதால் தான். "பண்புடையார்ப் பட்டுண்டு உலகம், அது இன்றேல் மண்புக்கு மாய்வது மன்." "கண்ணோட்டம் என்னும் கழி பெரும் காரிகை உண்மையால் உண்டிவ்வுலகு." "உண்டாலம்ம உலகம்; தமக்கென முயலா நோன்றாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்பன தமிழிலக்கிய உரைகள். அவ்விலக்கியங்கட்கு இலக்கணமாக, அந்த ஓரறிவுடைய நெற்பயிர்கள் திகழ்கின்றன; வாடிய வயிற்றுக்கு உணவாக அமைகின்றன; உண்டி கொடுத்து உயிர் ஊட்டுகின்றன. உழுதுண்ணும் உழவர்களும், உழுவித்துண்ணும் நிலக்கிழார்களும் அப்பயிரை வாடாமல் காத்து, உயிரைத் தாங்கி நிற்கும் உடலையும் வாடாமல் செய்கிறார்கள். அது இயல்பே. ஆனால் உழுபவர்கள் மட்டுமா அதைக் காக்கிறார்கள். மெய்யுணர்வு கொண்ட ஞானிகளும் அப்பயிரை நோக்கியே வாழ்கிறார்கள். பயிர் வாடியபோது அவர்களும் வாடி ஆற்றாது அழுது புலம்பியிருக்கின்றனர். "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று உணர்வு மிகுந்து பாடினார் இராமலிங்க அடிகள்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்பதைச் சுட்டிக்காட்டும் முகத்தான் வலிமைமிக்க காளைகளைப் பூட்டிய ஏர்கள், வரிசையில் நிலத்தாயை வலம் வந்துகொண்டிருக்கின்றன. ஏர் பிடிக்கும் உழவர்களும் அத் தாய்க்குத் தலைசாய்த்து வணங்கிச் சுழன்று கொண்டிருக்கின்றனர்.

மறுப்க்கத்திலே அடர்த்தியான பசுமை மிக்க நாற்றுக்கள் தம் பிஞ்சு முகங்களைக் காட்டிச் சிரித்துக்கொண்டிருக்கின்றன இன்பக் கனவுகளைத் தங்கள் நெஞ்சகத்தில் ஏந்தி, முகத்

தில் புதுப்பொலிவு தவழ, புது வீட்டுக்குப் புகத் தயாராக இருக்கும் புது மணப் பெண்போல் அவைகள் தளிர்த்து, பூரித்து நிற்கின்றன. ஆமாம், அவைகள் பிறந்த இடத்தில் நிலைத்து வளர்வதில்லையே!

பக்கத்து நாற்றங்காலில் நாற்றுக்கள் பறிக்கப்பட்டுப் பிணையல் பிணையலாக, கட்டாக ஒன்று சேர்ந்திருக்கின்றன. விதையாக இருக்கும்போது, நெல்மணிகள் கோட்டையாகவோ அல்லது மூட்டையாகவோ ஒன்றாகக் குவிந்திருக்கின்றன. நாற்றங்காலில் தெளிக்கும்போது, பரவலாகப் பிரிந்து, தனித்தனியே வளர்கின்றன. பிறகு பிணையலாகக் கூடுகின்றன. வேறு நிலத்தில் ஊன்றப்படுவதற்காகப் பயணம் செய்கின்றன. வளர்ந்து, முதிர்ந்து நெல் மணிகளை ஈன்றெடுக்கின்றன. பின் அறுவடை செய்யப்பட்டுக் கட்டு கட்டாகக் களத்து மேட்டுக்குக் கொண்டு வரப்படுகின்றன. களத்திலே அடிக்கப்பட்டுக் கதிர் மணிகள் மீண்டும் ஒன்று சேருகின்றன. இது நெல்லின் வாழ்க்கை வட்டம்.

வானம் வழங்கும் அமிழ்தாம் நீரை தந்து செழிப்பான வயல்களை உருவாக்குகிறாள் காவிரித்தாய். ''பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருந்து உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவது வான் மழைதானே! அந்த வான் பொய்த்தால் விளைவு என்ன, பெருங்கடலும் வற்றும்; உழவரும் ஏர்கொண்டு உழமாட்டார். ஓர் அறிவுடைய பசும்புல்லின் தலையைக் கூடக் காணமுடியாது. கடல் சூழ்ந்த அகன்ற இவ்வுலகில் பசி என்னும் நோய் உள்ளே நிலைத்து நிற்கும்; உயிர்களை வருத்தும். பிறர் பொருட்டுச் செய்யும் தானமும், தம்பொருட்டுச் செய்யும் தவமும் இல்லை. ஏன்? வானோர்க்காக நடத்தும் நாள் வழிபாடு, திருவிழாவும் ஏது?'' உலகத்தார் அம் மழைக்கு என்ன கைம்மாறு செய்கின்றனர். மாரிதான் கைம்மாறு வேண்டாததாயிற்றே. அதைக் கடப்பாடாகக் கொண்டல்லவா அது ஒழுகுகிறது!

தியாகராசரின் தந்தை அம்பலவாணர் அவ்வூர்ப் பெருநிலக்கிழாராக இருந்தார். இருபது வேலி வளமான நன்செய் நிலமும் தோட்டமும் துரவும் இருந்தன. வண்டி மாடுகளும், உழவுமாடுகளும் கறவைப் பசுக்களும் ஏராளமாக இருந்தன. மாதம் ஒருமுறை மயிலம், நீலத்தூர், இலால்பேட்டை, சேத்தியாத்தோப்பு, கூத்தக்குடி, திருவண்ணாமலை முதலிய சந்தைகளுக்குப் போய் மாடுகளை மாற்றுவார்; புதிதாக வாங்குவார். வாங்கியவற்றை வரிசையாகக் கொட்டகையில் கட்டி, வருவார் போவாரை எல்லாம் அழைத்துவந்து காட்டி தன் மாடுகளின் பெருமையையும் அதன் மூலம் தன் பெருமையையும் காட்டிக் கொள்வதில் அம்பலவாணர்க்குத் தனி மகிழ்ச்சி.

வேற்றூர்களிலிருந்து அச் சிற்றூருக்கு வருபவர்கள் அவர் வீட்டில் தான் முதன் முதலில் வந்து தங்குவார்கள். அவர்களின் தேவைக்குத் தக்கபடி, மோர், இளநீர், காப்பி முதலியவைகளைக் கொடுத்து முதலில் நீர் வேட்கையை நீக்குவார். விருந்து படைக்காமல் யாரையும் வெளியில் அனுப்பமாட்டார். ''செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பார்.'' அதற்கு வேண்டிய பொருளுக்கு அவரிடத்தில் பஞ்சமில்லை; அருளும் இருந்தது. ஆகையால் அவர் இல்லம் அறச்சாலையாக இருந்து எல்லோருக்குமே இன்பத்தைத் தந்து கொண்டிருந்தது.

விருந்துக்கு முன்பு விருந்தினரைத் தோட்டத்துக்கு அழைத்துச் செல்வார். தென்னை மரங்களைக் காட்டுவார். இதற்கு வயது ஐந்து. அதற்கு வயது பன்னிரெண்டு. இது யாழ்ப்பாணத்துக் கன்று. அது கேரளத்தில் இருந்து வாங்கிவந்து பயிராக்கப்பட்டது. இவ்வாறாகப் பிறப்பு வளர்புச் சொல்வார். மாமரங்களைக் காட்டுவார். இது ஒட்டு, நீலம், பாதிரி, அது பச்சரிசி மரம், இது சாம்பிராணி மரம் என்று மரத்துக்கு ஒரு பெயராகச் சொல்லுவார். அவைகள் எங்கிருந்து எப்படிக் கொண்டுவரப்பட்டவை என்பதைக் கதைபோன்று சொல்வார். மாதுளை, எலுமிச்சை மரங்களையும், தழைத்து உயர்ந்திருக்கும் நெல்லிக்காய் மரங்களையும் அப்படியே காட்டி வருவார். எல்லாவற்றையும் காட்டி முடிப்பதற்குள் மதியமாகிவிடும். உண்மையிலேயே அத்தோட்டம் மிக்கக் குளிர்ச்சி

யுடையது. அதைச் சுற்றி வந்தாலே மனக் கவலைகள் மாறி மனத்தில் பசுமை எண்ணம் படரும். கடைசியாக அவர் காட்டுவது ஒரு பூச்செடி. பெயர்தான் பூச்செடியே தவிர அதற்குப் பூவும் கிடையாது; காயும் கிடையாது. ஆனால் இலைகளே பூக்கள் போன்று பல வண்ணங்கள் காட்டும்; ஆனால் மணக்காது. காகிதப் பூதான். பார்த்தீர்களா. இது 'போகன் வில்லா.' வைத்துப் பத்து ஆண்டுகள் ஆகின்றன. இங்கு வருகிற பெரிய அலுவலர்கள் இதன்மேல் பிரியப்படுவார்கள். வெட்டிவெட்டி அனுப்பிக்கொண்டே இருப்பேன். இதனால் என்ன பயன் சொல்லுங்கள்! இரண்டாவது உலகப் பெரும் போரில் சப்பான் நாட்டினர் சிங்கப்பூரைப் பிடித்தவுடன், என்ன உத்திரவு போட்டார்கள் தெரியுமா? உடனடியாக எல்லாக் குரோட்டன்சையும் தூக்கி எறிந்துவிட்டு அத்தொட்டிகளிலெல்லாம் காய்கறிச் செடிகளைப் பயிரிடவேண்டும் என்று கடும் உத்திரவு போட்டார்கள். யாராவது மீறினால் விசாரணை கிடையாது. கழுத்தை வெட்டிவிடுவான். அந்தச் செய்தியைச் சொல்வதற்கும், உணவு உற்பத்தியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கும்தான் அச் செடியை வைத்திருந்தார் போலிருக்கிறது.

உண்ணும்போதும், அவர் பேச்சை நிறுத்துவதில்லை. ''பார்த்தீர்களா. இந்தக் கத்திரிக்காய் மூலைக்கொல்லையில் காய்த்தது. பரங்கிக்காய் எப்படி? பருப்பு, உளுந்து, பயிறு, மொச்சை, புளி எல்லாம் நாங்கள் வாங்குவதே இல்லை. எல்லாம் எங்கள் நிலத்திலேயே விளைகின்றன. நெய் நிறையப் போட்டுக் கொள்ளுங்கள். என்ன காசுக்கா வாங்கப்போகிறோம். நெய், பால், மோர், தயிருக்கு எங்க தாத்தா காலத்திலிருந்து இந்த வீட்டில் பஞ்சமில்லீங்க'' என்பார்.

உணவு முடியும். இடையிடையே அம்பலவாணர் உத்திரவுகள் போட்டுக் கொண்டேயிருப்பார்.

''மாட்டைக் குளிப்பாட்டிக் கொண்டுவரச் சொல்; பால்காரன் வந்தவுடன் கறந்துகொண்டு வந்து கொடு.''

''அந்தி வேளை கடைக்குப் போகும் போது நினைவுபடுத்து. பிண்ணாக்கு, பருத்திக்கொட்டை வாங்கணும்.''

''சாயங்காலம் ஆள் வருவான்; தேங்காயை எண்ணிக்கொடு''

''இராயர் வருவார்; ஓர் ஆயிரம் எலுமிச்சம்பழம் கொடுத்துவிட்டுப் பணம் வாங்கி வை.''

''கீற்று முடைந்தாச்சு, எல்லாவற்றையும் கொட்டகையில் அடுக்கி வை.''

''இந்த ஆண்டு மாமரம் நல்ல காய்ப்பு; ஆட்கள் வந்தவுடன் வேலியைச் சரியாகக் கட்டச்சொல்'' என்றெல்லாம் சொல்லி அட்டாவதானம் செய்து கொண்டிருப்பார்.

உணவுக்குப் பின் படிப்பு அறைக்கு இட்டுச் செல்வார். படுக்கை அறையைக் காட்டக்கூடாதோ! அல்லது மாமரத்தடியையாவது மீண்டும் ஒருமுறை காட்டக் கூடாதோ! வயிறு புடைக்க உண்டுவிட்டுக் 'கட்டையைக்' கொஞ்சநேரம் கீழே கடத்தாமல் எப்படியிருக்கமுடியும்? விடுவாரா அவர். தரையில் பாய் விரிக்கப்பட்டுச் சுவரில் திருவள்ளுவரின் உருவப் படம் பெரியதாக ஒன்று மாட்டப்பட்டுள்ள அறையில் வத்தியை ஏற்றி வைப்பார். நறுமணம் கமழும். வரிசை வரிசையாக இருக்கும் அலமாரிகளைக் காட்டிக் கொண்டே வருவார்.

''இதோ பார்த்தீர்களா சுவடிகள்; இவை யாவும் திருக்குறள். இதில் எனக்கு மிகுந்த ஈடுபாடு. குறள் பற்றிய ஆராய்ச்சிகளை நிறைய எழுதி வைத்திருக்கிறேன். தமிழகத்திலுள்ள புலவர்கள் அனைவரும் என்னை நன்றாக அறிவார்கள். அதற்குக் காரணம் இந்தத் திருக்குறட் சுவடிகள் தாம். இராமநாதபுரம் சேதுபதி அவர்களின் அவைக்களப் புலவர்களும், மடாலயங்களிலுள்ள புலவர்கள் பலரும், திவான்கள், சமஸ்தானாதிபதிகள், அமைச்சர்கள் பலரும் இங்கு வருவார்கள். என்னிடம் விளக்கம் கேட்பார்கள். பாடங்கள் சொல்லிக் கொடுப்பேன். சுவடிகளை ஆராய்வார்கள். செவியுணவோடு, வயிற்றுக்கும் உணவு கொடுத்து அவர்களை நிறைவு செய்து அனுப்புவேன். கோடைக் காலத்தில் திருக்குறள் வகுப்பு நடத்துவேன். இலக்கணங்கள் போதிப்பேன்.

நூற்றுக் கணக்கான மாணவர்கள் இங்கு வந்து அமர்ந்து பாடம் கேட்பார்கள். இரண்டு மாதங்கள் நடத்துவேன். மா பூக்கும் பருவத்தில் வருவார்கள். பழுத்தவுடன் தான் திரும்புவார்கள். அவர்கள் என் வீட்டிலேயேதான் தங்குவார்கள். உணவுச் செலவு முழுதும் என்னுடையதுதான். அவர்கள் மட்டுமா? தமிழ்ப் பற்றுமிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள் இன்னும் அரசாங்க அலுவலர்கள் பலரும் இங்கு வந்து பாடம் கேட்பார்கள். என்னுடைய அலுவலோ கோட்ட ஆட்சித் தலைவரிடம் கைகட்டிப் பணி செய்யும் 'ஊர்க் கணக்கு' தான். ஆனால் அவ்வாட்சித் தலைவர்களும் கைகட்டிப் பணிந்து என்னிடம் பாடம் கேட்பார்கள். எனக்குப் பணிந்தா? இல்லை இல்லை! எல்லாம் அந்த வள்ளுவன்மீது கொண்ட பற்றால்தான்! அலுவலில் குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அவர்களுக்குப் போதையூட்டி மமதை கொள்ளச் செய்கின்றன. ஆனால் வள்ளுவரின் வாழ்க்கை விளக்க அதிகாரங்களோ அவர்களைப் பணியவைக்கின்றன. 'கலெக்டர்கள்' என்ன, மாபெரும் மன்னர்களே, ஏன் இந்த மாமண்டலமே அவருடைய "பொருளில்" அடங்கியவைதானே.

"இது தொல்காப்பியம்; குறள் குழந்தை என்றால் இக்காப்பியம் தந்தை. தமிழர் வரலாறு, இலக்கணம், இலக்கியம் எல்லாமே தொல்காப்பியம் தான்."

"இவை ஐம்பெருங்காப்பியங்கள்; இவை பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள்." "இவைகள் யாவும் இலக்கண நூல்கள்."

"இது தஞ்சை மன்னரிடமிருந்து கிடைத்தது. ஈட்டி, வாள், கேடயமா? இல்லை. அவைகளைவிடப் பெருமையும் வலிமையும் மிக்க நாடக நூல். ஐப்பசித் திங்கள் சதய விண்மீனில் இராசராசன் அவைக் களத்தில் அவர் முன்னிலையில் நடிக்கப்பட்ட நாடகம்."

"இவைகளெல்லாம் இசைநூல்கள்; இசைக்கருவிகள் பற்றிய யாவும் இதில் இருக்கின்றன."

"எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால், சொல்லாற் பரந்த பாவால் என் பயன், வள்ளுவனார் சுரந்தபா வையத்துணை." "ஓதற்கெளிதாய் உணர்தற் கரிதாகி வேதப்பொருளாய் மிக விளங்கித் தீதற்றோர் உள்ளுதோறுள்ளம் உருக்குமே, வள்ளுவர் வாய்மொழி மாண்பு" என்று தன்னை மறந்து பாடுவார். உடன் "அகர முதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று முணுமுணுத்துவிட்டுச் சில குறட்பாக்களின் பொருள் நயத்தைக் கூறி இன்புறச் செய்வார்.

ஊருக்குச் செல்லும்போது ஒரு குறளையும் பரிசாகத் தந்து அனுப்புவார்.

காலையில் எழுந்தவுடன் குறள் பாடிவிட்டுத்தான் மற்றக் காலைக் கடன்களைத் துவங்குவார். இரவு உறங்கப் போகுமுன்னும் அப்படியே செய்வார்.

கடிதம் எழுதும்போதும் ஒவ்வொரு கடிதத்திலும் ஒரு குறட்பாவை எழுதாமல் துவங்கமாட்டார்.

அலுவல் தொடர்பாக, 'தாசீல்தார்' அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு எழுதும்போது கூடக் குறளைத் தலைப்பிலே எழுதித்தான் பிறகு செய்திகளை எழுதுவார்.

"தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனாள்பவருக்கு' என்று ஒரு வெள்ளைக்காரத் துரைக்கு எழுதியனுப்பியிருந்தார். "என்ன", என்று கேட்ட துரைக்கு, "குறள்" என்று செயலாளர் சொல்ல, "வாட் ஈஸ் குறள்?" என்று அவர் குரல் கொடுக்க, அம்பலவாணரைத் துரை முன் நிறுத்த, அவரோ, "குறள் வள்ளுவரது குரல்: வாழ்க்கை விளக்கம்" என்று விளக்கி, ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்றையும் கொடுத்தார். அதற்குப் பிறகு அந்தத் துரைக்கு, அம்பலவாணரே துரை. அவருடைய இல்லத்துக்கு அடிக்கடித் துரையே வந்துவிடுவார். குறள் பற்றிய விவாதத்தைத் தொடங்கி விடை கேட்டுத் தெளிவார். இங்கிலாந்தில் உள்ள தன்னுடைய நண்பர்கட்கோ உறவினர்கட்கோ கடிதங்கள் எழுதும்

போதெல்லாம் குறளையும் எழுதிப் பெருமிதம் கொள்வார்.

அம்பலவாணர், தன்னுடைய தகவல்களுக்குப் பதில் வராத நேரத்தில் "தூங்குக தூங்கிச் செயற்பால, தூங்கற்க தூங்காது செய்யும் வினை" என்று எழுதி அறிவுறுத்துவார். அலுவலகங்களுக்கு எழுதும் பெரும்பான்மையான கடிதங்களுக்கு அக்குறள்தான் மிக்கப் பயன்பட்டது.

மாவட்ட நீதிபதிகளும் அவர் வீட்டிற்கு வருவார்கள். "சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபாற் கோடாமை சான்றோர்க்கு அணி" என்பதைத் தம் நெஞ்சகத்திலே ஏந்திச் செல்லும் வண்ணம் குறள் நீதியை நயமாக விளக்குவார். குற்றத்தை விசாரிக்கும்போது 'சிவில்', 'கிரிமினல்' சட்டவிதிகளுக்கு உட்பட்டே அவர்கள் நீதி வழங்குவார்கள். அம்பலவாணருடைய போதனையால் அவர்கள் குறளையும் ஒரு சட்ட நூலாகப் பாவித்து வறுமை, உணர்ச்சி, சூழ்நிலை காரணமாகத் தவறிழைத்தவர்களைச் சட்டத்தின் மூலமாக அணுகாமல் அனுதாபத்தோடு அணுகிப் பல வேளைகளில் கடிதோச்சி மெல்ல எறிந்திருக்கிறார்கள்.

வணிகப் பெருமக்களும் அவரிடத்தில் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களிடமும் அற வாணிகம் நடத்துவார். "வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தமபோற்செயின்" என்பதை நன்கு விளங்க வைப்பார்.

மருத்துவர்களிடம் அவருக்கு மிக்கத் தொடர்பு உண்டு. தன்னிடம் உள்ள பிணிகளாலா? அல்ல. அவர் தலை வலித்தது என்று ஒருநாளும் படுத்ததே கிடையாது. 'வாதம், பித்தம், சிலேத்துமம்' மூன்றும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும். "மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர் வளி முதலா எண்ணிய மூன்று" என்பதை நன்குணர்ந்தவராயிற்றே. மிகாமலும் குறையாமலும் இருக்க என்ன செய்வார்? உண்ட உணவு செரித்த பின்புதான் அவர் மற்றதைத் தொடுவார். அங்ஙனம் செய்தால் "மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு" என்பதை அறிந்தவர். "நோயாளியை நாடி, அவர் வைத்திருக்கும் பணத்தின்மீது மட்டும் கண் வைத்து அதையே நாடி, வாங்கிய பணத்துக்கு ஏதோ செய்யவேண்டுமே என்று எதையும் செய்யாதீர்கள்." 'நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்'. 'பேஷண்ட்', 'டாக்டர்', 'மெடிசின்', 'நர்ஸ்' என்று உலக மருத்துவம் நான்காகப் பிரித்து ஒவ்வொன்றுக்கும் முறை வகுத்திருக்கிறது. அதை அறிந்து ஒழுக வேண்டும். "உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான் என்று அப்பால் நாற்கூற்றே மருந்து' என்று மேற்கொள் காட்டுவார்.

இங்ஙனம் எல்லாத் துறைகளுக்கும் குறளை மேற்கோள்காட்டி அறிவுரை செய்பவர், உழவையே தொழிலாகக் கொண்டவர், "உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டே மென்பார்க்கு நிலை" என்று உழவின் பெருமையைப் பேசாமலா இருப்பார்? இப்படித் தன் மூச்சு, பேச்சு, செயல் யாவற்றிலும் குறள் மணம் வீசும்படிச் செய்தார்.

தலைமுறை தலைமுறைக்கு நீடிக்கும்படியாக அவருடைய முன்னோர்கள் சேமித்துவைத்திருந்த சொத்துகள் யாவும் அவர் தலைமுறையிலேயே அழிந்தன. அதற்கு இன்னொரு முக்கியக் காரணமும் இருந்தது. அவருடைய குழந்தைகளே "செல்வத்தை உடைக்கும் படையாக" இருந்தன. குழந்தைகள் ஒன்றா இரண்டா? ஏழு ஆண் குழந்தைகள் ஐந்து பெண் குழந்தைகள். "திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்", "அளவான குடும்பம் வளமான வாழ்க்கை", என்ற குடும்பக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தற்போதைய பரப்புரை அவர் அப்போதே அறிந்ததுதான். ஆனால் அவரால் இயலாத காரியம் அது ஒன்றுதான்.

தான் இருக்கும்போதே இரண்டு மூன்றுக்கு நல்ல காரியங்கள் செய்து வைத்துவிட்டுப் புகழ் ஒன்றையே பொருளாக வைத்துவிட்டு மறைந்தார் அம்பலவாணர். மூத்த பிள்ளையாயிற்றே தியாகராசர். அவர்மீது எல்லாப்பொறுப்புக்களும் விழுந்தன. மற்றவர்களுக்கெல்லாம் திருமணம் போன்ற நற்காரியங்கள் செய்யும் போது, குழந்தைகளோடு குழந்தை

களாக வளர்த்து வைத்திருந்த குடும்ப கவுரவம், அன்பு, அருள், பண்பு, யாவும் கொள்வினை கொடுப்பினைகளுக்கு நலமாக அமைந்தன. சொத்துக்களையோ மற்றவற்றையோ, பெண்ணைக் கொடுப்பவர்களோ எடுப்பவர்களோ கருதவில்லை. அம்பலவாணர் குடும்பத்தில் தொடர்புகொண்டால் போதும்; அதுவே சொத்து சுகம் எல்லாம் என்று வலியவந்து தொடர்பு கொண்டார்கள். முந்தையோர் சொத்துக்களில் வீடு மட்டும்தான் மிச்சம். எல்லோருக்கும் திருமணம் செய்துவைத்து விட்டார். தனித் தனிக் குடும்பமாகவும் பிரித்து வைத்து ''எண்ணத்தைப்போல் வாழ்வீர்களாக'' என்று வாழ்த்தி ஒரு வழியாகக் கணக்கை முடித்து ஒரு பெருமூச்சையும் விட்டார்.

அந்தக் காலத்தில் அரசு அலுவலுக்கே ஒரு தனிச்செல்வாக்கு. ''அரைக் காசு உத்தியோகம் ஆனாலும் அரசாங்க உத்தியோகமே மேல்'' என்று சொல்வார்கள். தந்தை பெருமைக்காகப் பார்த்து வந்த ஊர் மணியம், தியாகராசரின் வாழ்க்கைக்கு மூலதனமாக இருந்தது.

தியாகராசருக்கு ஒரே ஒரு மகன் தான். அதுவரையில் நலமே! அவராக ஏற்படுத்திக்கொண்டதல்ல அது. அதுவாகவே அமைந்துவிட்ட ஒன்று. என்றாலும் அவருக்குப் பண முடைகள் அதிகமாகவே இருந்தன.

தன் எண்ணமெல்லாம், தந்தையாரைப் போன்ற பெருநிலக்கிழாராக இனி ஆகமுடியாது என்றாலும், தன் மகன் திருமாலை எப்பாடுபட்டாவது உயர்ந்த படிப்புப் படிக்க வைத்து ஒரு மாவட்ட ஆட்சித் தலைவராக ஆக்கி, பழைய பெருமையைக் குறையாமல், மங்காமல் நிறுத்த வேண்டும் என்பதுதான்.

திருமால், பி. ஏ. படித்து முடித்து விட்டான். எம். ஏ. வகுப்பிலும் சேர்ந்து ஓர் ஆண்டினை ஓட்டியாகி விட்டது. இன்னும் ஓர் ஆண்டு ஓட வேண்டுமே! அதற்கு என்ன செய்வது என்ற ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். (தொடரும்)

POSEID 958

நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதறாஸ்-1.

உரங்கள் ● பூச்சி கொல்லிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

அறியனும் நம் நெஞ்சு

அடிமை நீங்கி விடுதலையானது ஆகஸ்டு பதினஞ்சு
யாருக்காகச் சுதந்திரம் அடைந்தோம் அறியனும் நம்நெஞ்சு (அடிமை)

தியாகிகளுக்குக் கும்பிடுபோட்டால் தீர்ந்திடுமா கடமை ?
தெருவில் ஏழை திரிந்து அலைந்தால் தேசத்திற்கே கொடுமை (அடிமை)

திருப்பூர்க் குமரன் செத்து விழுந்தது திண்டுகள் பருத்திடுவா ?
தியாகி ஜதீந்ரன் சிறையில் மடிந்தது டின்னர் நடத்திடவா ?
ஜாலியன் வாலா பாக்குப் படுகொலை தங்கத்தைப் பதுக்கிடவா ?
ஸார்ஜண்டு அடியால் லஜபதி மாண்டது சாவியைச் சொருகிடவா ?
(அடிமை)

பாலன் கனுமேல் லாரி மிதித்தது கோலாகலத்திற்கா ?
பாதிரி பேட்டன் பட்ட பிரம்படி பதவியில் போட்டிக்கா ?
பா, கஸ்தூரி ஆருயிர் ஈந்தது பதுக்கலை வளர்ப்பதற்கா ?
பாட்டன் மகாத்மா குண்டடி பட்டது பட்டினி வளர்வதற்கா ?
சிதம்பரனர் கற் செக்கை இழுத்தது சிலபேர் தலையில் எண்ணெய்க்கா ?
தீந்தமிழ் பாரதிப் பூந்தமிழ்ப் பாட்டு சினிமாப் பின்னணிப் பாட்டுக்கா ?
பகவத்சிங்கைத் தூக்கிய கயிறு பட்டு மெத்தையைக் கட்டிடவா ;
பண்டித மோதிலாலின் தியாகம் பணமூட்டைகளைப் பெருக்கிடவா ?
(அடிமை)

பள்ளம் மேடுகள் இத்தனை இருந்தால் பயிர் விளையாது வயல்களிலே
பாடுகள் பட்டுப் பெற்ற சுதந்திரம் பயன் அளிக்காது பாரினிலே
உள்ளம் கனிந்து ஒருவருக்கொருவர் உதவி செய்தாலே வாழ்வு வரும்
உதட்டுப் பேச்சுடன் ஒதுங்கி விட்டாலோ ஒற்றுமை நீங்கும் தாழ்வு வரும்
(அடிமை)

ஊருணித் தண்ணியை ஏரியில் விட்டால் உடனே காய்ச்சல் உறிஞ்சிவிடும்
ஒருத்தனைப் பரிச்சு ஒருத்தனுக்கிட்டால் உதட்டுக்குக்கூடக் காணாது
ஊத்துத் தோண்டி பாத்தியில் பாய்ச்சி நாத்தங்காலைக் காப்பதுபோல்
உற்பத்தி பெருக உழைப்பதனாலே ஊருக்கெல்லாம் சோறிடலாம் (அடிமை)

சீரணிச் சேவை ஊருணிநீராய்ச் சிந்தைத் தாகத்தைத் தீர்த்திடவே
சீரணித் தொண்டர் ஏரினைப் பிடித்துச் செழிப்பாய் நாட்டைக் காத்திடவே
தாரணி மார்பன் அண்ணாகண்ட தமிழர் சீரணிச் சேவையினால்
பூரண வாழ்வு மலர்ந்தே பாரதம் புன்சிரிப்புடனே வாழ்ந்திடவே.

கொத்தமங்கலம் சுப்பு

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பாஸ்

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பாஸ் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரைபடும் தன்மை உடையதால் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை பாக்டம்பாஸ் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பாஸ் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப் படுத்துகிறது.

பாக்ட ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம்: 2-வது மாடி,
19, கமாண்டர்-இன்-சீப்-ரோடு,
சென்னை-8.

உரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானை மார்க்



Criterion FT2203 TM

வேளாண்மைக்கு நவீன இயந்திரங்கள்

விவசாயத்தை நவீனமாக்குவதற்கு, நல்ல தரமான விதைகளும், இரசாயன உர வகைகளும் மட்டும் போதாது. மேலும் சிறந்த கருவிகளும் தேவைப்படும். ஆதலால், இந்திய விவசாயிகளும் நவீன சாகுபடி இயந்திரங்களைப் பெறவேண்டியது அவசியமாகும்.

விவசாயத்தை நவீனமாக்குவதன் மூலம் உற்பத்தி பெருகுவதோடு, வேலை வாய்ப்புகளும் பெருகும். விவசாயத் துறையில் மேம்பாடடைந்துள்ள சப்பான், தைவான் ஆகிய நாடுகளில் இயந்திரங்களுக்காக மிக அதிகமான பணத்தை முதலீடு செய்கிறார்கள். இருப்பினும் இந்தியாவை விட அதிக அளவில மனித உழைப்பையும் அவர்கள் பயன்படுத்துகிறார்கள். தேசீய உற்பத்தித் திறன் சபை தில்லிக்கு அருகே இயந்திரங்களைப் பயன்படுத்திவரும் ஒரு பண்ணையிலும், இயந்திரங்களைப் பயன்படுத்தாத ஒரு பண்ணையிலும் ஓர் ஆய்வினை மேற்கொண்டது. இயந்திரங்களைப் பயன்படுத்துவதனால் மிகக் குறைந்த அளவுக்குத்தான் வேலை வாய்ப்புக் குறைகிறது என்றும், தீவிரமான பயிர்ச் சாகுபடியைக் கருத்தில் கொள்ளும்போது வேலைவாய்ப்பு குறைவதாகச் சொல்ல முடியாது என்றும் ஆய்விலிருந்து தெரிய வந்தது. இயந்திரங்களைப் பயன்படுத்தத் துவங்கினால் பல போகச் சாகுபடி நடைபெறும். ஆதலால் நீண்டகால அடிப்படையில் பார்த்தால் வேலை வாய்ப்பு அதிகமாகும். பயிர்த்தொழிலாளர்களின் எண்ணிக்கை மூன்று மடங்கு, நாலு மடங்குகூட அதிகரிக்கக் கூடும்.

இந்திய விவசாயிகள் பழைய சம்பிரதாய முறைகளைத்தான் கடைப்பிடிப்பார்கள் என்பது வெறும் கட்டுக் கதை. டிராக்டர்களுக்கும், அறுவடை இயந்திரம் போன்ற நவீன கருவிகளுக்கும் தேவை அதிகரித்து வருகிறது. வசதி மிக்க விவசாயிகளுக்கு இந்த இயந்திரங்களை வாங்குவது சிரமமாக இருக்காது. ஆனால் சிறிய விவசாயிகளால் இதனை வாங்கமுடியாது. வசதிமிக்க விவசாயிகளுக்கும் வசதி குன்றிய விவசாயிகளுக்கும் இடையே இடைவெளி அதிகமாகக்கூடிய அபாயம் இருக்கிறது. செல்வம் அதிகமாக இல்லாத விவசாயிகள்தான் பெரும்பாலானவர்கள். அவர்கள் சாகுபடி செய்யும் நிலப்பரப்பும் புறக்கணிக்கக் கூடியதன்று. இந்த நிலப்பரப்பிலும் உயர் விளைச்சல் பயிர்களைப் பல போகங்களில் சாகுபடி செய்யாவிடில், நம் நாட்டில் மொத்த உணவுத் தானிய விளைச்சல் போதுமான அளவுக்கு இருக்காது. *1973-74*ஆம் ஆண்டு வாக்கில் ஆறுகோடி ஏக்கரா நிலப் பரப்பில் உயர் விளைச்சல் பயிர்களைச் சாகுபடி செய்யவேண்டும் என்றும், நான்கு கோடி ஏக்கரா நிலப்பரப்பில் பலபயிர்ச் சாகுபடியைமேற்கொள்ள வேண்டும் என்றும் குறியளவு நிர்ணயித்திருக்கிறோம். ஆதலால் வசதி குறைந்த விவசாயிகளுக்கும், நவீன விவசாயக் கருவிகள் கிடைக்கும்படி செய்யவேண்டும். இதற்காகத்தான் பல மாநிலங்களிலும் விவசாயத்தை அடிப்படையாய்க்கொண்ட தொழில்களின் கார்ப்பொரேசன்கள் (Agro Industries Corporation) அமைக்கப் பட்டிருக்கின்றன.

தமிழ்நாட்டில் இரண்டு கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் இந்தக் கார்ப்பொரேசன் அமைக்கப்பட்டிருக்கிறது. மைய அரசும். மாநில அரசுகளும் ஈவு மூலதனத்தைச் சரிபாதியாகப் பகிர்ந்து கொள்கின்றன. இந்தக் கார்ப்பொரேசன்கள் கம்பெனிகள் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டவை. பெரும்பாலும் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் பிரதிநிதிகள்தான் இயக்குநர் குழுக்களில் இருக்கிறார்கள். வர்த்தக நிறுவனத்தைப் போலவே இந்தக் கார்ப்பொரேசன்கள் இயங்குகின்றன.

விவசாயத்துக்காகவும் விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களுக்காகவும் இயந்திர சாதனங்களையும் கருவி

களையும் விநியோகிப்பது, விவசாயத்தில் ஈடுபட்டு உள்ளவர்கள் நவீன உத்திகளைக் கையாளும் பொருட்டு வசதி செய்து கொடுப்பது, விவசாயச் சார்புடைய தொழில்கள் சம்பந்தப்பட்டவர்களுக்குத் தொழில் நுட்ப ஆலோசனை கூறுவது ஆகியவைதான் இந்தக் கார்ப்பொரேசன்களின் முக்கியமான நோக்கங்கள். இயந்திர சாதனங்களின் விலையில் சுமார் 20 சதவிகிதத்தை முதலில் செலுத்தி விட்டுப் பிறகு தவணை அடிப்படையில் சாகுபடியாளர்கள் இதனைச் செலுத்த முடியும்.

இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்களின் விநியோக அலுவலும் பொதுவாக இந்தக் கார்ப்பொரேசன்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. டிராக்டர்கள், பம்ப்புசெட்டுகள் போன்ற சாதனங்களைப் பெரும்பாலான கார்ப்பொரேசன்கள் தவணை அடிப்படையில் விலையைப் பெற்றுக்கொண்டு விற்பனை செய்யத் துவங்கிவிட்டன. இத் துறையில் சில கார்ப்பொரேசன்கள் கணிசமான தொகையை முதலீடு செய்திருக்கின்றன. நாலாவது திட்டக் காலத்தில் இதற்கென 30 நிலையங்களும், ஒவ்வொரு நிலையத்தின்கீழும் எட்டுத் துணை நிலையங்களும் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

விவசாயத்துடன் தொடர்பு கொண்ட தொழிற்சாலைகளைச் சில கார்ப்பொரேசன்கள் ஏற்று நடத்தத் துவங்கிவிட்டன.

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க:

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற:

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்.



CODE MB-1/VL

தயாரிப்பவர்கள்:

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸிங் ஒர்க்ஸ்
(பிரைவேட்) லிமிடெட்,
மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள்:

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071
75, கலாசி பாளையம்
தபால் பெட்டி எண் 539
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2

கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 81227
38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 677
இராயப்பேட்டை, சென்னை-14

தமிழக ஊராட்சி ஒன்றியங்களின் தொடக்க காலத்தில் அமைக்கப்பட்டு, நன்முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொழில் உற்பத்தி நிலையங்களே இன்றளவும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்தத் தொழிற் பயிற்சி — உற்பத்தி நிலையங்களின் அன்றைய நிலை வேறு; இன்றுள்ள நிலை வேறு. அதற்குச் சான்றாகத் தச்சுத் தொழில் நிலையத்தை எடுத்துக் கொள்ளலாம்.

தொடக்கத்தில் ஒன்றிய அலுவலகம், அதன் பள்ளிகள், ஊராட்சிகள் ஆகியவற்றிற்குத் தேவையான பொருள்களைச் செய்து கொடுப்பதன்மூலமே, அதற்குப் போதிய உற்பத்தி, விற்பனை வாய்ப்பிருந்தது. இன்று ஒவ்வோர் ஒன்றியத்தின் பொதுமக்களின் தேவையை நாம் கைப்பற்றிக் கொள்ளவேண்டியுள்ளது. மேலும் அப் பகுதி மக்களுக்குள்ள தேவை, ஈடுபாடு, வாங்கும் சக்தி ஆகியவற்றிற்கேற்ப உற்பத்தி செய்தால் ஒரு நிரந்தர, உறுதியான சந்தையைப் பிடிக்க முடியும். அதனால் நம் தொழில் நிலையங்களும் உற்பத்தியினால் கிடைக்கும் ஆதாயத்திலேயே இயங்கும் தன்மை பெறும். இல்லையெனில், அவற்றை மூடிவிட வேண்டிய நிலை ஏற்பட்டு விடும்.

மேற்சொன்ன கருத்துக்களை மனத்திற்கொண்டு, திருச்சி மாவட்டம் பொன்னமராவதி ஒன்றியத்திலுள்ள தச்சுத் தொழில் நிலையத்தில், உற்பத்தியை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையம் பயிற்

ஒன்றியம் செயல்படுத்தும் தவணைத் திட்டம்

தேவையும் ஏறக்குறையப் பூர்த்தியடைந்து விட்டதென்றே கூறலாம். எனவே, துறை தொடர்பான தேவைகளையே முழுவதும் நம்பிக் கொண்டிருக்கும் இக்கட்டான நிலையினால் தொழில் நிலையம் தொடர்ந்து இயங்குவது கடினமே. ஆரம்பத்திலேயே, பல்வேறு அரசுத் துறைகளின் தேவைகளுடன், பொது மக்களின் தேவைகளையும் நிறைவேற்றும் முறையில், உற்பத்தி நிலைமையை உருவாக்கியிருந்தால், இத் தேக்க நிலையைத் தவிர்த்திருக்கலாம்.

தனியார்த் துறையிலுள்ள கடும் போட்டிக்கு ஈடுகொடுத்து உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தரம், வேலைப்பாடு, விலை, விநியோகம் செய்யும் கால அளவு ஆகிய கண்ணோட்டத்துடன் உற்பத்தி செய்து, சித் திட்டத்திற்குப் பின், உற்பத்தி நிலையமாகச் செயல்படுகிறது.

தவணை முறைத் திட்டம் உருப்பெற்றது

முதலில் ஒன்றியப் பள்ளிகள், ஊராட்சிகள், அலுவலகம், அண்மையிலுள்ள அலுவலகங்கள் ஆகியவற்றிற்குத் தேவையான பொருள்களை இத் தச்சுத் தொழில் நிலையம் ஏறக்குறைய நிறைவேற்றி முடிக்கப்பெறும் இத் தருணத்தில், முன்கூட்டியே பொதுமக்களையும் கவரும் முறையில் விற்பனைப் பொருள்களை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தியது. மக்களின் வாங்கும் சக்தியை மனத்திற்கொண்டு, தனியார்த் துறையில் தற்போது இயல்பாக உள்ள தவணை முறைத்திட்டத்தைத் தொழில் பிரிவு அலுவலராகப் பணியாற்றிய அநுபவம் மிக்க ஆணையாளரது ஆலோ

சனைப்படி, மன்ற ஒப்புதலுடன் செயற்படுத்தப்படுகிறது. ஒன்றியத்தின் சார்பாக இத் திட்டம் நடைபெறுவதால், பொதுமக்கள் நம்பிக்கையுடன் உறுப்பினர்களாகச் சேர முன் வந்தார்களெனினும், பொருள்களின் தரம், வேலைப்பாடு ஆகியவற்றைப்பற்றிய ஐயத்தை நீக்க வேண்டியதாயிற்று.

இதற்குத் திருச்சி மாவட்டக் கிராமத் தொழில் ஆலோசனைக் குழு கூறியபடி, தனியார்க் கடைகளில் பொருள்களுக்குக் காட்சிக் கூடம் அமைத்திருப்பதுபோல், இவ்வொன்றிய அலுவலகத்தில் ஒரு காட்சிக் கூடம் அமைத்து, தொழில் நிலையத்தில் உற்பத்தி செய்த மாதிரிப் பொருள்களை விலை விவரத்துடன் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. அவற்றின் தரம், வேலைப்பாடு ஆகியவற்றைக் கண்ட மக்கள், மரப் பொருள்களைத் தவணை முறைத் திட்டத்தில் பெற உறுப்பினர்களாகச் சேர முன்வந்தனர். இப்போது இத் திட்டத்தின்கீழ், மூன்று குழுக்கள் சேர்க்கப்பட்டு, அதன்மூலம் மட்டுமே ரூ. 13,500/- பெறுமான பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டிய நல்ல சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு குழு 45 உறுப்பினர்களைக் கொண்டது. ஒருவர் திங்களொன்றிற்கு ரூ. 10/- வீதம் பத்துத் திங்கள்கள் செலுத்தவேண்டும். ஒவ்வொரு திங்களும், குறிப்பிட்ட நாளில் சீட்டுக் குலுக்கி, தேர்ந்தெடுக்கப்பட்டவருக்குப் பட்டியலில் உள்ள ரூ. 100/-(நூறு) பெறுமானமுள்ள மரப் பொருள்களை அவர் கேட்டுள்ளபடி வழங்கப்படும் — குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் பிறகு பணம் கட்டவேண்டியதில்லை. சீட்டு விழாது எஞ்சியவர்களுக்கு, பத்தாவது திங்களில், அவர்கள் கேட்டுள்ளபடி ரூ. 100/- பெறுமான பொருள்கள் தரப்படும். இப் பகுதி, செட்டி நாட்டைச் சேர்ந்துள்ளதால், பொருள்களின் நேர்த்தி, தரம், வேலைப்பாடு ஆகியவற்றிற்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது.

இத் திட்டத்தின்மூலம் இப்போது தனிப்பட்டவர்களும், தம் தேவைகளுக்குத் தொழில் நிலையத்தை அணுக முனைந்துள்ளனர். மக்கள் அளித்துள்ள வரவேற்பும், ஆதரவும் உற்சாகமளிப்பவையாக உள்ளன. இத் திட்டத்தை விரைவில் மேலும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 15

“மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட - வாழ்த்தும் வணக்கமும் கூறிட - உறுதியும் அஞ்சாமையும் பெற்றிட - சுருக்கமாகக் கூறுவதானல், பெற்ற சுதந்திரத்துக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ள - சுதந்திரத்தின் முழுப்பயனை நாட்டவர் அனைவரும் பெற்றிட - அதற்கான அறிவாற்றலையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவே இந்த ஆகஸ்டுப் பதினைந்து.

வீரம் - வெற்றியைத் தந்தது; தியாகம் - சுதந்திரத்தைத் தந்தது; வீரமும் தியாகமும் போற்றத் தக்கவை; அதிலும் உலக உத்தமர் காந்தியடிகள் வகுத்தளித்த அறநெறி நின்று இந்தியா பெற்ற சுதந்திரம் உலக வரலாற்றுக்கே ஒரு புதுமையானதாகும்.”

— அண்ணு



“வாசுதேவன்” பலகையிலிருந்த பெயரைப் பார்த்ததும் என் மனம் ஒரு நடுக்கம் நடுங்கித்தான் நின்றது. ஆனல் வாசுதேவன் என்னும் பெயர் ஒருவருடைய சொந்தமில்லையே? அத்துடன் அந்தப் பலகையில் எம்.ஏ., எம்.லிட்., இன்னும் என்னென்னவோ தொழிற்பட்டமெல்லாம்கூட இருந்ததைப் பார்த்துவிட்டுத்தான் அலையடங்கிய குளமாக மனம் நிலைத்தது.

“சரி! வந்த காரியத்தைப் பார்ப்போம் என்று ‘போர்டிகோ’வில் ஏறினேன். என் மூத்த பிள்ளையைக் கல்லூரியில் சேர்ப்பதற்காகப் படாத பாடு பட்டேன். ‘இடம் இல்லை’ என்ற பலகையை மாட்டிவிட்டார்கள் கல்லூரி வாயிலில். ஆனல் கல்லூரிக் காரியக்குழு உறுப்பினரோ அல்லது யாரேனும் நன்கொடையாளரோ பரிந்துரை செய்தால் ஓர் இடம் கிடைக்கும் என்று சொன்ஞர்கள்

யாரோ ஒருவர் சொன்னதன் பேரில், இந்த வாசுதேவன் இலட்சம் இலட்சமாகக் கல்லூரிக்கு வழங்கியிருக்கிருர் என்ற விவரம் அறிந்தேன். அவரிடம் பரிந்துரைக் கடிதம் வாங்கிஞல் நிச்சயம் ‘முதல் குரூப்’பிலேயே இடம் கிடைக்கும் என்றும் அறிந்தேன். அதையும் பார்த்துவிடலாம் என்றுதான் வந்து நிற்கிறேன்.

எங்கள் வீட்டு ‘அவர்’தான் இதற்கெல்லாம் வரவேண்டும். வரலாம், என்ன செய்வது? காலையில் சூரியன் உதிக்கையில் வீட்டைவிட்டுப் புறப்படும் மனிதர் சூரியன் மறைந்த பின்னர்த்தான் வருகிருர்! பாவம். அவருக்கென்று கிடைத்த அலுவல் அப்படி; எந்த வேலைக்கும் நானே முன்னுக்குப்போய் நிற்க வேண்டியிருந்தது.

அவரிடம் ஏதாவது கேட்டோமேயாஞல், “என்னடி! நீதான் படித்தவளாயிற்றே! உன்ஞல் முடியாது போஞல்தானே நான் வரவேண்டும்” என்று சொல்லி, என் படிப்பைப் பயங் காட்டுவார். எனக்கு என்ன பயம்! நான் கல்வி கற்றவள்! அலுவல் பார்த்தவள்! என்னவோ! திருமணமான பின்னர் எங்கள் ‘அவரு’டைய தன்மானம் மானத்தில் நிற்க வேண்டுமென்று கரையாய்க் கரைந்து கரடியாய்க் கத்தி, என் விருப்பமில்லாமலேயே கால்தாளில் கையெழுத்து வாங்கி அனுப்பிஞர். டலன்! கடன்தான் சுமந்து நிற்கிறது. குடும்பச் செலவுக்கான ஓட்டைகளை அடைப்பதற்குத்தான் அவர் பாடாய்ப் பட்டு, ஓடாய்த் தேய்கிருர். எனக்கும் இது தெரிகிறது. நான் என்ன செய்வது?

என் பிள்ளையாவது படித்து வெற்றி பெற்றுச் சம்பாதிக்கத் துவங்கிவிட்டாஞகில் என் துன்ப

மெல்லாம் ஓடியே போய்விடும். ஆயிற்று இன்னம் மூன்று ஆண்டுகள். அதற்கும் வழியில்லாமல்தான் சோதனைமேல் சோதனையாக நேர்கிறது. நல்ல எண்கள் வாங்கியிருக்கிறான். 'டிஸ்டிங்க்ஷன்' வாங்கியிருந்தாலுங்கூடக் கல்லூரியில் சேரப் பரிந்துரை வேண்டியிருக்கிறதே! அதற்காகத்தான் இந்தப் பங்களாவின் வாயிலில் வந்து காத்துக்கொண்டிருக்கிறேன்.

இன்னும் வாசுதேவனின் காட்சி கிட்டவில்லை. எப்போது வருவாரோ? வந்து என்ன பதில் சொல்லுவாரோ? தாயே! முண்டகக் கண்ணியம்மா! நீதான் இந்தப் பெரும் புள்ளியின் மனத்தில் புகுந்து நல்ல வாக்கைக் கொண்டு தரவேண்டும்.

நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு வழியாக அலுவலக அறை விளக்கு எரியத் துவங்கியது. மின் விசிறி சுழலத் தொடங்கிவிட்டது சாளரத்தின் வழியாகத் தெரிந்தது. நாற்காலியை நகர்த்தும் ஒலியும் கேட்கிறது. நான் தயாராக எழுந்து நிற்கிறேன். அவர் வெளியே வந்தார். ஆம்! அவர் வந்தார். ஆம்! அவர்...?

''அட...''

''யாரது...ரா...தா....''

''.........''

''உள்ளே வாம்மா!...வாங்கோ?'' இது என்ன மரியாதை?

''.........''

''தாராளமாக உள்ளே வரலாம். என்ன வேண்டும்...''

''நான் தயாராகக் கையில் எழுதி வைத்திருந்த விண்ணப்பத்தை அமைதியாகக் கை நடுநடுங்க அவர்முன் நீட்டினேன்.

''அட! உன்...உங்க பிள்ளை கல்லூரியில் சேரணுமா?'' அவர் என்னைப் பார்க்கிறார். அந்தப் பார்வையில்தான் எத்தனை பொருள்? அப்பப்பா!

''ஆமாம்!......நீங்கள் சொன்னால் கல்லூரியில் சேர்த்துக் கொள்வார்கள் என்று கேள்விப்பட்டுத்தான்... வந்தேன்...இந்தப் பிள்ளையைத்தான் நாங்கள் நம்பிக்கொண்டிருக்கிறோம். இவன் இந்த ஆண்டு கல்லூரியில் சேராவிட்டால்...''

''ஆமாம்! எங்கேயாவது அனுப்புகை எழுத்தராக...(டெஸ்பாட்ச் கிளார்க்காக) சொல்லிக்கொண்டே வந்தவர், 'சட்'டென்று நிறுத்திவிட்டு என்னைப் பார்க்கிறார்.

''இந்த நாளிலே வெறும் எஸ்.எஸ்.எல்.ஸி., பி.யூ.சி.க்களுக்கு அந்த வேலையும்கூடக் கிடைக்காதே.''

''சரி! கொஞ்சம் காத்திருக்கிறீர்களா? கல்லூரி முதல்வரிடம் தொலைபேசியில் கேட்டுச் சொல்கிறேன்...'' அவர் எழுகிறார்.

''இல்லை. நீங்கள் கடிதம் கொடுத்தால் கண்டிப்பாகச் சேர்த்துக் கொள்வாராம்...''

''செய்யலாம்! ஆனால் வெறும் நன்கொடையாளர் என்பதற்காக அவருடைய சுதந்திரத்தில் நான் தலையிடக் கூடாதல்லவா? கொஞ்சம் பொறுங்கள். வந்துவிடுகிறேன்.'' வாசு உள்ளே போகிறார். தொலைபேசித் தட்டைச் சுழற்றும் ஒலி கேட்கிறது.

என் மனத்தில் ஆயிரம் ஆயிரம் எண்ணங்கள் சுழல்கின்றன. நான் நிற்கும் தாழ்வாரம் மாறிவிடுகிறது. நான் பணியாற்றிய அலுவலகம் கண் முன்னர்த் தோன்றுகிறது. அந்த அலுவலகத்தில் நான் ஒரு மூத்த எழுத்தர் - கண்காணிப்பாளர். ஐந்து ஆண்டுகள் பணி செய்துள்ளேன். என்னைச்சுற்றி நான்கு பெண் எழுத்தர்கள்; மூன்று ஆண் எழுத்தர்கள். அந்தச் சூழ்நிலையில்தான் என் ஆட்சிக்குள் வாசு தயங்கிக் கொண்டே வருகிறார்.

இன்றைக்கு நான் நீட்டிய விண்ணப்பத்தைப் போன்ற ஒரு நியமன ஆணையை என்முன்னே நீட்டுகிறார். பயந்துகொண்டே என்னைப் பார்க்கிறார். நானும் என் வழக்கப்படி அசட்டையாக இடக் கையாலே அதனை வாங்கிப் பார்க்கிறேன். வாசுதேவன் என்பவரை அனுப்புகைப் பிரிவு எழுத்தராக நூற்றுப்பத்து ரூபாய் ஊதியத்தில் நியமித்திருக்கும் ஆணைதான் அது. ஆமாம்! வாசு என் 'ஆட்சி'யில் எனக்குக் கீழே வேலை பார்க்கத்தான் வந்திருக்கிறார். இது அன்று!

''சரி இன்றைக்கே சேர்க்கை அறிக்கை குடுத்துடுங்கோ'' என்று கூறினேன்.

அவர் தலையை ஆட்டுகிறார். அவர் இருக்கையில் போய் அமர்கிறார். பயந்து பயந்து அவர் கேட்க நான் அவருடைய வேலைகள்பற்றி விளக்குகிறேன். அவர் என்னைப் பயந்தபடியே பார்க்கிறார். என்னிடம் மிக்க மரியாதையுடன் பேசுகிறார்! ஐயோ! பாவம்.

அவர் இப்படி என்னிடம் நடுங்கிச் சாவது எனக்குப் பிடிக்கவில்லை. அவருடைய பயத்தை மாற்றுவதற்காகவே நான் பிறந்தவள், அதற்காகவே வேலை செய்பவள் என்பது போல ஓர் அக்கறை என்னுள் வளர்ந்து பெருகி பிடித்து ஆட்டுகிறது. இது ஏன்? எனக்கு வாசுவைப் பிடித்திருந்தது. நான் வலுவிலே வாசுவை அழைத்து அழைத்துப் பேசுகிறேன். அவரும் பேசுகிறார். அன்புடன் பழகுகிறார். அன்புடன் பார்க்கிறார். அன்புடன் சிரிக்கிறார்.

என்னவென்று சொல்வது? அது அந்த நாளைய செய்தி! சின்னவயதில் 'சர்க்கஸ்' பார்ப்பது மாதிரியான வியப்பு, தவிப்பு; தெரியாத மொழியிலே பேசுவதிலுள்ள சுவாரசியம், ஆர்வம்; தெரிந்துகொண்டதைத் தெரியாததாகப் பாவித்துப் பூசி மறைத்துக்கொண்டு பாசாங்குக்குள்ளே படர்ந்து சுருண்டு கிடக்கும் ஒரு போலியான நடிப்பு. வாசுவின் இங்கிதம் தேவைப்பட்டது எனக்கு. அவருடைய கல்வித் தகுதி, உத்தியோகம் தேவைப்படாத ஒன்று. மனிதன் மட்டுமே முக்கியமல்லவே. ஒத்த உயரம், உருவம் மட்டுமே மனதுக்குப் போதுமானதல்லவே! ஒத்த தகுதியும் கூடத்தானே வேண்டியிருக்கிறது?

அலுவலகம் முழுவதும் எங்கள் நட்பைப்பற்றிப் பேசியது. ஊரே தூற்றியது. பட்டம் பெற்ற ஒரு பெண்பிள்ளை வெறும் எழுத்தருடன் கூடிப் பேசிக் களிப்பதை அவர்கள் விரும்பவில்லை. ஏன்? எனக்கும் கூட அது அவ்வளவு சரியாக இல்லைதான். ஆனாலும் அது தேவையாயிருந்ததே அன்று. தவிர்க்க முடியாதாக ஒட்டிக் கொண்டுவிட்டதே!

ஒருநாள்... ஒரு கடிதத்தை வாசு தவறுதலாக அனுப்பி விட்டார். மேலிடத்திலிருந்து எனக்கு ஒரு குறிப்பு வந்தது. நான் வாசுவை அழைக்கிறேன். வழக்கம்போல வாசு வருகிறார். கண்ணாலே சிரிக்கிறார். நான் இரைச்சல் போடுகிறேன்; கத்துகிறேன்; மேசையைக் கையால் குத்தி, அதட்டி... வாசு பாவம்! இதை எதிர்பார்க்கவில்லை. முன்னைப் போல நடுங்குகிறார்.

''வெறும் எஸ். எஸ். எல். ஸி. மட்டும் பாஸ் செய்துவிட்டு ஏனய்யா வந்து உயிரை வாங்குகிறீர்கள்? எங்காவது பியூன் உத்தியோகத்துக்குப் போவதுதானே? அதிலும் இப்படித்தான் தவறுசெய்வீர்... இப்ப என்ன செய்வது...'' வாசு தலை குனிந்தபடியே போய்விடுகிறார்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னரும் பேசுகிறோம்; பழகுகிறோம். ஒருநாள் வாசு துணிவுடன் நின்று என்னைக் கேட்கிறார்! நான் எதைக் கேட்கத் தயங்கினேனோ அதையே கேட்கிறார். ஆமாம்! ஊர் எல்லாம், அலுவலகம் எல்லாம் எங்களிருவரையும் சேர்த்துச் சேர்த்துப் பேசியதைச் சுட்டிக் காட்டி, அந்த மாதிரியாகவே நாங்கள் ஒன்றிவிட்டால் என்ன? என்று கேட்கிறார். அப்படி ஒன்றிவிட்டால் பின்னர்ப் பாசாங்கு தேவையில்லையே என்கிறார்.

எனக்கு அவர் இப்படிக் கேட்க மாட்டாரா என்ற ஏக்கம் இருந்தது உண்டு. கேட்டு விட்டாரே என்ற மகிழ்ச்சி; உள்ளத்துக்குள்ளே ஒரு துள்ளல். ஆனால்... அதே சமயம்... வெறும் எஸ். எஸ். எல். ஸி. யை மணந்து வாழ்வு முழுதும் பாடுபட ஒரு தயக்கம்! ஒரு திரை, ஒரு மலை, குறுக்கே நின்று பயமுறுத்துகிறது. பார்க்கிறேன். சிந்திக்கிறேன். என் எதிரில் வாசு ஒரு குற்றவாளி போலவும் தீர்ப்பை எதிர்பார்க்கும் நிலையிலும் நிற்கிறார். என் வாயிலிருந்து அவர் எதை எதிர்பார்த்தாரோ?

''மிஸ்டர் வாசு! நான் ஒரு பட்டதாரி. உங்களுக்குத் தெரியும். குறைந்த அளவு ஒரு பட்டதாரியைத்தான்... நான்...'' நான் வார்த்தைகளை முடிக்கவில்லை. வாசு அம்பு மாதிரிப் போய்விடுகிறார். என் கண்களிலிருந்து ஏனோ கண்ணீர் பெருகு

கிறது. கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறேன். கண்ணீரைத் துடைத்துவிடலாம். ஆனுல் நினைவுகளையோ? இந்த இருபது ஆண்டுகளில் நான் மறக்க முயன்றுதோற்றுப் போய் விட்டேன்.

''இராதா! உங்கள் பிள்ளைக்கு இடம் தருகிறேன் என்று கல்லூரி முதல்வர் சொல்லிவிட்டார். இதோ கடிதம். நீங்கள் உடனே நேரே சென்று முதல்வரைப் பாருங்கள்'' என்று சொல்லியபடியே வாசுதேவன் வருகிருர்; ஓர் உறையைத் தருகிருர்.

''வணக்கம். உங்கள் பெரிய மனசுக்கு...எனக்கு எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை...''

''ஒன்றும் வேண்டாம். நான் இன்றைக்கு இந்த நிலையில் இப்படி உயர்ந்து நிற்பதற்கு நீங்கள்தானே காரணம். அதற்குக் கைம்மாருக இதையாவது செய்ய என்னுல் முடிந்ததே?'' வாசுதேவன் என்ன சொல்லுகிருர் என்பது புரியவில்லை. புரிந்துவிட்ட மாதிரியும் இருக்கிறது.

''நானு... நான் காரணமா?''

''அது உங்களுக்கு மறந்திருக்கலாம். ஆனுல் நான் நினைவிலே சுமந்துகொண்டுதான் திண்டாடினேன். உங்கள் வார்த்தைகளைக் கேட்டு என் நிலைமை எனக்குப் புரிந்தது. வேலையைவிட்டு நின்றேன்.''

''தொழிற்சாலையில் இரவு நேர முறையுள்ள வேலையை வாங்கிக்கொண்டு, கல்லூரியிலே சேர்ந்து படித்தேன். முதலில் அந்த வாழ்க்கை துன்பமாகத்தான் இருந்தது. வீம்புக்குப் போராடினேன். போகப் போக அதிக உழைப்பே எனக்குப் பழக்கமாகி ஓர் இன்பம் தோன்றிவிட்டது.''

''புத்தர் ஆறு ஆண்டுகள் தவம் செய்ததுபோல நானும் நோன்பிருந்து எம். ஏ. தேர்ச்சி பெற்றுப் பட்டமளிப்பு விழாவில்தான் பின்னுல் திரும்பிப் பார்த்தேன். அப்போது நீங்கள் அரங்கநாதருக்குத் துணைவியாகி விட்டீர்கள். அதற்குப் பிறகு எனக்குக் கிடைத்த ஒரே நிம்மதி படிப்புத்தான். இன்றுகூட 'மெட்டல் லர்ஜி'க்குப் படிக்கிறேன்.

''அப்படியென்றுல்... நான்...''

''ஒன்றும் தப்பு இல்லை. காருவகி நாடகம் பார்த்திருக்கிறீர்களா?

''கயல் விழி நாவலாவது படித்திருக்கிறீர்களா?''

''ஊஹூம்''

''காளிதாசன் கதை தெரிந்திருக்கும். அதுபோல... நான் படித்ததற்கு நீங்கள், உங்கள் சொல்தான் காரணம்.''

''அப்படியா? உங்கள் வாழ்வில்... குழந்தைகள்...!'' வாசு சிரிக்கிருர். ''அந்தத் தடங்கல்கள் எல்லாம் இருந்தால் வாசு ஓர் எழுத்தராகத்தான் இருந்திருப்பான்; அப்படியெல்லாம் ஒன்றும் ஏற்படவில்லை; ஏற்படுத்திக் கொள்ளவில்லை.'' அந்தவேளையில் சமையல்காரர் காபி கொண்டுவந்து மேசைமீது வைக்கிருர். வாசு என் பக்கம் ஒரு குவளையை நகர்த்துகிருர்.

''இராதா! 'க'னுவுக்கு அப்புறம் தான் 'கா'வன்னு வரும். தெரியுமோ...'' ஏதோ பொடி வைத்துப் பேசுகிருர் வாசு. அவர் சொல்கிருர்.

'க'வுக்குப் பிறகுதான் 'கா' வேண்டும் என்ருல் 'க' போட்டுத்தான் கால் போடவேண்டும். நான் 'க' இல்லாமல் உங்களிடம் 'கா'வை எதிர்பார்த்தேன். அது நடக்கவில்லை. நான் 'க' போட்டு முடிப்பதற்குள் 'கா' திசைமாறி விட்டது. அது காலாகாலத்தில் நிகழ்ந்திருக்கவேண்டும். அவ்வளவுதான்.'' வாசு பெருமூச்சு விடுகிருர். நான் புறப்பட்டேன். வாசுவின் மேசையிலிருந்த படத்தைத் திருப்புகிருர்.

'எவர்ஸில்வர் பிரேம்' போட்டிருந்த அந்த மடக்குப் படத்தில் இடப்புறம் வாசுவின் தாயாரின் புகைப்படமும் வலப்புறம் என் அந்த நாளையப் புகைப் படமும் இருந்தன. என் கண்களில் நீர் ததும்பியது ''இவர்கள் இருவருமே என் தாயார்கள். ஒருத்தி உடலை, உயிரைத் தந்தவர். மற்றவர் அறிவைத் தந்தவர். என்ன சரிதானே?'' என்று சொல்லி என்னைப் பார்க்கிருர்.

நான் என் கண்ணீரைக் காட்டிவிட மனமில்லாமல் 'போர்டிகோ'வில் இறங்கிவிட்டேன். 'க'னு, 'கா'வன்னு என்ருல் என்ன பொருள்? யோசிக்கிறேன்.

'க' என்பது கல்வி! 'கா' என்பது காதலா! பாவம் வாசு. 'க' ஐ முடித்தார்; அதற்குள் 'கா' நழுவி விட்டது.



சுழற்கேடயம் பெற்ற ஒன்றியம்

சிறந்த ஊராட்சி ஒன்றியத்திற்குப் பரிசளிக்கும் திட்டத்திற்கேற்ப, கன்னியாகுமரி மாவட்டத்தின் இராஜாக்கமங்கலம் ஒன்றியம் 1967-68ஆம் ஆண்டில் சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

அவ் வொன்றியத்தின் சிறப்பான பணிகளைப்பற்றிக் கூறுகிறது இக் கட்டுரை.

— ஆசிரியர்

இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் வட்டத்தின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இவ் வொன்றியம் இராஜாக்கமங்கலம், தர்மபுரம், நீண்டகரை, வடசேரி, தெங்கம்புதூர், புத்தளம் ஆகிய ஐந்து பேரூராட்சிகளைக் கொண்டதாகும்.

மொத்தப் பரப்பளவான 43·2 சதுர மைல்களில், 27,647 ஏக்கர் நிலப்பரப்பு கொண்டு, 84,503 மக்களைக் கொண்டது. 1—4—1962 முதல் இவ் வட்டாரம், ஊராட்சி ஒன்றியமாகப் பணியாற்றுகிறது. வட்டார வளர்ச்சி அலுவலகம் ஈத்தாமொழி அருகாமையிலுள்ள பழவிளை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது.

வேளாண்மை

இவ் வூராட்சி ஒன்றியத்தில் நெல் பயிரிடப்படும் 9409 ஏக்கர்களில், 8400 ஏக்கர்களில் நல்லினப் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்பட்டு வேளாண்மை நடைபெற்றுள்ளது. மேலும் 364 ஏக்கர்களில் தழை உரச் செடி பயிர் செய்யப்பட்டதுடன், 15 ஏக்கர்களில் காய்கறிகளும் பயிர் செய்யப்பட்டன. உழவர்களுக்கு 1020 பழச்செடிகள் மானிய விலையில் வழங்கப்பட்டதுடன், 47 நவீன வேளாண்மைக் கருவிகளும் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. 60 மாதிரிப் பாத்திகள் இடப்பட்டு உழவர்களுக்குத் திருந்திய முறை வேளாண்மை தெளிவாக்கப்பட்டது.

கோழி வளர்ப்புத் திட்டத்தில் 50 நல்லினச் சேவல்கள் மாற்றுமுறையில் வழங்கப்பட்டுள்ளன. ஐந்து கோழிப் பண்ணைகள் தொடங்கப்பெற்று, கூடுகள் கட்டுவதற்கான மானியம் வழங்கப்பட்டுள்ளது. அறுபத்து ஒன்பது காளைகளுக்குக் காயடிக்கப்பட்டதுடன், 5 வெள்ளாட்டுக் கடாக்களும் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. 7,500 மீன் குஞ்சுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இவ் வூராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளிகள் பல அரசினரின் மேற்பார்வையில் நடத்தப்படுவனவாகும். இப் பள்ளிகளனைத்தும் அரசிற்குச் சொந்தமான கட்டடங்களில் நடைபெறுகின்றன.

இவ் வூராட்சி ஒன்றியத்தில் 14 இளைஞர்கள் வேளாண்மைச் சங்கங்கள் துவக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. 8 கிராம வானொலி மன்றங்களும், 53 சமூகக் கல்வி நிலையங்களும் உள்ளன.

குடும்ப நலத் திட்டம்

இவ் வூராட்சி ஒன்றியத்தில் 37 மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன. 6 தையல் ஆசிரியைகள் மகளிர் மன்றங்களுக்குச் சென்று, தையல் கற்றுத் தருகின்றனர். பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையம் ஒன்று தனியே நடைபெறுகிறது.

குடும்ப நலத் திட்டத்தில் 446 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் 350 பேர்களுக்குத் தடைக்கருவிகள் வழங்கப்பட்டன. குடும்ப நலப் பயிற்சி முகாம் ஒன்று மூன்று நாட்கள் நடத்தப்பட்டதுடன், இரண்டு நாடகங்களும், பல படக்காட்சிகளும் கிராமங்களில் நடத்தப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றிய வேலைத்திட்டத்தில், 5 பர்லாங் நீளம் இணைப்புச் சாலைகள் இடப்பட்டுள்ளன. மேலும் வேலைத் திட்டத்தின் பங்குத்தொகையாக ரூ. 22,304 கிடைக்கப்பெற்றுள்ளது.

இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படாமல் இருந்ததில் ஒரு சங்கம் செயல்படத் துவங்கியுள்ளது. விவசாயக் கடன் கூட்டுறவுச் சங்கத்திற்கான கிடங்கொன்று கட்டும் வேலை முடிவடைந்துள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் ரூ. 41558 பங்குத் தொகை வசூல் செய்யப்பட்டதுடன், ரூ. 4,70,248 வைப்புத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது. இவ் வொன்றிய உழவர்களுக்கு இச் சங்கங்கள்மூலம் குறுகிய, மத்திய காலக் கடன்களாக ரூ. 11·4 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.

இவ் வட்டாரத்திலுள்ள காரவிளை ஊரில் தச்சுப் பட்டறையொன்று ஒன்றியத்தால் ஆதாயமான முறையில் நடத்தப்படுகிறது. இதில் 10 தச்சுத் தொழிலாளர்கள் நிரந்தரமாகப் பணியாற்றுகின்றனர்.

அனைவரும் விரும்புவது

'அணில்'

கலப்பு உரங்கள்

தயாரிப்பாளர்கள் :

A. P. V. ராஜேந்திரன்,

8-10, சுவாமி சந்நதி சந்து,

மதுரை-1

தமிழ்நாட்டில் ஊராட்சிப் பகுதிகளில் வாக்காளர் எண்ணிக்கை

வரிசை எண்	மாவட்டம்	1967 பொதுத் தேர்தலில் வாக்காளர் தொகை (ஆயிரத்தில்)	நகராட்சிகளில் வாக்காளர் தொகை (ஆயிரத்தில்)	ஊராட்சி களில் வாககாளர் தொகை (ஆயிரத்தில்)
1.	செங்கல்பட்டு	1404	178	1226
2.	வட ஆர்க்காடு	1868	277	1591
3.	தென் ஆர்க்காடு	1836	150	1686
4.	தர்மபுரி	762	32	730
5.	சேலம்	1565	222	1343
6.	நீலகிரி	220	44	176
7.	கோயமுத்தூர்	2275	449	1826
8.	மதுரை	2052	383	1669
9.	திருச்சிராப்பள்ளி	1975	258	1717
10.	தஞ்சாவூர்	1915	234	1681
11.	இராமநாதபுரம்	1528	250	1278
12.	திருநெல்வேலி	1712	259	1453
13.	கன்னியாகுமரி	560	88	472
	மொத்தம்	19,672	2,824	16,848

வட்டாரச் செய்திகள்

குறை களையும் அலுவலர் :

சேலம் மாவட்டம் எருமைப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், அவ் வட்டாரத்தின் ஆணையர் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளின் காரணமாக நல்ல பல செயல்கள் நடைபெற்றுள்ளன.

அப் பணிகளில் குறிப்பிடத்தக்கது மக்கள் குறைகளை நேரில் கேட்டறியும் திட்டமாகும். இவ் வேற்பாட்டின்படி, அவ் வட்டார ஆணையர், ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள பல்வேறு கிராமங்களுக்கும் சென்று, அந்தந்தக் கிராம மக்களை நேரில் சந்தித்து, அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்து, அவற்றைக் களைவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார். அத்துடன் ஊராட்சி ஒன்றியப் பணிகள் சிறப்புற நல்ல முறையில் நடைபெறுகின்றனவா என்பதையும் நேரில் அறிந்து, குறைகள் காணப்பட்டால், அவைகளைக் களையவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்.

அதிகாரிகள் இயன்றவரையில் மக்களை நேரில் சந்தித்து அவர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பதென்பது மக்களாட்சியின் மிக முக்கியமான குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதிகாரிகள் - மக்களிடையே நெருங்கிய உறவு வளரவும் இவ் வேற்பாடு அடிகோலுகிறது எனலாம்.

கிராமநலம் பகுதி-2
GRAMANALAM PART-2

ஊராட்சி அரசிதழ்

PANCHAYAT GAZETTE

அநேகமாகத் தமிழகத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் தற்போதைய பதவிக் காலம், 2-2-1970 அன்று முடிவடைகிறது. எனவே 1970 சனவரி, பிப்ரவரி மாதங்களில் மறு தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்.

தற்போதுள்ள தேர்தல் முறைப்படி ஊராட்சி அங்கத்தினர்கள் யாவரும், வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்த அங்கத்தினர்கள் தங்களுக்குள் ஒருவரை ஊராட்சித் தலைவராக மறைமுகத் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள்.

எல்லா ஊராட்சித் தலைவர்களும் ஊராட்சி ஒன்றியங்களின் அங்கத்தினர்களாக ஆகிறார்கள். இவர்கள் தமக்குள் ஒருவரை ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவராக மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள்.

தமிழக உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள் எல்லாம் நேரடி முறையின் மூலமே தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் நெடுநாளைய அவா. கட்சித் தேர்தல் அறிக்கைகளிலும் இவை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதற்கிணங்க 1970இல் நடக்க இருக்கும் ஊராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதுபற்றித் தமிழ்நாடு அரசின் அமைச்சரவை இரண்டொருமுறை கூடி விவாதித்தது.

அதன் அடிப்படையில் சில நாட்களுக்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும், தொடர்புடைய அதிகாரிகளுடன் இதுபற்றிக் கலந்து பேசி ஆராய்ந்தனர்.

இதன் முடிவாக இப்போது அண்மையில் நடைபெற இருக்கும் தேர்தலில் ஒன்றியத் தலைவர் தேர்தலுக்கான முறையில் மட்டும் பழைய மறைமுகத் தேர்தல் முறையை வைத்துக்கொண்டு, மாற்றத்தின் முதற் கட்டமாக ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் நேரடித் தேர்தல்

தமிழ்நாடு ஊராட்சித் தேர்தல் பற்றிய செய்தி அறிக்கை

முறையை அமல் செய்து, இதன் செயல்முறைகளை நன்கு ஆய்ந்து பின்னர் வரும் தேர்தல்களில் அடுத்த கட்டமாக ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களிலும் நேரடித் தேர்தல் முறையையே பின்பற்றுவது வசதியாக இருக்குமா என்பனபற்றி அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

இதன்னியில் ஊராட்சித் தேர்தலுக்கு முன்பாக அரசு உடனடியாகச் செய்யவேண்டிய காரியங்கள் பல உள்ளன. முதற்கண், திருவிதாங்கூர்-கொச்சி இராச்சியத்திலிருந்து நம் தமிழ்நாட்டுக்கு மாற்றப்பட்ட கன்னியாகுமரி, செங்கோட்டைப் பகுதிகளில் நம் ஊராட்சி அமைப்பை அரசு அமைக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டுக்கு மாற்றப்பட்டுள்ள இந்தப் பகுதிகளில் கிராம ஊராட்சி

கள் என்ற அமைப்பு இல்லாமல் எல்லாமே நகர ஊராட்சிகளாகவே (Town Panchayats) இயங்கி வருகின்றன. தமிழ்நாடு 1958ஆம் ஆண்டின் ஊராட்சிச் சட்டத்தின் விதிகள் சிலவற்றை அவற்றிற்கு ஏற்ப அவ்வப்போது மாற்றி ஆணை பிறப்பித்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பகுதிகளில் எல்லாம் சிறிய சிறிய ஊராட்சிகளை அமைக்கும் பணியில் அரசு ஈடுபடவேண்டியிருக்கிறது. தமிழகத்தின் பிற மாவட்டங்களில் இயங்கும் முறையில் இவற்றைச் சீரமைத்தால்தான் வளர்ச்சி வேலைகள் சிறப்பாகச் செய்ய ஏதுவாகும்.

எனவே அதற்கேற்ப அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது.

இவை தவிர பேரூராட்சிகளில் உள்ளதுபோல், ஊராட்சிகளிலும் தனி அங்கத்தினர் தொகுதிகள் அமைத்தல் வசதியாக இருக்குமா அல்லது பழைய முறையே இருக்கலாமா என்பதுபற்றியும் அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

சில ஊராட்சிகளின் எல்லைகளை மாற்றவும், அவற்றைப் பிரிக்கவும் வேண்டுகோள்கள் அரசுக்கு வந்துள்ளன. இவை தவிர, சில பெரிய ஊராட்சிகளை நகராட்சிகளாக மாற்றவும் திட்டங்கள் உள்ளன. இவை குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது.

மேலே கண்டவை குறித்து இறுதி முடிவெடுத்து அவற்றிற்கு ஏற்பச் சட்ட திட்டங்களைத் திருத்தி அமைத்து அமல்படுத்த நாம் முன்னேடியாகப் பல வேலைகளைச் செய்ய வேண்டியிருக்கிறது.

இவையெல்லாவற்றையும் கருத்தில்கொண்டு பார்த்தால், மேலே சொன்ன காரணங்களுக்காக, 1970 சனவரி, பிப்ரவரி மாதங்களில் நடைபெறவேண்டிய நம் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியத் தேர்தல்களை ஒரு சில மாதங்களாவது தள்ளி வைத்து ஆகவேண்டும் என்று அரசு கருதுகிறது.

அதுவரை, இன்றைய ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவற்றின் ஆட்சிக்காலம் நீடிக்க வகை செய்யவேண்டும்.

மேலே கண்டவை குறித்து அரசு விரைவில் பரிசீலித்து முடிவெடுத்து இந்த முடிவுகளை அமல்படுத்தத் தேவையான விதிகளையும், சட்ட மாற்றங்களையும் அமைக்க விரைவில் சட்ட மன்றத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஊராட்சித் தேர்தல்கள் நடைபெறவேண்டிய தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும். ஆக, மேற்கண்டவை குறித்து அரசு இறுதி முடிவு எதையும் இன்னும் மேற்கொள்ளவில்லை. விரைவில் பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

[மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 8-8-1969 அன்று வெளியிட்ட அறிக்கை.]

தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குநரால் ஸ்ரீ.பி.எல்.எஸ். அச்சகத்தில் (65/1, ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப்பட்டது.

இணைக்குநர்கள் :

1. திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர்.
2. திரு. ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.
ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர்.

பதிப்பாளர் : திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ.

ஆசிரியர் : திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

ஓரிரண்டு குழந்தைகள் போதுமே

அளவோடு பெற்று வளமோடு வாழ்வோம்

"நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்,
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்;
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்று இரண்டா உரைத்திடவே முடியாது.
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்!"

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை—ஆரம்ப சுகாதார நிலையம்—குடும்பநலத்திட்ட நிலையம் ஒன்றை அணுகித் தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு: சுகாதாரம் —
குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6

REGD. No. M. 7277

© தமிழ் நாடு அரசு, 1969

Slanes

தைப் பட்டத்தில் அமோக விளைச்சலும், பெருகிய லாபமும் பெற

கோல்டு ஸீட் (GOLD SEED) வீரிய விதைகள்

1. வீரிய ஒட்டுச் சோளம் CSH-1
2. வீரிய ஒட்டுக் கம்பு HB-1
3. வீரிய ஒட்டு மக்காச் சோளம்
 —டெக்கான் & ஹை-ஸ்டார்ச்.

விதை உற்பத்தியாளர்கள் :

தந்தி: "கோல்டு ஸீட்" போன் : 30442

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர் அஞ்சல், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விவரங்களுக்கும் :

டி. ஸ்டேன்ஸ் அண்டு கம்பெனி லிமிடெட்,
(உர இலாகா), தபால் பெட்டி எண் 131, கோயமுத்தூர்-18

(அல்லது)

ஸ்டேன்ஸ் உரத் தொழிற்சாலைகள் :

வளவனூர், விழுப்புரம், போன்-25	துடியலூர், போன் : 25385 CBE	ஆவணியாபுரம், மதுரை, போன் : 5533	தச்சநல்லூர் திருநெல்வேலி, போன் : 1125

குறிப்பு : மக்காச்சோள விதைகள் இருப்பு தீர்ந்து, வருகிற பிப்ரவரி-மார்ச்சில் விநியோகத்துக்கு வரும். சோளம் (CSH-1) கம்பு (HB-1) இருப்பு விரைவில் குறைந்து வருவதால், தேவைக்கு உடனே எழுதவும்.

543/69

சீரணி



சீரணியினர், சென்னை கடற்கரையில் பேரறிஞர் அண்ணா நினைவாக அமைக்கும் அரங்கின் வேலையை

உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் துவக்கிவைக்கும் காட்சிகள்.

சீரணி

(கிராம நலம்)

கதிர் 14] செப்டெம்பர் 1969 [நெல் 12

அறிஞர் இதழ்

தமிழ் நாடு அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித் துறைத்
திங்கள் வெளியீடு



19484

உள்ளே..

எண்	பொருள்	பக்கம்
1.	தம்பி - கேள்!	3
2.	ஊராட்சி வளர்ச்சிக் கருத்துறைக் குழுக்களின் ஆருவது கூட்டம் [தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்களின் உரை]	4
3.	செங்கரும்பு	9
4.	குடும்ப ரகசியம்	20
5.	ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் ஆருவது கூட்டம் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்களின் உரை	25
6.	ஏழைகளின் தோழர் என்.வி.என்.	29
7.	அறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு நாளில் அண்ணாவின் நினைவாக நாட்டுமக்களுக்கு நீங்கள் கூறுவது என்ன?	33
8.	சீரணிகண்ட செம்மலுக்கு சீரணியின் காணிக்கை	37
9.	பசிப்பிணி மருத்துவன் யாரு? பாங்கானநம் அண்ணா கூறு!	40
10.	இன்பத் தமிழகத்தில் இமயமலைச் சாரலிலிருந்து வந்த நம் விருந்தினர்	44
11.	அமெரிக்காவில் சிற்றூர்கள்!	46
12.	அழுகின்ற வீணைகளே!	48
13.	சோவியத் ஒன்றியத்தில் தோட்டக் கலை	50
14.	படியாதோனே!	52
15.	அண்ணாபோன்று வளர்க! வாழ்க!	53
16.	முடியாத மொழி பெயர்ப்புகள்	55
17.	வள்ளுவர் கண்ட குடிமகன்	60
18.	வையத்துள் வாழ்வாங்கு வாழலாம்	64
19.	பயிர்ப் பாதுகாப்பு	69
20.	'பஞ்சாயத்து ராஜ்' இதழிலிருந்து	73
21.	ஊராட்சி அரசிதழ்	82
22.	திங்கள்தோறும் 5ஆம் நாள் மனுநீதி நாள்	86
23.	தமிழ்நாடு முதலமைச்சர் பெயரில் வீரப் பதக்கம்	87
24.	பார்த்தோம் - படித்தோம் - பட்டதைச் சொல்கிறோம்	88



தம்பி — கேள்!

காதுகொடுத் துக்கேள்நீ தம்பி; என்றன்
கருணாநிதி எனுமரிய கழகக் கம்பி!
ஏதுமறி யாத்தமிழர் தூய வாழ்வை
எனக்குப்பின் சீர்படுத்தும் மறவன் நீதான்!
தோதான நம்முயர்வுக் கொள்கை பற்றித்
துறைதோறும் புதுக்குவதே உன்றன் வேலை!
மாதுக்கம் சூழ்ந்திருக்கும் இனிய நாட்டில்
மறுமலர்ச்சி பூக்கச்செய் வாய்நீ தம்பி!

கண்ணீரில் வளர்ந்தவர்நாம்; எனவே அந்தக்
கண்ணீரில் மிதப்போரின் துயரைத் தீர்க்க
எண்ணியெண்ணிச் செயலாற்றிப் புகழைத் தேக்கு!
இதயத்தை எப்போதும் துயரில் ஆழ்த்தி
உண்ணுமல் கிடக்கின்ற ஏழை வாழ்வை
உயிரோட்ட மாக்குவதே பெருந்தொண் டாகும்!
அண்ணன்என் சொல்வழியில் நடந்து சென்று
அவனியெலாம் போற்றுவணம் ஆள்க தம்பி!

புதுமையெலாம் இத்தமிழர் நாட்டில் இன்றே
புலர்ந்தெழநீ பாடுபடு! உன்நெஞ் சுள்ளே
இதுகொடுமை எனக்கண்ட தெல்லா மும்நீ
என்வழியில் சென்றுடனே களைவாய்; தஞ்சைப்
பதுமைக்கே ஒப்பான திந்த வையம்
பகுத்தறிவின் வழிதொடரக் கடமை யாற்று!
எதுதீமை யோஅதனை மண்ணுள் ஆழ்த்தி
இந்நாட்டார் வாழ்வுக்கே வாழ்க தம்பி!

ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் ஆறாவது கூட்டம்

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரும் நாடு." —குறள்

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழு உறுப்பினர்களே! அரசுத் துறை அலுவலர்களே! நண்பர்களே! வணக்கம்.

இன்று உங்களிடையே கலந்து பேசி, கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கான நல்வாய்ப்புக் கிடைத்தமைக்காகப் பெரிதும் மகிழ்கிறேன். அரசின், ஏன், நாட்டின், அச்சாணி போன்றவை ஊராட்சி நிறுவனங்கள். மக்களாட்சியின் ஊற்றுக் கண்களாக, அடிப்படை நிலைக்களன்களாக நின்று நிலவும் ஊராட்சி நிறுவனங்களில், பொறுப்பேற்றுப் பொதுப் பணியாற்றி, ஊரை உயர்த்தும் திருப்பணியில் தங்களைத் தாங்களே அர்ப்பணித்துக்கொண்டு தொண்டாற்றும் உங்களையெல்லாம், ஒரு சேரக் கூட்டி, அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும் கலந்து பேசிப் பிரச்னைகளைத் தீர்க்க வழிகாண்பதுதான்—இன்று மட்டுமல்ல—என்றுமே தமிழகத்தின் ஆட்சி முறையாக இருந்துள்ளது. சோழர் காலத்தில் ஊராட்சி முறை, செந்தமிழ் நாட்டில் செம்மையாக நடைபெற்று வந்தது என்பதைச் செப்பேடுகள் நமக்குப் புலனாக்குகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்களின் உரை

தமிழகத்தில் ஊராட்சி நிர்வாகத்தின்மூலம் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றின் முன்னேற்றத்தை ஆராயும் பொருட்டு மாநில அளவில் ஓர் அமைப்பை ஏற்படுத்துவதன் அவசியத்தை அரசு உணர்ந்து, மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் நிலைக்குழுத் தலைவர்கள் மேற்படி முன்னேற்றத்தை நன்கு மதிப்பிட்டு, ஊராட்சி நிர்வாகத்தில் காணும் பிரச்னைகளை உணர்ந்து, பற்பல திட்டங்களை நிறைவேற்றுவதில் பயன்தரும் மாற்றங்களையும் சீர்திருத்தங்களையும் அரசுக்கு எடுத்துக்கூறத் தகுதியுடையவர்கள் என்று அரசு கருதியது. எனவே மாநில அளவில் மூன்று ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுக்களை அரசு 1962ஆம் ஆண்டு தோற்றுவித்தது. இவை முறையே (1) நிர்வாக வேலைத் திட்டக்குழு (2) உற்பத்தித் திட்டக்குழு (3) நலத் திட்டக்குழு ஆகியவையாகும். ஊராட்சி நிர்வாகத்தால் பற்பல துறைகளிலும் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி வேலைகளின் முன்னேற்றத்தைப் பற்றிப் பரிசீலனை செய்வதே இக்குழுக்களின் நோக்கமாகும். இக்குழுக்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் அரசு தெளிவாக வரையறுத்துள்ளது. இக்குழுக்கள் இதுவரை ஐந்து முறைகள் கூடியுள்ளன. ஆறாவது முறையாகத் தற்போது கூடியுள்ளது.

ஊராட்சி முறையின்மூலம் இன்று பல்வேறு வளர்ச்சிப்

பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. எந்த ஒரு வேலைத் திட்டமாயினும், மக்களைத் தன்பால் ஈர்த்து அவர்களை அதில் பங்கு பெறச் செய்கின்ற முறையில் அதைச் செயற்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்த வேலைத் திட்டம் வெற்றி பெறும்; பயனுள்ளதாக அமையும். அதிகாரம் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பதற்குப் பெயர் 'மக்களாட்சி' அல்ல; அதிகாரத்தைப் பரவலாகப் பகிர்ந்தளித்து, அரசு மேற்கொள்ளும் செயல்முறைகளில் மக்களையும் நேரடிப் பங்குபெறச் செய்வதுதான் மக்களாட்சியின் அடிப்படை இலக்கணமாகும். 'அதிகாரப் பரவல் முறை' என்ற அடிப்படையில் அமையப்பெற்ற ஊராட்சி நிறுவனங்கள், தமிழ்நாட்டில் சீரிய பணிகள் பல ஆற்றி வருவதைக் கண்டு பெருமகிழ்வெய்துகிறேன்.

1971-72க்குள் எல்லாக் கிராமங்களும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெறும்.

இச்சந்தர்ப்பத்தில், கிராம வளர்ச்சி குறித்து அரசு மேற்கொண்டுள்ள வேலைத் திட்டங்களைப்பற்றிக் குறிப்பிட விழைகிறேன். கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளித்தல் அரசின் தலையாய கடமை என்று நான் கருதுகிறேன். 31-3-1968 முடிய தமிழ் நாட்டில் 2821 கிராமங்களும், 9074 குக்கிராமங்களும் எவ்விதப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும் இல்லாத நிலையில் இருந்தன. இவ்வவல நிலையினைப் போக்கி, இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண்பதென அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக ஒரு சிறப்புத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, 1971-72ஆம் ஆண்டுக்குள்ளாக, தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தருவதென அரசு முடிவு எடுத்துள்ளது. இதை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கென மாநில அளவில் குடிநீர்-வடிகால் திட்ட வாரியம் ஒன்று அமைக்கப்படும். குடிநீர் வசதி அளிப்பதற்கென்றே, இவ்வாரியம் ஏற்படுத்தப்படும்.

அடுத்தபடியாக அரசின் கவனத்தைக் கவருவது கிராமப்புறங்களில் கல்வி வசதியை அதிகப்படுத்துதலாகும். தமிழ்நாடு முழுவதும் ஆரம்பக் கல்வியை ஊராட்சி நிறுவனங்கள் வசம் கொண்டு வந்தது தமிழகத்தின் அரியதொரு சாதனையாகும். ஆரம்பக் கல்வியைப் பரப்புவது ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களில் மிகப் பெரியதாகும். ஆரம்பக் கல்விக்காக இப்பொழுது கொடுக்கப்படும் மானியம் போதாது; அதை உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து வருகிறது. ஆரம்பக் கல்வி வளர்ச்சியில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. ஆரம்பக் கல்விக்குத் தற்பொழுது கொடுக்கப்படும் மானியத்தை எவ்வாறு திருத்தி அமைக்கலாம் என்பதுபற்றியெல்லாம் ஆராய்ந்து, ஒரு தீர்வு காண்பதற்காக வேண்டி, உயர் மட்டக்குழு ஒன்றினை அரசு அண்மையில் நியமித்துள்ளது. குழுவின் அறிக்கை கிடைத்தவுடன், அரசு இதுபற்றித் தக்க முடிவெடுக்கும்.

மேலும், கிராம வளர்ச்சிப் பணிகளுக்கும், சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இணைப்புச் சாலைகளுக்கென ரூ. 700 இலட்சமும், பள்ளிக் கட்டடங்களுக்கென ரூ. 300 இலட்சமும், விவசாயம், கால்நடை வளர்ச்சி, மீன்வளம் ஆகியவற்றிற்கு 593·26 இலட்சமும், சமூகக் கல்விக்கென ரூ. 100 இலட்சமும், மாதர்-குழந்தைகள் நலனுக்கென ரூ. 120 இலட்சமும், கிராமக் கைத்தொழில்களுக்கென ரூ. 100 இலட்சமும் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

சாலைகளைப் பேணுவதற்கென ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு, மக்கள்தொகை அடிப்படையில் தற்போது நபர் ஒன்றுக்கு 40 பை. வீதம் கணக்கிட்டு, தல சாலை மானியமாகத் தரப்படுகிறது. சாலைப் பராமரிப்புக்காகக் கொடுக்கப்படும் இத்தொகை போதியதாக இல்லாததனால் தல சாலை மானியத்தை சாலைகளின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நெடுநாட்களாக இருந்து வருகிறது. ஆகவே அந்த அடிப்படையில் தல சாலை மானியம் வழங்கும் முறையை மாற்றி அதில் ஒரு பகுதியை மக்கள் தொகை அடிப்படையிலும், இன்னொரு பகுதியை ஒன்றியங்கள் நிர்வகிக்கும் சாலைகளின் நீளத்தின் அடிப்படையிலும் மானியமாக வழங்க நிர்ணயிக்கப்பட இருக்கிறது.

வறட்சித் தணிப்புக்கு இதுவரை அரசு செய்துள்ள செலவு ரூ. 16.5 கோடி.

இன்று நம்முன் உள்ள மிகப் பெரிய பிரச்னை, தமிழ் நாட்டில் தோன்றியுள்ள வறட்சி நிலையேயாகும். நாம் அனைவரும், எந்தவிதப் பேதமுமின்றி இந்த வறட்சி நிலையைப் போக்கப் பாடுபடவேண்டும். ஊராட்சி நிறுவனங்களில் பொறுப்பேற்றுப் பணியாற்றும் மக்கள் பிரதிநிதிகள், மக்கள் துயர் துடைக்கும் இப்பணியில் தங்களுக்கும் பெரும் பங்கு உள்ளது என்பதை உணர்ந்து பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். வறட்சிநிலை என்ற இந்தப் பிரச்னை, நம்மை எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்னையாகும். உங்கள் அனைவருடைய ஒத்துழைப்புடன் இந்தப் பிரச்னையைச் சமாளித்துவிடுவோம் என்பதில் எனக்கு ஐயமில்லை.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.''

என்பது வள்ளுவர் வாக்கு. திருக்குறளின் வழிநின்று, முழு மனதுடன், கருத்து வேறுபாடின்றி, அனைவரும் பணியாற்றினால், இப்பிரச்னையைச் சுலபமாகத் தீர்த்துவிடமுடியும். தமிழ்நாடெங்கும் வறட்சிநிலை தோன்றி, குடிநீருக்கும், பாசன வசதிக்கும் நீரில்லாமல், மக்கள் அவதிப்படுகிற அவல நிலையைத் துடைத்தெறிய, அரசு மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டு வருகிறது. அத்துயரை நீக்க, தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை வகுத்து, உடனடியாகச் செயற்படுத்தி வருகிறது. இதுவரையில், இவ்வேலைகளுக்காக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக ரூ. 16·50 கோடி செலவழித்துள்ளது. வறட்சிநிலையைப் போக்க அதி தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதைத் தாங்கள் அறிவீர்கள். உங்களுடைய பூரண ஒத்துழைப்பையும் அரசுக்கு நல்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். வறட்சிப்பணிகள் பற்றியும், அதற்கான செயல்முறைத் திட்டங்கள் பற்றியும் தங்களுடைய அனுபவரீதியான, தருக்க பூர்வமான கருத்துக்களை நான் வரவேற்கிறேன். உங்களுடைய யோசனைகளை எடுத்துக் கூறுங்கள். எல்லாவற்றையும் கேட்டு, அதற்கான தகுந்த நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக இருக்கிறேன் என்று அரசின் சார்பில் கூறிக்கொள்ள விழைகிறேன்.

வரும் ஊராட்சித் தேர்தலில் ஊராட்சித் தலைவர்கள் நேரடித் தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

இன்னொரு முக்கியமான செய்தியையும் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடவேண்டும். ஊராட்சித் தலைவர்களையும், ஊராட்சி

ஒன்றியத் தலைவர்களையும், இப்பொழுதுள்ள நிலைபோல் இல்லாமல், நேரடித் தேர்தல் முறையில் சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதுபோல், மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை, நெடு நாட்களாக இருந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். கட்சி வேறுபாடின்றி, எல்லோரும் இக்கருத்தைச் சட்டமன்றத்திலும், வெளியிலும் வற்புறுத்தி வந்துள்ளார்கள். அரசின் கொள்கையும் அதுதான். அதற்கிணங்க, வருகின்ற உள்ளாட்சித் தேர்தல்களில், ஊராட்சித் தலைவரை மட்டும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வகை செய்யப்பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சிச் சட்டத்தில் இதற்கான திருத்தங்கள் செய்யப்படும்.

1971க்குள் எல்லாக் கிராமங்களுக்கும் மின்வசதி கிடைக்கும்.

மற்றுமொரு முக்கியக் கருத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது சாலப் பொருத்தமுடையது. தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்களுக்கு மின்இணைப்புக் கொடுக்கும் பணியை 1971ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே அந்தக்கால வரையறைக்குள் தமிழ்நாட்டில் எல்லாக் கிராமங்களும் மின்வசதி பெற்றவைகளாகத் திகழும் என்று எதிர்பார்க்கலாம்.

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்ற சாத்வீகப் போராட்டத்தில் உயிரிழந்த தில்லையாடி வள்ளியம்மை, நாகப்பன், நாராயணசாமி மற்றும் இதரத் தொண்டர்களின் நினைவாக, தில்லையாடியில் ரூ. 7·5 இலட்சம் செலவில் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளத் தமிழ்நாடுஅரசு முடிவு செய்துள்ளது.

நிதி வளமிக்க ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்தும் தமது பொது நிதியிலிருந்து முறையே ரூ. 100, ரூ. 250, ரூ, 1,000 நன்கொடையளிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

உலகப் பொதுமறையாம் 'திருக்குறள்' தந்த திருவள்ளுவப் பெருந்தகையின் ஈராயிரம் ஆண்டு விழாவும், காந்தி அடிகளின் நூற்றாண்டு விழாவும், அறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாம் ஆண்டு விழாவும், 1969இல் இணைந்து வந்துள்ளதிலிருந்தே இப்பெரியோர்களின் புகழ் நன்கு விளங்கும்.

வான்புகழ் வள்ளுவர் ஈராயிரமாண்டு விழா 1969ஆம் ஆண்டு, தைத் திங்கள் தொடங்கி, தமிழ்நாடெங்கிலும் கொண்டாடப்படவிருந்தது. தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் இவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிடப்பட்டது. ஆனால் தமிழகத்தின் முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் எதிர்பாராத மறைவையொட்டி ஒத்தி வைக்கப்பட்ட இவ்விழா நிகழ்ச்சிகள் வருகிற ஆண்டு நடைபெறவிருக்கின்றன.

இவ்விழாவினையொட்டி ஊர்வலங்கள், கலைநிகழ்ச்சிகள், குறளில் கூறப்படும் கருத்துக்களை விளக்கும் பொருட்காட்சிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், கவியரங்குகள், பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் முதலியன ஆங்காங்கு விமரிசையாக நடைபெறும்.

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும் அறிஞர் அண்ணா நினைவாக ரூ. 5500 மதிப்பில் பள்ளிக் கட்டடம் ஒன்று கட்டி முடிக்கும்.

செப்டெம்பர் திங்கள் 15ஆம் நாளன்று, அமரர் அண்ணா அவர்களின் நினைவாக, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியமும் ஒரு பள்ளிக் கட்டடம் கட்ட, இட வசதி போன்ற ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது. ரூ. 5,500 மதிப்பீட்டுச் செலவில், இதற்காக வரைபடம் அச்சிடப் பெற்று, மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஒன்றிய ஆணையர்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. தேவையெழுமிடத்து, கட்டட மதிப்பில், மூன்றிலொரு பங்குக் கான செலவை, சீரணி நிதியிலிருந்து செலவழிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

இதுகாறும் ஊர் மக்களனைவரும் அரசு அலுவலர்களுடன் கடிதப் போக்குவரத்துச் செய்து தமது பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டனர்; சிலர் அலுவலர்களை நாடி, அரசு அலுவலகங்களுக்குச் சென்று தமது காரியங்களை நிறைவேற்றிக் கொள்வதும் உண்டு. இவற்றால் நீண்டகாலதாமதம் ஏற்பட்டு, ஊர்ப்புற மக்களுக்குப் பெருந்தொல்லைகளேற்படுவதால், அவற்றையெல்லாம் தடுத்து, சிறந்த நிர்வாகம் தமிழகத்தில் செயல்படுவதற்கு, தமிழ்நாடு அரசு புதிய திட்டத்தை உருவாக்கியுள்ளது.

ஒவ்வொரு திங்களும் 5ஆம் நாள் மனு நீதி நாளாகும்.

அதன்படி அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஒன்று கூடி, ஒவ்வொரு திங்களும் ஐந்தாம் நாளன்று, ஒவ்வொரு வருவாய் வட்டத்திற்கும் செல்வர். வருவாய்த்துறை, பொதுப் பணித்துறை, மின்துறை, ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த அலுவலர்கள் இதில் பங்குபெறுவர்.

இவ்வலுவலர்கள் மக்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அவர்களின் குறைகளை நேரில் கேட்டுக் கண்டறிந்து, அவற்றைப் போக்க ஆவன செய்வார்கள். அவ்விடத்திலேயே முடிவெடுக்க இயலாவிடில், அவ்விண்ணப்பங்கள் பதிவுசெய்து வைக்கப்பட்டு, பின்னர் பரிசீலனை செய்யப்படும். இதுபோன்ற விண்ணப்பங்களின் பேரில் ஒரு திங்களுக்குள்ளாகவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுவிடும்.

அமரர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டெம்பர் 15ஆம் நாளிலிருந்து இத்திட்டம், எல்லா மாவட்டங்களிலும் செயற்படவிருக்கிறது.

இத்துடன் இக்கூட்ட நிகழ்ச்சி நிரல், குறிப்புகள் அடங்கிய கையேடும் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதில் குறித்துள்ள ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படும் பிரச்னைகளை, காய்தல், உவத்தல் அகற்றி, கட்சிமாச்சரியங்களை மறந்து அனைவரும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற அடிப்படையில் நீங்கள் விவாதித்து, உங்கள் முடிவுகளையும், கருத்துக்களையும் அரசுக்கு எடுத்துக் கூறவேண்டுமென உங்களை யெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் சொல்கின்ற கருத்துக் களையும், எடுக்கின்ற முடிவுகளையும் அரசு அக்கறையுடன் பரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கைகள் எடுக்கத் தயங்காது என்ற உறுதி மொழியினைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

[அண்ணா பிறந்த நாள் நினைவாக, 'சீரணி'யின் இவ்விதழில் அவர் 5-2-1956இல் 'திராவிட நாடு' ஏட்டில் எழுதிய 'செங்கரும்பு' என்ற இக் கதையை வெளியிட்டுப் பெருமைகொள்கிறோம்.]

சின்னப்பன் அந்தக் காளையை இரு நூறு ரூபாய் கொடுத்து வாங்கின போது, கிராமத்துப் பெரியவர்கள், அவன் 'செட்டாக'க் குடித்தனம் செய்து, பணம் மிச்சம் பிடித்து, நல்ல காளை வாங்கினான் என்று எண்ணி மகிழ்ச்சி அடைந்தனர். வேலை வெட்டியைக் கவனிக்காமல் இருக்கும் உழவர்களையும், கிடைப்பதைக் கண் மூடித்தனமாகச் செலவிடுபவர்களையும் கிராமத்துப் பெரியவர்கள், கண்டித்துப் புத்திமதி கூறும்போது, சின்னப்பனைத்தான் உதாரணம் காட்டிப் பேசுவார்கள்: ''அவன் புத்திசாலி, கெட்டிக்காரன், வீண் ஜோலிக்குப் போகமாட்டான்; சளைக்காமல் உழைக்கிறான், வீண் செலவு செய்யாமல் மிச்சம் பிடிக்கிறான்; அதனாலேதான் அவன் இப்போது நல்ல காளை வாங்க முடிந்தது. சப்பைகளை வைத்துக்கொண்டே இவ்வளவு நன்றாகப் பாடுபட்டவனிடம் இப்போது அருமையான 'ஜோடி' இருக்கிறது. இன்னும் நல்ல உழைப்பும், அதற்கான பயனும் கிடைக்கும்'' என்று கூறினர்.

சின்னப்பன் சாது, உழைப்பாளி, செலவாளி அல்ல, அவை யாவும் உண்மை. அவன் வாங்கிவந்த காளையும் சிலாக்கியமானதுதான், இரு நூறு ரூபாய் கொடுத்துத்தான் வாங்கினான்; அதுவும் உண்மைதான். ஆனால் பணம் மிச்சம் பிடித்து, அந்தக் காளையை அவன் வாங்கினதாகச் சொன்னார்களே அதுமட்டும் முழு உண்மையல்ல; விவரம் அறியாமல், கிராமத்துக் கிழவர்கள் அப்படிச் சொல்லிக்கொண்டனர்—சின்னப்பன் அதை மறுக்கவில்லை. காரணம், அப்போதைக்கு அவனுக்கு அந்தவிதமான பேச்சுப் பரவுவதிலே ஒருவிதமான இலாபம் இருந்தது — அதற்குக் காரண்ம், சின்னப்பன் மகள் செங்கரும்பு.

செங்கரும்புக்குத் திருமண வயது; அதாவது, கிராமத்துப் பெரியவர்கள், ''ஏண்டா, சின்னப்பா! காடு கழனி வேலையையே கவனித்துக் கொண்டிருந்தால் போதுமா? வயசுக்கு வந்த பொண்ணு இருக்குதே, அதுக்குக் காலா காலத்திலே ஒரு கண்ணாலம் செய்ய வேண்டாமா? அதற்கான வேலையைக் கவனிக்காமல், பொழுதை ஓட்டுகிறயே நல்லதா?'' என்று சின்னப்பனை நச்சரிக்க ஆரம்பித்து வருஷம் இரண்டாகி விட்டது.

எவ்வளவு காலத்துக்கு, ‘இதுக்குள்ளே என்ன? அதுக்கென்ன பார்க்கலாம்! நானும்தான் யோசிக்கிறேன்’ என்று கூறிக்கொண்டிருப்பது? சின்னப்பன், தன் பெண் கலியாண விஷயமாகக் கவனம் செலுத்தினான்; அப்போதுதான் அவனுக்கு ஒரு ஜதை நல்ல காளையாவது இருந்தால்தானே, பார்க்கிறவர்களுக்கு ஒரு மதிப்பு இருக்கும் என்ற நினைப்பு வந்தது. அதனாலேயே அவன் மிச்சம்பிடித்து வைத்திருந்த 150 ரூபாயுடன் ஐம்பது கடன் வாங்கி, அந்தக் காளையைக் கொண்டுவந்தான்.

‘‘ரொம்ப அதிகமாச் சொல்றிங்க அண்ணேன்’’ என்று சின்னப்பன் சொன்னபோது, ‘‘உன்னண்டை சொல்வதிலே என்ன சின்னப்பா குத்தம், இதை நான் இப்ப அறுவது ரூபா தள்ளிக் கொடுக்கறேன்—என் கஷ்டகாலத்தாலே கொடுக்கறேன்—நீ கொடுக்கற இரண்டுநூறும், சாமி சாட்சியா, கடன் கட்டத்தான், என் கையிலே சல்லிக் காசுகூடத் தங்கப் போறதில்லை’’ என்று நல்லண்ணன் சொன்னான்; அது பொய்யல்ல. கிராமத்துக்காரருக்குக் கடன் கொடுத்து, கண்டிப்புடன் வட்டியும் அசலும் தீர்த்து வாங்குவதிலே அனுபவமிக்கவர் அருணாசலம் - அவரிடம்தான் சின்னப்பனும் கடன் வாங்கினான் - ஏற்பாடு செய்து கொடுத்ததும் நல்லண்ணன்தான். அப்படி ஏற்பாடு செய்யும்படி யோசனை சொன்னவர் அருணாசலமேதான்!

சின்னப்பனிடம் சீட்டு எழுதி வாங்கிக்கொண்டு, கடன் கொடுத்தார் அருணாசலம். அதை அவன் வாங்கி, தான் கொண்டு வந்திருந்த பணத்தோடு சேர்த்து நல்லண்ணனிடம் கொடுத்தான். அவனிடமிருந்து அருணாசலம் பணத்தை வாங்கிக் கொண்டு, தன் வீட்டுப் புறக்கடையிலே கொண்டுவந்து கட்டிவைக்கப் பட்டிருந்த கருப்பனை அவிழ்த்துக் கொண்டு போகும்படி, சின்னப்பனுக்கு அனுமதி அளித்தார். அந்த அழகான காளையைக் கண்டவர்கள், சின்னப்பனுடைய ‘செட்டான’ குடித்தனத்தைப் புகழ்ந்தார்கள். பெண் பார்க்க வருகிறவர்களுடைய காதிலே ‘இந்த விஷயம்’ விழுவது நல்லது என்று சின்னப்பன் எண்ணிக் கொண்டான்.

‘‘கரும்பு காசு கொடுக்கட்டும், கலியாணத்தைப்பற்றிக் கவனிக்கலாம்; சின்னப்பன் மக ‘செக்கச் செவேலுனு’ இருக்கிறா! ரொம்பத் துடியான பொண்ணுன்னும் பேசிக்கொள்றாங்க; சின்னப்பன் வளமான சம்சாரியாம்; போன மாதம்கூட இருநூறு கொடுத்து காளை வாங்கினானாம். இரண்டு ஏக்கரா சொந்தமும், மூணு குத்தகையுமா இருக்கிறதாகச் சொல்கிறாங்க; ஒரு பிள்ளை, ஒரு பொண்ணு - பிள்ளை எங்கேயோ பட்டணத்து மில்லிலே ‘பாரா’க்காரனா இருக்கிறானாம் — மொத்தத்திலே நமக்கு ஏத்த சம்பந்தம்தான்; ஆனா நமக்கும் நாலு காசு வேணுமே, இந்தத் தடவை கரும்புப் பயிரு, கடவுள் புண்ணியத்திலே திருப்தியாத்தான் இருக்குது, பார்ப்பம், இதிலே நாலுகாசு கிடைச்சுதானா, சின்னப்பன் மகளையே நம்ம மாடசாமிக்குப் பார்க்கலாம்—’’ என்று எண்ணிக்கொண்டபடிதான் ஒவ்வொரு நாளும், கத்திரி தன்னுடைய கரும்புத் தோட்டத்தைச் சுற்றி வந்து கொண்டிருந்தான். அதுக்கென்ன, அப்படியே செய்யலாம்— அப்படியே செய்யலாம் என்று நல்வாக்குக் கொடுப்பது போல, கரும்பு அசைந்தாடிக்கொண்டிருந்தது.

மொத்தமாக நானே எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லி அருணாசலம், பயிர் வளரும்போதே கத்திரிக்குப் பணம் கொடுத்து வைத்திருந்தார்; விலையைச் சமயமறிந்து நிர்ணயம் செய்து கொள்ளலாம் என்பது அவர் எண்ணம். மகராசன், நம்மைக் கெடுப்பாரா — நம்பி, முன் பணம் கொடுத்தவருக்கு, நாமத்தான் துரோகம் செய்யமுடியுமா என்று நியாயம் பேசினான் கத்திரி.

> **‘‘சர்க்கரை உற்பத்தி, தேவைக்கு அதிகமாகி விட்டது. விலை வீழ்ச்சி அடைகிறது. ஆகையால், இந்தத் தடவை கரும்பு ‘மாசூல்’ விவசாயிக்குத் தகுந்த ‘பலன்’ தராது என்று கருதப் படுகிறது.’**

தினசரியில் இந்தச் செய்தியையும், இதற்காதரவான புள்ளி விவரத்தை

யும் படித்தார் அருணாசலம். உடனே, கத்திரியிடம் கரும்பு வாங்குவதில்லை, கொடுத்த முன் பணத்தை எப்படியாவது திரும்பப் பெற்றுவிட வேண்டும் என்று தீர்மானித்தார். உண்மை நிலைமை தெரிவதற்குள் இதை முடித்துவிடவேண்டும் என்று துடித்தார். கத்திரிக்குக் கரும்புதான் தெரிந்தது—விலை ஏறுவதால், இறங்குவதால் உண்டாகும் கசப்பு எப்படித் தெரியும், அனுபவிக்காத முன்பு.

அருணாசலத்துக்குச் சாதகமாக, தானாக ஒரு சம்பவம் நடைபெற்றது.
அந்தப் பகுதியில் புதிதாகத் துவக்கப்பட்ட சர்க்கரை ஆலையில், பெரிய புள்ளியாக இருந்தவர் கருப்பண்ணன் செட்டியார்; காங்கிரஸ் கட்சியிலே முக்யஸ்தர். அந்த ஸ்தானத்தைப் பெற அவர் அதிக ஆண்டுகள் பணியாற்றவில்லை; ஆகவே, காங்கிரஸ் கமிட்டியிலே அவர் அதிகாரம் செலுத்துவதை உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஓராண்டு சிறை சென்று, வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்ட வந்தேமாதரம் என்று பட்டம் பெற்ற வரதப்பன், எதிர்த்தான். தனியாகப் பேசும் போது வரதப்பனைத் தட்டிக்கொடுத்த காங்கிரஸ்காரர்களிலே பெரும்பாலானவர்கள் கமிட்டியில் உட்காரும் போது, கருப்பண்ணருக்குக் கை தூக்குவது கண்டு, காரணம் தெரியாமல் கலங்கினான் வரதப்பன். காரணம் செட்டியாருடைய கணக்கேட்டில் பளிச்சென்று தெரிந்தது!

ஏமாற்றமும் திகைப்புமடைந்த வந்தேமாதரம், கருப்பண்ணனை எதிர்க்கத் தொடங்கி, கரும்பாலையைக் கண்டித்துப் பேசும் நிலைக்கு வளர்ந்து, பிறகு கிராமம் கிராமமாகச் சென்று, ஆலைக்குக் கரும்பை விற்றுவிட்டு, ஆண்டி ஆகாதீர்கள், முதலாளியைக் கொழுக்கவைக்காதீர்கள்—நீங்களே வெல்லம் காய்ச்சினால், ஆலைக்காரன் கொடுப்பதை விட அதிக இலாபம் கிடைக்கும் என்று ‘பிரச்சாரம்’ பலமாகச் செய்தான். அடிதடியுடன் கூட்டம் நடைபெறும்.

இதையே, அருணாசலம் சாக்காக்கிக் கொண்டார்.

வந்தேமாதரம் நடத்திய கூட்டத்திலே, ஒருநாள், கத்திரி தலைமை வகித்தது, இதற்குச் சாதகமாகி விட்டது. கூப்பிட்டனுப்பிக் கோபமாகக் கேள்விகள் கேட்டார்.

‘‘பெரிய லீடர் ஆய்விட்டீரே ஐயா! உம்மிடம் எனக்கு ஏன் தொடர்பு...’’

‘‘நான் லீடராவது மண்ணாவது... அந்த வந்தேமாதரம் நல்ல புள்ளையாண்டானுங்கோ...... கூட்டம் போட்டா, சிறுமிகளும் பொடிசுகளும் கல்லை விட்டு எறியுது, நீ தலைமையா இருந்தா, ஒழுங்காக் கூட்டம் நடக்கும்னு கேட்டுக்கிட்டதாலே அதுக்கென்ன ஆகட்டும்னு பெஞ்சிமேலே உட்கார்ந்தனுங்க... வேறே ஒரு தப்பு தண்டாவும் கிடையாதுங்க...’’

‘‘அதெல்லாம் எனக்கு ஒண்ணும் தெரியாது கத்திரி. நான் உன் கரும்பை வாங்கினா, அந்த வந்தேமாதரம் ‘கலாட்டா’ செய்வான்... எனக்கு ஏன் வீணான வம்பு... நான் கொடுத்த பணத்துக்கு, ஒரு சீட்டு எழுதிக் கொடுத்துவிட்டு, நீ மகராசனா, அந்த வந்தேமாதரம் சொன்ன யோசனைப்படி வெல்லமே காச்சு, நிறைய இலாபம் கிடைக்கும்...’’

எவ்வளவு சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை; கரும்புக்காக முன் பணமாகக் கொடுத்ததொகைக்குக் கடன் சீட்டு எழுதி வாங்கிய பிறகுதான், அருணாசலம் காபி குடித்தார்.

வந்தேமாதரம், விடவில்லை; கத்திரியை முற்றுகையிட்டான்; கரும்பு வெல்லமாயிற்று; கத்திரி கடன்காரனானான்; வந்தேமாதரம் தற்காலிகமாக வேறு ஜில்லா சென்றுவிட்டான்!

சின்னப்பன் மகளைத் தன் மகனுக்குப் பார்க்கும் திட்டம் ‘அடுத்த கரும்பு’க்குப் பிறகுதான் என்று கத்திரி தீர்மானித்து விட்டான். செங்கரும்புக்கு இந்த வருஷமும் கலியாணம் நடக்காது போலிருக்கு என்று கிராமத்தார் பேசிக்கொண்டனர்.

காளை, சின்னப்பனைச் சும்மா விடவில்லை! செலவு வைத்தபடி இருந்தது.

ஓராண்டுக்குப் பிறகு, காளையும் இளைத்து விட்டது, சின்னப்பனும் சோர்ந்து போனான், செங்கரும்பும் கவலை கொண்டாள்! அவள் அண்ணன் சென்னை மில்லிலே சச்சரவு செய்துவிட்டு 'ஊரோடு' போயிருப்பதுதான் உத்தமம் என்று கூறி விட்டு, கிராமம் வந்துசேர்ந்தான்.

அருணாசலம், அசல் பிறகு கொடுக்கட்டும், வட்டியாவது தரவேண்டாமா, என்ன இந்த சின்னப்பனுக்கு வாக்குச் சுத்தமில்லையே என்று ஆள் விட்டுக் கேட்டார்; இந்த விவகாரம் பரவுவதற்குள் எப்படியாவது கடனைக் கட்டிவிடவேண்டும், இல்லை

யானால், செங்கரும்பு திருமணத்துக்கு யாராவது ஏற்பாடு செய்ய வருகிறபோது சங்கடம் உண்டாகும் என்று எண்ணிக் கவலைப்பட்டான் சின்னப்பன். பலவிதமான யோசனைகளுக்குப் பிறகு, காளையை விற்றுவிட்டு — கடனைக் கட்டிவிட்டு—மிச்சமிருக்கும் பணத்துக்கு, ஏதாவது ஒரு 'கிழமோ கிட்டோ' கிடைத்தால் அதை வாங்குவது என்று தீர்மானித்தான். சந்தைக்கு, காளையை ஓட்டிக் கொண்டு போனான்—சகுனம் பார்த்தான பிறகுதான்!

சந்தையிலே அன்று விசேஷமான கூட்டம் - சர்க்கார், சந்தையைச் சினிமாப் படம் எடுத்துக்கொண்டிருந்ததால்.

கந்தல் துணிக்காரர்களை ஒரு மூலைக்குத் துரத்தினார்கள் போலீசார்; 'வாட்ட சாட்டமான' ஆடவர்களையும், கட்டுக் குலையாத பெண்களையும் முன்பக்கம் நடமாடச் சொல்லி, படம் பிடித்துக்கொண்டிருந்தார்கள். சின்னப்பன், சிறிது நேரம் இதை வேடிக்கை பார்த்துவிட்டு, ஒரு மரத்தடியில் காளையைக் கட்டி வைத்து, தீனி போட்டுவிட்டு, 'கிராக்கி' வரட்டும் என்று காத்துக் கொண்டிருந்தான். பலபேர் வந்து பார்த்தார்கள்—பாரி மாடு! இதுக்குத் தீனி போட்டுக் கட்டி வராது என்றெல்லாம் கூறிவிட்டு, வேறு நொண்டி நோஞ்சலை, இருபது முப்பதுக்கு வாங்கிக்கொண்டு சென்றார்கள். 60 ரூபாய்க்குமேல் ஒருவரும் கேட்கவில்லை; சின்னப்பனுக்கு அழுகை வந்துவிடும் போலிருந்தது; அருணாசலத்துக்குமட்டும் அவன் அசலும் வட்டியுமாக எண்பது தரவேண்டும். அதைக் கொடுத்துவிட்டு, மிச்சம் முப்பது நாற்பதாவது இருக்கும், அதைக்கொண்டு ஏதாவதொரு 'சப்பை'யைப் பிடித்துக்கொண்டு போகலாம் என்று எண்ணி, சந்தைக்கு வந்தான்— அங்கே அறுபதுக்குமேல் ஆள் வராதது கண்டு, அவனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; அந்திப் பொழுதுமாயிற்று; வீடு திரும்பி வந்து, தொழுவத்தில் காளையைக் கட்டும்போது, சின்னப்பனுக்கு கோபமே வந்துவிட்டது. உள்ளே, உத்தண்டன் இருக்கக் கண்டான்: உறவினன்; ஊர் நாடு அறிந்தவன்; மாமன் முறை சின்னப்பனுக்கு.

''மாமனா! எப்ப? வந்து எவ்வளவு காலமாச்சி...''

''எதுக்கும் வேளை வரவேணுமே. சரி, செங்கரும்புக்கு ஏதாவது 'இடம்' பார்த்தாயா?''

''நல்லா இருக்கு மாமா, நீ கேட்கிற கேள்வி. நான்தானா இடம் பார்க்கவேண்டியவன்? நீ பார்த்துச் சொன்னாச் சரிதான்...''

''சாமர்த்தியமாப் பேசறியே...சரி ...நானும் ஒரு இடம் பாத்துட்டு அதைச் சொல்லத்தான் வந்தேன்... ஈச்சம்பாடியிலே என்னோட பெரிய மாமன் வகையிலே ஒரு பையன் இருக்கிறான்—மாந்தோப்பும் பூந்தோட்டமும் பயிர் செய்யறான், கெட்ட நடவடிக்கை எதுவும் கிடையாது... எல்லா வகையிலும் உனக்கு ஏத்தவன்தான்...கஞ்சன்தான் உன்னைப் போலவே...என்ன சொல்றே...''

''நான் என்ன சொல்ல இருக்குதாம். அவளைக் கேட்டயா?''

''யாரை? செங்கரும்பையா?''

''அவ ஆத்தாளை...''

''அவ என்ன சொல்றா? சினிமாவிலே பார்க்கறாளேல்லோ அது போலே, புள்ளே வந்து பொண்ணைப் பாக்கட்டுமேன்னு சொல்றா...''

''இவளை நான் பாத்துத்தான் கலியாணம் கட்டிக்கிட்டனாமா...?''

''நானும் சம்மதம்னு சொல்லிப் போட்டேன். அடுத்த திங்கக்கிழமை வரலாம்னு யோசனை...உன்னோட அபிப்பிராயம் என்ன?''

''அடுத்த திங்களுக்கு வேணாம், மாமா, அதுக்கு அடுத்த திங்களுக்கு வந்தா நல்லா இருக்கும். அன்னக்கி நம்ம கிராமத்திலே கன்னி கோயில் திருவிழா...அதையும் பாத்தமாதிரியா இருக்கும்...''

''அதுவும் சரிதான்...கன்னி கோவிலை, நீதானே பார்த்துக் கொள்றே...''

''ஆமாம், என் தலையிலேதான் போட்டுவிட்டாங்க...''

''செச்சே! சாமி காரியத்தை அப்படிச் சொல்லாதே.''

சின்னப்பன் மனம் மிகத் தீவிரமாக வேலை செய்தது. செங்கரும்பைப் பார்க்க வருகிறபோது, கன்னி கோவில் திருவிழாவைச் சற்றுத் தடபுடலாக நடத்திவைக்க வேண்டும். கிராமத்திலே தனக்கு இருக்கும் செல்வாக்கைப் பார்த்து, தனக்கு மருமகனாக வரப்போகிறவன், மலைத்துப் போகவேண்டும் என்று எண்ணினான். எதற்கும் அந்தப் பாழாய்ப்

போன காளை விலை போகவேண்டும்; விலையைக் கொஞ்சம் தள்ளிக் கொடுத்தாவது அடுத்த வாரச் சந்தையிலே விற்றுவிட வேண்டும் என்று தீர்மானித்தான்.

* * *

''முடிவாகச் சொல்லிப் போடறேன்...உன்னைப் பாத்தா நல்ல புள்ளையாண்டனாத் தோணுது...தெரியுதா...நான் அருமையா வளத்து வந்த காளை இது...ஏகப்பட்ட விலை கொடுத்து வாங்கினேன்...ஒரே விலை, ...பேரம் கீரம் வேணும், நூத்தி ஐம்பது..தரகுக்காரனே வேண்டாம், நமக்குள்ளாகவே முடிச்சுக்குவோம்.. நூத்தி ஐம்பது...''

''ஆத்தாடி! ஆனைக்குட்டி விலையல்ல சொல்றீங்க. இப்ப மாடு விலை எவ்வளவோ விழுந்து போச்சு... நீங்க போன வருஷத்து நினைப்பிலே பேசறிங்க—எண்பது ரூபா, சம்மதம்னா சொல்லுங்க, இல்லையானா அதோ பாருங்க, அந்தாலே இருக்கே செவிலி, அது அறுவத்தஞ்சிக்கு 'ரெடியா' இருக்குது...''

''அடே, இருவத்தஞ்சிக்குக் கூடத்தான் எருது இருக்குது—எல்லாம் எருதுதானா.''

''சொல்லுங்க...நான் பெரியவங்களுக்குக் கட்டுப்பட்டவனுங்க... அவங்க எண்பதுக்குமேலே தரப்படாதுன்னு கண்டிப்பாச் சொல்லிட்டாங்க...''

''நான், இதை வித்துவிடவேமாட்டேண்டாப்பா. கொஞ்சம் கடன் கட்டணும், மேலும் திருவிழா செலவு வேறே இருக்கு...''

''ஒவ்வொருத்தரும் அப்படித்தான்; நானும் கடன் வாங்கிட்டுத்தான், வந்திருக்கிறேன். போன சந்தைக்கு வந்தேன், முப்பது, நாற்பதிலே ஒரு காளை பிடிச்சிட்டுப் போகலாம்னு... எல்லாம் ஆனை விலை குதிரை விலை சொல்றாங்க...நடந்து வந்ததுதான் பலன்...இந்தத் தடவை துணிஞ்சி, கடன் வாங்கிட்டு வந்திருக்கிறேன்... ஆசாமி அசகாயச்சூரன். ஐம்பது கடன் கொடுக்கறதுக்குள்ளே, நூறு தடவை, நில புலனைப்பத்தின தகவலைக் கேட்டுக்கிட்டான்.''

''பணம் தருகிறவங்க. அப்படித்தான்...சரி, பத்து தள்ளிக்கோ...''

''ஒரு ஐஞ்சு வேணுமானா கூட்டிக்கிங்க, எண்பத்தி அஞ்சா இருக்கட்டும்...ஏதோ, எனக்கு உபகாரம் செய்கிறதா எண்ணிக்கிட்டுத்தான் கொடுங்களேன். உங்க வீட்டுக்கே நான் வந்தா, ஒரு வேளை சோறு போடமாட்டீங்களா...அட, ஒரு பத்துநாள் சோறு போட்டதா எண்ணிக் கொள்ளுங்களேன்...''

''கூத்துலே பேசறமாதிரித்தான் பேசறே...இதோ பார்டா தம்பி, வீணா ஏன் பேரம் பேசறே, நூற்றி இருவதுக்குத் தம்பிடி குறையாது.''

''நீங்க மாடு வியாபாரம் செய்கிறிங்க...நான் மனஷாளோட கஷ்ட நஷ்டத்தைச் சொல்லி விலை கேக்கிறேன், அதுதான் வித்தியாசம். உம்! எதுக்கும் கொடுப்பினை இருக்க வேணும்...''

''அடே அப்பா! பெரிய சாமியாரு மாதிரி பேசறயே, சரி, நூறு ரூபா ஒரே விலை...''

''ஏனுங்க, மடியிலே இருக்கறது பூராவும் கொடுத்துடச் சொல்றீங்க ...நியாயமுங்களா...சந்தைக்கு வந்து போறவனாச்சே, ஏதாச்சும் பழம் பலகாரமாவது வாங்க வேணாமுங்களா...இந்தாங்க 95...''

''கொடாகண்டனா இருக்கறயே... சரி...கொடு...ஆமா, எந்த ஊரு...?''

''சொந்தஊரு சொர்ணபுரிங்க...''

காளை கைமாறிவிட்டது. கடன் கட்டச் சின்னப்பன் கிளம்பினான் அருணாசலத்தின் கடைக்கு. கடனைக் கொடுத்துவிட்டு, மிச்சமிருந்த பத்து ரூபாயுடன் வீடு திரும்பினான்.

கிராமத்துப் பெரியவர்கள் ''காளை செலவு அதிகம் கொடுக்குதுன்னு, சின்னப்பன் நல்ல விலைக்கு விற்றுவிட்டான்...'' என்று பேசிக்கொண்டனர்.

கன்னி கோயில் திருவிழாவுக்குப் 'பெண்' பார்க்க வருவதாகச் சொன்னபடி ஈச்சம்பாடிக்காரர் வரவில்லை. புதிதாக 'உழவு' மாடு வாங்கிவிட்டான்...அதனாலே வேலைத் தொந்தரவு—நீ ஒரு நடை வா,

நாமே போய், பையனைப் பார்த்துவிட்டு வருவோம் என்று சொன்னார், மாமன்.

ஈச்சம்பாடியார் வீட்டுக் கூடத்தில் சம்பந்தியாகப் போகும் கிழவனைக் கண்டு, சின்னப்பன் பேசிக்கொண்டிருந்தான். மாமன் உடனிருந்து உபசாரம் பேசிக்கொண்டிருந்தான்.

''ஏதோ, ஈசுவரன் கிருபையாலே, நிலம் கொஞ்சம் இருக்குது—நாலு நாளைக்கு முன்னாலேகூட, இருநூறு ரூபா விலை கொடுத்து ஒரு தரமான காளை வாங்கினோம்.''

''நம்ம சின்னப்பனும் நல்ல சமுசாரிதான்...ஒரே மக...''

''கடன் கிடன்...''

''காலணா கிடையாதுங்க? அநியாய வட்டி அருணாசலத்திடம் கொஞ்சம் கடன் இருந்தது. ஒரு சின்னச் சொல்லு சொன்னான்னு, கோபத்திலே, போன வாரம், தங்கமான காளையை முன்னூறு ரூபாய்க்கு வித்துப் போட்டு, அவனோட முப்பது ரூபா கடனை மூகத்திலே வீசி எறிந்துவிட்டு, மிச்சத்தை பொண்ணோட கலியாணத்திலே சீர்செய்ய வைத்துக்கொண்டான்...''

தா, தா! பிடி, பிடி! விடாதே... என்று கூச்சல் கேட்டு, சின்னப்பன் வெளியே வந்து பார்த்தான்...காளையைத் துரத்திக்கொண்டு வந்தான் ஒருவன்—காளை, சின்னப்பனைக் கண்டதும் துள்ளிக்கொண்டு கிட்டே வந்து நின்றது.

சின்னப்பன் சந்தையிலே விற்ற காளைதான் அது.

பின்னோடு வந்து நின்றான் ஈச்சம்பாடி மாப்பிள்ளை.

''இவன்தான்'' என்றார் ஈச்சம்பாடியார், மகனைக் காட்டி.

''இதுதான் என் காளை'' என்றான் சின்னப்பன், காளையைக் காட்டி.

''மூணு நூறுன்னு சொன்னயேப்பா...'' என்று சிரித்தார் கிழவர்.

''இருநூறு கொடுத்ததாக நீங்க சொல்றபோது, நான் ஒரு நூறு கூட்டிச் சொன்னா என்னவாம்...'' என்றான் சின்னப்பன்.

எல்லோரும் நிலைமையை உணர்ந்து சிரித்தனர்.

''காளையைப்பத்தி நாம பேசிக்கொண்டது பொய்—ஆனா, என் மக செங்கரும்பு விஷயமா நான் சொன்னது அத்தனையும் நிஜமுங்க ...நீங்க கண்ணாலே பார்த்தாலே தெரியும்...'' என்றான் சின்னப்பன்.

''அதேபோலத்தான், என் மகன் விஷயமாக நான் சொன்னது, காளை விஷயமாச் சொன்னதுபோல அல்ல; அவ்வளவும் நெஜம்'' என்றார் ஈச்சம்பாடிக் கிழவர்.

''நீங்க சொல்லவே தேவையில்லையே...சந்தையிலேயே நான் பார்த்துவிட்டேனே...அடே அப்பா! விடாகண்டனாச்சே'' என்றான் சின்னப்பன்.

''செங்கரும்புக்கு ஏற்றவன், சகல விதத்திலும் நம்ம சிங்காரம்'' என்றார் மாமன்.

திருமணம் நிச்சயமாகிவிட்டது.

கத்திரி காதுக்கு இந்த விஷயத்தை எட்ட வைத்தவர் அருணாசலம்தான். அவர் இதனால் விபரீதம் ஏதும் நடைபெறும் என்று எதிபார்த்துச் சொன்னவரல்ல.

கத்திரிக்குக் கோபம் கோபமாக வந்தது; நமக்குக் கரும்பிலே நஷ்டம் வந்துவிட்டது தெரிந்துதான் செங்கரும்புக்குச் சின்னப்பன் வேறு இடம் பார்த்துவிட்டான் என்று எண்ணினான். இவ்வளவுக்கும், சின்னப்பன், செங்கரும்பைத் தருவதாக வாக்களிக்கவுமில்லை.

கத்திரியின் கோபம், சின்னப்பன் மீதுமட்டுமல்ல—சிங்காரத்தின் மீதும் பாய்ந்தது — அவனுடைய காளையின்மீதும் பாய்ந்தது.

''திமிர் பிடிச்சு அலையறான் சிங்காரம்! காளைபோலக் கொழுத்துக் கிடக்கிறோமே என்கிற திமிர்; பார்க்கிறேன் ஒரு கை'' என்று கருவிக்கொண்டிருந்தான்.

கழனிப்பக்கமும், களத்துமேட்டிலும், தன் சம்பந்தமாக இப்படியொரு விரோதம் வளருவது செங்கரும்புக்கு எப்படித் தெரியும்—அந்தக் கட்டழகி, களை எடுப்பதும், பூ

பறிப்பதும், கோழிக் குஞ்சுகளைப் பாதுகாப்பதும், மரத்திலே மாங்காய் பறிப்பதும், ஆட்டுக்குட்டிகளோடு ஓடி ஆடுவதுமாக இருந்து வந்தாள்.

''சிங்காரம் இலேசுப்பட்டவனல்ல புள்ளே! நீ சீவிச் சிங்காரிச்சுக்கிட்டு இருந்தா, அவன் பார்த்து இளித்துக்கிட்டுக் கிடக்கிறவனல்ல; வேலே, தரமாச் செய்யவேணும், ஆமாம், வேலேயிலே ரொம்பக் கருரானவன்'' என்று சின்னப்பன் சொல்லுவான்.

தன் மகன் அக்கரையோடு பாடுபட்டு, நாலு பேர்போலே, முன்னுக்கு வருகிற போக்கிலே இல்லே என்று, கத்திரி அடிக்கடி கண்டித்து வரவே, கத்திரி மகனுக்கும் சிங்கார்ரத்தின்மீது கோபம் பிறந்தது.

உனக்குப் பார்த்த குட்டியைச் சிங்காரமல்ல கட்டிக்கப்போருனும் என்று அந்தக் கிராமத்து வாலிபர்கள் கேட்டுக் கேட்டு அவனுக்கு மேலும் கோபமூட்டினர். அவன், இந்தக் கோபத்தால் அறிவிழந்து, பொறுமையிழந்து, கண்டவர்களுடன் வம்புக்கு நின்ருன்.

கத்திரியின் கோபம் வெள்ளம் போலப் பொங்கிற்று.

சிங்காரத்தின் காளேயின் காலில் ஒரு அரிவாள் வெட்டு விழுந்தது— பட்டும் பாவிப்பய மகன், என்று களிப்புடன் கூறிக்கொண்டான் கத்திரி. அவனுக்குச் சிங்காரத்திடம் கோபம் இருப்பது அறிந்தவர்கள் ''அண்ணேன்! போட்டதையே போட்டாயே, துண்டா விழக்காணுேமே,

காலு, கூடி வந்துடும்னு டாக்டரு சொல்ருராமே?'' என்று கேட்டனர்; ''அட போங்கடா, போக்கிரிப் பசங்களா; நான்தான் அந்தக் காளேயோட காலே வெட்டினேன்னு கண்டிங்களா?'' என்று கத்திரி கேட்பான்—ஆனுல் கோபித்துக்கொள்வதில்லே. உண்மையில் காளேயின் காலில் அரிவாள் கொண்டு தாக்கியது கத்திரி அல்ல—அப்படி கிராமத்துக்காரர் எண்ணிக்கொண்டதும் பேசிக்கொண்டதும், அவனுக்கு ஏதோ வீரப் பிரதாபமாகத் தெரிந்தது, மகிழ்ந்தான்.

காளேயில் துவங்கி, கத்திரியுடைய கழுத்துக்குச் சென்றது அரிவாள்; நல்லவேளேயாக, கழுத்தில் வெட்டு விழாமல் தோள்பட்டையில் விழுந்தது — சிங்காரம் மூன்ருண்டுகள் 'உள்ளே' தள்ளப்பட்டான்.

அந்த வழக்கு நடைபெற்றுக்கொண்டிருந்தபோதுதான், செங்கரும்பு சிங்காரத்தைப் பார்த்தாள் —இருவர் உள்ளமும் ஒன்றுபட்டது. தன் பொருட்டுத்தான் இவ்வளவு விபரீதமும் நேரிட்டது என்று செங்கரும்பு மனச்சஞ்சலமடைந்ததுடன், இனிச் சிங்காரத்தைத்தான் கலியாணம் செய்துகொள்ளமுடியும், வேறு ஒருவனுக்கு நான் மனேவியாகப் போவதில்லே என்று உறுதியாகக் கூறிவிட்டாள்.

ஜெயிலுக்குப் போய்வந்தவனுக்குப் பெண் கொடுக்கச் சின்னப்பனுக்கு விருப்பமில்லே; எனினும், மகளுடைய பிடிவாதத்தைப் போக்கவும் முடியவில்லே.

''பைத்தியக்காரப் புள்ளே'' என்று கூறுவான்.

''சிங்காரத்தோட நல்ல குணத்தைப்பத்தி நீயேதான் பன்னிப் பன்னிச் சொல்லி, அவ மனசைக் கெடுத்துவிட்டே'' என்று அவன் மனேவி குறைபட்டுக்கொண்டாள். ஜெயிலுக்குள் இருந்த சிங்காரம், செங்கரும்பு தன்னிடம் உள்ளன்பு கொண்டிருப்பது கேட்டு உள்ளம் பூரித்து இருந்தான். சிறையில் இருந்தவர்களில் தன்னிடம் நெருங்கிப் பழகியவர்களிடம், வெளியே போனதும் தனக்குக் கலியாணப்—பெண் நிச்சயமாகிவிட்டது—என்று சந்தோஷமாகச் சொல்லுவான்.

மூன்ருண்டுகள் உருண்டோடின; விடுதலே கிடைத்தது சிங்காரத்துக்கு; செங்கரும்பின் நினேவு தாலாட்ட அவன் ஏறிச் சென்ற இரயிலிலேயே உறங்கிப் போனுன்; சுவை தரும் கனவுகள்! வைக்கோற் போருக்குப் பக்கத்திலே அவள் நின்றுகொண்டிருந்தாள், வயலோரத்திலிருந்தே அதை அவன் பார்க்கிருன். தா. புள்ளே! செங்கரும்பு! ஆடு வருதே வயலு பக்கம், ஓட்டிவிடக்கூடாதா? என்று கேட்கிருன், அவளுடைய குறும்புப் புன்னகை அவனுக்கு இன்பமளிக்கிறது. இதோ கஞ்சி கொண்டு வருகிருள், அதைத்தான் எவ்வளவு கனிவுடன் அவன் 'கையில்' தருகிருள்! இப்படிப்பட்ட பலப் பல கனவுகள்.

இரயில் நின்றது - ஒரே அல்லோல கல்லோலம்.

வெள்ளம் - உடைப்பு - இரயில் பாதை பிளந்துவிட்டதாம் - இரயில் போகாதாம்.

இரவெல்லாம், ஏக்கத்துடன் இரயிலில் காலந்தள்ளினுன் - பகல் வந்தது — பயங்கரமான செய்திகள் கூறினர்.

கடல் பொங்கிற்ரும் - பேய்க் காற்று அடித்ததாம் - உடைப்பு எடுத்து ஊர் பாழாகிவிட்டதாம் — இலட்ச இலட்சமாக மாண்டுபோனுர்களாம் — இப்படியெல்லாம் சேதி'.

''தோப்புத்துறை'யிலே கூட வெள்ளமுங்களா?'' என்று சிங்காரம் கேட்டான்.

''தோப்புத்துறைதான் இருந்த இடமே தெரியாமே முழுகிப் போச்சாமே'' என்ருன் ஒருவன்.

ஐயயோ! என்று அலறினுன் சிங்காரம்.

தோப்புத் துறையில்தான் அந்தத் தோகைமயிலாள் இருக்கிருள் — என்ன கதியோ, என்ன கதியோ!

வெள்ளம் வருவதற்கான குறிகளேக் கண்டறிந்த ஒரு சிலர், சின்னப்பனிடம் வந்து சொன்ஞர்கள்.

இந்தப் பேய்க்காத்து சும்மா விடாது, சின்னப்பா! எனக்கென்னமோ மனசு திக்கு திக்குன்னுது, கிளம்பி எங்காச்சும் இப்பவே

போறது நல்லதுன்னு தோணுது. நீ என்ன சொல்றே? என்று கிராமத்துப் பெரியவர் கேட்டார். சின்னப்பன், முன்பு அடித்த புயலைக் கண்டவன் — அதனாலே, ''பெரியப்பா! பயந்து சாகாதிங்க...எல்லாம் பாக்குக் கடிக்கிற நேரம்தான் வீசும் இந்தப் புயலு—பார்த்துகிட்டே இருங்க, வெளுத்துப் போகப் போவுது. இன்னும் கொஞ்சநேரத்திலேயே என்று கூறினான்.

அவன் கிராமத்தைவிட்டுப் போகாததற்குக் காரணம், தைரியம் மட்டுமல்ல, ஏதோ ஓர் விசேஷத்துக்காக, கத்திரி அன்று அங்கு வந்திருந்தான். சின்னப்பனுக்குக் கத்திரியைக் கண்டதும் ஒரே ஆத்திரம். நமக்கு இவ்வளவு கெடுதியைச் செய்தவனுடைய கையையோ காலையோ ஒடித்துப் புத்தி புகட்ட வேண்டுமென்று ஆத்திரம் பிறந்தது. அதற்குச் சமயம் கிடைக்கட்டும் என்று காத்துக்கொண்டிருந்தான்.

ஊரை அழித்து உயிரைக் குடித்தாலன்றி என் பசி அடங்காது என்று கொக்கரித்தது பேய்க்காற்று. நேரிட இருக்கும் பெரிய விபத்தை முன்கூட்டியே அறிந்து இயற்கை கோவென அழுவதுபோலப் பெருமழை பெய்துகொண்டிருந்தது. விநாடிக்கு விநாடி, வேகம் அதிகமாகிக் கொண்டிருந்தது. கடலிலிருந்து கிளம்பிய கோரக் கூச்சல் காதைத் துளைத்தது. ஆபத்துகளையும் இடர்ப்பாடுகளையும் அனுபவித்து அனுபவித்து உரம் ஏறியிருந்த உள்ளம் கொண்டவர்கள் கிராமத்துக்காரர்கள் என்றாலும், திகில் அவர்களிடம் இம்முறை அதிகமாகப் புகுந்துவிட்டது.

கும்மிருட்டு எங்கும்! குடிசைகள் பிய்த்தெறியப்பட்டன! பெருமரங்கள் பேய்க்காற்றினை எதிர்த்து நின்று பார்க்க முடியாததால், கீழே முறிந்துவிழ, உன்னை இத்துடன் விடப்போவதில்லை என்று கூறுவது போல, பெருங்காற்று, மரங்களைத் தூக்கி எறிந்தன, இங்கும் அங்கும். கூக்குரல், கதறல், ஐயோ! அம்மா! வெள்ளம் புகுந்துவிட்டது, எங்கும் அழிவின் சீற்றம். மக்கள் வெள்ளத்தில் சிக்கிவிட்டனர் — அப்பா! அம்மா! தாத்தா! அக்கா! அலமேலு! ஆண்டியப்பா! ஐயோ, தெய்வமே என்று அலறல்கள் கிளம்பின. தோப்புத்துறை வெள்ளக்காடாகிவிட்டது.

சின்னப்பன் குடும்பம் வெள்ளத்தில் சிக்கிக்கொண்டது. கால்நடைகளை முதலிலே ஏதாவது மேட்டாங்காட்டுக்கு ஓட்டிச் செல்லலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான் சின்னப்பன் — வெள்ளம் அவன் குடிசை இருந்த தெருக்கோடியில் வருவதாகக் கூறிக்கொண்டே பலர் ஓடினார்கள் — ஓடியா! ஓடியா செங்கரும்பு! என்று கூவியபடி சின்னப்பன் வெளியே ஓடினான் — செங்கரும்பும் ஓடினாள். முழங்காலளவு, இடுப்பளவு என்று தண்ணீர் விநாடிக்கு விநாடி ஏறிக்கொண்டே இருந்தது; குழந்தைகள் மூழ்கிவிட்டன; வயோதிகர்கள் நீந்த முடியாமல், வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டனர்; செங்கரும்பு தன்னால் கூடுமானவரையில் சமாளித்துப் பார்த்தாகிவிட்டது; அப்பா என்று கூறிச் சாய்ந்தாள். சின்னப்பன், தன் மகளை வாரி எடுத்துக்கொண்டு, இழுத்துக்கொண்டே நீந்தினான் - திக்குத் தெரியாத நிலை - சின்னப்பனுக்கும் வலிவு தீர்ந்துவிட்டது; செங்கரும்புக்கு மூச்சுப் பேச்சில்லை.

வெள்ளத்திலே சிக்கிய கத்திரியும், வெகுபாடுபட்டான். துவண்டு கிடக்கும் செங்கரும்பும், கடைசி கட்டத்துக்கு வேகமாகச் சென்றுகொண்டிருக்கும் சின்னப்பனும் கத்திரியின் கண்களில் பட்டவுடன், யாரு? சின்னப்பனா? என்று கூவிக்கொண்டே, தன் பலம் கொண்ட மட்டும் நீந்திச் சென்றான், அவர்களிடம். இதோ...இந்தாப்பா செங்கரும்பு...இனி உன் மக...என்று கூறியபடி, சின்னப்பன், செங்கரும்பை, கத்திரி கையில் ஒப்படைத்துவிட்டு, பிணமானான்! பெருவெள்ளம் வேறு பலரைப் பிணமாக்க விரைந்துகொண்டிருந்தது.

எப்படி நீந்தினானோ, எங்கிருந்து அந்த வலிவும் துணிவும் பிறந்ததோ தெரியவில்லை. கத்திரி, கடைசியில் செங்கரும்பைக் காப்பாற்றிக் கரை சேர்த்தான்.

''அப்பா போயிட்டாரா? ஐயய்யோ, அப்பா!'' என்று கதறினாள் செங்கரும்பு. கத்திரி சமாதானம் கூறவில்லை. ''என் மகன் என்ன ஆனானோ! என்று கலக்கம் கொண்டான்.

''குழந்தையைப் பறிகொடுத்தேன்.''

''அம்மாவைத் தப்பவைக்க முடியாமலே போய்விட்டது''

''ஐயயோ, என் புருஷனை வெள்ளம் அடித்துக்கொண்டே போயிட்டுதே''

இப்படிப் பலருடைய கதறல்.

வெள்ளக்காடாகாமலிருந்த வேறிடம் தேடி, தள்ளாடி நடந்தனர், செங்கரும்பும் கத்திரியும். வழியில் வேறூர் பக்கமிருந்து, கத்தரியின் கிராமத்து மக்கள் 'குய்யோ முறையோ' என்று கூவிக்கொண்டு, வந்தனர். அந்தக் கிராமம் அடியோடு அழிந்துவிட்டது என்றனர்.

''மகளை மட்டும்தான் காப்பாற்ற முடிந்தது, பாவம்''- யாரோ ஒருவர் கூறினர், கத்திரியையும் செங்கரும்பையும் பார்த்துவிட்டு.

மூன்று நாட்கள், எங்கும் கிளம்பிவிட்ட பிண நாற்றத்தைச் சகித்துக்கொண்டு, ஒரு மேட்டாங்காட்டில், இருந்து வந்தனர் மக்கள்; விமான மூலம் தரப்பட்டதை வேகவைத்துக் குடித்துவிட்டு, உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டிருந்தனர்.

மூன்று நாட்களும், வேதனையுடன் திருத்துறைப் பூண்டியில் காலந்தள்ளினான் சிங்காரம்; வெள்ளம் வழிவிட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டதும் ஓடோடிச் சென்றான் தோப்புத்துறைப் பக்கம்; வழியிலே இருந்த மேட்டில் செங்கரும்பு இருக்கக் கண்டான், உருமாறிப் போன நிலையில்...

''செங்கரும்பு...என் வயித்திலே பால் வார்த்தயே...''

''அத்தான்...வந்துட்டிங்களா...''

''அப்பா...என்ன ஆனாரு...?''

''அவரு போயிட்டாரு...என்னை நெடுந்தொலைவு வெள்ளத்திலேயே சுமந்துகிட்டு நீந்தினாரு...கடைசியிலே...... அவர் போயிட்டாரு...... நானும் போயிருக்கவேண்டியவதான்... கடைசி நேரத்திலே, இவருதான் காப்பாத்தினாரு...''

திரும்பிப் பார்த்தான், அவர் காலில் விழுந்து கும்பிட—கத்திரி! என்ன செய்வதென்றே தெரியவில்லை, சிங்காரத்துக்கு.

''நான் தாண்டாப்பா சிங்காரம், நான்தான் இந்தச் செங்கரும்பு என் மருமக ஆகவேணும்னு கெடுதி செய்து, உன்னை மூணு வருஷம் ஜெயிலுக்கு அனுப்பின அதே பாவிதான்...ஆனா, சிங்காரம், முன்னே உனக்கு நான் செய்த கெடுதிக்கெல்லாம் பரிகாரம் தேடிட்டேண்டாப்பா, செங்கரும்பை வெள்ளம் கொண்டு போகாமப்படி செய்து உன்னண்டை ஒப்புவித்துவிட்டேன். அந்த வெள்ளம்தான், எனக்கு இருந்த கெட்ட நினைப்பு, கேடு கெட்ட புத்தி எல்லாவற்றையும் அடிச்சுக்கிட்டுப் போயிட்டது... மக்களெல்லாம்பட்ட அவதியை இந்தக் கண்ணாலே பார்த்தேன்... என் மனசு படாத பாடு பட்டுது... இந்தப் பொண்ணு, உயிருக்குத் துடிச்சிகிட்டு இருந்ததைப் பார்த்ததும், என் மனசு கேட்கலே...இன்னமும் கேடு செய்கிற புத்தி இருக்கக்கூடாது என்கிற நல்ல எண்ணம் உண்டாச்சி...நானும் நல்லவனாயிட்டேன்...சின்னப்பனைத்தான் காப்பாத்த முடியாமலே போயிட்டுது... இந்த வெள்ளம், எங்க கிராமத்தை அடியோடு அழிச்சுப்பூட்டுது. என் மகன், மாடு கண்ணு எல்லாம் போயிட்டுதாம்... ஊரார் சொன்னாங்க. செங்கரும்பை என் மருமகளாக்கிக் கொள்ளவேணும் என்கிற ஒரே ஆசையாலேதான் நான் உனக்குக் கெடுதி செய்தேன்...இப்ப, என் மகனே போயிட்டான்...''

''அழாதீங்க... அழாதீங்க... இவ்வளவு பெரிய அழிவு நேரிட்டபோது, இத்தனை பெரிய உபகாரம் செய்ய முடிஞ்சதேன்னு பெருமைப்படுங்க... செங்கரும்பு உங்க மருமகளாகத்தானே ஆகவேணும்...உங்க மகனைத்தான் வெள்ளம் விழுங்கிவிட்டதே... என்னை உங்க மகனாக ஏத்துக் கொள்ளுங்க...செங்கரும்பு, உங்க மருமக ஆயிடுறா..நீங்கதான் அவ மாமனாரு''

சிங்காரத்தைக் கட்டித் தழுவிக் கொண்டான் கத்திரி.

வானம் பொழியவேண்டிய அழிவைப் பொழிந்தாகிவிட்டது. இதோ சூரிய வெளிச்சம் என்று சுட்டிக் காட்டினான் சிங்காரம், புன்னகை புரிந்தபடி.



குடும்ப ரகசியம்

"கலைமாமணி" ப. கண்ணன்

உறுப்பினர்கள்

1. முத்தையன் — ஊராட்சித் தண்டலர்
2. பாலசுந்தரம் — தெளிவற்ற முரடன்
3. சித்தலிங்கம் — தன்னலம் மிகுந்த செல்வர்
4. பொன்னன் — சித்தலிங்கத்தின் பணியாள்
5. மணிமாலை — முத்தையனின் நல்ல மனைவி
6. கோமதி — பாலசுந்தரத்தின் பொல்லாத மனைவி
7. பொற்கொடி — சிறுமி

மற்றும் சிலர்

காட்சி 3

இடம்: தேநீர்க் கடை
காலம்: காலை

[பாலசுந்தரம் தேநீர் ஆற்றுகிறான். ஒருவன் குப்பியோடு நிற்கிறான். தேநீரை அதில் ஊற்றிக் கொடுக்க அவன் வாங்கிச் செல்லுகிறான். பிறகு அன்று வந்த பத்திரிகையை எடுத்துப் படிக்கிறான்.]

பாலு: "மனைவியை சதக்கென்று வெட்டினான் கணவன்", "சிறு சேமிப்புப் பணத்தால் ஏற்பட்ட தகராறு", "கொடுக்க மறுத்த மனைவியைக் கொல்ல முயன்றான்" அடே எங்கப்பா! சிறுசேமிப்பிலே இப்படியெலாம் தொல்லையா? நமக்கு வேண்டாம்ப்பா இந்தச் சிறு சேமிப்பு.

[பொன்னன் வருகிறான்]

பொன்: என்னங்க பாலு விசேசம், பத்திரிகையிலே?

பாலு: வா! பொன்னு! வா, விசேசத்துக்கா பஞ்சம்! நெறைய இருக்குது.

பொன்: ஒண்ணு சொல்லுங்களே கேப்போம்.

பாலு: "மனைவியை சதக்கென்று வெட்டினான் கணவன்."

பொன்: ஐயையோ! குபுக்கென்று ரத்தம் வந்திருக்குமே! அப்புறம்?

பாலு: "சிறு சேமிப்புப் பணத்தால் ஏற்பட்ட தகராறு"

பொன்: ஆமாமா! சேமிச்சு வைக்கற சமாச்சாரமே இப்படித் தகராறு, தண்டாவுலேதான் முடியும்!

பாலு: "கொடுக்க மறுத்த மனைவியைக் கொல்ல முயன்றான்"

பொன்: பலே! வீராதி வீரன்! அவன்தான் ஆம்பளை சிங்கம்!

[பத்திரிகையை வைத்துவிட்டுத் தேநீர் போடுகிறான் பாலு]

பாலு: எப்படிப் பொன்னு? பெண்டாட்டியை அடிக்கறதும், கொல்றதுமா வீரம்?

பொன்: ஆமா அதை எல்லாரும் செய்ய முடியுமா? பணங்காசு சேத்து வைக்கறதே தப்பு. அதிலும் பொம்பளைங்கயிலே காசு இருந்தா ஆம்பளையை மதிப்பாளா! மட்டந் தட்டித்தான் வைக்கணும்.

பாலு: ஏதேது; நீ நீதிபதியா இருந்தா அவனுக்குத் தண்டனையே கொடுக்கமாட்டே போலிருக்குதே?

பொன்: தண்டனையா? பாராட்டுப் பத்திரம் படிச்சுக் கொடுப்பேனேன்!

பாலு: அது நீதிபதியோட வேலையில்லையே?

[தேநீர் கொடுக்க வாங்கிக் குடிக்கிறான் பொன்னன்.]

பொன்: அதனாலேதான் நான் நீதிபதியாகலே!

[தொலைவில் யாரோ வருவதைப் பார்க்கிறான்.]

பொன்: பாலு! தோ பாருங்க, காலங்காத்தாலே ஒரு ஸ்டார் வருது. பளிச்சுப் பளிச்சுன்னு மின்னுதே! அதைக் கணக்குப் பண்ணுங்க!

பாலு: பட்டப்பகல் நட்சத்திரம் போலேருக்குது! வரட்டும் வரட்டும் பார்ப்போம். கண்ணுலே பட்

டதை கணக்குப் பண்ணாமே விடலாமா?

பொன்: (சந்தேகித்து) அது யாரு? ஒங்க?...

[முறுக்குப் பெட்டியோடு கவர்ச்சி உடையணிந்த கோமதி வருகிறாள். வெட்கமும் வேதனையுமாகத் தலை குனிகிறான், தடுமாடுகிறான், பொன்னன். சிரிக்கிறான்பாலசுந்தரம் கிண்டலாக.]

பொன்: பாலு கொஞ்சம் அவசர வேலை, நான் போயிட்டு வர்றேன்.

[தேநீர்க் குப்பியை வைக்கிறான்.]

பாலு: என்னப்பா அவசர வேலை? காலங்காத்தாலே? கொஞ்சம் பொறுப்பா. ஸ்டாரைக் கணக்குப் பண்ண வேணும்?

பொன்: (பல்லைக் கடித்து) அடராமா! என் நெலைமை இப்படியும் ஆமா?

கோமதி: (முறுக்குப் பெட்டியை வைத்துவிட்டு) ஆமா என்னா, ஸ்டாரு? என்னா கணக்கு? பொன்னன் ராமாங்கறான்; ஆமாங்கறான்! நீங்க என்னாங்கறீங்க? எனக் கொண்ணும் புரியலியே!

பாலு: எனக்கென்ன தெரியும்?

பொன்: ஐயோ! புரியவே வேணும். இது ஆம்பளைங்க விசயம். பொம்பளைக்குப் புரியாம இருக்கற வரைக்கும் நல்லது! ஓம்புருசனை வேணுமானாக் கேட்டுக்கம்மா. அவுரு பொய்யா சொல்லுவாரு?

பாலு: சொல்லப்பா! நீதாஞ் சொல்றியே.

கோமதி: ஏங்க மூடி மறைக்கறீங்க? எவளோ ஒருத்தியைப் பத்திப் பேசியிருப்பீங்க. எந்த நேரத்திலே எங்கேன்னு கணக்குப் பண்ணுவீங்க. எடைஞ்சலா நான் வந்திட்டேன்! எனக்குத் தெரியாதா ஒங்க சங்கதி?

பொன்: ஐயயோ! அபாண்டம்! அபாண்டம்! புலிக்குப் பசியெடுத்தாப் புல்லையா திங்கும்? நாங்க அன்னியப் பொம்பளையைப் பத்தி நெனைக்கவே இல்லே. சத்தியமாச் சொல்றேன். நம்புங்க.

கோமதி: சொந்தப் பொம்பளைன்னா நாந்தான். அப்ப என்னைத்தான் ஸ்டாருன்னு சொன்னீங்களா? ஒங் கண்ணுலே கொள்ளியை வைக்க; என்னைப் பார்த்தா நடிக நட்சத்திரமாவா தெரியுது? பரிகாசமா பண்றே?

பொன்: (குழம்பி) உம்...வந்து... பரிகாசமில்லே! நான்...வந்து... ஒங்களைச் சொல்லலே! உம்... வந்து, நான் சொன்னது...வந்து... வந்து...

பாலு: வந்து சொன்னது, வராமெ சொன்னது ரெண்டும் ஒன்றுதான்!

பொன்: (தெளிவு பெற்று) ஆமாமாம்! சொல்லிப் போடறேனே. பத்திரிகையிலே நட்சத்திரக் கணக்கைப் பார்த்துத் தினப்பலனைப் படிச்சோம்? அதைப் பத்தி ஆராய்ச்சி பண்ணினோம். நீங்க வந்தீங்க; வாயை மூடிக்கிட்டோம்!

கோமதி: இப்படிச் சொல்லி சமாளிக்கிறீங்களா?

பாலு: இல்லே கோமதி வித்தியாசமா ஒண்ணுமில்லே!

கோமதி: என்ன எழவு நட்சத்திரமோ, தினப்பலனோ; எதையாவது பாத்து, எப்படியாவது போங்கோ! (கணவனிடம்) ஆனா, ஒங்களுக்குச் சொல்றேன்; தம்பி பெண்டாட்டியோட அட்டகாசம் தலைக்கு மேலே போயிடிச்சு. கண்டிச்சு வைக்கலேன்னா என்னாலே அந்தவூட்லே குப்பை போடமுடியாது!

பொன்: வீட்டுக்குள்ளே வேணும். வெளியே போடுங்க குப்பையை!

பாலு: அப்படி என்னடி நடந்தது?

கோமதி: அவுங்க கையிலே கொஞ்சம் காசு பணம், நகை நட்டு, வச்சிருக்காங்க. நாம்ப அன்னாடு சம்பாதிச்சு, அன்னாடு காச்சறோம்? இல்லியா?

பாலு: அதனாலே அன்னாடு காச்சினாளா?

பொன்: எல்லாரும் அன்னாடுதானே காச்சுவாங்க?

கோமதி: அப்படிச் சொன்னா விட்டிருப்பேனே. அவளும் அந்த வெடிக்குட்டியும் சேந்துக்கிட்டு என்னைக் கிண்டல் பண்ணி, பாட்டும் ஆட்டமுமாக் கும்மாளம் போடறாங்களே! நான் எப்படிப் பொறுப்பேன்?

பாலு: எதைப் பத்திக் கிண்டல் பண்ணினாங்க?

கோமதி: நான் அழகுக்காக ஆடம்பரமா செலவு பண்றேனாம். கடன் பட்டுக் கையெளச்சு நிக்கறேனாம். நம்ப வரவுக்கு மேலே செலவு பண்றோமாம். சிக்கனமா சேமிக்கத் தெரியாமே, இல்லே இல்லேன்னு, பஞ்சப்பாட்டுப் பாடறோமாம்!

பாலு: சரி சரி! அவ சிறுசேமிப்புக் காரியல்ல; அதனாலே அப்படிப் பாடியிருக்கறா?

பொன்: ஐயையோ! சிறுசேமிப்புப் பண்றதே ஆபத்தாச்சே! அடிதடியும் கொலையுமல்ல அதனாலே நடக்குது?

பாலு: அப்படின்னா, நான் சேமிக்க மாட்டேன் போடின்னா தீந்தது. இதென்ன பிரமாதம்? போடீ; போ: போய் வேலையைப் பாரு.

கோமதி: நடந்ததைப் பாத்துக்கிட்டிருந்த ஒங்க தம்பியும் பொண்டாட்டியைக் கண்டிக்கலே. கேட்ட நீங்களும் போடீ போன்னுட்டீங்க. இனிமே அவபோட்டது தாஞ் சட்டம்! வச்சதுதாந் திட்டம்! மச்சாண்டார் பெண்டாட்டி, கொழுந்தனார் பெண்டாட்டிகிட்டே பெட்டிப் பாம்பா அடங்கிட வேண்டியதுதான்! (அழுது) இன்னும் என்ன அநியாயமெல்லாம் நடக்குமோ! யாரைச் சொல்லி என்ன பண்றது? என்னைச் சொல்லணும், என் விதியைச் சொல்லணும். என் புத்தியைச் செருப்பாலே அடிக்கணும்! அடிக்கணும்! அடிக்கணும்!

[தலையில் ஆத்திரத்தோடு அடித்துக் கொள்கிறாள்]

பாலு: அடடே! நிறுத்தடி, மண்டை ஒடஞ்சிடப் போவுது! அதுக்கு வேறே மருந்துச் செலவு பண்ணணும். எல்லாம் வீட்டுக்கு வந்து பேசிக்கிறேன், போ!

[கண்களைத் துடைத்துக் கொண்டு பெட்டியை எடுத்துக் கொண்டு போகிறாள் கோமதி.]

பொன்: பாலு! கல்லு ஒரலுக் குள்ளே ஏந்தலையைக் கச்சிதமா மாட்டி வச்சிட்டீங்க!

பாலு: ஸ்டாரு கீருன்னு சொல்லி நீதான் புரியாமெ மாட்டிகிட்டே! இருந்தாலும் நீ சர்வகலா வல்லவனாச்சே! எந்த ஒலக்கையப்பா ஒந் தலையைத் தீண்டிப் போடும்?

பொன்: அதுசரி. ஒங்க தம்பி பெண்டாட்டியோட சங்கதி இப்படி. ஒங்க தம்பியோட சங்கதி எப்படித் தெரியுமா?

பாலு: எப்படியப்பா? என்ன சங்கதி?

பொன்: எசமான் வீட்டுக்கு வரி வசூலுக்கு வந்தவரு, அவருகிட்டே விதண்டாவாதம் பேசி, சண்டை போட்டுகிட்டு வந்திட்டாரு.

பாலு: (வியந்து) அப்படியா? எதைப்பத்தி வாதம் பேசினான்?

பொன்: வீட்டு வரி அதிகம்னாரு எசமான். அவ்வளவு தான் சட்ட திட்டம், நியாய பாயம் எல்லாத்தையும் அள்ளி வீசி, ஆங்காரக் கூச்சல் போட்டுட்டாரு!

பாலு: அவன் ஒரு சமதருமி, பணக்காரங்கன்னா அவனுக்கு எட்டிக்காயி! தன்னோட கொள்கையை வச்சுப் பேசியிருப்பான் அவுருகிட்டே. ஆமா!...என்னைப்பத்தி எசமான் ஏதாச்சம் கேட்டாரா?

பொன்: ரொம்பக் கேட்டாருங்க. நீங்க வர்றதில்லேன்னு வருத்தப் பட்டாரு. தேநீர்க்கடை வச்சதைப் பத்திச் சொன்னேன். ''அடப் பாவமே! பணம் வேணுமானா என்னைக் கேக்கலாமே. தகுதியா ஒரு ஓட்டல் கடையே வைக்கலாமே'' அப்படீன்னு சொன்னாருங்க.

பாலு: அடடே! ஏமேலே அவ்வளவு அனுதாபம் வச்சிருக்காரா?

பொன்: அதென்னங்க; அப்படிக் கேட்டுப் போட்டீங்க? எசமானோட அந்தரங்கத்திலே ஒங்களுக்குத் தனி எடம் உண்டுங்க.

பாலு: அந்தரங்கத்திலே நானும் அவருமா சேர்ந்துக்கிட்டு, எத்தனையோ எடத்திலே, எவ்வளவோ பண்ணியிருக்கிறோம்.

பொன்: தெரியுமே. சுவர் ஏறியும் குதிச்சிருக்கீங்க.

பாலு: ஆமாம், அதிலேயெல்லாம் என்னை நம்புவாரு, பண விசயத்திலே?...எப்படியோ?...

பொன்: நிச்சயமா நம்புவாரு, கேட்டதைக் கொடுப்பாரு. நீங்க

களும் பணத்தைப் போட்டுக் கடையைப் பெரிசா வச்சாத்தான் கௌரவமா இருக்கும். தம்பியும் தம்பி பெண்டாட்டியும் மதிப்பாங்க; மரியாதை காட்டுவாங்க. நாஞ்சொல்றேன் வாங்க.

பாலு: ஆமாமா. "ஈட்டி எட்டின வரை பாயும், பணம் பாதாளம் வரை பாயும்"னு சொல்லியிருக்காங்க! ஆனா, சித்தலிங்கம் பண விசயத்திலே பெண்டாட்டியையே நம்பமாட்டாரே!

பொன்: ஆனாலும் ஒங்களை நம்புவாரு. நீங்க வந்து விசயத்தை மட்டும் சொல்லிடுங்க. மத்ததையெல்லாம் நான் பாத்துக்கிறேன். வரட்டுமா?

பாலு: ஆமா. தியாகி திருவரங்கம் தலை நிமிர்ந்து நடக்கறானே! என்ன சங்கதி? கடனைக் கட்டிப் போட்டானா?

பொன்: அந்த அநியாயத்தை ஏன் கேக்கறீங்க? நாங்க கொஞ்சங்கூட எதிர் பார்க்கலே. எப்படியோ பொரட்டிப் பணத்தைக் கொண்டாந்திட்டாரு; கணக்கைத் தீத்துப் போட்டாரே!

பாலு: போகட்டும், இன்னொரு டீ சாப்பிடறியா? காபி சாப்பிடறியா?

பொன்: எதுவுமே வேணாம். ஓசுலே குடிச்சா ஒடம்பு ஒத்துக்கலே! நாளைக்கு வர்றேன்.

பாலு: நாளைக்கு நான் வர்றேம்பா!

பொன்: வாங்க, வாங்கக் கடன் தான்!

[பொன்னன் போகிறான்.]

அபரிமிதமான விளைச்சலைப் பெருக்க:

பயிர்நாசக் கிருமிகளினின்றும் பயிர்களைக் காப்பாற்ற;

பூச்சி மருந்து தெளிக்கவும் தூவவும்,

ஆஸ்பி தெளிப்பான்களும் (Sprayers)

தூவு கருவிகளும் (Dusters)

மிகச் சிறந்த சாதனங்கள்.



CODE MB-1/VL

தயாரிப்பவர்கள்:

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரஸ்ஸிங் ஒர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,

மலாட், பம்பாய் 64 N.B.

மைசூர், சென்னை மாநில விநியோகஸ்தர்கள்:

S. V. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்:	கிளை அலுவலகம்:
தொலைபேசி எண் 75071	தொலைபேசி எண் 81227
75, கலாசி பாளையம்	38, பீட்டர்ஸ் ரோட்
தபால் பெட்டி எண் 539	தபால் பெட்டி எண் 677
நியூ எக்ஸ்டென்ஷன்ஸ் பெங்களூர்-2	இராயப்பேட்டை, சென்னை-14

ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழுக்களின் ஆறாவது கூட்டம்

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" — குறள்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! ஊராட்சி வளர்ச்சிக் கருத்துரைக் குழு உறுப்பினர்களே! அரசுத்துறை அலுவலர்களே! வணக்கம்.

ஊராட்சிகள் வேரும் விழுதுமாக நிலைபெற்று, ஒற்றுமையின் சின்னமாக அமைந்து செயலாற்ற முற்பட்டாலன்றி, நமக்குக் கிடைத்துள்ள 'உரிமை' 'மக்களாட்சி' என்பதெல்லாம், பேச்சளவிலும் ஏட்டளவிலும் நின்றுவிடும். ஏற்றத் தாழ்வற்ற, எல்லோருக்கும் ஒரே நிறையான வாழ்வு அமையவேண்டும் என்று எண்ணுகிறவர்கள், ஊராட்சிகள் பழுதின்றி நல்ல முறையில் இயங்கப் பாடுபடவேண்டும்.

ஊராட்சிகளின் வளர்ச்சி, ஊராட்சித் தலைவர்களின் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் பொறுத்ததேயன்றி, அரசு கொடுக்கும் உதவிகளை மட்டும் பொறுத்ததல்ல. அரசாங்கத்தின் உதவியை, பாலில் விடும் உறை மோருக்குச் சமமாகவே கொள்ளவேண்டும்.

தமிழ்நாடு உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்களின் உரை

தமிழ் நாட்டில் தழைத்தோங்கிவரும் 'பசுமைப் புரட்சிக்கு' உரமூட்டும் வகையில், ஊராட்சி நிறுவனங்கள் அனைத்தும் பணியாற்றி வருகின்றன. குறிப்பாக, எல்லா ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் வேளாண்மைத் துறையில் சிறந்த முன்னேற்றம் காணவும், ஆரம்பக் கல்வித் துறையில் நிறைவு காணவும், குடும்ப நலத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றவும், மற்றத் திட்டங்களில் முழு வெற்றி காணவும், சீருடனும் சிறப்புடனும் செயல்பட்டு வருகின்றன. இந்தத் துறைகளில், ஊராட்சிகளின் சிறந்த சேவையின்மூலம் தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே ஒரு புதிய படலம் துவங்கியுள்ளது.

பசுமைப் புரட்சியில் ஒவ்வோர் ஊராட்சியும், பங்கு கொள்ளும் நோக்கத்தோடு 'உற்பத்திப் பெருக்கத் திட்டம்' (Production Plans) என்ற பெயரால், வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன் வளர்ப்பு ஆகியவற்றுக்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இவற்றை உருவாக்கும்பொழுது, ஒவ்வோர் ஊராட்சியின் தேவைகளும் ஆராயப்பட்டு அவற்றைத் தீர்க்கும் திட்டங்கள் தக்கமுறையில் சேர்க்கப்பட்டன. இந்த முயற்சியின் காரணமாக, ஊராட்சிகளின் தேவைகளை நிறைவேற்றும் வகையில், தமிழ்நாட்டின் புதிய திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்காக, ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்துக்கும் ரூபாய் இரண்டு இலட்சம் ஒதுக்கியிருக்கிறோம்.

மேலும், எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒரே மாதிரியான திட்டங்களை அமைத்து, அவை சரிவர நடைபெறவில்லை என்று குறைகூறுவதற்குப் பதிலாக, அந்தந்த இடத்திற்கேற்ற வகையில் சிறப்புத் திட்டங்களை அமைத்துக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டது. அதே சமயத்தில், எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் சில அடிப்படையான உற்பத்தித் திட்டங்களை அவசியமாக நிறைவேற்ற அவை, 'இன்றியமையாத இனங்கள்' என வலியுறுத்தப்பட்டுள்ளன. அவை தவிர, விரும்பினால் நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் சிலவும், கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இவ்வாறாகத் திட்டமுறையிலேயே மிக முக்கியமான மாறுதல் செய்யப்பட்டு, மக்களின் தேவைக்கேற்பத் திட்டங்களை உருவாக்கும் மாபெரும் உரிமை வழங்கப்பட்டது. அதன் விளைவாக, இன்றைய ஊராட்சி நிறுவனங்களின் பணிகளில், ஒரு மறுமலர்ச்சியைக் காண்கிறோம்.

வேளாண்மைத் துறையில், ஊராட்சிகளின் சாதனைகளுள் குறிப்பிடத்தக்கன, பொறுக்கு விதைத் தயாரிப்பும், உர விநியோகமும் ஆகும். 37,500 டன்கள் உயர் ரக நெல் வித்துக்களும், 3000 டன்கள் இதர தானிய வித்துக்களும் விநியோகிக்கப்பட்டுள்ளன. கழிவுப் பொருள்களிலிருந்து கலப்பு உரக் கலவை (Compost Manure) தயாரிப்பதில் 3,706 ஊராட்சிகள் ஈடுபட்டன. ஊராட்சிகளுக்குச் சொந்தமான சுமார் 12,500 ஏக்கர் புறம்போக்கு நிலங்களில், தழை உரப்பயிர்கள் விளைவிக்கப்பட்டு, வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டன.

தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில், 312 கால் நடைப் பராமரிப்பு மருந்தகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு மருந்தகக் கட்டடத்துச் செலவு சுமார் ரூ.35,000 ஆகும். இவற்றுடன் கோழிப்பண்ணைகளுக்கான திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், ஊராட்சி ஒன்றியங்களில் மீன்வளர்ப்புப் பண்ணைகள் 180 செயற்பட்டு வருகின்றன. இவற்றின் வாயிலாக, 5 இலட்சத்திற்கு மேற்பட்ட மீன்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அமோக விளைச்சல் தரும் நெல் ரகங்களான ஆடுதுறை 27, ஐ.ஆர். 8, முதலியவற்றை, உழவர் பெருமக்களிடையே பெரிதும் பரப்ப, வானொலி நிலையம் சிறந்த பணியாற்றியது. இதற்காக, தமிழ் நாட்டில் உள்ள கிராம வானொலி மன்றங்களும், ஊராட்சி வானொலிப் பெட்டிகளும் மிகவும் பயன்பட்டுள்ளன. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் குடந்தையிலே நடைபெற்ற கவியரங்கம், இந்த முயற்சிக்குப் பேருக்கம் அளித்தது.

வேளாண்மைப் பணிக்குத் துணையாக ஊர்ப்பணியாளர்களுக்கு 1000 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில், மாயூரத்தில் நடைபெற்ற விழாவில், தஞ்சை, திருச்சி மாவட்டங்களைச் சார்ந்த ஊர்ப்பணியாளர்களுக்கு 1000 வானொலிப் பெட்டிகள் வழங்கப்பட்டபொழுது, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ''ஊர்ப்பணியாளர்கள், புதிய விஞ்ஞானச் செய்திகளை அறிந்துகொண்டு, உழவர் பெருமக்களுக்கு எடுத்துரைக்க ஆர்வமுடன் பணிபுரிய வேண்டும்'' என்பதை வற்புறுத்தியதை நினைவூட்ட விரும்புகிறேன். எனவே தமிழ்நாட்டில்

நடைபெற்றுவரும் பசுமைப் புரட்சியில், கிராம வளர்ச்சி அலுவலர்கள், சிறந்த பணிபுரிய வேண்டுமானால், வேளாண்மையில், ஊர்ப்பணியாளர்கள் அதிக கவனம் செலுத்துவது போன்றே வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய ஆணையாளர்கள் முதலிய அனைவரும், புதிய விஞ்ஞான முறைகளை உடனுக்குடன் அறிந்து, அவற்றைத் தக்கவாறு பயன்படுத்துமாறு கிராம மக்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும். இதற்கு ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும், சிறந்த செயல்முறைப் பண்ணைகள், ஒரு சில அமைய வேண்டும். அவை காண்போர் மனத்தைக் கவர்ந்து, செயலாற்றத் தூண்டும் வகையில், நல்ல முறையிலே நடைபெற ஏற்பாடுகள் ஆகிவருகின்றன.

கல்விக்காகும் செலவில் 40 சதவீதம் ஆரம்பக் கல்விக்குச் செலவிடுகிறோம்.

இன்று உலகின் கண்ணுள்ள கல்வியாளர்கள் ஒரு பேருண்மையை உணர்ந்துள்ளார்கள். ஆரம்பக் கல்வி, தரமான கல்வியாக, திடமான கல்வியாக அமைந்தாலன்றி மற்றைய உயர் மட்டக் கல்வி சிறக்காது என்பதே அந்த உண்மை. இதை உணர்ந்த நம் அரசு, தமிழகத்தில் கல்விக்காகச் செலவிடும் மொத்தத் தொகையில் சுமார் 40 சதவீதம் ஆரம்பக் கல்விக்காக மட்டுமே செலவிடுகிறது. இது நம் மாநில அரசு ஆரம்பக் கல்வியின்பால் காட்டும் ஊக்கத்துக்கு எடுத்துக்காட்டு. 1969-70ஆம் ஆண்டில் ஆரம்பக் கல்விக்காக ரூ. 25·20 கோடி செலவாகும். 300 மக்கள் குடியிருக்கும் இடமெல்லாம் இப்போது ஆரம்பப் பள்ளி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் புதிய பள்ளிக் கட்டடங்கள் அமைத்தல், விஞ்ஞானக் கருவிகள் வழங்கல், நூல் நிலையம் அமைத்தல், ஆசிரியை குடியிருப்புக் கட்டுதல், செய்தி நிலையம் உருவாக்கல் முதலியன, திட்டமிட்ட வகையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

ஊராட்சி ஒன்றிய ஆரம்பக் கல்விக்கான நிதி வசதிகளை ஆராய உயர் அதிகாரக் குழு ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் கிராம வளர்ச்சி & உள்ளாட்சித்துறையின் செயலாளர் இதன் தலைவராவார். கிராம வளர்ச்சித்துறை இணைக்கல்வி இயக்குநர் இக்குழுவின் செயலர். கல்வி, நிதித் துறையைச் சார்ந்த உயர் அலுவலர்களும், ஊராட்சி நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட அலுவல் சார்பற்றவர்களும் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். இதன் அறிக்கை மிக விரைவில் (காலவரையறை குறிப்பிட்டு) வெளி வரவேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆய்வின் பயனாக ஊராட்சி ஒன்றியங்களின் வாயிலாக நிறைவேற்றப்படும் கல்விப் பணி மேலும் சிறக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

கடந்த மூன்று ஆண்டுகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, பாசன வசதி பெருகியுள்ளது.

கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் 7,500 மைல் நீளமுள்ள இணைப்புச் சாலைகள் கிராமங்களுக்கு அமைக்கப்பட்டுள்ளன. குடி தண்ணீர் வழங்கும் பொருட்டு 10,000க்கு அதிகமான கிணறுகளும், சுமார் 1,500 மேல் நிலை நீர்த்தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. 3,600 பள்ளிகளுக்குச் சொந்தத்தில் புதுக்கட்டடங்கள் கட்டப்பட்டதுடன் பெண் ஆசிரியைகளுக்காக 350 குடியிருப்புகளும் கட்டப்பட்டன. சுமார் 9500க்கு மேற்பட்ட நீர்ப்பாசன ஏரிகள் பழுது பார்க்கப்பட்டன.

இதேபோன்று, மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டம் சுமார் கடந்த ஏழாண்டுகளாக நடைமுறையில் இருந்து வருகின்றது. இதுவரை 72 வட்டாரங்களில் இது செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், சென்ற மூன்று ஆண்டுகளில் மாத்திரம் 3400 ஏக்கர் நிலம் வெட்டித் திருத்திப் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் 2915 ஏக்கர் நிலங்கள் மண் அரிப்புத் தடுப்புத் திட்டத்திஞல் பயனடைந்துள்ளன. இது போன்று சுமார் 6000 ஏக்கர் நிலம், நீர்ப்பாசன வசதிகள் பெற்று உணவு உற்பத்தி அபிவிருத்திநிலை அடைந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 1000 மைல் நீளமுள்ள புதிய சாலைகள் அமைக்கப்பட்டதோடு, 940 மைல் நீளமுள்ள பாதைகள் பழுதும் பார்க்கப்பட்டுள்ளன. இத்துடன் சுமார் 1096 சிறு பாலங்களும் கட்டப்பட்டுள்ளன.

ஊராட்சிகள் நிதி நிலையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களின் நிதியை எந்த எந்த வகையில் வளர்க்க முடியும் என்பதற்கு அவ்வப்பொழுது அரசு ஆணையிட்டு வந்துள்ளது. அரசு தரும் சட்ட ரீதியான மானியங்களாய சாலைப் பராமரிப்பு மானியம், ஆரம்பக் கல்வி மானியம் முதலியன போதிய அளவு இல்லை என்று அரசுக்கு ஒன்றியங்கள் எடுத்துக்கூறிய வண்ணம் உள்ளன. அதன் ஆதாரங்களைப் பெருக்க, வருவாய் தரத்தக்க இனங்களில் முதலீடு செய்ய, அரசு கடனுகக் கொடுக்க முன்வந்தும், ஊராட்சிகள் நன்முறையில் பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்யவில்லை. வருங்காலத்தில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களும், ஊராட்சித் தலைவர்களும் இந்த வாய்ப்பினை நன்முறையில் பயன்படுத்தி ஊராட்சி நிறுவனங்களின் நிதி நிலையை வலுப்படுத்திக்கொள்ள ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

வறட்சித் துயர் துடைக்க அரசு அயராது உழைத்து வருகிறது.

பருவ மழையின்மையினுல், தமிழ்நாடெங்கும் வறட்சி நிலை தோன்றி, மக்கள் குடிநீரும், பாசன வசதிகளும்இன்றி அல்லலுறும் நிலை ஏற்பட்டது. அதைப் போக்கத் தமிழ்நாடு அரசாங்கம் பல்வேறு திட்டங்களை விரைவுடன் உருவாக்கி, உடனடியாக நிறைவேற்றி வருகிறது. இதுவரை 16·50 கோடி ரூபாய், மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடிப் பொறுப்பில், தமிழ்நாடெங்கிலுமுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் வாயிலாக, மக்களின் துயர்துடைக்கும் வேலைகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது. இப்பணிகள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள், சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் முதலியோரின் சீரிய ஒத்துழைப்புடனும், ஊராட்சித்துறை அலுவலர்களின் முழு ஒத்துழைப்புடனும் நிறைவேறி வருகின்றன. குடிநீர்க் கிணறுகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தொட்டிகள் கட்டுதல், ஏரிகளை ஆழப்படுத்துதல், வாய்க்கால் தூர் எடுத்தல், சாலைகளை உருவாக்கல், முதலிய பொதுநலப் பணிகள் யாவும் இவற்றில் அடங்கும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மேலும் அதிக நிதி வசதிகளோடு கிராம வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் மேலும் சிறப்புடன் நிறைவேறும் என நம்புவோமாக.

ஏழைகளின் தோழர் என்.வி.என்

தோழன்

பின் தங்கிய சமூகத்தின் முன்னேற்றத்தைக் கருதி அதற்கெனத் தனியாகவே ஓர் இலாகாவை உருவாக்கிய முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களின் துணிச்சலான அருஞ்செயல் போற்றத் தக்கது என்ருல், அதற்குத் திரு. என். வி. நடராசன் அவர்களை முதன் முதலாகத் தனி அமைச்சராக நியமித்திருப்பது பாராட்டி மகிழத் தக்கதாகும். "ஒரு சரியான நெம்புகோலை என்னிடம் தாருங்கள். இந்த அகிலத்தையே அசைத்துக் காட்டுகிறேன்" என்று சூளுரைத்த கணிதமேதை ஆர்க்கிமிடீஸ் பாணியில், பிற்பட்டோர் நலனுக்காகச் செயல்படுவதற்குத் திரு. என். வி. என். அவர்களைக் கலைஞர் கருணாநிதி சரியான 'நெம்புகோலாக'த் தேர்ந்தெடுத்திருக்கிருர்.

திரு. நடராசன் அவர்களை நெடுகிலும் ஒரு நெம்புகோலாக, தார்க்குச்சியாக, கொக்கியாக, தமிழகத்தின் பெரும் அரசியல் தலைவர்கள் பயன்படுத்தியிருக்கிருர்கள். பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணு, கலைஞர் கருணாநிதி ஆகிய அனைவரும் திரு. என். வி. என். அவர்கள் மூலம் இயக்கத்திற்கும் இயக்க நிர்வாக நடைமுறைகளுக்கும் சாதித்த சாதனைகள் ஏராளம்.

அவருடைய வாழ்க்கையில் ஆணையிட்டதைக் காட்டிலும், ஆணைக்கு அடங்கி அமைதியாகப் பணியாற்றிய சந்தர்ப்பங்களே அதிகம். கீழ்ப்படிவதிலும், கடமையை ஒழுங்குறச் செய்வதிலும் அவர் பெற்றுள்ள பயிற்சி, இன்றுள்ள அமைச்சர் பொறுப்பை நேர்த்தியாக நிறைவேற்றி 'நல்ல பெயர்' எடுக்கப் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை. அடக்கம், எளிமை, சுறுசுறுப்பு, மனச்சாட்சிக்கு மதிப்பளித்தல் அத்தனையும் திரு. என். வி. என். அவர்களுடைய பிறவியோடு பிறந்த குணங்களாகும்.

'எனக்குத் தலைவன் என் மனச்சாட்சிதான்' என்று சொல்லிக் கொள்பவர் வரிசையிலே சேர்ந்தவர் அவர்.

"என் மனச் சாட்சி மிகவும் நல்ல பெண்மணி. எந்தச் சந்தர்ப்பத்திலும் அவளுடன் சமரசமாகப் போவதில் எனக்கு நல்ல பயிற்சி உண்டு" என்று அடிக்கடி சொல்லிக் கொண்ட சர்ச்சில் குறித்து திரு. என். வி. என். அவ்வளவாகக் கவலை கொள்பவர் இல்லையாஞலும், 'மனச்சாட்சி' பற்றிப் பேசுவதில் சர்ச்சிலுக்குச் சளைத்தவரல்ல. சிறு வயதிலேயே ஆத்திக நாத்திக வாதத்தில் ஈடுபட்டு "எது எப்படி இருந்தாலும் மனச்சாட்சிக்கு பயந்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொல்லக்கூடிய மனவளம்

பெற்றவர் அவர். 'திருவாளர் மனச்சாட்சி' என்றே அவரைப் பழங்கால இயக்க நண்பர்கள் அடைமொழி கொடுத்து அழைப்பதும் உண்டு. பயபக்தியோடும், பழங்காலக் 'குரு, சிஷ்யர்' உறவோடும் திரு. என். வி. என். பின்பற்றிய தமிழகத் தலைவர்கள் உண்டு. ஆனால், அவரை அச்சுறுத்தியோ, ஆசை காட்டியோ பணிய வைத்தவர் யாருமில்லை.

எடுத்த காரியத்தைத் தொடர்ந்து முயன்று முடிக்காமல் அவர் உறங்குவதில்லை. 'பசிநோக்கார் கண்துஞ்சார்' என்று தொடங்கும் தமிழ்ப்பாடல் முழுக்கச் சரியானதே என்பதைக் கண்ணை மூடிக்கொண்டு நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமானால், திரு. என். வி. என். அவர்களிடம் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒரு வேலையைச் சொல்லிவிட்ட பின்பு அவருடைய வேகத்தையும் துடிப்பையும் பார்த்தால் போதும்.

ஆர்வமும் உழைப்பும் ஒரு குறிப்பிட்ட பொது நோக்கத்தைக் குறியாகக் கொண்டிருந்தால், மனிதர் எத்தகு மேம்பாடு எய்துவர் என்பதற்குத் திரு. என். வி. என். சரியான எடுத்துக்காட்டாவார்.

தமிழ்நாட்டின் நிலவரி வருவாய்த் துறையில் நீண்டநாள் பணியாற்றும் 'ஜாம்பவான்'கள்கூடக் கேள்விப்படாத சிற்றூர்களும் திரு. என். வி. என். அவர்களுக்குத் தலைகீழ்ப் பாடம். ஆப்ரிக்காவில் லிவிங்ஸ்டோன் சுற்றித் திரிந்ததைப்போல, தமிழகத்தில் திரு. என். வி. என். காலடி படாத பட்டி தொட்டிகளே இல்லை எனக் கொள்ளலாம்.

எந்நிலையிலும் சூழ்நிலையை மறந்து தன் பணியில் ஆழ்ந்துவிடும் தனித்தன்மை பெற்றவர் திரு. என். வி. என். முதன் முதலாக ருஷ்யர்கள் ஸ்புட்னிக்கை வெற்றிகரமாகச் செலுத்திய செய்தியை வியப்போடு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தபோது, அடைத்துக்கொண்ட தன் பேனாவைச் சரிசெய்வதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்திக் கொண்டிருந்தவர் அவர். ''பார்த்தீர்களா, என். வி. என். செய்து கொண்டிருப்பதை? ஸ்புட்னிக் விஷயம் அவருக்குப் புரியாது!'' என்று அண்ணா அவர்கள் நகைச் சுவையாகக் குறிப்பிட்டபோது, ''அப்படி ஒன்றுமில்லை. ஸ்புட்னிக்பற்றி நீங்கள் சொல்லும் கருத்தின் முக்கியப் பகுதியைக் குறித்துக் கொள்ளலாம் என்று பார்த்தால், இந்த நேரம் பார்த்து என் பேனா மக்கர் செய்கிறது. இப்போது ஸ்புட்னிக் விஷயத்தைக் காட்டிலும் என் பேனா விஷயம் என்னை உலுக்குகிறது'' என்று பதில் சொன்னார், என். வி. என்.

அடுத்து, இரண்டொரு நாட்கள் கழித்துச் சென்னையில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் ஸ்புட்னிக் விவகாரம் குறித்துத் திரு. என். வி. என். பொழிந்து தள்ளியதையும் அறிஞர் அண்ணா அவர்கள் முன்னிலையில் பேனாவோடு போராடிக் கொண்டிருந்ததையும் பார்த்தவர்கள், அவருடைய அறிவின் அகல ஆழத்தை உணரவே செய்தனர். பயிர் விளைவது பற்றிய விஞ்ஞான விவகாரங்கள் கிராமவாசிகளுக்கு விளங்கா. ஆனால் பயிரை எப்படிப் பாதுகாக்கவேண்டும் என்பதில் அவர்களிடம் விஞ்ஞான மேதைகள்கூடப் பிச்சைவாங்க வேண்டும். கண்ணுக்கும் இமைக்கும் உள்ள உறவு கவிஞர்களின் கற்பனையில் அழகாகச் சித்தரிக்கப்படலாம். பயிருக்கும் கிராமவாசிக்கும் உள்ள உறவு இதுவரை ஒழுங்காக யாராலும் விளக்கிச் சொல்லப்படாத ஒன்று. பயிருக்கு வாயில்லை. கிராமவாசிக்கு வார்த்தைகளைப் பிரயோகிக்கும் பயிற்சி இல்லை. அதேபோல். ஆளுங்கட்சியான தி.மு. கழகத்தின் நிர்வாக நடைமுறைகளுக்கும் திரு. என். வி. என். அவர்களுக்கும் ஏற்பட்டுவிட்ட - ஊறிப்போய்விட்ட - 'இரத்தபாசத்தை'த் தராசுகளாலோ, வெப்பமானிகளாலோ சரியாக அளந்து பார்த்துச் சொல்லமுடியாது; உணர்வுகொண்டுதான் உணரமுடியும்.

தி மு. கழகத்தின் குறுகிய கால வளர்ச்சியில், ஆட்சியைப் பிடிக்கும் அளவு சிறப்புப் பெற்றமைக்கு அதற்கிருந்த அமைப்பு ரீதியான பலமே முக்கியமான காரணமாகும் என்று, 1967 பொதுத்தேர்தலை யொட்டிச் செய்யப்பட்ட விமரிசனங்களில் தவறாது குறிப்பிடப்பட்டது. அத்தகு 'முக்கியக் காரணத்தின்' 'முதுகெலும்பு', என்.வி.என். அவர்கள் என்பது மிகைபடச் சொல்வது ஆகாது. கட்சி ரீதியில் அமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கும் திரு என்.வி.என். அவர்களை இன்னும் தி.மு. கழகத் தோழர்கள் ''அமைப்புச் செயலாளர் என்.வி.என்'' என்றே குறிப்பிட விரும்புகிறார்கள் என்றால் அமைப்புக்கும் அவருக்கும் ஒன்றிப் போய்விட்ட உறவின் தன்மையை ஒருவாறு யூகிக்கலாம்.

'நாயிறு' என்ற கிராமத்தில் அவர் பிறந்தவர். அவர் பிறந்தபோது, அந்தக் கிராமத்திற்கு கால்நடையாகவன்றி வேறு முறைகளில் போகமுடியாது. எண்ணி 30 வீடுகள் அங்கு இருந்தன. தெலுங்கின் சூழலில் தமிழ் வாழும், வழங்கும் பகுதி அது. வானம் பார்த்துக் கண் திறந்தால் மட்டுமே காணிக்குக் கலம் விளையும் கரடுகள் அங்கிருப்பவை.

இத்தகு கிராமத்தில் சாதாரணக் குடும்பமொன்றில் பிறந்த என்.வி. என். அவர்கள் அடுத்திருக்கும் சென்னை நகரத்தில்தான் வாழ்க்கைப் பிரச்னைக்கு வழி கண்டாக வேண்டிய நிலையில் சிறு வயதிலேயே வந்துவிட்டவர்.

திரு. என்.வி.என். அவர்களின் தந்தை திரு. விசயரங்கம் அவர்கள் சாதாரண மரக்கடை ஒன்றில் கணக்கெழுதுபவராகப் பணியாற்றியவர்; தன் பெயருக்குப் பின்னால் தன் சாதிப் பெயரான முதலியார் என்பதைக் கவனமாகப் பயன்படுத்துவதில் கண்டிப்பானவர் அவர். பழங்காலக் கோட்பாடுகளை அப்பழுக்கின்றிக் கடைப்பிடிக்கவேண்டுமென்று தம் பிள்ளைகளைப் பெரிதும் வற்புறுத்தியவர் அவர்.

அவருடைய ஆசையெல்லாம் தன்னைப்போல் தன் பிள்ளைகளும் கணக்கெழுதுவதில் திறமை பெற வேண்டும் என்பதே. ஆனால், திரு. என்.வி.என். அவர்கள் மட்டும் எண்களைக் காட்டிலும் எழுத்துக்களில் அதிக நாட்டமுடையவராக வளர்ந்தார். சிதம்பரனாரின் போர்க்குரல், திரு.வி.க.வின் எழுத்து, திலகரின் பேச்சு, பாரதியாரின் பாடல், சுந்தராம்பாள் - கிட்டப்பா சுதந்திர கீதம் என்ற தொடர்பிலேயே தன் ஓய்வு நேரத்தைக் கழிப்பவரானார்.

அவருடைய இளமைக் காலத்தில் எத்தகைய விளையாட்டுப் போட்டிகளிலும் அவர் ஈடுபாடு கொண்டதில்லை. விளையாட்டுக் கலைகள் எவையும் அவருக்குப் பழக்கமல்ல. கால்பந்து, கூடைப்பந்து என்பன போன்ற சாதாரண விளையாட்டுப் பெயர்கள்கூட அவருக்கு விளையாட்டாகத் தெரியும். அவர் சிறுவயதில் விளையாட்டுகள் எவற்றிலாவது பங்கு கொண்டிருக்கிறார் என்றால், அவை காங்கிரஸ் இயக்கத்திற்கு எதிர்ப்பான பொதுக்கூட்ட மேடைகளைப் பிய்த்துப் போட்டதும், கூட்டங்களில் குழப்பம் விளைவித்தவைகளுமே என்று துணிந்து சொல்லலாம்.

தென்னிந்திய நல உரிமைச் சங்க மேடைகளுக்கு, அறிஞர் அண்ணா அவர்களின் அரசியல் வாழ்வுத் துவக்கக் காலத்தில் சென்னை ஜார்ஜ் டவுன் வட்டாரத்தில் திரு. என்.வி. என். கொடுத்த 'தொல்லை' சற்று அதிகமானதே.

காங்கிரஸ் கட்சியின் தீவிரத் தொண்டராக இருந்த என்.வி.என். அவர்கள், காங்கிரசுக்கு எதிர்ப்பாக நின்ற அறிஞர் அண்ணா அவர்களுடன் இணைந்து நிற்கத் தலைப்பட்டது தாய்மொழியாம் தமிழுக்கு வந்த ஆபத்தைக் கருதியே ஆகும். ஆங்கிலேயர் பிடியிலிருந்து ஒரு துணைக் கண்டமே விடுதலை பெற வேண்டும் என்ற துடிப்போடு பணியாற்றி வந்த திரு. என்.வி.என். தமிழ் மொழிக்கு ஆபத்து வரும் போல் தெரிந்ததும் சீற்றம் கொண்டு எதிர் அணியில் சேர்ந்தார் என்றால், அதுதான் அவருக்குள்ள தனிச் சிறப்பு ஆகும்.

அன்றைய நிலையில் அவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து தன்னைப் பிரித்துக் கொள்வதில் இருந்த இடர்ப்பாடுகளும் நெருக்கடிகளும் ஏராளம். இருப்பினும், 'மனச்சாட்சி'யுடன் சமரசமாகப் போவதற்காகவே, அவர் அறிஞர் அண்ணாவின் அணியில்

சேர்ந்துவிட்டார். இதனை வெளிப் படையாகவே அப்போது பலமேடைகளில் தெரிவித்தார். அதனைக் கேட்ட அறிஞர் அண்ணா அவர்கள் 'வாழ்க உன் மனச்சாட்சி' என்று வாழ்த்தினார். அந்த வாழ்த்தோடு தொடங்கிய என்.வி.என். அவர்களின் இரண்டாவது அரசியல் பருவம், இன்றளவும் வளர்கிறது; வாழ்கிறது.

1937இல் காங்கிரசிலிருந்து பிரிந்து அறிஞர் அண்ணா அவர்களின் அணிக்கு மாறியதும், உடனடியாகத் தன் குடும்பத்தாருடன் சிறைக்குச் சென்று தன்னுடைய புது அரசியல் வாழ்வைப் புனிதப்படுத்திக்கொண்டவர் அவர். திரு. என்.வி.என். அவர்களுடைய துணைவியார் திருமதி புவனேசுவரி அவர்கள் தம் கைக் குழந்தையுடன் சிறையேகியது அந்தக் காலத்தில் பெருந் துணிச்சலும் தியாகமும் நிரம்பியதாகக் கருதப் பட்டது. தனியாகக் காங்கிரசின் தொண்டராக இருந்த என்.வி.என். குடும்பத்தோடு அண்ணாவின் அணிக்குக் குடியேறிவிட்ட 1937முதல் இன்றளவும் 'தன் மனச்சாட்சிக்கு' ஒரு சிறிதும் கோபம் வராமல் நடந்து கொண்டிருக்கிறார்.

பண்டித மோதிலால் நேருவைத் தன் கருத்துக்குப் பணிய வைத்ததைப் பெருமையாகக் காந்தியடிகள் எடுத்துக் கொண்டதைப்போல் அன்று பெத்துநாயக்கன் பேட்டையில் திரு. என்.வி.என். அவர்களைத் தன் வழிக்குத் திருப்பியதை அறிஞர் அண்ணா, பெரிய அரசியல் சாதனையாகக் கருதினார். பெத்துநாய்க்கன் பேட்டையிலிருந்துதான் தமிழ் காக்கும் இயக்கமும், பிற்கால நீதிக் கட்சியும், அதற்கடுத்த சுயமரியாதைக் கட்சியும், அதற்கும் அப்பால் திராவிடர் கழகமும், இறுதியாகத் தி.மு.கழகமும் சென்னையைப் பொறுத்தவரை கிளை விட்டன என்பதைப் பார்க்கும் யாருக்கும் அன்று திரு. என்.வி.என். அவர்களைத் தம் பக்கத்திற்கு அழைத்துக்கொண்டதில் அண்ணாவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியின் அருமை தெரியும்.

அரசியலில் புதுக் குடித்தனம் புகுந்த திரு என்.வி.என். புதுக்குடித்தனம் புகுவோரின் சோதனைகளுக்கும் ஆளானார். அப்போதெல்லாம், இயக்கத்தின் அன்றாடத் தொல்லைகளைச் சரிக்கட்டிக்கொண்டு போவதற்கே, அன்றாடம் நன்கொடை பெற்றுத்தான் ஆகவேண்டும்.

இயக்கத்துக்காக நன்கொடை நிதி சேர்க்க என்.வி.என். அலைந்த அலைச்சலை யாரும் மறக்கமுடியாது.

அறிஞர் அண்ணா அவர்கள்கூட என்.வி. நடராசன் என்றால் யார் என்று நினைக்கிறீர்கள்! நாயர் வியசயரங்கம் நடராசன் என்று எண்ணுகிறீர்கள் நண்பர்களே! நன்கொடை வாங்கும் நடராசன் அவர் என்று பல மேடைகளில் பெருமையாகச் சொல்லியிருக்கிறார் என்றால், என்.வி.என். அவர்களின் நன்கொடை வாங்கும் திறமையை ஒருவாறு ஊகிக்கலாம்.

நன்கொடை வாங்கியே இயக்கத்தை வளர்த்த என்.வி.என். அவர்களைப் போன்றவர்கள், நாட்டு மக்களால் அளிக்கப்பட்ட நன்கொடையாக அமைச்சர் பதவியில் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து பணியாற்றத் தவறமாட்டார்கள் என்று நாடு நிச்சயமாக நம்புகிறது.

திரு. என்.வி.என். தனக்குத்தானே வளர்ந்துகொண்ட மனிதர், பேச்சாளர், எழுத்தாளர்; அனைத்துக்கும் மேலாக நேர்த்தியான நிர்வாகி; மனிதர்களின் பண்பையும் சிறப்பையுமே பெரிதும் பாராட்டுபவர்.

இப்பெருங் குணங்கள் நாட்டின் பலவீனப் பகுதியான பிற்பட்டோர் சமுதாயத்தைச் சிறப்புற உயர்த்துவதற்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

அறிஞர் அண்ணா அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு நாளில் அண்ணாவின் நினைவாக நாட்டு மக்களுக்கு நீங்கள் கூறுவது என்ன ?

தந்தை பெரியார் கூறியது

'சீரணி' என்னும் பெயரால் அரசாங்கம் மக்களுக்குப் பயன்படும் படியான கருத்துக்களை வெளியிடுவது கேட்டு நான் மிகுதியும் மகிழ்ச்சி யடைகின்றேன்.

'சீரணி' என்னும் சொல்லுக்குக் கருத்து நேர்மையும் - ஒழுக்கமும் என்பது பொருளாகும்.

இப்போது அரசாங்கம் நடத்தும் அப்பத்திரிகையில் பெரிதும் மக்களுக்கு, சிறப்பாகப் பொதுத் தொண்டு செய்யும் இளைஞர்களுக்கு, பயன்படும் கருத்துக்களை வெளியிடுவது பொருத்தமாகும்.

நம் மக்கள் வாழ்வு, குடும்பத்தை நடத்துவதுதான் இயல்பான, அவசியமான முறையென்றாகிவிட்டது. இதன் பயனாகவே ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவன் சுயநலம் தான் முக்கிய இலட்சியம் என்றும் ஏற்பட்டு விட்டது.

பொதுத் தொண்டர்கள் கருதவேண்டியதெல்லாம், மனிதன் மனிதனாகப் பிறப்பது என்பது மனித சமுதாயத்திற்குத் தொண்டு செய்து, சமுதாய நலனும் - வாழ்வும், அறிவு வளர்ச்சிக்கு ஏற்றபடி முன்னேற்றமடைய வேண்டுமென்பதற்காகவே யாகும். ஆனால் வாழ்க்கையில் ஈடுபடுகிற மக்களுக்கு



அவனவன் சுயநலம்தான் பொதுத் தொண்டு என்றாகி விட்டதால், மற்ற மனிதனின் நலனைப்பற்றிச் சிந்திப்பதை விட, மற்ற மனிதனால் சுயநலத்தைப்பற்றிச் சிந்திக்க வேண்டியவனாகி விட்டான்.

பொதுத் தொண்டில் ஈடுபட ஆசைப் படுகிற இளைஞர்கள் ஒவ்வொருவரும் எளி தில் குடும்ப வாழ்வில் தான் ஈடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பொதுத் தொண்டின் பலனையே தன்னுடைய இலட் சியமாகக் கருதுவதோடு. அதில் எந்த அள வுக்கு வெற்றி பெறுகிறானோ அந்த அளவுக் குத்தன்னைச் சிறப்பான மனிதனாகக் கருதிக் கொள்ள வேண்டும்.

சீரணித் தொண்டர்கள் 'வாழ்வு' என்ப தற்குப் பொருளே பொதுத் தொண்டு என்று கொள்ள வேண்டும். மனித சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படை, மனிதன் சுய நலத்தை மறந்து பொதுத் தொண்டு செய் வதுதான். இது மற்ற எல்லா மக்களையும் விடச் சீரணித் தொண்டர்களுக்கு முக்கிய மான தத்துவமாகும் என்பது என் கருத்து.

அண்ணா அவர்களுடைய பிறந்த நாளில் கிராம மக்களுக்கு ஏதாவது தெளிவுரை கூற வேண்டியது அவசியம் என்று கருது கின்றேன். நமது நாட்டிலே கிராமம் என் பதை வர்ணாசிரம தர்மத்தில் எப்படி மனிதனில் பிராமணன் என்பவன் மேல் சாதியாகவும், சூத்திரன் என்பவன் கீழ் சாதியாகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறதோ அதுபோலவே ஊர்களின் நிலை மையும் நகரங்கள் என்பவை மேல்சாதி ஊராகவும், கிராமங்கள் என்பவை கீழ் சாதி ஊராகவும், சில கிராமங்கள் 5ஆம் சாதி ஊர்களாகவும் கருதப்பட்டும், நடத் தப்பட்டும் வருகிறது. அதனாலேயே நகரத்து மனிதன் மெத்தை வீட்டிலும், வில்லை வீட்டிலும் குடி இருந்தால், கிராமத்து மனிதன் கூறை வீட்டிலும், குச்சு வீட்டி லும் குடி இருக்கின்றான். நகரத்து மனிதன் அரிசி சாதம் சாப்பிட்டால், கிராமத்து மனிதன் கம்பு, சோளம் சாப்பிடுகின்றான். நகரத்து மனிதன் 100க்கு 20 பேர் படித் திருந்தால், கிராமத்து மனிதன் 100க்கு 2, 3 பேரே படித்திருக்கிறான். நகரத்து மனிதன் பெரும்பாலும் உடலுழைப்பில்லாமல் வாழ் பவனாயிருந்தால், கிராமத்து மனிதன் செல்வவானாயிருந் தா லும் கூட உடல் உழைப்பால் வாழ வேண்டியவனாக இருக் கிறான். ஆனால் உலகத்துக்குப் பயன்படுகிற வன் கிராமத்து மனிதன். அவனுடைய உழைப்பைப் பயன்படுத்திக் கொள்கிறவன்

உடலுழைப்பில்லாத நகரத்து மனி தன்தான்.

எனவே மனிதன் கிராம நலத்திற் கென்று பாடுபடுவதாயிருந்தால் கிராமம், பட்டிக்காடு என்கின்ற பெயர்களையே ஒழித்துவிட வேண் டும். பெரிய நகரம் - சிறிய நகரம் என்கின்ற பெயரால்தான் கிராமங் கள் அழைக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு கிராம அமைப்பையும். நகரங்களைப் போலவே, நகரங்களில் உள்ள எல்லா வசதிகளும் விகிதாச் சாரத்திற்கேற்ப எல்லா மக்களும் அனுபவிக்கும்படிச் செய்யவேண்டும். கிராமங்களை முன்னுக்குக் கொண்டு வர வேண்டுமென்றால் மக்கள் விவசாயத்தின் மூலமும், கிராமக் கைத்தொழில் மூலமும் உடலுழைப் பில்லாமல் சர்வமும் இயந்திரத் தினால் நடைபெறும் படியாக அர சாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அண்ணாவினுடைய கிராம நலத் திட்டம் என்பதெல்லாம் கிராம மக் களின் உடலுழைப்பை மாற்றி, அவற்றை இயந்திர மயமாக்கு வதோடு 100க்கு 100 மக்கள் ஆணும், பெண்ணும் கல்வி அறிவுடையவர் களாக ஆக்கவேண்டும் என்பதுதான் ஆகும்.

கிராம நலத் தொண்டு செய்யும் மக்கள் இதை மனத்தில் கொள்ள வேண்டுமென்று வேண்டிக் கொள் கிறேன்.

கிராம மக்கள் ஆண், பெண் சக லரும் கல்வி பயின்றாக வேண்டும். 100க்கு 100 மக்களும் கல்வி பயின்ற வர்களாக ஆகிவிட்டால் எந்தக் கிராமமும் கிராமமாகவோ, பட்டிக் காடாகவே இருக்க முடியாது. எல் லாக் கிராமவாசிகளும் படிக்கவேண் டும். முக்கியமாக ஒவ்வொரு கிராம வாசியும் ஆணும், பெண்ணும் தற் காலக் கர்ப்ப ஆட்சிச் (கருத்தடை) சாதனத்தைக் கொண்டு கூடுமான வரையிலும் ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகளுக்குமேல் பெறாமல் பார்த் துக் கொள்ளவேண்டும். நாட்டின் வளர்ச்சியும், செல்வமும் பிள்ளைப் பேற்றைக் கட்டுப்படுத்தி எவ்வளவுக் கெவ்வளவு குறைத்துக் கொள் கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதைப் பொறுத்துத்தான் இருக் கிறது. இதைக் கிராம மக்கள் நல்ல வண்ணம் உணரவேண்டும்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சி. கூறியது

அண்ணா ஓர் இலட்சியவாதி. இலட் சியத்திற்காகவே வாழ்ந்தார், இலட் சியத்திற்கு வெற்றி தேட உழைத் துக்கொண்டே உயிர் விட்டார். அவர் போன்ற இலட்சியவாதிகள், புற உடல் நீத்தாலும் அக உட லுடன் நம்மிடையே வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இது, வெறும் தத்துவம் மட்டு மல்ல; நடைமுறையில் நாம் கொண் டுள்ள நம்பிக்கையுமாகும்.

அண்ணா பிறந்த நாளில் தமிழக மக்களுக்கு யான் தரும் செய்திகள் வருமாறு:

1. தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற வேண்டும். ஆங்கிலம் போன்ற அந்நியமொழி எதையும் - அது நமக் குத் தேவைப்படுமானால் - படிக்க லாம். ஆனால் தாய்மொழிக்கு எதிராக அதனைப் பயன்படுத்தக் கூடாது. இது அண்ணாவின் மொழிக் கொள்கை. இதனைப் பின்பற்று வோமாக!



2. அண்ணா, மதுவிலக்கை மன தார விரும்பினார். மதுவிலக்குச் சட் டத்தைத் தொடர்ந்து அமுல் நடத்

துவதில் அளவற்ற ஆர்வம் காட்டினார். இது அவருடைய ஒழுக்கநெறி எனலாம்.

இத்துறையில் அவரைப் பின்பற்றுவது தமிழ் மக்களினுடைய - தமிழக அரசினுடைய கடமையாகும்.

3. அண்ணா, சாதிகளிடையே உயர்வு தாழ்வும் சமயங்களிடையே பகைமையும் இருத்தல் கண்டு மனம் வருந்தினார். சாதிகளற்ற சமுதாயத்தைப் படைக்க விரும்பினார். சமயப் பூசலற்ற ஒருமைப்பாட்டைக் காண ஆர்வம் கொண்டிருந்தார். இது அவருடைய சமுதாயக் கொள்கை. அவருடைய இந்தக் கனவை நினைவாக்குவோமாக.

4. அண்ணா, வறுமையை ஒழிக்கத் துடித்தார். சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்கள் நலனே சமுதாயம் முழுவதன் நலனைக் கருதினார். 'மக்கள் குரலே மகேசுவரன் குரல்' என்றும் கூறினார். இது அண்ணாவின் பொருளாதாரக் கொள்கை எனலாம். மக்கள் வறுமை அகற்றப் பாடுபடுவது நாம் அவருக்குச் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

5. அண்ணா, பகைமையை வெறுத்துப் போராடினார். ஆனால், அதே நேரத்தில் பகைவனிடம் அன்பு காட்டினார். இந்த உயர்ந்த பண்புதான் ஜனநாயகத்தின் உயிர்நாடி என்றும் கருதினார். அரசியல் கட்சிகளிடையே போட்டி இருக்கவேண்டும்; அது 'போராட்டமாக' மாறிவிடக் கூடாது என்பது, அவர் விரும்பிய மனித நாகரிகமாக இருந்தது.

இக் கருத்தை அத்தனை அரசியல் கட்சிகளும் தொடர்ந்து கடைப் பிடிக்க வேண்டும்.

இதுவரை நான் கூறியுள்ள இந்த ஐந்தும் ''அண்ணாவின் பஞ்சசீலம்'' எனலாம்.

'சீரணி'க்கு மேலும் சந்தாதாரர்கள் சேர்த்தல்

பழனி, வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியங்களின் பாராட்டத்தக்க பணி

'சீரணி' இதழ் மே '69 முதல் சிறிய அளவில் புதிய வடிவில், கவர்ச்சியான முறையில் வெளிவருகிறது. தமிழகத்தின் தலை சிறந்த எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களையும், தமிழ்நாடு அரசின் சாதனைகள்பற்றிய சிறப்புச் செய்திகளையும் தாங்கிவரும் 'சீரணி' இதழுக்கு மேன்மேலும் சந்தாதாரர்கள் பெருகிக் கொண்டே வருகின்றனர். இது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஊராட்சி ஒன்றியங்கள் 'சீரணி'க்கு அதிகமாகச் சந்தாதாரர்கள் சேர்க்கும் பணியில் மிகுந்த அக்கறையுடன் செயலாற்றுவது மகிழ்வூட்டக் கூடியதாயுள்ளது. மதுரை மாவட்டம் பழநி ஊராட்சி ஒன்றியம் 802 புதிய சந்தாதாரர்களையும் கோவை மாவட்டம் வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியம் 520 புதிய சந்தாதாரர்களையும் அண்மையில் சேர்த்துள்ளன. இவ்வூராட்சி ஒன்றிய ஆணையர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பாராட்டுதலுக்குரியது. மற்ற ஊராட்சி ஒன்றியங்களும் இவ்வழியைப் பின்பற்றிச் 'சீரணி'க்கு அதிக அளவில் சந்தாதாரர்கள் சேர முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

சீரணி கண்ட செம்மலுக்கு

பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுச் சுரங்கத்தில் விளைந்த அற்புதங்கள் ஏராளம்! ஏராளம்!! அவைகளில் ஒன்றாக அமைந்திருப்பதுதான் சீரணி என்ற அமைப்பாகும். இதன் முக்கியக் குறிக்கோள்-தனக்கும் தன் குடும்பத்திற்கும் செலவிட்ட நேரம் போக, எஞ்சியுள்ள நேரத்தை நாட்டின் நலனுக்கு நல்கி அதன் மூலம் தொண்டுள்ளம் கொண்ட ஓர் அமைப்பை உருவாக்குவதுதான். இல்லாததை, பொல்லாததை, ஆகாததை, மற்றேனைய வேண்டாததையெல்லாம் கட்டிக் காத்துவரும் சமுதாய அமைப்பு; அங்கே சாதிச் சண்டை-சமயச் சண்டை-கட்சிச் சண்டை ஆகியவை கட்டுமீறிச் செல்லுகின்ற காட்சி; இவைகளையெல்லாம் மாற்றியமைத்து, இன்பம் தத்தித் தவழும் புதிய சமுதாயத்தை உருவாக்கவேண்டும் எனில் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு பொது அமைப்பு வேண்டும் என அண்ணா அவர்கள் விரும்பினார்கள். சீரணி உருவாயிற்று. தூய தொண்டுள்ளத்தோடு கடந்த இரண்டு ஆண்டுகளில் சீரணியினர் உருவாக்கித் தந்துள்ள சாதனைகள் ஏராளம்! ஏராளம்!!

சீரணி கண்ட செம்மல் அண்ணாவின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவின்போது அவருக்கு ஓர் அழியாச் சின்னமாக விளங்கும்படிச் சென்னைக் கடற்கரையில் அனைத்துக் கட்சிகளின் உபயோகத்திற்காக ஒரு பொது மேடையை - பேச்சு அரங்கை - அமைக்கச் சீரணியினர் திட்டமிட்டு, இரவும், பகலுமாகப் பணியாற்றினார்கள். இந்தப் பணியினை 21-8-1969 அன்று காலை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

சீரணியின் காணிக்கை

க.பரமசாமி, பி.ஏ., சீரணித்தனி அலுவலர்

அவர்கள் துவக்கி வைத்தார்கள். அத் துவக்க விழாவில் சீரணித் தொண்டர்கள் இடையில் நிலவிய ஊக்கமும் ஆக்கமும் இப் பொதுமேடை குறித்த காலத்தில் உருவாகிவிடும் என்ற நம்பிக்கையை ஊட்டியது. இந்த நம்பிக்கை வீணுகாதவாறு சீரணித் தலைவர்களுப், தொண்டர்களும், இரவும் பகலுமாக, வெயில் என்றும் மழை என்றும் பாராமல் உடலை வருத்தி உதிர்த்த வியர்வையின் ஒவ்வொரு துளியும் பொதுமேடையாகக் காட்சியளிப்பதைப் பார்த்து மனம் மகிழ்ச்சியடைகிறோம். அது மட்டுமல்ல, சிங்காரச் சென்னையை அழகுபடுத்தும் முகத்தான் சீரணித் தொண்டர்கள் 12 பகுதிகளாகப் பிரிந்து, 90 சாலைகளைச் செப்பனிடுவதும், துப்புரவு செய்வதுமான சிறந்த பணியினை மேற்கொண்டு 25-8-1969இலிருந்து 30-8-1969வரை சிறப்பாகப் பணியாற்றிச் சென்னை நகர மக்களின் பாராட்டுதலைப் பெற்றனர்.



பணிபுரியும் தொண்டர்கள்



அரங்க அமைப்பை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் காணுகிறார்

இவை யனைத்தையும் சீரணியை உருவாக்கித் தந்த நமது ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவுக் காணிக்கையாக வைத்து வணங்குகிறோம்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கல்வி அறிவும் பொது அறிவும் வளர்வதற்கான பணியில் மிகுந்த அக்கறை காட்டியதை நாம் எல்லோரும் அறிவோம். அதைக் கருத்திற்கொண்டு அண்ணா அவர்களின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் அவருடைய நினைவாக ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டுமெனவும், இப்பணியினைச் செப்டெம்பர் திங்கள் 15ஆம் தேதி துவங்கி அக்டோபர் திங்கள் 14ஆம் நாளுக்குள் முடிக்க வேண்டுமென்றும் தமிழ்நாட்டிலுள்ள சீரணித் தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும், தொடர்புள்ள அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பேரறிஞர் அண்ணாவின் பெயரால் 375 அழியா நினைவுச் சின்னங்கள் உருவாகி அப்பெருமகனின் பெருமைகளை உரைத்து நிற்கும்.

கல்வி அறிவும், பொது அறிவும் வளர்வதற்கு ஏதுவாக 534 சீரணி அறிவகங்கள் நாடு முழுவதும் நல்லறிவு பரப்பி, ஒரு புதிய சமுதாயத்தை

அமைக்க நாட்டு மக்களைத் தயார் செய்யும் பெரும் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

சீரணித் தொண்டர்கள் தூய உள்ளத்தோடு அவ்வணியை அமைத்துத் தந்த அண்ணாவுக்குச் சிலை எடுக்க முடிவுசெய்து, சிலையை உருவாக்கிச் செப்டம்பர் திங்கள் 14ஆம் நாள் சென்னை மாவட்டச் சீரணி அலுவலகத்தின் முன் திறப்புவிழாவினை மாண்புமிகு முதல் அமைச்சர் கலைஞர் அவர்களைக்கொண்டு செய்தனர். மேற்கூறிய பணிகளை அண்ணாவின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாக் காணிக்கையாக்கி அவரை நினைந்து வணங்குவோமாக! இனி வரும் ஆண்டுகளிலும், இவ்வமைப்பைச் சீரிய முறையில் செயற்படுத்தி அவர் எண்ணிய எண்ணத்தை நாட்டில் நடைமுறையாக்கி மனித சமுதாயம் நலமுற அயராதுழைப்போம் என்ற உறுதி பூணுவோமாக.



அரங்க வேலையை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பார்வையிடுகிறார்

ஆற்றல் மிகு அரசு

இந்தியாவின் எந்தப் பாகத்திலும் உள்ள அரசும் ஆற்றவியலாத ஒப்புயர்வற்ற மாபெரும் செயல்களை மிகக் குறைந்த காலமான இரண்டரை ஆண்டுகளில் தி.மு. கழக அரசு செய்து முடித்துள்ளது. இதனால் புகழ் வாய்ந்த அரசாகத் திகழ்கிறது. இவ்வரசு உருவாக்கி வரும் சமுதாய வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் செயல் முறையில் சீரிய தன்மை உடையனவாகவும் பயனளிப்பனவாகவும் உள்ளன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள அரசியல் தலைவர்களெல்லாம் உணர்ச்சி மயமான முழக்கங்களிலேயே முழுக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும்பொழுது இவ்வரசு அவற்றையெல்லாம் கடந்த நிலையில் செயலாக்கத்திலேயே கவனம் செலுத்தி வருகிறது. இதுதான் தமிழ்நாடு அரசின் வெற்றியின் இரகசியமாகும். ஏனைய அரசியல் கட்சிகள் எல்லாம் புகழ் வாய்ந்த இவ்வரசின் இந்நற்செயலைப் பின்பற்ற வேண்டும்.

அண்ணா காட்டிய வழியைப் பின்பற்றித் தலைமை தாங்கி, தமிழ்நாட்டை வழிநடத்திச் செல்லும் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள் மிகவும் பாராட்டுக்குரியவர்.

பிறவியிலேயே அவர் ஒரு தலைவர். செயற்கரிய செய்யும் செயல்வீரர். அஞ்சா நெஞ்சமும் ஆற்றல் திறனும் கொண்டவர். மக்களிடையே அவருக்குள்ள செல்வாக்கு, பல்வேறு அரசியல் தலைவர்கள் அவர்பால் கொண்டுள்ள மதிப்பு, தலைநகரிலுள்ள பல்வேறு சமூகத்தினர் அவர்பால் செலுத்தும் அன்பு முதலியன இதற்குச் சான்றாகும். ஏனைய முதலமைச்சர்கள் எல்லாம் மத்திய அரசிடமிருந்து பெற இயலாத மதிப்பையும் புகழையும் இவர் பெற்றுள்ளார்.

[சென்னையில் 14-9-69ல் நடைபெற்ற "சீரணி அரங்கம்" திறப்பு விழாவின்போது இராஜஸ்தானியர்சங்கத் தலைவர் குறிப்பிட்டது.]

சீரணியினரால் 31-3-1969 முடியச் செய்து முடிக்கப்பட்ட பணிகளின் விவர அட்டவணை.

	மாவட்டத்தின் பெயர்.	பள்ளிகளின் எண்ணிக்கை	மதிப்பீடு	அரசாங்கச் செலவு	இணைப்புச் சாலைகள் எண்ணிக்கை	மதிப்பீடு	அரசாங்கச் செலவு	கால்வாய், குளங்கள் தூர் எடுத்தல் எண்ணிக்கை	மதிப்பீடு	அரசாங்கச் செலவு	இதர பணிகள் எண்ணிக்கை	மதிப்பீடு	அரசாங்கச் செலவு
			ரூ.	ரூ.		ரூ.	ரூ.		ரூ.	ரூ.		ரூ.	ரூ.
1.	கன்னியாகுமரி	4	22,504	16,000	3	7,500	—	14	69,410	32,955	11	810	—
2.	வட ஆர்க்காடு	61	2,06,000	1,27,239	55	59,275	14,500	32	21,702	1,500	3,815	61,281	8,778
3.	இராமனுதபுரம்	14	40,231	22,625	56	79,438	44,896	82	1,03,555	60,079	—	20,426	1,900
4.	தென் ஆர்க்காடு	43	1,45,535	68,489	27	30,665	1,850	27	12,924	2,300	1,272	17,610	—
5.	நீலகிரி	9	44,000	19,648	15	32,195	14,687	6	8,515	3,043	62	7,655	1,888
6.	தஞ்சாவூர்	2	5,335	2,774	29	86,384	28,321	73	1,57,895	66,920	782	12,584	525
7.	திருநெல்வேலி	46	1,24,870	86,684	37	30,883	16,142	8	7.005	2,500	75	42,536	26,138
8.	சேலம்	16	2,74,160	2,08,123	10	18,264	13,596	9	24,903	14,278	5,229	79,962	2.200
9.	கோயம்புத்தூர்	36	1,50,410	1,11,052	1	1,850	1,625	9	41,400	29,742	3,957	39,349	2,970
10.	தர்மபுரி	16	70,654	54,245	2	4,298	4,223	45	71,493	61,619	1,485	—	—
11.	மதுரை	16	90,559	57,915	8	17,486	10,660	83	95,524	58,600	—	63,796	—
12.	செங்கற்பட்டு	64	2,54,668	1,70,767	35	64,087	35,600	18	27,322	7.321	1,351	30,626	7,253
13.	திருச்சிராப்பள்ளி	45	1,83,651	84,543	51	48,746	6,800	84	1,11,802	50,344	2,068	92,955	29,064
14.	சென்னை நகரம்	1	32,000	4,000	8	7,127	1,125	1	18,000	—	*	2,000	—
	மொத்தம் :	373	1644577	1034104	337	488198	194025	491	771450	391201	20107	471590	80716

* வீதிகள் சுத்தம் செய்தல்,



சென்னையிலுள்ள பிரிட்டிஷ் தூது வராக துணை அதிகாரி, தமிழ்நாடு கல்வி சுகாதார அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியனை தலைமைச் செயலகத்தில் 26-8-1969 அன்று சந்தித்தார்.

சென்னைக்கு வந்திருந்த நேபாள தூதுக் குழுவினர் 'கிராம நலம்' அண்ணா மலர் இதழைப் பார்வையிடுகின்றனர்.

அடையாறு புற்றுநோய் கழகத்திற்கு மேற்கு ஜெர்மனியிலிருந்து நன்கொடையாக அளிக்கப்பட்ட காமிராவை (The Odelca Camera) தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை அரிசன நல அமைச்சர் மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் 13-8-1969 அன்று இயக்கிவைத்தார்கள்.

தமிழ்க்கடல் மறைமலை அடிகள் பதினெட்டாவது ஆண்டு நினைவு நாள் 25-8-'69 அன்று பல்லாவரம் மறைமலை அடிகள் கலைமன்றம் சார்பில் கொண்டாடப்பட்டபொழுது பிறபட்ட வகுப்பினர் நல அமைச்சர் மாண்புமிகு என். வி. நடராசன் உரையாற்றினர்.



அவ்விழாவுக்கு, தொழிலமைச்சர் மாண்புமிகு செ. மாதவன் தலைமை தாங்கினர்.

மேலே: சென்னை மந்தைவெளி கபாலித் தோட்டத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள தீப்பிடிக்காத வீடுகளை முதலமைச்சர் மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள் 12-9-1969 அன்று பார்வையிட்டார்.

கீழே: காந்தி நூற்றாண்டு விழாவை ஒட்டி, சென்னை நகர் கல்லூரி மாணவர்களுக்காக நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவருக்கு சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு, நெ. து. சுந்தரவடிவேலு 12-8-1969 அன்று பரிசளித்தார்.

விவசாயிகளுக்கு, வேளாண்மை ஆண்டு முழுவதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;
விவசாயத்தின்மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானது அல்ல.

கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது, உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் வாரியத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்,

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர் - கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்

சென்னை 'குறளகத்'தில் இயங்கும்
கதர் - கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு:
கதர் - கிராமத் தொழில் துறை
2, சர் தேசிகாச்சாரி ரோடு
சென்னை-4

பசிப்பிணி மருத்துவன் யாரு?

சிங்கன் - சிங்கி பாடல்

சிங்கன் : ஊருக்கு ழைத்திடும் உத்தமர் சேவையை
உருப்படி யாக்கியவர் யாரு? - சிங்கி
ஒன்றாகத் தேக்கியவர் யாரு?

சிங்கி : யாருக்கும் இல்லாத நுண்ணறிவு கொண்ட
ஏழை அண்ணாவென்று கூறு! - சிங்கா
எங்கள் அண்ணன் என்று கூறு!

சிங்கன் : சீரணி யென்பது செம்படை என்றஞ்சி
சீறிச் சினந்தவர்கள் யாரு? - சிங்கி
மாறிப் பழித்தவர்கள் யாரு?

சிங்கி : பேரணி யாய்மாறி அரும்பெருந் தொண்டுகள்
பேணி வருவதைநீ கூறு! - சிங்கா
பெருகி வளர்வதையும் கூறு!

சிங்கன் : நீர்வள மாநாடு நெடுகிலுங் கூட்டியே
நிலவளம் கண்டவர் யாரு? - சிங்கி
நெடும்புகழ் கொண்டவர் யாரு?

கவிஞர் ஆனந்தம்

சிங்கி : ஊர்வளம் ஓங்கி உயிரினம் வாழ்ந்திட
உயர்த்தியோர் அண்ணாதான் கூறு! - சிங்கா
உழைத்தவர் அண்ணாதான் கூறு!

சிங்கன் : உரமில்லை என்றேங்கி உழவர் ஓலமிட
ஓடோடி வந்தவர் யாரு? - சிங்கி
நாடெங்குந் தந்தவர் யாரு?

சிங்கி : தரமான விவசாயம் தழைக்க உதவிய
தமிழக முதல்வரெனக் கூறு! - சிங்கா
தலைவர் அண்ணாவென்று கூறு!

சிங்கன் : கூலி நிர்ணயித்துக் குலையாத வாழ்வுக்குக்
கொள்கை வகுத்தவர் யாரு? - சிங்கி
கொலையைத் தவிர்த்தவர் யாரு?

பாங்கான நம் அண்ணா கூறு!

சிங்கி : வேலியே பயிரை மேயாமல் தடுத்திடும்
மேதை அண்ணாவென்று கூறு! - சிங்கா
வேந்தர் அண்ணாவென்று கூறு!

சிங்கன் : தீயிலும் வேகாத சிறந்த வீடுகளைத்
திறமுடன் கட்டியவர் யாரு? - சிங்கி
திட்டமும் தீட்டியவர் யாரு?

சிங்கி : கோயிலில் வைத்துநாம் கும்பிடக் கூடிய
குணவான் அண்ணாவென்று கூறு! - சிங்கா
குமணன் அண்ணாவென்று கூறு!

சிங்கன் : பட்டண வாசிக்குப் படிஅரிசி போட்டுப்
பஞ்சம் தொலைத்தவர் யாரு? - சிங்கி
பசியை விரட்டியவர் யாரு?

சிங்கி : பட்டிக் காட்டார்மேலும் பாசம் மிகுந்திடும்
பாமரர் தலைவரென்று கூறு! -சிங்கா
பரமன் அண்ணாவென்று கூறு!

சிங்கன் : வறட்சிக் கொடுமையின் வாட்டம் துடைத்திட
வழிவகை காண்பவர் யாரு? - சிங்கி
வறுமையை ஓட்டுபவர் யாரு?

சிங்கி : புரட்சித் தலைவரது பொன்னான தம்பிதான்
புதுவழி காட்டினார் கூறு! - சிங்கா
புதுவாழ்வு கூட்டுவார் கூறு!

சிங்கன் : மண்ணுக்குள் எங்கோ மறைந்துவிட் டாராம்
மன்னவ ராம் அவர் யாரு? - சிங்கி
அண்ணலா மேஅவர் யாரு?

சிங்கி : கண்ணுக்குள் மணியாகிக் காப்பாற்றுகின்றார்
அண்ணாவே ஆண்டவர் கூறு! - சிங்கா
அண்ணனே நம்தெய்வர் கூறு!



இன்பத் தமிழகத்தில் இமயமலைச்சாரலிருந்து வந்த

நம் விருந்தினர்

பெங்களூரிலிருந்து புறப்பட்டுச் சென்னை வந்தடையும் விமானம், மீனம்பாக்கம் விமானத் தளத்தைத் தொட்டு நின்றது. நேபாள நாட்டு அரசு அலுவலர்களில் எண்மர் விமானத்திலிருந்து மகிழ்ச்சி ததும்ப வந்துகொண்டிருக்கின்றனர். கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகப் பொதுத் தொடர்புக் குழுவினர் அவர்களை வரவேற்று, தங்கவேண்டிய விடுதிக்கு மிக்க மரியாதையுடன் அழைத்துச் செல்கின்றனர். இது நடந்தது 12-8-69 மாலை 7-30 மணி அளவில்.

நேப்பாள அரசின் உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் ஊர்ப்பணி அலுவலர்களில் எழுவரை அவ்வரசு தேர்ந்தெடுத்து, அந்நாட்டு ஊராட்சிப் பயிற்சி நிலையத் துணைத் தலைவர் திரு. என். டி. கன்னல் அவர்களின் தலைமையில் பற்பல நாடுகளைச் சுற்றிப் பார்த்துவர அனுப்பிவைத்துள்ளது.

தமிழகத்தில் அக்குழுவினர் 12-8-1969 தொடங்கி 18-8-1969 வரை தங்கியிருந்து, பற்பல ஊராட்சிகளையும், இன்னபிற ஆர்வம் நிரம்பிய இடங்களையும் சுற்றிப் பார்த்து, களிபேருவகையுடன் மீண்டும் விமானமேறினர்.

அவர்கள் சென்ற ஒன்றியங்கள், ஊராட்சிகளெல்லாம் அவர்களுக்கு மகத்தான, உளமார்ந்த வரவேற்பளித்தன.

கடம்பத்தூர் ஒன்றியத்திலுள்ள நரசிங்கபுரம் ஊராட்சியையடைந்தபோது அவர்களுக்கு ஒரு சிறப்பான நிகழ்ச்சி காத்திருந்தது.

எம். ஏ. லத்தீப்

13-8-1969 காலை 10-30 அளவில் நரசிங்கபுரமே மகிழ்ச்சியால் திளைத்தது. இரண்டு ஜீப் கார்களில் விருந்தினர்கள் இறங்கியதுமே, அவர்கள் நாதசுவர இசையுடன் கோலாகலமாக வரவேற்கப்பட்டு, உயர் தொடக்கப் பள்ளிக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

குழுத்தலைவர் ஆங்கிலத்தில் கேட்ட பற்பல கேள்விகளுக்குப் பள்ளிச் சிறுவர் சிறுமியர் உடனுக்குடன் ஆங்கிலத்திலேயே பதிலளித்தது பெருவியப்பாயிருந்தது மாலை அணிந்துகொண்டு குழுவினர் சுமார் ஒரு பர்லாங்கு தூரம் நாதசுவர இசையிலே மூழ்கியவர்களாய் நடந்து சென்று ஊர்ப்பெருமக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினர்.

ஊராட்சித் தலைவர் திரு. எஸ். நடராசன் குழுத் தலைவருக்கு ஒரு லுங்கி பரிசளித்தார். குழுத் தலைவர் பின்னர் அதைச் சட்டை தைத்துப் போட்டுக் கொண்டார்! பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும் அவர்களுக்குச் சிறந்ததொரு வரவேற்பு அளிக்கப்பட்டது. நான்கு இடங்களில் விருந்தளித்து, நேப்பாள அலுவலர்களை மகிழ்வித்தனர்.

''தென்னகத்தைத் திறம்படப் புரிந்துகொள்ளுதற்கு, சென்னை சிறந்ததொரு வாய்ப்பளிக்கிறது'' என்றார், குழுத் தலைவர் திரு. கன்னல்.

''நேப்பாளத்திற்கும் தமிழகத்திற்கும் பொதுவான சமூக, கலாச்சாரப் பழக்க வழக்கங்கள் இன்றளவும் காலத்தால் அழியாது, மறையாது நிலைத்து நின்று நம் உறவை வலுப்படுத்திய வண்ணமிருக்கின்றன'' என்று மேலும் அவர் கூறினார்.

''சான்றொன்று கூறமுடியுமா?'' என்றதற்கு, அவர் கூறினார்.

''இராமேசுவரத்திலுள்ள சிவனை வணங்கி வழிபடுதற்கு நேப்பாளத்தின் பற்பல பகுதிகளிலிருந்தும் மக்கள் திரளாகத் தமிழ்நாடு வருகின்றனர். அதேபோன்று, சிவராத்திரி விழாவில் பசுபதிநாத்தை வணங்குதற்குத் தமிழகத்திலிருந்து ஏராளமானவர் எங்கள் நாட்டிற்கு வருகின்றனர். இது போதுமே?'' என்றார்.

ஒன்றியங்களையும் ஊராட்சிகளையும் கண்ணுற்று, கேட்டறிந்த பின்னர் சென்னை மாநகரின் எழில்மிகு இடங்கள், வணிக இல்லங்கள், பொழுதுபோக்கு நிலையங்களுக்கு அவர்கள் சென்றனர்.

திரு. எம். எஸ். விசுவநாதன் அவர்கள் குழுவினருடன் சிறிது அளவளாவினர்.

திருக்கழுக்குன்றத்திற்கும், மாமல்லபுரத்திற்கும் குழுவினர் அழைத்துச் செல்லப்பட்டனர். இவ்விடங்கள் அவர்கள் உள்ளங்களைப் பெரிதும் கவர்ந்தன.

''குடும்ப வாழ்க்கையில் இரண்டு நாட்டினருக்குமிடையே மிகுந்த ஒற்றுமையிருக்கிறது. எங்கள் நாட்டில் கூட்டுக் குடும்ப வாழ்வு இன்றளவும் நிலைத்திருக்கிறது குடும்பத் தலைவரின் அன்பு ஆணைகளுக்குக் கட்டுப்பட்டு அவரின் விருப்பிற்கேற்றவாறே செயல்படுகின்றனர்'' என்றார் திரு. கன்னல்.

மீனவர் குடும்பங்கள் துயர் துடைப்பு நிதியின் அளவு அதிகரிப்பு

கடலில் மீன் பிடிக்கும்போது, தங்கள் குடும்பத்தின் முக்கிய உழைப்பாளியை இழந்துவிடும் மீனவர் குடும்பங்களுக்கு, மீனவர் உதவித் திட்டப்படி ரூ. 200 இலிருந்து 300 வரை மானிய உதவியை அரசாங்கம் வழங்கி வந்தது. பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களுக்கு அளிக்கும் துயர் துடைப்பு உதவியை அதிகரிப்பதுபற்றித் தமிழ்நாடு அரசாங்கம் ஆராய்ந்தது அதன் விளைவாக, கடலில் மீன் பிடிக்கும்போது முக்கிய உழைப்பாளியை இழக்க நேரும் குடும்பத்துக்கு மானிய உதவித் தொகையை ஓராயிரம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தி அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

சென்னை நகரிலுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டை, இரயில்வே இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, காமதேனு சிறப்பங்காடி, கடற்கரை, கபாலீசுவரர் ஆலயம் ஆகியவற்றைக் கண்டு களித்தனர்.

திரைப்படங்களெடுக்கும் நிறுவனத்திற்குச் சென்று திரைப்படமெடுப்பதைக் காணவேண்டுமென்ற அவா அவர்களிடம் மிகுதியாயிருந்தது.

ஏ வி. எம் திரைப்படத் தயாரிப்பாளர்கள், தமது நிறுவனத்தைச் சுற்றிப் பார்க்க ஒப்புதல் வழங்கினர் மலையாளம், தெலுங்குப் படங்கள் தயாரிக்கப்படுவதை அவர்கள் பார்த்தனர். திரைப்பட இசை இயக்குநர்

''இராமாயணம், மகாபாரதம் போன்ற இந்தியப் புராணங்கள் நேப்பாள மக்களுக்கு மிக்க விருப்பமானவை. பரத நாட்டியம், கிராமிய நடனங்கள், பாட்டுக்களனைத்தும் எங்கள் நாட்டில் உண்டு'' என்று அவர் மேலும் விவரித்தார்.

பயணம் முடிவுற்று, குழுவினர் புறப்படுகையில், அதன் தலைவர், ''சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களான, கிராம வாசிகளின் இன்னல்கள் அகற்றி, அவர்களின் வாழ்விலே ஒளியை ஏற்றிவைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் அனைவருக்கும் எங்கள் வாழ்த்துக்கள்'' என்று கூறினார்; குழுவினர் பிரியா விடைபெற்றனர்.



நம் நாட்டில் கிராமங்கள் - நகரங்கள் என்ற வேறுபாடு நிலவுகிறது. நகரம் நாகரிகத்தின் சின்னம். கிராமம் பழமையின் இருப்பிடம். நகரம்-கல்வி, மருத்துவ, மின்சார வசதிகள் நிறைந்தது. கிராமம் - இவ்வசதிகள் எதுவுமே இல்லாதது. கிராமம்-வாழ வசதியில்லாதவர்களும், ஓய்வு பெற்றவர்களுமே வாழும் பகுதி. சுருங்கச் சொன்னால் கிராமத்தார் பட்டிக்காட்டார்கள். இந்த நிலை அமெரிக்காவில் கிடையாது.

அமெரிக்காவில் கிராமங்கள் இரு வகையின. ஒன்று ஒரு வேளாண்மைப் பண்ணையைச் சுற்றிய குடியிருப்பு. மற்றொன்று மக்கள் தொகை குறைந்த சிற்றூர். இவ்வூர்களில் ஓராயிரத்துக்குக் குறைவானவர்கள் வாழ்ந்தபோதிலும் இவற்றுக்குச் சிறு நகரம் (Small Town) என்று மரியாதையான பெயர் வழங்கப்படுகிறது.

சிறு நகரங்களில் நீக்ரோ பிரச்னை, இனக் கலகம், கார்களை நிறுத்த இடமில்லாமல் தவிப்பது என்ற பிரச்னைகள் கிடையா. இந்தச் சிற்றூர்களிலும் குழாய் வசதி, வடிகால் வசதி, வானொலி-தொலைக்காட்சி வாயிலாக உயர் படிப்புப் படிக்கும் வாய்ப்பு ஆகியவை உள்ளன. மேலும், இங்குத் தொழிற்சாலையின் புகையும், அளவுகடந்த மக்கள் நெருக்கமும், மூச்சுவிட இயலாத நிலையில் காலில் வெந்நீரை ஊற்றிக்கொண்டு அலையும் வாழ்க்கை வேகமும் இல்லை.

சிற்றூர்களில் பெரிய தேவாலயங்கள் இரா. ஆனால் எவ்வளவு சிறிய ஊரிலும், பண்ணையிலும் ஒரு 'சேபல்' இருக்கும். 'சேபல்' என்பது பூசை அறை. நம் நாட்டுப் பிள்ளையார் கோயில் போன்றது என்று வைத்துக் கொள்ளலாம். தொலைபேசி, பெட்ரோல்பங்கி, நகர மன்றம் யாவும் எங்கும் உள்ளன.

திரைப்பட மாளிகைகள், பொழுது போக்கு வாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள் - இவை சிற்றூர்களிலும் உள்ளன. கடைகளில் சில மணி நேரத்திற்கு முன்னர் அறிவித்தால் அடுத்த நகரத்திலிருந்து எப்பொருளையும் தருவித்துத் தந்துவிடுவார்கள்; நம் வீட்டிலேயே கொண்டு வந்து கொடுத்துவிடுவார்கள்.

தனி வங்கி (Bank) நடத்துவதற்குப் போதிய வாயப்பு இல்லாத சிறு நகரங்களுக்கு நடமாடும் வங்கி இருக்கிறது. இந்த வங்கி ஒரு நாளைக்குப் பத்துச் சிற்றூர்களில் ஒவ்வொரு மணிநேரம் வேலை செய்கிறது.

சிற்றூர்களில் வாழும் மக்கள் இரு வகையான செய்தித் தாட்களைப் படிக்கின்றனர். ஒன்று, நியூயார்க்கு அல்லது சிக்காகோவிலிருந்து வெளிவரும் தேசிய நாளிதழ். இதில்தான்

அமெரிக்காவின் நடப்பும் உலக நிகழ்ச்சிகளும் இருக்கும். மற்றொன்று, உள்ளூர் இதழ். உள்ளூர் நாளிதழ் ஒவ்வொரு 50 மைல் சுற்றளவிலும் வெளிவருகிறது. அவ்வட்டாரத்தைப் பற்றிய எல்லாச் செய்திகளும் அதில் கொடுக்கப்படுகிறது.

சிற்றூர் நூலகத்தில் அவ்வூரைப் பற்றிய ஒரு பகுதி இருக்கும். அதில் அவ்வூரைப் பற்றிய புள்ளி விவரங்கள், வரலாறு, அவ்வூரைப் பற்றி அரசு வெளியிட்ட முக்கிய ஆணைகள், அவ்வூரைப் பற்றி வெளிவந்த கட்டுரைகள், அவ்வூரைப் பற்றி எழுத்தாளர்களும் ஆராய்ச்சியாளர்களும் தங்கள் நூல்களில் எழுதிய குறிப்புக்கள் ஆகியவற்றைக் காணலாம்.

மருத்துவ வசதி:

இல்லினாய் இராச்சியத்தில் 700 மக்கள் மட்டும் வாழும் ஊர் ஹோப்டேல். ஹோப்டேல் மக்கள் 20 படுக்கைகளுடன் ஒரு மருத்துவ மனையை 1953இல் அமைத்தனர். 1960இல் இம் மருத்துவமனைக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டடம் கட்டியிருக்கின்றனர். எப்படி?

கட்டடத்தை ஈடுவைத்து, கடன் பத்திரங்கள் வெளியிட்டு, அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டுதான் கட்டடம் கட்டத் தொடங்கினர். காண்டிராக்டர்கள் இல்லாமல் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடனும் மேற்பார்வையிலும் கடைகால் வெட்டுவது முதல் கட்டடம் கட்டி முடிப்பது வரை எல்லா வேலைகளும் நடந்தன.

அறுவை மருத்துவத்துக்கு இரு அறைகள், பிள்ளைப் பேறு அறை, தாய் - சேய்கட்கு ஆறு அறைகள், சில சோதனைக் கூடங்கள், இரத்த வங்கி, எக்ஸ் கதிர்கள், யாவும் அந்த மருத்துவமனையில் உள்ளன. நர்சுகளுக்கு வீடுகளும் கட்டப்பட்டுள. பல் மருத்துவர், குழந்தை நோய் நிபுணர், போலியோ நோய் மேதை ஆகியோரும் இம் மருத்துவமனையில் பணிபுரிகின்றனர். மாதம் பத்து இலட்சம் ரூபாய் இந்த மருத்துவமனைக்குச் செலவு ஆகிறது. காசு கொடுத்துத்தான் மருத்துவம் செய்து கொள்ள வேண்டும். அயலூர் நோயாளிகள் ஏராளமாக வருகின்றனர். மருத்துவமனை கட்ட 750 டாலர் கடன் கொடுத்தவர்களுக்கு 20 ஆண்டு முடிந்ததும் 1000 டாலர் திருப்பிக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் ஆண்டுதோறும் 50 டாலர் மதிப்புள்ள மருத்துவ வசதியைப் பெற்றுக் கொள்ளலாம்; அல்லது அந்த உதவியைப் பிறருக்குக் கொடுக்கலாம்.

சிரணிப் படையினர், இந்த அமைப்பைப் பின்பற்றி, தமிழ் நாடெங்கும் மாவட்டத்துக்கொரு மருத்துவமனையை அமைக்க முன் வருவார்களாக!

வனவிலங்கு வார விழா, 1969 அக்டோபர் 1ஆம் தேதி தொடங்குகிறது. இதனையொட்டி, கிண்டியில் உள்ள மான் சோலை, செங்கற்பட்டு மாவட்டம் வேடந்தாங்கலில் உள்ள நீர்ப்பறவைகள் காப்பகம், நீலகிரி மாவட்டம் முதுமலை வன விலங்குகள் காப்பகம். திருநெல்வேலி மாவட்டத்தில் புலிகள் காப்பகம், தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யத்தில் உள்ள கோடிக்கரை வனவிலங்குக காப்பகம் ஆகியவற்றை அந்த வாரத்தில் பொது மக்கள் கட்டணமின்றிப் பார்க்கலாம்.



கடலோரம் இன்னுமென்ன உறக்கம் உன்னைக்
காணாமல் துடிக்கின்றோம்; தம்பி என்று
மடல்தீட்டிப் பேரன்பை வடித்துக் காட்டும்
மணிக்கரத்தை ஏன் முடக்கிக் கொண்டாய்? இங்கே
உடலோடு வாழ்ந்திருந்த உயிர்கள் எல்லாம்
உனதுயிரைத் தொடர்ந்துசென்ற அன்றே; நாங்கள்
நடமாடும் பிணக்கூட்டம் ஆனோம்; நாடும்
நரம்பற்ற வீணையெனக் கிடக்கு தண்ணா!

என்றும்நீ மறந்தறியாத் தமிழை; இந்த
ஏழுதிங்க ளாய்மறந்து விட்ட பின்னும்
ஒன்றுமறி யாதவன்போல் இருப்ப தென்ன
உள்ளபடி தமிழுணர்வு இருந்திருந்தால்
இன்றுவரை இன்னமுதத் தமிழில் ஓர்சொல்
இயம்பாமல் இருப்பாயா? 'உயிரின் மேலாய்
நின்றதெங்கள் தமிழ்' என்று முழக்கம் செய்த
நினைவெல்லாம் இழப்பாயா? என்ன நெஞ்சம்!

ஏன்மறந்து போனாய்நீ? என்று கேட்டால்
'இறந்துவிட்டேன்' என்கின்றாய் அண்ணா; பொய்!பொய்!!
வானிறந்து போயிற்றா? கடல்தான் இங்கே
வற்றியதும் உண்டோசொல்! வீசும் காற்று
தானிறந்து போயிற்றா? நெருப்புக் கோள்கள்
தரணியொடு சூனியமாய்ப் போன துண்டா?
ஏனிறந்து போகவில்லை? இவைகள் எல்லாம்
இருந்திடவும் நீமட்டும் இறந்த தென்ன?

மனிதன்தான் இறந்திடுவான்! நீயும் இங்கே
மனிதனென்றால் யார்நம்பக் கூடும்? அண்ணா
புனிதன்நீ! புத்தனுக்கும் புத்த னாகிப்
புதுப்பிறப்பு கொண்டவன்நீ! ஆட்சிப் பாரம்
தனைத்தாங்க முடியாமல் துறக்க நேர்தல்
தகவாகும்; உயிர்துறத்தல் தகவா? நெல்லிக்
கனிகூடச் சாவதுண்டா சாவைக் கொல்லும்
கனியதுவென் பார்எல்லாம்! புலவர் பொய்யா?

அறம்சாகு மா?சாகா தென்றால் நீயேன்
அணைந்துவிட்டாய் சாக்காட்டில்? அறம்நீ தானே!
புறம்பாடும் தமிழர்தம் பண்பாட் டிற்குப்
பொற்கலச மானவனே! திருக்கு றட்குத்
திறமான தெளிவுரையே! பொதிகை மென்பூந்
தென்றலென வந்தவனே! தும்பைப் பூவின்
திறங்கொண்ட நெஞ்சினனே! தமிழர் யார்க்கும்
நிழலாகி நின்றவனே நினக்கேன் சாவு?

சாவுக்கும் சாகாத புகழாய் உன்றன்
சரித்திரத்தை எழுதிவைத்தாய்! நாங்கள் தீட்டும்
காவியத்தை உனைப்பிரிந்து தினமும் சிந்தும்
கண்ணீரில் எழுதவைத்தாய்! எழில்மு கத்தின்
ஓவியத்தைத் தீட்டவொரு ஏடில் லாமல்
உயிரினிலே எழுதவைத்தாய்! தமிழாம் தெய்வப்
பாவையவள் தன்னிலையைப் புலம்பு கின்ற
பாட்டினிலே நாள்தோறும் எழுத வைத்தாய்!

சிரித்தமுகம் தனைமறைத்துக் கொண்டே ஆழ்ந்த
சிந்தனையில் எமைமறக்க லாமா? வாழும்
சரித்திரத்தில் மணப்பவனே நீயு றங்கும்
சந்தனத்தில் என்னமணம்? அதிற்போய் வீழ்ந்தாய்!
எரித்துயரில் துடிக்கின்றோம்; காற்று வாங்கும்
ஏகாந்தம் உனக்கென்ன? தமிழர் எல்லாம்
தரித்திரர்கள் எனும்நிலையை மாற்ற எண்ணித்
தங்கமுனைப் புதைத்தனரோ! புதையல் காண!

தமிழ் முழங்கும் திருவாயின் அருவிப் பேச்சைத்
தடைப்படுத்தி வைத்தவர்யார்? தடைகள் யாவும்
அமைதியுறத் தகர்ப்பாயே; இன்றேன் மீளா
அமைதியிலே கிடக்கின்றாய்? விழியி ரண்டை
இமைதழுவி உறங்காமல்; நாடு நாடென்
றென்னாளும் உழைத்தவன்நீ! ஓய்வெ டுக்கச்
சமயமிது தானா?சொல்! கரைநெ ருங்கும்
சமயத்தில் கலம்கவிழ்ந்து போக லாமா?

அழுகின்ற வீணைகளே! சுவைஒன் பானில்
அவலந்தான் இனிமிச்சம்! அழுங்கள்! கண்ணில்
விழுகின்ற அருவிகளே தொடர்ந்து நீங்கள்
விழுமின்கள்! விழும்நேரம் 'அண்ணா' என்றே
எழுகின்ற அழுகையொலி அதனின் சந்தம்
என்கவிதைக் காகட்டும்! நானும் இங்கே
அழுகின்றேன்! அழுதழுது தேம்பிக் கொண்டே
ஆயிரமாய்க் கவிதைகளைப் படைப்பேன் அன்றோ?

புலவர் புலமைப்பித்தன்

சோவியத் தோட்டக் கலை

சோவியத் நாட்டில் தோட்டக்கலை மிகவும் பிரபலமானது. பல நிறுவனங்களிலும் தாவர இயல் தோட்டங்களிலும் உலக மலரினங்களைப்பற்றிய ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

அந் நாட்டின் பல நகரங்களில் தாவர இயல் தோட்டங்கள் அநேகம் உள்ளன. மாஸ்கோவில் உள்ள சோவியத் விஞ்ஞானப் பேரவையின் மத்தியத் தாவர இயல் தோட்டங்களும் கிரிமியாவில் உள்ள உலகப் புகழ் பெற்ற நிகித்ஸ்கி தாவர இயல் தோட்டங்களும் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கனவாகும்.

அலங்காரத் தோட்டங்கள் நிறுவுவதில் அரசாங்கப் பயிற்சி நிலையங்கள் பெரும் பணி ஆற்றியுள்ளன. அவை கிடைத்தற்கரியதும் மதிப்புள்ளதுமான தாவரங்களைச் சேகரிக்கின்றன; புதிய வகைகளைத் தோற்றுவித்து, அவற்றைப் பரவச் செய்கின்றன.

இயற்கையை விரும்பும் பல இளைஞர்கள் தோட்டக் கலையில் நல்ல தேர்ச்சி பெற்றுள்ளனர். பெரும்பாலான பள்ளிச் சிறுவர்கள், அழகான மலர்களை உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாது, தேர்வு முறையிலும், அயல் மகரந்தச் சேர்க்கை முறையிலும் பல பரிசோதனைகளைக் கையாளுகின்றனர். மலர்த் தோட்டக் கலையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் பல பொழுது போக்குப் பூங்காக்களும் அடங்கும்.

நர்ஸரிகளிலும், தனி ஆய்வு அறைகளிலும் வளர்க்கப்படும் தாவரங்கள் பெரும் அளவில் தெருக்களையும், சாலைகளையும், சதுக்கங்களையும், வீடுகளையும் அழகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

ஆலைகளிலும், தொழில் உற்பத்தி நிறுவனங்களிலும்கூட மலர்கள் புகுந்துள்ளன. மாஸ்கோவிலுள்ள பீரீஸர் ஆலையின் தோட்டக்காரரான பேவல் பத்ரிகேயேவ் என்பவர் ஒவ்வொரு கோடைக்காலத்திலும் 5,000 மலர்ச் செண்டுகளைக் கோத்து எந்திரக் கருவிகளைச் சுற்றியும், ஆங்காங்கே இடைவெளிப் பகுதிகளிலும் பாதைகளிலும் அலங்காரமாக வைக்கிறார். பல ஆண்டுகளாகவே, அநேக தொழில் நிறுவனங்களும் தங்களுக்குச் சொந்தமான செடி வளர்ப்பு நிலையங்களைப் பராமரித்து வருகின்றன.

தோட்டக்கலை வளர்ச்சியில் மக்கள் தொகையினர் கணிசமான பங்கு பெறுகின்றனர். மாஸ்கோவைச் சுற்றி மட்டுமே ஏறக்குறைய 15,000 ஹெக்டார் நிலப்பரப்பில்கூட்டுறவுத் தோட்டங்கள். ஓய்வு நேரத் தோட்டக்கலை அநுதாபிகளால் நிர்வகிக்கப்படுகின்றன அகில—ருசிய பராமரிப்புக் கழகத்தின் மாஸ்கோ கிளையின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை 10,00,000 க்கும் அதிகமாகும். இச்சங்கத்தின் நிதியைக் கொண்டு இதன் அங்கத்தினர்களின் மூலம் மாஸ்கோவில் ஏறக்குறைய 1கோடியே 65இலட்சம் மலர்ச்செடிகள் பயிரிடப்பட்டன. இது பொது மக்களின் உபயோகத்திற்காக, அரசாங்க நிலையங்கள் பயிரிடப்படும் மலர்ச் செடிகளைவிடப் பன்மடங்கு அதிகமாகும்.

இயற்கைப் பராமரிப்புக் கழகத்தின் பணி காரணமாக, சென்ற ஆண்டு மாஸ்கோவில் உள்ள 1,67,000 குடியிருப்புகள் மலர்களாலும், அலங்காரக் கொடிகளாலும் அழகுபடுத்தப்பட்டுள்ளன.

இச்சங்கத்தின் மாஸ்கோ கிளை ஏறக்குறைய 4,000 குழுக்களுக்குப் பயிற்சியும், கருத்துரைகளும் தருகின்றது.

அவ்வப்போது, சிறப்புக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. சென்ற ஆண்டு மாஸ்கோவில் இவ்விதமான 173 காட்சிகள் நடைபெற்றுள்ளன.

மாஸ்கோவில் தோட்டக் கலை

ஆகஸ்ட் மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமையன்று மலர் விழா கொண்டாடப் படுகிறது. சிறந்த மலருக்கும் சிறந்த பணிக்கும், சிறந்த முறையில் பயிரிட்டதற்கும் நற்சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

தேர்ச்சி பெற்ற தோட்டக்காரர் மரியாகுபார் ''தலைநகரில் மலர்ச் செடிகளை நடும் பணியில் மட்டுமே நாங்கள் ஈடுபட்டிராமல், புதிய வகைகளைத் தேர்ந்தெடுக்கும் ஆராய்ச்சியையும் நடத்துகிறோம். 'கிளாடியோலா', 'டாலியா' போன்ற தாவரங்களின் புதிய இனங்களை, எங்கள் குழு உறுப்பினர்கள் தோற்றுவித்துள்ளனர்'' என்கிறார்.

''சில ஓய்வு நேரத் தோட்டக் கலைஞர்கள் மலர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஆர்வம் செலுத்துகின்றனர். தொடர்ந்து பூத்துக் கொண்டிருக்கும் தோட்டத்தை உருவாக்க நாங்கள் மிகவும் ஆர்வமுடன் இருக்கிறோம். வேனிற் காலம் முதல் இலையுதிர் காலம்வரை அடுத்தடுத்துத் தொடர்ந்து பூத்துக் கொண்டே இருக்கும் 6,000 வகைச் செடிகள் தற்போது உள்ளன. ஓர் ஓய்வு நேரத் தோட்டக் கலைஞர் அத்தனைச் செடிகளையும் வைத்திருப்பதுசிரமமானது. ஆனால், ஒரு தனிப்பட்ட தோட்டத்தில் நூற்றுக்கணக்கான, பலவகைச் செடிகளை சேகரிப்பது ஒருசாதனையே. உதாரணமாக அலெக்ஸி மார்க்கோல் என்பவருக்கு, மாஸ்கோவின் அருகிலுள்ள அவருடைய தோட்டத்தில் 600 வகைத் தாவரங்களைச் சேகரித்ததற்காக ரஷ்ய சமஷ்டிக் குடியரசின் புகழ் பெற்ற விவசாயப் பொருளாதார நிபுணர் என்னும் கௌரவ விருது வழங்கங்பட்டுள்ளது.'' என்றார் அவர்.

படியாதோனே!

கலைக்கூத்தன்

அறியானை அறிந்தோனை அறிஞன் தன்னை
ஆன்றோனைச் சான்றோனை அமைச்சு நீதி
நெறியானை மன்னவனை நிறைகோல் தூக்கும்
நெஞ்சானை வாணிகனை நட்பின் மேன்மை
தறியானை தீயோனைத் தனைத்தா னுண்டு
தன்மானங் காவானைத் தகுந்த கொள்கைக்
குறியானை உழுவோனை குடிசெய் வோனைக்
குறள்காட்டும் படியாதோன் படியா தோனே!

உண்டானை உண்டுண்டு உதித்த வாழ்வு
உலகில்நிலை யாமையென அறியான் நேர்மை
கொண்டானை நல்லவனைக் குறைத்து ஏசிக்
குலஞ்சாதி மதம்பார்த்துக் குலவிப் பொய்மை
விண்டானை நாணயத்தை விலைக்கு விற்கும்
வீணனைக் காமுகனை விதந்து போற்றித்
திண்டாடித் திரிவோனைத் திருத்தி வாழத்
திருக்குறளைப் படியாதோன் படியா தோனே!

இல்லானை இரப்போனை இல்வாழ் வோனை
இராப்பகலாய் வேடமிட்டு ஏய்ப்போன் தன்னை
பொல்லானை ஈயானைப் புதைத்து வைத்துப்
பொழுதெல்லாம் காப்பானைப் புகழுக் காக
நல்லானாய் நடிப்போனை நாகா வாமல்
நல்லோர்கள் அவைதனிலே இழிவேற் பானை
வல்லானைக் கல்லானை வழிகெட் டோனை
வள்ளுவத்தில் படியாதோன் படியா தோனே!

அண்ணா போன்று வளர்க! வாழ்க!!

கனியே! மணியே!! கண்ணா! கண்ணா!!
கண்ணின் ஒளியே! கண்ணா! கண்ணா!!
கேட்பதைக் கொடுக்க இயலா நிலையில்
வேட்கை போக்கி மகிழா நிலையில்
தாய்நான் இருக்கக் காரணம் எதுவென
சேய்நீ! அறிவாய் ஒருநாள் கண்ணா!
இன்று நாளை அடுத்து அடுத்து
உனக்கு நீயே உழைத்து உழைத்து
உயர்ந்திடும் நாள்வரை இல்லை என்றே
அயரா துழைத்தும் கூறும் என்னை
சினந்து கொள்ளல் கூடாது கண்ணா!
மனதில் வைத்திட வேண்டும் கண்ணா!

இருப்பதை உண்டு பள்ளி செல்க!
விருப்பம் நிறைந்த நினைவே கொள்க!
ஆர்வம் பொங்கப் பாடம் கற்க!
யாரிடம் என்றும் அன்பே கொள்க!
வகுப்பில் வெளியே ஒற்றுமை பேணி
புகழ்தரும் கல்வியில் வெற்றிகள் தொடர்ந்து
பெற்றுப் பெற்று உயர்தல் வேண்டும்!
பெற்ற நானே மகிழ்தல் வேண்டும்!
முதலுயிர் தோன்றிய இடம்நம் தமிழகம்!
முதன்முதல் மலர்ந்த மொழிநம் தமிழ்மொழி!

முறையாய் வளர்ந்து இலக்கணம் கண்டு
நிறைவில் இன்றும் ஈடிணை அற்று
இருக்கும் மொழிதான் கண்ணு கண்ணு
அரிய சங்கம் மூன்றினைக் கண்ணு
கண்ட தமிழ்மொழி கண்ணு! கண்ணு!!
வென்ற பரம்பரை தாய்மொழி தெளிக!
இறவா நூல்கள் எத்தனை எத்தனை
இருந்தார் தந்தார் தமிழில் கண்ணு!
குறையே சொல்வார் உலகில் கண்ணு
குறள் நூல் கண்டார்; கற்றூர் எல்லாம்
நிறைவே கண்டார் நெஞ்சம் திறந்தே
உரைத்தார் உயர்ந்த நூலெனக் கண்ணு!
அரசியல் வாழ்விலும் உலகில் கண்ணு
அரசரின் நெறியில் அணுவும் பிறழா
சேரன், சோழன், பாண்டிய மரபோர்
வீர வெற்றிகள் குன்றெனக் குவித்தே
முதன்மை பெற்றூர் கண்ணு! கண்ணு!!
புதுமை உலவும் இன்றும் விளங்க
மாளா மாண்பைத் தந்தார் கண்ணு!
நாளும் மனதில் நினைவாய்! நினைவாய்!!
சந்திரன் தன்னில் இறங்கிக் கண்ணு
விந்தை புரியும் இன்றும் மக்கள்
போற்றிப் புகழும் இல்லற நெறிகள்
நேற்று என்னும் அன்றே கண்டார்!
எடுத்துக் கூறின் வளரும் கண்ணு!
படித்திடப் படித்திட நீயே அறிவாய்!
எண்ணில் எண்ணில் கண்ணு கண்ணு
எண்ணில் அடங்காச் சிறப்புகள் நிலைத்த
மண்ணில் பிறந்தாய் மறத்தல் வேண்டாம்!
பண்புடன் வளர்ந்து வாழ்வில் நீயும்
சிறந்ததைச் செய்து சீர்பெற வேண்டும்!
இறவாப் பெரியோன் ஆதல் வேண்டும்!
நான்தொழும் தெய்வம் உனது தந்தை
தேன்நிகர் சொல்லால் உரைத்தவிக் கருத்தை
முடிந்த வரையில் கண்ணு கண்ணு
படித்தவள் போன்று உரைத்தேன் கேட்டாய்!
தெரிந்த தொழிலாம் பாத்திரம் தேய்த்து
அறிந்த அறவோர் உதவிகள் பெற்றே
வாழ்க்கை ஓடம் ஓட்டு கின்றேன்!
வாழ்வில் உயர பள்ளி செல்லென
அனுப்பு கின்றேன் கண்ணு! கண்ணு!
அண்ணு போன்று வளர்க, வாழ்க!

கவிஞர்
நாமக்கல் வரதராசன்

முறையாக மொழிபெயர்ப்புகள்

கோ. முத்துப்பிள்ளை, பி.ஏ.,

ஆட்சிமொழி வகுப்புகளை நடத்தும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அரசு அலுவலர்களுக்காக இவ் வகுப்புகள் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தன. அலுவலகத்தில் கோப்புகளில் தமிழில் எழுதும் முறையைப் பற்றி விளக்கிக் கொண்டிருந்தேன். வகுப்பு முடியும் நேரத்தில் ஒரு நண்பர் ஆசிரியராகி எனக்குத் தேர்வு நடத்தத் தொடங்கிவிட்டார். Slow and Steady Wins the Race என்னும் ஆங்கிலப் பழமொழிக்கு மொழிபெயர்ப்பு என்னவென்று அவர் என்னைக் கேட்டார். சிறிது நேரம் நான் எண்ணிப் பார்த்துவிட்டு, 'இதைப்பற்றி நாம் அடுத்த வகுப்பில் பார்க்கலாம்' என்று சொல்லித் தப்பித்துக்கொண்டேன். அதன்பிறகு பலமுறை முயன்றும் சரியான மொழிபெயர்ப்பு அமையவில்லை. எனக்குத் தெரிந்த புலவர்களையெல்லாம் கேட்டுப் பார்த்தேன். அவர் வழங்கிய மொழிபெயர்ப்புகளும் நான் செய்து பார்த்த மொழி பெயர்ப்பையே ஒத்திருந்தன! 'இது மிகவும் எளிதாயிற்றே. இதையா மொழிபெயர்க்க இயலவில்லை' என்று சிலர் என்னிடம் சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தனர்! ''அடுத்த வகுப்பு'' விரைந்து வந்து கொண்டிருந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தபோது, பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் என் அறைக்கு வந்தார். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததை நினைத்து நான் அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய துயரை நான் அவரிடம் எடுத்துரைத்தேன். அவரிடம் நான் ஆங்கிலப் பழமொழியைக் கூறி அதற்குரிய மொழிபெயர்ப்பை வேண்டி நின்றேன். பன்மொழிப் புலவர் சிறிதும் தயங்காமல், அமைதியாக, புன்னகை பூத்த முகத்துடன் ''பையப் பையத் தின்றால் பனையையும் தின்னலாம்'' என்று இனிமையாக எடுத்துக் கூறினர். என் உடல் புல்லரித்தது. 'தமிழன் பெருஞ் செல்வத்திற்கு உரியவன். அவனுடைய செல்வத்தை அவனே அறிவதில்லை. முன்னரே உள்ள எழில்மிகு தமிழ்ப் பழமொழியை அறிந்துகொள்ளும் வாய்ப்பு இதுவரை கிட்டவில்லையே' என்றெல்லாம் எண்ணி நான் கனவுலகில் கலந்துவிட்டேன். கனவு தெளிந்ததும் பன்மொழிப் புலவருக்கு நான் கூறிய நன்றிக்கு அளவேயில்லை. வெற்றி நடைபோட்டு வகுப்பிற்குச் சென்றேன்; எல்லாரையும் வியப்புக் கடலில் ஆழ்த்தினேன். சில நாட்கள் சுழித்து என்னுடைய அறைக்கு இன்னொரு புலவர் வந்தார். அவரிடம் இம் மொழி பெயர்ப்புக் கதையை எடுத்துக் கூறினேன். சற்றும் எதிர்பாராத வகையில், 'மொழிபெயர்ப்பு பொருத்தமாகவில்லை'யென அவர் கூறத் தொடங்கினர். 'பையப் பைய' என்றால் "Slow and Slow" என்று ஆகுமே யொழிய "Slow and Steady" என்று எப்படி ஆகும்? என்று அவர் கேட்டார். 'நேருக்கு நேர் மொழி பெயர்ப்பாக ஆக்கக்கூடாது; கருத்தைத்தான் பார்க்கவேண்டும்' என்று நான் கூறினேன். அவர் கேட்கவில்லை.

நான் மறுபடியும் அவருக்குச் சொன்னேன். ''முதலில் வரும் 'Slow' என்னும் சொல்லுக்குப் 'பைய' என்னும் பொருளும், இரண்டாவது வரும் 'பைய' என்னும் சொல்லுக்கு 'Steady' என்னும் பொருளும் ஏற்படும். 'Slow, Slow' என்று இருமுறை கூறினல் 'நிதான

மாக' என்னும் பொருள் ஏற்படுவதை எளிதில் காணலாமே'' என்று நான் விளக்கினேன்.... 'அடுக்கிவரும் சொற்களில் ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு பொருள் ஏற்படுவதைத் திருவாசகம் போன்ற பழைய இலக்கிய நூல்களில் பரக்கக் காணலாமே'' எனக் கூறி முடித்தேன். புலவர் ஓரளவு அமைதி பெற்றார். பொருட் சிறப்பை நன்கு உணர்ந்துங்கூட 'புலவர் காய்ச்சல்' அவரை ஆட்டி வைத்தது. ஆங்கிலக் கருத்தை அழகு தமிழில் அமைக்க முடியாதென அஞ்சுவோர் இந்த அரிய தமிழ்ப் பழமொழியை எண்ணி எண்ணி மகிழலாம்.

ஒரு சமயம் அரசு அலுவலகம் ஒன்றிற்குச் சென்று தமிழில் அவர்கள் எழுதுவதை ஆய்வு செய்யும் வாய்ப்புக் கிட்டியது. அவ்வலுவலகத்தில் தமிழில் எழுதப்பெற்ற கோப்புகள் இல்லையென்றே சொல்லலாம். அலுவலரும் உதவியாளர்களும் ஆர்வமிருப்பதாகவும் ஆயினும் தமிழில் எழுத முடியவில்லையெனவும் தெரிவித்தார்கள். ஆர்வமிருந்தால் முடியவில்லை என்னும் சொல் பிறக்கவே முடியாதல்லவா? நேற்றுத் தோன்றிய மொழிக்காரர்களெல்லாம், முடியுமென்று சொல்லும் போது, கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே தோன்றிய மொழியிலா, முடியாது? முடியவில்லையென்பதற்கு அவர்கள் ஓர் எடுத்துக் காட்டைக் கொடுத்தார்கள். அரசு அலுவலகங்களிலே பெரிய பதிவேடுகள் இருக்கும். வெளியிலிருந்து வரும் கடிதங்களைப்பற்றிய செய்திகளை அவற்றில் பதிவு செய்வார்கள் பொருள் சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கும். "Livestock Farm-Mortality of Livestock" என்பதை எவ்வாறு மொழி பெயர்ப்பதென்று கேட்டார்கள். இதில் "Mortality" என்னும் சொல்தான் முதன்மையானது. இது சாவு எண்ணிக்கையைக் குறிக்குமென நான் சொன்னேன். அவர்கள் ஏற்கவில்லை. ''பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள ஆங்கில - தமிழ் அகராதி உங்களிடம் இருக்கிறதா?'' என்று நான் வினவினேன். புத்தம் புதிய அகராதியைக் கொண்டு வந்தார்கள். அதை ஒரு முறைகூட அவர்கள் பிரித்துப் பார்த்ததில்லை. ''இறப்புக் கணக்கு'' என்னும் அழகிய மொழிபெயர்ப்பை அகராதியிலிருந்து தேர்ந்தெடுத்தோம்

Livestock Farm	=	கால்நடைப் பண்ணை
Mortality of Livestock	=	கால்நடைகளின் இறப்புக் கணக்கு

முயற்சி செய்யாமலே, முடியவில்லையெனக் கூறும் வழக்கத்திற்கு இது தக்கதொரு சான்றாக அமைந்துள்ளது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கருத்தரங்கு 1968ஆம் ஆண்டு சென்னைத் திருநகரில் நடைபெற்றதல்லவா? கருத்தரங்கில் கலந்துகொண்ட இலங்கைப் பேராளர் (Ceylon Representative) ஒருவர் மொழி பெயர்ப்பில் ஏற்படும் இடையூறுகள் குறித்துப் பேசினார். ஒரு சிலர் சொல்லிவரும் செய்தியை அவரும் சொன்னார்: "Plan, Scheme, Project, Programme" என்னும் நான்கு சொற்கள் ஆங்கிலத்தில் அழகாக அமைந்துள்ளன. ஆயினும் இதற்குத் தமிழில் ''திட்டம்'' என்னும் ஒரே ஒரு சொல்தான் உள்ளது. இதனால் மொழிபெயர்க்கும் வேலை மிகவும் கடினமாகிறது'' என்னும் கருத்துக்களை அவர் உதிர்த்தார். பல நூறாயிரம் சொற்களையுடைய தமிழ் மொழியிலா சொற்களில்லை? அன்பருக்கு ஆர்வமில்லை, முயற்சியும் இல்லை என்றுதான் நாம் எண்ண வேண்டும். ஆங்கிலச் சொற்களுக்குப் பொருள் விளங்கிவிட்டால், தமிழ்ச் சொற்கள் தானே ஓடிவரும். தொடக்கக் காலத்தில் தொட்டதற்கெல்லாம் 'திட்டம்' என்னும் சொல்லைப் பயன்படுத்திப் பழகிவிட்டோம். அதை மட்டும்தான் ஒரு குறையாகக் கொள்ளலாம். இப்பொழுது சிறிது சிந்திப்போம்.

Project	=	உருவாக்கம்
Plan	=	ஏற்பாடு
Scheme	=	திட்டம்
Programme	=	செயலாக்கம்

''Scheme'' என்னும் சொல்லுக்குத் திட்டம் என்னும் மொழிபெயர்ப்பு நீண்ட நாட்களாகப் பழகிவிட்டது. எஞ்சிய மூன்று சொற்களுக்கும்

புதிய மொழிபெயர்ப்புகளை மேலே காணலாம். இன்னும் எத்தனை ஆங்கிலச் சொற்கள் வந்தாலும் அவற்றிற்கெல்லாம் எத்தனையோ தமிழ்ச் சொற்கள் முன் நிற்கின்றன. ஆங்கிலத்தைத் தோற்கடிக்கும் அழகுச் சொற்கள் உள்ளன. உயர் அதிகாரிகளின் கூட்டம் ஒன்று ஒரு நாள் நடைபெற்றது. ''Positive, Negative'' என்னும் ஆங்கிலச் சொற்களைத் தமிழில் எப்படி மொழிபெயர்ப்பது? என்று ஓர் அதிகாரி வினவினார். தெரிந்த மொழிபெயர்ப்புகளை எடுத்துச் சொல்ல அங்கிருந்த பிற அதிகாரிகளுக்குத் துணிவில்லை போலும்; ஓர் அதிகாரி இன்னோர் அதிகாரியின் முகத்தைப் பார்த்தார். யாரும் வாய் திறக்கவில்லை; ''உடன்பாடு, எதிர்மறை என்னும் சொற்கள் இருக்கின்றனவே'' என்று நான் சொன்னேன். மூடிய வாய்கள் திறந்துகொண்டன; ''அதெல்லாம் இலக்கணத்தில் வரும்'' என்றார் ஒருவர்! மற்றவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். நான் விடவில்லை. ''உண்மை'', ''இன்மை'' என்று சொல்லலாமே என்றேன். ''அஃதெவ்வாறு முடியும், உண்மை என்றால் 'Truth' என்றல்லவோ ஆகும்?'' என்றொருவர் திருவாய் மலர்ந்தருளினார்! 'இன்மை' என்னும் இன்னொரு சொல்லிற்கு 'Lie' என்று பொருள் சொல்வார் போலத் தோன்றியது! உடனே நான் திருவாசகத்தை நினைவூட்டினேன்.

''வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!''

என்னும் வாசகத்தில் வரும் 'உண்மை, இன்மை' என்னும் சொற்களை ஓர்ந்து பார்க்குமாறு வேண்டினேன்! அவர்கள் மனம் ஏனோ உருகவில்லை! பிறகு சந்தர்ப்பம் நோக்கிப் பொருள் கொள்ள வேண்டுமென நான் வாதாடினேன்! "Positive Current'' என்றால் ''நேர் மின் ஆற்றல்'' என்றும் ''Negative Current'' என்றால் ''எதிர் மின் ஆற்றல்'' என்றும் நாம் கூறும் வழக்கத்தை எடுத்துச் சொன்னேன். இதன் பின்னர் அவர்கள் மோன விரதத்தை மேற்கொண்டனர்.

Positive	=	உளவாம் தன்மை
Negative	=	இலவாம் தன்மை

என அமைத்துக் கொள்ளலாம். காலப்போக்கில் மேலும் அழகாக இவை அமையும்.

"Secret" என்னும் சொல்லிற்கு ''இரகசியம்'' என்னும் மொழிபெயர்ப்பைப் பயன்படுத்துகிறோம். "Top Secret" என்றால் தமிழில் எப்படிச் சொல்ல முடியுமென ஒரு நண்பர் வினவினார்! கேட்பவர்கள் திகைத்துப் போகவேண்டுமென்பது அவருடைய அவா! சிற்றூர்களிலே ''மறைபொருள்'' என்பார்கள். இதுதான் இரகசியம் என்பது. ''பூட்டகம்'' என்றும் சொல்வார்கள். பூட்டிய அகத்திலே உள்ளவற்றைப் பார்க்க இயலாதல்லவா? அலுவலகங்களிலே இரகசியமான கோப்புகளைப் பெட்டியிலே பூட்டி வைப்பார்கள், இது ஒரு ''பூட்டகம்'' தானே. இப் பூட்டகத்தை "Top Secret" எனக் கொண்டால் என்ன?

Secret	=	மறைபொருள்
Top Secret	=	பூட்டகம்

நண்பர்கள் எண்ணிப்பார்க்கவேண்டுகின்றேன்.

காலத்தைப் போக்காமல் உடனுக்குடன் வேலைகளைக் கவனித்து வருபவரை "Prompt" ஆக வேலை செய்கிறார் என்று சொல்வது வழக்கம். இதன் பெயர்ச் சொல் "Promptness" என்பதாகும். இதனை மொழிபெயர்க்க முடியாதெனப் பல நண்பர்கள் பந்தயம் கட்டிவிட்டார்கள்! அகராதியைப் புரட்டிப் பார்த்தால் உதவி எதுவும் கிடைக்கவில்லை. இத்தகைய சமயங்களில் நம் சொந்த அறிவையும் இலக்கியத்தின் துணையையும் நாடவேண்டும். ''வினை செயல் வகை'' என்னுமோர் அதிகாரத்தை வள்ளுவர் வகுத்துள்ளார். விரைவாக வினையைச் செய்யவேண்டுமென அவர் வலியுறுத்துகின்றார். இப்பொழுது மொழிபெயர்ப்பு எளிதில் ஓடிவருதைப் பார்க்கலாம். விரைந்து வினை செயல்தான், "Promptness" ஆகும்

என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? "Initiative" என்பது இன்னொரு சொல்! முயற்சியில்லார்க்கு இடையூற்றினை விளக்கும் சொல்! அகராதிகள் அரை குறையாகவே பொருளை விளக்குகின்றன. தன் முயற்சி உள்ளவர்கள் திறமையாக இதற்கொரு மொழிபெயர்ப்பினைக் கண்டுபிடித்து விடுவார்கள். தன் முயற்சித் திறன்தான் "Initiative" எனத் தெளிவாதல் அறிக.

Promptness = விரைந்து வினை செயல்

Initiative = தன் முயற்சித் திறன்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டைப்பற்றி மேலே இக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். ஆராய்ச்சி உரைகள் ஏற்பாடு செய்வதற்கு ஒரு குழுவும், பொதுமக்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய இன்னொரு குழுவும் பணியாற்றின. பின்னைய குழுவிற்குப் ''புறப்பணிக் குழு'' என்று பெயர் சூட்டப்பெற்றது. ஆங்கிலத்தில் சூட்டப்பெற்ற பெயர் நினைவில் இல்லை. எனினும் இத்தமிழ்ப் பெயரைவிட ஆங்கிலத்தில் அமைக்க இயலாதென்பதைச் சொல்லத் தேவையில்லை! "St. Thomas Mount" வரையில் செல்லுகின்ற பெரிய பாட்டைக்கு "Mount Road" என்னும் பெயர் அமைந்துள்ளது. ''மவுண்டு ரோடு மகாவிஷ்ணு'' என்று குத்தூசி குருசாமி எழுதிக் கொண்டிருந்த செய்தி நம் மனத்தில் பசுமையாக உள்ளது. உலகத் தமிழ் மாநாட்டின் போது ''மலைச் சாலை'' என்னும் அழகிய பெயர் உருவெடுத்தது. பறங்கி மலைக்குச் செல்லும் சாலைக்கு 'மலைச் சாலை' என்னும் பெயர் பொருத்தமானதல்லவா? "Island Ground" என்னும் பெயரை நாம் அறிவோம். இதனை ''ஐலண்டு கிரவுண்டு'' என்று முதலில் எழுதினர்கள். அதன் பிறகு 'ஐலண்டு மைதானம்' என்று எழுதத் தொடங்கினர்கள். "Island Ground என்னும் ஆங்கிலப் பெயர் எத்தனை அழகியதாகவுள்ளது. ஐலண்டு கிரவுண்டு என்றும் ஐலண்டு மைதானம் என்றும் தமிழில் கொலை செய்கின்றார்களே'' என்று ஆங்கில ஆர்வலர் அரற்றிக் கொண்டிருந்தார்கள்! இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு ''தீவுத் திடல்'' என்னும் ஒளி முத்தினை உதிர்த்துவிட்டது. மோனை நயமும் ஓசை நயமும் அமைந்துள்ள இத் தொடரைத் தோற்கடிக்க வல்லார் யார்?

ஒரு சில நிகழ்ச்சிகளையே நான் இங்கு எடுத்துக் காட்டியுள்ளேன். ''முடியாது'' என்னும் சொல் எந்த மொழியின் அகராதியில் இருந்தாலும் நமக்குக் கவலையில்லை! தமிழ் அகராதியில் மட்டும் இச் சொல் தேவையில்லை.

சத்துணவுத் திட்டம் செயற்படும் வட்டாரங்கள் :

1. ஆரணி (வடஆர்க்காடு மாவட்டம்)
2. பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்)
3. கோவில்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
4. கிருஷ்ணகிரி (தர்மபுரி மாவட்டம்)
5. பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
6. திருவிடைமருதூர் (தஞ்சாவூர் மாவட்டம்)
7. டி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்)
8. ஆத்தூர் (மதுரை மாவட்டம்)
9. பூவிருந்தவல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)
10. சாத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்)
11. பெரியநாயக்கன்பாளையம் (கோயம்புத்தூர் மாவட்டம்)
12. அகஸ்தீஸ்வரம் (கன்னியாகுமரி மாவட்டம்)
13. எருமைப்பட்டி (சேலம் மாவட்டம்)
14. திருவரங்குளம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

வள்ளுவர் கண்ட குடிமகன்

தன்னிச்சையாகக் காட்டில் வாழும் உயிர்களைப் போலல்லாமல், பலர் கூடி, குடிகள் அமைத்துக் குடும்பங்கள் வைத்துச் சமுதாயம் ஏற்படுத்தி, ஊர்கள் உருவாக்கி, நாடுகள் பெருக்கி, அவைகளை ஆள அரசர்கள் ஏற்படுத்தியிருந்த காலம் திருவள்ளுவர் காலம். திருவள்ளுவர் காலத்தில் அரசர்களே நாட்டினை ஆண்டு காத்தார்கள். அது முடியாட்சிக் காலம். நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் குடிமகன் எனப்பட்டார். குடிகளின் நல்வாழ்வைக் கருதுவதே அன்று அரசனுடைய தலையாய கடமை. ஆகவே நாட்டுக்கு அடிப்படை குடிமகன். ஒரு நாட்டின் பெருமை, உயர்வு, இவையெல்லாம் அந் நாட்டின் இயற்கை வளத்தோடு, அந் நாட்டில் வாழும் குடிகளின் வாழ்க்கையையும் பொறுத்தே அமையும். நாட்டின் பெருமை, நாட்டை ஆண்டிடும் அரசனின் புகழ் இவைகளைப் போற்றிப் பேணுதல் குடிகளின் பொறுப்பு. ஒவ்வொரு குடிமகனின் பொறுப்பும் ஆகும். இந்த உறவினைப்பற்றிப் பின்னியிருப்பவையே ஒரு குடிமகனின் உரிமைகள், கடமைகள், பொறுப்புகள், பேறுகள். இவைகளைப்பற்றித் திருவள்ளுவர் வெகு அழகாக இனிய குறள்களில் சித்தரித்துள்ளார்.

''தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு''

என்பது பொய்யாமொழி. குறையாத விளைபொருள்களும், தக்க அறிஞரும், கேடில்லாச் செல்வம் உடையவரும் கூடிப் பொருந்தியுள்ள நாடே நாடெனப்படுவது. ஆகவே, ஒரு நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் தன் நாட்டில் குறையாத விளைபொருள்களைப் பெருக்கவேண்டும். தானும் தக்க அறிஞனாக இருக்கவேண்டும். இவைகளெல்லாம் செய்வதன் பயனாகக் கேடில் செல்வ முடையவர்கள் நாட்டில் எங்கணும் இருக்கச் செய்யவேண்டும். இவைகளே அவனுக்குக் குறிக்கோள்கள் எனில் அவைகளை அடைய, தன்னுடைய கடமைகள் எவை, உரிமைகள் எவை, என்றுணர்ந்து செயல்பட்டு வாழ்வானேயாகில் அவனுக்கும் வாழ்கின்ற நாட்டிற்கும் பெருமை தேடியவனாவான்.

அவனுடைய வாழ்வும் பயனுள்ளதாக அமைந்துவிடும்.

குடிமகன், தான் பிறந்தது முதல் இந்தப் பண்புகளைப் பெறுவது எங்ஙனம், அதற்குரிய மற்றக் குணங்கள், கோள்கள் எவை எவை என்பதையே குறள்கள் பளிங்கெனக் காட்டுகின்றன. குடிமகன் அறநெறி வழி கடைப்பிடித்தவனாக வாழ்தல் மிக அவசியம். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவைகளுக்கு இடங்கொடாமல் பார்த்துக் கொண்டாலே போதும்; அறவழி நின்றதாக அமையும். இளம் வயது முதற்கொண்டு இவைகளைப் புறக்கணித்து கல்வியில் நாட்டங்கொண்டு கற்றுத் தேர்ந்து, தாய் மொழியின் பால், தாய்நாட்டின்பால் மிக்கப்பற்றுக்கொண்டு, சான்றோனாகி, தன்னை ஈன்ற பொழுதினும் தன் தாய் பெரிதும் உவக்கச் செய்து, இவன் தந்தையைக் கண்டு எந்நோற்றான் கொல் என்று பிறர் வியந்து புகழுறச் செய்து, பின் நல்லறம் ஆகிய இல்லறம் புகுங் காலை

T. V. வாசுதேவன், ஐ.ஏ.எஸ்.

அன்பும் அறனும் உடைத்தாய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, பண்புடைய மக்களைப் பெற்று, அவர்களைத் தம்மில் அறிவுடையவர்களாக்கிச் சிறந்த குடிமக்களாகத் திகழச் செய்து இன்பம் எய்தி, விருந்தோம்பி வேளாண்மை செய்து, யாரிடத்தும் இனியவை கூறும் இயல்புகொண்டு, காலத்தினால் எவர் செய்யும் நன்றியையும் ஞாலத்தின் மாணப்பெரிதாய் மதித்து, அதனை என்றும் மறவாதிருந்து, யார் மாட்டும் எத்துறைப் பணியில் ஈடுபடினும் நன்றேதரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை ஒழித்து, செப்பம் உடையவன் நடுநிலைமை பிறழாதவன் என்ற பெயரை நிலைநாட்டி, ஆமைபோல் ஐந்தடக்கி, உயிரினும் மேலாக ஒழுக்கத்தை ஓம்பி, உலகத்தோடு ஒட்ட ஒழுகலை நன்றாகக் கற்று, பிறனில் விழையாது, தம்மை இகழ்வாரையும் ஓயாமல் தன்னை வெட்டுவோரையும் தாங்கும் நிலம் போலத் தாங்கி, அழுக்காறு என்பதனை அகற்றி, பிறர்பொருளை வெஃகாது, பிறர்பற்றிப் புறங்கூறிப் பொய்த்துயிர் வாழாது, என்றும் சொல்லின் பயனுடைய சொல்லையே சொல்லவேண்டும் என்று உணர்ந்து பழகி, தீயவைகளைத் தீயினும் அஞ்சி ஒதுக்கி, தன்பால் உள்ள செல்வம் பயன்மரம் உள்ளூர்ப் பழுத்துள்ளது என்று அனைவரும் உணருமாறு ஒப்புரவு செய்து, வறியார்க்கு ஈவதில் உவகை கொண்டு, இசைபட வாழ்தல் அன்றோ குடிமகன் ஒருவனுக்குத் திருவள்ளுவர் காட்டிய நெறி. தான் பிறந்த குடியின் பெருமையைக் காத்தல் குடிமகனின் கடமை.

''குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுந் தான்முந் துறும்''

என்பது குறள். குடி உயரக் கோன் உயரும் என்பது பழமொழி. குடிமகன் தான்பிறந்த குடி உயர முயல்வது அவனுக்குப் பெருமை, கடமையுங்கூட. அப்படி அவன் முயலும் போது சூழ்நிலைகள் அம்முயற்சியில் அவன் வெற்றிபெற ஏதுவாக அமையும். சுற்றமும், மற்றவரும் அவனுக்கு உறுதுணையாயிருப்பர். அப்படி அவன் முயற்சி வெற்றி பெறும்போது, அக்குடி உயரும்போது, பல குடிகள் அவ்வாறு உயரும்போது, கோனும் உயருகின்றான். இது உலக வழக்கு என்கிற வகையில்தான், தெய்வம் மடிதற்றுத்தான் முந்துறும் என்று அழகாகக் கூறிப்போந்தார் திருவள்ளுவர். திருவள்ளுவர் கண்ட நெறியில் குடிமகன் அரசனுடைய பெருமைக்கும் உயர்வுக்கும் எவ்வளவு அச்சாணி போன்றவன் என்பது தெளிவாகின்றது. ஆகவேதான் அரசனும் தன் செங்கோன்மை, குடிகளின் தன்மைக்கும் முன்னேற்றத்துக்கும் உற்றவாறு அமைத்துச்சிறக்கின்றான்.

''குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.''

உலகமே, (இங்கு அரசனின் ஆட்சிக்குட்பட்ட நாடு எனக்கொள்ள வேண்டும்) குடிகளை அன்போடு அணைத்துக்கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி நிலைபெறும் என்று வகுக்கின்றார் வள்ளுவர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அன்பிலும், பண்பிலும் அரசு முறைகளிலும் சிறந்தோங்கி இருந்த தமிழ்க் குடிமகன் இன்னின்னவாறு, பொறுப்புகளும் கடமைகளும் மேற்கொண்டிருக்கவேண்டுமென்றும் வள்ளுவர் கண்ட நெறியில் காண்கின்றோம். இன்றையநிலையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அவைகள் என்ன என்றுச் சற்றுப் பார்ப்போம். இந்த ஆண்டைத் திருவள்ளுவருடைய இரண்டாயிரம் ஆண்டு விழாவாகக் கொண்டாடுகிறோம். அதே நேரத்தில் அண்ணல் காந்தியடிகளின் நூறுவது ஆண்டு விழாவாகவும் கொண்டாடுகிறோம். ஆகவே அன்று திருவள்ளுவர் கண்ட நெறியிலே இருந்த குடிமகன் இன்று காந்தியடிகள் கண்ட நெறியிலே எப்படி என்று ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றுகிறது. அன்று இருந்தது மன்னர் ஆட்சி, முடியாட்சி. மன்னன் எவ்வழி அவ்வழி குடிகள். மன்னன் செங்கோல் மேன்மை குடிகளின் நன்மைக்கேயாகும். குடிமகனின் பெரும் பொறுப்பு, மன்னன் பெருமையை நாட்டுவதிலும், மன்னன் ஆட்சிக்கும், தாய்நாட்டுக்கும், மாற்றூரால் மாசு, மறு, வீழ்ச்சி உண்டாகாமல் பாதுகாத்தலிலும் இருத்தல் வேண்டும். நாட்டுப் பற்றுக்கொண்டு, மொழிப்பற்றுக் கொண்டு, நாட்டின் பெருமையையும் தன் குடியின் பெருமையையும் உயர்ந்து ஓங்கச் செய்தல் அன்று கடமைகளாயின. அக் கடமைகளைக் கண்ணும் கருத்துமாகக் கொண்டு ஒரு குடிமகன் செயலாற்றவேண்டும் என்று கண்டோம்.

இன்று மன்னர் ஆட்சியில்லை; ஆனால் மக்கள் ஆட்சி உண்டு. மக்கள் தங்களுடைய நாட்டின் நல்வாழ்வுக்கு அரசியலமைப்பைத் தாமாக ஒன்று கூடி நிர்ணயித்துக்கொண்டு, தம்மில் வயதுவந்த எவரும் பொறுப்பேற்று ஆட்சிநடத்தத் தகுதி உள்ளவர்கள் என்கிற அடிப்படையில் அரசியல் நிர்ணயத்திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அதற்குக் கட்டுப்பட்டுச் செயல்படுகின்ற வகையிலே மக்கள் ஆட்சி அமைந்திருக்கின்றது - அதுவும் நம்முடைய நாடு அன்னியர் ஆட்சியின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்று வீரிட்டெழுந்தபின்,

அந்தத் திட்டத்தில் குடிமகன் ஒருவனின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற வகையில் அமைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. எந்தச் சட்டமும், எந்தத் திட்டமும், எந்த விதியும், எந்த வகையிலும் ஒரு குடிமகனுடைய உரிமைகளைப் பறிக்காமல் இருக்கவும், பாதுகாத்துக் கொடுக்கின்ற வகையிலும் அமைந்திருக்க வேண்டுமென்பது அடிப்படைக் கருத்து. அதே நேரத்தில் குடிமகனுடைய பொறுப்புகளும் அந்த அரசியல் நிர்ணயத்திட்டத்தில் வெகுவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆகவே இன்றையநாளில் குடிமகன், அதுவும் சுதந்திரம் பெற்ற நாட்டின் குடிமகன் என்கிறபொழுது, அவன் தன் அடிப்படை உரிமைகளைப் பெற்றவன் என்றும், அந்த உரிமைகளைப் பாதுகாத்துக் கொடுக்கும் அரசியலமைப்பான ஜனநாயகத்திலே இருக்கிறவன் என்றும் பெருமிதம் கொள்கின்றான். அந்த உரிமைகளைப்பற்றி அதிகமாகவும், தன் கடமைகளைப்பற்றி அதற்கு அடுத்தபடியாகவுமே எண்ணுகின்றான். கடமைகளைவிட உரிமைகளுக்கு முகக்கியத்துவம் கொடுக்கின்ற ஒரு நிலையாக அமைந்ததுபோல் அது தோன்றும். விடுதலைக்குப்பின் அண்ணல் காந்தியடிகளின் சகாப்தம் என்று கொள்ளலாம். காந்தியடிகள் அப்படிப்பட்ட சுதந்திர நாட்டிலே பெருமிதத்தோடு வாழும் குடிமகன் என்கிறவனைப் பற்றி என்ன கூறுகிறார்? அவனுடைய உரிமைகள், கடமைகள் இவைகளைப் பற்றி என்ன கூறுகின்றார் என்றும் பார்ப்போம்.

''சுதந்திர நாட்டின்' குடிமகன் சுதந்திரத்தை அனுபவிக்கிறான். அந்தத் தனிச் சுதந்திரம் என்கிற ஒரு பேறு சமுதாயத்தினுடைய தேவைக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் வாய்ப்பினை அவனுக்கு அளிக்கின்றது.

அந்தத் தனிச் சுதந்திரத்தை அவனிடத்திலிருந்து பறித்துவிட்டால் அவன் வெறும் ஒரு யந்திரமாக ஆகி விடக்கூடும்...''

காந்தியடிகள் அறிவுரை வருமாறு:

''நன்மை செய்ய வேண்டுமென்கின்ற சக்தி ஒருவருக்குப் புறத்தே

இருந்து வருகிற ஒன்றல்ல; அது எப்பொழுதும் ஒருவருடைய அகத்தே அமைந்திருக்கின்ற ஒன்று. ஆயின் அதை ஒழுங்குற வகைப்படுத்தி நல்ல முறையில் பெருக்கவேண்டியது முறையாகும்.''

ஆக ஜனநாயகத்தில் குடிமகன் தன்னுடைய பொறுப்பை உணர்ந்து இயங்குகின்றகாலைதான், ஒழுக்கம் கடைப்பிடித்துப் பல விதிமுறைகளுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியவனாகின்றான்.

குடிமகனுடைய உரிமைகளையும் கடமைகளையும் ஒப்பிட்டுக் காந்தியடிகள் கூறுகின்றபோது,

''ஒருவருடைய கடமையைச் செய்வதற்குப்பெற்ற உரிமையே மிகச் சிறந்த உரிமையாகும். அந்த உரிமைக்காகத்தான் மனிதன் வாழவும் வேண்டும். அதற்காகத்தான் தேவைப்பட்டால் சாகவும் துணிய வேண்டும்.''

மிகப்பெரிதாக உரிமைகளைக் கருதுகின்ற குடிமகனுடைய மிகச் சிறந்த பொறுப்பான சேவை, அதுவும் மக்கள் சேவை, சமுதாய முன்னேற்றத்திற்குரிய சேவை, அந்தச் சேவை செய்கின்ற நினைப்புக் கொள்ளவேண்டிய ஓர் உரிமை - இதுதான் அடிப்படையான மனித உரிமை, என்று மிக்க அழுத்தம் திருத்தமாகக் காந்தியடிகள் எடுத்து உரைத்திருக்கின்றார். திருவள்ளுவர் காலத்தில் எப்படி முடியாட்சியில் குடிமகன் தன்னுடைய நாட்டுக்கும் நாட்டை ஆண்ட அரசனுக்கும் பெருமை தரவேண்டிய வகையில் பல உயர்ந்த குறிக்கோள்களைக் கடைப்பிடித்து வாழவேண்டுமோ அதே நிலையில் இன்றைய மக்களாட்சி, ஜனநாயக அரசியலிலும் ஒரு குடிமகன் தன்னுடைய நாட்டுப் பற்றோடு தான் வாழ்கின்ற ஜனநாயக அரசியலமைப்பினைக் கண்ணும் கருத்துமாகக் காப்பதற்கு, தன்னுடைய கடமைகளைச் செய்வதற்கு, தான்பெற்ற உரிமைகளைப் பெரிதாக மதித்து உணர்ந்து செயல்பட வேண்டுமென்று அமைக்கின்ற நிலையை நோக்குங்கால், காந்தி அடிகள் வகுத்த நெறியும், திருவள்ளுவர் கண்ட நெறியும் அவர்களுக்கே உரித்தான மகத்தான பரந்த தமிழ்ப் பண்புடன் அமைத்திருத்தல் காண்கின்றோம். ஒவ்வொரு குடிமகனும் தன்னைச் செவ்வனே உணர்ந்து செயல்படுவானேயானால் தான் வாழ்ந்த பயனைப் பெறுவதோடு நாட்டின் பெருமையையும் ஜனநாயத்தின் செறிவினையும் காத்தவனாவான்.

தமிழ் நாட்டில் ஊராட்சி வளர்ச்சி

சிறப்புக் குறிப்புகள் (31-3-'69 இல் உள்ளபடி)

அமைப்புகள்:		
1.	மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்	23
2.	ஊராட்சி ஒன்றியங்கள்	374
3	வளர்ச்சி வட்டாரங்கள்	375
4.	ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 'ரெவின்யூ' கிராமங்கள்	17470
5.	ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள சிறு கிராமங்கள்	40300
6.	ஊராட்சிகள்	12344
7.	பேரூராட்சிகள்	536
8.	நகரியங்கள்	14
9.	ஊராட்சி ஒன்றியங்களின் பரப்பளவு (இலட்சம் ஏக்கர்களில்)	266
10.	1961ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள மக்கள்தொகை (இலட்சங்களில்)	272

2. நகுதற் பொருட்டன்று நட்டல்:

தஞ்சையிலேயே வெகு நாள் 'தாசில்தார்' அலுவல் பார்த்தவர் குருமூர்த்தி. தன் பதவிக் காலத்தில் அம்பலவாணரிடம் அடிக்கடி வருவார். மாதத்தில் இரண்டு மூன்று நாட்கள் அங்கு வந்துத் தங்கியிருப்பார். அரசபோகம் நடக்கும் அவருக்கு.

தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களையும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி முதலிய காப்பியங்களையும், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம், சிவஞான போதம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள் போன்ற சமய நூல்களையும் பற்றி விரிவாகப் பேசி ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பார்கள். பழைய கந்தல் துணிகளைப் போட்டுக் கட்டி வைத்திருக்கின்ற ஏட்டுச் சுவடிகள் யாவையும் புரட்டிப் பார்த்து விடுவார்கள்.

அந்த ஓரிரு நாட்களில் குருமூர்த்திக்குக் குடும்பச் சுமையும் அலுவற் சுமையும் தலையிலிருந்து கீழே இறங்கியதுபோல் இருக்கும். அவருக்குப் பின்னர் அவருடைய மகன் வேணுகோபாலர் தந்தையைப் போலவே அவரிடம் மிக்கத் தொடர்பு கொண்டவர். நண்பருக்கு நண்பர்-ஒரு வகையில் உறவினராகவும் இருந்தார்.

தியாகராசர் வேணுகோபாலரைப் பார்க்க மாதம் ஒரு தடவையாவது தில்லைக்குச் செல்வார். அப்படியே விடுதியில் தங்கிப் படிக்கும் தன் மகன் திருமாலையும் பார்த்து வருவார்.

''கண்ணோட்டம் என்பது பிற உயிர்களிடம் பரிவு செய்வதாகும். பாடலுக்கு இசை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் கண்ணுக்குக் கண்ணோட்டம் என்பது. கண் அமைந்திருப்பதே அதற்காகத்தான். கண்ணோட்டம் இல்லாத கண், புண்ணுக்கு ஒப்பாகும். கண்ணோட்டத்தால்தான் உலகியல் நடைபெறுகின்றது; இந்த உலகம் அழியாமல் நிற்கின்றது'', என்பதை நன்கு உணர்ந்தவர் வேணுகோபாலர். அவர் அம்பலவாணரின் குடும்பத்தைப்பற்றி அப்போது அதிகம் சிந்தித்தார். செல்வத்தால் மிக உயர்ந்த குடும்பம் இப்போது அவல நிலை அடைந்துவிட்டதே என்று கலங்கினார். திருமால் எப்படியாவது படித்து முன்னுக்கு வந்துவிட்டால் அக் குடும்பம் நிம்மதியாக இருக்கும் என்று எண்ணியபோதே, தியாகராசர் அங்கு வந்து சேர்ந்தார்.

''வாங்க. வாங்க. உங்களுக்கு ஆயுள் நூறு. இப்போதுதான் உங்களைப் பற்றி எண்ணினேன்.''

''வர்ரேங்க; மிக்க மகிழ்ச்சி'' என்றார் தியாகராசர். இருவரும் ஊஞ்சல் பலகையில் அமர்ந்தனர்.

தியாகராசர் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்துவிட்டு வெற்றிலை பாக்குப் பெட்டியை அவர்முன் வைத்தார்.

''நீங்கள் படவேண்டிய துன்பமெல்லாம் பட்டுவிட்டீர்கள். இனிமேல் நீங்கள் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். அதற்கு நான் ஒரு யோசனை செய்து வைத்திருக்கிறேன். நீங்கள் சரி என்றால்...'' என்று இழுத்தார் வேணுகோபாலர்.

''ஆகா. நீங்கள் செய்வதற்கு நான் என்ன தடையா சொல்லப்போகிறேன். செய்தியைச் சொல்லுங்கள்'' என்றார் தியாகராசர்.

''கடலூரில் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர் இருக்கிறார். அவரும் என்னைப் போலவே உங்கள் தந்தையிடம் மிகுந்த தொடர்பு கொண்டவர். ஒரு வகையில் எட்டிய உறவாக இருந்தாலும் இருக்கும். ஓகோ! உங்களுக்குத்தான் தெரியுமே குழந்தைவேலர்.''

''ஓ, தெரியுமே. அப்பாவிடம் அடிக்கடி வருவார். நான் அதிகமாகப் பழகிக் கொள்ளவில்லை. இருந்தாலும் என்னுடைய குடும்பத்தின்மீது மிகவும் அன்பு கொண்டவர்.''

''அவர் பெண் மலர்க்கொடி. மிகவும் நல்ல பெண். இந்தக் கல்லூரியில்தான் பி. ஏ. இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருக்கிறாள். அவர் நல்ல இடத்தில் திருமணத் தொடர்பு கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார். ஒரே பெண்; வேறு குழந்தை குட்டிகள் கிடையாது.''

''நீங்கி சொல்வதெல்லாம் சரிங்க. இருந்தாலும் நாம் இருக்கிற நிலைமையில்...''

''அதைப்பற்றிக் கவலைப்படாதீங்க; பொறுப்பு என்னுடையது. நீங்கள் நிம்மதியா ஊருக்குப் போங்க. அவரையும் கலந்துகொள்கிறேன். எதற்கும் நீங்கள் தயாராகவே இருங்கள். கடிதம் போடுகிறேன். சோமு! அவங்களைப் புகைவண்டி நிலையம்வரை கொண்டுபோய் அனுப்பிவிட்டுவா'' என்று அவரை ஊருக்கு அனுப்பினார்.

3. புணர்ச்சி பழகுதல் வேண்டா:

சிறிது நேரத்துக்கெல்லாம் குழந்தைவேலர் அங்கு வந்தார்.

''வாங்க! வாங்க! உங்களுக்கு ஆயுள் நூறு. இப்பொழுதுதான் உங்களைப்பற்றிப் பேசிக்கொண்டு இருந்தோம்'' என்றார் வேணு.

''வர்ரேங்க. எப்பொழுது சந்தித்தாலும் வாங்க என்பதும், உங்களுக்கு ஆயுள் நூறு என்பதும், இப்போதுதான் உங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் என்பதும் வழக்கம்தானே. நூறாண்டு வாழவேண்டும் என்பது சிலர் விருப்பம். நூறு ஆண்டு எப்படி இந்த உலகத்தில் வாழ்வது என்று பெருமூச்சு விடுவதும் சிலருடைய பழக்கம்.''

''அப்படி இல்லீங்க. உங்களைப்பற்றி எப்போதுமே பேசிக்கொண்டிருப்போம். இன்று சிறப்பாக ஒரு பேச்சு நடந்தது. நல்ல செய்திதான். என் நண்பர் ஒருவர் வந்திருந்தார். அவர் மிகவும் நல்லவர்.''

''உங்களுக்கு என்ன! உங்கள் பார்வைக்கு உலகத்தில் இருக்கிறவர்கள் எல்லாரும் நல்லவர்தான்! நீங்கள் யாரையாவது கெட்டவர் என்று சொல்லி ஒருதடவைகூட இந்தக் காது கேட்டதில்லை. பரவாயில்லை. அதுதான் மனிதப் பண்பு. நல்லவர்களைப் பற்றியே நினைப்பதும் நல்ல செய்திகளையே பேசுவதும் நல்லதுதான் இல்லையா?''

''என்னைப்பற்றி அதிகமாகப் புகழ்கிறீர்கள்.''

''அது இல்லை. உங்களுக்குக் கவலை என்பதே கிடையாது. நடப்பவைகள் எல்லாம் நல்லனவாக நடக்கின்றன. உங்கள் தந்தையும் உங்களுக்குத் தேவையான சொத்துக்களைச் சேர்த்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார். பொருள் இருந்தால்மட்டும் போதுமா? அறிவுச் செல்வத்தையும் சேர்த்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்.''

''பார்த்தீர்களா, என்னைச் சொல்லிவிட்டு என்னைப்பற்றி நல்லவற்றையே பேசுகிறீர்கள். நீங்கள் சொல்வதுபோல் நான் நிம்மதியாகத்தான் இருக்கிறேன். வாங்க. சாப்பாடு தயாராகிவிட்டது. சிவகாமி! சாப்பாட்டுக்கு முன்னால் இலையில் இனிப்பு கொண்டு வந்துவை.''

''என்ன! இனிப்பு எல்லாம் ஏக அமர்க்களம்.''

''ஒன்றுமில்லை. சிவகாமி அவள் பிறந்த வீட்டுக்குப் போய் நேற்றுத்தான் வந்தாள். வரும்போது இதையெல்லாம் மூட்டை கட்டிக்கொண்டு வந்தாள்.''

''ஓகோ! மாமனார் வீட்டின் தொடர்பு இப்பவும் இனிப்பாக இருக்கிறது என்பதற்காகத்தான் இனிப்பா?''

''அந்த உறவு என்றைக்குமே இனிப்பாகத்தான் இருக்கிறது. அதைப் போல் இனி ஆரம்பிக்கும் உறவும் இனிப்பாகத்தான் இருக்கவேண்டும்.''

''என்ன புதிதாகப் புதிர் போடுகிறீர்கள். மகனுக்குத் திருமண ஏற்பாடா?''

''நான் எதையோ ஆரம்பித்தேன். நீங்கள் எதையோ கற்பனை பண்ணுகிறீர்கள். சோமுக்குத்தானே. இந்த நல்ல குடும்பத்தில் எனக்கென்று ஒன்றே ஒன்று, அபூர்வப் பிறவி ஒன்று வந்து சேர்ந்திருக்கு. கொஞ்ச நேரத்துக்கு முன்பு சொன்னீர்களே, நான் எதையும் நல்லதாகத்தான் நினைத்து நல்லதையே செய்வேன் என்று. அது என்னவோ நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது உண்மை. ஒரு சதவீதம் பொய்யாகப் போகிறது. இவனால்தான்''. ''அது கிடக்கட்டும்



ஒரு முக்கியச் செய்தி. பொன்மேடு அம்பலவாணரின் பேரன் திருமால் என்று பெயர். நல்ல அழகு. சிறந்த குணம். இந்தக் கல்லூரியில்தான் படிக்கிறார். எம்.ஏ. இந்த ஆண்டோடு முடிகிறது. அந்தப் பையன் தொடர்பாகத்தான் உங்களிடம் பேசலாமென்று துவங்கினேன். அவர் தகப்பனார்கூட இங்கு வந்தார். சாப்பிடாமல்கூட அவசரமாக வீட்டுக்குப் போகவேண்டுமென்று கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் சென்றார்.

அவரிடம் இது சம்பந்தமாகப் பேசி முடித்திருக்கிறேன். நீங்கள் கொஞ்சம் யோசனை செய்து இதற்கு முடிவு சொல்லுங்கள். எனக்கு இதில் மிகவும் நிறைவு.''

வேணுகோபாலர் பேசிமுடித்து விட்டு அவருடைய பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தார். அவர் சிந்தனையில் இருந்தாரே தவிர உடனே எதுவுமே சொல்லவில்லை.

மலர்க்கொடியைப் பார்ப்பதற்காகக் குழந்தைவேலர் வேணுகோபாலரையும் அழைத்துக்கொண்டு கல்லூரி விடுதிக்குச் சென்றார். வேணுகோபாலர் அவரைத் திருமால் இருக்கும் அறைக்கு அழைத்துச் சென்றார்.

திருமால் அவர்களை வரவேற்றான். குழந்தைவேலர் திருமாலைக் கண்டவுடன் மிக்க மகிழ்ச்சிகொண்டார்.

''உங்களைச் சந்தித்ததில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அம்பலவாணரைப் பார்க்கிறமாதிரியே இருக்கிறது. உங்கள் தாத்தா சிறந்த அறிவாளி. மிகுந்த அருளுள்ளம் கொண்டவர். இலக்கியங்களின் நல்ல ஆராய்ச்சி. அப்போதெல்லாம் அடிக்கடி அங்கு வருவேன்.''

''ஆமாம். தந்தைகூடப் பேசும்போது பல வேளைகளில் உங்களைப்பற்றிப் பெருமையாகப் பேசுவார்கள்.''

''அப்போது வேலையில் இருந்தேன். பக்கமுங்கூட. அடிக்கடி வர முடிந்தது. இப்போது குடும்பத்தைத் தனியாக விட்டுவிட்டு வரமுடியவில்லை'' என்றார் குழந்தைவேலர். பிறகு திருமாலையும் அழைத்துக்கொண்டு விடுதிக்குச் சென்றார்.

குழந்தைவேலர், வேணுகோபாலர், திருமால் மூவரும் பெண்கள் விடுதியின் விருந்தினர் அறைக்குச் சென்று அமர்ந்தார்கள். மலர்க்கொடியை அங்கு வரவழைத்தார்கள்.

மலர்க்கொடி விடுதியிலிருந்து வந்து தந்தைக்கும் வேணுகோபாலருக்கும் வணக்கத்தைத் தெரிவித்தாள். அவர்களுடன் வந்த திருமாலை அறிந்து வைத்திருந்தாளே தவிர, அவருக்கும் தந்தைக்குமோ அல்லது வேணுகோபாலருக்குமோ என்ன தொடர்பு என்பது தெரியாது.

வேணுகோபாலர், சட்டென்று கேட்டுவிட்டார். ''காபி இல்லையாம்மா'' என்று.

''கொஞ்சநேரம் இருங்கள் அப்பா. வந்துவிடுகிறேன்'' என்று, தந்தையின் பதிலைக்கூட எதிர்பாராமல் விடுதி அறைக்குச் சென்று சில விநாடி

களில் காபிகொண்டு வைத்துக் குடிக்கச் சொன்னுள்.

''உட்கார் அம்மா'', என்று சொன்ன உடன் தந்தையருகில் அமர்ந்தாள். காபியைக் குடித்தார்கள்.

''இந்தாம்மா பணம்'' என்று பணத்தைக் கொடுத்துவிட்டு, ''மலர்! இவரைத் தெரியுமாம்மா. பெயர் திருமால். எம். ஏ., இந்த ஆண்டோடு முடிகிறது. இங்குத்தான் படிக்கிருர்'' என்ருர் குழந்தைவேலர்.

அவளுக்கு அவர் சொன்னதெல்லாம் முன்பே தெரியும். காரணம் திருமால் கல்லூரியின் இலக்கியப் பேரவையின் செயலாளர். ஆனுல் எந்த நோக்கத்தோடு திருமாலே அறிமுகப்படுத்தி வைக்கிருர் என்பதனை அவள் அறியவில்லே. ஆனுலும் இலேசாகத் தலையை ஆட்டித் தெரியாது என்பதைக் காட்டிக்கொண்டாள்.

''அம்பலவாணர் என்று அடிக்கடிச் சொல்வேனே. கடிதங்களேக் கூடக் காட்டுவேனே.''

''ஆமாம் அப்பா. ஒவ்வொரு கடிதத்திலும் திருக்குறள் ஒன்றும் அதன் பொருளும் இருக்கும் அப்பா.''

''ஆமாம் - ஆமாம். அவருடைய பெயரன் தானம்மா இவர்.''

ஒருவரையொருவர் அறிமுகப்படுத்தி வைக்கும்போது வணக்கம் செய்வது முறையாதலால் அவள் கைகள் தாமாகவே எழும்பின. தந்தையை அருகில் வைத்துக் கொண்டு அப்படிச் செய்வது சரியாகுமா என்று சந்தேகப்பட்டுக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

''கும்பிடம்மா'' என்ருர் குழந்தை வேலர்.

மலர், தன் மலர்க்கரங்கள் இரண்டையும் இணைத்துக் கூப்பி வணக்கம் செய்தாள். அவள் பார்வை மட்டும் அவன்மீது விழவில்லே. அவனும் வணக்கம் செய்து விட்டுப் பார்வையைக் கீழே செலுத்தினுன்.

மலர்க்கொடியிடம் விடைபெற்றுக் கொண்டு அனைவரும் விடுதிக்கு வெளியில் வந்தனர். திருமால் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தன் விடுதி அறைக்குச் சென்ருன். மற்ற இருவரும் நடந்து புகைவண்டி நிலேயத்துக்குச் சென்றனர். தான் எதுவும் பேசாது, குழந்தைவேலர் என்ன சொல்லப் போகிருர் என்பதை ஒவ்வொரு விஞடியும் எதிர்பார்த்துக் கொண்டே இருந்தார் வேணுகோபாலர்.

ஆனுல் குழந்தைவேலரோ எதுவுமே பேசவில்லே. அவர் எதையோ மிகத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

வண்டி வந்தது. விடைபெற்றுக் கொண்டு வண்டியில் ஏறினுர் குழந்தைவேலர்.

[தொடரும்]

சத்துணவுத் திட்டம்

31-3-69 முடிய ஆரம்பிக்கப்பட்டுள்ள தோட்டங்கள்

வரிசை எண்	விவரங்கள்	31-3-1969 வரை
1.	பள்ளித் தோட்டங்கள்	369
2.	பள்ளித் தோட்டங்களின் பரப்பளவு (ஏக்கர்கள்)	97
3.	சமுதாயத் தோட்டங்கள்	89
4.	சமுதாயத் தோட்டங்களின் பரப்பளவு (ஏக்கர்கள்)	408
5.	வீட்டுத் தோட்டங்கள்	5000
6.	வீட்டுத் தோட்டங்களின் பரப்புளவு (ஏக்கர்கள்)	47



பயிர்ப் பாதுகாப்பு

திரு. ஏ. வேங்கடராமன்,
விவசாயத்துறை
இணை இயக்குநர், தஞ்சை

சற்றேறக்குறைய சுமார் 9 இலட்சம் விலங்கு இனங்கள் இருக்கின்றன. அவற்றில் $6\frac{1}{4}$ இலட்சம் பூச்சி இனங்களாகும். இப் பூச்சிகள் (1) பயிரின் மேற் பாகத்தை உண்ணுதல் (2) பயிரின் சாறை உறிஞ்சுதல் (3) வேர், தண்டு, பழம் முதலியவற்றைத் துளேத்தல் ஆகிய மூன்று வழிகளால் பயிருக்குச் சேதத்தை விளேவிக்கின்றன. பல விதமான பூஞ்சாணங்களாலும் மற்றும் நுண்ணிய கிருமிகளாலும் பயிர்களுக்கு நோய்கள் உண்டாகின்றன. இவற்ருல் ஏற்படும் சேதத்தைத் தடுக்கத் தற்பொழுது பல்வேறு வகையான சக்தி வாய்ந்த மருந்துகளும், அவற்றை உபயோகிக்கத் தேவைப்படும் கருவிகளும் இருக்கின்றன. இவற்றை நல்ல பலன் அளிக்கும் முறையில் உபயோகித்தல் எப்படி என்று தெரிந்து கொள்வது மிகவும் முக்கியம்.

(அ) பொறுக்கு விதைகள், பயிருக்குத் தேவையான அளவு உரம் முதலியஎல்லாவித நவீன விவசாயமுறைகளேயும் ஒழுங்காகக் கடைப்பிடித்த போதிலும், பயிரைப் பூச்சி, பூஞ்சாண நோய் இவற்றிலிருந்து பாதுகாக்காவிடில் நாம் எதிர்பார்க்கும் அளவு பலன் கிடைக்காது. சராசரி 20 சதவீதம் பூச்சி, பூஞ்சாண நோய்களினுல் பயிருக்கு நட்டம் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நட்டத்தைப் போக்கத் தகுந்த பூச்சி, பூஞ்சாண மருந்துகளேச் சரியான காலத்தில் உபயோகிக்க வேண்டும்.

பொதுவாக, பூச்சிகளும் நோய்களும் குறிப்பிட்ட காலங்களில் பயிர்களேத் தாக்குகின்றன. இவற்றிலிருந்து பயிர்களேக் காப்பாற்ற வேண்டுமானுல் எவ்வளவுக் கெவ்வளவு குறுகிய காலத்தில் விரைவாகத் தடுப்பு முறைகளேக் கையாளுகிருேமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. ஆகவே அந்தக் குறிப்பிட்ட காலத்தில் அதிகப் பரப்பில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளேக் கையாளவேண்டும். அப்படியானுல் இம் முறைகளேக் குறிப்பிட்ட காலங்களில் அநேக இடங்களில் ஒரே சமயத்தில் கையாளவேண்டி வரும். இதனுல் மருந்து தெளிக்காத இடங்களிலிருந்து தெளித்த இடங்களுக்கு மறுபடிப் பூச்சிகள் வரா.

விவசாய இலாகா அலுவலர்களே எல்லா இடங்களிலும் நேரில் பயிர்ப் பாதுகாப்பு முறைகளில் கவனம் செலுத்த இயலாது. ஆகவே விவசாயிகளே பயிர்ப் பாதுகாப்பு முறைகளேக் கடைப்பிடிக்கப் வேண்டும். எல்லாப் பூச்சி, பூஞ்சாண மருந்துகளும் கொடிய விஷமாகையால் இவற்றை மிகவும் கவனத்துடன் பயன்படுத்தவேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளே உபயோகிக்கத் தெளிப்பான்களும் (Sprayers) தூவுவான்களும் (Dusters) தேவை. சமீப காலங்களில் விசைத் தெளிப்பான்களும் தூவுவான்களும் (Power operated sprayers and dusters) நம்மிடையே அதிகமாக வந்துள்ளன. அவற்றை இயக்குவதற்கும், பாதுகாப்பதற்கும் அநுபவமும் சாமர்த்தியமும் மிகவும் அவசியமாகிறது.

பூச்சி, பூஞ்சாண மருந்துகள்:

1. பி. எச். சி: 10 சத தூளாகவும், தண்ணீரில் நனையும் 50 சத தூளாக

வும் கிடைக்கும். இது ஒரு விஷம். இதை உபயோகித்து இலைகளையும் செடிகளையும் கடித்துத் தின்னும் பூச்சிகளை அதி விரைவில் அழிக்கலாம். இந்த மருந்தின் வீரியம் அதிக நாட்கள் இருக்காது. காய்கறி, பூசனி, புடல் போன்ற செடிகளுக்கு இம் மருந்தை உபயோகிக்கக்கூடாது. காய்கறிகளுக்கு உபயோகித்தால் ஒருவித வாடை உண்டுபண்ணும். பரங்கி, பூசனி போன்ற செடிகளுக்கு உபயோகித்தால் செடிகள் காய்ந்து போகும். நெற் பயிரில் உண்டாகும் பேன், இலையைத் தின்னும் புழுக்கள், வெட்டுக்கிளிகள் முதலியவற்றை ஒழிக்கலாம். குருத்துப் பூச்சியையும் ஓரளவுக்குக் கட்டுப் படுத்தலாம். ஓர் ஏக்கருக்கு 9 கிலோ பத்து சத தூளோ அல்லது 1·5 கிலோ 50 சத நனையும் தூளோ வேண்டும். 1·5 கிலோ நனையும் தூளை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும்.

2. டி. டி. டி.: 5 சத தூளாகவும் 50 சத தண்ணீரில் நனையும் தூளாகவும் கிடைக்கும். இம் மருந்துக்கு நீண்டநாள் வீரிய சக்தி உண்டு. இதுவும் விஷம். இதையும் பூசனி, புடலை போன்ற வகைகளுக்கு உபயோகித்தல் கூடாது. நெல்லில் பச்சைத் தத்துப் பூச்சி, படைப்புழு, முதலியவற்றை இதனுல் ஒழிக்கலாம். ஏக்கருக்கு 9 கிலோ தூள் தேவைப்படும். குருத்துப் பூச்சியைத் தடுக்க 50 சத நனையும் தூள் ஒரு கிலோவை 500 லிட்டர் தண்ணீரில் கரைத்து அடிக்கவும். பி. எச். சி. 10 சத தூளை டி. டி. டி. 5 சத தூளுடன் சம அளவில் கலந்து 20 நாட்களுக்கு ஒரு முறையாக மூன்று முறை தூவுவதால், குருத்துப்பூச்சி, நெற்பேன், தத்துப் பூச்சி, புகையான் ஆகிய பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

3. லிண்டேன்: இது பி. எச். சி.யிலிருந்து சுத்தம் செய்த மருந்து. காய்கறி, பழச் செடிகளில் காணப்படும் முக்கியப் பூச்சிகளை இதனுல் ஒழிக்கலாம். இது 0·65 சத தூளாகவும் 6·5% தண்ணீரில் நனையும் தூளாகவும் கிடைக்கும். நெல் குருத்துப் பூச்சியை இம் மருந்தினுல் கட்டுப் படுத்தலாம் என்று சமீப காலத்தில் நடந்த ஆராய்ச்சியினுல் தெரிய வருகிறது.

4. எண்டிரின்: திரவ வடிவில் கிடைக்கும். இம் மருந்துக்கு நீண்ட நாள் வீரிய சக்தி உண்டு. அநேக வகைப் பூச்சிகளைக் குறிப்பாகக் குருத்து, காய்களைத் துளைக்கும் புழு இவற்றைத் தடுக்க ஏற்றது. மனித இனத்துக்கும் மீன் இனங்களுக்கும் இது கொடிய விஷம். ஏக்கருக்கு 400 மில்லி எண்டிரின் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். இம்மருந்து அடிப்பதால் சில சமயங்களில் மரப்பூச்சி, சிலந்திப் பூச்சி இவை அதிக எண்ணிக்கையில் தோன்றக்கூடும்.

5. இதைல் பாரத்தியான்: இது திரவ வடிவில் கிடைக்கும். மிகக் கொடிய விஷம். இம் மருந்து அநேக வகையான பூச்சிகளைக் கொல்ல வல்லது. குருத்துப் பூச்சி, சூரைப்பூச்சி, அசுவணி, புகையான் பூச்சி, இலைகளைக் கடித்துத் தின்னும் புழு முதலியவற்றைக் கட்டுப்படுத்தலாம். 100 மில்லி லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். ஓர் ஏக்கருக்கு 200 மிலி மருந்து தேவைப்படும். இது பாலிடால், ஈகடாக்ஸ், பாரமார் முதலிய பல வர்த்தகப் பெயர்களில் கிடைக்கும்.

6. கால்சியம் ஆர்சனேட்: இது இரைப்பையைத் தாக்கும் கொடிய விஷம். மருந்து ஒரு பங்கு, நீர்த்த சுண்ணும்பு 4 பங்கு கலந்து தூவ வேண்டும். காய்கறிகளில் தோன்றும் கத்தரி வண்டு, இலைகளைச் சாப்பிடும் புழுக்கள் முதலியவற்றை ஒழிக்கலாம்.

7. கார்பரில் (செவின்): தூளாகவும், நனையும் தூளாகவும் கிடைக்கும். பருத்தி, வெண்டையைத் துளைக்கும் புழு, பருத்தியைத் தாக்கும் பலவிதமான பூச்சிகள், கத்தரி வண்டு, மாமரத்துப் பூச்சி, நிலக்கடலையைத் தாக்கும் பூச்சிகள் ஆகியவற்றை ஒழிக்கலாம். ஓர் ஏக்கருக்கு 9 கிலோ தூள் தூவ வேண்டும்.

8. ஸிங் பாஸ்பைட்: இஃது எலி மருந்தாக உபயோகப்படுத்தப்படுகிறது. மனித இனத்துக்கும், எல்லாப் பிராணிகளுக்கும் கொடிய விஷம். ஒரு கிராம் மருந்துடன் 49 கிராம் பொரியைக் கலந்து உபயோகிக்க வேண்டும். அத்துடன் சிறிது அளவு நல்லெண்ணெய் அல்லது கடலை

எண்ணெயையும், வறுத்த வெங்காயத்தையும் சேர்த்தால் எலிகள் விரும்பி உண்ணும். மருந்து கலந்த பொரியை வரப்பின்மேல் எலி வளைகளுக்கு அருகாமையில் ஏக்கருக்குச் சுமார் 20 இடங்களில் வைக்கவேண்டும். ஒவ்வோர் இடத்திலும் சுமார் 7 கிராம் பொரி வைக்கவும்.

9. பாதரச மருந்து (அக்ரசான், சிரசான், டில்லக்ஸ் போன்றவை): விதையில் கலக்கும் மருந்தை ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் வீதம் கலக்கவேண்டும். அதாவது இரண்டு மரக்கால் விதைக்கு ஒரு தீப்பெட்டி அளவு (நிறைய மட்டமாக) மருந்து தேவைப்படும். நெற் பயிரில் தோன்றும் தூர் அழுகல், புள்ளி நோய் முதலியவற்றைக் கட்டுப்படுத்தும்.

10. தாமிரக்கொல்லி: (பைடலான், ப்ளைடாக்ஸ், மைகாப், பாரிகாப் முதலியவை) பொதுவாகப் பூஞ்சாண நோய்களைத் தடுக்க அரை கிலோ மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவேண்டும். நெற் பயிரின் புள்ளிநோய், குலைநோய் முதலியவற்றைக் கட்டுப்படுத்தலாம்.

11. டைதையோ கார்பமேட்ஸ் (டைதேன், ஸைனப், குமான் மருந்துகள்) 100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் டைதேன்-78 அல்லது செனப் மருந்து வீதமோ அல்லது 100 கிராம் குமான் அல்லது சைரம் மருந்து வீதமோ கலந்து ஐ. ஆர். 8, ஐ. ஆர். 5 போன்ற பயிர்களுக்குத் தெளிக்கவேண்டும். இப் பயிர்களுக்கு தாமிரக்கொல்லி மருந்துகளை உபயோகிக்கக்கூடாது.

'ஓராண்டுத் திட்டச்' சாதனைகள்

நமது பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய பேறிஞர் அண்ணு அவர்களின் 59ஆவது பிறந்தநாள் காணிக்கையாக, 'ஓராண்டுத் திட்டம்' 1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன் விளைவாக, தமிழ்நாடெங்குமுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும், சிறந்த பல பணிகள் நிறைவேறின. உழவர் பெருமக்களுக்குத் தேவையாகும் வேளாண்மைக் கருவிகள் பல கிடைத்தன. 788 சமுதாயக் கிணறுகள், பாசன வசதிகள் புதிதாக அமைக்கப்பட்டன. இயந்திரக் கலப்பைகள் (Tractors) 796ம், உழவுக் கலப்பைகள் (Tillers) 707ம், தூவான்கள், தெளிப்பான்கள் (Dusters & Sprayers) 5277ம் வாங்கப்பட்டு, மிகக் குறைந்த வாடகைக்கு உழவர்களின் உபயோகத்துக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, பள்ளி மதிய உணவுத் திட்டத்துக்குப் பயன்படும் வகையில் 8996 காய்கறித் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பல திருமண மண்டபங்கள் உருவாகி, மக்களின் சமூகநல விழாக்களுக்குப் பயன்பட்டு வருகின்றன.

நீர் உயர நெல் உயரும்

எம்.எஸ்எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள் விவசாயத்திற்கும் தொழிலுக்கும் இன்றியமையாதது தரமான வார்ப்பு இரும்பும் எ்குங் கொண்டு தொழில் நுணுக்கக் கட்டுப்பாட்டோடு அமைக்கப்பட்டது. எம்.எஸ் எஸ்.ஐ.ஸியின் பம்ப் செட்டுகள், ஒரே சீரான நிலையில், தட்டுப்பாடின்றி நீண்ட நேரம் நீரை இறைக்க வல்லது. நேர்முக இணைப்புக் கொண்ட பம்ப் செட்டுகள் மட்டுமின்றி, தனி இணைப்புக்கான சக்கரங்களைக் கொண்ட பம்ப் செட்டுகளும் கிடைக்கும். எம். எஸ். எஸ். ஐ. ஸி. யின் உற்பத்திகளைப் பெற்று பயன் பெறுங்கள்.

M S S I C

PUMPSET



பழுதடைந்த விவசாய கருவிகளை செப்பனிட, உங்களுக்கு அருகாமையிலுள்ள எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் பட்டறைகளை அணுகுங்கள். மிகுந்த உத்தரவாதத்துடன் புதுப்பித்துக் கொடுக்கப்படும்.



M S S I C

DUSTER

எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் டஸ்டர், மனித சக்தியைக் கொண்டு எளிய முறையில் இயக்கக்கூடியது. இது, இடைவிடாது பூச்சிக் கொல்லியை பனி படலம்போல் தூவி, விவசாயிகளுக்கு எதிரியான புழு பூச்சிகளை அழித்து வேளாண்மையை விருத்திச் செய்ய உதவுகிறது. இது, ஒரே நேரத்தில் 25 சதுர அடிக்கு பூச்சிக் கொல்லியை தூவும் சக்தி வாய்ந்தது. இதன் கொள் அளவு 300 கன அங்குலம். எடை 5 கிலோ. பித்தளை மற்றும் அலுமினியம் ஆகிய உலோகங்களில் கிடைக்கும். இதர எம்.எஸ்.எஸ்.ஐ.ஸி. யின் விவசாயக் கருவிகள் நீடித்த உழைப்பும் நிகரற்ற உறுதியும் கொண்டவை.

விவரங்களுக்கு அணுகவும்
நிருவாக இயக்குனர்

தமிழக அரசு சிறு தொழில் நிறுவனம்

35/2. உட்ஸ் ரோடு.
சென்னை-2.

"பஞ்சாயத்து ராஜ்" இதழிலிருந்து

பரபரப்பூட்டும் பகுதியிலும் பசுமைப் புரட்சி

இந்தியாவின் எல்லைக்கோட்டின் விளிம்பில் உள்ள நாகாலாந்து—பரபரப்பான பல செய்திகளை, நிகழ்ச்சிகளை உள்ளடக்கிக் கொண்டு வாழும் ஒரு பகுதி. இந்தப் பரபரப்புகளுக்கிடையே — அங்கேயும் விவசாயத் துறையில் பசுமைப் புரட்சி நடந்து கொண்டு தானிருக்கிறது. அங்கே டெய்சுங் நேடிவ்-1 இனத்திற்கு அமோக ஆதரவு பெருகிக்கொண்டே வருகிறது.

ஹனேபீ சீமா — நாகாலாந்திலுக்கிடைலாங் கிராமத்தைச் சேர்ந்தவர். கடினமாக உழைக்கும் ஓர் உழைப்பாளி. அவர் டெய்சுங் நேடிவ் நெல் இரகத்தைப் பயிரிட்டு ஒரு சாதனை புரிந்துள்ளார்! ஓர் ஏக்கருக்கு 100 மணங்கு நெல்லுக்கு மேல் அவர் கண்டுமுதல் செய்துள்ளார்!

இதற்கு முன்பெல்லாம் டெய்சுங் நேடிவ் என்றால் என்னவென்றே அவருக்குத் தெரியாது! நாகாலாந்து விவசாயத்துறை தீவிரமாக இந்த இரகத்தைப்பற்றிப் பிரச்சாரம் செய்யவே, ஹனேபி சீமா அதைப் பற்றி அறிந்தார்.

முதன் முதலில் அவருக்கு நாகலாந்து மண்ணுக்கு டெய்சுங் நேடிவ் பொருந்துமா என்று சந்தேகம்! ஆனால் பலபேரின் வற்புறுத்தலின் பேரில் டெய்சுங் நேடிவ் பயிரிட அவர் துணிந்தார். துணிவு மட்டும் போதாதே! திட்டமிட்டுச் செயலாற்றுவதில்தானே வெற்றியே அடங்கியுள்ளது! அரசு அலுவலர்கள் கூறும் அரிய யோசனைகளை ஏற்றுக்கொண்டார்! விதை விதைத்து அறுவடை செய்யும் வரை கையாள வேண்டிய முறைகளை ஒழுங்காகக் கையாண்டார். பலன் மிகச் சிறப்பாக அமைந்து விட்டது!

இன்று அவருடைய கிராமப் பக்கம் வழியாகச்செல்லும் நெடுஞ்சாலையில் செல்பவர்களுடைய கண்களில் சீமாவின் எழில் குலுங்கும் பசுமையான வயல்கள் படாமற் போகா. டெய்சுங் நேடிவ் பயிரிட்டுச் சீமா அடைந்த வெற்றி அனைவரின் ஐயத்தையும் போக்கி விட்டது. முன்னோடி சீமாவைப் பின்பற்றிப் பல விவசாயிகள் இன்று நாகாலாந்தில் டெய்சுங் நேடிவ் பயிரிடத் தொடங்கி விட்டனர்.

சீ. செப்.'69—6

டிரைவர் உழவரான கதை

ஓர் ஏக்கருக்கு 70 குவிண்டால் நெல் உற்பத்தி செய்து விந்தைமிகு சாதனையைப் புரிந்திருக்கிறார் திரு. ஹன்ஸ்ராஜ். பாரத நாட்டின் மணி மகுடமான எழில் கொஞ்சும் காஷ்மீர் மாநிலத்தைச் சார்ந்தவர் திரு. ஹன்ஸ்ராஜ். போர்முரசினை அடிக்கடி கொட்டிக் கொண்டிருந்த பாகிஸ்தான் எல்லையில் உள்ளது இவர் வாழும் கிராமம். போர்ப் பயத்தை உதறித் தள்ளி விவசாயத் துறையில் வெற்றிமுரசு கொட்டியிருக்கிறார் திரு. ஹன்ஸ்ராஜ்.

இத்தனைக்கும் ஹன்ஸ்ராஜுக்கு வயது முப்பதுதான். அவருடைய தொழில் முழுக்க முழுக்க விவசாயமும் அன்று. அவர் தொழில் கார் ஓட்டுதல். காரோட்டியாக இருந்தாலும் எப்பொழுது அவருக்கு ஓய்வு நேரம் கிடைக்கிறதோ, அப்பொழுதெல்லாம் விவசாயத்தில் தம் கவனத்தைச் செலுத்திப் பாடுபட்டார்.

விவசாயத் துறையினர் புதிய விதைகளையும் இரசாயன உரங்களையும் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறியவை ஹன்ஸ்ராஜின் ஆர்வத்தைத் தூண்டி, விவசாயத்தில் ஈடுபடச் செய்தது! ''விவசாயிகளுக்கு நவீன முறைகள்பற்றியும் இரசாயன உரங்கள் பற்றியும் மனத்தில் பதியும் வகையில் எடுத்துச் சொல்லப்பட்டால், நிச்சயம் விவசாயிகள் அவற்றைப் பின்பற்றத் தயங்கமாட்டார்கள்'' என்கிறார் திரு. ஹன்ஸ்ராஜ்.

ஹன்ஸ்ராஜுக்குச் சொந்தமான பண்ணையோ மிகச் சிறியது. தனக்குக் கிடைக்கின்ற ஓய்வு நேரத்தையெல்லாம் அவர் பண்ணையின் வளர்ச்சியிலேயே செலுத்துகிறார். அவருடைய மனைவியும் அன்னையாருமே அவருக்குத் துணை. உதவிபுரிய, இரண்டு விவசாயக் கூலி ஆட்களை வைத்துக் கொண்டு பணியாற்றி நல்ல பலன் கண்டுள்ளார்.

விவசாயத் துறை அலுவலர்கள் சொல்லும் அறிவுரையை அக்கறையுடன் ஏற்றுக்கொண்டு நடைமுறையில் செயல்படுத்தி விந்தைமிகு சாதனை கண்டுள்ள ஹன்ஸ்ராஜ் அனைவரின் பாராட்டுதலுக்குரியவராவார். நிலத்திற்கு உரம் போடுதல், நவீன விதைகளைத் தேர்ந்தெடுத்தல், இரசாயன உரம் போடுதல் போன்ற எல்லா வழிகளிலும் வழி முறைகளைச் சீரிய முறையில் கையாண்டு, அவ்வப்போது அரசு சொல்லும் யோசனைகளைப் பெற்று, பண்ணையை வளப்படுத்தியுள்ளார். இதனால் அவர் மிகப் பெரிய பலனை அடைந்துள்ளார். அறுவடை செய்து அவர் கண்ட கண்டுமுதல் ஏக்கருக்கு 70 குவிண்டல்கள்.

ஹன்ஸ்ராஜ் வெறும் உழவர் மட்டுமன்று. பழ மரங்களை உற்பத்தி செய்வதிலும் கைதேர்ந்தவர். கார் ஓட்டும் கரம், கனி வகைகளையும் உற்பத்தி செய்தது! பூஞ்ச் மாவட்டத்திலேயே ஆல்மண்ட் பழ வகையை உற்பத்தி செய்தவர் ஹன்ஸ்ராஜ் ஒருவர்தான்! ஆல்மண்ட் பழவகை மட்டுமன்று! ஆப்பிள், திராட்சை போன்ற கனி வகைகளையும் உற்பத்தி செய்துள்ளார்.

கார் டிரைவர் ஹன்ஸ்ராஜ் அனைவரும் பாராட்டும் உழவராகவும் மாறிய கதை...பசுமைப் புரட்சி காண விழையும் அனைவருக்குமே சுவை அளிக்கும் ஒரு கதையாகும்!

வாய்ப்பை வளமாக்கினர்

இது நடந்தது பதினெட்டு ஆண்டுகட்கு முன்பு.

45 ஏக்கர் நிலமிருந்தும் கவலையின் மறு பிறவிபாகக் காட்சியளித்தார், திரு. அமர்நாத். காரணம்?

குறைந்த விளைச்சல்; பெரிய குடும்பம்.

ஒரு நாள் அவருக்கு ஓர் அரிய வாய்ப்புக் கிட்டியது.

நவீன வேளாண்மைபற்றிய குறிப்பொன்றைத் தற்செயலாக அவர் கண்ணுற நேர்ந்தது. அவ்வளவுதான்; உடனே படித்தறிந்தார். தாமதியாது செயலில் மூழ்கினார்.

விளைவு?

ஒரு குழாய்க் கிணறு உருப்பெற்றது.

ஒவ்வோர் ஏக்கரிலிருந்தும் 8 முதல் 20 மடங்குவரை விளைச்சல் பெருகிற்று. வருமானம் ரூ. 20,000ஐ எட்டியது.

அடுத்த ஆண்டு மேலும் ஒரு குழாய்க் கிணறு அமைத்தார். வருவாய் பன்மடங்கு அதிகரித்தது.

மூன்றாண்டுகட்கு முன்பு ஓர் இயந்திரக் கலப்பையையும் வாங்கிவிட்டார்.

அண்மையில் அவர் மேலும் 45 ஏக்கர் நிலத்திற்கு உரிமையாளராகிவிட்டார்.

மிகுவிளைச்சல் தரும் விதைகளைக் கையாள்வதில் அவருக்குத் தற்போது ஏக்கருக்கு 35 மணங்கு வரை விளைச்சல் கிடைக்கிறது. அமர்நாத், வாய்ப்பை வளமாக்கிய பஞ்சாப் மாநில ஜலந்தர் மாவட்ட உழவராவார்.

அந்த 'அவர்'

அந்தப் பெரியதான இராசஸ்தான் மாநிலம் இயற்கையால் புறக்கணிக்கப்பட்ட மாநிலமாகும். மாநிலத்தின் பெரும்பகுதி பாலைவனங்களாலும், வறண்ட பகுதிகளாலும் சூழப்பட்டவை. ஆண்டு தவறாது வறட்சியும் பஞ்சமும் இராசஸ்தான் மக்களைத் தவறாது தாக்கித் துன்புறுத்தும். இவற்றால் அவதியுறும் மக்களுக்கு மாற்றுத் தொழில்களைத் தந்து வாழ்விப்பதிலேயே பெரும் பொழுதைச் செலவழிக்க வேண்டிய நிலையிலுள்ளது மாநில அரசு.

ஜமீன்தாரி, சாகிர்தார் முறை இன்றளவும் இங்குச் செயலிலிருப்பதால், அவை கிராம வாழ்க்கையின் வளத்தை வெகுவாக உறிஞ்சிவிட்டன. இராசஸ்தான் மாநிலத்தில் தொடங்கப்பெற்ற ஊராட்சி முறை, கடந்த பத்தாண்டுக் காலமாகச் செயற்படுகிறது.

ஊராட்சி முறை தொடங்கிய காலத்தில், இராசஸ்தான் மக்கள் இம்முறையைப் புத்துணர்வு, புதுவேகத்துடன் உளமார வரவேற்றனர். அரசின் ஒவ்வொரு திட்டத்திலும் தங்களுக்கு நிரம்பப் பங்குண்டு என்ற உள்ளுணர்வோடு மக்கள் செயற்படுவாராயினர்.

ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல மக்களின் உற்சாகம் குன்றி, ஊர் நலத் திட்டங்களை நன்முறையில் செயற்படுத்தத் தவறிவிட்டனர்.

ஊராட்சி முறை சிறந்த முறையில் வெற்றியடைதற்கு அலுவலர்களுக்கும் மக்கள் தலைவர்களுக்குமிடையே

நல்லுறவு நிலவுதல் முதன்மையானதாகும். ஊர் மக்களின் உற்சாகத்தைக் கிளறி அவர்களின் நல்லுதவியை, ஒத்துழைப்பை நாடிப் பெறும் பணி இங்கு ஏனோ அலுவலர்களிடம் ஒப்புவிக்கப்பட்டுவிட்டது. எனவே செயல் முறையில், காரியங்களனைத்தையும் அரசு அலுவலர்களே செய்யவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகிவிடவே, ஊராட்சி முறையில் மந்த நிலை எங்கும் பரவிவிட்டது. கல்வியறிவில்லா ஊர்ப் பெருமக்கள், அலுவலர்கள் காட்டும் வழியைப் பின் தொடருவாராயினர்.

இவ்விரண்டு சாராரும் ஒன்று சேர்ந்து உழைத்தார்களாயின், சமுதாய நலத் திட்டம் சிறந்த வெற்றிவாகை சூடும். ஆனால் அந்த நிலை இராசஸ்தானின் கோடா என்ற பிரிவில் உருவாகவில்லை.

தம் வருவாயைப் பெருக்கிக் கொள்ளுதற்கு ஊராட்சிச் சமிதிகள் வரிகள் விதித்துள்ளன. இருப்பினும் பெரும்பாலான, பெரிய செலவினங்களைச் சமாளிப்பதற்கு அவை மாநில அரசையே எதிர்நோக்க வேண்டியுள்ளது. அரசினரிடமிருந்து பெறும் மானியங்களைச் செலவிடுதற்கு எண்ணற்ற நிர்வாக நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

ஊராட்சி மன்றங்களின் கூட்டமும் ஒழுங்காக நடைபெறுவதில்லை. சில சமயங்களில் கூட்டத்திற்குரிய நிகழ்ச்சி நிரலே உருவாக்கப்படுவதில்லை. இன்னும் சில வேளைகளில் குறைந்த கால அறிவிப்பிலேயே கூட்டங்கள் நடைபெறுகின்றன. கூட்டத்திற்குத் தேவைப்படும் குறைந்த எண்ணிக்கை (கோரம்) உறுப்பினர்கள் வராதிருப்பினும் கூடக் கூட்டம் நடைபெறுகிறது. உறுப்பினர்களைக் கூட்டத்திற்கு அழைக்க ஒரு விந்தையான முறை கையாளப்படுகிறது. பானங்கள், விருந்து, இனிப்புப் பண்டங்கள் போன்றவை உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.

கூட்டத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் எது குறித்தும் விவாதிப்பதில்லை. தம் 'கோஷ்டித்' தலைவர்கள் பேசட்டும் என்று மௌனமாக இருந்து விடுகின்றனர்.

ஊராட்சிச் சமிதியினர் இரு கட்சிகளாகப் பிரிந்து விடுகின்றனர். வலிமையான ஆட்சியைச் சார்ந்த பகுதிகளுக்கே ஊராட்சி முறையினால் விளையும் நன்மைகள் பெருவாரியாகக் கிடைத்துவிடுகின்றன. சிறுபான்மை 'கோஷ்டி'ப் பகுதி கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

இராசஸ்தான் மாநில கோடா பிரிவிலுள்ள ஊராட்சிச் சமிதிகளின் செயல்முறை பற்றி ஆய்வு செய்ததில் மேற்காணும் உண்மைகள் வெளியாகியுள்ளன.

ஊர்ப்புறத்திலுள்ள ஒவ்வொருவரும் ஊராட்சி முறைதான் சிறந்த முறை எனக் கூறுகின்றனர். எனவே ஊராட்சித் திட்டங்களை உருவாக்கும் ஒவ்வொரு வேளையிலும் அந்த 'அவரை'ப் பக்கத்தில் அமர்த்தி அவருடைய ஆலோசனைகளைப் பெற்றால்தாம், ஊராட்சிமுறை சிறப்புடையதாக அமையும். அப்படித்தானே!

காவலர் உழவரானார்

குதுப்மினாரிலிருந்து ஆறு கல் தொலைவில் அமைந்துள்ள சட்டர்பூர் மைய அரசு ஆளுகைப் பகுதிகளிலேயே சிறந்த ஊரெனத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

அழகிய நவீன பண்ணை இல்லங்கள், கோழிப் பண்ணைகள், சிமெண்டினால் கட்டப்பெற்ற வீடுகள், தார்ச் சாலைகள், சுத்தமான வீதிகள், மனமகிழ் மன்றங்கள் போன்ற வசதிகளனைத்தும் நிரம்பப் பெற்ற இவ்வூரைக் காண்கையில் இஃது ஒரு சிறந்த ஊரெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதில் ஐயப்பாடிருக்க முடியாது.

சட்டர்பூரில் வாழும் 1900 பேர்களில் சுமார் 80 சதவீதத்தினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். நாட்டுப் பிரிவினைக்கு முன்னர் முஸ்லீம்களே இங்குப் பெருவாரியாக வாழ்ந்துவந்தனர். ஆனால் தற்போது இந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள், அரிசனங்கள் அனைவரும் இங்கு ஒற்றுமையுடன் வாழ்கின்றனர்.

இல்லந்தோறும் வானொலிப் பெட்டிகள்

இவ் வூரில் மூன்று பள்ளிகள் உள்ளன. ஊர் முழுவதற்கும் மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

குடிநீருக்கென மேல்நிலை நீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டு, தெருக் குழாய்கள் வாயிலாகக் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

ஒவ்வோர் இல்லத்திலும் வானொலிப் பெட்டி இருக்கிறது. ஊராட்சி மன்றத்தில் உருவ ஒலிப்பெட்டி (டெலிவிசன்) யொன்று நிறுவப்பட்டுள்ளது.

இயந்திரக் கலப்பைகள், விசைத் தெளிப்பான்கள் போன்ற நவீன உழுபடைக் கருவிகளனைத்தும் பெருவாரியாக இங்குப் பயன்படுத்தப்படுகின்றன. தவிர நூற்றுக்கும் அதிகமான குழாய்க் கிணறுகள் தோண்டப்பெற்று நீர்வள வசதி செய்யப்பட்டுள்ளது.

காவலர் உழவரானார்

இவ்வகைச் செழிப்பிற்கும், மக்களின் வளத்திற்கும் அடிப்படைக் காரணங்கள் எவை? உழவர்களின் அயராத உழைப்பு இதற்கு அடிப்படையாக விருக்கலாம். இருப்பினும் இளைஞர் அனைவரும் வேளாண்மையை மேற்கொண்டதுதான் தலையாய காரணமென்று தெரிந்துள்ளது.

தில்லிக் காவலர் படையில் பணியாற்றிய திரு. ஹரி சரண்சிங் என்ற இருபத்தெட்டு வயது இளைஞர், காவலர் பணியையே துறந்துவிட்டு வேளாண்மையைத் தழுவியுள்ளார். அவருடைய தந்தைக்கு மூன்று பண்ணைகளும், ஓர் இயந்திரக் கலப்பை, ஒரு பெரிய வீடு, இரண்டு குழாய்க் கிணறுகள், நவீன உழுபடைக் கருவிகள் ஆகியவையும் உள்ளன.

“ஒட்டு இன விதைகளைக் கையாண்டு நவீன முறையில் வேளாண்மை செய்கிறேன். அதனால் என் பண்ணையில் மூன்று மடங்கிற்கு விளைச்சல் பெருகியுள்ளது” என்கிறார் திரு ஹரிசரண்சிங். எஸ். 308, சோனலிகா, சர்பாத்தி சோனரா, கல்யாண் சோனா போன்ற உயர்ந்த இனக் கோதுமை விதைகளை அவர் பயிரிடுகிறார். தவிர, பண்ணையுரமும் இரசாயன உரமும் இடுவதற்கு அவர் தவறுவதில்லை. ஏக்கருக்கு 50 மணங்கு முதல் 70 மணங்கு வரை விளைச்சல் கிடைக்கிறது.

சட்டர்பூர் வளமிக்க ஊர் மட்டுமன்று. மகிழ்ச்சி ததும்பும் ஊரும் அஃதே.

பாலைவன வயல்

ஏறத்தாழப் பாலைவனம்போன்றே காணப்படும் அவருடைய வயல், அவருக்கு மிகு விளைச்சலைத் தந்து, மாநிலத்திலேயே “சிறந்த மூன்றாவது உழவர்” என்ற விருதையும் பரிசையும் தேடித் தந்துள்ளது.

அவ் வுழவர் திரு. படேல்; அவருடைய மாநிலம் குஜராத். இப் பாலைவன வயல் அவருக்கு ஓர் ஏக்கரில் 2858 கிலோ கோதுமையைத் தந்தது.

வணிகத் துறையில் சிறந்து விளங்கும் திரு. படேல், உழவுத் தொழிலிலும் தம் திறமையைச் சோதிக்க விரும்பினார். வேளாண்மை முறைகளைப்பற்றிக் கூறும் சிறு நூல்களைப் படித்துணர்ந்தார். வானொலியில் ஒலிபரப்பாகும் பண்ணைச் செய்திகள், குறிப்புக்களையும் தவறாது கேட்டுக் குறிப்பெடுத்துக் கொள்வார். தவிர வளர்ச்சி அலுவலர்களையும் அவ்வப்போது சந்தித்து, அவர்களின்

மேலான யோசனைகளையும், கருத்துக்களையும் செயற்படுத்துவார்.

இம்முயற்சிகளெல்லாம் அவருக்குச் சிறந்த பயன்களைத் தேடித் தந்துள்ளன.

1965-66ஆம் ஆண்டிற்குரிய கம்பு உற்பத்திப் போட்டியில் பங்கு பெற்று முதற்பரிசு பெற்ருர். அடுத்த ஆண்டு கோதுமை உற்பத்திப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்துக் கொண்டார் திரு. படேல்.

''பரிசுத் தொகையைப் பெறுவதனுல் மட்டும் நான் மகிழ்வடைவதில்லை. சக உழவர்களும் என் முறைகளைப்பின்பற்றி விளைச்சலை உயர்த்திக் கொள்வதைக் காணும்போதுதான் எனக்கு உண்மையில் மிக்க மகிழ்வேற்படுகிறது'' என்கிருர் திரு. படேல்.

துணை வேந்தர் மிகப் பெரிய உழவராணர்

உத்தரப் பிரதேசத்திலேயே மிகப் பெரிய உழவர், திரு. டி.பி. சிங் அவர்கள்தாம்.

பந்த் நகரிலுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பணியாற்றும் இவர், உத்தரப் பிரதேசத்திலேயே—ஏன் வட இந்தியாவிலேயே—மிகப் பெரிய உழவரென்று தன்னைப்பற்றி ஒரு பேட்டியில் நகைச்சுவையாகக் கூறியுள்ளார்.

அவருடைய உயர்ந்த தலைமையில் இயங்கிவரும் அப் பல்கலைக் கழகம் 1967-68ஆம் ஆண்டில் மட்டும் 75,000 குவிண்டல் எடை விதைகளை உற்பத்தி செய்து, உத்தரப்பிரதேச உழவர்களுக்கும், நாட்டிலுள்ள பல்வேறு மாநில உழவர்களுக்கும் வழங்கியுள்ளது.

கடந்த மூன்ருண்டுகளாக அப் பல்கலைக் கழகத்தின் வருவாய் பத்து மடங்கு உயர்ந்துள்ளது. 1964-65ஆம் ஆண்டில் ரூ. 8·4 இலட்சம் மட்டும் வருவாய் படைத்த அப் பல்கலைக் கழகத்தின் 1968-69ஆம் ஆண்டின் வருவாய் ரூ 80 இலட்சமாகும். விரைவிலேயே அதன் வருவாய் ரூபாய் ஒரு கோடியாகிவிடுமென்றும், அந் நிலையில், அரசின் மானியமே தேவையிருக்காது என்றும் கருதப்படுகிறது.

அறுவைக்கு ஓர் அறுவை

தகுதியற்றவர்களுக்கோ அல்லது முறையற்ற வகையிலோ எவருக்கேனும் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு விட்டால், அவருக்கு அரசுச் செலவிலேயே மீண்டும் ஓர் அறுவை சிகிச்சை செய்து பழைய நிலைக்குக் கொண்டுவர, மகாராட்டிர அரசு முன்வந்துள்ளது.

அதன்படி, திருமணமாகாதவர்கள், 50 வயதிற்குள்ளேயே மனைவியையும் மக்களையும் இழந்து நிற்போர், திருமணமாகி 50 வயதிற்குள் மக்களை இழந்து மனமுடைந்து இன்னலுறுவோர் ஆகியோருக்கு அரசினரின் செலவிலேயே மீண்டும் அறுவைச் சிகிச்சை செய்யப்படும். இதனுல் அவர் குழந்தைச் செல்வத்தை மீண்டும் பெறவியலும் மாநிலத்திலுள்ள சில மருத்துவமனைகளில் மட்டுமே தற்போது இச் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது.

சேமிப்புக்கோர் இலக்கணம்

சிறு சேமிப்பு பெருவாழ்வுக்கு அடிப்படை. சிறுதுளி பெரு வெள்ளமல்லவா! மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள கிழக்கு நிமார் மாவட்ட மக்கள் சிறுசேமிப்பில் காட்டும் அக்கறை பாராட்டற்பாலது. 1968-69இல் இம்மாவட்ட மக்கள் சிறு சேமிப்பில் ரூ. 98,94,370ஐ இட்டு வைத்துள்ளனர்! அதாவது சுமார் ஒரு கோடி ரூபாய் அளவிற்குச் சேமித்து வைத்துள்ளனர்! சிறு சேமிப்பில் மிகுந்த அக்கறை கொண்ட மக்கள் இவர்கள் என்பதற்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு வேறென்ன வேண்டும்?

1967-68ஆம் ஆண்டுக்கு மத்தியப் பிரதேச மாநிலத்திலேயே இம் மாவட்டம் பாதுகாப்புப் பத்திரங்களில் ரூ. 5,65,000 முதலீடு செய்து, இரண்டாவது இடத்தைப்பிடித்தது. 1968-69இல் இம்முதலீடு ரூ.7,07,000 ஆகப் பெருகியது! இரண்டாயிரம் அஞ்சலகச் சேமிப்பு வங்கிக் கணக்குகள் சேர்க்கப்படவேண்டும் என்பது இலக்கு. ஆனல் சேர்க்கப்பட்டது எவ்வளவு தெரியுமா? 3,944 கணக்குகள்! அதாவது இலக்கைவிட இரண்டு மடங்கு! அந்தக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ. 80,65,100. தேசியப் பாதுகாப்புக் கணக்குகளில் முதலீடு செய்யப்பட்டது ரூ. 4,20,520 ஆகும். 1968-69 ஆரம்பத்தில், வளரும் சிறுசேமிப்புத் திட்டத்தில் சேர்ந்தோர் எண்ணிக்கை 1467. இஃது ஆண்டின் இறுதியில் 9,011 ஆக உயர்ந்துவிட்டது.

இத் துறையில் இம் மாவட்டத்துக் கல்வி நிறுவனங்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது. மாவட்டத்தில் ஆறு கிராமங்கள் ''சேமிப்புக் கிராமங்களாக'' அறிவிக்கப்பட்டுள்ளன.

நேருக்கு நேர்

குடும்பக்கட்டுப்பாடு பற்றிய பிரச்சாரம் பட்டி தொட்டிகளில்கூட வெகு வேகமாக நடைபெற்று வருகின்ற நேரம் இது. இத் துறையில் உத்தரப் பிரதேச மாநிலத்தில், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை மக்களுக்கு வலியுறுத்திக் கூறும் முறையில், நவீன முறையொன்றினைக் கையாள முனைந்துள்ளனர். குடும்பக் கட்டுப்பாடு உதவியாளர்கள் மக்களைத்தனித்தனியாகச் சந்தித்து நேருக்கு நேர் விளக்கம் கூறி, அவர்களுடைய மனத்தை மாற்றும் பணியினை மேற்கொண்டுள்ளனர். பெருவாரியான அளவில் மொத்தமாக மக்களைக் கூட்டிவைத்துப் பிரச்சாரம் செய்யாமல், மக்களை, தனித்தனியாகச் சந்தித்துப் பணிபுரியும் வகையில் குடும்பக் கட்டுப்பாடு உதவியாளர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கென்று வரையறுக்கப்பட்டுள்ள 'பகுதியில்' தங்கி, வசித்துக் குடும்பக் கட்டுப்பாடுப் பிரச்சாரம் செய்வர். பத்தாயிரம் மக்கள் கொண்ட பகுதிக்கு ஓர் உதவியாளர் என்ற முறையில் இப்பணி பகிர்ந்து ஆற்றப்படும். சுமார் 1800 தம்பதிகள் ஒரு பகுதியில் இருக்கலாம். இந்தத் தம்பதிகளைக் குடும்பக் கட்டுப்பாடு உதவியாளர், அவர்கள் வீடுகளுக்கே சென்று பார்த்து, பேசி, கருத்துக்களை எடுத்துக்கூறி, குடும்பக் கட்டுப்பாடு செய்ய வேண்டியதன் அவசியத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறி, அவர்கள் மனத்தை மாற்றும் பணியில் ஈடுபடுவார். ஒவ்வொரு வட்டாரத்திற்குமாக, இப் பணி குறித்துத் திட்டமிடப்பட்ட வேலை முறையும், தொடர்ந்து இப்பணி செம்மையுற நடைபெற வேண்டியது குறித்தும் கவனம் செலுத்தப்படுகிறது. இப்படிப்பட்ட விவகாரங்களில் கூட்டம் கூட்டிப் பொதுவாகப் பிரச்சாரம் செய்வதைக் காட்டிலும், தனித்தனியாகக் குடும்பம் குடும்பமாகப் பார்த்து, செய்தியை விளக்கி, அவரவர்களுக்குத் தகுந்தவாறு புரியவைத்து, குடும்பக் கட்டுப்பாடுப் பிரச்சாரம் செய்வதில் உறுதியாகப் பலன் அதிகமுண்டு என்று சொல்லலாம்.

பள்ளி ஆசிரியரின்

தமிழகத் தொடக்கப் பள்ளி ஆசிரியரொருவர், விரைவிலேயே கரும்பாலை யொன்றிற்கு உரிமையாளராகவிருக்கிருர். ஓமலூரிலுள்ள கிராமத் தொழில்கள் திட்டத்தின் வாயிலாக அவருக்கு இவ்வுதவி கிடைக்கவிருக்கிறது.

திரு. இராமசுவாமி பிள்ளை அவர்கள் அ நூர்ப்பட்டியில் வசிக்கும் (தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், சேலம் மாவட்டம்) ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியர். அவருக்குச் சொந்தமான சிறிதளவு நிலத்தையும் கட்டடத்தையும் பயன்படுத்தி, ஏதாவதொரு தொழிலில் ஈடுபட்டு மேலும் சிறிது பொருள் திரட்டவேண்டுமென்று அவர் பெரிதும் விரும்பினர்.

ஆழ்ந்த சிந்தனைக்குப் பின், கற்பலகைகளையும் கற்குச்சிகளையும் தமது சொந்த ஊரிலேயே உற்பத்தி செய்து விற்பனை செய்யத் திட்டமிட்டார். ஆனல் அவருடைய ஊரில் மின்வசதி இல்லாததால் இவ்வெண்ணத்தை அவர் கைவிட வேண்டியதாயிற்று.

தொழிலார்வம்

மின் வசதியுள்ள இடங்களுக்குச் சென்று, தொழிலைத் தொடங்க வேண்டுமென்ருலோ பணமும், பொருளும் மிகையாகத் தேவைப்பட்டன.

திரு. இராமசுவாமிக்கோ தம் சொந்த ஊரிலல்லாது, மற்றவிடங்களில் தொழிலை நிறுவப் போதிய வசதிகளில்லை.

இத்தருணத்தில்தான், ஓமலூரிலுள்ள கிராமத் தொழில்கள் திட்ட அலுவலர்கள், அவருக்கு ஓரரிய யோசனை கூறினர். அது அவருக்கு ஏற்றதாகவும் விருப்பமானதாகவும் அமைந்துவிட்டது.

அவருடைய ஊரைச் சுற்றிலுமுள்ள உழவர்கள் கரும்பையே பெருவாரியாகப் பயிரிடுகின்றனர். ஆனல் கரும்பைச் சாறெடுக்கும் நிலையம் அருகில் எங்குமே இருக்கவில்லை.

எனவே கரும்பாலையொன்றை நிறுவ அரசிடம் நிதியுதவி கோரி, திரு. இராமசுவாமி விண்ணப்பம் செய்துள்ளார். விரைவிலேயே நிதியும் கிடைக்கவிருக்கிறது.

இதனல் அவருடைய வருவாயும் பெருகும்; சுமார் 15 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏற்படும்.

Articles reproduced from 'Panchayat Raj' Pages 73 to 80 (8 Pages)

பயிர்களுக்கு சிறந்த அடி உரம்

பாக்டம்பாஸ்

FACT

முக்கிய தாவர உணவுகளான தழைச் சத்தையும், மணிச்சத்தையும் ஒருங்கே கொண்ட அதிசயக்கூட்டு உரம் பாக்டம்பாஸ் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்ற உரம். நிலத்தில் இட்டவுடனே இவ்வுரம் முழுவதும் தண்ணீரில் கரைபடும் தன்மை உடையதால் பயிர்களுக்கு வேண்டிய உணவுச் சத்துக்களை பாக்டம்பாஸ் உடனடியாகக் கொடுக்கிறது. பாக்டம்பாஸ் பயிர்களை நல்ல பசுமையுடன் வளரச் செய்கிறது... மகசூலை அதிகப்படுத்துகிறது.

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவாங்கூர் லிமிடெட்
உத்யோகமண்டல், கேரளா

பிராந்திய அலுவலகம்: 2-வது மாடி, 19, கமாண்டர்-இன்-சீப்-ரோடு, சென்னை-8.

உரத்தின் தரத்திற்கு உத்திரவாதம் யானை மார்க்



FT 2203 TM

கிராமநலம் பகுதி-2
GRAMANALAM PART-2

ஊராட்சி அரசிதழ்
PANCHAYAT GAZETTE

ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழு

புதிய உறுப்பினர்கள் நியமனம்

ஊராட்சி வளர்ச்சிக் குழுக்கள் - ஊராட்சி வளர்ச்சிபற்றிய ஆலோசனைக் குழுக்கள்- புதியஉறுப்பினர்கள் நியமனம்.

[Panchayat Development - Committees-Panchayat Development consultative committees - Appointment of new members - Orders issued.]

31-3-1962 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 797இல் ஊராட்சி நிர்வாகம் பற்றிய எல்லாச் செய்திகளிலும் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்காக வேண்டிக் கீழ்க்கண்ட ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுக்களை அமைத்து ஆணைகள் பிறப்பிக்கப் பட்டன.

1. நிர்வாகம் மற்றும் பணிகள் பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக்குழு.
2. உற்பத்தித் திட்டங்கள்பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக்குழு.
3. நலப்பணிகள் திட்டம்பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக்குழு.

அரசுத் தலைமைச் செயலகத்தில் சில துறைகளைப் பிரித்துத் திருத்தியமைத்தும் சில துறைத் தலைவர்களைப் புதிதாக அமைத்தும் அண்மையில் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. ஆகவே, இந்தக் குழுக்களுக்குப் புது உறுப்பினர்களை நியமனம் செய்ய வேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டுள்ளது. அரசுச் செயலாளர்களில் கீழ்க்கண்டவர்களையும், ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினர்களாகக் கீழ்க்கண்ட முறையில் நியமனம் செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது :

அதிகாரிகளின் பதவிப் பெயர்	அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள குழுக்கள்
1. அரசுச் செயலாளர், தொழில் துறை	உற்பத்தித் திட்டங்கள்பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழு.
2. அரசுச் செயலாளர், தொழிலாளர் துறை	
3. அரசுச் செயலாளர், கூட்டுறவுத் துறை	

அதிகாரிகளின் பதவிப் பெயர்	அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள குழுக்கள்
4. அரசுச் செயலாளர், சமூகநலத் துறை	நலப்பணிகள் பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழு
5. அரசுச் செயலாளர், கல்வித் துறை	
6. அரசுச் செயலாளர், சுகாதாரம்-குடும்பக் கட்டுப்பாடுத் துறை	
7. பிற்பட்ட வகுப்பினர் நலத் துறை இயக்குநர்	
8. சுகாதாரப் பணிகள் - குடும்பக் கட்டுப் பாடுத் துறை இயக்குநர்	
9. சுகாதாரப் பணிகள் - குடும்பக் கட்டுப் பாடுத் துறைக் கூட்டு இயக்குநர்	
10. கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்	(1) நிர்வாகம் மற்றும் பணிகள் (2) உற்பத்தித் திட்டங்கள் (3) நலப் பணிகள் வேலைத்திட்டம் ஆகிய ஊராட்சி வளர்ச்சி பற்றிய ஆலோசனைக் குழுக்கள்.

3. மேலே பத்தி 2இல் உறுப்பினர்கள் நியமனம் செய்ததை ஒட்டி, ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுக்கள், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளபடி அமைந்திருக்கும்.
4. பயணப்படி, மற்றப் படிகள் வகையில், இந்தக் குழுக்கள் முதல்நிலைக் குழுவாகக் கருதப்படும். மாவட்ட ஆட்சித் தலைவர்களோ, அல்லது அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியோ, இந்தக் குழுக்களின் அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்களின் பயணப்படிக் கைச்சாற்றுகளில் மாற்றுக் கையொப்பம் இட அதிகாரம் பெற்றவர்களாக இருப்பார்கள்.

[கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 29-8-69 தேதியிட்ட அரசு ஆணை எண் 1606.]

இணைப்பு

ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக் குழுக்களின் அமைப்பும் பொறுப்புகளும்

1. நிர்வாகம் மற்றும் பணிகள் பற்றிய ஊராட்சி வளர்சி ஆலோசனைக்குழு:

உறுப்பினர்கள் :

1. முதல் அமைச்சர் (தலைவர்).
2. மற்ற எல்லா அமைச்சர்களும்.
3. மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் பொதுப்பணிகள்பற்றிய நிலைக் குழுக்களின் தலைவர்கள்.
4. தலைமைச் செயலாளர்; நில வருவாய் ஆணையர்; அரசுச் செயலாளர்-வருவாய்த்துறை; அரசுச் செயலாளர்-பொதுப் பணித்துறை; அரசுச் செயலாளர்-நிதித்துறை; அரசுச் செயலாளர்-கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை; கிராம வளர்ச்சி இயக்குநர்; தலைமைப்

பொறியாளர் (நெடுஞ்சாலைகள்-கிராமப் பணிகள்)

5. எல்லாக் கிராம மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் பொதுக்குழுவின் தலைவர் என்ற வகையில்)

பொறுப்புகள் :

மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் பொதுக்குழுவிடமும், பொதுப்பணிகள் குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லாப் பொருள்களையும் இக்குழு கவனிக்கும். அதாவது :

(i) ஊராட்சி, ஊராட்சி நிறுவனங்கள் அமைப்புகள் உட்பட ஊராட்சி நிர்வாகம், வரவு செலவுத்திட்டம், வரி விதிப்பும் நிதியும், ஐந்தாண்டுத் திட்டம், விளம்பரம்.

(ii) பெரிய நீர்ப்பாசனம் உள்ளிட்ட பொதுப்பணிகள், கட்டட வேலைகள், கிராம வேலைகள், மான்யம், பாதைகள், நீர் வழங்கல் மற்றும் தொடர்புள்ள வேலைகள்.

2. உற்பத்தித் திட்டங்கள் பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக்குழு:

1. முதல் அமைச்சர் (தலைவர்).
2. நிதியமைச்சர், தொழில் அமைச்சர், விவசாயம் - அரிசன நல அமைச்சர், கூட்டுறவுத்துறை அமைச்சர், மின்சார அமைச்சர், உணவு-வணிக வரி அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர், உள்ளாட்சித்துறை அமைச்சர், அறநிலைய அமைச்சர்.
3. (i) உணவு விவசாயம் (ii) தொழில், தொழிலாளர் நலன் பற்றிய மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் நிலைக் குழுக்களின் தலைவர்கள்.
4. தலைமைச் செயலாளர், அரசுச் செயலாளர்-தொழில் துறை, அரசுச் செயலாளர்-தொழிலாளர் நலத் துறை, அரசுச் செயலாளர் - கூட்டுறவுத் துறை, அரசுச் செயலாளர்-விவசாயத் துறை, அரசுச் செயலாளர் - நிதித் துறை, அரசுச் செயலாளர்-கிராம வளர்ச்சி&உள்ளாட்சித்துறை, அரசுச் செயலாளர்-உணவுத் துறை, உணவு உற்பத்தி ஆணையர், விவசாயத்துறை இயக்குநர், விலங்கின வளர்ச்சித் துறை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மீனளத்துறை இயக்குநர், வனவளத்துறைத் தலைமைப் பாதுகாப்பாளர், கிராம வளர்ச்சி இயக்குநர், கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர்.

பொறுப்புகள் :

மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் (i) உணவு-விவசாயம் (ii) தொழில்-தொழிலாளர் நலம் பற்றிய நிலைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லாப் பொருள்களையும் இக்குழு கவனிக்கும். அதாவது :

(i) உணவு-விவசாயம் :

விவசாயம், உணவு உற்பத்தி, சிறிய பாசனம், கடன்கள், கூட்டுறவு, விலங்கின வளர்ச்சி, காடுகள் மற்றும் உணவு-விவசாயம் சம்பந்தப்பட்ட வேலைகள்.

(ii) தொழில், தொழிலாளர் நலன் :

கதர்-கிராமத் தொழில்கள், தொழில்கள், மின்சாரம், வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, மற்றும் தொடர்புள்ள வேலைகள்.

3. நலப்பணிகள் பற்றிய ஊராட்சி வளர்ச்சி ஆலோசனைக்குழு :

உறுப்பினர்கள் :

1. முதல் அமைச்சர் (தலைவர்).
2. நிதியமைச்சர், அரிசன-விவசாய அமைச்சர், கல்வி - சுகாதார அமைச்சர், பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர், உள்ளாட்சித்துறை அமைச்சர்.
3. மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் (i) கல்வி (ii) சுகாதார நலப்பணிகள் பற்றிய நிலைக் குழுக்களின் தலைவர்கள்.

4. தலைமைச் செயலாளர், நிதித் துறைச் செயலாளர், கல்வித் துறைச் செயலாளர், சுகாதாரம் குடும்பக் கட்டுப்பாடுத் துறைச் செயலாளர், சமூக நலத்துறைச் செயலாளர், ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலாளர், கிராம வளர்ச்சி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், சுகாதாரப் பணிகள் - குடும்பக் கட்டுப்பாடுத்துறை இயக்குநர், சுகாதாரப் பணிகள் - குடும்பக் கட்டுப்பாடுத் துறை இணை இயக்குநர், அரிசன நலத் துறை இயக்குநர், பிற்பட்ட வகுப்பினர் நலத்துறை இயக்குநர், தமிழ்நாடு சமூகநல வாரியத் தலைவர், மகளிர் நலத்துறை இயக்குநர்.

பொறுப்புகள் :

மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் (i) கல்வி (ii) சுகாதாரம் - நலப்பணிகள் பற்றிய நிலைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள எல்லாச் செய்திகளையும் இக்குழு கவனிக்கும்.

(i) கல்வி :

பல்கலைக் கழகக் கல்வி தவிர கல்வி தொடர்பான எல்லாச் செய்திகளும்.

(ii) சுகாதார நலப்பணிகள் :

மருத்துவசதி, பொதுச் சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு, சமூக நலம், அரிசன நலம், மதுவிலக்கு மற்றும் தொடர்புள்ள செய்திகள்.

[ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1969 ஆகஸ்ட் திங்கள் 29ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 1606ன் சுருக்கம்.]

சிந்தனை

சிந்தனை செய்க சிந்தனை செய்க
எந்தப் பொருளையும் சிந்தனை செய்க
சிந்தனை, ஆய்வை உந்துதல் உறுதி;
ஆய்க ஆய்க எதையும் ஆய்க
எதையும் ஆய்க பதைபதைப் பின்றி;
விதையை ஆய்க விளைவை ஆய்க
முதலை ஆய்க முடிவை ஆய்க
கருவை ஆய்க உருவை ஆய்க
பருமையை ஆய்க நுண்மையை ஆய்க
அணுவை ஆய்க மலையை ஆய்க
அண்ட பிண்டம் அனைத்தையும் ஆய்க
ஆழ்ந்தே ஆழ்ந்தே ஆய்ந்து தோய்க!

— திரு.வி.க.

திங்கள்தோறும் 5ஆம் நாள்

மனு நீதி நாள்

அரசாங்க அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுவதில் கிராம மக்கள் மகிழ்ச்சி கொள்ளும்படியான சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகிறது. கிராம மக்களின் முறையீடுகளைக் கேட்டு, அவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளைக் கவனித்து முடிந்த உதவிகள் அனைத்தும் செய்யும்படியாக அலுவலர்களுக்குப் பல கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. பல்வேறு மட்டங்களில் அதிகாரிகளை அணுகுவதில் கிராம மக்களுக்கு வாய்ப்புகள் சரியானபடி அமைவதில்லை என்பதுதான் வரலாற்றுப் பின்னணி. கடந்த சில திங்கள்களில் செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில், பலமுனைத் திட்டம் என்ற பெயரில் ஒரு பரிசோதனை நடத்தப்பட்டது.

மக்களாட்சி அமைப்பில், அரசு அலுவலர்கள் குழு ஒன்று, குறிப்பிட்ட நாட்களில் கிராமங்களுக்குச் சென்று, மனுக்களை ஏற்று, குறைகளைக் கேட்டு, குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுதான் இதன் அடிப்படை நோக்கம். முடிந்தவரை அந்த இடத்திலேயே காரியம் செய்யப்படவேண்டும். இந்தத் திட்டத்தை மாநிலம் முழுவதற்கும் நீடிக்கவேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது.

இத்திட்டத்தில் முக்கியப் பகுதிகள் வருமாறு :

1. 1969 அக்டோபரிலிருந்து 'டிப்டி தாசில்தார்' பதவி நிலைக்குக் குறையாத அரசு அலுவலர் ஒருவர் தலைமையில், திங்கள் தோறும் 5ஆம் தேதியன்று வருவாய்த் துறை, ஊராட்சி ஒன்றியம், பொதுப்பணித் துறை, மின்சாரத் துறை ஆகியவைகளைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒவ்வொரு ரெவின்யூ 'பிர்க்கா'விலும் ஒரு கிராமத்துக்குச் செல்லும். பிர்க்காவில் 12க்கு மேற்பட்ட கிராமங்கள் இருந்தால் மாதத்தில் 6ஆம் நாளன்று இரண்டாவது கிராமத்துக்குக் குழு செல்லும். ஒவ்வொரு கிராமத்துக்கும் அலுவலர்கள் குழு ஆண்டுக்கு ஒரு முறை செல்லவேண்டும் என்பது இந்த ஏற்பாட்டின் நோக்கமாகும். இப்படிச் செல்லும்போது, ஒரு முடிவு மேற்கொள்ள என்னென்ன ஆய்வு தேவையோ அந்த ஆய்வுகளைக் குழு மேற்கொள்ளும். பிரச்னைகளுக்கு அந்த இடத்திலேயே தீர்வு காண முடியாவிட்டால், முறையீட்டு மனுவைப் பதிவு செய்துகொண்டு, சம்பந்தப்பட்ட கிராம வாசிகளுக்கு ஒரு மாதத்துக்குள் ஆணை கிடைக்கும்படியாகச் செய்யவேண்டும்.
2. 'ரெவின்யூ டிவிஷனல்' அதிகாரிகள் மாதத்துக்கு ஒரு தாலுக்கா அலுவலகத்துக்கும் தனி சப் தாலுக்கா அலுவலகத்துக்கும் கூடுமான வரை செவ்வாய்க் கிழமைகளில் முன்கூட்டித் திட்டமிட்டு, சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவித்துவிட்டு, செல்லவேண்டும்.
3. மாவட்டக் கலெக்டர் முன்கூட்டித் திட்டமிட்டு டிவிஷனல் அலுவலகத்துக்குச் சென்று மனுக்களைப் பெற்று, பிரச்னைகளைக் கவனிப்பார். மாவட்ட கலெக்டர் தாலுக்கா தலைமை அலுவலகங்களுச்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை செல்வது வரவேற்கத்தக்கதாக இருக்கும்.

மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களின் பிறந்தநாள் நினைவையொட்டி 1969 செப்டம்பர் 15இல் எல்லா மாவட்டங்களிலும் இத்திட்டத்தைத் தொடங்குமாறு அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் பெயரில்

வீரப் பதக்கம்

தமிழ்நாடு போலீசில் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த அலுவலர்கள், திறம்பட அலுவலாற்றுவதற்கு ஊக்கமளிப்பதற்காக, முதலமைச்சர் பெயரில் போலீஸ் பதக்கம் வழங்கும் திட்டத்தைத் தமிழ்நாடு அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. மாநில போலீஸ் சர்வீஸ், சார்நிலை சர்வீஸ் ஆகியவைகளைச் சேர்ந்தவர்களுக்கு வீரச் செயல்களுக்காகவும், கடமையில் உறுதியாக நின்று பணியாற்றியதற்காகவும் இந்தப் பதக்கங்கள் வழங்கப்படும்.

"தமிழ்நாடு முதலமைச்சர் போலீஸ் பதக்கம்" எனப்படும் இந்தப் பதக்கத்தில், ஏற்றவாறு "வீரப்பதக்கம், சிறப்புப் பதக்கம்" என்று குறிக்கப்பட்டிருக்கும். மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளில் ஆண்டு தோறும் இந்தப் பதக்கங்கள் வழங்கப்படும். முதல் தொகுதியில் பதக்கம் பெறுவோர் விவரம் தமிழ்நாடு அரசாங்கத்தால் 1969 செப்டெம்பர் 15இல் அறிவிக்கப்படும். ஓர் ஆண்டில் வழங்கப்படும் பதக்கங்கள் எண்ணிக்கை 25க்கு மேல் போகாது. ஆனால் சிறப்பு நிலைமையை முன்னிட்டு ஏதாவது ஓர் ஆண்டில் அதிகப்படிப் பதக்கங்கள் தரவேண்டியிருந்தால், அப்போது 30க்கு மேற்படாத அளவில் பதக்கங்கள் வழங்கப்படும். வெண்கலத்தால் செய்யப்பட்ட இந்தப் பதக்கங்களைப் பெறுபவர்களுக்கு, பதவி நிலைக்கு ஏற்றவாறு ரொக்கப் பரிசும் தரப்படும். அதன் விவரம் :

சிறப்பான பணிகளுக்காக: பதவி நிலை	தரப்படும் பதக்கங்கள் எண்ணிக்கை	ரொக்கப் பரிசு
போலீஸ் கான்ஸ்டபிள், ஹெட் கான்ஸ்டபிள் அதற்குச் சமமான பதவி நிலையினர்	5	ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000
போலீஸ் சப் இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், அதற்குச் சமமான பதவி நிலையினர்	10	ஒவ்வொருவருக்கும் ரூ. 2,000
போலீஸ் டிப்டி சூப்பிரண்டெண்டன்ட் (முதலாவது, இரண்டாவது, மூன்றுவது நிலையினர்)	5	ஒவ்வொருவருக்கும் ரூ. 3,000
வீரச் செயல்களுக்கு :		
எந்தப் பதவி நிலையினராயினும்	5	ஒவ்வொருவருக்கும் ரூ. 3,000

பார்த்தோம் படித்தோம் பட்டதைச் சொல்கிறோம்

அன்புள்ள ஆசிரியரவர்கட்கு:

சீரணி (கிராம நலம்) இதழினைக் கண்டு மகிழ்ந்தேன். அதனுடைய அமைப்பு, பாங்கு, தரம் முதலியன நல்ல முறையில் அமைந்துள்ளன. மேலும் ஒன்று சொல்ல ஆவல்: திங்கள்தோறும் ஓர் அறிவியல் கட்டுரை வருதல் நலம்.

சிறுவை மோகனசுந்தரன்
நக்கீரர் கழகம், சென்னை.

'கிராம நலம்' 'சீரணி' என்ற பெயருடன் கருத்துச் செறிவு பெற்றுத் தமிழக அரசின் செயல் திறத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக - இலக்கிய மேன்மையும் பண்பாடும் விளக்கம்பெறும் கட்டுரைகள் இடம் பெற்று - எடுத்தவர் பார்த்துமட்டும் போவதை நிறுத்தி, கையிலெடுத்தவர் படித்து முடித்துவிட்டுப் பத்திரப்படுத்திப் பாதுகாத்து வைக்க வேண்டிய அளவிற்கு வெளிவருவது கண்டு பெரிதும் உவந்தேன்.

வெ. கலைக்கூத்தன், பம்பாய்-19

பெரிய அளவில் இருந்த கிராம நலம் சிறிய அளவில் அதிகப் பக்கங்களுடன் பாராட்டத்தக்க வகையில் வெளிவந்திருக்கிறது.

'சீரணி' இளைஞர்முதல் பெரியோர்வரை படிக்கவேண்டிய புத்தகமாகும்.

மயிலை சிவ. மாசிலாமணி, சென்னை-1

'சீரணி' பத்திரிகை மிகச் சிறந்த முறையில் வெளிவருதைக் கண்டேன். பல பயனுள்ள கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

எஸ். நடராஜன் (நஜன்), சென்னை-4

கிராமங்கள் மிகுந்த நம்நாடு உயரப் பாடுபட்டு வந்த 'கிராம நலம்' சீரணியாக மாறியுள்ளது கண்டு பேரின்பம் உற்றேன். கடந்த பிப்ரவரி இதழ் முதலாக இதழ்கள் ஒவ்வொன்றும் தங்கத்தில் மிளிரும் வைரமென வந்துள்ளன.

ஆனால் காலதாமதமாக இதழ்கள் வருகின்ற இக்குறை களைந்து அந்தந்த மாதத்திலே அம்மாத இதழ்களை வெளிவரச் செய்யுங்கள்.

சு. நடராசன்
அவிநாசி

கிராமநலம் இதழ் மே திங்களில் அளவில் மாற்றம் பெற்றதுபோல் சூன் திங்களில் பெயரிலும் மாற்றம் பெற்றிருக்கின்றது. இரண்டு மாற்றங்களும் வரவேற்கத் தக்க மாற்றங்களே. மூன்றாவது உள்ளே உள்ள கட்டுரைகளிலும் பல புதிய மாற்றங்கள் காணப்படுகின்றன. தமிழறிஞர் பலருடைய கட்டுரைகளைப் படித்து மகிழ்ந்தேன்.

அரசினர் வெளியீடு என்ற வகையில் இல்லாது புது இலக்கிய ஏடு போல இப்போது சீரணி மிளிர்கின்றது. 'சீரணி'யைத் தமிழ் மக்கள் அனைவரும் வாங்கிப் படித்து மகிழத் தக்க வகையில் ஒரு சிறந்த இலக்கியப் பொதுவறிவு ஏடாகத் தொடர்ந்து வெளியிடுவீர்களென நம்புகிறேன்.

இரா. முத்துக்குமாரசாமி
நூலகர்
மறைமலையடிகள் நூல்நிலையம்
சென்னை

தமிழ்நாடு அரசுக்காக, அரசு எழுதுபொருள்-அச்சக இயக்குநரால் ஸ்ரீபி.எல்.எஸ். அச்சகத்தில் (65/1, ஆர்க்காடு சாலை, சென்னை-24) அச்சிடப் பட்டது.

இணைக்குநர்கள் : 1. திரு. இ. சி. பி. பிரபாகர், ஐ.ஏ.எஸ்., ஊர் வளர்ச்சி & உள்ளாட்சித் துறைச் செயலர். 2. திரு. ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்., ஊர் வளர்ச்சித் துறை இயக்குநர். பதிப்பாளர் : திரு. சி. வேங்கடசாமி, எம்.ஏ. ஆசிரியர் : திரு. சு. செல்லப்பன், எம்.ஏ., பி.டி.

194484

ஓரிரண்டு குழந்தைகள் போதுமே



அளவோடு பெற்று வளமோடு வாழ்வோம்

"நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்,
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்;
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்று இரண்டா உரைத்திடவே முடியாது.
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்!"

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை—ஆரம்ப சுகாதார நிலையம்—குடும்பநலத்திட்ட நிலையம் ஒன்றை அணுகித் தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு: சுகாதாரம் —
குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6

REGD. No. M. 7277

© தமிழ் நாடு அரசு, 1969

Stanes

தைப் பட்டத்தில் அமோக விளைச்சலும், பெருகிய லாபமும் பெற

விதை உற்பத்தியாளர்கள் :

தந்தி: "கோல்டு ஸீட்"

போன் : 30442

பேரூர் அஞ்சல், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விவரங்களுக்கும் :

(உர இலாகா), தபால் பெட்டி எண் 131, கோயமுத்தூர்-18

(அல்லது)

ஸ்டேன்ஸ் உரத் தொழிற்சாலைகள் :

வளவனூர், விழுப்புரம், போன்-25	துடியலூர், போன் : 25385 CBE	ஆவணியாபுரம், மதுரை, போன் : 553	தச்சநல்லூர் திருநெல்வேலி, போன் : 1125

குறிப்பு : மக்காச்சோள விதைகள் இருப்பு தீர்ந்து, வருகிற பிப்ரவரி-மார்ச்சில் விநியோகத்துக்கு வரும். சோளம் (CSH-1) கம்பு (HB-1) இருப்பு விரைவில் குறைந்து வருவதால், தேவைக்கு உடனே எழுதவும்.